2

# நன்னூற் காண்டிகையுரை விளக்கம்.

—:o:—

வண்ணைநகர்

**க. வேற்பிள்ளையவர்கள்**

கேட்டுக்கொண்டபடி

யாழ்ப்பாணத்து நல்லூர்

ஸ்ரீலஸ்ரீ

**ஆறுமுகநாவலரவர்களுக்கும்,**

வித்துவசிரோமணி

ந. ச. பொன்னம்பலபிள்ளையவர்களுக்கும்,

உடுப்பிட்டி

அ. சிவசம்புப்புலவரவர்களுக்கும்,

மாணாக்கரும்,

திருவனந்தபுரத்து மகாராஜாகாலேஜில்

தமிழ், சமஸ்கிருதபண்டிதராயிருந்த

வ. கணபதிப்பிள்ளையவர்களுக்குச்

சகோதரரும், மாணாக்கருமாகிய

பருத்தித்துறைசார்ந்த புலோலி

**வ. குமாரசுவாமிப்புலவரவர்களால்**

பலநூல்கொண்டு விளக்கியும், கூட்டியும்

செய்யப்பட்டது.

இது

யாழ்ப்பாணம்

விவேகாநந்தயந்திரசாலையில்

அச்சிற்பதிப்பிக்கப்பட்டது.

—o—

கலி: ௫௦௦௪. சுபகிருது ஹூ ஆவணிமீ

1902.

# நன்னூற்சூத்திரவகராதி.


| சூத்திரம். | பக்கம். | சூத்திரம். | பக்கம். |
|---|---|---|---|
| அ ஆ ஈற்ற | 276 | அள் ஆள் இறு | 273 |
| அ ஆ உ ஊ | 67 | அறம்பொருளி | 8 |
| அ ஆ எ ஒ | 67 | அறிவருளாசை | 375 |
| அ இ உம் | 46 | அறிவறியாமை | 328 |
| அ ஐ முத | 78 | அன் ஆன் இறு | 273 |
| அகமுனர்ச் | 168 | அன் ஆன் அள் | 95 |
| அசைநிலை | 337 | அன் ஆன் இன் அல் | 189 |
| அடிநாவ | 52 | அன்றி யின்றி | 138 |
| அடைசினை | 342 | அன்னமாவே | 26 |
| அடைமொழி | 341 | ——0—— | |
| அண்ணநுனிநாநனி | 53 | ஆ ஈ ஊ ஏ | 46 |
| அண்ணநுனிநாவரு | 53 | ஆக்கவினை | 292 |
| அண்பல்லடி | 52 | ஆக்கியோன் | 34 |
| அண்பன்முத | 53 | ஆசானுரைத்த | 31 |
| அண்மையினி | 256 | ஆண்பெண்பல | 203 |
| அதுமுன் வரு | 142 | ஆண்மைபெண் | 223 |
| அதுவே, இயற் | 211 | ஆநின்று கின்று | 102 |
| அத்தினகர | 193 | ஆமா கோனவ் | 191 |
| அந்திலாங் | 369 | ஆமுன்பகர | 140 |
| அம்மவுரை | 369 | ஆயிரமுகத்தா | 37 |
| அம்மாமென் | 278 | ஆய்தக்கிடந் | 54 |
| அம்முதலீரா | 45 | ஆவி ஞ ண ந ம | 69 |
| அம்முனிகர | 79 | ஆவி ய ர ழ் | 125 |
| அரிதிற்பெயக் | 24 | ஆவியுமொற்று | 66 |
| அர் ஆர் பவ் | 274 | ஆறனுருபு | 234 |
| அல்வழி இ ஐ | 139 | ஆறனொருமை | 246 |
| அல்வழியாமர் | 136 | ஆற்றொழுக் | 14 |
| அவற்றுள், அ இ | 46 | இ ஈ எ ஏ | 52 |
| அவற்றுள், எழு | 234 | இ ஈ ஐ வழி | 126 |
| அவற்றுள், ஏழா | 108 | இ உ ஊ வோ | 252 |
| அவற்றுள், ஒன் | 224 | இசைகெடின் | 57 |
| அவற்றுள், கிளை | 215 | இடுகுறிகாரணப்பெயர் | 44 |
| அவற்றுள், முத | 290 | இடுகுறிகாரணமர | 215 |
| அவற்றுள், முய | 51 | இடைச்சொல் | 155 |
| அவற்றுள், வினை | 7 | இடைத்தொட | 143 |
| அவைதாம், முற்று | 268 | இடைநிலை | 355 |
| அவ்வழி, ஆவி | 51 | இடையினம் | 48 |
| அவ்வினையாளை | 31 | இடையிருங்கு | 105 |
| அழலினீங்கா | 31 | இடையுரி | 180 |
| அளக்கலாகா | 21 | இணைந்தியல் | 110 |


Digitized By Roja Muthiah Research Library

Digitized By Roja Muthiah Research Library

| சூத்திரம். | பக்கம். |
|---|---|
| இதற்கிதுசா | 194 |
| இதற்கிதமுடி | 198 |
| இம்முப்பெயர் | 253 |
| இயல்பினும்வி | 130 |
| இயல்பின்விகா | 196 |
| இயல்பெழு | 66 |
| இயற்கைப்பொ | 343 |
| இரட்டைக்கிள | 337 |
| இரண்டாவத | 235 |
| இரண்டுமுத | -305 |
| இரண்டுமுன் | 152 |
| இருதிணையாண் | 296 |
| இருவர்தூற்கு | 8 |
| இர் ஈரீற்ற | 282 |
| இலக்கணமுடை | 205 |
| இலக்கியங் | 100 |
| இல்லெனி | 174 |
| இறப்பெதிர்வு | 326 |
| இனைத்தென் | 338 |
| இன்னதின்னு | 381 |
| ஈதலியல் | 25 |
| ஈதாகொடு | 345 |
| ஈமுங், கம்மு | 168 |
| ஈறுபோத | 90 |
| ஈற்றியா | 124 |
| உ ஊ ஒ ஓ ஔ | 52 |
| உ. ஊ ஒ ஓ வல | 67 |
| உடன்மேலுயி | 158 |
| உணர்வியலா | 375 |
| உயர்திணைதொ | 321 |
| உயர்திணையும் | 314 |
| உயிருமுடம்பு | 42 |
| உயிருயிரல் | 373 |
| உயிர்மவிலா | 84 |
| உயிர்மெய்யா | 42 |
| உயிர்மெய்யிர | 42 |
| உயிர்வரினுக் | 128 |
| உரத்தின்வளம் | 18 |
| உரிவரினாழியி | 138 |
| உருபின்முடிபவை | 178 |
| உருபுபல | 298 |
| உருபுமுற் | 299 |

| சூத்திரம். | பக்கம். |
|---|---|
| உருபுமவி | 297 |
| உருவகவுவ | 347 |
| உவப்பினு | 323 |
| உவமவுரு | 309 |
| எயாமுத | 47 |
| எகரவினாமுச் | 127 |
| எச்சப்பெயர் | 300 |
| எடுத்தல் | 54 |
| எட்டனுடம் | 150 |
| எட்டனுரு | 252 |
| எண்ணளவெடு | 310 |
| எண்ணிறை | 147 |
| எண்பெயர் | 39 |
| எண்மூவெழு | 120 |
| எதிர்மறைசிற | 363 |
| எப்பொரு | 330 |
| எல்லாமென் | 190 |
| எல்லாருமெல் | 190 |
| எல்லையின்னு | 261 |
| எவனென் | 294 |
| எழுத்தியறிரி | 333 |
| எழுத்தே | 83 |
| எழுவகை | 9 |
| எழுவாயிறுதி | 354 |
| என்றுமென | 366 |
| எழனுரு | 249 |
| எற்குமெவ் | 233 |
| ஏற்புழியெடு | 357 |
| ஏற்றபொ | 352 |
| ஐ ஔ இ | 48 |
| ஐகான்ய | 78 |
| ஐந்தனொற் | 149 |
| ஐந்தாவதனுரு | 245 |
| ஐந்தொகை | 311 |
| ஐயந்திணை | 319 |
| ஐயந்திர | 21 |
| ஐயரியிகர | 280 |
| ஐயான்கு | 260 |
| ஐயிறுபொது | 253 |
| ஐயீற்று | 145 |


Digitized By Roja Muthiah Research Library

| சூத்திரம். | பக்கம். |
|---|---|
| ஒடுவுந்தெய்ய | 369 |
| ஒருகுறிகேட் | 30 |
| ஒருசார்னவ | 251 |
| ஒருநெறி | 13 |
| ஒருபஃதா | 151 |
| ஒருபுணர்க் | 119 |
| ஒருபொருட்பல் | 338 |
| ஒருபொருட்பன் | 338 |
| ஒருபொருண் | 334 |
| ஒருபொருள் | 212 |
| ஒருமையிற் பன் | 324 |
| ஒருமொழிதொட | 201 |
| ஒருமொழிமூவ | 119 |
| ஒருமொழியொரு | 202 |
| ஒருமொழியொழி | 301 |
| ஒருவரென்ப | 227 |
| ஒருவனொருத்திபல | 187 |
| ஒருவனொருத்திப்பெ | 227 |
| ஒருவன்முத | 271 |
| ஒழியிசைவி | 362 |
| ஒற்றுமை | 375 |
| ஒற்றுயிர் | 187 |
| ஒன்பதொழி | 153 |
| ஒன்பானொடு | 150 |
| ஒன்றன்புள்ளி | 148 |
| ஒன்றுமுதலீரைந் | 152 |
| ஒன்றுமுதலெட் | 192 |
| ஒன்றேபலவே | 203 |
| ஒன்றொழிபொது | 208 |
| கஙவுஞ்சஞவும் | 52 |
| கசதபவொழி | 71 |
| கடியென்கிளவி | 377 |
| கண்கால்கடை | 250 |
| கயவொடு | 282 |
| கருத்துப்பதப் | 17 |
| களிமடிமானி | 28 |
| காரணமுதலா | 343 |
| காலங்கரந்த | 307 |
| காலங்களனே | 34 |
| கிளந்தகிளைமுத | 219 |
| கிளைமுதலா | 218 |

| சூத்திரம். | பக்கம். |
|---|---|
| கீழின்முன | 170 |
| குடுதுறுவெ | 277 |
| குலனருடை | 19 |
| குயினூன்வேற் | 164 |
| குறியதன்கீழாக் | 137 |
| குறியதன்முன்னர் | 56 |
| குறிலணைவில்லா | 161 |
| குறில்செறியா | 172 |
| குறில்வழி ல ள | 171 |
| குற்றுயிரள | 69 |
| குன்றக்கூறல் | 9 |
| கேட்குநபோ | 346 |
| கொல்லையைய | 368 |
| கோடன்மர | 28 |
| ஙஞணநம | 58 |
| ஙம்முன் கவ் | 72 |
| சாதிகுழூஉ | 161 |
| சாலவுறுதவ | 376 |
| சாவவென் | 134 |
| சிதலெறும் | 374 |
| சில்வகையெ | 14 |
| சிறப்பினும் | 50 |
| சினைவினை | 291 |
| சுட்டியாவெ | 68 |
| சுட்டின்முன்னு | 193 |
| சுட்டுமறை | 329 |
| சுட்டுவசர | 176 |
| சுருங்கச்சொ | 10 |
| சுவைப்புளி | 139 |
| சூத்திரத்துட் | 17 |
| செந்தமிழாகித் | 211 |
| செந்தமிழ்நிலஞ் | 213 |
| செம்மைசிறுமை | 89 |
| செயப்படுபொரு | 339 |
| செய்கெனொரு | 279 |


Digitized By Roja Muthiah Research Library

| சூத்திரம். | பக்கம். |
|---|---|
| செய்யுசெய் | 284 |
| செய்திசெய்பு | 288 |
| செய்பவன்கருவி | 266 |
| செய்பவே | 132 |
| செய்புலமென | 286 |
| செய்யுளுறுதி | 356 |
| செய்யியவென்வினை | 93 |
| செவ்வெண்ணீ | 365 |
| சொற்றிரியினும் | 291 |
| சொற்குறுமிற் | 382 |
| ஞ ண ந ம ல வ ள ள | 159 |
| ஞ ந முன்றம்மினம் | 73 |
| டறமுன் கசப | 73 |
| ண ன முன்னின | 73 |
| ணன் முன்னு | 62 |
| ண ன வல்லின | 160 |
| த ட ற வொற்றின் | 101 |
| தத்தம், பசாப்ப | 88 |
| தமிழவ்வுறவும் | 170 |
| தம்பாலில்ல | 344 |
| தம்பெயர்மொழி | 76 |
| தரல்வரல் | 325 |
| தற்சுட்டளபொழி | 61 |
| தனிக்குறின் | 158 |
| தன்மகனாசான் | 26 |
| தன்மைமுன்னிலைபடர் | 205 |
| தன்மைமுன்னிலைவியங் | 276 |
| தன்மையானு | 226 |
| தன்னாசிரியன் | 36 |
| தன்னென்னென் | 164 |
| தன்னொழி | 158 |
| தானமுயற்சி | 48 |
| தானே தர | 23 |
| தான் தாம் | 191 |
| தான் யானெனீ | 227 |
| திசையொடுதி | 146 |
| திணைநிலஞ்சாதி | 335 |

| சூத்திரம். | பக்கம். |
|---|---|
| திணைபால்பொ | 322 |
| திணையேப்பா | 318 |
| தும்பிவண்டாதி | 374 |
| துய்த்தறுஞ்ச | 376 |
| துறுகெக்குற்றிய | 275 |
| தெங்குநீண் | 147 |
| தெரிநிலைதே | 360 |
| தெரிவரும் | 20 |
| தெவ்வென்மொழி | 177 |
| தேன்மொழி | 162 |
| தொகுத்தல் | 35 |
| தொக்குழிமயங் | 315 |
| தொல்லைவடி | 64 |
| தொழிலுங்கா | 287 |
| தோன்றறிரிதல் | 117 |
| தோன்றன்மறைதல் | 376 |
| தோன்றுதோற்றித் | 36 |
| நடவாமடி | 91 |
| நவ்விறுதொ | 160 |
| நான்கன்மெய் | 149 |
| நான்காவ | 242 |
| நிறையுயிர் | 50 |
| நின்றநெறி | 70 |
| நீயிர்நீவிர்நா | 234 |
| நுதலிப்புகுத | 11 |
| நுந்தம், எம் நம் | 167 |
| நுவ்வொடு | 256 |
| நூலினியல்பே | 6 |
| நூலேநுவல் | 5 |
| நூல்பயிலியல் | 29 |
| நூற்பொருள்வழ | 13 |
| நெடிலோடாய்த | 60 |
| நெடிலோடுயிர்த் | 144 |


Digitized By Roja Muthiah Research Library

| சூத்திரம். | பக்கம். | சூத்திரம். | பக்கம். |
|---|---|---|---|
| நெல்லுஞ்செல் | 174 | பெய்தமுறை | 23 |
| நேரினமணி | 13 | பொதுப்பெயரு | 122 |
| பகாப்பதமே | 84 | பொதுப்பெயர் | 301 |
| பகுதிவிகுதி | 87 | பொதுவியல் | 269 |
| பகுபதற் | 85 | பொதுவெழு | 213 |
| பஞ்சிதன் | 18 | பொருண்முதலாறு | 340 |
| படர்க்கைமுப் | 336 | பொருண்முதலாறினு | 267 |
| படர்க்கைவினை | 204 | பொருண்முதலாறோ | 228 |
| பண்பைவிளக்கு | 308 | பொருளிடம் | 85 |
| பதமுன்விகுதி | 188 | போலப்புரைய | 310 |
| பல்சிலவெனு | 134 | | |
| பல்லோர்படர்க் | 293 | மகரவிறுதி | 77 |
| பல்வகைத்தாதுவி | 207 | மக்கடேவர் | 203 |
| பல்வகைப்பண்பு | 373 | மங்கலமாகி | 22 |
| பல்வகையுதவி | 24 | மம்முன்பய | 73 |
| பல்வகைவடி | 376 | மரப்பெயர் | 131 |
| பலவமூவிட | 102 | மரமல்லெ | 163 |
| பல்வீநீமீ | 141 | மலர்தலை | 1 |
| பழையனகழி | 383 | மவ்வீறொற் | 166 |
| பனைமுன் | 156 | மற்றையதென் | 368 |
| பன்னீருயிருங் | 67 | மற்றையநோ | 350 |
| | | மன்னுடை | 37 |
| பாடங்கரு | 15 | மன்னேயசை | 367 |
| பாயிரம்பொது | 5 | மாடக்குச்சித் | 37 |
| பால்பகாவ | 222 | மாவென்கிளவி | 370 |
| பிண்டந்தொ | 15 | மாற்றநுவர்ச்சி | 378 |
| பிரிநிலைவி | 361 | | |
| | | மியாயிக | 370 |
| புள்ளியுமுயி | 197 | மின்பின்பன் | 164 |
| புள்ளிவிட்ட | 54 | மீகீழிதழு | 52 |
| புள்ளும்வள்ளு | 175 | மீன்றவ்வொடு | 162 |
| புன்மரமுதல | 374 | முகவுரை | 5 |
| | | முக்காலத்தினு | 327 |
| பூப்பெயர் | 155 | முக்காற்கேட் | 31 |
| பூமலியசோ | 39 | முச்சகநிழ | 201 |
| பெண்மைவிட் | 203 | முதலிருநான் | 151 |
| பெயரும்வினை | 353 | முதலிவைசினை | 258 |
| பெயரே ஐ | 234 | முதலையையுறிற் | 257 |
| பெயரொடுபெய | 304 | முதல்வழி | 7 |
| பெயர்ச்செவ் | 365 | முதற்பெயர் | 222 |
| பெயர்வழி | 187 | முதனூல் | 34 |
| பெயர்வினையிட | 296 | முரணந்தாதி | 374 |
| பெயர்வினையும்மை | 302 | முழக்கிரட்டொ | 380 |


Digitized By Roja Muthiah Research Library

| சூத்திரம். | பக்கம். | சூத்திரம். | பக்கம். |
|---|---|---|---|
| முற்றீரெச்சம் | 317 | லளவிறுதொழி | 173 |
| முற்றுமம்மை | 365 | லளவீற்றஃறி | 256 |
| முன்மொழி | 313 | லளவீற்றி | 63 |
| முன்னத்தி | 346 | லளவேற்றுமை | 171 |
| முன்னரவ்வொடு | 221 | —— | |
| முன்னிலைகூடிய | 280 | வலித்தல் | 118 |
| முன்னிலைமுன்ன | 281 | வல்லினம் | 47 |
| முன்னோர்நூலி | 7 | வல்லேதொழிற் | 174 |
| முன்னோர்மொழி | 8 | வல்லொற்றுவரினே | 314 |
| —o— | | வவ்விறுசுட்டிற் | 192 |
| மூன்றனுறுப் | 149 | வன்றொடர் | 143 |
| மூன்றுவதனுரு | 238 | வாழியவென்பது | 134 |
| மூன்றூறுபெண் | 142 | வானவர்மக்க | 374 |
| மூன்றுயிரளபிரண் | 65 | | |
| —— | | விசாரமனைத்து | 117 |
| மெய்கனகர | 80 | விகுதிபதஞ்சாரி | 195 |
| மெய்ந்நா | 373 | விரைவினுமிக | 327 |
| மெய்யுயிர்முத | 114 | விளம்பியபகுதி | 94 |
| மெல்லின | 47 | விழைவேகால | 367 |
| மென்றொடர் | 145 | வினாச்சுட்டுடனும் | 220 |
| மேற்படல்விதி | 53 | வினாவினுஞ்செப் | 330 |
| —o— | | வினைசார்பின | 332 |
| மொழிகுண | 22 | வினைபெயர்குறி | 363 |
| மொழிமுதற் | 40 | வினைமாற்றசை | 368 |
| மொழியாய் | 82 | வினைமுற்றே | 294 |
| —o— | | வினையின்பெய | 226 |
| யகரம்வரக் | 60 | வினையொடுவரி | 366 |
| யரழமுன்னர்க்கசதப | 169 | —o— | |
| யரழமுன்னர்மொழி | 73 | வேறில்லையுண் | 283 |
| யரழவொற்றின் | 74 | வேறுவினைப்பல் | 331 |
| —o— | | வேற்றுமைமப் | 167 |
| யாகாபிற | 370 | வேற்றுமையாயி | 156 |
| யாதனுருபிற் | 259 | வேற்றுமையையும் | 115 |
| யாப்படிபல | 356 | வேற்றுமைவினைசா | 359 |
| யாரென்வினா | 294 | வேற்றுமைவினைபண் | 305 |
| யாற்றுநீர் | 350 | —o— | |
| —— | | ளஃகானுயர்பெயர்க் | 254 |
| ரவ்விற்கம்முத | 110 | —o— | |
| ரவ்வீற்றுயர் | 255 | றவ்வொடுகர | 103 |
| ரழவல்லன | 74 | றனழஎஒவ்வு | 111 |
| —o— | | —o— | |
| லகாரவீற்று | 255 | னஃகான்கிளைப் | 162 |
| லளமுன்கச | 74 | னலமுன்றனவும் | 177 |
| லளமெய் | 76 | னவ்வீற்றுயர் | 256 |


சூத்திரவகராதி முற்றிற்று.

Digitized By Roja Muthiah Research Library

# OPINIONS ON THIS WORK.

(o*o)

## வித்துவாபிப்பிராயம்.

[வித்துவாபிப்பிராயங்கள் கிடைத்தமுறைப்படி பதிப்பிக்கப்பட்டன.]

FROM

**N. SELVADURAI PILLAI ESQ. B. A.**
PRINCIPAL, HINDU COLLEGE
JAFFNA.

## THE NEW EDITION OF NANNUL

BY

*Mr. V. Comaraswamy Pulavar of Puloly*
*JAFFNA.*

At the request of Mr. K. Velu Pillai Proprietor of the Vivekananda Press at Vannarpannai Jaffna, Mr. V. Cumaraswami Pulavar of Puloly has brought a new Edition of Nannul. The work of Pavananthy Munivar was based on the larger works of Agasttium and Tholkappium and was intended to be a hand book easily accessible to all and such as to be easily understood even by a student who has made only a fair acquaintance with Tamil literature. It is just such a book that we would like to place in the hands of our students in the VI, VII and VIII standards. It is the book prescribed by the Madras University for the Matriculation, F. A. and B. A. examinations. It is needless to say anything in praise of the well known Edition of this valuable grammar by the late Mr. Arumuga Navalar. He was not only a scholar, but a teacher and the book was prepared with copious exercises to recapitulate a lesson by catechising and thus impress it on the minds of the pupils.

Digitized By Roja Muthiah Research Library

The new edition by Mr. Cumaraswamy Pulavar is based on Mr. Navalar's book, and proceeds on the same lines, but in places where the commentary is so concise as to be obscure, he has extended it and made it clear. Mr. Cumaraswamy Pulavar was a student of Mr. Navalar and was one who enjoyed the confidence of the great Teacher and those who know him personally cannot but admire his accurate Scholarship in Tamil which is set off and embellished by a fair acquaintance with Sanskrit. In many things we are progressive and it is impossible not to move with the times. At the present time when schools are so much multiplied and a new desire has been awakened in has to cultivate our own mother tongue which had been neglected for a short time on account of the eager pursuit after English, and the idea is gaining ground day by day that we can never be a self-respecting nation unless we study and cultivate our own language, the appearance of this edition of Nannul is synchronous with a period of such revival if I may so call it. Many who cannot afford to sit at the feet of Pundits and learn Nannul, will find in this book a willing, ready and clear guide, and many Vernacular and English schools will find this book a valuable help. The exercises appended to the lessons have been prepared with great care and they are very searching. The book, no doubt, is made larger by the extension in the commentaries, but the book is so priced as to be within the reach of all. Mr. Cumaraswamy Pulavar has placed the Tamil public under great obligation by his invaluable work and no small meed of praise is due to the proprietor of the Vivekananda Press, Mr. K. Veluppillai for the noble work he has undertaken to sow broadcast and bring within the reach of even the poor all that is precious and enduring in Tamil Literature.

N. SELVADURAI.

*Jaffna 7-8-1902.*

Digitized By Roja Muthiah Research Library

FROM

# REV. J. T. APPAPILLAI

WESLIAN MINISTER

JAFFNA.

தமிழுக்கு ஆதி இலக்கணம் அகத்தியம். அந்நூல், இயல், இசை, நாடகம் என்று முத்தமிழும் விரவக் கூறப்பட்டது. தலைச்சங்கத்தார்காலத்து, இயற்றமிழை வேறுபிரித்துக் கூறிய நூல்கள் தொல்காப்பியமுதலியன. காலாந்தரத்து வீழ்ந்தவழக்குக ளொழியப் புதியனபுகுதச் சமணர்காலத்துப் பிறந்த சிறந்தநூல் நன்னூலேயாம்.

முன்னூலொழியப்பின்னூல்பலவுள்
எந்நூலாகும்நன்னூலுக்கிணை.

இத்துணைச் சிறப்பினதாய நன்னூலே, மாணாக்கரால் இக்காலத்துப் பெரும்பாலுங் கற்கப்படுகின்றது. இந்நன்னூற்கு, ஸ்ரீ. சங்கரநமச்சிவாயப்புலவர் அவர்கள் செய்த விருத்தியுரை, கற்றோரானன்றி மற்றோரானெளிதிலுணரப்படாமையாற் காண்டிகையுரைகள் பலதோன்றலாயின. அவற்றுள் ஸ்ரீ. ஆறுமுகநாவலர் அவர்கள் செய்த உரையே சிறந்ததாகக் கொள்ளப்பட்டது.

தமிழ்மாது இற்றைஞான்று சிறுமையடைந்து சவிமழுங்கினளென்று யாமெண்ணியிருந்தவெண்ணம் பொய்ப்படப் புலோலியம்பதிவாசர், ஸ்ரீ. வ. குமாரசுவாமிப்புலவர் அவர்கள் செய்த "நன்னூற்காண்டிகையுரை விளக்கம்" என்னு நூலைக் கண்டோம். பேரானந்தங்கொண்டோம். புலவர்அவர்களுடைய பெயரே உரையின் மகத்துவத்துக்குச் சான்றாக, யாம் மிகைபடக்கூறலாய்ப் பலவற்றையுங் கூறல் அநாவசியகமாம். முன்னுரைகளிலில்லனவாய்ச் சிறந்த விரிவிலக்கணங்களும், பரீக்ஷை வினாக்களும், அப்பியாசங்களு மலிந்து விளங்கும் இவ்வுரையிலே, எடுத்ததுறைகளைத் தாபித்தற்பொருட்டு அநுவதிக்கப்பட்ட ஆப்த சூத்திரங்கள் ஆங்காங்குச் செறிந்து, தீபமேற்றிய தம்பங்கள்போலச் சொலிக்கின்றன. நெடுங்காலமயக்கத்துக்கிடனாய்நின்று, இலக்கணவித்தியார்த்திகளைக்கலக்கிய சில விடயங்களைச் சிறுவருமறியத்தக்கவாறு ஆசிரியர் விரித்துவிளக்கியிருக்கின்றனர். ஆகலின், "விளக்கம்" என்னும் பெயர் இவ்வுரைக்கே தகும்! தகும்!! என்கின்றோம். அரசாட்சியாரின் வித்தியாசட்டத்துளமைந்த பரீக்ஷைகளுக்கும், சர்வகலாசாலைப் பரீக்ஷைகளுக்கும் ஆயத்தஞ்செய்யு மாணாக்கர்க்கு இவ்வுரை இன்றியமையாச் சிறப்பினதேயென்று சான்றுகூறச் சற்றும்

Digitized By Roja Muthiah Research Library

பின்னில்லேம். இதனருமையையும் பெருமையையு மெடுத்துப் பேச யாம் வல்லேமல்லமாதலின் இம்மட்டில் விடுத்தாம்.

இவ்வுரையைச் சனோபகார மொன்றேகருதி இயற்றித்தந்த புலவர் அவர்களுக்கும், மிக்க பிரயாசத்தோடு அச்சிட்டு வெளிப்படுத்திய ஸ்ரீ. க. வேற்பிள்ளை அவர்களுக்கும், தமிழ்ப்பாஷாபிமானிகளாகிய யாமெல்லோருங் கடன்மைப்பட்டோராயினம்.

ஜே. த. அப்பாபிள்ளை.

15—8—1902.

பருத்தித்துறைசார்ந்த அம்பைநகர்
ப்ரம்மஸ்ரீ ம. முத்துக்குமாரசுவாமிக்குருக்களவர்கள்
இயற்றிய

## ஆசிரியவிருத்தம்.

புகழுறு நன்னூற் கடினசூத் திரத்தின் பொருளுநன் றேவரு முணரத்
திகழுநல் விளக்கத் தோருரை யிவணீ செய்துத வுதியென வண்ணே
நிகழுறு விவேகா நந்தயந் திரத்தை நெறியுற நடாத்திடு மதிபன்
அகழுநீர் நிலத்தோர் மதிக்கும்வேற் பிள்ளை யன்புடன் கேட்டிளாளுக

நன்றென விசைந்தே கற்பவரினிது நயந்துணர் பான்மையின் விளக்கித்
தொன்றுள தொல்காப் பியமுட னரிய தோமிலா வசத்திய நூலின்
ஒன்றுசூத் திரமும் வேண்டியாங்கெடுத்தே யுணர்தரக் காட்டியோருரையை
நின்றிவ ணிலவ நீடவா ராய்ந்தே நீதியி னமைத்துளா னெவனெனல்.

மன்னிய புலோலி வளநகர் வாழ்வோன் மாசுதீர் சைவமா மரபோன்
முன்னுமா ரியநூ லிலக்கண மாதி மொழிபல நூலுநன் குணர்ந்தோன்
பன்னுபா ரதநூ லுரைதரு தகையோன் பாவலர் காவலர் மதிக்குந
தன்னுசீர்க் குமார சுவாமியாம் புலவன் சூழ்வினிற் சுரகுருவினனே.

முன்னுவேற் பிள்ளை நாம மொழிபுக லறிஞர் கோமான்
மன்னுமிவ் வுரையை யாரு மனங்கொள வுணர்ந்துதேறச்
சொன்னத னச்சி லாக்கித் தோமறப் பாப்ப லுற்றுன்
இன்னநீர் நிலத்தி லென்று மிருந்திடு புகழி தாமே.

நீர்வேலியில்,
திராவிட சமஸ்கிருதவித்தியாசாலைகளை நடாத்துமதிபர்
ஸ்ரீமத். ச. சிவப்பிரகாசபண்டிதரவர்கள்
இயற்றிய

## கலிவெண்பா.

செந்தமிழ்நூல் கற்குஞ் சிறுவருக்கு வாய்ப்புடைத்தாய்
நந்தலிலா லக்கணமாம் நன்னூற்குச்—சிந்தையுற

Digitized By Roja Muthiah Research Library

நாடுபுக ழாறுமுக நாவலர்செய் காண்டிகையே
நீடுபயோ கத்ததாய் நின்றதன்றே—கூடுமதை
அங்கிலரா சாங்கத்தி ணுகிலவளர் பள்ளிகளில்
தங்குமுபாத் யாயர் தகவறிந்து—பங்கமின்றி
எய்திடுமா ணுக்கர்க் கெளிதுவிளக் கும்பொருட்டாற்
செய்திடுக வோர்விளக்கஞ் செவ்விதென—மெய்திகழும்
சைவவிவே கானந்த சாமியடி யார்க்கடியன்
சைவநனி போற்றுந் தனிவிருப்பான்—சைவவிவே
கானந்தப் பேர்தக் கதிவிசித்ர பத்திரிகை
தானந்த மின்றித் தனிநடத்தும்—மானந்தான்
மிக்கபுகழ் வேற்பிள்ளை வேண்டுதலா லீண்டினிது
தக்கவிளக் கஞ்செய்தான் சற்குணத்தான்—தக்கவர்கள்
சேரும் புலோலித் திருநகரான் செந்தமிழிற்
சாரும் பலநூலுந் தான்பயின்றோன்—தேரும்
வடநூல் வளமார் வருதருக்க மாதி
திடநூ லுணர்ச்சி சிறந்தான்—மிடனீண்டு
நல்லமா ணுக்கர் நயவினயத் தோடுதொழப்
பல்லநூல் போதிக்கும் பண்புடையான்—தொல்லறிஞர்
தேங்கு சபைகளிலே சிங்கமென நின்றுநனி
ஓங்குபிர சங்க வுயரூற்றம்—நீங்கலின்றிப்
பெய்யும் பெரியோன் பெரிதருளால் யாவருநன்
றுய்யும் பரிசுதவு முத்தமனே—மெய்யுள்ளம்
ஒத்த பரிசா னுபாசிவதன் மஞ்செய்யும்
வித்தகனாய் மேவு விசயரத்நம்—சுத்திகொள்சோ
மந்தபிள்ளை யென்னும் வெளிப்பெயரு மொன்றுடையான்
புந்தியினும் புந்திப் பொலிவுடையான்—முந்தடக்கம்
வாய்மை பொறுமை வளர்பணிவு பத்திமிகு
தூய்மை சிறந்த சுடர்த்தீபம்—பாய்புகழால்
மிக்க குமாரசுவா மிப்புலவ னென்னும்பேர்
தக்கவியுற் பன்னனே தான்.

15—8 - 1902.

உடுப்பிட்டி
ஸ்ரீமத். அ. சிவசம்புப்புலவரவர்கள்
இயற்றிய
அகவல்.

பூமலிகற்பகப்பொன்னுலகின்பொரீஇ
மாமலிமகேந்திரவளநகர்ச்சிறையுறீஇத்

Digitized By Roja Muthiah Research Library

தாங்கருந்துயரிற்றளர்ந்துபுலம்பிய
வோங்குவச்சிரக்கரனொருமகன்கனவி
லருளெனும்பரவையாநந்தவற்புதமெய்க்
குருவடிவுற்றெனக்குறுகியினையனும்
மருவலரெனைவருமாய்வர்வல்விரைவில்
வருமொருதூதுரிவ்வுலகலினென்றவன்
மனங்கொளத்தருந்திருவாய்மொழிமருந்தை
யினங்கொளச்சுரர்க்குமினிதுவழங்கிய
வாறுமுகப்பிரானமர்வரைப்பாகிய
வீறுமுகத்திருவேங்கடமுதக்கினுங்
கோட்டினிலலைமணிகொழிக்குங்குமரிதென்
பாட்டினுமெல்லையாய்ப்பயிறமிழ்நிலத்துறூஉ
மகத்தியமுதலியவாகப்பொருள்பல
மிகத்தெளிவாகவிரிந்தவையொழியப்
பின்னூலெவற்றினுமுன்னூலென்ன
வெந்நூலாருமெடுத்தநன்னூற்கு
மைந்தர்களுளத்தெழுமலைவறவோருரை
தந்திடுகெனத்தான்சார்பினில்வினவ
வங்கவளத்தினும்வாணிகவளத்தினுந்
தங்கவளத்தினுஞ்சங்கவளத்தினுங்
கோவில்வளத்தினுங்குலமனைவளத்தினுந்
தாவிலாவுண்மைச்சைவவளத்தினு
மற்றுளவளத்தினுமலிந்ததென்றனைவருஞ்
சொற்றிடுபெருத்தித்துறைப்பதிசார்ந்ததாய்க்
கருமுகில்வெளுத்தகந்தரப்பசுபதி
யொருமுதலுயிர்களையோம்பிடவெண்ணிப்
பருவதவர்த்தனிப்பாவையொடொன்றிக்
குருவளர்செம்பொனங்கோயில்கொண்டுளதா
யந்தணர்வணிகர்வேளாளராதியராம
ரிந்திரவளந்திகழ்சுந்தரமனைகளுந்
தடங்களுமதுமலர்த்தண்டலைத்தொகுதியு
மடங்களுமிடங்கெழுமன்றமுமுடைத்தாய்த்
தெருள்காலூன்றியதிருநீற்றொளிபுறத்
திருள்காலீக்குமேற்றமுடைத்தாய்ச்
சொற்புனைபிறவளத்தொன்மையுமுடைத்தாய்ப்
பொற்புறுசெல்வப்புலோலிமாநகரான்
மாதவவிளைவெனவல்லியப்பத்திரு
மாதவனிடத்தினில்வந்தவதரித்தோன்
றூயவரெலாம்புகழ்சுப்பிரமணிய
ஞையறுஞ்மதித்தமிழாசானுக்கு

Digitized By Roja Muthiah Research Library

மாங்கிளதிராவிடவாரியபண்டித
னாங்கணபதித்தகையவற்குமிளையோன்
வடகலையுணர்வொடுமதுரவான்செந்தமிழ்க்
கடலுள்கலைபலகசடறக்கற்றோன்
காண்பிரசாரகங்கவியுரைதரனூன்
மாண்புறத்தேற்றியல்வழாவகைபெற்றோ
னடர்பவமுருக்கியவாத்தர்கள்சென்னெறித்
தொடர்வுறுகுமாரசுவாமிப்புலவன்
பழவுரைவகைசிலபாடந்தொழித்து
விழுமியநுண்ணுரைவிரித்துமுன்னுரைகளி
னில்லாப்பொருள்பலவிசைவுறவிசைத்தும்
வல்லார்மேற்கோண்மாண்புறக்காட்டியும்
வேண்டுமிடந்தொறும்விரிப்பனவிரித்து
மீண்டுறவிளக்குவவெனைத்தும்விளக்கியு
மடிவறுமதிப்புதர்மதித்திடவியற்றிய
வொடிவறுகாண்டிகையுரைவிளக்கத்தை
வியந்துளந்தனுவிவேகாநந்த
வியந்திரசாலையினினிதுறப்பதித்தான்
விலகருமலப்பிணிவீட்டுந்தலைமை
யிலகிவயித்தியலிங்கப்பரஞ்சுடர்
தன்னுடையருளாந்தையனாயகியெனு
மின்னுடனமரும்விமல்வாலயமுந்
தெருட்பாலுளத்தருத்தெய்வத்தொண்டரோ
தருட்பாமுழக்கமருத்திருமடமுங்
கூடங்களுந்தன்னமுங்குளிரறல்பருகுந்
தடங்களுமதுமலர்த்தண்டலையிடங்களுங்
கண்டகண்புயக்கலாக்கவினவாகி
விண்டருநகரெனவிளங்குமாமனைகளு
மற்பகலாச்சுவையருந்தமிழ்க்கலைமுதற்
பற்பலகலைகள்பயின்றிடுகழகமும்
பகட்டினங்கந்துகம்பாங்குறப்பூண்ட
சகட்டினச்சரிப்பருத்தனிதநீள்வீதியு
மணிதுகிலுணியமாதியவகையு
மணிகளுநிறைவுறுவணிகர்கடெற்றியு
மின்னனபலவுமியைந்துவடதிசை
மன்னகரெனத்திகழ்வண்ணையம்பதியான்
றனகருத்துரையுடல்சற்றும்பகிர்வுறுக்
கனகரத்தினமால்கண்ணிகர்மைந்தன்
வழிவழிச்சைவமதவெண்ணீற்றணி
யொழிவறவோம்பியவுயர்குடிப்பிறந்தோன்

Digitized By Roja Muthiah Research Library

## வித்துவாபிப்பிராயம்.

சங்கரனுமைமுஞ்சண்முகனுமமுங்
சங்குலும்பகனுங்கனிவுறச்செயிப்போன்
சிரணியிதுமிவனச்சிலப்
பேரணிபுனைந்தவேற்பிள்ளையாம்வள்ளலே.

16—8—1902.

—o—

யாழ்ப்பாணம் கொழும்புத்துறை
அர்ச். சூசையப்பர் போதனவித்தியாசாலைத்
தலைமை உபாத்தியாயர்
பிறதர். S. S அவர்கள்
இயற்றிய

## ஆசிரிய விருத்தம்.

—:o:—

வெண்டாளமெறிகடற்றெண்டிரைகண்மோதுகரை
மேவிலங்காசிரமென
மின்னியாழ்ப்பாணம்நிலமன்னுவண்ணைப்பதியில்
வீற்றிருகலாவிநோதன்
வேற்பிள்ளைமன்செயத்வேண்டுகோட்டாது
விண்டொடச்சினைகளேற்றி
மேனிவர்தொளிர்செழுங்காவளைபுலோலிவாழ்
வித்துவகுமாரஸ்வாமி

தண்டமிழ்சமஸ்கிருதபாஷாசமுத்திரஞ்
சாலவுண்டியருமேகந்
தாளமும்பவள்முஞ்சொரிபெற்றிபாஷியஞ்
சாற்றுமாநாவல்லபன்
தரியாதுகண்ணிமைப்பொழுதினிற்கவிபாடு
தமிழ்வாணர்கோமான்புகழ்த்
தம்பிறுமாறுமுகநாவலன்நிபுணசிவ
சம்பிவர்கள்வித்தியார்த்தி

மண்டழகுபத்தையுங்கொண்டநன்னூலெனும்
வாரிதிகுடைந்துமுத்தம்
மாமணிகள்தோற்றுவித்தாங்குகாண்டிகையுரை
விளக்கம்வகுத்தாக்கினன்
மறுவுரைகண்முத்துக்களிஃதாணிமுத்தவைகள்
மணிகளாகன்மணியிதுபொனின்
மாற்றையுரைகல்லினிதுகாட்டெனவாக்கியோன்
மதிமாட்சிகாட்டிவ்வுரை

Digitized By Roja Muthiah Research Library

வண்டடையுநறுமணத்தண்டொடையலவேயந்தபா
வாணரேமாணவாகளே
மனநோமைபிறழாதுகரதலத்தேயிதனை
வைத்துநோக்குறநேத்திரம
வாசித்திடத்துவிசுரோத்திரம்பொருள்கூர
மனனுமேகளிகூருமால்
வாருமுரையாசிரியனமீதுபுகழ்மாலைகளை
வாழத்தியேசாற்றுமினரோ.

19—8—1902.

---

யாழ்ப்பாணம் கொழும்புத்துறை
அர்ச். சூசையப்பர் போதனவித்தியாசாலை
ஆசிரியருளொருவராகிய
மெஸ். A. T. அவர்கள்
இயற்றிய

## ஆசிரியப்பா.

*

பாரெனுமன்னைபரிதிமுன்னிரப்ப
ஏருறுங்கிரணமெனுங்கரத்தாலது
பண்ணமைவண்டினம்பருகிடக்குவித்த
தண்ணமைதேங்பொதிதாமரையலர்த்தெனச்
செந்தமிழிலக்கியச்சிறப்புடைப்பொருளெலாம்
சுந்தரவிளக்கமாய்த்தோனறுமாறவையமை
இலக்கணமலைப்புகளிற்றறுந்தகலவும்
மலக்கநீங்கிமாணவாகற்கவும்
ஏற்கருவியென்றிருங்கவிவாணர்
சாற்றுநன்னூற்குத்தகுமுரைவிளக்கம்
தருகவென்றொருசனோபகாரியாய்
முருகவிழ்மதுமலர்மொய்த்துளகாவலை
கண்ணியவண்ணைக்கனகரத்தினவேள்
புண்ணியமதனாற்பூமிசையுதித்த
வித்தகனனவேற்பிள்ளையெனனும்
உத்தமனன்பனுருக்கமாய்க்கேட்கத்
தும்பிகள்குடையுந்தூமலர்ப்பொய்கையும்
பம்பியபைங்கூழ்பலகியபழனமும்
நிலவியசெல்வமுநேரிலாக்கல்வியுங்
குலவியபுகழெலாங்குழீஇயபுலோலியான்
கூறுசீர்கொண்ட ஆறுமுகநாவலன்
தேறுநற்புலவன்சிவசம்புவிவர்கள்
னன்மாணாக்கனயநலம்பெறவமைந்து

## வித்துவாபிப்பிராயம்.

மைந்தனே தந்தையாய்மாறிவந்திதனை
விந்தைசேரறிவால்விளங்குமாசிரியன்
ஆரியந்தமிழிலமைந்துளிலக்கியஞ்
சீரியமுறையிற்சிந்தையிலமைத்தவன்
எழுத்தணிசொற்பொருளியாப்பெனுமைந்தும்
விழுப்பமாயமைந்தபல்வியாகரணங்களை
உள்ளங்கையினெல்லியங்கனியெனத்
தெள்ளிதிலுணர்ந்தசீரியவித்தகன்
விற்பன்னமானவிசாலிதகாண்டிகை
பற்பலவிருந்தும்பார்லகாக்கெளிதென
அன்னநன்னூல்களையனுசரித்துயர்வு
துன்னுமகத்தியந்துலங்குதொல்காப்பியந்
தம்மிலிருந்துதானுரைப்பதற்கு
செம்மைசேர்சான்றாய்ச்சிறந்தமேற்கோள்கொடுத்
துத்தமமானவுரையுடைத்தாகச்
சித்தமமைத்துச்சீராயியற்றிக்
காண்டிகைவிளக்கமாங்கருதரும்பெயரை
யீண்டதற்கிட்டேயாவருமெச்சிடச்
சீர்மதிகொண்டுநல்வுநன்முறையிற்
பேருறமுடித்தனன்பிறங்குமிப்பீடுள
சுந்தரக்குமாரசுவாமி
விந்தைசேர்புலவன்வியப்புறநாமே.

19—8—1902

யாழ்ப்பாணம்
"சத்தியவேத பாதுகாவலன்"
தமிழ்ப்பத்திராதிபர்
மெஸ். V. F தம்பு அவர்கள்
சொல்லியது.

இப்பெரிய நூல் புலோலி மெஸ். வ. குமாரசுவாமிப்புலவரா லியற்றப்பட்டு, வண்ணைநகர் மெஸ். க. வேற்பிள்ளையின் விவேகாநந்த அச்சியந்திரசாலையிற் பதிப்பிக்கப்பட்டிருக்கின்றது. பவணந்திமுனிவர்செய்த நன்னூலை விளக்குதற்காய், காலத்துக்குக்காலம் பலராலும் இயற்றப்பட்டுள்ள காண்டிகையுரைகளிலும்பார்க்க இக்காண்டிகையுரைவிளக்கமானது தன் மகுடநாமத்துக்கொத்தபடி மிகத் தெளிவும் விவரமுமுடையது. இதனை இயற்றியவர் அகத்தியம், தொல்காப்பிய முதலிய பேரிலக்கணங்களையுபயோகித்துக் காண்டிகையுரையின் பஞ்சாங்கங்களுள் வினா விடை உதாரணமாகிய திரியங்கங்களில் முன்னைய காண்டிகைகளிலு மதிகமாய்

Digitized By Roja Muthiah Research Library

சந்திய பத்திய ரூபங்களில் கூட்டியும் புதுக்கியும், வித்தியார்த்திகளுக்கு ஏற்றவகையாய், மயக்கம வருவிக்கக்கூடிய விஷயங்களைத் தெளிவுற விளக்கியுமிருக்கின்றார். இந்நூலிலே ஆங்காங்கு நவமாய்ச் சேர்க்கப்பட்டுள்ளவற்றையெல்லாம ஒன்றொன்றாயெடுத்துக்கூறின் மிகவிரியுமாதலால் இவ்விடம் ஒன்றிரண்டைமாத்திரம் எடுத்துக்காட்டுதல் போதியதாகும். உயிர்மெய்யில் ஒற்றுமுயிருமொலிக்க "உயிரளவாய்" என்றதெனனையோவென ஆட்சேபித்து ஆசிரியர் ஆணையென ஆரோபித்து மலங்கிக்கிடந்தாரின் அறியாமையை ஒட்டிவிட்டார். எச்சம் முற்றானது என்றாற்போன்ற ஆருபங்களை உதாகரித்து முற்றெச்சமாயிற்றெனபதே போந்ததென்ன நாட்டிவிட்டார். பொருண்மயக்கம உருபுமயக்க மிதுவென்ப பகுத்தறியாது மயங்கிநிற்பார்க்கு அவற்றை யுச்சிப்பகல்போற் காட்டிவிட்டார். இன்னோரன்ன பலவும இந்நூலிற் சேர்க்கப்பட்டிருத்தலால் இலக்கணப்பயிற்சியிலே தேர்ச்சியடைய விரும்புமெவரும் இதனை ஆவலொடுபெற்று வாசிப்பாரென்பது எமது துணிபு. புத்தகம உருவத்திற் பெரிதாயினும் தம்முடைய சொந்தச் செலவிலே அச்சிட்டுச் சொற்ப கிரயத்துக்குக்கொடுக்கும் மெஸ் க வேற்பிள்ளையின் பரோபகார சிந்தையும் இவ்விடம பாராட்டிப் பேசபபடத்தக்கதொன்றும.

சத்தியவேதபாதுகாவலன்.

6—9—1902.

---

யாழ்ப்பாணம்

விக்டோறியாகாலீஜ் தமிழ்ப்பண்டிதர்

மூளாய்

S. பொன்னம்பலபிள்ளையவர்கள்

இயற்றிய

## ஆசிரியவிருத்தம்.

பொருவரியநன் னூற்காண்டிகைவிளக்கப்
புத்துரைசீர்புனைந்துரைத்தான்புலவர்போற்ற
வரமருவுபுலோலிநகர்சைவவேளாண்
மரபுவருதவக்கொழுந்துமாசிலாது
விரவுதமிழாரியமுங்கற்றுணர்ந்து
மேன்மைதிகழுப்பொருளுமவிளக்குமேலோன்
அருளன்புவிசுவசியசிவதியான
மலிர்குமா ரசுவாமி யறிஞர்கோனே.

10—9—1902.

## நன்னூற்காண்டிகையுரையாக்கியோரியற்றிய கவி.

வனம்பிறைமிதழிபுனைந்தபொற்சடில் வள்ளருட்டுணைமலர்போற்றி
மனங்கொளக்கலைபோதித்ததேசிகரே வரையுமென்மதித்தவிசேற்றி
முனம்பலவுரைநன்னூற்கியற்றியசீர் முதுவருக்குந்துதிசாற்றித்
தினம்பயில்கல்விச்சிறுவர்தேர்ந்திடவே செயப்படுங்காண்டிகைவிளக்கம்

கற்பவர்க்கன்றிக்கற்றவர்க்கன்றேயாதலிற்கலையுணர்வோங்கி
நிற்பவரென்றுவெள்ளறிவுரையினினைந்திடார்குற்றமாய்த்துரைத்தல்
அற்பகாரியமாமென்றுமஞ்ஞானவயர்பிரமாததோடங்கள்
உற்பவமாந்தர்க்கியற்கையாமென்றுமுணர்தலினுணிலனுய்ந்தேன்

ஆதியிலேதமிழ்வழங்குநிலத்தெல்லையாம்வடவேங்கடவேதண்டம்
ஓதியசீர்க்குடகநாடேகுடக்கிலுவரிகிழக்குறுமேதெற்கில்
மாதியல்சேர்குமரியெனவகுத்தனரிந்நாட்டமிழ்தான்வழங்குந்தென்கீழ்ப்
போதியவேலையினிலங்காபுரிவடபாதியுமென்றுபுகலற்பாற்றே.

Digitized By Roja Muthiah Research Library

# நன்னூற்
# காண்டிகையுரை
# விளக்கம்.

## சிறப்புப்பாயிரம்.

மலர்தலை யுலகின் மல்கிரு ளகல
இலகொளி பரப்பி யாவையும் விளக்கும்
பரிதியி னொருதா னாகி முதலீ
றொப்பள வாசை முனிவிகந் துயர்ந்த
அற்புத மூர்த்திதன் னலர்தரு தன்மையின்
மனவிரு ளிரிய மாண்பொருண் முழுவதும்
முனிவற வருளிய மூவறு மொழியுளுங்
குணகடல் குமரி குடகம் வேங்கடம்
எனுநான் கெல்லையி னிருந்தமிழ்க் கடலுள்
அரும்பொரு ளைந்தையும் யாவரு முணரத்
தொகைவகை விரியிற் றருகெனத் துன்னார்
இகலற நூறி யிருநில முழுவதுந்
தனதெனக் கோலித் தன்மத வாரணந்
திசைதொறு நிறுவிய திறலுறு தொல்சீர்க்
கருங்கழல் வெண்குடைக் கார்நிகர் வண்கைத்
திருந்திய செங்கோற் சீய கங்கன்
அருங்கலை விநோத னமரா பரணன்
மொழிந்தன னாக முன்னோர் நூலின்
வழியே நன்னூற் பெயரின் வகுத்தனன்
பொன்மதிற் சனகைச் சன்மதி முனியருள்
பன்னருஞ் சிறப்பிற் பவணந்தி
என்னு நாமத் திருந்தவத் தோனே.

Digitized By Roja Muthiah Research Library

இதன்பொருள். மலர் தலை உலகின் - பரந்தவிடத்தையுடைய உலகத்தின்கண்ணே,—மல்கு இருள் அகல - நிறைந்த கண்ணிருள் கெட,—இலகு ஒளி பரப்பி - விளங்குங் கிரணத்தை விரித்து,—யாவையும் விளக்கும் பரிதியின் - கட்பொறிக்கு விடயமாகிய உருவங்களெல்லாவற்றையுங் காட்டுஞ் சூரியனைப்போல,—ஒரு தான் ஆகி - உலகங்களுக்கெல்லாந் தானொருமுதலேயாகி,—முதல் ஈறு ஒப்பு அளவு ஆசை முனிவு இகந்து உயர்ந்த - தோற்றமும் ஒடுக்கமும் உவமையும் அளவும் விருப்பும் வெறுப்புமாகிய இவைகளின் இயல்பாகவே நீங்கி நிற்றலினாலே தலைவனாகிய,—அற்புத மூர்த்தி - ஞானமே திருமேனியாகவுடையவன்,—தன் அலர்தரு தன்மையின் - தனது மலர்ந்த குணமாகிய கருணையினாலே,—மன இருள் இரிய - உயிர்களின் மனத்திருளாகிய அஞ்ஞானங்கெட,—மாண் பொருள் முழுவதும் - மாட்சிமைப்பட்ட அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கு பொருளையும்,—முனிவு அற அருளிய - விருப்புடன் அருளிச்செய்த,—மூவறு மொழியுளும் - பதினெண்ணிலத்து மொழிகளுள்ளும்,—குண கடல் குமரி குடகம் வேங்கடம் எனும் நான்கு எல்லையின் - கிழக்கே கடலுந் தெற்கே கன்னியாகுமரியும் மேற்கே குடகநாடும் வடக்கே திருவேங்கடமும் என்று சொல்லப்படும் நான்கெல்லையினையுடைய நிலத்து மொழியாகிய,—இருந் தமிழ்க்கடலுள் - பெரிய தமிழென்னுங் கடலுள்,—அரும் பொருள் ஐந்தையும் - அருமையாகிய எழுத்துச் சொற் பொருள் யாப்பு அணி யென்னும் ஐந்து பொருளையும்,—யாவரும் உணர - இலக்கியப் பயிற்சியில் வலியவரேயன்றி எளியவரும் அறியும்பொருட்டு,—தொகை வகை விரியின் தருக என - தொகுத்தும் வகுத்தும் விரித்துஞ் செய்யப்படும் யாப்பினாலே பாடித் தருகவென,—துன்னார் இகல் அற நூறி - பகைவரது பகைமைகெட அவரை யழித்து,—இரு நிலம் முழுவதும் தனது எனக் கோலி,—பெரிய பூமிமுழுவதையுந் தன்னுடையதாகப் பற்றிக்கொண்டு,—தன் மத வாரணம் திசை தொறும் நிறுவிய திறல் உறு - தன் மதயானைகளை எட்டுத் திக்கிலுந் திக்கியானைகள்போல நிறுத்திய வெற்றி மிகுந்த,—தொல் சீர் - தொன்றுதொட்டு வருங்கீர்த்தியையும்,—கருங்கழல் - பெருமை பொருந்திய வீரக்கழலையும்,—வெண்குடை - வெண் கொற்றக் குடையையும்,—கார் நிகர் வண்கை - மேகம் போலுங் கொடையையுடைய கையையும்,—திருந்திய செங்கோல் - கோடாத செங்கோலையுமுடைய,—சீய கங்கன் - சிங்கம்போன்ற கங்கன்,—அருங்கலை விநோதன் - அருமையாகிய நூல்களை ஆராய்தலே பொழுதுபோக்கும் விளையாட்டாகவுடையவன்,—அமர் ஆபரணன் - போர் செய்தலினாலே தன்மேற்படும் பெரிய காயங்களையே ஆபரணமாக உடையவன்,—மொழிந்தனன் ஆக - சொன்னானாக,—முன்னோர் நூலின் வழியே - தொல்லாசிரியருடைய இலக்கண நூலின் வழியே,—நன்னூற் பெயரின் வகுத்தனன் - நன்னூலென்னும் பெயரினாற் செய்தனன்,—பொன் மதில் சனகை - பொன்மதிலினாலே சூழப்பட்ட சனகாபுரத்திலிருக்கும்,—சன்மதி முனி அருள் - சன்மதி முனிவன் பெற்ற,—பன்னருஞ் சிறப்பிற் பவணந்தி என்னும் நாமத்து - சொல்லுதற்கரிய ஞானவொழு

Digitized By Roja Muthiah Research Library

க்கச் சிறப்பையும் பவணந்தி யென்னும் பெயரையுமுடைய,—இருந்தவத்தோன் - பெரிய தவத்தினையுடையோன். என்றவாறு.

இதனது தாற்பரியம். சூரியன் தன் கிரணத்தினாலே புறவிருளை அகற்றிக் கட்பொறிக்கு விடயமாகிய உருவங்களை விளக்குதல் போலக், கடவுள் தன்கருணையினாலே அகவிருளை அகற்றி அறம் பொருள் இன்பம் வீடு என்னு நான்கு உறுதிப்பொருளையும் விளக்கப்பெறாத பதினெண்பாடைகளுள்ளும், கிழக்கே கடலுந் தெற்கே கன்னியாகுமரியும் மேற்கே குடகநாடும் வடக்கே திருவேங்கடமும் எல்லையாகவுடைய நிலத்து மொழியாகிய தமிழ்ப்பாடையினுள், எழுத்து சொல் பொருள் யாப்பு அணி என்னும் ஐந்திலக்கணத்தையும், இலக்கியப் பயிற்சியின் வலியவரேயன்றி எளியவரும் அறியும் பொருட்டுத் தொகுத்தும் வகுத்தும் விரித்துஞ் செய்யப்படும் யாப்பினாற் செய்து தருக எனச் சீயகங்கன் சொல்லத் தொல்லாசிரியர் நூலின்வழியே நன்னூல் என்னும் பெயரினாற் செய்தனன் பவணந்தி முனிவன் என்பதாம்.

அமர் என்பது ஆகுபெயராய் அமரில் ஆயுதங்கள் தைத்த புண்ணை யுணர்த்திற்று.

| | | |
|---|---|---|
| ௧. | ஆக்கியோன்பெயர் | பவணந்திமுனிவன் |
| ௨. | வழி | முன்னோர் நூலின்வழி. |
| ௩. | எல்லை | குணகடல் குமரி குடகம் வேங்கடமெனு [நான்கெல்லை. |
| ௪. | நூற்பெயர் | நன்னூல். |
| ௫. | யாப்பு | நிகண்டு கற்று இலக்கியப் பயிற்சி செய் [தபின் இந்நூல் கேட்கத்தக்கது. |
| ௬. | நுதலியபொருள் | அரும்பொருளைந்து. |
| ௭. | கேட்போர் | இலக்கியப்பயிற்சிசெய்தவர். |
| ௮. | பயன் | மொழித்திறத்தின் முட்டறுத்தல். |
| ௯. | காலம் | சீயகங்கன் காலம் |
| ௧௦. | களன் | சீயகங்கன் சபை. |
| ௧௧. | காரணம் | சீயகங்கன் சொன்னமையும், யாவரிடத்து [ம் இரக்கமுடைமையும். |

Digitized By Roja Muthiah Research Library

# பொதுப்பாயிரம்.

―――o―――

[பாயிரத்தின் பெயர்கள்.]

க. முகவுரை பதிக மணிந்துரை நூன்முகம்
புறவுரை தந்துரை புனைந்துரை பாயிரம்.

இதன்பொருள். முகவுரை - பாயிரம் - முகவுரை, பதிகம், அணிந்துரை, நூன்முகம், புறவுரை, தந்துரை, புனைந்துரை என்பன பாயிரத்திற்குப் பெயர்களாம். எ - று.

பாயிரம் வரலாறு. முகவுரை நூற்குமுன் சொல்லப்படுவது: நூன்முகம் என்பதும் அது. பதிகம் (ஐந்து பொதுவும் பதினொரு சிறப்புமாகிய பலவகைப் பொருளையுந்) தொகுத்துச சொல்வது, அணிந்துரை - (நூலினது பெருமை முதலியன விளங்க) அலங்கரித்துச் சொல்வது: புனைந்துரையென்பதும் அது. புறவுரை நூல் சொல்லிய பொருளல்லாதவைகளைச் சொல்வது. தந்துரை நூலின்மேல்சொல்லப்பட்ட பொருளல்லாதவைகளை அதற்குத் தந்து சொல்வது.

புறவுரை - நூலின்புறத்தே சேர்க்கப்படுவது. தந்துரை - நூல்கருதிய பொருளல்லாதவைகளை அதற்குத்தந்துசொல்வது. தந்து என்பது நூலாதலால், தந்துரை என்பதற்கு நூலைக்குறித்துச் சொல்லுமுரை என்றுரைப்பினுமாம். (க)

[பாயிரவகை.]

உ. பாயிரம் பொதுச்சிறப் பெனவிரு பாற்றே.

இ - ள். பாயிரம் பொதுச் சிறப்பு என இருபாற்று - பாயிரமானது பொதுப்பாயிரமுஞ் சிறப்புப்பாயிரமுமென இருவகையினையுடைத்து. எ - று. ஏகாரம் ஈற்றசை. (உ)

[பொதுப்பாயிரம் இன்னதென்பது.]

ங. நூலே நுவல்வோ னுவலுந் திறனே
கொள்வோன் கோடற் கூற்ற ளைந்தும்
எல்லா நூற்கு மிவைபொதுப் பாயிரம்.

இ - ள். நூற் (திறன்) - நூலினது வரலாறும் - நுவல்வோன் (திறன்) - ஆசிரியனது வரலாறும், — நுவலுந்திறன் - அவ்வாசிரியன் மாணாக்கனுக்கு

Digitized By Roja Muthiah Research Library

நூலைச்சொல்லுதலின் வரலாறும்,—சொல்வோன் (கூற்று) - மாணுக்கனது வரலாறும்,—கோடற்கூற்று - அவன் கேட்டலின் வரலாறும்,—ஐந்தும் எல்லா நூற்கும் ஆம் - ஆகிய இவ்வைந்தும் எல்லாநூல்களுக்குமாம்,—இவை பொதுப்பாயிரம் - ஆதலால் இவ்வைந்து வரலாற்றையும் விளங்கவுணர்த்துவது பொதுப்பாயிரமாம். எ - று. (௩)

**பரீக்ஷை.** வினுக்கள்.—க. பாயிரமென்பதன் பொருள் யாது? பாயிரத்திற்குக் காரணப்பெயர்கள் எவை? உ. பாயிரம் எத்தனை வகைப்படும்? ௩. பொதுப்பாயிரமாவதியாது?

---

## க. நூலினது வரலாறு.

[நூல் இன்னதென்பது]

௪. நூலி னியல்பே நுவலி னோரிரு
பாயிரந் தோற்றி மும்மையி னொன்றாய்
நாற்பொருட் பயத்தோ டெழுமதந் தழுவி
ஐயிரு குற்றமு மகற்றியம் மாட்சியோ
டெண்ணான் குத்தியி னோத்துப் படலம்
என்னு முறுப்பினிற் சூத்திரங் காண்டிகை
விருத்தி யாகும் விகற்பநடை பெறுமே.

நூலின் இயல்பு நுவலின் - நூலினது வரலாற்றைச்சொல்லின்,—ஓரிரு பாயிரந் தோற்றி - இருவகைப்பாயிரத்தையும் முன்னுடைத்தாகி,—மும்மையின் ஒன்றாய் - மூவகைநூலுள் ஒன்றாகி,—நாற்பொருட் பயத்தோடு - நான்கு பொருளாகிய பிரயோசனத்தோடு கூடி,—எழுமதம் தழுவி - எழுவகைமதத்தையுமருவி,—ஐயிரு குற்றமும் அகற்றி - பத்துக்குற்றத்தையும் ஒழித்து,—அம்மாட்சியோடு - பத்தழகுடனே,—எண்ணான்கு உத்தியின் - முப்பத்திரண்டு உத்தியைக்கொண்டு,—ஓத்துப்படலம் என்னும் உறுப்பினில் - ஓத்தும்படலமுமென்று சொல்லப்படும் இருவகையவயவத்தோடு,—சூத்திரம் காண்டிகை விருத்தி ஆகும் விகற்பநடை பெறும் - சூத்திரமுங் காண்டிகையுரையும் விருத்தியுரையுமாகிய வேறுபாட்டு நடைகளைப்பெற்றுவரும்.

அ + மாட்சி = அந்த அழகு. அ என்பது முற்கூறிய ஐயிரண்டைச்சுட்டுதலாற் பத்தழகென்று பலிதார்த்தமாயிற்று. ஓத்து = (இயலாகிய) சிற்றங்கம். படலம் = பல இயல்களின் கூட்டமான (அதிகாரமாகிய) பேரங்கம். இவற்றை ௪௰-ம், ௪௯-ம் சூத்திரங்கள் வகுத்துரைத்தல் காண்க. இயலென்பதற்கியையும் பாகத்தைச் சிலநூலிலே அதிகாரமென்று வழங்குதலுமுண்டு திருவள்ளுவர் குறளிலுங் காண்க. (௪)

Digitized By Roja Muthiah Research Library

[மூவகைநூல்.]

ரு. முதல்வழி சார்பென நூன்மூன் றாகும்.

இ - ள். முதல் வழி சார்பு என - முதனூல் வழிநூல் சார்புநூலெ ன,— நூல் மூன்று ஆகும் - நூல் மூன்று வகையினையுடைத்தாம். எ - று.

[முதனூல் இன்னதென்பது.]

சு. அவற்றுள்,—
வினையி னீங்கி விளங்கிய வறிவின்
முனைவன் கண்டது முதனூ லாகும்.

இ - ள். அவற்றுள் - அம்மூவகை நூலுள்,— வினையின் நீங்கி விளங் கிய அறிவின்,— இயல்பாகவே வினையினின்று நீங்கித் தானே விளங்கிய அறி வினையுடைய,— முனைவன் கண்டது முதனூல் ஆகும் - கடவுள் உயிர்களுக்கு ஆதிகாலத்திலே செய்தது முதனூலாம். எ - று.

வினையினீங்கி என்பதற்கு முன்வினையொடு கூடியிருந்து பின் நீங்கி எ ன்று கருத்துக்கொள்ளாது, முக்காலத்தும் வினையொடு தொடர்பின்றி என் று கருதுக. எனவே இறைவன் ஒருகாலத்தும் பாசசம்பந்தமில்லாதவனென் றவாறும். கடவுள்செய்தநூலுமேயன்றிக் கடவுளருள்வசப்பட்ட பெரியோர் செய்தநூலும் முதனூலென்றுகொள்ளப்படும். இதனை 'முன்னோர் நூலின்' என்று பின் பன்மையாற் கூறியது கண்டுணர்க. (சு)

[வழிநூல் இன்னதென்பது.]

எ. முன்னோர் நூலின் முடிபொருங் கொத்துப
பின்னோன் வேண்டும் விகற்பங் கூறி
அழியா மரபினது வழிநூ லாகும்.

இ - ள். முன்னோர் நூலின் முடிபு ஒருங்கு ஒத்து - கடவுளும் அவன ருள்வழிப்பட்டோருமாகிய தொல்லாசிரியர்நூல்களினுடைய பொருண்முடி புமுழுவதும் ஒத்து,— பின்னோன் வேண்டும் விகற்பம் கூறி - வழிநூல் செ ய்வோன் முதனூலிருக்கவுந் தான் வழிநூல்செய்தற்குக் காரணமாக வேண் டிய வேறுபாடுகளையும் உடன் சொல்லி,— அழியா மரபினது வழிநூல் ஆகு ம் - அவ்வேறுபாடுகள் அறிவுடையோர் பலர்க்கும் ஒப்ப முடிந்தமையால் அழியாது நிலைபெற்று விளங்குந் தன்மையை யுடையது வழிநூலாம். எ - று.

இ - ம். முதனூலை முழுவதுமொத்துச் சிறிது விகற்பமுஞ்சேர்க்கப்பட் டிருப்பது வழிநூல். எ - ம்.

பின்னோன் வேண்டும் விகற்பங் கூறலாவது, பழைய இலக்கணங்களாகி இக்காலத்து வழங்காதவைகளை இறந்தது விலக்கலென்னும் உத்தியினாலே

Digitized By Roja Muthiah Research Library

விலக்கியும், புதிய இலக்கணங்களாகி இக்காலத்து வழங்குமவைகளை எதிர்த்துபோற்றலென்னும் உத்தியினாலே தழுவியுங் கூறுதன் முதலியன. (எ)

[சார்புநூல் இன்னதென்பது.]

அ. இருவர் நூற்கு மொருசிறை தொடங்கித்
திரிபு வேறுடையது புடைநூ லாகும்

இ - ள். இருவர் நூற்கும் ஒருசிறை தொடங்கி - முதனூல் வழிநூல் என்னும் இருவகை நூல்களுக்கும் பொருண் முடிபு ஒருபுடையொத்து,— வேறு திரிபு உடையது புடைநூல் ஆகும் - மற்றவைகளெல்லாம் ஒவ்வாமையையுடையது சார்புநூலாம். எ - று.

இ - ம். முதனூல் வழிநூல்களுக்குச் சிறுபான்மை யொத்துப் பெரும்பாலும் வேறுபட்டிருப்பது சார்புநூல். எ - ம்.

திரிபுவேறும் தேசகாலம்பற்றி அறிவுடையோரால் அங்கீகரிக்கத்தகுவனவாம். (அ)

[வழிநூலுக்குஞ் சார்புநூலுக்கும் எய்தியதன்மேற் சிறப்புவிதி.]

கூ. முன்னோர் மொழிபொருளே யன்றி யவர்மொழியும்
பொன்னேபோற் போற்றுவ மென்பதற்கும்—முன்னோரின்
வேறுநூல் செய்துமெனு மேற்கோ ளில் லென்பதற்குங்
கூறுபழஞ் சூத்திரத்தின் கோள்.

இ - ள். முன்னோர் மொழி பொருளே அன்றி - முன்னோர்சொல்லிய பொருளையே யன்றி,—அவர் மொழியும் பொன்னே போல் போற்றுவம் என்பதற்கும் - அவரது சொல்லையும் பொன்னைப்போலவே காத்துக்கொள்வோமென்பதற்கு அடையாளமாகவும்,—முன்னோரின் வேறுநூல் செய்தும் எனும் - முன்னோர் நூலினின்றும் வழிநூல் சார்புநூலெனை வேறுநூல் செய்தோமாயினும்,—மேற்கோள் இல் என்பதற்கும் - ஆசிரியவசனம் இந்நூலினிடத்து இல்லையென்று சொல்லுங் குற்றம் ஒழிதற்காகவும்,—பழஞ் சூத்திரத்தின் கோள் கூறு - அவர்சொல்லிய பழஞ்சூத்திரங்களையும் ஓரோரிடங்களில் எடுத்துச்சொல்லு. எ - று.

எனினுமென்பது எனுமென இடைக்குறைந்து நின்றது. ஆசிரியவசனம், மேற்கோள், பழஞ்சூத்திரம் என்பவை ஒருபொருட்சொற்கள்.

'குறியதன்முன்னராய்தப்புள்ளி' என்பது அகத்தியத்திலிருந்து தொல்காப்பியத்திலும் இந்நூலிலுங் கொண்ரப்பட்டு மேற்கோளாயினது காண்க.

[நாற்பொருட்பயன்.]

கo. அறம்பொரு ளின்பம்வீ டடைதனூற் பயனே.

இ - ள். அறம் பொருள் இன்பம் வீடு அடைதல் - தருமமும் அருத்த

Digitized By Roja Muthiah Research Library

மூங் காமமும் மோக்ஷ மடைதலுமாகிய நான்கும்,—நூற்பயன் - நூலால் எய்தும் பிரயோசனமாம். எ - று. (கo)

[எழுமதம்.]

கக. எழுவகை மதமே யுடன்படன் மறுத்தல்
பிறர்தம் மதமேற் கொண்டு களைவே
தாஅ ணாட்டித் தனாது நிறுப்பே
இருவர் மாறுகோ ளொருதலை துணிவே
பிறர்நூற் குற்றங் காட்ட லேனைப்
பிறிதொடு படாஅன் றன்மதங் கொளலே.

இ - ள். எழுவகை மதம் - எழுவகை மதமாவன,—உடன்படல் - பிறர்மதத்திற்குத் தான் உடன்படுதலும்,—மறுத்தல் - பிறர்மதத்தை மறுத்தலும்,—பிறர்தம் மதம் மேற்கொண்டு களைவு பிறர்மதத்திற்கு உடன்பட்டுப் பின்பு மறுத்தலும்,—தாஅன் நாட்டித் தனாது நிறுப்பு - தானே ஒருபொருளை எடுத்துநாட்டி அதனை வருமிடந்தோறும் நிறுத்துதலும்,—இருவர் மாறுகோள் ஒருதலை துணிவு - இருவரால் விரோதமாகக் கொள்ளப்பட்ட இரண்டனுள் ஒன்றனிடத்துத் துணிதலும்,—பிறர்நூற் குற்றங் காட்டல் - பிறர் நூலிலுள்ள குற்றத்தை எடுத்துக் காட்டுதலும்,—பிறிதொடு படாஅன் தன்மதம் கொளல் - பிறர் மதத்திற்கு உடன்படானாகித் தன்மதத்தையே கொள்ளுதலுமாம்.

பிறர்தம்மதமேற் கொண்டு களைவு என்பது பிறர்மதத்தை ஏற்றுக்கொண்டு தள்ளிவிடுதலாயின் அது விரோதமன்றோவெனின்; ஒருவிதத்தா லுடன்பட்டு மற்றொருவிதத்தாற் றள்ளிவிடுதலாதலின் விரோதமன்றென்க. இவ்வகையாகக்கொண்டு விடுதலாகிய இதனை வடநூலார் பக்ஷாந்தரமென்பர். (கக)

[பத்துக்குற்றம்.]

கஉ. குன்றக் கூறன் மிகைபடக் கூறல்
கூறியது கூறன் மாறுகொளக் கூறல்
வழூஉச்சொற் புணர்த்தன் மயங்க வைத்தல்
வெற்றெனத் தொடுத்தன் மற்றொன்று விரித்தல்
சென்றுதேய்ந் திறுத லின்றுபய னின்மை
யென்றிவை யீரைங் குற்ற நூற்கே.

இ - ள். குன்றக் கூறல் - குறித்த பொருளை விளக்குதற்கு வேண்டுஞ் சொற்களிற் குறைவுபடச் சொல்லுதலும்,—மிகை படக் கூறல் - குறித்த பொருளை விளக்குதற்கு வேண்டுஞ் சொற்களினும் அதிகப்படச்சொல்லுதலும்,—கூறியது கூறல் - முன் சொன்ன பொருளையே பின்னுஞ் சொல்லுதலும்,—மாறுகொளக் கூறல் - முன் சொன்ன பொருளுக்குப் பின் சொல்லும்



Digitized By Roja Muthiah Research Library

பொருள் விரோதப்படச் சொல்லுதலும்,—வழூஉச் சொற் புணர்த்தல் - குற்றமுடைய சொற்களைச் சேர்த்தலும்,—மயங்க வைத்தல் - இதற்குப்பொருள் இதுவோ அதுவோ எனச் சந்தேகிக்க வைத்தலும்,—வெற்றெனத் தொடுத்தல் - பொருள் வெளிப்படையாகத் தோன்றச் சொற்களைச்சேர்த்தலும்,—மற்று ஒன்று விரித்தல் - சொல்லத் தொடங்கிய பொருளைவிட்டு இடையிலே மற்றொருபொருளை விரித்தலும்,—சென்று தேய்ந்து இறுதல் - செல்லச் செல்லச் சொன்னடை பொருணடை தேய்ந்து முடிதலும்,—நின்று பயன் இன்மை என்று - சொற்களிருந்தும் ஒருபிரயோசனமு மில்லாமற்போதலும்,—இவை நூற்கு ஈரைங்குற்றம் - ஆகிய இவை நூலுக்குப் பத்துக்குற்றமாம். எ - று.

என்று என்பது எண்ணுப்பொருளில் வந்தது. அது ஓரிடத்து நின்றதெனினும் பிரிந்து குன்றக் கூறலென்று, மிகைபடக்கூறலென்று என மற்றவற்றொடுஞ் சேர்ந்து எண்ணுதற்காகும்.

'என்றும் எனவும் ஒடுவுமோரோவழி, நின்றும் பிரிந்தெண் பொருடொறு நேரும்' என்று இடைச்சொல்லியலில் விதியறிக. "தெய்வவிரதனென்றிவன்பெயர்" என்பதிற்போலப் பெயர்ப்பொருளில் வந்ததெனினுமாம். 'வினை பெயர் குறிப்பிசை எண்பண்பாறினும், என எனுமொழி வருமென்றுமற்றே' என்றிடைச்சொல்லியல் கூறுவதறிக. நூற்கு ஈரைங்குற்றம் இவை என முடிப்பினுமாம். (௧௨)

[பத்தழகு.]

௧௩. சுருங்கச் சொல்லல் விளங்க வைத்தல்
நவின்றோர்க் கினிமை நன்மொழி புணர்த்தல்
ஓசை யுடைமை யாழமுடைத் தாதல்
முறையின் வைப்பே யுலகமலை யாமை
விழுமியது பயத்தல் விளங்குதா ரணத்த
தாகுத னூலிற் கழகெனும் பத்தே.

இ - ள். சுருங்கச் சொல்லல் - சொற்கள் வீணாக விரியாது சுருங்கிநிற்கச் சொல்லுதலும்,—விளங்க வைத்தல் - சுருங்கச் சொல்லினும் பொருளைச் சந்தேகத்துக்கு இடமாகாது விளங்க வைத்தலும்,—நவின்றோர்க்கு இனிமை - வாசித்தவருக்கு இன்பத்தைத் தருதலும்,—நன்மொழி புணர்த்தல் - நல்லசொற்களைச் சேர்த்தலும்,—ஓசை உடைமை - சந்தவின்பமுடைத்தாதலும் - ஆழம் உடைத்து ஆதல் - நோக்க நோக்க ஆழ்ந்த கருத்தையுடைத்தாதலும்,—முறையின் வைப்பு - படலம் ஒத்து முதலியவைகளைக் காரண காரிய முறைப்படி வைத்தலும்,—உலகம் மலையாமை - உயர்ந்தோர் வழக்கத்தோடு மாறுகொள்ளாமையும்,—விழுமியது பயத்தல் - உயர்வாகிய பொருளைத் தருதலும்,—விளங்கு உதாரணத்தது ஆகுதல் - விளங்கிய உதாரணத்தை யுடையதாதலும்,—நூலிற்கு அழகு எனும் பத்து - நூலினுக்கு அழகென்றுசொல்லப்படும் பத்து. எ - று.

கருத்து ஆழமாயும் உதாரணம் வெளிப்படையாயு மிருத்தல்வேண்டும்.

Digitized By Roja Muthiah Research Library

[முப்பத்திரண்டுத்தி.]

கச. நுதலிப் புகுத லோத்துமுறை வைப்பே
தொகுத்துச் சுட்டல் வகுத்துக் காட்டல்
முடித்துக் காட்டன் முடிவிடங் கூறல்
தானெடுத்து மொழிதல் பிறன்கோட் கூறல்
சொற்பொருள் விரித்த றொடர்ச்சொற் புணர்த்தல்
இரட்டுற மொழித லேதுவின் முடித்தல்
ஒப்பின் முடித்தன் மாட்டெறிந் தொழுகல்
இறந்தது விலக்க லெதிரது போற்றல்
முன்மொழிந்து கோடல் பின்னது நிறுத்தல்
விகற்பத்தின் முடித்தன் முடிந்தது முடித்தல்
உரைத்து மென்ற லுரைத்தா மென்றல்
ஒருதலை துணித லெடுத்துக் காட்டல்
எடுத்த மொழியி னெய்த வைத்தல்
இன்ன தல்ல திதுவென மொழிதல்
எஞ்சிய சொல்லி னெய்தக் கூறல்
பிறநூன் முடிந்தது தானுடன் படுதல்
தன்குறி வழக்க மிகவெடுத் துரைத்தல்
சொல்லின் முடிவி னப்பொருண் முடித்தல்
ஒன்றின முடித்த றன்னின முடித்தல்
உய்த்துணர வைப்பென வுத்தியெண் ணான்கே.

இ - ள். நுதலிப் புகுதல் - இதுசெய்யின் இப்படியாகுமென்று கருதிப் புகுதலும்,—ஓத்து முறை வைப்பு - இயல்களைக் காரண காரிய முறைப்படி வைத்தலும்,—தொகுத்துச் சுட்டல் - பலவற்றையுந் திரட்டிக் காட்டுதலும்,—வகுத்துக் காட்டல் - அப்படித் திரட்டிக் காட்டப்பட்டவைகளை வெவ்வேறாகக் கூறுபடுத்துக் காட்டுதலும்,—முடித்துக் காட்டல் - தான் மேலோர் முடித்தவாறு முடித்துக்காட்டுதலும், முடிவு இடம் கூறல் - தான் சொல்லும் இலக்கணத்திற்கு இலக்கியந் தோன்றுமிடத்தைச் சொல்லுதலும்,—தான் எடுத்து மொழிதல் - பழைய சூத்திரத்தைத் தான் ஓரோவிடத்து எடுத்துச் சொல்லுதலும்,—பிறன் கோட் கூறல் - தன்னூலிற் பிறனது கோட்பாட்டைச் சொல்லுதலும்,—சொற் பொருள் விரித்தல் - சொல்லினது பொருள் விளங்குதற்கு உருபு முதலியவைகளை விரித்துச் சொல்லுதலும்,—தொடர்ச்சொற் புணர்த்தல் - ஒன்றற்கொன்று சம்பந்தமுடைய சொற்களைச் சேர்த்தலும்,—இரட்டு உற மொழிதல் - ஒருவாக்கியத்தை இரண்டு பொருள்படச் சொல்லுதலும்,—ஏதுவின் முடித்தல் - முன்காரணம் விளங்கப் பெறுவதொன்றைப் பின்காரணம் விளங்கவைத்து முடிவு செய்தலும்,—ஒப்பின் முடித்தல் - ஒன்றற்குச் சொல்லப்படும் இலக்கணம் வேறொன்றற்கும் ஒத்து

Digitized By Roja Muthiah Research Library

வருமாயின் அதற்கும் அதுவே இலக்கணமாக உடன்முடிவு செய்தலும்,—மாட்டெறிந்து ஒழுகல் - ஒன்றற்குச் சொல்லப்பட்ட இலக்கணத்தை அதனைப் பெறுதற்குரிய மற்றொன்றற்கும் மாட்டிவிட்டு நடத்தலும்,—இறந்தது விலக்கல் - முற்காலத்து வழங்கிய இலக்கணங்களுள்ளே பிற்காலத்து வழங்காதொழிந்ததை நீக்குதலும்,—எதிரது போற்றல் - முற்காலத்து வழங்காது பிற்காலத்து வழங்கிவரும் இலக்கணத்தைத் தழுவிக் கொள்ளுதலும்,—முன்மொழிந்து கோடல் - பின்பு வேண்டுமிடந்தோறும் எடுத்தாளும் பொருட்டு முன்னே ஒன்றனைச் சொல்லிக்கொள்ளுதலும்,—பின்னது நிறுத்தல் - ஒரு பொருளுக்குக் கருவியாக முன்வைத்தற்குரியது அங்கே வைத்தற்கு இடம் பெறாதாயின் அப்பொருளின்பின் அதனை வைத்தலும்,—விகற்பத்தின் முடித்தல் - (விளங்குதற்பொருட்டு) வெவ்வேறனவாய்பாட்டால் முடித்தலும்,—முடிந்தது முடித்தல் - வெவ்வேறாக முடிந்ததைப் புலப்படவேண்டித் தொகுத்து முடித்தலும்,—உரைத்தும் என்றல் - பின்னே சொல்லப்படுவதை முன்னே ஒரு நிமித்தத்தினாலே சொல்லவேண்டின் இதனைப் பின்னே சொல்வோமென்பது தோன்ற அங்கே சுருக்கிச்சொல்லுதலும்,—உரைத்தாம் என்றல் - முன்னே ஒருநிமித்தத்தினாலே சொல்லப்பட்டதைப் பின்னே சொல்லவேண்டியவிடத்து இதனை முன்னேதானே சொல்லினோமென்பது தோன்றச் சொல்லாதுவிடுதலும்,—ஒருதலை துணிதல் - இருவராலே விரோதமாகக் கொள்ளப்பட்ட இரண்டு பக்கத்துள் ஒருபக்கந் துணிதலும்,—எடுத்துக் காட்டல் - தான் சொல்லும் இலக்கணத்திற்குத் தானே இலக்கியத்தை எடுத்துக் காட்டுதலும்,—எடுத்தமொழியின் எய்தவைத்தல் - தான் சொல்லும் இலக்கணத்தைத் தானெடுத்துக் காட்டிய இலக்கியத்திலே பொருந்த வைத்தலும்,—இன்னது அல்லது இது என மொழிதல் - சந்தேகிக்க நின்றவிடத்து இப்படிப்பட்டதல்லாதது இதுவெனச் சொல்லுதலும்,—எஞ்சிய சொல்லின் எய்தக் கூறல் - சொல்லாது விடப்பட்டனவற்றிற்குச் சொல்லப்பட்டதனால் இலக்கணம் பொருந்தச் சொல்லுதலும்,—பிற நூல் முடிந்தது தான் உடன் படுதல் - பிற நூலிலே முடிந்த முடிபைத் தான் அங்கீகரித்தலும்,—தன்குறி வழக்கம் மிக எடுத்து உரைத்தல் - தான் புதிதாகக் குறித்து வழங்குவதைப் பலவிடங்களிலும் எடுத்துச் சொல்லுதலும்,—சொல்லின் முடிவின் அப்பொருள் முடித்தல் - சொல்லின் முடிவிலே அதன் பொருளையு முடித்தலும்,—ஒன்றின முடித்தல் தன் இனம் முடித்தல் - விதியால் ஒற்றுமைப்பட்டவைகளை ஒருங்கு கூட்டி முடித்தல் ஒன்றைச் சொல்லுமிடத்து அதற்கினமாகிய மற்றொன்றையும் அதனோடு முடித்தலும்,—உய்த்து உணர வைப்பு - சிலசூத்திரவிதிகளைக்கொண்டு ஆராய்ந்தறியும்படி ஒருபொருளைவைத்தலும்,—என உத்தி எண்ணான்கு - எனத்தந்திரவுத்திகள் முப்பத்திரண்டாம். எ - று.

ஒன்றின முடித்த றன்னின முடித்தல் என்னும் இரண்டும் ஒருத்தி. இம் முப்பத்திரண்டேயன்றி, உரையிற் கோடல், மொழிந்த பொருளோடொன்ற வவ்வயின் மொழியாததனையு முட்டின்று முடித்தல், உடம்பொடு புணர்த்தல், ஏற்புழிக்கோடல் எனப் பிறவும் உள எனக் கொள்க.

முன்சொல்லிய மதங்களுக்கும் உத்திகளுக்கும் உதாரணம் இந்நூலினுள்ளே பின்வரும் இடந்தொறுங் காட்டப்படும். (கச)

[உத்தி இன்னதென்பது.]

கரு. நூற்பொருள் வழக்கொடு வாய்ப்பக் காட்டி
ஏற்புழி யறிந்திதற் கிவ்வகை யாமெனத்
தகும்வகை செலுத்துத றந்திர வுத்தி.

இ - ள். நூற்பொருள் - ஒரு நூலால் அறிவிக்கப்படும் பொருளை,—வழக்கொடு வாய்ப்பக்காட்டி - நூல்வழக்கோடும் உலகவழக்கோடும் பொருந்தக் காண்பித்து, - ஏற்புழி அறிந்து - ஏற்குமிடத்தை அறிந்து,—இதற்கு இவ்வகை ஆம் எனத் தகும் வகை செலுத்துதல்,—இவ்விடத்திற்கு இப்படியாகுமென்று நினைத்துத் தக்கபடியாகச் செலுத்துவது,—தந்திரவுத்தி - தந்திர வுத்தியாம். எ - று. (கரு)

தந்திரமென்பது நூல். உத்தியென்பது பொருந்துமாறு.

[ஓத்து இன்னதென்பது.]

கசு. நேரின மணியை நிரல்பட வைத்தாங்
கோரினப் பொருளை யொருவழி வைப்ப
தோத்தென மொழிப வுயர்மொழிப் புலவர்.

இ - ள். நேர் இன மணியை நிரல்பட வைத்து ஆங்கு - ஒருசாதியாயுள்ள மணிகளை ஒருவரிசையாகப் பதித்தாற் போல,—ஓரினப்பொருளை ஒருவழி வைப்பது - ஒருசாதியா யுள்ள பொருள்களை ஒருவழிப்படச் சொல்வது,—ஒத்து என மொழிப - ஓத்துறுப்பாமென்று சொல்லுவர்,—உயர் மொழிப் புலவர் - உயிர்க்கு உறுதி பயக்கும் நூல்களை அறிந்த புலவர். எ - று.

நேர்தல் - ஒன்றுபடுதல்.

இயலென்றும், படலமென்றும் பாகப்படுவது நூலாதலால் நூல்களையுணர்ந்தவரே அப்பகுப்பை அறிந்துகூற வல்லுநரென்பதுணர்த்துதற்கு உயர்மொழிப்புலவரென்றார். மொழி ஆகுபெயர். (கசு)

[படலம் இன்னதென்பது.]

கஎ. ஒருநெறி யின்றி விரவிய பொருளாற்
பொதுமொழி தொடரி னதுபடல மாகும்.

இ - ள். ஒரு நெறி இன்றி விரவிய பொருளால் - ஒருவழிப்படாது கலந்த பலபொருள்களினாலே,—பொது மொழி தொடரின் - பொதுமொழியாகத் தொடரப் பெறின்,—அது படலம் ஆகும் - அதுபடலவுறுப்பாம்

Digitized By Roja Muthiah Research Library

பொதுமொழி பொதுவாகச் சொல்லப்படுவது. ஒருபொருளையே நுதலிவருவது சூத்திரம்; ஓரினப் பொருள்களையே தொகுப்பது ஓத்து; பலவினப்பொருள்களுக்கும் பொதுவாகிய இலக்கணங்கூறுவது படலம். பலசூத்திரங்களினது தொகுதிஓத்து; பலவோத்துக்களினது தொகுதி படலம். ஓத்தென்றது இயலை. படலமென்றது அதிகாரத்தை. (௧௭)

[சூத்திரம் இன்னதென்பது]

௧௮. சில்வகை யெழுத்திற் பல்வகைப் பொருளைச்
செவ்வ னாடியிற் செறித்தினிது விளக்கித்
திட்ப நுட்பஞ் சிறந்தன சூத்திரம்.

இ - ள். ஆடியின் - பெரிய சரீரமுதலியவைகளின் சாயையைத் தன்னுள்ளே செவ்வையாக அடக்கி இனிதாகக் காட்டுஞ் சிறிய கண்ணாடி போல,—சில்வகை எழுத்தில் பல்வகைப் பொருளை - சிலவகை யெழுத்துக்களாலாகிய வாக்கியத்திலே பலவகைப்பட்ட பொருள்களை,—செவ்வன் செறித்து இனிது விளக்கி - செவ்வையாக அடக்கி இனிதாகக் காட்டி,—திட்பம் - குற்றமில்லாமையாற் சொல்வலி பொருள்வலிகளும்,—நுட்பம் ஆழமுடைமையாற் பொருணுணுக்கங்களும்,—சிறந்தன சூத்திரம் - சிறந்து வருவன சூத்திரங்களாம். எ - று.

விரித்து மிக்கபல சொற்களால் மாணுக்கர்க்கு விளக்கப்படும் பலபொருளைச் சிலசொற்களிலடக்கிச் சுருக்கித் திட்பநுட்பமாய் நுண்ணியோருணரும்படி சொல்வது சூத்திரமென்பது கருத்து. சொற்சுருக்கமும் பொருளகலமும் வாய்ப்பச் செய்வது சூத்திரமென்றபடியாம். மிக்கசுருக்கமாயென்பார் சிலவகை யெழுத்திலென்றார். சோதிட நூல்களிலும் தருக்கநூலிலும் வடமொழிவியாகரணங்களிலும் எழுத்தாலும் விடய முணர்த்துதல்பற்றி எழுத்தில் என்றார். ஆதலின் எழுத்திலென்பது சொல்லிலென்று பொருடரும்போது ஆகுபெயரும், அக்ஷரங்களிலென்று பொருடரும்போது இயற்பெயருமாம். (௧௮)

[சூத்திரநிலை]

௧௯. ஆற்றொழுக் கரிமா நோக்கந் தவளைப்
பாய்த்துப் பருந்தின்வீழ் வன்னசூத் திரநிலை.

இ - ள். சூத்திரநிலை - மேற்கூறிய சூத்திரங்கள் ஒன்றோடொன்று பொருளால் தொடர்ந்து நிற்கு நிலைகள்,—ஆற்றொழுக்கு - இடையறாது ஓடுகின்ற ஆற்று நீரோட்டத்தையும்,—அரிமா நோக்கம் - முன்னும் பின்னும் பார்க்கின்ற சிங்கத்தினது பார்வையையும்,—தவளைப்பாய்த்து - நடுவே சிறிதிடம் விட்டுக் குதிக்கின்ற தவளையினது பாய்ச்சலையும்,—பருந்தின் வீழ்வு - நெடுந்தூரத்தினின்றும் ஒன்றை வௌவிப்போதற்கு வீழ்கின்ற பருந்தினது வீழ்ச்சியையும்,—அன்ன - போல்வனவாம். எ - று.

Digitized By Roja Muthiah Research Library

[சூத்திரங்களுக்குப் பொருளையுணர்த்துங் காரணவகையால்வரும் பெயர்வேறுபாடு.]

உ0. பிண்டந் தொகைவகை குறியே செய்கை
கொண்டியல் புறனடைக் கூற்றன சூத்திரம்.

இ - ள். சூத்திரம் - மேற்கூறிய சூத்திரங்கள்,— பிண்டம் - பிண்ட சூத்திரமும்,— தொகை - தொகைச் சூத்திரமும்,— வகை - வகைச்சூத்திரமும்,— குறி - குறிச்சூத்திரமும்,— செய்கை - செய்கைச்சூத்திரமும்,— கொண்டு இயல் புறனடை - இவைகளை நிலைவறக்கொண்டு இவைகளின் புறத்து அடையாய்வரும் புறனடைச் சூத்திரமுமாகிய,— கூற்றன - ஆறுபிரிவை யுடையனவாம். எ - று.

பிண்டசூத்திரமாவன பலதிறப்பொருள்களையும் உள்ளடக்கிக்கொண்டு பொதுப்படவருவன: அவை 'நன்கியம்புவனெழுத்தே' என்றாற்போல்வன.

தொகைச்சூத்திரமாவன அப்பலதிறப்பொருள்களையும் வேறு வேறாகத் தொகுத்துச் சொல்வன: அவை 'பன்னிருபாற்றதுவே' என்றாற்போல்வன.

வகைச்சூத்திரமாவன அத்தொகுத்துச் சொல்லப்பட்டவைகளை வேறு வேறாக வகுத்துச் சொல்வன: அவை எண்ணிலக்கணமுதலாக வகுத்தோதிய சூத்திரங்கள்போல்வன.

குறிச்சூத்திரமாவன இவை உயிர் இவை ஒற்று இவை பெயர் இவைவினை என்றற்றொடக்கத்து அறிதன்மாத்திரையாய் வருவன: அவை 'அம்முதலீராறுவி' என்றாற்போல்வன.

செய்கைச்சூத்திரமாவன புணர்ச்சிவிதியறிந்து புணர்த்தலைச் செய்தலும் முடிபுவிதியறிந்து முடித்தலைச் செய்தலுமுதலியன: அவை 'ணனவல்லினம் வரட்டறவும்' எ - ம். 'முன்னிலைகூடிய படர்க்கையுமுன்னிலை' எ - ம். வருவனபோல்வன.

புறன் + அடை = புறனடை, புறத்து அடையாய் வந்தது. புறம் + நடை = புறநடை, (முற்கூறிய விதிக்கு) வேறுவிதமாகிய நடக்கை என்னினும் பொருந்தும்.

ஆறுவகைப்படச் சொல்லினும், குறிச்சூத்திரஞ் செய்கைச்சூத்திரம் என்னும் இரண்டினுள்ளே மற்றைநான்கும் அடங்கும். (உ0)

[உரையினது பொதுவிலக்கணம்.]

உக. பாடங் கருத்தே சொல்வகை சொற்பொருள்
தொகுத்துரை யுதாரணம் வினாவிடை விசேடம்

Digitized By Roja Muthiah Research Library

விரிவதி காரந் துணிவு பயனோ
டாசிரிய வசனமென் றீரே ழுரையே.

இ - ள். பாடம் - மூலபாடமும்,—கருத்து - கருத்துரையும்,—சொல்வகை - பதச்சேதமும்,—சொற் பொருள் - பதப்பொருளும்,—தொகுத்துரை - பொழிப்புரையும்,—உதாரணம் - உதாரணமும்,—வினா - வினாவும்,—விடை - விடையும்,—விசேடம் - வேண்டியவைகளைத்தந்துரைத்தலும்,—விரிவு - வேற்றுமை யுருபு முதலியவை தொக்குநிற்பின் அவைகளை விரித்துரைத்தலும்,—அதிகாரம் - எடுத்துக்கொண்ட அதிகாரம் இதுவாதலின் இச்சூத்திரத்து அதிகரித்தபொருள் இதுவென அவ்வதிகாரத்தோடு பொருந்த உரைத்தலும்,—துணிவு - சந்தேகிக்கநின்ற இடத்து இதற்கு இதுவே பொருளெனத் துணிந்துரைத்தலும்,—பயன் - இப்படிச் சொல்லியதினால் வந்த பயன் இதுவென உரைத்தலும்,—ஆசிரியவசனம் என்று - ஆசிரிய வசனங்காட்டுதலுமாக,—உரை - நூலுக்கு உரைகூறுதல் ஈரேழு பதினான்கு வகையாம்.

என்றென்னுமெண்ணிடைச்சொல்லைப் பன்னிரண்டாஞ் சூத்திரத்திற் கொண்டதுபோலக் கொள்க.

பாடம்=பாடாந்தரம் "மன்றுபறித்துண்ணேல்" என்பதனை "மண்பறித்துண்ணேல்" என்று பாடமோதுவாருமுளர் என்றாற் போல்வன. கருத்துரை - என்பதின்கருத்து எனச் சுருக்கியெழுதுமுறை. சொல்வகை—"தருமஞ்சந்திகடாமரையோன்பதம், கருமஞ்சந்தி கடிப்பவர்வாழ்பதம்". என்பதை—தரும் அஞ்சம் திகழ் தாமரையோன் பதம் கருமை மஞ்சு அந்தி கடிப்பவர் வாழ் பதம் என்று சொற்களை வகுத்துரைத்தல். தொகுத்துரை= நட வா மடி சீ விடு கூ வே வை, நொப் போ வெள வுரி ஞுண் பொருந் திருந் தின், தேய் பார் செல் வவ் வாழ் கேளஃ கென், றெய்திய விருபான் மூன்று மீற்றவும் என்பதற்கு நடமுதல் அஃகீறாகச் சொல்லப்பட்ட இருபத்துமூன்றுக மீற்றினையுடைய வாய்பாடுகளெல்லாம் என்று சுருக்கிக் கூறுவது. மதிமருட்டும் சிறுநுதற் பேரமாக்கட் செய்யவாயை யநுண்ணிடையாய்=(என்பதற்கு) அறிவினைமயக்குஞ் சிறுநுதன் முதலிய வுறுப்புக்களையுடையாய் என்று சுருக்கியுரைத்தலாம். வினா - என்னுதலிற்றோவெனின் எனவும், பொதுப்பாயிரம் நால்வகைப்படுமென்பாருமுளரோவெனின் எனவும் வருவன. விடை, இது கருதிற்று: இது கருதியென்க. எனவருவன, விரிவு வேற்றுமையுருபை விரித்துரைத்தலும், உவமையுருபை விரித்துரைத்தலும், "வினைச்சொல்லிலக்கணம் விளம்பிலளவில்லை, ஆயினுமைந்தனுளறிந்தடக்குகவே" என்பதில் ஐந்தனுள் என்பதற்கு முதனிலை, தொழிற்பெயர், முற்று, பெயரெச்சம், வினையெச்சம் என்னும் ஐவகை வினையுள் என்று எண்ணுற்றொருக்கப்பட்ட தொகைப்பெயரை விரித்துரைத்தலும் பிறவுமாம். அதிகாரம். "பீலிபெய்சாகாடுமச்சிறுமப்பண்டம், சாலமிகுத்துப்பெயின்" என்பது (மயிற்பீலியை ஏற்றியசகடமும் அச்சு

றியும் அப்பிலிகள் கனமற்றன என்று மிக அதிக மேற்றப்படின்) ஒட்டலங்காரவகையால் வேறுபொரு ளுரைத்தற்கு மிடங்கொடுப்பதுபோற் பொதுவகையாய் நிற்பினும் வலியற்றவரென்று கருதி ஒருவன் மிகப்பலருடன் பகைக்கின் அவனிறுதியெய்துவன் என்று அவ்வதிகாரத்தோடியையக் கூறுதல்போல்வனவாம். 'அல்வழி ஆமா மியாமுற்று முன்மிகா' என்பதில் மிகாவென்று குறிக்கப்பட்டவை வல்லினங்கள் என்னுமுரையும் அதிகாரத்தொடுபொருந்த வுரைக்கப்பட்டதாம். (௨௧)

[காண்டிகையுரை இன்னதென்பது.]

௨௨. கருத்துப் பதப்பொருள் காட்டு மூன்றினும்
அவற்றொடு வினாவிடை யாக்க லானுஞ்
சூத்திரத் துட்பொரு டோற்றுவ காண்டிகை.

இ - ள். கருத்துப் பதப்பொருள் காட்டு மூன்றினும் - கருத்துரையும் பதவுரையும் உதாரணமுமாகிய மூன்றனையுஞ் சொல்லுதலானும்;—அவற்றொடு வினா விடை ஆக்கலானும் - அம்மூன்றனோடு வினா விடை என்னும் இரண்டனையுங் கூட்டிச் சொல்லுதலானும்,—சூத்திரத்துள் பொருள் தோற்றுவ காண்டிகை - சூத்திரத்துளிருக்கின்ற பொருளை விளக்குவன காண்டிகையுரைகளாம். எ - று.

கருத்துபதப்பொருள் காட்டு மூன்றினுஞ் சூத்திரத்துட் பொருடோற்றுவ காண்டிகையென்றும்; அவற்றொடு வினாவிடை யாக்கலானுஞ் சூத்திரத்துட் பொருடோற்றுவ காண்டிகையென்றும் இருமுடிபாகக் கொள்ளுக. எனவே காண்டிகையுரை திரயாங்கி பஞ்சாங்கியென இருவகைப்படுமென்றறிக. திரய+அங்கி=மூன்றுறுப்புடையது. பஞ்ச+அங்கி=ஐந்துறுப்புடையது. (௨௨)

[விருத்தியுரை இன்னதென்பது.]

௨௩. சூத்திரத் துட்பொரு ளன்றியு மாண்டைக்
கின்றி யமையா யாவையும் விளங்கத்
தன்னுரை யானும் பிறநூ லானும்
ஐய மகலவைங் காண்டிகை யுறுப்பொடு
மெய்யினை யெஞ்சா திசைப்பது விருத்தி.

இ - ள். சூத்திரத்துள் பொருள் அன்றியும் - சூத்திரத்துள்ள பொருளல்லாமலும்,—ஆண்டைக்கு இன்றி அமையா யாவையும் விளங்க - அவ்விடங்களுக்கு இல்லாமல் நிறையாத பொருள்களெல்லாம் விளங்கும்படி,—தன் உரையானும் பிற நூலானும் - தானுரைக்கு முறையாலும் ஆசிரியவசனங்களாலும்,—ஐங் காண்டிகை உறுப்பொடு - மேற்கூறிய காண்டிகையுறுப்பைந்தனொடும்;—மெய்யினை - உண்மைப்பொருளை,—ஐயம் அகல எஞ்

சாது இசைப்பது விருத்தி - சந்தேகந்தீரச் சுருங்காது விரித்துரைப்பது விருத்தியுரையாம். எ - று. (உ௩)

[நூலென்னும் பெயர்க்காரணம்.]

உ௪. பஞ்சிதன் சொல்லாப் பனுவ லிழையாகச்
செஞ்சொற் புலவனே சேயிழையா—வெஞ்சாத
கையேவா யாக்க கதிரே மதியாக
மையிலா நூன்முடியு மாறு.

இ - ள். தன் சொல் பஞ்சியா - தன்சொற்கள் பஞ்சாகவும்,—பனுவல் இழை ஆக - செய்யுள் இழையாகவும்,—செஞ்சொற் புலவன் சேயிழையா - செவ்விய சொற்களை அறிந்த புலவன் நூற்கின்ற பெண்ணாகவும்,—எஞ்சாத வாய் கையாக - குறையாத வாய் கையாகவும்,—மதி கதிர் ஆக - அறிவு கதிராகவும்,—மை இலா நூல் முடியும் ஆறு - குற்றமில்லாத கல்வி நூலானது முடியும் வழி இது. எ - று.

ஆதலால் நூலென்றது உவமையாகுபெயரெனக் காண்க. (உ௪)

உ௫. உரத்தின் வளம்பெருக்கி யுள்ளிய தீமைப்
புரத்தின் வளமுருக்கிப் பொல்லா—மரத்தின்
கனக்கோட்டந் தீர்க்குநூ லஃதேபோன் மாந்தர்
மனக்கோட்டந் தீர்க்குநூன் மாண்பு.

இ - ள். புரத்தின் உரத்தின் வளம் பெருக்கி - உடம்பினுளிருக்கின்ற ஞானவளத்தை வளர்வித்து,—உள்ளிய தீமை வளம் முருக்கி - நினைக்கப்பட்ட தீமையாகிய அஞ்ஞான வளத்தைக் கெடுத்து,—பொல்லா மரத்தின் கனக்கோட்டந் தீர்க்கும் நூல் அஃதேபோல் - கெட்ட மரத்தினது மிகுதியாகிய கோணலைப் போக்குகின்ற எற்றுநூலின் அம்மாட்சிமைபோலவே,—மாந்தர் மனக்கோட்டந் தீர்க்கும் - மனிதருடைய மனத்தினது கோணலைப்போக்கும்,—நூல் மாண்பு - கல்விநூலினது மாட்சிமையானது.

இதனாலும் நூலென்றது உவமையாகுபெயராம். நூன்மாண்பு பெருக்கி முருக்கி மனக்கோட்டந் தீர்க்கும் எனக் கூட்டுக.

பின்னேருரை.

(உ௫) உரத்தின் வளம் பெருக்கி=நல்ல வைரத்தின் வளத்தை அதிகப்படுத்தி,—உள்ளிய=நினைக்கப்பட்ட,—புரத்தின் தீமை வளம் முருக்கி=உருவத்தின் (வெளிமுகிய) தீயவளத்தை யழித்து,—பொல்லாமரத்தின்=ஒழுங்கற்ற மரத்தினது,—கன கோட்டம் தீர்க்கும் நூல்=கனத்தொடு கோணலையும் தச்சனது எற்று நூல் நீக்கும்,—அஃதேபோல்=அதுபோல,—

புரத்தின் உரத்தின் (நல்) வளம் பெருக்கி=சரீரத்துள்ளிருக்கின்ற நல்லறிவின் வளத்தை விருத்தியாக்கி,—உள்ளிய தீமைம வளம் முருக்கி=நினைக்கப்பட்டிருந்த அஞ்ஞான விருத்தியைக் கெடுத்து,—மாந்தர் மனக்கோட்டம்=மனிதரது மனக்கோணலே,—நூல் மாண்பு தீர்க்கும்=கல்வி நூலின் மாட்சிமையானது நீக்கும். எ - று. (இவ்வுரை நன்றாயில் அறிஞர்கொள்க)

தச்சர் மரத்தின் வளைவுங் கனமுந் தீர்க்கின்ற எற்று நூல்போல் மாந்தரது அஞ்ஞானவிருத்தியைக் கெடுத்து நல்லறிவை விருத்தியாக்கும் என்றவாறும். எற்று நூல்போலிருத்தலாலும் சாத்திரத்தை நூலென்றது உவமையாகுபெயர். தீமை வளமுருக்கி யென்று பின் அடைகொடுத்தலினால் முன்வளம் என்றது நல்வளத்தை யென்பது பெறப்பட்டது. நூலெற்றிக் கோணலைத் தீர்க்கவெட்டி சிறிது வளைவானமரத்தை நேராக்குவது போல் சாத்திரமறிவதால் அஞ்ஞானத்தை நீக்கி ஞானத்தை விருத்திசெய்யலாமென்று கல்வியினுபயோக முணர்த்தப்பட்டமையு மிவ்வெண்பாவிற் காண்க. எற்றுதல் - தெறித்தல். (௨௫)

**பரீக்ஷை வினாக்கள்:**—1. ௪. நூலாவதியாது? 2. ௫. நூலெத்தனை வகைப்படும்? 3. ௬. முதனூலாவதியாது? 4. ௭. வழிநூலின் இலக்கணம் என்னை? 5. ௮. சார்புநூலெத்தன்மையுடையது? 6. ௯. வழிநூலினும் சார்புநூலினும் பழஞ்சூத்திரஞ் சேர்க்கப்படுவது எதற்காக? 7. ௧௦. நூலாலடையும் பயன்கள் எவை? 8. ௧௧. மதங்கள் எத்தனை? 9. ௧௨. நூலிலே இருக்கலாகாத குற்றங்கள் எவை? 10. ௧௩. நூலிலமையவேண்டிய அழகுகள் எவை? 11. ௧௪. தந்திரவுத்திகள் எவை? 12. ௧௫. உத்தியின் இலக்கணம் யாது? 13. ௧௬. இயலாவதியாது? 14. ௧௭. படலமாவதியாது? 15. ௧௮. சூத்திரமாவது எத்தன்மையுடையது? 16. ௧௯. சூத்திரங்கள் பொருள்வகையால் ஒன்றோடொன்று தொடர்ந்து நிற்குநிலைக்கு உவமைகள் எவை? 17. ௨௦. சூத்திரங்கள் தனித்தனியே பொருளையுணர்த்தும் வகையால் எத்தனை வகைப்படும்? தொகைச்சூத்திரமாவன யாவை? குறிச்சூத்திரமாவன யாவை? புறனடைச்சூத்திரமாவன யாவை? 18. ௨௧. உரை எத்தனைவகையாற் கூறப்படும்? 19. ௨௨. காண்டிகை உரையாவதியாது? 20. ௨௩. விருத்தியுரையாவதியாது? 21. ௨௪. நூலென்னும்பெயர் எந்த எந்தக் காரணங்களால் வந்தது?

## ௨. ஆசிரியனது வரலாறு.

[நல்லாசிரிய ரிலக்கணம்]

௨௬. குலனரு டெய்வங் கொள்கை மேன்மை
கலைபயி றெளிவு கட்டுரை வன்மை

நிலமலை நிறைகோன் மலர்நிகர் மாட்சியும்
உலகிய லறிவோ டுயர்குண மிணையவும்
அமைபவ னூலுரை யாசிரி யன்னே.

இ-ள். குலன் அருள் தெய்வங்கொள்கை மேன்மை - குலமேன்மையும் கருணைமேன்மையும் கடவுள் வழிபாட்டு மேன்மையும்,—கலைபயில் தெளிவு - பலநூல்களிலே பழகிய தேற்றமும்,—கட்டுரை வன்மை - நூற்பொருளை மாணாக்கர் எளிதின் உணரும்படி விளங்கத் தொடுத்துச் சொல்லும் வன்மையும்,—நிலம் மலை நிறைகோல் மலர்நிகர் மாட்சியும் - நிலத்தையும் மலையையுந் துலாக்கோலையும் பூவையுமொத்த குணங்களும்,—உலகு இயல் அறிவு - உலகநடையை அறியு மறிவும்,—உயர் குணம் - உயர்வாகிய குணமும்,—இணையவும் - இவைபோல்வன பிறவும்,—அமைபவன் - பொருந்தப்பெற்றவன்,—நூல் உரை ஆசிரியன் - நூல் கற்பிக்கும் ஆசிரியனாவான். எ - று.

உயர்வான குலமும், உயர்வான கருணையும், உயர்வான தெய்வத்தை வழிபடுதலுமென்பது கருத்து. இதனுள் மேன்மை என்பது குலன் அருள் தெய்வங்கொள்கை என்பவற்றிற்கு விசேடணமாக்கப்பட்டது. பின்னர்க் கலைபயிறெளிவு கட்டுரைவன்மை .....மலர் நிகர் மாட்சியென வரைந்தோதியதனால், முன்னர்க் குலனும் அருளும் தெய்வங்கொள்கையு மேன்மையென வரைந்தோதல் வேண்டிற்று. இவ்வாறன்றிக் குலனு மருளுந் தெய்வங்கொள்கையுமேன்மையும் அமைபவனெனின் உயர்குணமென்று பின்னும் வருதலால் அம்மேன்மைதான் வேறொதுபற்றியது என்று மயங்கவைத்தலென்னுங் குற்றமாம். அன்றியும் உயர்குணம் இணையவும் அமைபவன் என்றதில் மேன்மை அடங்குதலால், கூறியது கூறலென்னுங் குற்றமுமாம். இனி, சூத்திரம் "வலம்புரிமுத்திற் குலம்புரி பிறப்பும், வானயாறன்ன தூய்மையும் வான்யாறு .....பன்னருஞ்சிறப்பி னல்லாசிரியர்" என இக்குற்றந் தீர்தற்பொருட்டு (ஆத்திரையன் பேராசிரியன்) வரைந்தோதியது காண்க. (உசு)

உஎ. தெரிவரும் பெருமையுந் திண்மையும் பொறையும்
பருவ முயற்சி யளவிற் பயத்தலும்
மருவிய நன்னில மாண்பா கும்மே.

இ-ள், தெரிவு அரும் பெருமையும் - (ஓரிடத்து நின்று முழுவதும் அறியப்படாத உருவப்பரப்பின்) பெருமையும்,—திண்மையும் - பெரிய பாரஞ்செய்து தன்மேலே நெருங்கினவைகளாற் கலங்காத வலிமையும்,—பொறையும் - தன்னையடுத்த மனிதர் தோண்டுதன் முதலிய குற்றங்களைச் செய்யினும் பொறுக்கும் பொறுமையும்,—பருவ முயற்சி அளவில் பயத்தலும் - பருவத்திலே உழவர் செய்யு முயற்சியளவிற்குத்தக அவர்க்குப்

பயனைத்தருதலும்,—நல் நிலம் மருவிய மாண்பு ஆகும் - நல்ல நிலத்தினிடத்துப் பொருந்திய குணங்களாகும். எ - று.

பிறரால் வகுத்தறியப்படாத கல்வியறிவின் பெருமையும், பெரியவாதஞ்செய்து தன்மேலே நெருங்கினவராற் கலங்காத வலிமையும், தன்னையடுத்தமாணாக்கர் இகழ்தன் முதலிய குற்றங்களைச் செய்யினும் பொறுக்கும் பொறுமையும், பருவத்திலே மாணாக்கர் செய்யு முயற்சியளவிற்குத் தக அவர்க்குப் பயனைத்தருதலும் ஆசிரியனிடத்துப் பொருந்திய குணங்களாதலால், நிலம் அவனுக்கு உவமானமாயிற்று.

பொறை என்பதற்குக் கனமென்றும் பொருள் கூறுவர். (உஎ)

உஅ. அளக்க லாகா வளவும் பொருளுந்
துளக்க லாகா நிலையுந் தோற்றமும்
வறப்பினும் வளந்தரும் வண்மையு மலைக்கே.

இ - ள். அளக்கல் ஆகா அளவும் - அளவுசெய்யப்படாத தன்வடிவத்தின் அளவும்,—(அளக்கலாகாப்) பொருளும் - அளவு செய்யப்படாத பலவகைப்பொருளும்,—துளக்கல் ஆகா நிலையும் - எப்படிப்பட்ட வலிமையுடையவராலும் அசைக்கப்படாத உருவத்தினிலையும்,—தோற்றமும் - நெடுந்தூரத்திலுள்ளாராலுங் காணப்படும் உயர்ச்சியும்,—வறப்பினும் வளம் தரும் வண்மையும் - மழைபெய்யாமல் வறந்தகாலத்திலுந் தன்னைச் சேர்ந்த உயிர்களுக்கு நீர் வளத்தைக் கொடுக்குங் கொடையும்,—மலைக்கு - மலைக்குள்ள குணங்களாகும், எ - று.

அளவு செய்யப்படாத தன் கல்வியினளவும், அளவு செய்யப்படாத பலவகை நூற்பொருளும், எப்படிப்பட்ட புலமையையுடையோராலும் அசைக்கப்படாத கல்வியறிவினிலையும், நெடுந்தூரத்திலுள்ளாராலும் அறியப்படும் உயர்ச்சியும், பொருள் வருவழி வறந்தகாலத்திலுந் தன்னைச் சேர்ந்த மாணாக்கருக்குக் கல்விப்பொருளைக் கொடுக்குங் கொடையும் ஆசிரியனுக்குள்ள குணங்களாதலால், மலை அவனுக்கு உவமானமாயிற்று.

அளக்கல் ஆகா அளவும் என்பதற்கு மதிக்கக்கூடாத நிறையளவைக் கொண்டிருத்தலும் என்றும் பொருளுரைப்பர்.

மலைச்சாரலிலுள்ள விருக்ஷங்களும் செடிகளும் வாடிக் கெட்டுப்போகாமல் மழையில்லாதகாலத்தும் கனிமுதலான பயன்களைக் கொடுக்கின்றமை நோக்கி வறப்பினும் வளந்தரும் வண்மையென்றா ரெனினுமாம். ()

உகூ. ஐயந் தீரப் பொருளை யுணர்த்தலும்
மெய்ந்நடு நிலையு மிகுநிறை கோற்கே.

Digitized By Roja Muthiah Research Library

இ - ள். ஐயம் தீரப் பொருளை உணர்த்தலும் - சந்தேகந்தீர நிறுக்கப்பட்ட பண்டத்தி னளவைக் காட்டலும்,—மெய் நடு நிலையும் - இருதட்டிலுஞ் சமபாரம் இடப்பெற்றபோது ஒருதட்டிலும் பாரமிடப்படாதது போல் உண்மைபெறத் தன் நாச்சாயாது தோரணத்திற்கு நடுநிற்றலும், (பாரங்கனத்ததட்டின் பக்கத்திற்கு நாச்சாய்தலும்);—நிறை கோற்கு மிகும் - தராசுகோலினிடத்துக் குணங்களாகமிகும். எ - று.

சந்தேகந்தீர வினவப்பட்ட சொற்பொருளினியல்பைக் காட்டலும், புலவரிருவர் மாறுபட்டாராயின், உண்மை பெறத்தான் அவ்விருவருக்கும் நடுவாகநின்று இருவருடைய தாற்பரியங்களையுந் தேர்ந்து சிறந்த பொருட்பக்கத்தில் மனஞ்சார்ந்தும், இருபொருளும் தக்கனவாயின் இருவருக்கும் ஒத்ததன்மையுடையவனாகியு நிற்றல். இவை ஆசிரியனது குணங்களாதலின் நிறைகோல் அவனுக்கு உவமையாயிற்று. "துலைநாவன்னசம நிலையுளப்பட" என்றார் பிறரும். (௨௯)

௩௦. மங்கல மாகி யின்றி யமையா
தியாவரு மகிழ்ந்து மேற்கொள மெல்கிப்
பொழுதின் முகமலர் வுடையது பூவே.

இ - ள். மங்கலம் ஆகி - சுபகருமத்திற்கு உரியதாகி,—இன்றி அமையாது - யாதொருசெயலும் அலங்கரிக்குந் தானில்லாது முடியாதாக,—யாவரும் மகிழ்ந்து மேற்கொள - கண்டோர் யாவருங் களித்து மேலாகத் தன்னைச் சூடிக்கொள்ள,—மெல்கி - மெல்லிய குணமுடையதாகி,—பொழுதின் முகம் மலர்வு உடையது - மலர்தற்குரிய காலத்திலே முகம் விரிதலையுடையது,—பூ - பூவாகும்.

சுபகருமத்துக்கு உரியனாகி யாதொரு செயலுஞ் சிறப்பிக்குந் தானில்லாது முடியாதாகக்கண்டோர் யாவருங் களித்து மேலாகத்தன்னை வைத்துக்கொள்ள மெல்லிய குணமுடையவனாகிப் பாடஞ் சொல்லுதற்குரிய காலத்திலே முகமலர்தலையுடையவன் ஆசிரியனாதலால், பூ அவனுக்கு உவமானமாயிற்று.

பூ=பூவின்மாட்சிமை. அல்லது பூவென்பதை எல்லாவற்றிற்கும் முன் வைத்துப் பொருளுரைக்க. (௩௦)

[ஆசிரியராகாதவரிலக்கணம்.]

௩௧. மொழிகுண மின்மையு மிழிகுண வியல்பும்
அழுக்கா றவாவஞ் சச்ச மாடலுங்
கழற்குட மடற்பனை பருத்திக் குண்டிகை
முடத்தெங் கொப்பென முரண்கொள் சிந்தையும்
உடையோ ரிலரா சிரியரா குதலே.

Digitized By Roja Muthiah Research Library

இ - ள். மொழி குணம் இன்மையும் - பாடஞ்சொல்லுங் குணமில்லாமையையும்,—இழிகுண இயல்பும் - இழிகுணமாகிய இயற்கையையும்,—அழுக்காறு - பிறருக்குவருங் கல்வியைக் குறித்துக்கொள்ளும் பொறாமையையும்,—அவா - பொருளின்மேல் அதிகமாக வைக்கும் ஆசையையும்,—வஞ்சம் - மெய்ப்பொருளை மறைத்துப் பொய்ப்பொருளைக்காட்டி வஞ்சித்தலையும்,—அச்சம் ஆடலும் - கேட்போர்க்கு அச்சம் உண்டாகப் பேசுதலையும்,—கழற்குடம் மடற்பனை பருத்திக் குண்டிகை முடத்தெங்கு ஒப்பு என - கழற்குடமும் மடற்பனையும் பருத்திக்குண்டிகையும் முடத்தெங்கும் ஆகிய நான்கனையும் ஒப்பென்று சொல்ல,—முரண் கொள் சிந்தையும் உடையோர் - மாறுபாடுகொண்ட கருத்தையுந் தமமிடத்திலுடையவர்,—ஆசிரியர் ஆகுதல் இலர் - கற்பிக்கும் ஆசிரியராகுதல் இலராவர். எ - று. (௩௧)

௩௨. பெய்த முறையன் றிப் பிறழ வுடன்றருஞ்
செய்தி கழற்பெய் குடத்தின் சீரே.

இ - ள். பெய்த முறை அன்றி - தன்னுள்ளே போட்ட முறையினலன்றி,—பிறழ உடன் தரும செய்தி - முன்போடப்பட்டவையும் பின்போடப்பட்டவையும் அம்முறை பிறழ்ந்துபோக விரைவிலே தன்னுள்ளே கொண்ட கழற்காய்களைக்கொடுக்குஞ் செய்கையானது,—கழற்பெய் குடத்தின் சீர் - கழற்காய் போட்ட குடத்தினது குணமாம். எ - று.

தமக்குக்கற்பித்த முறையினலன்றி முனகற்பிக்கப்பட்டவையும் பின் சற்பிக்கப்பட்டவையும் அம்முறை பிறழ்ந்துபோக விரைவிலே தம்முள்ளேகொண்ட நூற்பொருளகளைத் தருஞ் செய்கையானது ஆசிரியராகாதவரது குற்றமாதலால், கழற்குடம் அவருக்கு உவமானமாயிற்று.

தன்னுள்ளே முன்போடப்பட்ட கழற்காய்களைப் பின்னும், பின்போடப்பட்டவைகளை முன்னுமாக முறை பிறழ விரைவிலே தருகின்ற செய்கையானது கழற்குடத்தின்றன்மையாம். கழற்காய்கள் ஒன்றோடொன்று ஒட்டிப்பிடிக்குந் தன்மையுடையவைகளாதலின் அவையிட்ட குடம் முறை பிறழவும் அளவுக்குமேற்பட விரைவாகவும் போதிப்போருக்கு உவமையானதென்றறிக

௩௩. தானே தரக்கொளி னன்றித் தன்பால்
மேவிக் கொளக்கொடா விடத்தது மடற்பனை.

இ - ள். தானே தரக் கொளின் அன்றி - தானே தன்னிடத்துள்ள பழங்களைத்தரக் கொண்டாற்கொள்ளலாமேயன்றி,—தன பால் மேவிக் கொளக்கொடா இடத்தது - ஒருவர் தன்னிடத்து நெருங்கிவந்து பறித்துக்கொள்ள அப்பழங்களைக்கொடாத இடத்தையுடையது,—மடற்பனை - தன்வடிவமுழுதும் மடல்விரிந்தபனை.

தாமே தம்மிடத்துள்ள நூற்பொருள்களைச்சொல்ல அறிந்துகொண்டாற் கொள்ளலாமேயன்றி, ஒருவர்தம்மிடத்து நெருங்கிவந்து வினவி அறிந்து

Digitized By Roja Muthiah Research Library

சொள்ள அந்நூற்பொருள்களைச் சொல்லாத விடத்தையுடையவர் ஆசிரியரா காதவராதலால், மடற்பனை அவருக்கு உவமானமாயிற்று.

மடற்பனையாவது—வாட்பற்கள் போலுங் கருக்குகளுண்டைய மட்டைகள் நாற்புறமும் அடியிலிருந்து மேலே குருத்துவரையும் அடுக்காகப் பரம்புண்டு, அம்மட்டைகளினடியாகிய மடல்கள்பிரிந்துதிரப்பெறுது பின்னிப்பற்றிய பனையாம். இம்மடற்பனையில் ஏறினுற் கைகான் முதலான சரீர அங்கங்கள் கருக்கினுல் வெட்டுண்டு வேதனைப்படுவராதலின், அதில் எவரும் ஏறவிரும்பார். ஆசிரியன் பாடஞ்சொல்ல வீற்றிருக்கு மாசனத்தைவிட்டுப் போய் நூற்பொருளைக் கேட்டற்கு மாணுக்கர் சார்தற்கொட்டாத, அந்தர்ப்புரம் முதலிய இடத்திருப்பது. (௩௩)

௩௪. அரிதிற் பெயக்கொண் டப்பொரு டான்பிறர்க்
கெளிதீ வில்லது பருத்திக் குண்டிகை.

இ - ள். அரிதின் பெயக் கொண்டு - பஞ்சைக்கொண்டபோதும் வருத்தத்தோடு சிறிது சிறிதாக அடைப்பத் தன்னுள்ளே கொண்டு,—அப்பொருள் தான் பிறர்க்கு எளிது ஈவு இல்லது - கொடுக்கும்போதும் அப்பஞ்சைத் தான் பிறர்க்கு எளிதிற்கொடாத குற்றமுடையது,—பருத்திக் குண்டிகை - பஞ்சுபோட்ட குடுக்கை. எ - று.

கல்வியைக் கற்றபோதும் வருத்தத்தோடு சிறிது சிறிதாகக் கற்பிக்கத்தம்முள்ளேகொண்டு, பாடஞ் சொல்லும்போதும் அக்கல்வியைத் தாம் பிறர்க்கு எளிதிற்கொடாத குற்றமுடையவர் ஆசிரியராகாதவராதலால், பருத்திக்குண்டிகை அவர்க்கு உவமானமாயிற்று. (௩௪)

௩௫. பல்வகை யுதவி வழிபடு பண்பின்
அல்லோர்க் களிக்கு மதுமுடத் தெங்கே.

இ - ள். பல்வகை உதவி வழிபடு பண்பின் அல்லோர்க்கு - நீர்விடுகை முதலாகிய பல்வகை யுபகாரங்களையுஞ் செய்து தனக்கு வழிபாடு செய்யுங் குணத்தினின்றும் அல்லாத பிறருக்கு,—அளிக்குமது - தன்னிடத்துள்ள காய்களைத் தருங் குற்றமுடையது,—முடத்தெங்கு - வேலிக்கு அப்புறம் வளைந்த தென்னமரம். எ - று.

பொருள் கொடுத்தன் முதலாகிய பல்வகை யுபகாரங்களையுஞ் செய்து தமக்கு வழிபாடுசெய்யுங் குணத்தினின்றும் அல்லாத மாணுக்கருக்குத் தம்மிடத்துள்ள கல்விப்பொருளைத் தருங் குற்றமுடையவர் ஆசிரியராகாதவராதலால், முடத்தெங்கு அவருக்கு உவமானமாயிற்று. (௩௫)

**பரீக்ஷை** வினுக்கள்:—22. உ௬. கற்பிக்கும் ஆசிரியனுவான் யாவன்? 23 உ௭. நல்லாசிரியருக்குச் சொல்லிய உவமை நான்சனுள், நிலத்தின் குணங்

Digitized By Roja Muthiah Research Library

கள் எவை? 24. ௨௮. மலையின் குணங்கள் எவை? 25. ௨௯. தராசுகோலின் குணங்கள் எவை? 26. ௩௰. பூவின் குணங்கள் எவை? 27. ௩௧. கற்பிக்கும் ஆசிரியராகாதவர் யாவர்? 28. ௩௨. கற்பிக்கும் ஆசிரியராகாதவருக்குச் சொல்லிய உவமை நான்கனுள்ளே, கழற்குடத்தின் குற்றம் யாது? 29. ௩௩. மடற்பனையின் குற்றம் யாது? 30. ௩௪. பருத்திக்குண்டிகையின் குற்றம் யாது? 31. ௩௫. முடத்தெங்கின் குற்றம் யாது?

## ௩. பாடஞ் சொல்லினது வரலாறு.

௩௬. ஈத லியல்பே யியம்புங் காலைக்
காலமு மிடனும் வாலிதி னோக்கிச்
சிறந்துழி யிருந்துதன் றெய்வம் வாழ்த்தி
உரைக்கப் படும்பொரு ளுள்ளத் தமைத்து
விரையான் வெகுளான் விரும்பி முகமலர்ந்து
கொள்வோன் கொள்வகை யறிந்தவ னுளங்கொளக்
கோட்டமின் மனத்தினூல் கொடுத்த லென்ப.

இ - ள். ஈதல் இயல்பு இயம்புங்காலை - பாடஞ் சொல்லுதலினது வரலாற்றைச் சொல்லும்போது,—காலமும் இடனும் வாலிதின் நோக்கி - உரிய காலத்தையும் உரிய விடத்தையுந் தூயனவாகப் பார்த்து,—சிறந்துழி இருந்து - அவை சிறந்தவிடத்திருந்து,—தன் தெய்வம் வாழ்த்தி - தான் வழிபடு கடவுளைத் துதித்து,—உரைக்கப்படும் பொருள் உள்ளத்து அமைத்து - பாடஞ் சொல்லப்படும் பொருளைத் தன் கருத்தின்கண் நிறைத்து,—விரையான் வெகுளான் விரும்பி முகம் மலர்ந்து - விரையானாகியுங் கோபஞ் செய்யானாகியும் இச்சித்து முகமலர்ச்சியடைந்து,—கொள்வோன் கொள்வகை அறிந்து - மாணாக்கனது கேட்கும் அறிவின் வகையை அறிந்து,—அவன் உளம் கொள - அவனது மனம் ஏற்றுக்கொள்ள,—கோட்டம் இல் மனத்தின் நூல் கொடுத்தல் என்ப - மாறுபாடில்லாத மனத்துடனே நூலைக்கொடுத்தலாகும் என்று சொல்லுவர் புலவர் எ - று.

சிறந்துழி என்பது சிறந்தபோது எனவும், சிறந்த தானத்திலெனவும் பொருள் தந்து காலத்தையும் இடத்தையு முணர்த்தி நின்றது. கொள்வகை கிரகணசத்தி. (௩௬)

பரீக்ஷை வினா:—32. ௩௬. ஆசிரியன் கற்பிக்கு முறை எப்படி?



Digitized By Roja Muthiah Research Library

## ச. மாணாக்கனது வரலாறு.

[மாணாக்கரிலக்கணம்.]

கஎ. தன்மக னாசான் மகனே மன்மகன்
பொருணனி கொடுப்போன் வழிபடு வோனே
உரைகோ ளாளற் குரைப்பது நூலே.

இ - ள். தன் மகன் - தன் புதல்வனுக்கும்,—ஆசான் மகன் - தன்னாசிரியன் புதல்வனுக்கும்,—மன் மகன் - அரசன் புதல்வனுக்கும்,—பொருள் நனி கொடுப்போன் - பொருளை மிகுதியாகக் கொடுப்போனுக்கும்,—வழிபடுவோன் - வழிபாடு செய்வோனுக்கும்,—உரை கோளாளற்கு - தன்னாற் சொல்லப்பட்ட உரையை விரைவிலே கற்கும் அறிவுடையோனுக்கும்,—உரைப்பது நூல் - சொல்லப்படுவது நூலாகும். எ - று.

அரசனது மகன் கல்லாதவனாயிருப்பின் இராச்சிய நிலையடைந்தபோது இதாகிதமறிந்து உலகினைக் காக்கமாட்டாது வருத்துவனாதலின் அவனுக்குக் கற்பித்தல் அத்தியாவசியகமாம். போதிக்கு நூற்கருத்தெல்லாம் விரைவிலுணரு முரைகோளாளன் பெரும்புலவனாகி அநேக நூல்களையு முரைகளையு மியற்றவு மாணாக்கர்க்குப் போதிக்கவும் வல்லுநனா யுலகிற்கு மிகப்பயன்படுவானாதலின் உரைகோளாளற் குணர்த்தலு மவசியமேயாம். (கஎ)

கஅ. அன்ன மாவே மண்ணொடு கிளியே
இல்லிக் குடமா டெருமை நெய்யரி
அன்னர் தலையிடை கடைமா ணாக்கர்.

இ - ள். அன்னம் ஆ (அன்னர்) தலை (மாணாக்கர்) - அன்னப்பக்ஷியையும் பசுவையும்போல்வார் முதன் மாணாக்கராம்,—மண்ணொடு கிளியே (அன்னர்) இடை மாணாக்கர் - நிலத்தையுங் கிளியையும்போல்வார் இடைமாணாக்கராம்,—இல்லிக்குடம் ஆடு எருமை நெய்யரி அன்னர் கடைமாணாக்கர் - பொள்ளற்குடத்தையும் ஆட்டையும் எருமையையும் பன்னாடையையும்போல்வார் கடைமாணாக்கராம். எ - று.

அன்னம் பாலையு நீரையும் வேறு பிரித்துப் பாலை மாத்திரம் உண்பதுபோல முதன் மாணாக்கர் சாரத்தையும் அசாரத்தையும் வேறு பிரித்துச் சாரத்தைமாத்திரம் உட்கொள்ளுதலாலும், பசு மிகுந்த புல்லையுடைய இடத்தைக் கண்டு புல்லை வயிறுநிறைய மேய்ந்து பின்பு ஓரிடத்திற்போய்த் தங்கிச் சிறிது சிறிதாக மீட்டு வாயில் வருவித்துக்கொண்டு மென்று தின்று இப்படியே நாடோறும் மேய்தலும் மெல்லுதலுந் தனக்கு முக்கியமான தொழிலாய்க்கொண்டது போல, முதன் மாணாக்கர் மிகுகல்வியுணர்வுடைய ஆசிரிய

னைக்கண்டால் அக்கல்வியைத் தமதுளங்கொளக் கேட்டுக்கொண்டு பின்போ ரிடத்துப் போயிருந்து பகுதி பகுதியாக மீட்டுஞ் சிந்தித்துத் தெளிந்து இவ் வாறே நாடோறும் பாடங்கேட்டலு மீட்டுஞ் சிந்தித்துத் தெளிதலுமே முக் கிய முயற்சியாய்க்கொள்ளுதலால் அம்முதன்மாணுக்கருக்கு அன்னமும் ஆவு ம் உவமானமாதலறிக.

நிலம் உழவர் வருந்திப் பயிர்செய்யு முயற்சியளவிற் பயன்தருதல்போ ல இடைமாணுக்கர் ஆசிரியன் கற்பிக்கும் முயற்சியளவிற்குத் தக்க கல்விப் பயன் விளைதற்கு இடமாயிருத்தலாலும், கிளி தனக்குக் கற்பித்த சொல்லை யன்றி மேற்பட வேறொன்றையுஞ் சொல்லமாட்டாமைபோல இடைமாணு க்கர் தமக்கு ஆசிரியன் கற்பித்த நூற்பொருளளவையன்றிக் கூட்டியுணர்ந்து சொல்லமாட்டாமையாலும் அவருக்கு அவ்விரண்டும் உவமானமாதலறிக.

இல்லிக்குடம் நீர்வார்க்குந்தோறும் மிகுதியும் புறத்தொழுகி நிரம்பா மைபோல, கடைமாணுக்கர் ஆசிரியன் கற்பித்த நூற்பொருளை யுள்ளத்துக் கொள்ளாது மிகுதியு மறந்துவிடுதலாலும்; ஆடானது ஒருசெடியிலே தன் வயிறு நிரம்பமேயும்படி தழைகளிருப்பினும், அதைச் சிறிதுகடித்த மாத்தி ரமே விட்டுப் பலசெடிகளினுஞ் சென்று சென்று மேயப்புகுதல்போல, ஓ ராசிரியரிடத்து மிகுந்தகல்வியிருக்கவும் புலமைநிறையக் கற்றுக்கொள்ளாது ஒருநூலைச் சிறிதுகற்றமாத்திரத்தேகைவிட்டுப் பற்பலரிடத்துஞ்சென்று பல நூல்களையும் கற்கப்புகுதலாலும்; எருமையானது குளத்திலே சேற்றின்மேல் நின்ற நீரைக் கலக்கிப் பருகுதல்போலக் கடைமாணுக்கர் ஆசிரியனது நன்ம னதைக் கலங்கச்செய்து பின் அவர் வெறுத்துச்சொன்னதைக்கேட்டுப் போ தலாலும்; பன்னாடையானது நெய், தேன் முதலியனவற்றை வடித்தற்பொ ருட்டு மேல் விடும்போது சாரத்தை ஒழுகவிட்டு அசாரமாகிய கசட்டைத் தன்னிடந்தங்கப் பெற்றுக்கொள்ளுதல் போல, ஆசிரியன் தெரிந்தெடுத்துரை த்த நற்பொருளை மறந்துவிட்டுத் தீப்பொருளைப் பற்றிக்கொள்வதினாலும் இந் நான்கும் அக் கடைமாணுக்கருக்கு உவமானமாதலறிக.

இங்கே இல்லிக்குடமென்றது பக்கத்திற் பொள்ளலுடைய குடத்தை. நி றையவார்க்கப்பட்ட நீரில் ஒருபங்கைத் தன்னிடத்தேவைத்துக்கொண்டு மற் றதை ஒழுகவிட்ட நீர்க்குடம்போல ஆசிரியன் பூரணமாக நூற்பொருள்களைக் கற்பித்தபோதும் சிலபொருளை உள்ளத்திற் பற்றிக்கொண்டு அநேகபொருளை மறந்துவிடுதல் என்பது அவ்வுவமையாற் பெறப்படும் விளக்கம். இவ்வாற ன்றி அடியில் இல்லியை யுடையகுடமென்றுகொள்ளின் அதில் வார்த்த நீர் முழுவதுமொழுகி வெறுங்குடமாய்விடுவதுபோல ஆசிரியன் போதித்தநூற் பொருண் முழுவது மறந்து மாணுக்கன் கல்லாதவனோடொப்பானதலின் அ வன் கற்கு மாணுக்கனுகக் கொள்ளப்படானென்று தாற்பரியமாகும். ஆக வே மாணுக்கரென் றெடுத்துரைக்கப்பட்டவர்க்கு உவமையாகக்கூறியது குற் றமென்று விபரீதார்த்தமாகுமாதலின் அது பொருந்தாது. உத்தமர், மத்திமர்,

Digitized By Roja Muthiah Research Library

அதமரென மாணாக்கரில் மூன்றுவகை யுண்டென்றும், இம்மூவகையினரும் (கற்றதேர்ச்சி) அதிகமும், குறைவும், அற்பமுமாக உடையரன்றிப் பிற்சூத்திரத்திற்குறிக்கப்படுவோர்போல மாணாக்கராகாதவரென்று கருதலாகாது. ()

[மாணாக்கராகாதவரிலக்கணம்.]

௩௯, களிமடி மானி காமி கள்வன்
பிணிய னேழை பிணக்கன் சினத்தன்
துயில்வோன் மந்தன் றொன்னூற் கஞ்சித்
தடுமா றுளத்தன் றறுகணன் பாவி
படிறனின் னோர்க்குப் பகரார் நூலே.

இ-ள். களி - கள்ளுண்டு களிப்பவனும்,—மடி - சோம்பலுடையவனும்,—மானி - அகங்காரமுடையவனும்,—காமி - தூர்த்தனும்,—கள்வன் - சோரனும்,—பிணியன் - நெடுநோயாளியும்,—ஏழை - அறிவில்லாதவனும்,—பிணக்கன் - மாறுபாடுடையவனும்,—சினத்தன் - கடுங்கோபமுடையவனும்,—துயில்வோன் - மிகத்தூங்குவோனும்,—மந்தன் - புத்திமழுக்கமுடையவனும்,—தொன்னூற்கு அஞ்சித் தடுமாறு உள்ளத்தன் - பழையநூல்களைக் கண்டு இவ்வளவும் என்னாற் கற்கமுடியுமோவென்று அச்சுற்றுத் தடுமாறுமுள்ளத்தையுடையவனும்,—தறுகணன் - அஞ்சத்தக்கவைகளை அஞ்சாதவனும்,—பாவி - கொலைமுதலான பாவங்கள்செய்வோனும்,—படிறன் - பொய்சொல்பவனும்,—இன்னோர்க்கு - ஆகிய இவ்வகையான குற்றமுடையோர்க்கு,—நூல் பகரார் - நூலைப்போதிக்கமாட்டார் ஆசிரியர். எ-று.

தொன்னூற்கஞ்சி, தடுமாறுளத்தன் என்றுபாடமோதி பழையநூற்பரப்பைக்கண்டு கற்கப்பயந்தவனும், ஒன்றினும் நிலைகொள்ளாத மனத்தையுடையவனும் என்றிரண்டாக வுரைகொள்வாருமுளர்.

**பரீக்ஷை** வினாக்கள்:—33. ௩எ. மாணாக்க ராவார் யாவர்? 34. ௩அ. தலைமாணாக்கருக்கு உவமானங்கள் எவை? 35. இடைமாணாக்கர் எவைபோல்வார்? 36. கடைமாணாக்கர் எவைபோல்வார்? 37. ௩௯. ஆசிரியர் எத்தன்மையினர்க்கு நூலைப்போதிக்கமாட்டார்? 38. தொன்னூற்கஞ்சி என்ற அளவில் ஒருவரைச்சுட்டினால் அவ்வாக்கியத்தின் பொருள் யாது?

## ரு. பாடங்கேட்டலின் வரலாறு.

௪௰, கோடன் மரபே கூறுங் காலைப்
பொழுதொடு சென்று வழிபட முனியான்

Digitized By Roja Muthiah Research Library

குணத்தொடு பழகி யவன்குறிப் பிற்சார்ந்
திருவென விருந்து சொல்லெனச் சொல்லிப்
பருகுவ னன்னவார் வத்த னாகிச்
சித்திரப் பாவையி னத்தக வடங்கிச்
செவிவா யாக நெஞ்சுக ளனாகக்
கேட்டவை கேட்டவை விடாதுளத் தமைத்துப்
போவெனப் போத லென்மனார் புலவர்.

இ - ள். கோடல் மரபு கூறும் காலை - பாடங்கேட்டலினது வரலாற்றைச் சொல்லும்பொழுது,—பொழுதொடு சென்று - தகுங்காலத்திலேபோய்,—வழிபடல் முனியான் - வழிபாடுசெய்தலில் விருப்புடையவனாகி,—குணத்தொடு பழகி - ஆசிரியனது குணத்தொடு பாங்காகப்பயின்று,—அவன்குறிப்பிற் சார்ந்து - அவன் குறிப்பின்வழியே சேர்ந்து,—இரு என இருந்து - ஆசிரியன் இருவென்று சொன்னபின் இருந்து,—சொல் எனச் சொல்லி - படியென்றபின் படித்து,—பருகுவன் அன்ன ஆர்வத்தன் ஆகி - தாகமுற்றோனுண்ருப் பானீயத்திற்செல்லு மவாப்போலப் பாடங்கேட்டலில் அவாவுடையோனாய்,—சித்திரப்பாவையின் அத்தகவு அடங்கி - எழுதியபாவையைப்போல் அவ்வசைவறுகுணத்தினோடடங்கி,—செவி வாயாக - காது கல்வியாகியநீரைப்பருகும் வாயாகவும்,—நெஞ்சு களனாக - மனமானது கொள்ளுமிடமாகிய வயிறாகவும்,—கேட்டவை கேட்டவை விடாது உளத்து அமைத்து - ஆசிரியனிடத்துக் கேட்ட கேட்ட நூற்பொருள்களை மறந்துவிடாது மனத்தில் நிறைத்துக்கொண்டு,—போ எனப் போதல் - போவென்று சொன்னபின் போகுதலாகும்,—என்மனார் புலவர் - என்று சொல்லுவர் புலவர். எ - று.

கோடல். கொள் + தல் = பெற்றுக்கொள்ளுதல். முனியான் என்பதற்கு வெறுப்பற்றவனாய் என்பது சொற்பொருளாயினும் விருப்புடையோனாயென்று பலிதார்த்தமுரைக்கப்பட்டது. பசியைப் பொறுத்திருத்தலினுந் தாகத்தைப் பொறுத்திருத்தலரிதாதலின் பருகுவன் அன்ன ஆர்வத்தனாகியென்று வேட்கைமிகுதி தோன்றக் கூறினார்; மிக்க வவாவுடன் கற்றல்வேண்டுமென்பதுணர்த்துதற்கு என்க. பருகுதல் வினைக்கியையப் பானீயமென்றுரைக்கப்பட்டது. பானீயம் - பருகப்படும் நீர், மோர் முதலிய பதார்த்தம். கேட்டவை கேட்டவை என்னும் அடுக்கு பன்மைப்பொருளில் வந்தது. கேட்டவை கேட்டு அவை விடாதுளத்து அமைத்து என்றுபகுத்து முன்கேட்கப்பட்டவற்றை மீட்டுங் கேட்டு அப்பொருள்களை விடாதுளத்தின்கண் நிறைத்துக்கொண்டு என்றுரைசெய்தலு முண்டு. இவ்விஷயம் 'ஆசாற்சார்ந்து அவை அமைவரக்கேட்டல்' என்னும் பிற்சூத்திரக் கூற்றில் அடங்கியிருத்தலால் எவ்வாறுரைத்தல் நன்றென்பதை ஓர்க. (சo)

சச. நூல்பயி லியல்பே நுவலின்வழக் கறிதல்
பாடம் போற்றல் கேட்டவை நினைத்தல்

Digitized By Roja Muthiah Research Library

ஆசாற் சார்ந்தவை யமைவரக் கேட்டல்
அம்மாண் புடையோர் தம்மொடு பயிறல்
வினாதல் வினாயவை விடுத்த லென்றிவை
கடனாக் கொளினே மடநனி யிகக்கும்.

இ - ள். நூல் பயில் இயல்பு நுவலின் - நூலில் அப்பியாசஞ்செய்யுந் தன்மையைச் சொல்லுங்கால்,—வழக்கு அறிதல் - உலகவழக்கும் செய்யுள் வழக்குமாகிய இருவகை நடைகளையும் ஆராய்ந்துணர்தலும்,—பாடம் போற்றல் - மூலபாடங்களை மறவாமற் பாதுகாத்தலும்,—கேட்டவை நினைத்தல் - ஆசிரியனிடத்திற் கேட்ட நூற்பொருள்களைப் பலகாற் சிந்தித்தலும்,—ஆசாற் சார்ந்து அவை அமைவரக் கேட்டல் - ஆசிரியனை அணுகி முன்கேட்ட நூற் பொருள்களையே அமையும்படி மீட்டுங் கேட்டலும்,—அம்மாண்பு உடையோர் தம்மொடு பயிறல் - அவ்வாறு கற்குந் தொழிலாளரோடு அப்பியாசஞ்செய்தலும்,—வினாதல் - தான் ஐயுற்ற பொருளை அவரிடத்து வினவுதலும்,—வினாயவை விடுத்தல் - அவர் வினாவியவைகளுக்குத் தான் உத்தரங்கொடுத்தலும்,—என்றிவை கடனாக் கொளினே - ஆகிய இச்செயல்களை நியதியாக மாணாக்கன் கொண்டாற்றான்,—மடம் நனி இகக்கும் - அறியாமை அவனை மிகவும் விட்டு நீங்கும். எ - று.

தடங்கு என்பது தடக்கு எனவும், பிணங்கு என்பது பிணக்கு எனவும் வந்தவாறே வினைமுதனிலையிலிருந்த ஙகரமெல்லொற்று வல்லொற்றாய்த் திரிந்து வழங்கு என்பது வழக்கு என்று வந்தது. வழங்குதல்=மொழிதல்; வழக்கு=மொழியப்பட்டது. அது கத்தியரூபமும், பத்தியரூபமும் என்று இருவகைப்படும். கத்தியரூபமெனினும் வசனநடையெனினுமொக்கும். பத்தியரூபமெனினுஞ் செய்யுள்நடையெனினு மொக்கும். இங்கே வழக்கறிதலென்றது அவ்விருவகை வழக்கையுமறிதலை. 'ஒருமொழி தொடர்மொழி' என்னுஞ் சூத்திரத்தில் 'வழக்கொடு செய்யுளின்' என்பதனானு முணர்க.

அம்மாண்புடையோர் என்றது வழக்கறிதல், பாடம் போற்றல், கேட்டவை நினைத்தல், ஆசாற்சார்ந்தவை யமைவரக்கேட்டலென்னும் இயல்புகளுடைய மாணாக்கரை. மாணாக்கனெனினும், வித்தியார்த்தியெனினும் ஒக்கும். 'செவ்விதினுரைப்ப வவ்விருகாலு மையறு புலமை மாண்புடைத்தாகும்' என்பதனால் ஆசிரியனிடம் பலதரங்கேட்டுத் தன்போலும் வித்தியார்த்திகளுடன் பயின்றபோதும் புலமை நிரம்பாது குறையுற்றிருக்குமாதலின், மடம் இகக்குமென்னாது நனியிகக்குமென்று பரிமாணப்படுத்திக் கூறினர். (௪௧)

௪௨. ஒருகுறி கேட்போ னிருகாற் கேட்பிற்
பெருக நூலிற் பிழைபா டிலனே.

இ - ள். ஒருகுறி கேட்போன் - ஒருநூலைக்கேட்பவன்,—இருகால் கேட்பின் - ஒருதரங்கேட்ட அளவில் விடாது இருதரம் பாடங்கேட்பானாயின்,—

நூலிற் பிழைபாடு பெருக இலன் - அந்நூலிலே பிழைபடுதல் மிகுதியுமிலனு வன். எ - று.

மடநனியிகக்கு மென்பதற்குரைத்த நிருபணசாரத்தைப் பெருக நூலிற் பிழைபாடிலன் என்பதற்குங்கொண்டு சொன்னயமுணர்க. (௪௨)

௪௩. முக்காற் கேட்பின் முறையறிந் துரைக்கும்.

இ - ள். முக்கால் கேட்பின் - மூன்றுதரம் பாடங் கேட்பானாயின்,—முறை அறிந்து உரைக்கும் - ஆசிரியன் கற்பித்த நூன்முறையை யுணர்ந்து பிறர்க்குச் சொல்லுந்திறமுடையனுவன். எ - று. (௪௩)

௪௪. ஆசா னுரைத்த தமைவரக் கொளினுங்
காற்கூ றல்லது பற்றல னாகும்.

இ - ள். ஆசான் உரைத்தது அமைவரக் கொளினும் - ஆசிரியன் கற்பித்த நூற்பொருளைத் தன்னறிவில் அமையக்கொள்வானுயினும்,—காற்கூறு அல்லது பற்றலன் ஆகும் - புலமைத்திறத்திற் காற்பங்குபற்றினவனுவதன்றி அதற்கதிகமாகப் பெறுதலிலனுவன். எ - று. (௪௪)

௪௫. அவ்வினை யாளரொடு பயில்வகை யொருகாற்
செவ்வினி னுரைப்ப வவ்விரு காலும்
மையறு புலமை மாண்புடைத் தாகும்.

இ - ள். அவ்வினையாளரொடு பயில் வகை ஒருகால் - அக்கற்குந் தொழிலாளரோடு அப்பியாசஞ்செய்யும் வகையாற் காற்பங்கும்,—செவ்வியின் உரைப்ப அவ்விருகாலும் - அவ்விருகாற்கூற்றையுங்கொண்டு தன் மாணுக்கர்க்கும் சபையார்க்குமுணர விரித்துரைத்தலால் அவ்வரைப்பங்குமாக,—மை அறு புலமை மாண்பு உடைத்தாகும் - குற்றமற்ற புலமை நிரம்புதலுடைத்தாகும். எ - று.

ஆசானுரைக்கப் பாடங்கேட்டபோது காற்கூறும், வித்தியார்த்திகளோடு பயிற்சிசெய்தபோது காற்கூறுந் தேர்ச்சியுண்டாக, இவ்விருகாற்கூறாகிய அரைப்பங்கு தேர்ச்சியையுங்கொண்டு தன்மாணுக்கருக்குஞ் சபையாருக்கும் விரித்துரைக்கப் பின்னுமிருகாற்பங்கு தேர்ச்சியுண்டாகும் எனவே பூரணபாண்டித்தியமுண்டாகுமென்பதாம். பாண்டித்தியமெனினும் தேர்ச்சியெனினு மொக்கும். (௪௫)

௪௬. அழலி னீங்கா னணுகா னஞ்சி
நிழலி னீங்கா னிறைந்த நெஞ்சமோ
டெத்திறத் தாசா னுவக்கு மத்திறம்
அறத்திற் றிரியாப் படர்ச்சி வழிபாடே.

Digitized By Roja Muthiah Research Library

இ - ள். அழலின் - குளிர்காய்வோன் விட்டு நீங்காமலும் நெருங்காமலுமிருக்கின்ற தீயைப்போல ஆசிரியனை நினைத்து அவன் ஆசனத்திருக்கும்போது,—அஞ்சி நீங்கான் அணுகான் - அச்சமுற்று விட்டு நீங்கானாகியும் நெருங்கானாகியும் இருந்தும்,—நிழலின் நீங்கான் - விடாது தொடரும் நிழலைப்போலத் தொடர்ந்து ஆசிரியன்செல்லுமிடங்கள் பலவற்றிற் சென்றும்,—நிறைந்த நெஞ்சமோடு - அன்பு நிறைந்த மனத்துடனே,—எத்திறத்து ஆசான் உவக்கும் - எவ்வகையால் ஆசிரியன் மகிழ்வானோ,—அத்திறம் அறத்தின் திரிபாப்படர்ச்சி - அவ்வகையே தருமத்தினின்றும் வேறுபடாத நடத்தலானது,—வழிபாடே - மாணாக்கன் செய்யும் வழிபாடாம். எ - று.

குளிர்காய்வோன் தீயை விட்டுவிலகினால் குளிர்போகாதேயென்று விலகானாயும் நெருங்கினாற் சுடுமாக்குமேயென்று நெருங்கானாயும் அளவாகச் சார்ந்தநுசரித்தல்போல; மாணாக்கன் ஆசிரியனை விட்டுவிலகினால் மூடத்துவம் போகாதேயென்றுகருதி விலகானாகியும், நெருங்கினால் ஆசிரியன் தண்டிப்பானேயென்று நெருங்கானாகியும் அளவாகச்சார்தலாம். சிலபோது முன்றொடர்ந்தும், சிலபோது பின்றொடர்ந்தும், சிறிதுகாலம் ஒருபக்கத்துமின்றியும் இவ்வாறு நிகழும் நிழலைப்போல, இரவிலே ஆஞ்ஞைப்படி ஆசிரியனுக்குமுன் சென்றும், பகலிலே ஆசிரியனுக்குப் பின்சென்றும் ஆசிரியனுடனே கூடிப்போகத்தகாதவிடத்துத் தொடர்ந்துபோகாமல்விட்டும் மாணாக்கன் இவ்வாறொழுகுதல். "முன்புறவானிரவெல்லாம் முப்போதும் பணிந்தெழுவான், பின்புறவான் பகலெல்லாம்" என்று பிறர்வகுத்துக் கூறியதுங் காண்க.

ஆசானுவப்பைப் பெறுதற்கெனினும் அறத்திற்கு விரோதமான பாவச்செயலாயிற் செய்யாதுவிடல் வேண்டுமென்று மாணாக்கனறிதற்பொருட்டு அறத்திற்றிரியாப்படர்ச்சியென்று நூலாசிரியர் கூறினார்.

ஆசிரியனுக்கோதிய இலக்கணங்களையுடையானிடத்து அறத்திற் றிரிந்த குறிப்பு நிகழாதேயெனின், யாதாயினுமொரு நிமித்தத்தாற் கோபமுற்றானாயின் அக்கணத்தில் அறத்திற்றிரிந்த குறிப்புண்டாமென்பதுபற்றியும், நல்லியல்பெல்லாமுடையனாகாது குறையுள்ளானாயினு மவனிடத்துங் கற்றல்வேண்டுமென்பதும், அவ்வாறு கற்பினும் அவ்வாசிரியனுக்குத் தீச்செயலினுவப்புண்டாகுமேனும் அத்தீச்செயலைமாத்திரஞ் செய்யாதுவிடல்வேண்டுமென்பதும் உணர்த்துதற்பொருட்டும் அவ்வாறு கூறினாரென வுணர்க.

மேன்மைக்குறைவுடைய கல்விமானிடத்துங் கற்கலாமென்பதனை "தோணிபிபக்குவான்றொல்லைவருணத்துச், காணிற்கடைப்பட்டானென்றிகழார் - காணாய், அவன்றுணையாவாறுபோயற்றேநூல்கற்ற, மகன்றுணையாநல்லகொளல்" (இதன்பொருள்வெளி) என்றும்; "அப்பிராமணாதத்யயந மாபத்காலே விதீயதே, அநுவ்ரஜ்யாச சுஸ்ரூஷா யாவ தத்யயநம் குரோ:" (இந்தச்சுலோகத்தின்பொருள்:—)பிராமணன் பிராமணகுருவில்லாத ஆபத்துக்காலத்திலே பிராமணனல்லாதவனிடத்திலிருந்து ஓதுதல் விதிக்கப்படுகின்றது; ஓதும்வ

ரையும் குருவுக்குப் பின்போதலும் வழிபாடுசெய்தலும் விதிக்கப்படுகின்றன. (என்பதாம்) என்றுந் தமிழ்நூலும் வடநூலுங் கூறியவாற்றாலுணர்க.

அழலின் என்பதற்கு ஆசிரியன் கோபித்தால் எனப் பொருள்கூறுதலுமுண்டு. (௪௩)

**பரீக்ஷை** வினாக்கள்:—39. ௪௦. மாணாக்கன் பாடங்கேட்குங் கிரமம் யாது? 40. ௪௧. மாணாக்கன் நூலிலே அப்பியாசஞ்செய்யுமுறை எப்படி? 41. ௪௨. மாணாக்கன் ஒருநூலை எத்தனைதரம் பாடங்கேட்கின் ஆசிரியன் சொல்லிய முறையறிந்துசொல்ல வல்லவனாவன்? 42. ௪௪. பாடங்கேட்டலினாலே பாண்டித்தியத்தில் எவ்வளவுபங்கு பலிதமாகும்? 43. ௪௫. பாண்டித்தியத்தின் மற்றைப்பங்கு எவ்வெவ்விதத்தினாற் பலிதமாகும்? (பாண்டித்தியம்-கல்வித்தேர்ச்சி.) 44. ௪௬. ஆசிரியனை மாணாக்கன் வழிபடுங் கிரமம் யாது? 45. மேன்மைக்குறைவுடைய கல்விமானிடத்தில் என்னதருணத்திற் கற்கலாம்?

பொதுப்பாயிர முற்றிற்று.

Digitized By Roja Muthiah Research Library

# சிறப்புப்பாயிரத்தின் இலக்கணம்.

[சிறப்புப்பாயிரத்துக்குப்பொதுவிதி.]

சஎ. ஆக்கியோன் பெயரே வழியே யெல்லை
நூற்பெயர் யாப்பே நுதலிய பொருளே
கேட்போர் பயனோ டாயெண் பொருளும்
வாய்ப்பக் காட்டல் பாயிரத் தியல்பே.

இ - ள். ஆக்கியோன் பெயர் - நூல்செய்தோன் பெயரும்,—வழி - நூல்வந்த வழியும்,—எல்லை - நூல் வழங்கு நிலமும்,—நூற்பெயர் - நூலினது பெயரும்,—யாப்பு - இந்நூல் முடிந்தபின் இந்நூல் கேட்கத் தகுமென்னும் இயைபும்,—நுதலிய பொருள் - நூலிற் சொல்லப்பட்ட விஷயமும்,—கேட்போர் - இந்நூல் கேட்டற்குரிய அதிகாரிகள் இவரென்பதும்,—பயன் - நூல் கேட்டலாற் பெறப்படும் பயனும்,—ஆய் எண் பொருளும் - ஆகிய எட்டுப் பொருள்களையும்,—வாய்ப்பக் காட்டல் - விளங்க வுணர்த்துவது,—பாயிரத்து இயல்பு - சிறப்புப்பாயிரத்தினிலக்கணமாம். எ - று.

'எல்லா நூற்கு மிவை பொதுப் பாயிரம்' எனப்பொதுப் பாயிரமுற்கூறி ஈண்டுச் சிறப்புப்பாயிரங் கூறவந்தவராதலால் அது விளங்கி நிற்குமாதலின், சிறப்புப்பாயிரமென்னாது பாயிரத்தியல்பே என வாளா கூறினர்.

(வாளா - வெறுமையாக; சும்மா அடைமொழியின்றி.) (க)

சஅ. காலங் களனே காரண மென்றிம்
மூவகை யேற்றி மொழிநரு முளரே.

இ - ள். காலம் - நூல் செய்த காலமும்,—களன் - நூல் அரங்கேற்றியசபையும்,—காரணம் - நூல் செய்தற்குக் காரணமும்,—என்று இம்மூவகை ஏற்றி மொழிநரும் உளர் - என்று இம்மூன்றனையும் அவ்வெட்டனோடு கூட்டிப் பதினொன்றாகச் சொல்வாருஞ் சிலருளர். எ - று.

இது பிறன்கோட்கூறலென்னுமுத்தி. (உ)

[நூற்பெயருக்குச்சிறப்புவிதி.]

சகூ. முதனூல் கருத்த னளவு மிகுதி
பொருள்செய் வித்தோன் றன்மைமுத னிமித்தினும்
இடுகுறி யானுநூற் கெய்தும் பெயரே.

Digitized By Roja Muthiah Research Library

இ - ள். நூற்கு - ஒரு நூலுக்கு,—முதல் நூல் - அந்நூலின் முதனூலும்,—கருத்தன் - அந்நூலைச் செய்தவனும்,—அளவு - அந்நூலினளவும்,—மிகுதி - அந்நூலிலே சொல்லப்படும் விஷயங்களுள் மிகுதியான கூறும்,—பொருள் - அந்நூலிலே சொல்லப்படும் பொருளும்,—செய்வித்தோன் - அந்நூல் செய்வோனுக்குப் பொருளுதவிசெய்து அதனைச் செய்வித்தவனும்,—தன்மை - அந்நூலின் குணமும்,—முதல் நிமித்தினும் - முதலான காரணங்களாலும்,—இடுகுறியானும் - காரணமின்றி இடுகுறியாலும்,—பெயர் எய்தும் - பெயர் வரும். எ - று.

நிமித்தத்தினுமென்பது நிமித்தினு மென விகாரப்பட்டுநின்றது.

முதனூலாற் பெயர்பெற்றன பாரதமுதலாயின. கருத்தனாற் பெயர்பெற்றன தொல்காப்பியம், திருவள்ளுவர் முதலாயின. அளவினாற் பெயர்பெற்றன நாலடிநானூறு, பன்னிருபடல முதலாயின. மிகுதியாற் பெயர்பெற்றன களவியல் முதலாயின. பொருளாற் பெயர்பெற்றன அகப்பொருள் முதலாயின. செய்வித்தோனாற் பெயர்பெற்றன சாதவாகன முதலாயின. தன்மையாற் பெயர்பெற்றன சிந்தாமணி, நன்னூல் முதலாயின. இடுகுறியாற் பெயர் பெற்றன கலைக்கோட்டுத் தண்டு முதலாயின.

நிகண்டென்பது இடுகுறியாற் பெயர்பெற்றதென்றுகூறிப் பின் அதற்கு மாறாக நிகண்டெனினுங் கூட்டமெனினுமொக்குமென்று கூறினாருமுளர். (௩)

[வழியின்வகையாகிய நூல் யாப்புக்குச் சிறப்புவிதி]

௫௦. தொகுத்தல் விரித்த றொகைவிரி மொழிபெயர்ப்
பெனத்தகு நூல்யாப் பீரிரண் டென்ப.

இ - ள். தொகுத்தல் - விரிந்துகிடந்ததைத் தொகுத்துச் செய்தலும்,—விரித்தல் - தொக்குக்கிடந்ததை விரித்துச் செய்தலும்,—தொகைவிரி - தொகுத்தும் விரித்துஞ்செய்தலும்,—மொழிபெயர்ப்பு - ஒருபாடையிலிருந்த நூலை மற்றொருபாடையில் திருப்பிச்செய்தலும்,—என - என்று,—நூல் யாப்பு ஈரிரண்டு என்ப - தக்கநூல் யாப்பானது நால்வகைப்படுமென்று சொல்லுவர் புலவர். எ - று.

தொகை விரி என்பது ஒன்றற்கொன்று மாறுபட(பரஸ்பரவிரோதமாய்) நிற்கலாமோவெனின்; அவ்வாறன்று. சிலவற்றைத் தொகுத்தும், சிலவற்றை விரித்துஞ் செய்தலாலென்க.

'மலர்தலை' என்னுஞ் சூத்திரத்துள்ளே 'தொகை வகை விரி' என்று சொல்லியது இந்நான்கு பிரிவினுள் இல்லையேயெனின், நடுநின்ற வகை பின்னின்ற விரியைக் குறிக்கும்போது தொகையாகவும் முன்னின்ற தொகையைக்

Digitized By Roja Muthiah Research Library

குறிக்கும்போது விரியாகவும் அமைதலினாலே 'தொகை வகை விரி' என்றது தொகை விரியென்பதனுள் அடங்கியுளதாமென்க.

மொழிபெயர்ப்புத் தனித்துவருதலுமன்றித் தொகுத்தல், விரித்தல், தொகைவிரி என்னு முப்பகுப்பினுளொவ்வொன்றோடும் கூடியும் வருமென வுணர்க.

மொழிபெயர்ப்பெனினும் பாடாந்தரமெனினுமொக்கும். (௪)

[சிறப்புப்பாயிரஞ்செய்தற்குரியார் இவரென்பது.]

௫௧. தன்னா சிரியன் றன்னொடு கற்றோன
றன்மா ணாக்கன் றகுமுரை காரனென்
றின்னோர் பாயிர மியம்புதல் கடனே.

இ - ள். தன் ஆசிரியன் - தன்னுடைய ஆசிரியனும்,—தன்னொடு கற்றோன்,—தன்னொடுபாடங்கேட்டவனும்,—தன்மாணக்கன் - தனனுடைய மாணக்கனும்,—தகும் உரைகாரன் என்று - தன்னூலொன்றற்காவது தகுமுரையைச் செய்தவனும்,—இன்னோர் - ஆகிய இந்நால்வருளொருவர்,—பாயிரம் இயம்புதல் கடன் - ஒருவருடைய நூலுக்குச் சிறப்புப்பாயிரத்தைச் சொல்லுதல் முறைமையாகும். எ - று.

தன்னொடு கற்றோனெனினும், ஒருசாலை மாணக்கன் எனினும், சகபாடி எனினுமொக்கும். ஒருவர் செய்த நூலின் திறத்தையும், மனக்குறிப்பையும், வழிமுதலானவைகளையும் தன்னாசிரியன் முதலான நால்வருமே நன்குணரவல்லராதலின் அவருளொருவரே பாயிரங்கூறுங் கடனுடையராயினரென்றறிக. (௫)

[சிறப்புப்பாயிரந் தான்செய்யாது பிறர்செய்தற்குக் காரணம்.]

௫௨. தோன்றா தோற்றித் துறைபல முடிப்பினுந்
தான்றற் புகழ்தல் றகுதி யன்றே.

இ - ள். தோன்றா தோற்றி - தோன்றாது கரந்துகிடந்த நுட்பங்களையெல்லாங் காட்டி,—துறைபல முடிப்பினும் - பலதுறைப்பட்டு விரிந்த நூலைச்செய்து முடித்தாலும்,—தான் தற்புகழ்தல் தகுதி அன்று - தானே தன்னைப் புகழ்ந்துகொள்ளுதல் தகுதியன்றாம். எ - று.

நூலினது பெருமை விளங்கப் புனைந்துரைத்தலும், ஆசிரியனது பெருமைகூறுதலும் முதலாகச் சொல்லப்படும் அநேக பாகங்களை நூல்செய்தவனே கூறின் தன்னைத் தான் புகழ்ந்ததாக முடியுமாதலின் அது தகுதியன்றென்றவாறும். ஆகவே பாயிரங்கூறுங் கடன் குறித்த பிறர்மேலதாயிற்றென்றுணர்க.

Digitized By Roja Muthiah Research Library

நூல்செய்தோனே பாயிரஞ்செய்ததுஞ் சிறுபான்மையுண்டு. பிரயோக விவேகத்திற்கு அதனாசிரியரான சுப்பிரமணியதீக்ஷிதர் பாயிரஞ் செய்ததறிக. (௬)

[தற்புகழ்ச்சி குற்றமாகாத இடங்கள்.]

௫௩. மன்னுடை மன்றத் தோலைத் தூக்கினுந்
தன்னுடை யாற்ற லுணரா ரிடையினும்
மன்னிய வவையிடை வெல்லுறு பொழுதினுந்
தன்னை மறுதலை பழித்த காலையுந்
தன்னைப் புகழ்தலுந் தகும்புல வோர்க்கே.

இ - ள். மன்னுடை மன்றத்து ஓலைத் தூக்கினும் - அரசனது சபைக்கனுப்புஞ் சீட்டுக்கவியிலும்,—தன்னுடை ஆற்றல் உணரார் இடையினும் - தனது கல்வி வன்மையை அறியாதாரிடத்திலும்,—மன்னிய அவையிடை வெல்லுறு பொழுதினும் - பெரிய சபையில் வாதஞ்செய்து வெல்லும் பொழுதிலும்,—தன்னை மறுதலை பழித்த காலையும் - தன்னை எதிரி பழித்த காலத்திலும்,—தன்னைப் புகழ்தலும் புலவோர்க்குத் தகும் - தன்னைத்தான் புகழ்ந்துகொள்ளலும் புலவனுக்குத் தகும். எ - று.

புகழ்தலும் தகும் என்னு மிழிவுசிறப்பும்மையால் இவ்விடங்களிலுந் தன்னைப் புகழாமையே நன்றென்பது கருத்து. மன்னுடை மன்றத்தும் ஓலைத்தூக்கினும் என்றிரண்டாக வுரைப்பாருமுளர். (௭)

[பாயிரம் நூலுக்கு இன்றியமையாச் சிறப்புடையது என்பது.]

௫௪. ஆயிர முகத்தா னகன்ற தாயினும்
பாயிர மில்லது பனுவ லன்றே.

இ - ள். ஆயிரம் முகத்தான் அகன்றது ஆயினும் - ஆயிரம் பிரகாரங்களால் விரிந்ததேயாயினும்,—பாயிரம் இல்லது பனுவல் அன்று - பாயிரமில்லாதது நூலன்றாகும். எ - று. (௮)

[பாயிரஞ்சிறப்பித்தலை உவமை முகத்தாற் கூறுகின்றார்.]

௫௫. மாடக்குச் சித்திரமு மாநகர்க்குக் கோபுரமும்
ஆடமைத்தோ ளல்லார்க் கணியும்போல்—நாடிமுன்
ஐதுரையா நின்ற வணிந்துரையை யெந்நூற்கும்
பெய்துரையா வைத்தார் பெரிது.

Digitized By Roja Muthiah Research Library

இ - ள். மாடக்கு - மாளிகைக்கு,—சித்திரமும் - சித்திரங்களைப் போலவும்,—மா நகர்க்கு - பெரிய பட்டணத்திற்கு,—கோபுரமும் - கோபுர வாயிலைப்போலவும்,—ஆடு அமைத் தோள் நல்லார்க்கு - நிருத்தஞ் செய்கின்ற மூங்கில்போலுந் தோள்களையுடைய மங்கையருக்கு,—அணியும்போல் - ஆபரணம் போலவும் நினைத்து,—ஐது உரையாநின்ற அணிந்துரையை உரையா-அழகிய பொருளைச் சொல்லுகின்ற பாயிரத்தை உரைத்து,—எந்நூற்கும் முன் பெரிது பெய்து வைத்தார் - எவ்வகைப்பட்ட மேலான நூலுக்கும் முதலிலே பெருமையாய்ச் சேர்த்து வைத்தனர் ஆசிரியர். எ - று.

ஆடு என்பது நல்லாரென்னும் பெயர் கொண்டது. நிருத்தமாதரென்பது கருத்து. மாடத்துக்கு என்பது அத்துச்சாரியை குறைந்து மாடக்கு என நின்றது. பெரிது - குறிப்புமுற்றெச்சம். (கூ)

சிறப்புப்பாயிரத்தின் இலக்கண முற்றிற்று.

Digitized By Roja Muthiah Research Library

நன்னூல்

# எழுத்ததிகாரம்.

[எழுத்தினது அதிகரித்தலையுடையது]

## க. எழுத்தியல்.

[கடவுள்வணக்கமும் அதிகாரமும்.]

௫௬. பூமலி யசோகின் புனைநிழ லமர்ந்த
நான்முகற் றொழுதுநன் கியம்புவ னெழுத்தே.

இ - ள். பூ மலி அசோகின் - பூக்கள் நிறைந்த அசோகமரத்தினது,- புனை நிழல் அமர்ந்த - அலங்கரிக்கப்பட்ட நிழலின்கண் வீற்றிருந்த,—நான்முகன் தொழுது – நான்கு திருமுகங்களையுடைய கடவுளை வணங்கி,—எழுத்து - எழுத்திலக்கணத்தை,—நன்கு இயம்புவன் - நன்றாகச் சொல்வேன் (யான்) எ - று.

இங்கே எழுத்து என்பது ஆகுபெயர். ஏகாரம் ஈற்றசை. எல்லாம்வல்லகடவுளை வணங்கலால் இனிதுமுடியுமென்பது கருதி நன்கியம்புவனென்று புகுந்தமையின் இது நுதலிப்புகுதலென்னும் உத்தி. நுதலல் - எண்ணல், கருதுதல். பூமலி—தொழுது எனக் கடவுள்வணக்கங் கூறப்பட்டது. நன்கியம்புவன் எழுத்தே என அதிகாரங் கூறப்பட்டது. யான் தோன்றாத எழுவாய்; இயம்புவன் பயனிலை; எழுத்து செயப்படுபொருள். (க)

[எழுத்திலக்கணத்தின் பகுப்பு]

௫௭. எண்பெயர் முறைபிறப் புருவ மாத்திரை
முதனிலை யிறுதி யிடைநிலை போலி யென்றா
பதம்புணர் பென்பன் னிருபாற் றதுவே.

இ - ள். எண் (என்று) - எண்ணும்,—பெயர் (என்று) - பெயரும்,—முறை (என்று) - முறையும்,—பிறப்பு (என்று) - பிறப்பும்,—உருவம் (என்

Digitized By Roja Muthiah Research Library

ரு) - வடிவமும்,—மாத்திரை (என்று) - அளவும்,—முதல் ஈறு இடைநிலை (என்று) - முதனிலையும் இறுதிநிலையும் இடைநிலையும்,—போலி என்று - போலியும்,—பதம் (என) பதமும்,—புணர்பு என - சந்தியும் என்று,—பன்னிரு பாற்று - பன்னிரண்டு வகையினையுடைத்தாகும்,—அது அவ்வெழுத்திலக்கணம். எ - று.

முதல் (நிலை) ஈறு (நிலை) இடைநிலை என்று முதல் ஈறு என்பவைகளோடும் நிலை என்பதைக் கூட்டிக்கொள்ளுக. இச்சூத்திரம் தொகுத்துச்சுட்டல் என்னும் உத்தி. மேல்வருவன வகுத்துக்காட்டல்.

இப் பன்னிரு பகுப்பினுள்ளும் எண்முதலிய பத்தும் எழுத்தின் அகத்திலக்கணமென்பது விளங்க அவற்றினிறுதியில் என்று என்னுமிடைச்சொற்றொடுத்தெண்ணியும், பதம் புணர்பு என்னு மிரண்டும் எழுத்தின் புறத்திலக்கணம் என்பது விளங்க அவற்றினிறுதியில் என என்னுமிடைச்சொற்கொடுத் தெண்ணியும் வேற்றுமை உண்டாக்கி யோதினார்.

முறையாவது எழுத்துக்கள் முன்னும் பின்னுமாக நிற்கிற வரிசை. போலி - சொல்லிலே ஓரெழுத்து நின்ற இடத்தில் மற்றோரெழுத்து வந்துநின்று முன்போலப் பொருடருதலும், சில எழுத்துக்கள் கூடி வேறோரெழுத்துப்போலொலித்தலுமாம்.

எழுத்தின் அகத்திலக்கணம் பத்தையும் எழுத்தியல் என ஓரியலாகவும், புறத்திலக்கணம் இரண்டனுள் அவ்வெழுத்தாலாம் பதத்தைப் பதவியல் என ஓரியலாகவும், அப்பதம் புணரும் புணர்ப்பை உயிரீற்றுப்புணரியல், மெய்யீற்றுப்புணரியல், உருபுபுணரியல் என மூன்றியலாகவும் ஓத்துமுறை வைப்பு என்னும் உத்தியால் வைத்தமை காண்க. (உ)

## க. எண்

[எழுத்து இன்னதென்பதும், அதன் வகையும்]

ருஅ. மொழிமுதற் காரண மாமணுத் திரளொலி
எழுத்தது முதல்சார் பெனவிரு வகைத்தே.

இ - ள். எழுத்து - எழுத்தாவது,—மொழிமுதற் காரணம் ஆம் அணுத்திரள் ஒலி - மொழிக்கு முதற்காரணமாகும் அணுக்கூட்டத்தின் காரிய ஓசையாம்,—அது - அவ்வெழுத்து,—முதல் சார்பு என - முதலெழுத்தும் சார்பெழுத்துமென்று,—இருவகைத்து - இரண்டு பகுப்பினையுடைத்து. எ-று

இங்கே அணுவென்றது செவிப்புலனும் அணுவை. அது ஒலிநுட்பம். மொழிக்கு முதற்காரணம் எழுத்தானாற்போல, எழுத்திற்கு முதற்காரண

Digitized By Roja Muthiah Research Library

ம் அணுக்கூட்டமாம். அணுக்கூட்டத்தின் காரியம் எழுத்தானாற்போல எழுத்தின்காரியம் மொழியாம்.

ஆடைக்கு முதற்காரணம் நூலும்; நூலிற்கு முதற்காரணம் பஞ்சும் போலவும்; பஞ்சின் காரியம் நூலும், நூலின்காரியம் ஆடையும் ஆனாற்போலவுமென்று திருட்டாந்தமுங் காண்க.

காரியமாவது செய்யப்பட்டது. காரணம் இருவகைப்படும் முதற்காரணமும் துணைக்காரணமும் என. முதற்காரணமாவது காரியத்தோடு அபேதமானது. அபேதம் எனினும், பிரிவின்மை எனினும், ஒற்றுமை எனினும் ஒக்கும். ஆடையாகிய காரியம் வேறாகவும் அந்த ஆடையிலியைந்த முதற்காரணமாகிய நூல் வேறாகவுமின்றி அபேதமாயிருத்தல் காண்க. குடமாகிய காரியம் வேறும், அந்தக்குடம் செய்யப்பட்ட மண்ணாகிய முதற்காரணம் வேறுமாகாமல் அபேதமாயிருத்தலுங் காண்க.

துணைக்காரணமாவது முதற்காரணம் காரியமாய் முடியும் அளவும் துணையாய் உடன் நிகழ்வது. பஞ்சு நூலாகிய காரியமாகுமளவும் உடனிகழும் யந்திரக்கருவி துணைக்காரணம். அந்தப் பஞ்சு நூலாகி முடிந்தபின் நூலும் வேறாய்விடும் யந்திரக் கருவியும் வேறாய்விடும். நூலினால் ஆடையாகிய காரியம் முடியும்வரையும் உடனிகழும் தறிமுதலிய கருவி துணைக்காரணம். அந்நூல் ஆடையாய் முடிந்தபின் தறிமுதலிய கருவியும் ஆடையும் வேறுவேறாய்விடும்.

மொழி காரியம், அதற்கு முதற்காரணம் எழுத்து. எழுத்திற்கு முதற்காரணம் அணுத்திரள். மொழியாகிய காரியமும் அம்மொழியாக்கப்பட்ட எழுத்தும் வேறுவேறாகாமல் அபேதமாயிருத்தல் காண்க. [எழுத்தாகிய காரியமும் அவ்வெழுத்தாக்கப்பட்ட அணுவாகிய ஒலிநுட்பமும் வேறுவேறாகாமல் அபேதமாயிருத்தல் காண்க. அணுத்திரள் - நாதம்.] அணுத்திரள் எழுத்தாகக் காரியப்படுமளவு முடனிகழுந் துணைக்கருவி மார்பு, கண்டம், தலை, நாசி, உதடு, நா, பல்லு, அண்ணம் என்பவற்றுள் அவ்வவ்வெழுத்திற்கு ஏற்புடைய அங்கங்கள்.

இனி, மொழி முதற் காரணமாம் அணுத்திரள் ஒலியெழுத்து என்று பகுத்து, மொழிக்கு முதற்காரணமாகிய அணுக்கூட்டங்களாகிய காரியம் (வடிவெழுத்து ஒலியெழுத்து என்னும் இரண்டனுள்) ஒலியெழுத்தாம் என்று பொருள் கோடலுமாம். ஈளமுதலியவாக எழுமொலியும் அணுத்திரளொலியாதலின் அவற்றை யொழித்து வேறுபாடறிந்து கொள்ளுதற்கு மொழிமுதற் காரணமாம் என்று அடைகொடுத்தார். எனவே அணுத்திரளொலிகள் பலவற்றுள் மொழிமுதற் காரணமாமொலி யெழுத்தென்றவாறாயிற்று. இச்சூத்திரம் வரிவடிவெழுத்து, ஒலிவடிவெழுத்தென்னு மிரண்டனுள் ஒலிவடிவெழுத்திற் கிலக்கணங் கூறியதென வுணர்க. "இசைப்படு புள்ளினெழாஅல்போலச், செவிப்புலனாவ தொலியெழுத்தாகும்". எனவும், "கட்புலனில்லாக் கடவுளைக் காட்டுஞ், சட்டகம்போலச் செவிப்புலவொலியை, உட்கொளற் கிடுமு



Digitized By Roja Muthiah Research Library

ரு பாம்வடிவெழுத்தே” எனவும் முறையே ஒலிவடிவெழுத்து, வரிவடிவெ ழுத்து என்னு மிரண்டற்கு மிலக்கணம் பிறர் கூறியதுங் காண்க. (௩)

[எண்ணிலக்கணத்துள் முதலெழுத்தின் விரி]

௫௯. உயிரு முடம்புமா முப்பது முதலே.

இ - ள். உயிரும் - உயிரெழுத்துப் பன்னிரண்டும்,—உடம்பும் - மெய்யெழுத்துப் பதினெட்டும்,—ஆம் முப்பது முதல் - ஆகிய முப்பதெழுத்தும் முதலெழுத்தாம். எ - று.

எண்ணிலக்கணமாதலின், முதல் முப்பதுமாம் என்று எண்ணிலே முடிப்பது சிறப்பு. உயிர்மெய்யாய்தமென்னுஞ் சூத்திரத்தையு மிவ்வாறு எண்ணில் முடிப்பது நன்று. உயிர்மெய்யிரட்டு நூற்றெட்டு என்னுஞ் சூத்திரக் கூறுகள் ஒவ்வொன்றும் எண்ணிலே முடிந்திருத்தலையு நோக்கியுணர்க. ஊதியத்திற்கு முதற்பணம் என்றது காரணங் காட்டியதுபோலச் சார்பெழுத்திற்கு முதலெழுத்துக் காரணங் காட்டிற்று. உயிர் இவ்வளவு மெய் இவ்வளவென வரையறுக்கமுன் முப்பது முதலெனப் பொதுப்படக் கூறியது உரைத்தும் என்னும் உத்தி. (௪)

[சார்பெழுத்தின் வகை.]

௬௦. உயிர்மெய் யாய்த முயிரள பொற்றள
பஃகிய இஉ ஐஔ மஃகான்
றனிநிலை பத்துஞ் சார்பெழுத் தாகும்.

இ - ள். உயிர்மெய் - உயிர்மெய்யும்,—ஆய்தம் - ஆய்தமும்,—உயிரளபு - உயிரளபெடையும்,—ஒற்றளபு - ஒற்றளபெடையும்,—அஃகியஇ - குற்றியலிகரமும்,—(அஃகிய) உ - குற்றியலுகரமும்,—(அஃகிய) ஐ - ஐகாரக்குறுக்கமும்,—(அஃகிய) ஔ - ஔகாரக்குறுக்கமும்,—(அஃகிய) மஃகான் - மகரக்குறுக்கமும்,—(அஃகிய) தனிநிலை - ஆய்தக்குறுக்கமும்,—பத்துஞ் சார்பெழுத்து ஆகும் - ஆகிய பத்தும் சார்பெழுத்துக்களாம். எ - று.

அஃகுதல் - சுருங்குதல். தனிநிலை எனினும் ஆய்தம் எனினும் அஃகேனமெனினு மொக்கும். உயிருமெய்யுங் கலப்புறுமாறுபோல ஓரெழுத்தொடுங் கலப்புறுதலின்றித் தனிநிற்றலால் தனிநிலையெனப்பட்டது. அஃகிய என்பது இ, உ, ஐ, ஔ, மஃகான், தனிநிலை என்னும் ஆறிற்கும் உரிய அடைமொழியாதலின் பிரித்துச் சேர்த்துரைக்கப்பட்டது.

சார்பெழுத்தின்வகை பத்தில், உயிருமெய்யுஞ் சார்ந்துண்டானமையால் உயிர்மெய் சார்பெழுத்தெனப் பட்டது. ஏனைய ஒன்பது வகையும் மொழியைச் சார்ந்தே உண்டாயினமையாற் சார்பெழுத்தெனப்பட்டன. இவற்றுள்ளும் ஆய்தக்குறுக்கம் சார்பிற் சார்பென்றறிக. (௫)

[சார்பெழுத்தின் விரி.]

௬௧. உயிர்மெய் யிரட்டுநூற் றெட்டுய ராய்தம்
எட்டுயி ரளபெழு மூன்றொற் றளபெடை

Digitized By Roja Muthiah Research Library

ஆறே ழஃகு மிம்முப் பானே
ழுகர மாறா றைகான் மூன்றே
ஔகா னொன்றே மஃகான் மூன்றே
ஆய்த மிரண்டொடு சார்பெழுத் துறுவிரி
ஒன்றொழி முந்நூற் றெழுபா னென்ப.

இ - ள். உயிர் மெய் இரட்டு நூற்றெட்டு - உயிர்மெய் இருநூற்றுப்பதினாறு,—உயர் ஆய்தம் எட்டு - முற்றாய்தம் எட்டு,—உயிரளபு எழுமூன்று - உயிரளபெடை இருபத்தொன்று,—ஒற்றளபெடை ஆறேழு - ஒற்றளபெடை நாற்பத்திரண்டு,—அஃகும் இ முப்பானேழு - குற்றியலிகரம் முப்பத்தேழு,—(அஃகும்) உகரம் ஆறாறு - குற்றியலுகரம் முப்பத்தாறு,—(அஃகும்) ஐகான் மூன்று - ஐகாரக்குறுக்கம் மூன்று,—(அஃகும்) ஔகான் ஒன்று - ஔகாரக்குறுக்கம் ஒன்று,—(அஃகும்) மஃகான் மூன்று - மகரக்குறுக்கம் மூன்று,—(அஃகும்) ஆய்தம் இரண்டொடு - ஆய்தக்குறுக்கம் இரண்டுடனே,—சார்பெழுத்து உறுவிரி - சார்பெழுத்தினது மிகுந்த விரி,—ஒன்று ஒழி முந்நூற்றெழுபான் என்ப - முந்நூற்றறுபத்தொன்பதாம் என்று சொல்லுவர் புலவர். எ - று.

அஃகும் என்னும் அடைமொழி இகரமுதலான ஆறுவகைக்கு முரியதாதலிற் பிரித்துக் கூட்டியுரைக்கப்பட்டது. உயிருமெய்யுங் கலப்புறுதலாற் பெருகிய வெழுத்து வேற்றுமைபற்றி உயிர்மெய் இருநூற்றுப் பதினாறாயின. மற்ற ஒன்பதுவகையில், உயிரளபெடையும் ஒற்றளபெடையும் ஆய்தக் குறுக்கமுந் தவிர நின்ற அறுவகைச் சார்பெழுத்துக்களுக்கு இடவேற்றுமைபற்றி எண்கள் சொல்லப்பட்டன. உயிரளபெடைக்கும் ஒற்றளபெடைக்கும் எழுத்துவேற்றுமை, இடவேற்றுமை என்னுமிரண்டும் பற்றி எண்கள் சொல்லப்பட்டன. ஆய்தக்குறுக்கத்திற்குத் திரிந்த முதலெழுத்துக்கள் பற்றித் தொகை குறிக்கப்பட்டது. இங்கே வேற்றுமையென்றது வேறுவேறாயிருக்குந் தன்மை. எண் எனினுந் தொகை எனினுங் கணக்கு எனினுமொக்கும். இவை அவ்வத்தொகையவாதலை அவ்வவற்றின் பிறப்பிலக்கணங் கூறுமிடங்களிற் காண்க. (௬௰)

பரீக்ஷை வினாக்கள்:—46. க. எழுத்தாவதியாது? 47. இங்கே அணுவென்றது எவ்வணுவை? 48. காரியமாவதியாது? 49. காரணமாவதியாது? 50. முதற்காரணமாவதியாது? 51. துணைக்காரணமாவதியாது? 52. எதனாலே நூல் காரியமெனப்படும்? 53. எதனாலே ஆடை காரியமெனப்படும்? 54. எதனாலே நூலுக்குப் பஞ்சு முதற்காரணமெனப்படும்? 55. எதனாலே ஆடைக்கு நூல் முதற்காரணமெனப்படும்? 56. நூலுக்கு அதனை ஆக்குமயந்திரம் எதனாலே துணைக்காரணமெனப்படும்? 57. ஆடைக்குத் துணைக்காரணமெவை? 58. எழுத்திற்கு முதற்காரணம் யாது? 59. எழுத்திற்குத் துணைக்காரணம் யாது? 60. எழுத்தின் காரியம் யாது? 61. ௪. எழுத்து எத்தனைவகைப்படும்? 62. சார்பெழுத்து எத்தனைவகைப்படும்? 63. உயிர்

Digitized By Roja Muthiah Research Library

மெய்யெழுத்து எத்தனை? 64. முற்றாய்தம் எத்தனை? 65. குறுகிய ஆய்தம் எத்தனை? 66. குற்றியலுகரம் எத்தனை? 67. முற்றியலுகரமெத்தனை?

## உ. பெயர்.

[பெயர்க்கெல்லாம் பொது விலக்கணம்.]

**கூஉ. இடுகுறி காரணப் பெயர்பொதுச் சிறப்பின.**

இ - ள். இடுகுறி காரணப்பெயர் - இடுகுறிப்பெயரும் காரணப்பெயருமாகிய இரண்டும்,—பொதுச்சிறப்பின - பலபொருளுக்குப் பொதுப்பெயராயும் ஒவ்வொரு பொருளுக்கே சிறப்புப்பெயராயும் வருவனவாம். எ - று.

இடுகுறிப்பெயராவது ஒருகாரணமும் பற்றாது வழங்கிவரும் பெயர். காரணப்பெயராவது யாதாயினுமொரு காரணம்பற்றி வழங்கிவரும் பெயர். பொதுவாவது பலபொருளுக்கு முரியதாய்ச் செல்லுவதாமொரு தன்மை. சிறப்பாவது ஒருபொருளுக் குரியதாய் நிற்குந் தன்மை. பொது எனினும் சாமானியமெனினும் ஒக்கும். சிறப்பு எனினும் விசேடமெனினும் ஒக்கும். பெயர்களை ஆராய்ந்து பார்க்குங்கால், இடுகுறிகாரணமென்னு மிரண்டனுள் ஒன்றாயும்; பொது சிறப்பென்னு மிரண்டனு ளொன்றாயுமிருக்கும்.

உ - ம். மரம் என்பது ஒருகாரணமும் பற்றாது வழங்கும்பெயராய், பனை, பலா, மா முதலிய பல வருக்கப்பொருளுக்கும் பொதுவாதலால் இடுகுறிப்பொதுப்பெயர். பனை என்பது ஒருகாரணமும் பற்றாது வழங்கும்பெயராய் ஒருவருக்கப் பொருளுக்கே சிறப்பாய் நிற்கையால் இடுகுறிச் சிறப்புப்பெயர். பலா, மா என்பனவும் அப்படியே இடுகுறிச் சிறப்புப்பெயர்களாம்.

அணி என்பது அணியப்படுதலாகிய காரணம்பற்றி வழங்கும் பெயராய் இடுவன தொடுவன கட்டுவன கவிப்பன முதலிய ஆபரணங்கள் பலவற்றிற்கும் பொதுவாதலால், காரணப்பொதுப்பெயர்.

முடி, கழல் என்பன முடியிற் கவிக்கப்படுவதும், கழலிற் கட்டப்படுவதுமாகிய காரணம் பற்றி வழங்கும்பெயராய் ஒவ்வொரு பொருளுக்கே சிறப்பாய் நிற்கையால் காரணச்சிறப்புப்பெயர்கள். முடி - தலை. கழல் - கால். இனி இரட்டுறமொழிதலென்னும் உத்தியால் இச்சூத்திரத்திற்கு இடுகுறி காரணம் என்ற இரண்டும் அவ்விரண்டிற்கும் பொதுவாகியும், இடுகுறிக்கே சிறப்பாகியும், காரணத்திற்கே சிறப்பாகியும் வருவனவாமென்றும் பொருளுரைத்துக்கொள்க.

உ - ம். பரம் என்பது இடுகுறிச்சிறப்பு. பரமன் என்பது காரணச்சிறப்பு. முக்கணன், மறவன், அந்தணன், பங்கயம், முள்ளி என்றாற்போல்வன இடுகுறி காரணமிரண்டிற்கும் பொது. இவையிரண்டற்கும் பொதுவாயினவாறென்னெனின், இவற்றுள் முக்கணன் என்பது காரணம்பற்றிப் பார்க்கும்போது மூன்றுகண்ணுடைய விநாயகர்முதலியோர்க்கெல்லாம் பொ

Digitized By Roja Muthiah Research Library

துவாகியும், காரணம் பற்றாதபோது இடுகுறிமாத்திரையாய்ச் சிவனுக்கே சிறப்பாகியுஞ் சென்றுவருதலால் காரணம் இடுகுறி என்னுமவ்விரண்டிற்கும் பொதுவாயிற்று. மறவன் என்பது மறத்தன்மையுடையோர்க்கெல்லாம் பொதுவாயினும், ஒருசாதியானுக்கே சிறப்பாயிற்று. அந்தணன் என்பது அந்தண்மையுடையோர்க்கெல்லாம் பொதுவாயினும், ஆதிவருணத்தார்க்குச் சிறப்பாயிற்று. பங்கயம் சேற்றிலே தோன்றினவெல்லாம் பங்கயமென்னும்படி பொதுவாயினும், தாமரையொன்றிற்கே சிறப்பாயிற்று.

முள்ளி என்பது முள்ளுடையனவற்றிற்கெல்லாம பொதுவாயினும், ஒரு வருக்கச்செடிக்கே சிறப்பாயிற்று. ஆதலால் இவைபோல்வனவெல்லாங் காரணவிடுகுறிப்பெயரெனக் காண்க. வடநூலார் இடுகுறியை ரூடி என்றும், காரணத்தை யோகம் என்றும், காரணவிடுகுறியை யோகரூடி என்றும் வழங்குவர். இவ்விலக்கணத்தால் எழுத்துக்களின் பெயர் வருதல் காண்க. காரணவிடுகுறிக்கு வேறோர் இலக்கணம்:—காரணப்பொதுவாக வழங்கத்தகுந் தன்மையுடைய பெயர் ஏற்புடைய அப்பலபொருளுக்கும் பெருவழக்காய் வழங்காமல் அப்பலபொருள்களுள் ஒருபொருளுக்குப்பெருவழக்காய் வழங்குமாயின் அது காரணவிடுகுறியாமென்றுணர்க. எவ்வாறெனின், முள்ளி என்பது முள்ளையுடையதென்னும் பொருளையுடையதாதலின் இலந்தை, காரை, மாதுளை, வில்வம் முதலான முள்ளுடைய செடிகளுக்கெல்லாம் பொதுவாக வழங்குதற்குத் தகுந் தன்மையுடைய பெயராம். இப்பெயர் அப்பொருள்களுக்கெல்லாம் பெருவழக்காய்ச் சேறலின்றி அவற்றுள் ஒரு வருக்கச்செடிக்கே பெருவழக்காய் வழங்குதலறிக.

பங்கயம் என்பது பங்க+சம்=சேற்றிற்றோன்றுவது என்னும் பொருளது ஆதலால், தாமரை, (குவளை, ஆம்பல், நெய்தல், முதலான) சேற்றிற்றோன்றுவனவற்றிற்கெல்லாம் பொதுவாகச் செல்லத்தகுந் தன்மையுடைய பெயராயினும் அவற்றுள் மற்றவைகளுக்குப் பெருவழக்காய் வழங்குதலின்றித் தாமரைக்கே பெருவழக்காய் வழங்குதலறிக. ஏனையவுமிவ்வாறே யுய்த்துணர்க. (எ)

[எழுத்தின்பெயர்.]

௯௩. அம்முத லீரா றாவி கம்முதன்
மெய்ம்மூ வாறென விளம்பினர் புலவர்.

இ — ள். அ முதல் ஈராறு ஆவி (என்) - (நெடுங்கணக்கினுள்) அகரமுதலிய பன்னிரண்டனையும் உயிரெழுத்தென்றும்,— க முதல் மூவாறு மெய் என் - ககரமுதலிய பதினெட்டனையும் மெய்யெழுத்தென்றும்,—விளம்பினர் புலவர் - சொன்னார் அறிவுடையோர். எ - று.

அகரமுதலிய பன்னிரண்டும் உயிர்போலத் தனித்தியங்கும் வன்மையுடைமையால் உயிரெனவும், ககரமுதலிய பதினெட்டும் உயிரொடு சார்ந்தன்றி இயங்கும் வன்மையின்மையால் மெய்யெனவும் பெயர்பெற்றன.

Digitized By Roja Muthiah Research Library

ஆவி, மெய் எனப் பிறபொருட்குவரும் பெயர் இவ்விருவகையெழுத்திற்கும் உவமவாகுபெயராய் வந்தன. இவை காரணப்பொதுப்பெயர். உயிரெழுத்திற்கும் மெய்யெழுத்திற்கும் இடையிலே ஆய்தவெழுத்தை நெடுங்கணக்கில் வைத்தது ஆய்தம் சிலவிடத்து உயிர்போல அலகுபெற்றும், சிலவிடத்து மெய்போல அலகுபெறாமலும் செய்யுளில் வந்து வழங்குதல்பற்றியாம். வரலாறு:—உயிர்போல "அற்றா லளவறிந் துண்க வஃதுடம்பு, பெற்றா னெடிதுய்க்கு மாறு" எ-ம். மெய்போல "தோன்றிற் புகழொடு தோன்றுக வஃதிலார், தோன்றலிற் றோன்றாமை நன்று" எ-ம் வருதல் காண்க. (அ)

௬௪. அவற்றுள்,
அ இ உ எ ஒக்குறி லைந்தே.

இ-ள். அவற்றுள் - ஆவிமெய்யென்றவற்றுள்,—அ இ உ எ ஒ ஐந்து குறில் - அ இ உ எ ஒ என்னும் ஐந்துங் குற்றெழுத்துக்களாம். எ-று.

௬௫. ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔநெடில்.

இ-ள். ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ என்னும் ஏழும் நெட்டெழுத்தாம்.

ஏழென்று தொகைகொடாது நெடிலென்றார். அவற்றுள் குறில் ஐந்தேயென்று தொகை கொடுத்தமையால், நெடில் ஏழென்று வரகோட்டி நியாயத்தாற் பெறப்படுமாதலின், அந்நியாயம் இன்னதென்பது முன்கூறப்பட்டது.

௬௬. அ இ உம்முதற் றனிவரிற் சுட்டே.

இ-ள். அ இ உ - அ இ உ என்னும் மூன்றும்,—முதல் தனி வரின் சுட்டு - மொழிக்கு முதலிலே தனித்துச் சுட்டுப்பொருளைக் காட்டவரிற் சுட்டெழுத்தாம். எ-று.

முதலெனப் பொதுப்படச் சொன்னதினாலே, புறத்தும் அகத்தும் வருமெனக் கொள்க.

உ-ம். அக்கொற்றன், இக்கொற்றன், உக்கொற்றன் புறத்துவந்தன. அவன், இவன், உவன் அகத்துவந்தன.

ஒருமொழிக்குள் உறுப்பாய் நிற்குஞ் சுட்டெழுத்து அகச்சுட்டெனப்படும். அப்படி நில்லாமற் புறத்தே பிறிதொரு மொழியாய் நிற்குஞ் சுட்டுப் புறச்சுட்டெனப்படும். மேற்காட்டிய உதாரணத்தில் அவன் என்னுஞ் சொல்லுக்குள் அகரச்சுட்டு உறுப்பாய் அமைந்ததுகாண்க. அக்கொற்றன் என்பதில் கொற்றன் என்னுஞ் சொற்குள் உறுப்பாயடங்காது, அகரச்சுட்டுப் பிறிதொருமொழியாய் நிற்றல் காண்க. இப்படியே அகச்சுட்டுப் புறச்சுட்டுக்களனைத்தையும் நோக்கி வேறுபாடுணர்க. நுட்பமாய் நோக்கின் அகரந் தூரத்திலுள்ள பொருளையும், இகரஞ் சமீபத்திலுள்ள பொருளையும், உகரம் நடுவிலுள்ள பொருளையுஞ் சுட்டுதற்கு வருமென்றறிக. சுட்டுப்பொருளுணர்த்தாதபோது சுட்டெழுத்தெனப்படா. உ-ம். அவல், அப்பு எ-ம், இனம், இஞ்சி எ-ம், உரல், உணவு எ-ம் வரும்

Digitized By Roja Muthiah Research Library

இச்சொற்களின் முதலில் வந்த அகர இகர உகரங்கள் சுட்டுப்பொருளுணர்த்தாமை யறிக. (கக)

சூஎ. எ யா முதலு மாவோ வீற்றும்
ஏயிரு வழியும் வினாவா கும்மே.

இ - ள். எ யா முதலும் - எகரமும் யா என்பதும் மொழிக்கு முதலிலும்,—ஆ ஓ ஈற்றும் - ஆகாரமும் ஓகாரமும் மொழிக் கிறுதியிலும்,—ஏ இருவழியும் - ஏகாரம் இவ்விரண்டிடத்திலும்,—(தனிவரின்) தனித்து வினாப்பொருளைக் காட்டவரின்,—வினாவாகும் - வினாவெழுத்தாம். எ - று.

மேலைச் சூத்திரத்திலே 'தனிவரின்' என்றது இதற்குங் கூட்டப்பட்டது. ஒன்றினமுடித்த றன்னினமுடித்தலென்னும் உத்தியால் உயிர்மெய்யாகிய யாவினாவும் உடன்கூறப்பட்டது. இவை அகவினா, புறவினாவென இருவகைப்படும். சொல்லினகத்து உறுப்பாய் வரும் வினாவெழுத்து அகவினாவெனப்படும்; சொல்லின் புறத்தே வரும் வினாவெழுத்துப் புறவினாவெனப்படும்.

உ - ம். எக்கொற்றன், யாங்ஙனம் என எகரமும், யாவும் முதலிலே புறவினாவாய் வந்தன. எவன், யாவன் என எகரமும் யாவும் முதலிலே அகவினாவாய் வந்தன. கொற்றனா, கொற்றனோ என ஆகாரமும், ஓகாரமும் ஈற்றிலே புறவினாவாய் வந்தன. ஏவன், கொற்றனே என ஏகாரம் முதலில் அகத்தும் ஈற்றிற் புறத்தும் வினாவாய் வந்தது.

ஈற்றிலே அகவினா வரமாட்டாது. ஈற்றில்வந்த வினாவெல்லாம் புறவினாவாயிருக்கும்; முதலிலே அகவினாவுமுண்டு புறவினாவுமுண்டு. ஏகாரம் முதலில் வரும்போது அகவினாவாமன்றிப் புறவினாவாகமாட்டாது.

இவ்வைந்தனுள் யா என்பது அஃறிணைப்பன்மைவினா. அது ஐம்பால் விகுதியுந் தனித்தனி பெற்று ஐம்பாற்கும் வருவதாம். உ - ம். யாவன், யாவள், யாவர், யாது, யாவை என வரும். "யாவென்வினாவேயஃறிணைப்பன்மை, விகுதிபெறுங்காலப்பாலினுமவ்வுவாம்" என்பது அகத்தியம். எனவே விகுதிபெறுமதலும் விகுதிபெற்றும் அஃறிணைப்பன்மைக்கு யா வினாவருமென்றவாறாயிற்று. (கஉ)

சூஅ. வல்லினங் கசடதபறவென வாறே.

இ - ள். க ச ட த ப ற என ஆறுவல்லினம் - க ச ட த ப ற என்று ஆறும் வல்லெழுத்தாம். எ - று. இவை வன்கணமெனவும், வலி எனவும், வன்மை எனவும் பெயர்பெறும். (கந)

சூகூ. மெல்லினம் ஙஞணநமனவென வாறே.

இ - ள். ங ஞ ண ந ம ன என ஆறு மெல்லினம் - ங ஞ ண ந ம ன என்று ஆறும் மெல்லெழுத்தாம். எ - று. இவை மென்கணமெனவும், மெலி எனவும், மென்மை எனவும் பெயர்பெறும். (கச)

Digitized By Roja Muthiah Research Library

**எ0. இடையினம் யரலவ ழளவென வாறே.**

இ - ள். யரலவழள என ஆறு இடையினம் - யரலவழள என்று ஆறும் இடையெழுத்தாம். எ - று. இவை இடைக்கணமெனவும், இடை எனவும், இடைமை எனவும் பெயர்பெறும். (கரு)

[இனவெழுத்து].

**எக. ஐ ஔ இ உச் செறிய முதலெழுத்**
**திவ்விரண் டோரின மாய்வரன் முறையே.**

இ - ள். ஐ ஔ இ உச் செறிய - (ஒத்தஇனமில்லாத) ஐகார ஔகாரங்கள் ஈகார ஊகாரங்களுக் கினமாகிய) இகர உகரங்களைத் தமக்கும் இனமாகப் பொருந்த,—முதலெழுத்து - முதலெழுத்துக்கள்,—முறை - முறையாக,—இவ்விரண்டு ஆய்வரல் - இவ்விரண்டாக வருதல்,—ஓரினம் — ஓரினவெழுத்துக்களாம். எ - று.

ஓரினம் எனினும், நெருங்கிய இனம் எனினும், ஸஜாதி எனினும், ஒத்த இனம் எனினும், நேரினமெனினும் பொருந்தும். சுருங்கச்சொல்லலென்னுமழகுபற்றி முதலெழுத்தெனப் பொதுப்படக் கூறினாரேனும், இவ்விரண்டோரினமாதல் இடையினம் ஒழிந்த மற்ற முதலெழுத்துகளுக்கே கொள்க.

உ - ம். அஆ; இஈ; உஊ; எஏ; இஐ; ஒஓ; உஔ; கங; சஞ; டண; தந; பம; றன எனவரும்.

வேறுமோருரை: ஐ ஔ இ உச்செறிய - (நேரினமில்லாத) ஐகார ஔகாரங்கள் (ஈகார ஊகாரங்களுக்கு நேரினமாகிய) இகரவுகரங்களைத் தமக்கும் இனமாகப் பொருந்த,—முதலெழுத்து - முதலெழுத்துக்கள்,—இவ்விரண்டு ஓரினமாய் வரல் - இவ்விரண்டு ஓரினமாகிவருதல்,—முறை - முறையாம்,—ஆதலின் அவை இனவெழுத்தெனப் பெயர்பெறும். எ - று.

எழுத்துக்களது பெயர் கூறும் பாகமாதலின் இங்கே முறையென்றது 'எண்பெயர்முறை' என்னுஞ் சூத்திரங் கூறிய வரிசையையன்று. அஃது பின் 'சிறப்பினுமினத்தினும்' என்னுஞ் சூத்திரத்தாற் கூறப்படும்.

வரன்முறையே இவ்விரண்டு ஓரினம் ஆய் - வரிசைப்படியே இவ்விரண்டு (அடுத்து) ஓரினமாம் என்று உணர்க என்று பொருளுரைப்பினும் பொருந்தும். இப்பொருளில் ஆய் என்று கூறியது இடையினங்கள் இவ்விரண்டோரினமாய் வருதலில்லை என்பதை ஆய்ந்துணர்தற்கென்று கொள்க.

[இனமென்றதற்குக் காரணம்.]

**எஉ. தான முயற்சி யளவு பொருள்வடி**
**வானவொன் றுதியோர் புடையொப் பினமே.**

இ - ள். தானம் - பிறப்பிடமும்,—முயற்சி - தொழிலும்,—அளவு - மாத்திரையும்,—பொருள் - பொருளும்,—வடிவு - உருவமும்,—ஆன ஒன்று

Digitized By Roja Muthiah Research Library

ஆதி - ஆகிய இவற்றுள் ஒன்றுமுதலாக,—ஓர் புடை ஒப்பு - ஒருபுடை ஒத்தலால்,—இனம் — இனமாம். எ - று.

முன் காரணம் விளங்காமற் கூறப்பட்ட இனமென்றதை இங்கே காரணங்காட்டி முடிவுசெய்தலால், இச்சூத்திரம் ஏதுவின் முடித்தல் என்னும் உத்தி.

ஆய்தம் தனிநிலை யாதலாலும், மற்றைச் சார்பெழுத்துகளுக்கு அவ்வவற்றின் முதலெழுத்துக்களின் பெயர்களே சார்ந்து பெயர்களா யடங்குதலாலும் சார்பெழுத்துகளுக்குப் பெயர் கூறாதுவிட்டார்.

வரலாறு:—உயிருமெய்யுங் கலப்புற்ற எழுத்துக்களுக்கு உயிர்மெய் என்றுபெயர். ஆய்தம் தனிநிலை. உயிரளபெடை; ஒற்றளபெடை; குற்றியலிகரம்; குற்றியலுகரம்; ஐகாரக்குறுக்கம்; ஔகாரக்குறுக்கம்; மகரக்குறுக்கம்; ஆய்தக்குறுக்கம் என்று பெயராம். அளபெடை என்பதனோடு உயிரென்னு முதலெழுத்தின் பெயர் சார்ந்து உயிரளபெடையென்றுனது காண்க. மற்றவற்றின் பெயர்களையும் பகுத்துக் கூட்டியுணர்க. ஆய்தக்குறுக்கம் சார்பிற் சார்பாதலின் அதற்கு முதலாயிருப்பது முற்றாய்தமென்றுணர்க. (௧௭)

**பரீக்ஷை** வினாக்கள்:—68, எ. பெயர் எத்தனைவகைப்படும்? 69. இடுகுறிப்பெயரின் இலக்கணம் என்னை? 70. காரணப்பெயராவதியாது? 71. காரண விடுகுறிப் பெயராவதியாது? 72. இடுகுறிப்பெயரும் காரணப்பெயரும் தனித்தனி எத்தனைவகைப்படும்? 73. தெங்கு, பலா, புன்னை, மரம், காற்று, மாதம் என்னுமிவைகளிற் பொதுப்பெயர் எவை சிறப்புப்பெயர் எவை? 74. பங்கயம், சரோருகம், வாரிசம், அம்புயம், கஞ்சம், வனசம், சலசம் என்பவை இடுகுறி, காரணம், காரண விடுகுறி என்னு முப்பகுப்பினுள் எப்பகுப்பிலடங்கும்? 75. இடுகுறிப்பொதுப்பெயராவதியாது? 76. இடுகுறிச் சிறப்புப்பெயராவதியாது? 77. காரணப்பொதுப்பெயராவதியாது? 78. காரணச்சிறப்புப் பெயராவதியாது? 79. உயிர், மெய், உயிர்மெய், குறில், நெடில், ஆய்தம், தனிநிலை என்பன அந்நால்வகைப்பெயருள் எப்பெயரெனப்படும்? 80. சுட்டெழுத்தெவை? 81. அகச்சுட்டாவதியாது? 82. புறச்சுட்டாவதியாது? 83. அவ்வீடு, அது; இப்புத்தகம், இவர்; உப்புறம், உவை என்பவற்றில் அகச்சுட்டுகள் எவை புறச்சுட்டுகள் எவை? 84. அகவினாவாவதியாது? 85. புறவினாவாவதியாது? 86. ஈற்றில் வரும் வினாக்களில் அகவினாவுமுண்டோ? 87. ஏகாரம் மொழிமுதற்கண் அகவினாவாகி நிற்குமோ புறவினாவாகிநிற்குமோ? 88. ஆகாரம் அகவினாவாய் வருமோ புறவினாவாய்வருமோ? 89. எவர், எவ்வழி; யாவை, யாங்ஙனம்; அரசனோ, நீயே என்பவற்றில் அகவினா எவை புறவினா எவை? 90. மொழிக்கு முதலும் மொழிக்கிறுதியும்ஆகிய ஈரிடத்தும் வரும்வினாவெழுத்தெது? 91 கூ. மெய்யெழுத்து எத்தனைவகைப்படும்? 92. சரு. இடையெழுத்தெவை?



Digitized By Roja Muthiah Research Library

93. சுசு. முதலெழுத்துக்களுள் ஒன்றற்கொன்று இனமாவன உளவோ? 94. இவ்விரண்டோரினமாகாத எழுத்துக்கள் எவை?

## ங. முறை.

எங. சிறப்பினு மினத்தினுஞ் செறிந்தீண் டம்முதல்
நடத்த றானே முறையா கும்மே.

இ - ள். சிறப்பினும் இனத்தினும் செறிந்து - சிறப்பினாலும் இனத்தினாலும் பொருந்தி,—ஈண்டு - இவ்வுலகத்தில்,—அ முதல் நடத்தல் தானே - அகரமுதலாக வழங்குதலே,—முறை ஆகும் - எழுத்துக்களது முறையாம்.

எழுத்துக்களின் முறை:—அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ ஔ ஃ க ங ச ஞ ட ண த ந ப ம ய ர ல வ ழ ள ற ன. இந்நெடுங்கணக்கு வரிசையே முறையாம்.

தனித்தியங்கும் ஆற்றல் உடைய உயிரெழுத்துக்கள் அவ்வாற்றலில்லாத மெய்யெழுத்துக்களுக்கு முன் நிற்றலும், குறிலின்து விகாரமே நெடிலாதலாற் குற்றெழுத்துக்கள் நெட்டெழுத்துக்களுக்கு முன் நிற்றலும், வலியவர் மெலியவருக்கு முன் நிற்றல்போல வல்லெழுத்துக்கள் மெல்லெழுத்துக்களுக்கு முன் நிற்றலுஞ் சிறப்பினால் எனவும்; குற்றெழுத்துக்களுக்குப்பின் அவ்வவற்றிற்கு இனமொத்த நெட்டெழுத்துக்கள் நிற்றலும், வல்லெழுத்துக்களுக்குப்பின் அவ்வவற்றிற்கு இனமொத்த மெல்லெழுத்துக்கள் நிற்றலும் இனத்தினால் எனவுங் கொள்க. வலி மெலிகளை உணர்ந்தாலல்லது இடைமை உணரலாகாமையால் அச்சிறப்பின்மைபற்றி இடையெழுத்தாறும் அவற்றின்பின் வைக்கப்பட்டன. "னஃகானொற்றே பாடேவறிசொல்" என்பது தொல்காப்பியமாதலின் னகரம் வீடுபேற்றிற்குரிய மக்கட்பிறப்பிற் சிறந்த ஆட்வினை யுணர்த்துதலால் அச்சிறப்பு நோக்கி இறுதியிலும், அதனினமாகிய றகரம் வல்லெழுத்தாதலால் அதன்முன்னும் வைக்கப்பட்டன. வைத்தமுறைக்காரணம் உயிர்களாலே முற்றுமுணரலாகாமையால் நடத்தறானே யென்றுங் கூறினார். ஆற்றல் - வல்லமை. (சஅ)

**பரீக்ஷை** வினாக்கள்:—95. இகரத்தின்பின் ஈகாரம் நிற்றல் சிறப்புப்பற்றியோ இனம்பற்றியோ? 96. சகரத்தின்பின் ஞகரம் நிற்றல் எதுபற்றி? 97. ஙகரத்தின்முன் ககரம் நிற்றல் எதுபற்றி?

## ச. பிறப்பு.

[பிறப்பின் பொதுவிதி.]

எச. நிறையுயிர் முயற்சியி னுள்வளி துரப்ப
எழுமணுத் திரளுரங் கண்ட முச்சி

Digitized By Roja Muthiah Research Library

மூக்குற் றிதழ்நாப் பல்லணத் தொழிலின்
வெவ்வே றெழுத்தொலி யாய்வரல் பிறப்பே.

இ - ள். நிறை உயிர் முயற்சியின் - (ஒலியெழுத்தாகிய காரியத்திற்கு வேண்டுங்காரணங்களிற் குறைவின்றி) நிறைந்த உயிரினது முயற்சியால்,—உள் வளி துரப்ப எழும் அணுத்திரள் - உள்ளேநின்ற (உதானன் என்னுங்) காற்றானது எழுப்ப எழுகின்ற செவிப்புலனும் நாதமானது,—உரம் கண்டம் உச்சி மூக்கு உற்று - மார்புங் கழுத்துந் தலையும் நாசியுமாகிய நான்கிடத்தையும் பொருந்தி,—இதழ் நாப் பல் அண்ணத் தொழிலின் - உதடும் நாக்கும் பல்லும் மேல்வாயுமாகிய நான்கன் முயற்சிகளால்,—வெவ்வேறு எழுத்து ஒலியாய் வரல் - வேறு வேறு எழுத்தோசைகளாய்த் தோன்றுதல்,—பிறப்பு - அவற்றின் பிறப்பாம். எ - று.

எழுத்துக்கள் பிறக்கும்முயற்சி அகமுயற்சி எனவும் புறமுயற்சி எனவும் இருவகைப்படும். உரம், கண்டம், உச்சி, மூக்கு என்னு நான்கும் அகமுயற்சிக்குரியன. இதழ், நா, பல், அண்ணம் என்னும் நான்கும் புறமுயற்சிக்குரியன. அகம் எனினும் உள் எனினும் ஒக்கும். புறம் எனினும் வெளி எனினும் ஒக்கும். முயற்சி எனினும் யத்தனம் எனினும் ஒக்கும். (சக)

[முதலெழுத்துகளுக்கு இடப்பிறப்பு]

எரு. அவ்வழி,—
ஆவி யிடைமை யிடமிட றாகும்
மேவு மென்மைமூக் குரம்பெறும் வன்மை.

இ - ள். அவ் வழி - முன்சொன்ன வழியாற் பிறக்கும்போது,—ஆவி இடைமை இடம் - உயிரெழுத்துக்களுக்கும் இடையினவெழுத்துக்களுக்கும் இடம்,—மிடறு ஆகும் - கழுத்தாகும்,—மென்மை மூக்கு மேவும் - மெல்லினவெழுத்து நாசியை இடமாகப்பொருந்தும்,—வன்மை உரம் பெறும் - வல்லினவெழுத்து மார்பை இடமாகப் பொருந்தும். எ - று.

வல்லெழுத்தாறுந் தலையை யிடமாகக்கொண்டு பிறக்குமென்றார் இலக்கணவிளக்கநூலுடையார். ககாரம் மிடற்றிடம் பிறக்குமென்று வடமொழி வியாகரணங் கூறுகின்றது. பிறப்பிலக்கணம் இன்னும் தமிழிலக்கணநூல் கூறியதுபோலன்றிப் பெரும்பாலும் வேறுபடவும், சிறுபான்மை ஒற்றுமைப்படவும் வடமொழி வியாகரணங் கூறுகின்றது. (உ0)

[முதலெழுத்துக்களுக்கு முயற்சிப்பிறப்பு.]

எசு. அவற்றுள்,—
முயற்சியுள் அஆ வங்காப் புடைய.

Digitized By Roja Muthiah Research Library

இ - ள். அவற்றுள் - மேல் இடம் வகுக்கப்பட்ட முதலெழுத்துக்களுள்,—அ ஆ - அ ஆ இரண்டும்,—முயற்சியுள் அங்காப்பு உடைய - (இதழ், நா, பல், அண்ணம் என்னும் நான்குறுப்பின்) முயற்சிகளுள் அண்ணத்தின் செழுமியாகிய அங்காந்தலை யுடையனவாய்ப் பிறக்கும். எ - று.

அங்காப்பு எனினும் அங்காத்தல் எனினும் வாய்திறத்தல் எனினும் ஒக்கும். (௭௧)

௭௭. இ ஈ எ ஏ ஐயங் காப்போ
டண்பல் முதனா விளிம்புற வருமே.

இ - ள். இ ஈ எ ஏ ஐ - இ ஈ எ ஏ ஐ ஐந்தும்,—அங்காப்போடு - அங்காப்புடனே,—அண் பல் நாமுதல் விளிம்பு உற - மேல்வாய்ப்பல்லை நாக்கடியினது ஓரங்கள் பொருந்த,—வரும் - பிறக்கும். எ - று. (௭௨)

௭௮. உ ஊ ஒ ஓ ஔ இதழ் குவிவே.

இ - ள். உ ஊ ஒ ஓ ஔ - உ ஊ ஒ ஓ ஔ ஐந்தும் பிறத்தற்கேதுவான் முயற்சி,—இதழ் குவிவு - உதடுகள் குவிதலாம். எ - று. (௭௩)

௭௯. கஙவுஞ் சஞவும் டணவு முதலிடை
நுனிநா வண்ண முறமுறை வருமே.

இ - ள். க ங (நா) முதல் அண்ணமுதல் (உற) - ககரமும் ஙகரமும் நாக்கினடி மேல்வாயடியைப் பொருந்தவும்,—ச ஞ (நா) இடை அண்ண இடை (உற) - சகரமும் ஞகரமும் நாக்கினடு மேல்வாய் நடுவைப் பொருந்தவும்,—ட ண நா நுனி அண்ண நுனி உற - டகரமும் ணகரமும் நாக்கின் நுனி மேல்வாய்நுனியைப் பொருந்தவும்,—வரும் - பிறக்கும். எ - று.

நிரனிறையைப் பிரித்துக் கூட்டினமையால் முறை என்பது பொருள் கூறுதவிடப்பட்டது. க ங முதல் நா முதல் அண்ணம் உற வரும்; ச ஞ இடைநா இடையண்ணம் உற வரும்; ட ண நுனி நா நுனி அண்ணம் உற வரும் என்றுவிளக்குதற்கே முறை என்பது நின்றது. (௭௪)

௮௦. அண்பல் லடிநா முடியுறத் தநவரும்.

இ - ள். அண்பல் அடி - மேல்வாய்ப்பல்லினது அடியை - நாமுடி உற - நாக்குநுனி பொருந்த,—த ந வரும் - தகரமும் நகரமும் பிறக்கும். எ - று.

௮௧. மீகீ ழிதழுறப் பம்மப் பிறக்கும்.

இ - ள். மீ (இதழ்) கீழ்இதழ் உற - மேலுதடுங் கீழுதடும் பொருந்த,—ப ம பிறக்கும் - பகரமும் மகரமும் பிறக்கும். எ - று. (௭௬)

௮௨. அடிநா வடியண முறயத் தோன்றும்.

இ - ள். நாஅடி அண்ணஅடி உற - நாக்கினடி மேல்வாயடியைப்பொருந்த,—ய தோன்றும் - யகரமானது பிறக்கும். எ - று. (௨௭)

௮௩. அண்ண நுனிநா வருட ரழ வரும்.

இ - ள். அண்ணநுனி - மேல்வாய்நுனியை,—நுனி நாவருட - நாக்குநுனிதடவ,—ர ழ வரும் - ரகாரமும் ழகாரமும் பிறக்கும். எ - று.

நுனி என்பது காகாக்ஷீ கோளக நியாயத்தால் முன்மொழியொடு சேர்ந்தும் பின்மொழியொடு சேர்ந்தும் பொருள்பட்டவாறறிக. காகாக்ஷீகோளகநியாயமாவது:—காகப்பக்ஷியினது இருகண்களுக்கும் ஒருமணியே சேர்த்து சேர்ந்து ஒளிகொடுப்பதுபோல் வாய்ந்தவிதம்.

காக+அக்ஷீ+கோளகம் என்பது பகுப்பு. கோளகம் - திரண்டகருமணிவிழி. அப்பறவையின் காட்சி யியல்பு அவ்வாறுமென்பதை "காகத்திருகண்ணுக்கொன்றேமணிகலந்தாங்கிருவர், ஆகத்துளோருயிர்கண்டனம்யாமின்றியாவையுமாம், ஏகத்தொருவனிரும்பொழிலம்பலவன்மலையிற், றோகைக்குந்தோன்றற்குமொன்றாய்வருமின்பதுன்பங்களே" என்று திருச்சிற்றம்பலக்கோவையிற் கூறப்பட்டதறிக. (௨௮)

௮௪. அண்பன் முதலு மண்ணமு முறையினா
விளிம்பு வீங்கி யொற்றவும் வருடவும்
லகார ளகாரமா யிரண்டும் பிறக்கும்.

இ - ள். அண்பல் முதல் நா விளிம்பு வீங்கி ஒற்ற லகாரம் (ஆய்)- மேல்வாய்ப்பல்லடியை நாவோரமானது தடித்துநெருங்க லகாரமாகியும்,— அண்ணம் (நா விளிம்பு) வீங்கி வருட ளகாரம் ஆய் - மேல்வாயை நாவோரமானது தடித்துத் தடவ ளகாரமாகியும்,—இரண்டும் - இரண்டெழுத்துகளும்,—பிறக்கும் - தோன்றும். எ - று.

நிரனிறைப்பொருள் பயந்துநின்ற இச்சூத்திரத்தை வேறுவேறாகப்பகுத்து அப்பொருளுரைத்தமையால் நிரனிறை யென்பதைக் விளங்கியமுறை என்பதற்குப் பொருள் வேறாகக் கூறவில்லை; நான்கு உம்மைகள் விடப்பட்டன. (௨௯)

௮௫. மேற்பல் லிதழுற மேவிடும் வவ்வே.

இ - ள். மேற்பல் இதழ் உற - மேல்வாய்ப்பல்லைக் கீழுதடு பொருந்த,—வ மேவிடும் - வகாரமானது பிறக்கும்.

"வகாரஸ்யதந்தோஷ்டம்" என்று வடமொழி வியாகரணங் கூறுதலுங் காண்க. (௩௦)

௮௬. அண்ண நுனிநா நனியுறிற் றனவரும்.

Digitized By Roja Muthiah Research Library

இ-ள். அண்ணம் நாநுனி நனி உறின் - மேல்வாயை நாக்குநுனி மிகப்பொருந்தின்,—ற ன வரும் - றவ்வும் னவ்வும் பிறக்கும். எ-று. ()

[சார்பெழுத்துக்கு இடமுயற்சி.]

௮௭. ஆய்தக் கிடந்தலை யங்கா முயற்சி
சார்பெழுத் தேனவுந் தம்முத லனைய.

இ-ள். ஆய்தக்கு இடம் தலை முயற்சி அங்கா - ஆய்தம் பிறத்தற்கு இடந் தலை முயற்சி வாயைத்திறத்தலாம்,—சார்பெழுத்து ஏனவும் - ஆய்த மொழிந்த மற்றைச் சார்பெழுத்துக்களும்,—தம் முதல் அனைய - (பிறப்பிடம் பிறப்புமுயற்சிகளினாலே) தத்தம் முதலெழுத்துக்களை ஒப்பனவாம். எ-று.

சார்பிற் சார்பாகிய ஆய்தக்குறுக்கத்திற்கு முதலெழுத்துக் குறுகாத ஆய்தமாதலால், ஆய்தக்குறுக்கம் முற்றாய்தம்போலவே தலையிடத்தில் அங்காத்தல் முயற்சியாற் பிறக்குமென்றுகொள்க. மற்றச்சார்பெழுத்துக்களுந் தத்தம் முதலெழுத்துக்கள்போற் பிறத்தலை வகுத்தறிக. ஆய்தத்திற்குப் பிறப்பிடம் நெஞ்சென்று இலக்கணவிளக்கம் "ஆய்தநெஞ் சோசையி னங்காந் தியலும்" என்னுஞ் சூத்திரத்தாற் கூறுதல்காண்க. (௩௨)

[பிறப்புக்குப்புறனடை.]

௮௮. எடுத்தல் படுத்த னலித லுழப்பிற்
றிரிபுந் தத்தமிற் சிறிதுள வாகும்.

இ-ள். எடுத்தல் - உயர்த்திக்கூறுதலும்,—படுத்தல் - தாழ்த்திக்கூறுதலும்,—நலிதல் - இவ்விரண்டற்கும் சமம்பெறக் கூறுதலும் ஆகிய,—உழப்பின் - எழுத்திற்குரிய மூவகை ஒலிமுயற்சிகளாலே,—திரிபும் - பிறப்புவேறுபாடுகளும்,—தத்தமில் - (பலவெழுத்துக்களைக் கூட்டிப் பிறப்பொன்றாகச் சொல்லப்பட்ட) அவ்வவற்றுள்ளே,—சிறிது உள ஆகும் - சிறிதுசிறிதுண்டாம். எ-று.

சிறிது சிறிது என்னும் அடுக்குச் சிறிதெனவந்தமை காண்க.

எடுத்தல், படுத்தல், நலிதல் என்னு மூன்றனையும் வடநூலார் முறையே உதாத்த, அநுதாத்த, சுவரிதமென்று கூறுவர். அவற்றினிலக்கணங்களையும் "உச்சைருதாத்த:" "நீசைரநுதாத்த:" "சமாகாரஸ்வரித:" என அவர் கூறியவாற்றானறிக. (௩௩)

[உயிர்மெய்.]

௮௯. புள்ளிவிட் டவ்வொடு முன்னுரு வாகியும்
ஏனை யுயிரோ டுருவு திரிந்தும்
உயிரள வாயதன் வடிவொழித் திருவயிற்
பெயரொடு மொற்றுமுன் னாய்வரு முயிர்மெய்.

Digitized By Roja Muthiah Research Library

இ - ள். புள்ளி விட்டு - மெய் புள்ளியை விட்டு,—அவ்வொடு முன் உரு ஆகியும் - அகரவுயிரோடு கூடியபோது அவ் விட்டவுருவே யுருவாகியும்,—ஏனை உயிரோடு உருவு திரிந்தும் - அஃதொழிந்த வுயிர்களோடு கூடியபோது உருவு வேறுபட்டும்,—உயிர் அளவு ஆய் - தன் மாத்திரையோன்றாது உயிர்மாத்திரையே மாத்திரையாய்,—அதன் வடிவு ஒழித்து - தன்வரிவடிவின் விகாரவடிவே வடிவாய் உயிர் வடிவை யொழித்து,—இருவயின் பெயரொடும் - உயிரும் மெய்யுமாகிய இரண்டிடத்தும் பிறந்த உயிர்மெய் யென்னும் பெயருடனே,—ஒற்று முன் ஆய் - ஒற்றொலி முன்னும் உயிரொலி பின்னுமாகி,—உயிர் மெய் வரும் - உயிர்மெய்யெழுத்து வரும். எ - று.

இதனுள், புள்ளிவிடுதற்கும் முன்னுருவாதற்கும் திரிதற்கும் வினைமுதல் ஒற்றெனவும், உயிரளவாதற்கும் வடிவொழித்தற்கும் இருவயிற்பெயரொடு வருதற்கும் வினைமுதல் உயிர்மெய்யெனவுங்கொள்க.

மெய்பதினெட்டில் ஒவ்வொரு மெய்யும் பன்னிரண்டுயிரொடுந் தனித்தனிகூடப் பன்னிரு பதினெட்டாய் உயிர்மெய் இருநூற்றுப்பதினாறாதல் காண்க.

வரலாறு:—க்அ=க, க்ஆ=கா, க்இ=கி, க்ஈ=கீ, க்உ=கு, க்ஊ=கூ, க்எ=கெ, க்ஏ=கே, க்ஐ=கை, க்ஒ=கொ, க்ஓ=கோ, க்ஔ=கௌ என்று ககர மெய் ஒன்று பன்னிரண்டுயிரொடுந் தனித்தனி கூடுதலாற் பன்னிரண்டுயிர்மெய் உண்டாயின. இவை கவர்க்கமெனப்படும். மற்றமெய்களையும் இவ்வாறே பன்னிரண்டுயிரொடுந் தனித்தனிகூட்டி உயிர்மெய்த்தொகைமுழுவது மறிக. இவ்வுயிர்மெய்கள் கவர்க்கம், ஙவர்க்கம், சவர்க்கம், ஞவர்க்கம், டவர்க்கம், ணவர்க்கம், தவர்க்கம், நவர்க்கம், பவர்க்கம், மவர்க்கம், யவர்க்கம், ரவர்க்கம், லவர்க்கம், வவர்க்கம், ழவர்க்கம், ளவர்க்கம், றவர்க்கம், னவர்க்கம் என்று பதினெட்டு வருக்கமாய் நிற்கும். ஒவ்வொருவருக்கத்திலும் பன்னிரண்டுயிர்மெய் யிருத்தலறிக.

ஒவ்வொரு வருக்கத்திலும குற்றுயிர்மெய் ஐந்தும், நெட்டுயிர்மெய் ஏழுமாக அமைந்து பதினெட்டுவருக்கத்திலும் உயிர்மெய்க்குற்றெழுத்துத் தொண்ணூறும், உயிர்மெய்நெட்டெழுத்து நூற்றிருபத்தாறுமாய்வந்த அவ்விருநூற்றுப்பதினாறுங் காண்க.

இருநூற்றுப்பதினாறு உயிர்மெய்யுள்ளும் வல்லின வுயிர்மெய் எழுபத்திரண்டும், மெல்லின வுயிர்மெய் எழுபத்திரண்டும், இடையின வுயிர்மெய் எழுபத்திரண்டுமாக முப்பகுப்பிருத்தலும் அறிக.

உயிர்மெய்க்குற்றெழுத்து ஒவ்வொன்றும் ஒருமாத்திரையும், உயிர்மெய் நெட்டெழுத்து ஒவ்வொன்றும் இரண்டுமாத்திரையும் ஒலிக்குமென்று தெளிக. உயிர்மெய்க்குறிலுக்கு ஒருமாத்திரையும், உயிர்மெய்நெடிலுக்கு இருமாத்திரையுமாம் என்னுங்கருத்தைச் சுருங்கச்சொல்லல் என்னும் அழகுபற்றி ஆசிரியர் 'உயிரளவாய்' என்பதனால் விளக்கினார். இதனை யறியாதார் பலர்

Digitized By Roja Muthiah Research Library

'உயிரளவாய்' என்றதனால் உயிர்மெய்யில் மெய்யினுடையமாத்திரை சிறிதும் ஒலித்தலின்றி உயிரினுடையமாத்திரை முழுவதும் ஒலிக்குமென்று விபரீதமாக விளங்குகின்றனர். மெய்யினது மாத்திரை ஒலிக்காது உயிரினது மாத்திரையே ஒலிக்குமாயின்; க, கா முதலான உயிர்மெய்களுக்கும், அ, ஆ முதலான உயிர்களுக்கும் ஒலியிலே பேதமில்லாதிருத்தல்வேண்டும்: அவை பேதமாகவே யுச்சரிக்கப்படுதலைச் சுரோத்திரேந்திரியப் பிரத்தியக்ஷத்தாற் றெளியலாம். தெளிந்து அந்த விபரீதவிளக்கத்தை மாற்றிவிடுக. இவ்விபரீதவிளக்கம் அறியலுறுவோரும் அறிவிப்போருமாகிய மாணுக்கர் உபாத்தியாயர் என்போரிற் பலரிடத்தன்றி நூலாசிரியரிடத்துச் சிறிதாயினுமில்லையென்பது 'ஒற்றுமுன்னாய்வருமுயிர்மெய்' என்று வரகோட்டிசியாபத்தாற் கூறியதினாலுமுணரப்படும். (இதில் ஒற்று முன்னாய் எனவே உயிர் பின்னாய் என்பது உணரப்படும்.) இதனையு நோக்காது, 'நின்றநெறியே யுயிர்மெய்ம்முதலீறே' என்பதையுநோக்காது, 'பன்னீருயிருங் க ச த ந ப ம வ ய, ஞ ங வீரைந்துயிர் மெய்யுமொழிமுதல்' என்பதனையு நோக்காது, 'உ ஊ ஒ ஓ வல்வொடு வம்முதல்' 'அ ஆ உ ஊ ஓ ஔ யம்முதல்' என்பவைமுதலியசூத்திரங்களையு நோக்காது தம மனஞ்சென்றவாறே விபரீதவிளக்கங்கொள்கின்றோர் எங்ஙனம் வியக்கப்படுவர்! ஆயின், ஒற்று உயிரென்னு மிரண்டினுடையமாத்திரையு மொலிக்கப்பெறுமாயின், உயிர்மெய்க் குற்றெழுத்திற்கு ஒன்றரைமாத்திரை யென்றும், உயிர்மெய் நெட்டெழுத்திற்கு இரண்டரைமாத்திரையென்றுங் கூறாமல்; ஒருமாத்திரையும் இருமாத்திரையுங் கூறியதென்னையெனின்; கலப்புற்ற மெய்யினுடையமாத்திரையி லொருகூறும் உயிரினுடையமாத்திரையி லொருகூறுமாக அரைமாத்திரைஒடுங்கியதினாலென்றறிக. இங்ஙனமன்றி மெய்யினதுமாத்திரை முழுவதுங்கெட்டு உயிரினதுமாத்திரை முழுவதுமொலிக்குமென்றுகொள்வது அசம்பாவிதமாம். (௩௯)

[முற்றாய்தம்.]

௩௦. குறியதன் முன்ன ராய்தப் புள்ளி
உயிரொடு புணர்ந்தவல் லாறன் மிசைத்தே.

இ-ள். ஆய்தப்புள்ளி - புள்ளிவடிவினதாகிய ஆய்தம்,—குறியதன் முன்னர் - குற்றெழுத்தின்முன்னதாய்,—உயிரொடு புணர்ந்த வல்லாறன்மிசைத்து - உயிரொடுகூடிய வல்லெழுத் தாறனுள் ஒன்றன்மேலதாய்வரும்.

உ-ம். எஃகு, கஃசு, இருபஃது, பஃறி, வெஃகாமை எனவரும். இச்சூத்திரம் அகத்தியத்திலுளதாய் மேற்கோளாதலின் தானெடுத்து மொழிதலென்னு முத்தி. வல்லினவகையால் இயல்பாகவரும் ஆய்தம் ஆறு; அவ் + கடிய=அஃகடிய என ஓரெழுத்து மற்றோரெழுத்தாகத் திரிதலாகிய புணர்ச்சிவிகாரத்தால் வரும் ஆய்தம் ஒன்று; மஃகான் என விரித்தலாகிய செய்யுள் விகாரத்தால் வரும் ஆய்தம் ஒன்று ஆகவே முற்றாய்தம் எட்டாதல் காண்க. (௩௫)

Digitized By Roja Muthiah Research Library

[உயிரளபெடை.]

கூக. இசைகெடின் மொழிமுத லிடைகடை நிலைநெடில்
அளபெழு மவற்றவற் றினக்குறில் குறியே.

இ - ள். இசைகெடின் - பாட்டில் ஓசை குறையின்,—மொழி முதல் இடை கடை நிலை நெடில் - மொழிக்குமுதலிலும் நடுவிலும் இறுதியிலும் நின்ற நெட்டெழுத்தேழும்,—அளபு எழும் - அவ்வோசையைநிறைக்கத் தம் மாத்திரையின் மிக்கொலிக்கும்,—அவற்று அவற்று இனக்குறில் - அப்படி அளபெடுத் தமையை அறிதற்கு அவற்றின் பின் அதற்கு அதற்கு இனமாகிய குற்றெழுத்துக்கள்,—குறி - வரிவடிவில் அறிகுறியாய் வரும். எ - று.

உ - ம். "ஓஒதல் வேண்டு மொளிமாழ்குஞ் செய்வினை, ஆஅது மென்னுமவர்" எ - ம் "உரூஉக் குறுநோ யுரைப்பாய் கடலைச், செறாஅய் வாழிய நெஞ்சு" எ - ம், "அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தாளுசுப்பிற்கு, நல்ல படாஅ பறை" எ - ம் வரும். இவற்றுள் ஓதல் என்பதில் ஓ என்னு நெட்டெழுத்து மொழிக்கு முதலிலும், உரூக்கு என்பதில் ஆ என்னு நெட்டெழுத்து இடையிலும், படா என்பதில் ஆ என்னு நெட்டெழுத்துக் கடையிலும் அளபெடுத்தமை காண்க. செறாய் என்பதில் ஆ வென்னு நெட்டெழுத்து ஈறளபெடுத்து நின்றது.

செய்யுளோசை குன்றுதவிடத்தும் இன்னிசை நிறைக்கவுஞ் சொல்லிசை நிறைக்கவும் வரும் அளபெடைகளும் உண்டு. இன்னிசைநிறைக்கவரும் அளபெடையாவது குற்றெழுத்து நெட்டெழுத்தாக நீண்டு இன்னிசை நிறைத்தற்பொருட்டு அளபெடுப்பது. உ - ம். "கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே, எடுப்பதூஉ மெல்லா மழை" இதனுள் கெடுப்பதும் எடுப்பதுமென நிற்பினும் வெண்பாவுக்குரிய செப்பலோசை குன்றாதாகவும் இன்னிசைநிறைத்தற்பொருட்டுக் குறில் நெடிலாகி அளபெடுத்தமை காண்க. செப்பலோசையாவது வெண்டளையால் வருமோசை. இது யாப்பிலக்கணத்தில் விரித்துணர்த்தப்படும். சொல்லிசை நிறைக்கவரும் அளபெடையாவது பெயர்ச்சொல் வினையெச்சச்சொல்லாய் நிறைதற்பொருட்டு அளபெடுத்து நிற்பது. உ - ம். "உரனசைஇ யுள்ளந் துணையாகச் சென்றார், வரனசைஇ யின்னு முளேன்." நசை என்பது ஆசை. ஆசைப்பட்டு என வினையெச்சம் நிறைதற்பொருட்டு நசைஇ என அளபெடுத்தது. நசைஇ என்பதற்கு ஆசைப்பட்டு என்பது பொருள். குரீஇ, ஆடூஉ, மகடூஉ, குழூஉ, அல்லதூஉம் என்பன செய்யுளிற் புகமுன்பும் சொல்வடிவாகவே யிருந்து அளபெடுத்தமையால் இவையியற்கையளபெடையெனப்படும்.

ஒளகாரமல்லாத நெட்டெழுத்தாறும் மொழிக்கு முதல் இடை ஈறு என்னுமூன்றிடத்தும் அளபெடுத்தலால் வரும் அளபெடை பதினெட்டும், ஒளகாரம் மொழிக்கு (இடையிலு மீற்றிலு மளபெடுக்க வாராமல்) மு

அ

Digitized By Roja Muthiah Research Library

தலில் மாத்திரம் வந்தளபெடுத்தது ஒன்றும், இன்னிசை நிறைக்கவரும் அளபெடை சொல்லிசைநிறைக்கவரும் அளபெடை என்னுமிரண்டுங்கூடி உயிரளபெடை இருபத்தொன்றாதல் காண்க. (௯௧)

[ஒற்றளபெடை]

௯௨. ஙஞண நமன வயலள வாய்தம்
அளபாங் குறிலிணை குறிற்கீ ழிடைகடை
மிகலே யவற்றின் குறியாம் வேறே.

இ - ள். (இசைகெடின் - பாட்டில் ஓசை குறையின்),—குறிலிணை (கீழ்) (இடைகடை) - குறிலிணைக்கீழிடையிலும் குறிலிணைக்கீழ்க்கடையிலும்,—குறிற்கீழ் இடை கடை - குறிற்கீழிடையிலும் குறிற்கீழ்க்கடையிலும் நின்ற,—ங ஞ ண ந ம ன வ ய ல ள ஆய்தம் - ஙம்முதலிய இப்பத்தும் ஆய்தமுமாகிய பதினோரெழுத்தும்,—அளபு மிகல் ஆம் - (அவ்வோசையை நிறைக்கத்) தம்மாத்திரையின் மிக்கொலிக்கும்,—அவற்றின் வேறு குறியாம் - அப்படியளபெடுத்தமையை அறிதற்கு அவற்றின்பின் அவ்வவ்வெழுத்துக்களே வரிவடிவில் வேறறிகுறியாய் வரும். எ - று.

முற்சூத்திரத்தில் இசைகெடின் என்றது இதற்குங் கூட்டப்பட்டது. குறி எனினும், அறிகுறி எனினும், அடையாளம் எனினும் ஒக்கும். குறிலிணை என முன்விதந்தமையாற் பின் குறிலென்றது இணையாத தனிக்குறிலை.

உ - ம். "இலங்ங்கு வெண்பிறைசூ டீசனடி யார்க்குக், கலங்ங்கு நெஞ்சமிலை காண்" எ - ம், "மடங்ங் கலந்த மனனே களத்து, விடங்ங் கலந்தானை வேண்டு" எ - ம், "எங்ங் கிறைவனுள னென்பாய் மனனேயா, னெங்ங் கெனத்திரிவா ரின்" எ - ம், "அங்ங் கனிந்த வருளிடத்தார்க் கன்புசெய்து, நங்ங் களங்கறுப்பா நாம்" எ - ம் வரும். இவற்றுள், இலங்கு கலங்கு என்னுஞ் சொற்களிற் குறிலிணைக்கீழிடையிலும்; மடம், விடம் என்னுஞ் சொற்களிற் குறிலிணைக்கீழ்க்கடையிலும்; எங்கு என்னுஞ் சொல்லிற் குறிற்கீழிடையிலும்; அம், நம் என்னுஞ்சொற்களிற் குறிற்கீழ்க் கடையிலும் ஙகரவொற் றளபெடுத்தது.

"விலஃஃகி வீங்கிரு ளோட்டுமே மாத, ரிலஃஃகு முத்தி னினம்" எ - ம், "எஃஃகி லங்கிய கையரா யின்னுயிர், வெஃஃகு வார்க்கில்லை வீடு" எ - ம் வரும். இவற்றுள், விலஃகி, இலஃகு என்னுஞ் சொற்களிற் குறிலிணைக்கீழிடையிலும், எஃகு, வெஃகு என்னுஞ் சொற்களிற் குறிற்கீழிடையிலும் ஆய்தம் அளபெடுத்தது. காட்டாதனவற்றிற்கு உதாரணம் வந்தவிடத்துக் கண்டுகொள்க.

ங் ஞ் ண் ந் ம் ன் வ் ய் ல் ள் என்னும் பத்துமெய்களும் குறிலிணைக்கீழிடை குறிலிணைக்கீழ்க்கடை, குறிற்கீழிடை குறிற்கீழ்க்கடை என்னும் நான்கிடத்தும் அளபெடுத்தலால் வருமளபெடை நாற்பதும், ஆய்தம் ஈற்றில் வராமற் குறிலிணைக்கீழிடையிலும், குறிற்கீழிடையிலும் அளபெடு

Digitized By Roja Muthiah Research Library

த்தலால் வருமளபெடை இரண்டுங்கூடி ஒற்றளபெடை நாற்பத்திரண்டானமை காண்க.

ஆய்தவெழுத்து செய்யுட்சீரசையில் சிலவிடத்து அலகுபெற்று உயிர்போன்றும், சிலவிடத்து அலகுபெறாமல் மெய்போன்றும் வருதலால் உயிரெனப் படுதற்கும் மெய்யெனப்படுதற்கும் ஒருவாறு ஒக்குமேனும், இயல்பான மாத்திரை அரையாகவும் அளபெடுத்த மாத்திரை ஒன்றாகவும் ஒலித்தலால் மெய்போலுந் தன்மையே மிகுதியாதலின் ஆய்தமளபெடுத்ததையும் 'ங ஞ ண ந ம ன வ ய ல ள வாய்தமளபாம்' என்று ஒற்றளபெடையி லடக்கினர்.

"அற்றா லளவறிந் துண்க வஃதுடம்பு, பெற்றா னெடிதுய்க்கு மாறு" என்னுங் குறள்வெண்பாவில், ஆய்தம் உயிர்போல அலகு பெற்றது.

வரலாறு அற்றா - தேமா, லளவறிந் - கருவிளம், துண்க - தேமா, வஃதுடம்பு - கருவிளங்காய், பெற்றா - தேமா, னெடிதுய்க்கு - புளிமாங்காய், மாறு - காசு. இந்த ஏழுசீர்களின் பொருத்துகளாகிய தளைகள் ஆறையும் முறையே, இயற்சீர்வெண்டளை, இயற்சீர்வெண்டளை, இயற்சீர்வெண்டளை, வெண்சீர்வெண்டளை, இயற்சீர்வெண்டளை, வெண்சீர்வெண்டளை என்று கண்டு ஆய்தம் உயிர்போல அலகுபெற்றதறிக. இக்கவியில் ஆய்தத்தை அலகு பெறாததாய் மெய்போலக் கொண்டால் வஃதுடம்பு என்பது கூவிளங்காய் என்னுஞ் சீராம். இச்சீரை துண்க என்னும் முதற்சீரொடு சேர்த்தபோது நேரொன் றாசிரியத்தளையாம். ஆகவே "வெள்ளையுட்பிறதளைவிரவா" என்ற விதிக்கு மாறாகி வெண்பாவின் செப்பலோசை சிதையுமாதலின் அங்ஙனஞ் சிதையாமல் ஆய்தம் அலகுபெற்றமை காண்க.

"தோன்றிற் புகழொடு தோன்றுக வஃதிலார், தோன்றலிற் றோன்றாமை நன்று" என்னுங் குறள்வெண்பாவில், ஆய்தம் அலகுபெறாமல் மெய்போல நின்றது.

வரலாறு. தோன்றிற் - தேமா, புகழொடு - கருவிளம், தோன்றுக- கூவிளம், வஃதிலார் - கூவிளம், தோன்றலிற் - கூவிளம், தோன்றாமை - தேமாங்காய், நன்று - காசு. இந்த எழுசீர்களின் பொருத்துகளாகிய தளைகள் ஆறையும் முறையே இயற்சீர்வெண்டளை, இயற்சீர்வெண்டளை, இயற்சீர்வெண்டளை, இயற்சீர்வெண்டளை, இயற்சீர்வெண்டளை, வெண்சீர்வெண்டளை, என்று சண்டு வஃதிலார் என்பதில் ஆய்தம் அலகு பெறாது மெய்போல நின்றதறிக. இக்கவியில் ஆய்தத்தை உயிர்போல அலகிடின் வஃதிலார் என்பது கருவிளம் என்னுஞ் சீராம். இச்சீரை உண்க என்னும் முதற்சீரொடு சேர்த்தபோது நிரையொன்றாசிரியத்தளையாய் வெண்பாவிற் பிறதளை கலந்து செப்பலோசை குன்றிப் பிழைபடுமாதலின் அங்ஙனம் பிழைபடாமைப்பொருட்டு ஆய்தம் அலகுபெறாது நின்றமை சாண்க.

இவையெல்லாம் யாப்பிலக்கணங் கற்றவர் தாமே யறிகுவர். ஙகரமெய்யும் ஆய்தம்போல மொழிக்கிடையிலன்றி மொழிக்கீற்றில் அளபெடுக்க மாட்டாது என்று இலக்கணவிளக்கநூலார் கூறினர். (௯௭)

[குற்றியலிகரம்.]

௬௩. யகரம் வரக்குற ளுத்திரி யிகரமும்
அசைச்சொன் மியாவி னிகரமுங் குறிய.

இ - ள். யகரம் வரக் குறள் உத்திரி இகரமும் - யகரத்தை முதலிலேயுடைய சொல்வரக் குற்றியலுகரந் திரிந்த இகரமும்,—அசைச்சொல் மியாவின் இகரமும் - அசைச்சொல்லாகிய மியாவென்பதின் மகரத்தின் மேலிருக்கிற இகரமும்,—குறிய - குற்றியலிகரங்களாம். எ - று.

உ - ம். நாகு+யாது=நாகியாது; எஃகு+யாது=எஃகியாது; வரகு+யாது=வரகியாது; கொக்கு+யாது=கொக்கியாது; குரங்கு+யாது=குரங்கியாது; தெள்கு+யாது=தெள்கியாது; எ - ம் கேண்மியா எ-ம் வரும். ஈற்றில்வருங் குற்றியலுகரம் முப்பத்தாறின் திரிபினாலும், மியா என்னும் அசைச்சொல்லினாலுங் குற்றியலிகரம் முப்பத்தேழாதல் காண்க. (௬௮)

[குற்றியலுகரம்.]

௬௪. நெடிலோ டாய்த முயிர்வலி மெலியிடை
தொடர்மொழி யிறுதி வன்மையூ ருகரம
அஃகும் பிறமேற் றொடரவும் பெறுமே.

இ - ள். நெடிலோடு - தனிநெடில் எழுத்துடனே,—ஆய்தம் - ஆய்தம் ஒன்றும்,—உயிர் - சொல்லுக்கு நடுவில் வராத ஔகாரம் நீங்கிய உயிர் பதினொன்றும்,—வலி - வல்லெழுத்தாறும்,—மெலி - மெல்லெழுத்தாறும்,—இடை - வல்லெழுத்துக்களோடு தொடராத வகரம் நீங்கிய இடையெழுத்தைந்தும் ஆகிய முப்பத்தாறனுள் ஒன்றால்,—தொடர் - தொடரப்பட்டு,—மொழி இறுதி வன்மை ஊர் உகரம் - சொல்லின் இறுதியில் வல்லெழுத்துகளுள் யாதாயினும் ஒன்றின்மேல் ஏறிவரும் உகரமானது,—அஃகும் - தன்னரைமாத்திரையிற் குறுகும்,—பிற மேல் தொடரவும் பெறும் - இவ்வறுவகைத்தொடருள் ஆய்தத்தொடர்முதலிய ஐந்துதொடரும் வன்மையூருகரத்தை ஈற்றயலெழுத்துத் தொடர்தலேயன்றிப் பிறவெழுத்துக்களுள் ஒன்றும் பலவும் அவ்வீற்றயலெழுத்தின் இடப்புறத்தே தொடரவும் பெறும். எ — று.

* நெடிலோடு என நெடிலை ஒடுக்கொடுத்து வேறுக்கியது நெடிற்றொடர்க் குற்றியலுகரமொழி ஈரெழுத்தொருமொழியாயே வருமன்றிப் பிற மேற்றொடர்தல் அதற்கில்லையென்பது தோன்றுதற்காம். மற்ற ஐந்துதொடர்க் குற்றியலுகரமொழிகளும் மூன்றெழுத்திற் குறையாது பலவெழுத்துமொழியாய் வருமென்பதும் அறிக. உயிரென்றது குற்றுயிர் நெட்டுயிர் இரண்டையும்.

உ - ம். நாகு, காசு, ஆறு, வீடு, தாது, ஏறு, ஐது, கோடு, கௌது என்பன நெடிற்றொடர்க்குற்றியலுகரம். எஃகு, கஃசு, இருபஃது என்பன ஆய்தத்தொடர்க் குற்றியலுகரம். வரகு, பலாசு, கயிறு, போவ

தி, ஒன்பது, இறப்பூது என்பன உயிர்த்தொடர்க்குற்றியலுகரம். கொக்கு, கச்சு, பிண்ணாக்கு, விளையாட்டு, குருத்து, ஒப்பு, பற்று, ஈர்க்கு, பீர்க்கு என்பன வன்றொடர்க்குற்றியலுகரம். கங்கு, பஞ்சு, நண்டு, பந்து, அம்பு, கன்று, பட்டாங்கு, சுண்ணாம்பு என்பன மென்றொடர்க்குற்றியலுகரம். வெய்து, மார்பு, சால்பு, தெள்கு என்பன இடைத்தொடர்க்குற்றியலுகரம். ஈர்க்கு, பீர்க்கு என்பன ஈரொற்றுத் தொடர்ந்தாலும் ஈற்றயலெழுத்து வல்லினமாதலின் வன்றொடரெனக் கொள்க.

ஆசிரியர் தொல்காப்பியர் "நெட்டெழுத்திம்பருந் தொடர்மொழியீற்றுங், குற்றியலுகரம் வல்லாறூர்ந்தே" எனத் தொகுத்துக் கூறியவாறு கூறாமல், இங்கே ஈற்றயலெழுத்தைக் கொண்டு குற்றியலுகரத்தை அறுவகையாகக் கூறியது பின்னே புணரியலில் எடுத்தாளுதற்பொருட்டாமாதலின், இது முன்மொழிந்துகோடலென்னும் உத்தி. "குற்றியலுகர முறைப்பெயர் மருங்கின், ஒற்றிய நகரமிசை நகரமொடு முதலும்" என்று தொல்காப்பியர் கூறிய நுந்தை என்னும் முறைப்பெயரின் முதலில் நகரமெய்யின்மேல் நிற்கும் உகரத்தையும் மொழிந்த பொருளோடொன்ற அவ்வயின் மொழியாததனையுமுட்டின்று முடித்தல் என்னுமுத்தியாற் குற்றியலுகரமென்று கொள்க. குற்றியலுகரமல்லாத உகரமெல்லாம் முற்றியலுகரமென்றறிக. அவை மொழிமுதலிலும் இடையிலும் ஈற்றிலும் வரும். உ-ம். உறி, உச்சி எ-ம், அருள், பல்லுகம் எ-ம், கடு, வேணு, கொள்ளு எ-ம், முறையே காண்க. குற்றியலுகரமும் ஈற்றில் வரும்; சில முற்றியலுகரமும் ஈற்றில்வருமாதலின் இவ்விரண்டினுக்கும் வேறுபாடு விரைவில் அறிதற்பொருட்டு ஈற்றில்வரும் முற்றியலுகரத்திற்கும் இலக்கணம் கூறப்படுவதாம்: மொழியீற்றில் மெல்லினமெய்யின் மேலாவது இடையினமெய்யின்மேலாவது ஏறிநிற்கும் உகரமும், ஒரு குற்றெழுத்தின் பின்னின்ற வல்லினமெய்யின்மேல் ஏறிநிற்கும் உகரமும் ஈற்று முற்றியலுகரமாம். இவற்றிற்கு உதாரணம் முன் பெறப்பட்டன. பல்லுகம் - கரடி.

முற்றியலுகரமுங் குற்றியலுகரமும் ஒரு சொல்லில் வருதலுமுண்டு. உ-ம் கரும்பு, கடுகு என்பனவற்றில் ஈற்றில் நிற்பன குற்றியலுகரமும் இடையில் நிற்கும் உகரம் முற்றியலுகரமுமாம் என்று தெளிக. (கூகூ)

[ஐகார ஒளகாரக் குறுக்கங்கள்]

கூரு. தற்சுட் டளபொழி யைம்மூ வழியும்
நைவு மௌவு முதலற் றாகும்.

இ-ள். ஐ - ஐகாரம்,—தற்சுட்டு அளபு ஒழி மூவழியும் - தன்னைக்குறித்துத் தன்பெயர் சொல்லும் அளவிற்குறுகாது சொல்லுக்கு முதலிடை கடைகளில் எங்கே நிற்பினும்,—நையும் - தன்மாத்திரையிற் குறுகும்,—ஔவும் முதல் அற்றாகும் - ஔகாரமும் தன்பெயர் சொல்லுமளவிற் குறுகாது சொல்லுக்கு முதலிலே தன் மாத்திரையிற் குறுகும். எ-று.

Digitized By Roja Muthiah Research Library

உ - ம். ஐப்பசி, இடையன், குவளை எ - ம், ஔவை, மௌவல் எ - ம் வரும். இ—வகையால் ஐகாரக்குறுக்கம் மூன்றும் ஔகாரக்குறுக்கம் ஒன்றும் வருதல் காண்க.

இச்சூத்திரத்திற்கு இலக்கணவிளக்கநூலார் "தன்னைச் சுட்டுதற்கண்ணும் அளபெடுத்தற்கண்ணும் அல்லாதவழி வந்த ஐகாரம் மொழி முதலிடைகடை யென்னும் மூன்றிடத்தும் குறுகும். அவ்வாறு வரும் ஔகாரமும் மொழிமுதற்கட் குறுகும்" என்றார். இவ்வுரைக்குச் சிவஞான முனிவர் கண்டன மெழுதினர். ஆயினும் விவேகிகள் குணதோஷங்களை ஆய்ந்து தெளியக்கடவர். (௪௦)

[மகரக்குறுக்கம்.]

௯௩. ணனமுன்னும் வஃகான் மிசையுமக் குறுகும்.

இ - ள். ணனமுன்னும் - ணகர னகரவொற்றுக்களில் ஒன்றுநின்று தொடர் அதன்முன் வரினும்,—வஃகான் மிசையும் - உயிரொடு கலந்த வகரம் வந்து தொடர அதன் இடப்புறத்தே நிற்பினும்,—மக்குறுகும் - மகரவொற்றுத் தன்னரைமாத்திரையிற் குறுகும். எ - று.

உ - ம். "வெருளினு மெல்லாம் வெருளுமஃ தன்றி, மருளினு மெல்லா மருண்ம்" எ - ம், "திசையறி மீகானும் போன்ம்" எ - ம், தரும் வளவன் எ - ம் வரும். போலும், மருளும் என்னுஞ் செய்யுமென்னும் வாய்பாட்டு முற்றுச்சொல்லின் ஈற்றயலில் நின்ற உகரங் கெட அவ்வுகரமேறிய லகர ளகரங்கள் ஈற்றுமகரத்தொடு மயங்காமையின் மயங்குதற்குரிய னகர ணகரமாய்த் திரிந்தனவே இங்கே நின்ற னகர ணகரமென்பதும் இவற்றுளொன்றுடன் ஈரொற்றாய் மயங்கின் மகரங் குறுகுமென்பதும் இவற்றின்முன் குறுகுதல் செய்யுளிடத்தென்பதும் மேல்வரும் பல சூத்திரங்களைக் கொண்டு உய்த்துணர வேண்டுதலால் இச்சூத்திரம் உய்த்துணரவைப்பென்னுமுத்தியும் நூற்றில் நின்ற சூத்திரக் கருத்தைப் பெறவேண்டுதலாற் பருந்தின வீழ்வென்னு நிலையுமாம்.

போலும், மருளும் என்பன செய்யுமென்னும் வாய்பாட்டுத் தெரிநிலைவினைமுற்றென்பது 'பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மையிற், செல்லா தாகுஞ் செய்யுமென் முற்றே' என்னுஞ் சூத்திரத்தாலும், முற்றிறுதியயல் உகரவுயிர் கெடுமென்பது 'செய்யுமெனெச்சவீற்றுயிர்மெய் சேறலுஞ், செய்யுளுளும்முந் தாகலுமுற்றே, லுயிருமுயிர்மெய்யுமேகலு முளவே' என்னுஞ் சூத்திரத்தாலும், லகர ளகர மெய்களின் முன் மகரம் மயங்காதென்பது 'லளமுன்கசபவயவொன்றும்மே' என்னுஞ் சூத்திரத்தாலும், லகர ளகர மெய்கள் மகரத்தின்முன் முறையே னகர ணகரங்களாகத் திரியுமென்பது 'லளவேற்றுமையிற் றடவுமல்வழி யவற்றோடுறழ்வும் வலிவரினாமெலி, மேவினணவுமிடைவரினியல்பு, மாகுமிருவழியானுமென்ப' என்னுஞ் சூத்திரத்தாலும், இந்த னகர ணகரங்களுளொன்றுடன் ஈரொற்றாய் மயங்கின் மகரங் குறுகுமென்பதும் இவைகளின் முன்கு

றுகுதல் செய்யுளினிடத்தென்பதும் 'லளமெய் திரிந்த னணமுன் மகாரம், நைந்தீரொற்றாஞ் செய்யுளுள்ளே' என்னுஞ் சூத்திரத்தாலும் உய்த்துணரப்படும்.

மகரக்குறுக்கம் இடவகையால் மூன்றாதல் காண்க. (௪௧)

[ஆய்தக்குறுக்கம்.]

௬௭. லளவீற் றியைபினு மாய்த மஃகும்.

இ - ள். லள ஈற்று இயைபின் ஆம் ஆய்தம் - லகார ளகார ஈற்றுப் புணர்ச்சியில் உண்டாகின்ற ஆய்தம்,—அஃகும் - தன்னரைமாத்திரையிற் குறுகும். எ - று.

உ - ம். கல்+தீது=கஃறீது, முள்+தீது=முஃடீது என வரும்.

லகார ளகாரவீற்றுப் புணர்ச்சியில் ஆய்தம் வருதலை 'குறில்வழிலளத்தவ்வணையினாய்த, மாகவும்பெறாஉமல்வழியானே' என்னுஞ் சூத்திரத்தாலறிக. இது முடிவிடங்கூறலென்னுமுத்தி. திரிந்த எழுத்துவகையால் ஆய்தக்குறுக்கம் இரண்டாதலறிக. (௪௨)

பரீக்ஷை வினாக்கள்:—98. எழுத்துக்களின் பிறப்பாவது யாது? 99. எழுத்துக்களின் பிறப்பிடங்கள் எவை? 100. உயிரெழுத்துக்களுக்கும் இடையெழுத்துக்களுக்கும் பிறப்பிடம் யாது? 101. மெல்லெழுத்துக்களுக்குப் பிறப்பிடம் யாது? 102. வல்லெழுத்துக்களுக்குப் பிறப்பிடம் யாது? 103. அ ஆக்கள் பிறக்கும் முயற்சி யாது? 104. எம்முயற்சியால் இ ஈ எ ஏ ஐ பிறக்கும்? 105. உகரம் என்ன முயற்சியாற் பிறக்கும்? 106. ககரம் என்ன முயற்சியாற் பிறக்கும்? 107. சஞக்கள் எம்முயற்சியாற் பிறக்கும்? 108. ணகரம் என்னமுயற்சியாற் பிறக்கும்? 109. ணகரம் பிறப்பதுபோன்ற முயற்சியாற் பிறக்கும் எழுத்து வேறெது? 110. தகரம் எம்முயற்சியாற் பிறக்கும்? 111. பமக்கள் எம்முயற்சியாற்பிறக்கும்? 112. யகரம் எம்முயற்சியாற் பிறக்கும்? 113. ளகரம் எம்முயற்சியாற் பிறக்கும்? 114. மேற்பல் கீழுதட்டைப் பொருந்தப் பிறக்கும் எழுத்து எது? 115. ஆய்தத்திற்குப் பிறப்பிடம் யாது? 116. ஆய்தவெழுத்து என்ன முயற்சியாற் பிறக்கும்? 117. ஆய்தமல்லாத சார்பெழுத்துக்கள் எந்த இடத்தால் எந்தமுயற்சியாற் பிறக்கும்? 118. பிறப்பொன்றாகச் சொல்லப்பட்ட எழுத்துக்களுள் ஒன்றற்கொன்று சிறிதாயினும் முயற்சி வேறுபாடில்லையோ? 119. உயிர்மெய்யெழுத்தாவன எவை? 120. உயிர்மெய்க் குற்றெழுத்து எத்தனை? 121. உயிர்மெய் நெட்டெழுத்து எத்தனை? 122. உயிர்மெய்வல்லெழுத்து எத்தனை? 123. உயிர்மெய் மெல்லெழுத்து எத்தனை? 124. உயிர்மெய்யிடையெழுத்து எத்தனை? 125. உயிர்மெய்யிலே உயிர்மாத்திரமொலிக்குமோ மெய்யும் ஒலிக்குமோ? 126. குறுகாத ஆய்தம் எதனால் எட்டாயின? 127. உயிரளபெடை எதனால் இருபத்தொன்றாயின? 128. ஒற்றளபெடை எதனால் நாற்பத்திரண்டாயின? 129. குற்றியலிகரமாவது யாது? 130. குற்றியலுகரமாவது யாது? 131. குற்றியலுகரம் எத்தனைவகைப்படும்? 132. குற்றியலுகரம் எத்தனை? 133. முற்றியலுகரம்

Digitized By Roja Muthiah Research Library

(மொழி முதலிடை கடைகளில்) எவ்விடத்து வரும்? 134. ஈற்றில் வரும் முற்றியலுகரத்திற்கும் குற்றியலுகரத்திற்கும் வேறுபாடென்னை? 135. ஈற்றில் வராத குற்றியலுகரம் ஒன்றுண்டு அதற்கு உதாரணமெது? 136. குற்றியலுகரமும் முற்றியலுகரமும் ஒரு சொல்லிலே வருமோ? 137. ஐகாரக்குறுக்கமாவதியாது? 138. ஔகாரக்குறுக்கமாவ தியாது? 139 ஐகார ஔகாரங்கள் எப்பொழுது குறுகாமலிருக்கும்? 140. மகரக்குறுக்கமாவதியாது? 141. மகரக்குறுக்கம் எத்தனை? 142. ஆய்தக்குறுக்கமாவதியாது?

—0—

## ரு. உருவம்.

௯௮. தொல்லை வடிவின வெல்லா வெழுத்துமாண்
டெய்து மெகர வொகரமெய் புள்ளி.

இ - ள். எல்லாவெழுத்தும் தொல்லை வடிவின - எல்லாவெழுத்துக்களும் பல்வேறுவகைப்பட எழுதி வழங்கும் பழைய வடிவினையுடையனவாம்,—ஆண்டு - அப்படி வழங்குமிடத்து,—எகரம் ஒகரம் மெய் புள்ளி எய்தும்,—எகரமும் ஒகரமும் மெய்களும் புள்ளியைப் பெறும், எ - று.

உ - ம். அ, ஆ, க கா, முதலியன தொல்லைவடிவின; எ ஒ எ - ம் க் ங் ச் ஞ் ட் ண் த் ந் ப் ம் ய் ர் ல் வ் ழ் ள் ற் ன் எ - ம வரும்.

ஆயினும் இக்காலத்தில் எகர வொகரங்கள் எழுதப்படுதல் அவ்வாறன்றென வுறிக. பவணந்திமுனிவர் நன்னூற்செய்த காலத்தில் எகர ஏகாரங்களுக்குப் பேதந் தோன்றாமல் அவ்விரண்டையும் ஒரே வடிவாகவும், ஒகர ஓகாரங்களுக்குப் பேதந்தோன்றாமல் அவ்விரண்டையும் ஒரேவடிவாகவும், பதினெட்டுமெய்களுக்கும் அகரவுயிரொடு கலப்புற்ற பதினெட்டு உயிர்மெய்களுக்கும் பேதந் தோன்றாமல் முறையே அவ்வவற்றை ஒரேவடிவாகவும் எழுதி வழுவாக வழங்கும் வழக்கம் நிகழ்வுற்றதாதலின் அதனை நீக்கித்தடுமாற்றமின்றி வழங்குவித்தற்பொருட்டு எய்துமெகரவொகரமெய்புள்ளி என்றார். பேதந் தோன்றா தெழுதப்பட்டமையைப் பழைய கையெழுத்துப் பிரதிகளிலும், தற்காலக் கையெழுத்துக் கடிதவாசகங்களிலு மின்றுங் காணலாம். தற்காலத்தில் மெய்களுக்கும் அவ்வுயிர் மெய்களுக்கும் பேதந் தோன்ற மெய்கள் புள்ளியிடப்படுகின்றன. வேனும் எகரவொகரங்கள் புள்ளியிடப்படவில்லை. எகர ஏகாரங்களுக்குப் பேதந் தெரிய ஏகாரத்தின் கீழிழிந்தகீற்றை இடப்புறத்தே சிறிது மடக்கி நீட்டியும், ஒகர ஓகாரங்களுக்குப் பேதந் தெரிய கீழிழிந்து மேனோக்கிய கீற்றைச் சுழித்தும் எழுதி வழங்குகின்றனர். ஆய்தத்தைச் சிறுபான்மை கூ இவ்வுருவமாயும் வழங்குகின்றனர். 'பழையன கழிதலும் புதியன புகுதலும், வழுவல காலவகையினானே' எ-ம் 'இறந்ததுவிலக்கல் எதிரதுபோற்றல்' எனவுங் கூறியிருத்தலால் இவ்வழக்கந் தள்ளப்படாது கொள்ளப்படும். (௯௩)

—0—

Digitized By Roja Muthiah Research Library

## ௬. மாத்திரை.

[எழுத்துக்களின் மாத்திரை.]

௬௬. மூன்றுயி ரளபிரண் டாநெடி லொன்றே
குறிலோ டையௌக் குறுக்க மொற்றள
பரையொற் றிஉக் குறுக்க மாய்தங்
கால்குறண் மஃகா னாய்த மாத்திரை.

இ - ள். உயிரளபு (மாத்திரை) மூன்று (ஆம்) - உயிரளபெடைக்கு மாத்திரை மூன்றும்,—நெடில் (மாத்திரை) இரண்டாம் - நெட்டெழுத்திற்கு மாத்திரை இரண்டாம்,—குறில் ஐ (க்குறுக்கம்) ஔக்குறுக்கம் ஒற்றளபு (மாத்திரை) ஒன்றே (ஆம) - குற்றெழுத்திற்கும் ஐகாரக்குறுக்கத்திற்கும் ஔகாரக்குறுக்கத்திற்கும் ஒற்றளபெடைக்கும் தனித்தனி மாத்திரை ஒன்றும்,—ஒற்று இ (க்குறுக்கம்) உக்குறுக்கம் ஆய்தம் (மாத்திரை) அரை (ஆம்) - மெய்யெழுத்திற்கும் குற்றியலிகரத்திற்கும் குற்றியலுகரத்திற்கும் முற்றுய்தத்திற்கும் தனித்தனி மாத்திரை அரையாம்,—குறள் மஃகான் (குறள்) ஆய்தம் மாத்திரை கால் (ஆம்) - மகரக்குறுக்கத்திற்கும் ஆய்தக்குறுக்கத்திற்கும் தனித்தனி மாத்திரை காலாம். எ - று.

மேலே 'உயிரளவாய்' என்றதனுல் இங்கே உயிர்மெய்க்கு மாத்திரை கூறுதொழிந்தார். இது உரைத்தாமென்னுமுத்தி.

"செறூஅஅய் வாழிய நெஞ்சு" என்பதில் மூன்றுமாத்திரையாய்வந்த அளபெடையெனக்கொள்ளின் செறூஅய் என்பது புளிமா என்னுஞ் சீராகுமாதலின், பின்வந்த வாழிய என்னும் கூவிளம் ஆகிய சீருடனே கூடி நேரொன்றுசிரியத்தளையாய் வெண்பாவில் வெண்டளையல்லது பிறதளை வாலாகாது என்னும் விதிக்கு மாறுதலால், செப்பலோசை குறையாமைப்பொருட்டு நான்குமாத்திரையாய் அளபெழுந்து வெண்டளை பிழையாது வந்தது. ௬௪ ம் சூத்திரவுரையையு நோக்குக.

மொழிமுதற்கண் ஐகாரக்குறுக்கம் ஒன்றரைமாத்திரையாயும், ஏனையிடங்களில் ஒருமாத்திரையாயும், ஔகாரம் மொழிமுதற்கண் ஒன்றரைமாத்திரையாயும் குறுகுமென்பது உய்த்துணர்ந்துகொள்க. அவ்வாறு உய்த்துணர்ந்துகொள்ளாவிடின், "வைகலும் வைகல் வரக்கண்டு மஃதுணரார், வைகலும் வைகலை வைகுமென் றின்புறுவர், வைகலும் வைகற்றம் வாழ்நாண்மேல் வைகுதல், வைகலை வைத்துணரா தார்" எ - ம் "கைவேல் களிற்றொடு போக்கி வருபவன், மெய்வேல் பறியா நகும்" எ - ம் "ஔவிய நெஞ்சத்தா னாக்கமுஞ் செவ்வியான், கேடு நினைக்கப் படும்" எ - ம் வரும் இலக்கியங்களுக்கு இலக்கணமின்றாய் முடியும்.

உயிரளபெடை நான்குமாத்திரையவாதலும், ஐகார ஔகாரக்குறுக்கங்கள் ஒன்றரைமாத்திரையவாதலும் ஆரிடத்துள்ளும் ஆரிடப்போலியுள்ளுஞ் சிறுபான்மை வந்து செய்யுள்வழுவமைதியாய் முடிதலின் அவற்



Digitized By Roja Muthiah Research Library

றையொழித்து, எல்லார்க்கும் ஒப்பமுடிந்து பெருவழக்காய் வருவன மூன்றுமாத்திரையும் ஒருமாத்திரையுமாதலின் 'மூன்றுயிரளபு' என்றும் 'ஒன்றேகுறிலோடை ஔக்குறுக்கம்' என்றுங் கூறினார். (சச)

[மாத்திரை இன்னதென்பது.]

**கoo. இயல்பெழு மாந்த ரிமைநொடி மாத்திரை.**

இ - ள். மாந்தர் இயல்பு எழும் இமை நொடி - மனிதருடைய இயல்பாகவுண்டாகுகின்ற கண்ணிமைத்தற்பொழுதாவது கைந்நொடித்தற்பொழுதாவது,—மாத்திரை - ஒருமாத்திரையென்னுங்கால வரையறையாம்.

இந்த அளவு கருவியை 'மூன்றுயிரளபு' என்னுஞ் சூத்திரத்திற்கு முற்கூறாது பிற்கூறியது பின்னதுநிறுத்தலென்னுமுத்தி. (சரு)

[மாத்திரைக்குப் புறனடை.]

**கoக. ஆவியு மொற்று மளவிறந் திசைத்தலும்**
**மேவு மிசைவிளி பண்டமாற் றாதியின்.**

இ - ள். ஆவியும் ஒற்றும் - முதலுஞ் சார்புமாகிய உயிரெழுத்துக்களும் அவ்விருவகையான மெய்யெழுத்துக்களும்,—இசை விளி பண்டமாற்று ஆதியின் - இராகமும் அழைத்தலும் பண்டமாற்றக்கூறுதலு முதலியவைகளிடத்து,—அளவு இறந்து இசைத்தலும் மேவும் - முன்சொன்ன அளவைக்கடந்து மிக்கொலித்தலையும் பொருந்தும். எ - று.

ஆதியென்றதனால் முறையீடு, புலம்பல் முதலியனவுங் கொள்க.

இராகத்தில் அளவிறந்தொலிக்கும்போது உயிர் பன்னிரண்டு மாத்திரையீறாகவும், ஒற்றுப் பதினொருமாத்திரையீறாகவும் ஒலிக்குமென்றார் இசைநூலார். இது பிறநூன்முடிந்தது தானுடன்படுதலென்னுமுத்தி.

இச்சூத்திரம் 'இயல்பெழும்' என்னுஞ் சூத்திரத்தைத் தழுவாது அதற்குமுன் நின்ற 'மூன்றுயிரளபு' என்னுஞ் சூத்திரத்தைத் தழுவி நின்றதினாலே தவளைப்பாய்த்து என்னுமிலை. (சசு)

**பரீக்ஷைவினாக்கள்:**—143. உயிரளபெடை எத்தனை மாத்திரை பெறும்? 144. குற்றெழுத்திற்கு மாத்திரை எவ்வளவு? 145. நெட்டெழுத்திற்கு மாத்திரை எவ்வளவு? 146. அரைமாத்திரை ஒலிக்கும் எழுத்துக்கள் எவை? 147. மகரக்குறுக்கத்திற்கோ ஆய்தக்குறுக்கத்திற்கோ மாத்திரை அதிகம்? 148. ஒற்றளபெடைக்கு எத்தனை மாத்திரை? 149. அதிகமாக ஒலிக்கும்போது இராகத்தில் உயிரெழுத்து எத்தனை மாத்திரைவரை ஒலிக்கும்?

Digitized By Roja Muthiah Research Library

## ௭. முதனிலை.

[மொழிக்கு முதலில்வரும் எழுத்துக்கள்.]

௱௨. பன்னீ ருயிருங் கசதந பமவய
ஞஙவீ ரைந்துயிர் மெய்யு மொழிமுதல்.

இ - ள். பன்னீருயிரும் - பன்னிரண்டு உயிரெழுத்துக்களும்,—கசதநபமவயஞங ஈரைந்து உயிர்மெய்யும் - உயிரேறிய ககரமுதல் ஙகரமீருகச்சொல்லப்பட்ட பத்து மெய்யெழுத்துக்களும்,—மொழிமுதல் - சொல்லுக்குமுதலாகும். எ - று.

உ - ம். அணி, ஆடை, இலை, ஈகை, உடல், ஊடல், எடு, ஏடு, ஐயம், ஒதி, ஓதி, ஔவியம் எ - ம் கனி, காய், சனி, சாடி, தளிர், தாய், நலம், நாகம், படை, பால், மலை, மாலை, வனம், வாடை, யவனர், யானை, ஞமலி, ஞாலம், அங்ஙனம் எ - ம் வரும். மெய்கள் உயிரொடு கூடியன்றி உயிர்போலத் தனித்து முதலாகமாட்டாமையால் உயிர்மெய்யென்ருர். இது இன்னதல்லதிதுவெனமொழிதலென்னுமுத்தி. ஈரைந்து என்பது உயிரென்பதைத் தொடராமல் மெய்யென்பதைத் தொடர்ந்துவந்தது. எந்தெந்தமெய் எந்தெந்த உயிரொடு கூடி முதலாகுமென்பதைப் பின்வருஞ் சூத்திரங்களால் வரையறுக்கின்ருர்.

[பொதுவிதியாற் கூறப்பட்ட முதலாகுமெழுத்துக்களுக்குச் சிறப்புவிதி.]

௱௩. உ ஊ ஒ ஓ வலவொடு வம்முதல்.

இ - ள். உ ஊ ஒ ஓ அல ஒடு - உ, ஊ, ஒ, ஓ, என்னுநான்கும் அல்லாத எட்டுயிரோடும்,—வ முதல் - வகரமெய் சொல்லுக்கு முதலாகும்.

உ - ம். வளி, வாழை, விடை, வீடு, வெளி, வேளை, வையம், வௌவால் எனவரும். உ ஊ ஒ ஓ என்னும் நான்குயிரொடும் வகரமெய் மொழிக்கு முதலாகமாட்டாதென்றறிக. (௪௮)

௱௪. அ ஆ உ ஊ ஓ ஔ யம்முதல்.

இ - ள். அ ஆ உ ஊ ஓ ஔ (ஒடு) - அ ஆ உ ஊ ஓ ஔ என்னும் ஆறு உயிரோடுங்கூடி,—ய முதல் - யகரமெய் சொல்லுக்கு முதலாகும்.

மேலைச்சூத்திரத்தின் ஒடு இங்கே வருவிக்கப்பட்டது.

உ - ம். யவனர், யானை, யுகம், யூகி, யோகி, யௌவனம் எனவரும். இ, ஈ, எ, ஏ, ஐ, ஒ என்னும் ஆறுயிரோடும் யகரமெய் மொழிக்குமுதலாகாதென்றறிக. (௪௯)

௱௫. அ ஆ எ ஒவ்வோ டாகு ஞம்முதல்.

இ - ள். அ ஆ எ ஒவ்வோடு — அ ஆ எ ஒ என்னும் நான்கு உயிரோடும்,—ஞ முதல் ஆகும் - ஞகரமெய் சொல்லுக்கு முதலாகும். எ - று.

ROJA MUTHIAH
47, HOSPITAL STREET
KOTTAIYUR-623 106

Digitized By Roja Muthiah Research Library

உ - ம். ஞமலி, ஞாலம், ஞெகிழி, ஞொள்கிற்று எனவரும்.

இ, ஈ, உ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என்னும் எட்டுயிரோடும் ஞகரமெய் மொழிக்கு முதலாகாதென்பது கருத்து. ஆயினும், மிஞிறு என்னுஞ் சொல்லில் இரண்டாமெழுத்து முதலும் முதலெழுத்து இரண்டாவதுமாக நிலைமாறின இலக்கணப்போலி மொழியாகிய ஞிமிறு என்பதில் ஞகரம் மொழிமுதலானது காண்க. இயற்கையான சொற்களில் முதலாகும் ஞகரமெய்யொடு கூடுமுயிரெழுத்துக்களைக் கூறுமிடத்து இகரத்தைச்சேர்க்காது விட்டார். ஞேயம் என்னும் வடமொழியில் ஞகரம் ஏகாரத்தொடு முதலானதுங் காண்க. (௫௦)

௧0௬. சுட்டியா வெகர வினாவழி யவ்வை
ஒட்டி ஙவ்வு முதலா கும்மே.

இ - ள். சுட்டு - அ இ உ என்னும் மூன்று சுட்டிடைச்சொற்களுக்கும்,—யா (வினா) எகரவினா - யா என்றும் எ என்றும் வரும் வினாவிடைச்சொற்களுக்கும்,—வழி - பின்,—அவ்வை ஒட்டி ஙவ்வும் முதலாகும் - அகரத்தைச்சேர்ந்து ஙகரமெய்யுஞ் சொல்லுக்கு முதலாகும். எ - று.

உ - ம். அங்ஙனம், இங்ஙனம், உங்ஙனம், எங்ஙனம், யாங்ஙனம் எனவரும். ஙனமென்பது இடத்தையும், தன்மையையுமுணர்த்தும் நாநார்த்தபதம். (நாநார்த்தம் - பலபொருள்.) அகரமல்லாத மற்றப் பதினொரு உயிர்களோடுங் கூடி ஙகரமெய் முதலாக மாட்டாதென்றறிக. பத்துமெய்களுள் ஙகரம் மற்றவைபோல முதலாகாமல் அ, இ, உ, யா, எ என்னும் ஐந்திடைச்சொற்களுள் ஒன்றன்பின்னாக அகரத்தொடு கூடி வருமொழியிலே முதலாகுதலால் ஙவ்வும் என இழிவுசிறப்பும்மைகொடுத்துக் கூறினர்.

முதலாகாதென்பவருக்கு உடன்படுதலும், மறுத்தலுமாதலால் இது பிறர்தம்மதமேற்கொண்டு களைவு என்னுமதம்.

முதலாகுமென்ற பத்துமெய்களுள், வகரம் எட்டுயிரோடும், யகரம் ஆறுயிரோடும், ஞகரம் நான்குயிரோடும், ஙகரம் ஒருயிரோடும் கூடி மொழிக்குமுதலாகுமென்று வரையறைசெய்ததுபோல் க, ச, த, ந, ப, ம என்னும் ஆறுமெய்களும் இன்னவுயிரொடு கூடி முதலாகுமென்று வரையறை செய்யாதது அவை பன்னிரண்டு உயிரொடுங் கூடி மொழிக்கு முதலாகுதலாலென்றறிக.

முறையிற்கூறாமல் ககரத்தின் பின்னிரண்டாவதாகக் கூறத்தகும் ஙகரத்தை ஈற்றில் வைத்தும், சகரத்தையடுத்துக் கூறத்தகும் ஞகரத்தை ஈற்றயலில் வைத்தும், ஙகர ஞகர யகரங்களுக்குப் பின் வைக்கத்தகும் வகரத்தை அம்மூன்றற்கும் முன்வைத்தும் பிறழக் கூறியது அவை மொழிமுதலாகும்போது கூடும் உயிரின் குறைவும் மிகுதியும் ஆகிய விசேடம்பற்றியென்றுணர்க. எவ்வாறெனில்: பன்னிரண்டுயிரொடு மொழிக்குமுதலாகுங் க ச த ந ப ம என்னும் ஆறுமெய்களையும் முந்தியும், எட்

டுயிரோடு கூடி முதலாகும் வகரத்தை அவற்றின்பின்னும், ஆறுயிரோடு கூடி முதலாகும் யகரத்தை அதன்பின்னும், நான்குயிரோடு கூடிமுதலாகும் ஞகரத்தை அதன்பின்னும், ஒருயிரோடுகூடி முதலாகும் ஙகரத்தை அதன்பின்னுமாக வைக்கப்பட்டமையயாம். (௫௧)

பரிசோதனைவினாக்கள்:—150. மொழிக்கு முதலில்நிற்கும் எழுத்துக்கள் எவை? 151. பன்னிரண்டுயிரோடும் மொழிக்கு முதலில் வரும் மெய் கள் எத்தனை? 152. வகரமெய் எத்தனையுயிர்களோடு மொழிக்குமுதலாகும்? 153. யகரமெய் எவ்வுயிர்களோடு மொழிக்கு முதலாகும்? 154. ஞகரமெய் எவ்வுயிர்களோடு மொழிக்குமுதலாகும்? 155. ஙகரமெய் எவ்வுயிரொடு மொழிக்கு முதலாகும்? 156. ஞிமிறு என்னுஞ் சொல்லில் ஞகரமெய் இகரத்தொடு முதலானதைப்பற்றிச் சூத்திரத்திற்கூறாதுவிட்டதென்னை?

---

## அ. இறுதிநிலை.

[மொழிக்கிறுதியில் வரும் எழுத்துக்கள்.]

௧0௭. ஆவி ஞ ண ந ம ன ய ர ல வ ழ ள மெய்
சாயு முகரநா லாறு மீறே.

இ - ள். ஆவி - (தனித்தும் மெய்யொடு கூடியும் வரும்) பன்னிரண்டுயிர்களும்,—ஞ ண ந ம ன ய ர ல வ ழ ள மெய் - இப்பதினொருமெய்களும்,—சாயும் உகரம் - குற்றியலுகரமுமாகிய,—நாலாறும் ஈறு - இருபத்துநான்கெழுத்தும் மொழிக்கீறாகும் எ - று.

பின்வரும்புணர்ச்சியிலெடுத்தாளுதற்பொருட்டுக் குற்றியலுகரத்தை வேறாக எடுத்துத் தொகைகொடுத்தோதினார்.

உ - ம். ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ, இ, உ, எ, ஒ, எ - ம் விள, பலா, கரி, தீ, கடு, பூ, சே, தை, கோ, கௌ, எ - ம் உரிஞ், மண், பொருந், மரம், பொன், வேய், வேர், வேல், தெவ், வீழ், வாள், அஃகு, எ - ம் வரும். (௫௨)

[ஈறுவன சிலவற்றிற்குச் சிறப்புவிதி.]

௧0௮. குற்றுயி ரளபி னீறா மெகர
மெய்யொடே லாதொந் நவ்வொ டாமௌக்
ககர வகரமோ டாகு மென்ப.

இ - ள். குற்றுயிர் அளபின் ஈறாம் - குற்றுயிரைந்தும் (நெட்டுயிர்) அளபெடுக்கும்போது (வரிவடிவிலே அறிகுறியாகத்) தனித்து ஈறாகும்,—எகரம் மெய்யொடு ஏலாது - எகரவுயிர் மெய்யொடு கலந்தீறாகாது,—ஒ நவ்வொடு ஆம் - ஒகரம் நகரமெய்யொன்றுடன் கலந்து ஈறாகும்;—ஔ ககர வகரமோடு ஆகுமென்ப - ஔகாரம் ககரமெய்யொடும் வகரமெய்யொடுங் கலந்தீறாகும் என்று சொல்லுவர் புலவர். எ - று.

Digitized By Roja Muthiah Research Library

உ - ம். ஆ அ வளிய, ஈ இ ரிரை, தூ உந்திரை, மே எ வலை, ஓ ஒ வழக்கும் எனக் குற்றுயிரைந்தும் அளபெடையில் அறிகுறியாயீருயின. இவற்றை "ஆ அ வளியவலவன்றன்பார்ப்பினோ, டீ இ ரிரையுங் கொண்டுரளைப்பள்ளியுட், டூ உந் திரையலைப்பத்தூஉஞ்சாதிறைவன் றோள், மே எ வலைப்பட்டநம்போனறுநுதால், ஓ ஒ வழக்குந்துயர்" என்னுங் கவியிற் காண்க.

நொ, கௌ, வௌ, எனவரும். நொ - துன்பப்படு. கௌ . வாயாற் பற்று. வௌ - கொள்ளையிடு.

இன்னும் "எ ஒ எனுமுயிர் ஞகாரத்தில்லை. இ - ள். எ ஒ என்று சொல்லப்படுமுயிர்கள் ஞகரமெய்யொடு கூடியீருகமாட்டா என்பது. என்றும் உகாரம் நகரவொற்றோடும் வகரவொற்றோடும் ஈருகாது என்றும் ஆசிரியர் தொல்காப்பியர் கூறிய சில வரையறைகளையுநோக்கி உலகவழக்குச் செய்யுள்வழக்குக்களையு மாராய்ந்து ஈருகும் உயிர்களுள் வரையறை பெறுதன தத்தமக்கேற்ற மெய்களோடு கூடியீருகுமென்று அறிக. தாமேயீருதலன்றிக் குற்றுயிர் அளபினுமீறும் என்று உம்மைகொடாதொழிந்தார் அறிகுறி மாத்திரமாய் நின்ற இவற்றோடு தனித்தீருயொலிக்கும் அவற்றைச் சேர்த்தெண்ணுதல் தகுதியன்றென்பது கருதி. முதல் சார்பு என எடுத்துக்கொண்ட எல்லா எழுத்துக்களும் உயிர், மெய், ஆய்தமென மூவகையாய் அடங்குதலால் இவற்றுள் முதலுமீறுமாகாத ஆய்தத்தை ஒழித்து நின்ற இரண்டையும் உயிர்முதல் மெய்ம்முதல் உயிரீறு மெய்யீறு என வகுத்துக்கொண்டார் இனிவரும் புணர்ச்சிவிதி யடங்குதற்கென்றறிக. (ருகூ)

க0கூ. நின்றநெறி யேயுயிர் மெய்முத லீறே.

இ - ள். உயிர்மெய் முதலீறு - உயிர்மெய்யெழுத்திற்கு முதலும் ஈறும்,—நின்ற நெறியே - ஒற்றொலிமுன்னும் உயிரொலி பின்னுமாக அது ஒலித்துநின்ற நெறியேயாம். எ - று.

'புள்ளிவிட்டவ்வொடு' என்னுஞ் சூத்திரத்தில் 'ஒற்றுமுன்னாய்வருமுயிர்மெய்' என்று முற்கூறினாராதலின் நின்றநெறியே என்றார். மெய் இடப்புறமாய் முன்னும் உயிர் வலப்புறமாய்ப் பின்னும் நின்று கலந்தபோது உண்டாயினது உயிர்மெய்யென்பது பிரத்தியக்ஷமாய் விளங்குதலால் நின்றநெறியேயென்றாரெனினுமாம்.

கலப்புற்ற உயிர்மெய்க்கு முதலீறு இவ்வாறாமெனவே உயிரும் ஒற்றும் ஆய்தமுதலிய ஒன்பது சார்பெழுத்துக்களும் கலப்புறாத தனித்தனியெழுத்தாதலால் அவற்றிற்கு முதலு மீறும் அது அதுவேயென்பதும் அருத்தாபத்தியாற் கூறினாராம். இது, எஞ்சியசொல்லினெய்தக்கூறல் என்னுமுத்தி. இப்படியன்றி விளங்கச்சொல்லப்பட்டனவெல்லாம் சொல்லின்முடிவினப்பொருண்முடித்தலென்னுமுத்தி.

Digitized By Roja Muthiah Research Library

முன்பு மொழிக்குமுதலு மீறுங் கூறியவற்றுள்ளும், பின்பு இடைநி லை, போலி, பதம், புணர்பு என்பவற்றுள்ளும் உயிர்மெய்யைப் பிரித்து, த் தனிமெய்யுந் தனியுயிரும்போல வைத்து இலக்கணங்கூறலால் மொழி க்கு முதலுமீறுங் கூறியதன்றி எழுத்திற்கும் முதலுமீறுங் கூறினாரெ னக்காண்க. எண்ணிலக்கணத்துள் இயைபுபற்றி ஓரெழுத்தாக மதித்துக் கூறிய உயிர்மெய்யை இங்கே இரண்டெழுத்தாக வைத்து இலக்கணஞ் சொன்னதென்னெனின் ஒற்றொலி முன்னும் உயிரொலி பின்னுமாகி யொலிக்கும் வேறுபாடு கருதியென்க. இச்சூத்திரம் சிங்கநோக்கம்.

பரீக்ஷைவினாக்கள்:—157. மொழிக்கிறுதியினிற்கும் எழுத்துக்கள் எ வை? 158. குற்றுயிர் அளபெடையிலீறுகும்போது அறிகுறியாயே நிற்குமோ ஒலித்துநிற்குமோ? 159. மெய்யுடனீறுகாத உயிர் எது? 160. எந்தமெய்யோடு ஒகரம் ஈறுகும்? 161. ஔகாரம் எத்தனைமெ ய்யுடனீறுகும்? 162. உயிர்மெய்க்கு முதல் யாது ஈறியாது? 163. உயி ர்கள் மெய்யொடு கலந்து ஈறுகுமோ தனித்திறுகுமோ?

———o———

## கூ. இடைநிலைமயக்கம்.

கக0. கசதப வொழித்த வீரேழன் கூட்டம்
மெய்ம்மயக் குடனிலை ரழவொழித் தீரெட்
டாகுமிவ் விருபான் மயக்கு மொழியிடை
மேவு முயிர்மெய் மயக்கள வின்றே.

இ - ள். கசதப ஒழித்த ஈரேழன் கூட்டம் மெய்ம் மயக்கு (ஆகு ம்) - (பதினெட்டு மெய்களிற்) கசதப என்னு நான்கையு நீக்கிய ப தினான்குமெய்களும் பிறமெய்களொடு கூடுங்கூட்டம் வேற்றுநிலைமெய்ம் மயக்கமாம்,—ரழ ஒழித்து ஈரெட்டு (க்கூட்டம்) உடனிலை (மெய்ம்மயக் கு) ஆகும் - (பதினெட்டுமெய்களில்) ரழ என்னுமிரண்டனையுநீக்கி மற் றைப் பதினாறு மெய்களுந் தம்மொடு கூடுங்கூட்டம் உடனிலை மெய்ம்ம யக்கமாகும்,—இவ்விருபால் மயக்கும் மொழி இடை மேவும் - இவ்விருவ கை மயக்கமுந் தனிமொழிக்கு நடுவிலுந் தொடர்மொழிக்கு நடுவிலும் வரும்,—உயிர்மெய் மயக்கு அளவின்று - உயிருடன் மெய்யும் மெய்யுட னுயிருமாய் மாறி மயங்கும் உயிர்மெய்மயக்கத்திற்கு வரையறையில்லை வேண்டியவாறே மயங்கும். எ - று.

இடைநிலையெனினும், கூட்டமெனினும், மயக்கம் எனினும், (எழு த்துக்கள் அடுத்துநிற்றலெனினும்) ஒக்கும். இடைநிலையாவது: தனி மொழியிலும் தொடர்மொழியிலும் இரண்டெழுத்துப் பொருந்தும் பொ ருத்துவாயாம். வாய் என்பது இடம்.

பின் உடனிலை என்றதனால் முன்னது வேற்றுநிலை என்பது பெறப் பட்டது. உடனிலைமயக்கமாவது தன் மெய்யொடு அடுத்துநிற்பது. வே ற்றுநிலைமயக்கமாவது பிறமெய்யொடு அடுத்துநிற்பது என்னுமிலக்கண

Digitized By Roja Muthiah Research Library

ங்களைச் சிறப்புவிதிகளா லறிக. உ - ம். அல்லி, என லகரமெய்யும் விகரத்திலிருக்கிற லகரமெய்யும் அடுத்து நிற்றல் கண்டு உடனிலைமெய்ம்மயக்கமின்னதென்றறிக. கற்பு, நட்பு என றகரமெய்யும் புகரவுயிர்மெய்யிலிருக்கிற பகரமெய்யும் அடுத்துநிற்றலும், டகரமெய்யும் புகரவுயிர்மெய்யிலிருக்கிற பகரமெய்யும் அடுத்து நிற்றலுங்கண்டு வேற்றுநிலைமெய்ம்மயக்கமின்னதென்றறிக. அல் என்பதில் முன்னின்ற அகரவுயிருடனே பின்னின்ற லகரமெய் மயங்கினது. கா என்பதில் பின்னின்ற ஆகாரவுயிருடனே ககரமெய் மயங்கி யுயிர் மெய்யாயிற்று. இவ்விரண்டும் உயிர்மெய்ம்மயக்கமெனப்படும் என்றுணர்க. உயிருமுயிரு மயங்குதலில்லையென்றறிக. உயிர்மெய் மயக்களவின்றே யென்றாரேனும் சிறுபான்மை வரையறையுண்டென்பது 'ரழத்தனிக்குறிலணையா' என்று பின் கூறப்படுதலாலறிக. பதினெட்டு மெய்களுள்ளே க் ச் த் ப் என்னு நான்குமெய்களும் உடனிலையாகமாத்திரம் மயங்குவன. உ - ம். செக்கு, கச்சு, பத்து, செப்பு எனவரும். ஆப்தன் என்பதில் பகரமெய் தகரமாகிய பிறமெய்யொடு மயங்கவில்லையோ வெனின், அது வடமொழி யுச்சாரணந்தோன்ற அவ்வாறெழுதப்பட்டதன்றித் தமிழ்நடையன்றென்க. தமிழில் ஆத்தனென்றுவரும். ர் ழ் என்னுமிரண்டுமெய்களும் வேற்றுநிலையாகமாத்திரம் மயங்குவன. உ - ம். சேர்தல், வாழ்தல் எனவரும்.

ங் ஞ் ட் ண் ந் ம் ய் ல் வ் ள் ற் ன் என்னுமிப் பன்னிரண்டு மெய்களும் உடனிலையாகவு மயங்குவன; வேற்றுநிலையாகவு மயங்குவனவாம். உ - ம். அங்ஙனம், அங்கு; மஞ்ஞை, மஞ்சு; வட்டம், வட்கல்; வண்ணம், வண்டு; வெந்நீர், வேந்து; அம்மை, அம்பு; வெய்யர், வெய்து; வெல்லம், வெல்க; தெவ்வர், தெவ்யாது; கொள்ளல், கொள்க; கற்றல், கற்பு; அன்னை, அன்பு எனவரும். ஆகவே க் ச் த் ப் ங் ஞ் ட் ண் ந் ம் ய் ல் வ் ள் ற் ன் என்னும் பதினாறுமெய்களும் உடனிலைமயக்கத்தில் வரும் எனவும் ர் ழ் ங் ஞ் ட் ண் ந் ம் ய் ல் வ் ள் ற் ன் என்னும் பதினான்குமெய்களும் வேற்றுநிலைமயக்கத்தில் வருமெனவும் உய்த்துணர்க. பிறமெய்களில் எவ்வெவற்றொடு மயங்குமென்னும் வரையறை பின் கூறப்படும்.

உடனிலை வேற்றுநிலைமயக்கங்களுக்கு உதாரணங்கள் பின் வருமாயினும் அவற்றின்விளக்கம் இச்சூத்திரத்திலமைதற்பொருட்டு இங்கே வேண்டிய அளவிற் கூறப்பட்டன, (௫௫)

[வேற்றுநிலை மெய்ம்மயக்கத்திற்குச் சிறப்புவிதி.]

௧௧௧. ஙம்முன் கவ்வாம் வம்முன் யவ்வே.

இ - ள். ங முன் க ஆம் - ஙகரமெய்யின்முன் ககரம் மயங்கும்,— வ முன் யவ்வே (ஆம்) - வகரமெய்யின்முன் யகரம மயங்கும். எ - று.

முன் என்றது இடமுன்னாகிய வலப்பக்கத்தை.

உ - ம். கங்கன் எ - ம் தெவ்யாது எனவும் வரும். (௫௬)

கக௨. ஞநமுன் றம்மினம் யகரமொ டாகும்.

இ - ள். ஞ ந முன் தம்மினம் யகரமொடு ஆகும் - ஞகர நகர மெய்க ளின் முன் அவற்றிற் கினமாகிய சகர தகரங்களும் யகரமும் மயங்கும்.

ஞகரமெய்யின்முன் சகரமும் யகரமு மயங்கும்; நகரமெய்யின்முன் தகரமும் யகரமு மயங்கும் என்று தெளிக.

உ - ம். கஞ்சன், உரிஞ்யாது எ - ம், கந்தன், பொருந்யாது எனவும் வரும்.

ககரு. டறமுன் கசப மெய்யுடன் மயங்கும்.

இ - ள். டறமுன் - டகர றகரமெய்களின்முன்,—கசப மெய் உடன் மயங்கும் - க ச ப என்னு மூன்று மெய்களும் இணங்கி மயங்கும். எ - று.

உ - ம். கட்கம், கட்சி, திட்பம் எ - ம். கற்க, கற்சிறார், கற்ப எ - ம் வரும்.

ககச. ணனமுன் னினங்கச ஞபமய வவ்வரும்.

இ - ள். ணனமுன் - ணகர னகர மெய்களின்முன்,—இனம் - அவற் றிற்கினமாகிய டகர றகரங்களும்,—க ச ஞ ப ம ய வ வரும் - க ச ஞ ப ம ய வ என்னு மேழுமெய்களும் மயங்கும். எ - று.

ணகரமெய்யின்முன் ட க ச ஞ ப ம ய வ என்னுமெட்டும், னகரமெ ய்யின்முன் ற க ச ஞ ப ம ய வ என்னுமெட்டும் மயங்குமென்று தெளிக.

உ - ம். விண்டு, வெண்கலம், வெண்சோறு, வெண்ஞமலி, வெண்பலி, கண்மலர், மண்யாது, மண்வலிது எ - ம் மன்றல், புன்கண், புன் செய், புன்ஞமலி, புன்பயிர், பொன்மலர், பொன்யாது, பொன்வலிது எ - ம். வரும். (ருக)

ககரு. மம்முன் பயவ மயங்கு மென்ப.

இ - ள். ம முன் ப ய வ மயங்கும் என்ப - மகரமெய்யின்முன் ப ய வ என்னு மூன்று மெய்களும் மயங்குமென்று சொல்லுவர் புலவர். எ - று.

உ - ம். கம்பன், கலம்யாது, கலம்வலிது எனவரும். (சூ0)

ககசு. யரழ முன்னர் மொழிமுதன் மெய்வரும்.

இ - ள். ய ர ழ முன்னர் - ய ர ழ என்னுமூன்றுமெய்களின்முன்,— மொழிமுதல் மெய் வரும் - மொழிக்குமுதலாக நின்ற பத்துமெய்களும் மயங் கும்.

சுருங்கச்சொல்ல லென்னு மழகுபற்றி மொழிமுதன்மெய்வரும் என்று கூறியதினால் யகரவொற்றின்முன் யகரம் மயங்குகிற உடனிலை மயக்கமும் இவ்வேற்றுநிலை மயக்கத்துள்ளே அகப்பட்டுக்கொண்டது. ஆதலின், யக ரத்தின்முன் யகர மயங்குதலை இவ்விடத்துக் கொள்ளாது விலக்கிவிடுக.



Digitized By Roja Muthiah Research Library

உ - ம். வேய்கடிது, வேய்சிறிது, வேய்ஞான்றது, வேய்தீது, வேய்நீண்டது, வேய்பெரிது, வேய்மாண்டது, வேய்வலிது, வேய்ங்குழல் எ-ம் வேர்கடிது, வேர்சிறிது, வேர்ஞான்றது, வேர்தீது, வேர்நீண்டது, வேர்பெரிது, வேர்மாண்டது, வேர்யாது, வேர்வலிது, ஆர்ங்கோடு எ-ம் வீழ்கடிது, வீழ்சிறிது, வீழ்ஞான்றது, வீழ்தீது, வீழ்நீண்டது, வீழ்பெரிது, வீழ்மாண்டது, வீழ்யாது, வீழ்வலிது, பாழ்ங்கிணறு. எ-ம் வரும். (கூக)

கக௭. லளமுன் கசப வயவொன் றும்மே.

இ - ள். லளமுன் கசபவய ஒன்றும் - லகரமெய்யின்முன்னும், ளகரமெய்யின்முன்னும் க ச ப வ ய என்னுமிவ்வைந்தும் மயங்கும். எ-று.

உ - ம். வேல்கடிது, வேல்சிறிது, வேல்பெரிது, வேல்வலிது, வேல்யாது. எ-ம் வாள்கடிது, வாள்சிறிது, வாள்பெரிது, வாள்வலிது, வாள்யாது. எ-ம் வரும். (கூஉ)

[உடனிலை மெய்ம்மயக்கத்தின் சிறப்புவிதி.]

கக௮. ரழவல்லன தம்முற் றாமுட னிலையும.

இ - ள். ர ழ அல்லன - ரகர ழகர மல்லாத பதினாறுமெய்களும்,—தம்முன் தாம் உடனிலையும் - தமக்குமுன் தாம் உடனின்று மயங்கும். எ-று.

அந்த அந்த மெய்க்குமுன்னே அந்த அந்தமெய் இணங்கிநிற்கும் என்றறிக.

உ - ம். அக்கம், அங்ஙனம், அச்சம், அஞ்ஞானம், பட்டம், அண்ணம், அத்தம், அந்நீர், வெப்பம், அம்மை, வெய்யர், வல்லி, தெவ்வர், வள்ளல், அற்றம், புன்னை. 'க ச த ப வொழித்த' என்னுஞ் சூத்திரத்தில் 'உடனிலைரழவொழித்தீரெட்டாகும்' என்றதினால் உடனிலை மெய்ம்மயக்கங் கூறப்பட்டதே பின்னுமிச்சூத்திரத்தாற் கூறியதென்னையெனின்; அங்கே உடனிலைமெய்ம்மயக்கத்திற்குரிய எழுத்துகளிவையென்றார். உடனிலைமயக்கமாவது தனக்குமுன் தான்மயங்குதல் என்னு மிலக்கணம் ஈண்டே விளக்கினரென்றறிக. (கூ௩)

[தனிமெய்யுடன் தனிமெய்யாக மயங்குவனவும்,
தனிக்குறிலின்பின் மொழிக்குறுப்பாக மயங்காதனவும்.]

கக௯. யரழவொற் றின்முன் கசதப ஙஞநம
ஈரொற் றும்மரழத் தனிக்குறி லணையா.

இ - ள். ய ர ழ ஒற்றின்முன் - ய ர ழ என்னுமூன்றுமெய்களின்முன்னும்,—க ச த ப ங ஞ ந ம - இவ்வெட்டுமெய்களும்,—ஈரொற்று ஆம் - (தனிமெய்யும் உயிரேறிய மெய்யுமாக மயங்குதலுமல்லாமல்) இரண்டுமொற்று

கவும் மயங்கிநிற்கும்,—ர ழ - (உயிர்மெய்ம்மயக்கத்துள்) ரகரவொற்றும் ழக ரவொற்றும்,—தனிக்குறில் அணையா - (மொழிக்கு அங்கமாக) தனித்தகுற் றெழுத்தின்பின்வந்து மயங்கா. எ - று.

உ - ம். வேய்க்குறை, வேய்ச்சிறை, வேய்த்தலை, வேய்ப்புறம், வேய்ங்கு ழல், தேய்ஞ்சது, காய்ந்தது, வேய்ம்புறம் எ - ம்

வேர்க்குறை, வேர்ச்சிறை, வேர்த்தலை, வேர்ப்புறம், 'சார்ங்கம், ஈர்ஞ்சனை, நேர்ந்தனம், கூர்ம்பகழி. எ - ம்

வீழ்க்குறை, வீழ்ச்சிறை, வீழ்த்தலை, வீழ்ப்புறம், பாழ்ங்கிணறு, பாழ்ஞ்சுனை, வாழ்ந்தனம், பாழ்ம்பதி. எ - ம் வரும்.

வேய்கடிது, வேர்கடிது, வீழ்கடிது என்பவற்றில் முறையே யகர மெய்யும் ககரவுயிர்மெய்யிலிருக்கிற ககரமெய்யுமாகவும், ரகரமெய்யு ம் ககரவுயிர்மெய்யிலிருக்கிற ககரமெய்யுமாகவும், ழகரமெய்யும் ககர வுயிர்மெய்யிலிருக்கிற ககரமெய்யுமாகவும் மயங்கினவம் போலன்றி வேய்க்குறை என்பதில் யகரமெய்யும் ககரமெய்யும் ஆகிய இரண் டுடனே இவற்றின்பின் மூன்றாவதாக குகரவுயிர்மெய்யிலிருக்கிற கக ரமெய்யும் மயங்கின. இரண்டு தனிமெய்களும் ஒரு உயிர்மெய்யுமா க மயங்கின என்றவாறும். இப்படியே மற்றவைகளையு நோக்கி ஈரொ ற்றாய் மயங்கினமை யறிக.

ஈரொற்றுமாம் என உம்மைகொடாது சூத்திரித்தார் ய ர ழ என் னு மூன்று மெய்களின் முன்னும் ஙகரம் ஈரொற்றாயன்றி ஓரொற்றாயு யிர்மெய்யுமாக மயங்குதலின்மையின் அதற்கும் பொருத்தமாதற்பொ ருட்டு.

ஈரொற்றும் என்பது இறந்ததுதழீஇய எச்சவும்மை தொக்கதென க்கொள்ளின் ஏற்புழிக்கோடலால் ஓரொற்றாயுயிர்மெய்யுமாய் மயங்கா தனவற்றை விலக்கி ஏனையவற்றைக்கொள்க.

ரகரமெய்யும் ழகரமெய்யுந் தனிக்குற்றெழுத்தின்பின் வரப்பெ ற்றமொழிகள் தமிழிலில்லாமையால் ஈழத் தனிக்குறிலணையா என்றார். என்றது 'உயிர்மெய்மயக்களவின்றே' என்று முற்கூறப்பட்ட உயிர்மெ ய் மயக்கத்திற்குச் சிறிது வரையறையுமுண்டென்பது உணர்த்தியவா றும். ஆசிரியர் தொல்காப்பியரும் "ரகார ழகாரங் குற்றொற்றாகா." என் று கூறினார். கூறினரேனும், அர்த்தம், அர்க்கன், வர்க்கம், சர்க்கரை. கர்த்தபம், வர்த்தகம் என்று சில வடமொழிகள் 'ரவ்வழியுவ்வுமாம்' என்னும் விதியால் உகரம் பெறுமலும் வடமொழி மயமாய்த் தமிழில் உலகவழக்கினுஞ் செய்யுள் வழக்கினும் பயின்றுவருதல் காண்க,

உயிருமுயிரு மயங்குதலில்லையாதலின் அதனை ஒழித்து மெய்யுட ன்மெய் மங்குதலை உடனிலை வேற்றுநிலையென்றிரண்டாக வகுத்தார்.

Digitized By Roja Muthiah Research Library

உயிருடன் மெய் மயங்குதலையும் மெய்யுடன் உயிர் மயங்குதலையும் உயிர்மெய் மயக்கமென்றுரைத்தார். இவைகளுமேயன்றி உயிருடன் ஆய்தமும் ஆய்தத்துடன் மெய்யுமயங்கு மயக்கமுமுண்டு: அது 'குறியதன்முன்னராய்தப்புள்ளி, உயிரொடுபுணர்ந்தவல்லாறன்மிசைத்தே' என்று ஆய்தத்தோற்றங்கூறிய முகத்தாலுணரப்படுமாதலின் வேறாகக் கூறாதுவிட்டார். (கூச)

[செய்யுளில் ஈரொற்றாய் நிற்கும் எழுத்துக்கள்.]

**கஉ0.** லளமெய் திரிந்த னணமுன் மகாரம்
நைந்தீ ரொற்றாஞ் செய்யு ளுள்ளே.

இ - ள். லளமெய் திரிந்த னணமுன் மகாரம் - லகார ளகார வொற்றுத்திரிந்த னகார ணகாரங்களின்முன்வரும் மகர வொற்று,—நைந்து ஈரொற்று ஆம் செய்யுளுள் - (முன்சொன்னபடி) குறுகி அந்த மெய்யொடு ஈரொற்றுடனிலையாம் பாட்டினுள். எ - று.

உ - ம். "திசையறுமீகானும்போன்ம்" எ - ம் "மயிலியன்மாதர்மருண்ம்" எ - ம் வரும். (கூரு)

[முதனிலை இறுதிநிலை இடைநிலைகளுக்குப் புறனடை.]

**கஉக.** தம்பெயர் மொழியின் முதலு மயக்கமும்
இம்முறை மாறியு மியலு மென்ப.

இ - ள். தம் பெயர் மொழியின் - எழுத்துக்கள் தம்முடைய பெயரைச் சொல்லவருங்காலத்தில்,—முதலும் மயக்கமும் - முதனிற்றலும் இடைநிற்றலும்,—இம்முறை மாறியும் இயலும் என்ப - (முன்விதித்தனவும் விலக்கியனவுமாகிய) இந்தக்கிரமந்தவறுற்றும் நடைபெறும். எ - று.

முதலீறிடைநிலைகளுக்கு முன்விதிக்கப்பட்டனவும் விலக்கப்பட்டனவும் மொழியின்கண்வருமெழுத்துகளுக்காதலின், எழுத்துக்களுடைய பெயரை உச்சாரணத்தாற்கூறின் அப்பொழுது, (மொழிக்குமுதலாகுமென்ற எழுத்துக்களேயன்றி) முதலாகாத எழுத்துக்களும் முதலாகும்; அவற்றைநிலைமொழிவருமொழியாகப் புணர்க்குமிடத்து (இன்னதோடு இன்னது மயங்குமெனப்பட்ட எழுத்துக்களுமன்றி) விலக்கப்பட்ட எழுத்துக்களும் மயங்கும் என்று தெளிக.

இப்படியே விதித்தனவும் விலக்கியனவுமாகிய எல்லாவெழுத்துக்களும் முதலாகும் இடைநிற்றலாகுமெனவே ஈற்றிற்கு விதித்தனவும் விலக்கியனவுமாகிய எழுத்துக்கள் ஈறாகியும் வருமென்பது அருத்தாபத்தியால் அமைதலால் ஈறுமென மிகைபடக் கூறாதுவிட்டார் சிறுபான்மையவாதலின்.

வ - று. "அவற்றுள், லளகான்முன்னர் யவவுந்தோன்றும்" என்றவில் லகரம் முதலாகியும், 'அவற்றுள் என்னுங் கூனிறுதி ளகரமெய்யொடு

Digitized By Roja Muthiah Research Library

மயங்கியும் நின்றது. செப்பெரிது என்பதில் எகரம் மெய்யொடுகூடி யீருகி நின்றது.

எழுத்தை எடுத்து மொழிந்தமையால் முதலாகாதது முதலாகியும், மயங்காதது மயங்கியும், ஈருகாதது ஈருகியும் வந்தன. (சுசு)

பரீக்ஷை வினுக்கள்:—164. இடைநிலைமயக்கமாவதியாது? 165. இடைநிலைமயக்கம் எந்தனை வகைப்படும்? 166. வேற்றுநிலை மெய்ம்மயக்கமாவதியாது? 167. உடனிலை மெய்ம்மயக்கமாவதியாது? 168. உடனிலை மயக்கத்திற்கேயுரிய மெய்கள் எவை? 169. வேற்றுநிலை மயக்கத்திற்கேயுரிய மெய்கள் எவை? 170. உடனிலையாகவும் வேற்றுநிலையாகவு மயங்கும் மெய்யெழுத்துக்கள் எவை? 171. கா, அல், மீ, ஆன் என்பன எந்தமயக்கம்? 172. ஙகரமெய்யின் பின்னுக எந்தமெய் மயங்கும்? 173. றகரமெய்யின்பின் எந்தமெய் மயங்கும்? 174. மகரமெய்யின்பின்னுக வேற்றுநிலையாக மயங்கும் மெய்கள் எவை? 175. யகரமெய்யின்பின்னுக எந்தமெய் மயங்கும்? 176. லகர ளகர மெய்களின்பின் எந்த மெய்யெழுத்து மயங்கும்? 177. எந்தமெய்கள் தம்மொடுதாம் உடனின்று மயங்கும்? 178. எந்தமெய்களின்பின் எந்தமெய்கள் ஈரொற்றுய் மயங்கும்? 179. ணகரமெய்யின்பின் மகரம் ஈரொற்றுய் மயங்குதல் வழக்கிலா செய்யுளிலா? 180. தனிக்குறிற் கீழொற்றுய் மயங்காத மெய்கள் எவை? 181. மொழிக்குமுதலாகுமெனப்படாத எழுத்து முதலாதலும், மயங்குமெனப்படாத எழுத்து மயங்குதலும், ஈருகுமெனப்படாத எழுத்து ஈருதலும் எப்பொழுதாம்?

## கo. போலி.

[மொழியிறுதிப்போலி.]

கஉஉ. மகர விறுதி யஃறிணைப் பெயரின்
னகரமோ டுறழா நடப்பன வுளவே.

இ - ள். அஃறிணைப்பெயரின் இறுதி மகரம் - பால்பகா வஃறிணைப்பெயர்களிடத்து ஈற்றிலே நின்ற மகரமெய்,—னகரமோடு உறழா நடப்பன உள - னகரமெய்யொடு ஒத்துநடப்பனவுஞ் சிலவுள. எ - று.

மகரம் னகரத்தோடொத்தலாவது பெயரினிறுதியிலே மகரமெய் நின்றவிடத்து னகரமெய் வந்து நிற்பினும் பொருள் வேற்றுமையின்றி யொத்தலாம். இம்மகரம் குறிலிணைக் கீழ் மகரமென்றறிக.

உ - ம். அகம்=அகன்; நிலம்=நிலன்; பலம்=பலன்; கலம்=கலன்; அறம்=அறன் என வரும்.

அஃறிணைப் பெயரினிறுதி மகரம் னகரத்துடனொத்து நடவாதன பலவுளவாதலின் உறழாது நடப்பன என்னுத தொட்ரும் நிலைமொழியீ

Digitized By Roja Muthiah Research Library

றுகுறைந்து உறழா நடப்பன என்று நிற்குமாதலின் அது அவ்விரு பொருட்கு மியைய அவ்வாறு கூறினர். ஒவ்வாது வருதற்கு உதாரணம்: வட்டம், குட்டம், மாடம், கூடம், பாடம் என்பனவாம். இவை வட்டன், குட்டன், மாடன், கூடன், பாடன் என்று வரமாட்டா. அகலம், படம், கமலம் என்று குறிலிணையைச் சார்ந்துவந்தும் னகரவொற்றொடு ஒவ்வாதுவந்த மகரங்களுமுண்டு. இவ்வாறே பிறவுங் கண்டாராய்க.

தலைதடுமாற்றமாக இவ்விறுதிப்போலியை முற்கூறியதினால், சுரும்பு=சுரும்பர்; வண்டு=வண்டர் எனச் சில மென்றொடர்க் குற்றியலுகரப்பெயரிறுதி உகரம் அர் என்பதனோடொத்துவருதலும், பந்தல் - பந்தர், சாம்பல் - சாம்பர், குடல் - குடர் எனச் சில லகரமெய்யீற்றுப் பெயரினிறுதி லகரமெய் ரகரமெய்யோடொத்துவருதலுங் கொள்க.

தலைதடுமாற்றவகைபற்றிக் கொள்ளப்பட்ட இந்த மகரங்களும், பலவெழுத்தின்பின் வந்தனவே என்றும் அவற்றுள்ளும் சிலவேயாகுமன்றி அனைத்துமாவனவல்லவெனவும் கண்டுணர்க. (௬௭)

[மொழிமுதற்போலியும், மொழியிடைப்போலியும்.]

௧௨௩. அ ஐ முதலிடை யொக்குஞ் சஞய முன்.

இ - ள். முதல் இடை - சொல்லுக்கு முதலிலும் நடுவிலும்,—அ ஐ ஒக்கும் - அகரமும் ஐகாரமும் வேறுபாடின்றி ஒத்துநடக்கும் ச ஞ ய முன் - சகர ஞகர யகரங்களுக்கு முன்வருமாயின். எ - று.

இங்கே முன் என்றது கால முன்னை.

உ - ம். பசல் - பைசல்; மஞ்சு - மைஞ்சு; மயல் - மையல் என முதலில் ஒத்துவந்தன. அமச்சு - அமைச்சு; இலஞ்சி - இலைஞ்சி; அரயர் - அரையர் என இடையில் ஒத்துவந்தன. இயற்கை அகரத்துக்கு ஐகாரம் போலியாய் வந்ததன்றி ஐகாரத்துக்கு அகரம்போலியாய் வந்ததன்று என்றறிக. (௬௮)

[மொழியிடைப்போலி.]

௧௨௪. ஐகான் யவ்வழி நவ்வொடு சில்வழி
ஞஃகா னுறழு மென்மரு முளரே.

இ - ள். சில் வழி - சொல்லுக்கு நடுவே சிலவிடத்து,—ஐகான் (வழி) - ஐகாரத்தின் பின்னும்,—யவ் வழி - யகர மெய்யின் பின்னும்,—நவ்வொடு ஞஃகான் உறழும் - இயல்பாய்வரும நகரமெய்யினோடு ஞகரமெய் ஒத்துநடக்கும்,—என்மரும் உளர் - என்று சொல்வாருஞ் சிலருண்டு. எ - று.

உ. - ம். "செய்ஞ்ஞின்ற நீல மலர்கின்ற தில்லைச்சிற்றம்பலவன், மைஞ்ஞின்றவொண்கண் மலைமகள் கண்டு மகிழ்ந்துநிற்க, நெய்ஞ்ஞின்றெரியும்விளக்கொத்த நீல மணிமிடற்றான், கைஞ்ஞின்ற வாடல்கண் டாற்பின்னைக் கண்கொண்டு காண்பதென்னே." என்னுங்கவியில் செய்ந்நின்ற, நெய்

ந்நின்றெரியும். என யகரவொற்றின்பின்னின்ற இயல்பான நகரத்திற்கு ஞகரம் போலியாய் வந்ததும்; மைந்நின்ற, சைந்நின்ற என்பவைகளில் ஐகாரத்தின்பின்னின்ற இயல்பான நகரத்திற்கு ஞகரம்போலியாய்வந்ததுங் காண்க. சேய்நலூர் - சேய்ஞலூர்; ஐந்நூறு - ஐஞ்ஞூறு என்பனவும் யகரமெய்யின்பின் வந்த நகரத்திற்கு ஞகரம்போலியானதற்கும் ஐகாரத்தின்பின்னின்ற நகரத்திற்கு ஞகரம் போலியானதற்கும் முறையே உதாரணமாம்.

மண்யாத்தகோட்ட மழகளிறு. "மண்ஞாத்தகோட்டமழகளிறுதாங்குமே." எ - ம் பொன்யாத்த-"பொன்யாத்ததார்ப்புரவிபரிக்குமே" எ - ம் ணகரமெய்யின்முன்னும், னகரமெய்யின்முன்னும் வருமொழிவினைச்சொல்லின்முதலிலே யா நின்றவிடத்து ஞா நிற்பினும் ஒக்கும்போலிக்கு ஆசிரியர் தொல்காப்பியர் "ண னவென் புள்ளிமுன் யாவு ஞாவும் வினையோரனைய வென்மனார் புலவர்." எனச் சூத்திரஞ்செய்தபடி இவ்வாசிரியர் செய்யாதுவிட்டது இறந்தது விலக்கலென்னும் உத்தி. (கசுசு)

## சந்தியக்கரம்.

கஉரு. அம்மு னிகரம் யகர மென்றிவை
யெய்தி னையொத் திசைக்கு மவவோ
டுவ்வும் வவவு மௌவோ ரன்ன.

இ - ள். அம்முன் இகரம் யகரம் என்று இவை ஒத்து எய்தின் - அகரத்தின்முன் இகரமும் யகரமுமாகிய இவை தம்முள் ஒத்துப்பொருந்தினால்,—ஐ இசைக்கும் - ஐ என்னு நெட்டெழுத்து ஒலிக்கும்,— அவ்வோடு உவ்வும் வவ்வும் (ஒத்து) ஓரன்ன எய்தின் – அகரத்தோடு உகரமும்வகரமெய்யுந் தம்முளொத்து ஒருதன்மையனவாகப் பொருந்தினால்,—ஔ (இசைக்கும்) - ஔ என்னு நெட்டெழுத்து ஒலிக்கும். எ - று.

யகர வகரமெய்கள் நடுவிலே கலக்குமெனக் கொள்க.

"ஏ ஐ ஓ ஔ சந்தியாக்ஷராணி" என்று சாரஸ்வத வியாகரணங் கூறுதலுங் காண்க. மொழிந்த பொருளோடொன்ற அவ்வயின் மொழியாததனையு முட்டின்று முடித்தல் என்னு முத்தியால், அகரக்கூறும் இகரக்கூறுந் தம்முளொத்து ஏகரமொலிக்கும்; அகரக்கூறும் உகரக்கூறுந் தம்முளொத்து ஓகரமொலிக்குமெனக் கொள்க.

பிறிதோருரை: [எழுத்துப்போலி யுணர்த்துகின்றது.]

இ - ள். அம்முன் இகரம் யகரம் என்றிவை எய்தின் - அகரத்தின்முன் இகரமும் யகர வொற்றுமாகிய இவை தனித்தனிவருமாயின்,—ஐ ஒத்து இசைக்கும் - ஐகாரத்தையொத்தொலிக்கும்,—அவ்வோடு உவ்வும் வவ்வும் எய்தின் - அகரத்தொடு உகரமும் வகர வொற்றுமாகிய இவை தனித்தனிவருமாயின்,—ஔ ஓரன்ன - ஔகாரத்தை ஒத்து ஒலிக்கும். எ - று.

ஓர் என்பதிடைச்சொல். உ - ம். அஇ=ஐ; அய்=ஐ. எ - ம்.

Digitized By Roja Muthiah Research Library

அஉ=ஔ; அவ்=ஔ. எ-ம் கஇ=கை; கய்=கை; கஉ=கௌ; கவ்=கௌ. எ-ம் "கய்வேல் களிற்றெருடுபோக்கிவருபவன், மெய்வேல்பறியா நகும்." எ-ம் "அவ்விய நெஞ்சத்தானுக்கமுஞ் செவவியான், கேடு நினைக்கப்படும்." எ-ம் இவை செய்யுளிலே தொடைநோக்கி ஐகார ஔகாரங்கள் நின்ற இடத்துப் போலிவந்தவாறு காண்க.

இனி இவ்வாறே ஆசிரியர் தொல்காப்பியனார். "அகர இகரம் ஐகாரமாகும்" "அகர உகர மௌகாரமாகும்" "அகரத்திம்பர் யகரப்புள்ளியும், ஐயெனெடுஞ்சினை மெய்பெறத்தோன்றும்." எனக் கூறியதறிந்தும், அய்இ இந்த மூன்றுங்கூடி ஐகாரமாயிற்று. எ-ம் அவ்உ இந்தமூன்றுங்கூடி ஔகாரமாயிற்று. எ-ம் பொருள்கூறுவாருமுளர். அது போலியிலக்கணமாகாமையுணர்க.

இந்த, 125 ம் சூத்திரத்தின் இரண்டாமுரை இராமாநுச கவிராசருடையது. இவ்விஷயத்தில் விசாகப்பெருமாள் ஐயரும் அகரமும் யகரவொற்றுஞ் சேர்ந்து ஐகாரம்போன்றும், அகரமும் வகரவொற்றுஞ் சேர்ந்து ஔகாரம்போன்றும் ஒலிக்கும் என்றார். (எ0)

**பரீக்ஷை** வினாக்கள்:—182. மகரமெய் எங்கேநின்றபோது எந்த மெய் வந்து ஒத்து நடக்கும்? 183. அகரவுயிர் எங்கே நின்றபோது எந்த வுயிர் வந்து ஒத்து நடக்கும்? 184. நகரமெய் எங்கே நின்றபோது எந்த மெய் வந்து ஒத்து நடக்கும்? 185. எந்த எழுத்துக்கள் கூடி ஐகாரமொலிக்கும்? 186. எந்த எழுத்துக்கள்கூடி ஔகாரமொலிக்கும்? 187. எவ்வெழுத்துக்கள்கூடி எகரமொலிக்கும்? 188. எவ்வெழுத்துக்கள் கூடி ஒகரம் ஒலிக்கும்?

## எழுத்தின் சாரியைகள்.

கஉசு. மெய்க ளகரமு நெட்டுயிர் காரமும்
ஐயௌக் கானு மிருமைக் குறிலிவ்
விரண்டொடு கரமுமாஞ் சாரியை பெறும்பிற.

இ-ள். மெய்கள் அகரமும் - ஒற்றுக்கள் அகரச்சாரியையும்,—நெட்டுயிர் காரமும் - உயிர் நெடில்கள் காரச் சாரியையும்,—ஐ ஔக் கானும் - (அவற்றுள்) ஐகார ஔகாரங்கள் (காரச்சாரியையைப் பெறுதலுமன்றிக்) கான்சாரியையும்,—இருமைக்குறில் இவ்விரண்டொடு கரமும் - உயிர்க்குறிலும் உயிர்மெய்க்குறிலும் கரம் கான் என்னும் இரண்டையும் தனித்தனிபெறுதலுமன்றிக் கரச்சாரியையும்,—ஆம் சாரியை பெறும் - ஆகின்ற சாரியைகளைப் பெறும்.

மெய்கள் அவ்வும் என்னாது (சாரியையாய் வருவதற்குஞ் சாரியை சேர்த்து) அகரமுமென்றமையால் கரம், காரம், கான் வரின் அவை மெய்யெழுத்திற்குச் சாரியையாய் வந்த அகரத்தினது சாரியை என்றுகொள்க. எனவே மெய்யெழுத்துகள் அ என்னுஞ் சாரியையையும் அதுபெற்றபின் கரம்,

Digitized By Roja Muthiah Research Library

காரம், கான் என்னுமூன்றுசாரியைகளில் ஒன்றையும் உடன்பெறுமென்றறிக. குற்றெழுத்தொடு கான் சாரியை கூடும்போது இடையிலே ஆய்தம் விரியும். அகரமும், கரமும், கானும் என்று மூன்றுசாரியை சொல்லிவிட்டுப் பின்பு, இவ்விரண்டொடு என்று இகரச்சுட்டாற் குறித்தமையால் சமீபத்திலுள்ள கான், காரம் என்னு மிரண்டு சாரியையுங் கருதப்பட்டன.

உ-ம். க, ங, ச, ஞ எ-ம், ஆகாரம், ஈகாரம், ஐகாரம், ஔகாரம் எ-ம், ஐகான், ஔகான். எ-ம், அகாரம், அஃகான், அகரம்; மகாரம், மஃகான், மகரம், எ-ம், வரும். வடமொழியிலே உயிர்மெய் நெடில்கள் சாரியைபெறுவனவாயினுந் தமிழில் உயிர்மெய்நெடில்கள் சாரியைபெறமாட்டாவாதலின் உயிர்மெய் நெடில்களுக்குச் சாரியை கூறாதுவிட்டார். மெய்கள் அகரமும் என மெய்யை முதலெடுத்துக் கூறியதுமெய்கள் சாரியை பெற்றன்றித் தனித்து உச்சரிக்கப்படா. உயிருமுயிர்மெய்க்குறிலுஞ் சாரியை பெறுமலும் உச்சரிக்கப்படும் என்பது விளக்குதற்காம்.

இச்சூத்திரத்திற் சாரியை என்றது உச்சாரணத்தின்பொருட்டு எழுத்துக்களோடு சேர்க்கப்படுமெழுத்தை யென்றறிக. "ஹகாராதிஷ்வகார உச்சாரணார்த்த:" என்று வடமொழி வியாகரணங் கூறுதலுமறிக.

விகற்பத்தின் முடித்தலென்னுமுத்தியால் மேல் விரிந்து முடிந்துகிடந்தனவற்றை விளங்கவேண்டி இங்கே தொகுத்து முடித்தலால், இச்சூத்திரம் முடிந்ததுமுடித்தலென்னு முத்தி.

மேல்விரிந்துகிடந்தன சில வருமாறு:—68-ம் சூ. 'வல்லினங் க ச ட த ப ற வெனவாறே' என்பதில் அகரச்சாரியையும், கஉ0-ம் சூ. 'மகாரம் நைந்திரொற்றும்' என்பதில் அகரச்சாரியையுடன் காரச்சாரியையும், கூகூ-ம் சூ. 'வஃகான்மிசையுமக்குறுகும்' என்பதில் அகரச்சாரியையுடன் கான்சாரியையும் மெய்யெழுத்துப் பெற்றமைகாண்க. கூக-ம் சூ. 'உகரமாறுறைகான்மூன்றே, ஔகானொன்றே மஃகான்மூன்றே' என்பதில் கரம் என்னுஞ் சாரியையும், கான் என்னுஞ் சாரியையும் உயிர்பெற்றமையும், 'அ இ உ எ ஒக்குறிலைந்தே' 'ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ நெடில்' என உயிர்சாரியைபெறுமலும், கஉச-ம் சூ. 'நவ்வொடுசிலவழி' என உயிர்மெய்க்குறில் சிலவிடத்துச் சாரியைபெறுமலும் வந்தமை காண்க. இவற்றையும இவைபோல்வனவற்றையுங் கண்டு மேல்விரிந்துகிடந்தனவற்றை இச்சூத்திரந் தொகுத்துமுடித்தலை வகைபட விளங்குக.

எழுத்தின் அகத்திலக்கணமாகிய பத்துவிஷயங்களுமல்லாது, எழுத்துக்களின் உச்சாரணவுபகாரமாக 'மெய்களகரமும்' என்று பிறவிடயஞ் சொல்லப்படுகின்றதே யெனின்; அ என்பதை அகரம் என்றும், அகாரம் என்றும், அஃகான் என்றும், ம என்பதை மகரம் என்றும், மகாரம் என்றும், மஃகான் என்றும், வழங்குதலும் ஒருவாற்றானேக்கின் ஓரொலியைக் குறித்தற்குப் பலவெழுத்தினொலியுமொத்துவந்த ஒருவகைப்போலியென்று கொள்ளுதற்கும் பொருந்துமாதலின் இவ்விஷயம் பிறவிடயமன்றென்க.



Digitized By Roja Muthiah Research Library

பரீக்ஷை வினாக்கள்:—189. எவ்வெழுத்துக்கள்கூடி ஐகாரமாயொலிக்கும்? 190. ஔகாரமாயொலித்தற்கு எவ்வெழுத்துக்கள்கூடவேண்டும்? 191. மெய்யெழுத்துக்கள் எந்தச்சாரியை பெறும்? 192 மெய்கள் சாரியைபெறுமற்றனித்து உச்சரிக்கப்படுதலுமுண்டோ? 193. ஐகாரம் எந்தச்சாரியைகளைப் பெறும்? 194. உயிர்க்குறில் எந்தச்சாரியையைப்பெறும்? 195. உயிர்மெய்க்குறில் எச்சாரியைபெறும்? 196. சாரியைபெறுமலும் உச்சரிக்கப்படும் எழுத்துக்கள் எவை? 197. ஒருசாரியையையும் ஏற்காமலே வருமெழுத்துக்கள் எவை?

---

## இவ்வியலுக்குப்புறனடை.

கஉஎ. மொழியாய்த் தொடரினு முன்னனைத் தெழுத்தே.

இ - ள். எழுத்து - எழுத்துக்கள்,—மொழியாய்த் தொடரினும் - பதமாயினும் அப்பதம் தன்னொடும் உருபொடும் தொடர்ந்தாலும்,—முன் அனைத்து - முன் சொல்லப்பட்ட அப்பத்திலக்கணத்தையு முடையனவாகும்.

எழுத்தென்பது சாதியொருமையாதலால் அனைத்தென்னும் ஒருமையோடு முடிந்தது.

வ - று. அம்கல்; அ, எ-ம், ஆல், ஆ, எ-ம், கடல், க, எனவும், கண்டுகொள்க. இடையீறுகளில் நிற்குமெழுத்துக்களையு மிவ்வாறுநோக்கியுணர்க. இவ்வுதாரணங்களில் உயிரெழுத்தும், மெய்யெழுத்தும், சார்பெழுத்தும் மொழிக்கு அங்கமாய்த் தொடர்ந்துநிற்கு நிலையினும், மொழியாகுதற்குமுன்னே தனித்து எழுத்தாகிநிற்கு நிலையினும் பெயர், பிறப்பு, உருவம், மாத்திரை முதலாயின ஒத்து விகற்பமின்றியிருத்தல் காண்க.

"மொழிப்படுத்திசைப்பினுந்தெரிந்துவேறிசைப்பினும், எழுத்தியல்திரியாவென்மனார்புலவர்" என்றார் ஆசிரியர் தொல்காப்பியரும்.

உகரம் தனியே நிற்குநிலைதவிரச் சிலவெழுத்துக்களோடு தொடர்ந்து குற்றியலுகரமெனப்பட்டு மாத்திரை வேறுபடும். ஐகாரந் தனிநிற்குநிலையின்றி மொழியாய்த் தொடர்ந்தவிடத்து மாத்திரையாற் பேதப்படும்.

இவ்வாறு சிலவெழுத்துக்கள் பேதப்படுமாயினும் பெரும்பான்மைபற்றி முன்னனைத்தென்றார். (கஉஎ)

எழுத்தியன் முற்றிற்று.

---

Digitized By Roja Muthiah Research Library

# உ. பதவியல்.

## பதம்.

[பதம் இன்னதென்பதும், அதன் வகையும்.]

கஉ அ. எழுத்தே தனித்துந் தொடர்ந்தும் பொருடரிற்
பதமா மதுபகாப் பதம்பகு பதமென
இருபா லாகி யியலு மென்ப.

இ - ள். எழுத்தே - எழுத்துக்கள் தாமே,—தனித்தும் தொடர்ந்தும் பொருள் தரின் பதமாம் - ஒவ்வொன்றாகத் தனித்தும் இரண்டுமுதலாகத் தொடர்ந்தும் பிறபொருளைத் தருமாயின் பதமாம்,—அது பகாப்பதம் (என) பகுபதமென் இருபாலாகி இயலும் - அப்பதம் பகாப்பதமெனவும் பகுபதமெனவும் இரண்டுவகையினையுடையதாகி நடைபெறும்,—என்ப - என்று சொல்லுவர் புலவர். எ - று.

எழுத்தே தனித்தும் பதமாம், தொடர்ந்தும் பதமாம் பிறபொருள் பயந்தபோது என்றறிக.

தனித்தும் என்பதனால் ஓரெழுத்து மொழியும், தொடர்ந்தும் என்பதனாற் பலவெழுத்துமொழியுங் கருதப்பட்டன.

உ - ம். ஆ, ஈ என ஓரெழுத்துமொழிகள் காண்க. கிளி, அணி; மரம், காலம்; அரக்கு, கஞ்சம்; பம்பரம், தரங்கம்; உத்திராடம், சதபத்திரி எனப் பலவெழுத்துமொழி காண்க.

எழுத்தே பொருடரின் பதமாம் எனவே பொருடராவிடிற் பதமாகாதென்று எதிரதுமறுத்து மீட்சிமொழியாயிற்று.

உ - ம். கி, என்று தனித்துவந்து பொருடராமையிற் பதமாகாமை காண்க.

இறிஞி என்று பலவெழுத்துத் தொடர்ந்துவந்து பொருடராமையிற் பதமாகாமை யுணர்க.

கி என்பது தனியே நின்று இகரம் என்னும் எழுத்தாகிய பொருளைத் தருமே, இறிஞி என்று தொடர்ந்த மூவெழுத்துக்களும் இகர றிகர ஞிகர எழுத்துக்கள் என்னும் பொருளைத் தருமே இங்ஙனமாகவும் பதமாகாவென்னலாமோவெனின் இங்கே பொருளென்றது எழுத்தாகிய பொருளையன்று பிறபொருளையாதலின்; பிறபொருளையுணர்த்தாமையிற் பதமாகவில்லையென்றறிக.

இங்கே எழுத்தெனக்காட்டும்போதும் பதமாமென்று ஆசிரியர் கருதினராயின் பொருடரின் என்பதைவிட்டு எழுத்தே தனித்துந் தொடர்ந்தும் பதமாம் என்று கூறுவர். இவ்வாறுகூறுமற் பொருடரின் என்பதைக் கூடிக்கூறினமையாற்றான் எழுத்தல்லாத பிறபொருளையே ஈண்

Digitized By Roja Muthiah Research Library

டிப் பொருளென்று கருதினரென்பது தெளிவாயிற்று. "தன்னையுணர்த்தினெழுத்தாம்பிறபொருளைச், சுட்டுதற்கண்ணேயாஞ்சொல்" என்று பிறர் வகுத்துணர்த்தியதும் அறிக. (க)

[ஓரெழுத்துமொழி.]

கஉகூ. உயிர்மவி லாறுந் தபநவி லைந்துங்
கவசவி னாலும் யவ்வி லொன்றும்
ஆகு நெடினொது வாங்குறி லிரண்டோ
டோரெழுத் தியல்பத மாறேழ் சிறப்பின.

இ-ள். உயிர் மவில் ஆறும் - உயிர் வருக்கத்திலும் மவ்வருக்கத்திலும் அவ்வாறும்,—த ப ந வில் ஐந்தும் - தவ்வருக்கத்திலும் பவ்வருக்கத்திலும் நவ்வருக்கத்திலும் ஐவைந்தும்,— க வ ச வில் நாலும் - கவ்வருக்கத்திலும வவ்வருக்கத்திலுஞ் சவ்வருக்கத்திலும் நந் நான்கும,—யவ்வில் ஒன்றும் - யவ்வருக்கத்தில் ஒன்றும்,—ஆகும் நெடில் - ஆகுநெட்டெழுத்துமொழி நாற்பதும்,—நொது ஆம் குறில் இரண்டோடு - நொவவுந் துவவும் ஆகுங் குற்றெழுத்துமொழி இரண்டுடனே,—ஓரெழுத்து இயல்பதம் ஆறேழ் சிறப்பின - ஓரெழுத்தாலாகியமொழி நாற்பத்திரண்டுஞ் சிறந்தனவாம. எ - று.

உ - ம். ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ எ - ம், மா, மீ, மூ, மே, மை, மோ எ - ம், தா, தீ, தூ, தே, தை எ - ம், பா, பூ, பே, பை, போ எ - ம், நா, நீ, நே, நை, நோ எ - ம், கா, கூ, கை, கோ எ - ம், வா, வீ, வை, வௌ எ - ம், சா, சீ, சே, சோ எ - ம், யா எ - ம், நொ, து எ - ம், வரும். இவற்றுள் ஊ - இறைச்சி. ஓ - மதகுநீர் தாங்கும் பலகை. பே - நுரை. நே - அன்பு. சோ - மதில். நொ - துன்பப்படு. து - உண்.

இவை சிறப்பின எனவே கு, கௌ, பீ, வே என்பனவும் அவ் என்னுஞ் சுட்டுப்பெயர்ப்பொருளை ஒப்புமையாற் காட்டுகின்ற ஔ என்பதும், அ, இ, உ என்னுஞ் சுட்டிடைச்சொல்லும், எ என்னும் வினாவிடைச்சொல்லும், ஒ என்னும் முதனிலை இடைச்சொல்லும் ஆகிய உயிர்க்குற்றெழுத்தாலாகிய ஓரெழுத்துமொழிகளும், கு, கௌ, வௌ, பீ, கு, ஞெ என்பனவும் இவைபோல்வனவும் சிறப்பில்லாத ஓரெழுத்துமொழிகளெனக்காண்க. (உ)

[பல்லெழுத்தொருமொழி.]

கூ0. பகாப்பத மேழும் பகுபத மொன்பதும்
எழுத்தீ றாகத் தொடரு மென்ப.

இ-ள். பகாப்பதம் ஏ (ழெழுத்து) ஈறு ஆக - பகாப்பதங்கள் இரண்டெழுத்து முதல் ஏழெழுத்தீறாகவும்,—பகுபதம ஒன்பது எழுத்து ஈறாக - பகுபதங்கள் இரண்டெழுத்துமுதல் ஒன்பதெழுத்தீறாகவும்,—தொடரும் என்ப - தொடருமென்று சொல்லுவர் புலவர். எ - று.

இச்சூத்திரத்தாற் கூறப்படுவன பலவெழுத்துமொழியாதலின் இரண்டெழுத்துமுதல் என்பது வருவித்துரைக்கப்பட்டது தொடர்தற்கின்றியமை

Digitized By Roja Muthiah Research Library

யாமையின். எழுத்தென்பதை எழுஎன்பதனோடுங் கூட்டியுரைசெய்யப்பட்டமையால் எண்ணும்மைகள் உரையில் எழுதப்படவில்லை.

உ - ம். அணி, அறம், அகலம், அருப்பம், தருப்பணம், உத்திரட்டாதி என்பன பலவெழுத்துப் பகாப்பதங்கள்,

கூனி, கூனன், குழையன், பொருப்பன், அம்பலவன், அரங்கத்தான், உத்திராடத்தான், உத்திரட்டாதியான் என்பன பலவெழுத்தாய்வந்த பகுபதங்கள். நடத்துவிப்பிக்கின்றான் எனப் பகுதிமுதலிய உறுப்பு வேறுபட்டு வருவனவற்றிற்கு இவ்வரையறையில்லை ஒன்பதெழுத்தின்மேற்பட்டும் வருமென்றறிக. (௩)

[பகாப்பத இலக்கணம்.]

௧௩௧. பகுப்பாற் பயனற் றிடுகுறி யாகி
முன்னே யொன்றாய் முடிந்தியல் கின்ற
பெயர்வினை இடையுரி நான்கும் பகாப்பதம்.

இ - ள். பகுப்பால் பயன் அற்று - பிரிக்கப்படுதலாற் பொருட்பயனின்றி,—இடுகுறியாகி - காரணமின்றி இடப்பட்ட குறியாகி,—முன்னே ஒன்றாய் முடிந்து இயல்கின்ற - தோன்றிய காலந்தொட்டு ஒரு பதமாய் முடிந்து நடக்கின்ற,—பெயர் வினை இடை உரி நான்கும் பகாப்பதம் - பெயர்ச்சொல்லும் வினைச்சொல்லும் இடைச்சொல்லும் உரிச்சொல்லுமாகிய நான்கும் பகாப்பதங்களாம். எ - று.

உ - ம். வாழை, நீர், நெருப்பு, பொன், மரம், வேர் என்பன பெயர்ப்பகாப்பதம். நட, வா, அடி, மிதி, உண், தின், வெஃகு என்பன வினைப்பகாப்பதம். மன், கொல், போல், மற்று, பிறிது என்பன இடைப்பகாப்பதம். உறு, கழி, நனி, தவ, கடி என்பன உரிப்பகாப்பதம்.

உறு, கழி, நனி, தவ என்பன மிகுதிப்பொருளன. கடி - மணமுதலியபொருளது. ஏற்புழிக்கோடலென்னுமுத்தியால் இடுகுறியாகி என்பதைப்பெயருக்கு மாத்திரங்கொண்டு, மற்றெல்லாவற்றையும் நால்வகைக்குங் கொள்க.

நிரூபணம்: வாழை என்னும் பகாப்பதத்தை வா+ழை எனப்பிரித்தால் பிரிந்திருக்கிற அவ்விரண்டு பங்கும் பொருளிழந்து அநர்த்தமாயினவமை காண்க. (அநர்த்தம் - பயனின்மை, வீண்.) வா என்னும் பங்குக்கு வாராயென்று பொருளில்லையோவெனில் அது பிறிது சொல்லின் பொருளன்றி வாழை என்னும் பொருளின் பங்காயியையும் பொருளில்லையென்றறிக.

பயனற்று என்பதற்குப் பகுதி விகுதிகளாகிய பயனில்லாமல் என்றுரைக்கிற் பகுதி விகுதி இல்லாமை பயனின்மை என்றாகி அவை இல்லாதனவாகிய பகாப்பதமும் பயனற்றனவென்று முடிந்து விபரீதமாகுதலறிக.

[பகுபதம்.]

௧௩௨. பொருளிடங் காலஞ் சினைகுணந் தொழிலின்
வருபெயர் பொழுதுகொள் வினைபகு பதமே.

Digitized By Roja Muthiah Research Library

இ - ள்: பொருள் இடம் காலம் சினை குணம் தொழிலின் வருபெயர். பொருளும் இடமுங் காலமுஞ் சினையுங் குணமுந் தொழிலுங் காரணமாக வருகின்ற பெயர்ச்சொற்களும்,—பொழுது கொள் வினை - தெரிநிலையாகவுங் குறிப்பாகவுங் காலத்தைக்கொள்ளும் வினைச்சொற்களும்,—பகுபதம் - பகுபதங்களாகும். எ - று.

பொழுதுகொள்வினை பகுபதமெனவே அவ்விருவகை வினையாலணையும் பெயர்களும் பகுபதமாமென்பது அருத்தாபத்தியாற் கூறினாரென்வறிக. அவ்விருவகை வினையாலணையும் பெயர்களாவன: தெரிநிலைவினையாலணையும் பெயர், குறிப்புவினையாலணையும்பெயர் என்னுமிரண்டும் என்றறிக.

உ - ம். பொன்னன் என்பது பொருட்பெயர்ப்பகுபதம்,
அகத்தன் என்பது இடப்பெயர்ப்பகுபதம்.
ஆதிரையான் என்பது காலப்பெயர்ப்பகுபதம்.
கண்ணன் என்பது சினைப்பெயர்ப்பகுபதம்.
கரியன் என்பது குணப்பெயர்ப்பகுபதம்.
ஊணன் என்பது தொழிற்பெயர்ப்பகுபதம்.

நடந்தான், நடக்கின்றான், நடப்பான் என்பன உடன்பாட்டுத்தெரிநிலைவினைமுற்றுப் பகுபதம்.

நடந்த, நடக்கின்ற, நடக்கும் என்பன உடன்பாட்டுத்தெரிநிலைப் பெயரெச்சவினைப்பகுபதம்.

நடந்து, நடக்க, நடக்கின் என்பன உடன்பாட்டுத்தெரிநிலைவினை வினையெச்சப்பகுபதம்.

நடந்திலன், நடக்கின்றிலன், நடவான் என்பன எதிர்மறைத்தெரிநிலைவினைமுற்றுப்பகுபதம்.

நடவாத என்பது எதிர்மறைத்தெரிநிலைவினைப்பெயரெச்சப்பகுபதம்.

நடவாது, நடவாமல் என்பன எதிர்மறைத்தெரிநிலைவினை வினையெச்சப்பகுபதம்.

பொன்னன், ஊணன், அற்று, இற்று, எற்று என்பன உடன்பாட்டுக் குறிப்புவினைமுற்றுப்பகுபதம்.

கரிய, பெரிய என்பன உடன்பாட்டுக் குறிப்புவினைப் பெயரெச்சப் பகுபதம்.

பைய, மெல்ல என்பன உடன்பாட்டுக்குறிப்புவினை வினையெச்சப்பகுபதம்.

அல்லன், இல்லன், அன்று, இன்று என்பன எதிர்மறைக்குறிப்புவினைமுற்றுப்பகுபதம்.

அல்லாத, இல்லாத, என்பன எதிர்மறைக்குறிப்புவினைப்பெயரெச்சப்பகுபதம்.

அன்றி, இன்றி, அல்லாமல், இல்லாமல் என்பன எதிர்மறைக்குறிப்புவினை வினையெச்சப்பகுபதம்.

Digitized By Roja Muthiah Research Library

நடந்தான், நடந்தவன் என்பன தெரிநிலைவினையாலணையும் பெயர்ப்பகுபதம்

பொன்னன், பொன்னவன் என்பன குறிப்புவினையாலணையும் பெயர்ப்பகுபதம்.

பெயர்ப்பகுபதம் பகுதி விகுதி யிரண்டிலும் பொருட்சிறப்புடையதாய்க் காலங்கொள்ளாது வேற்றுமையுருபேறாதுவரும். வினைக்குறிப்புமுற்றுப் பகுபதம் பகுதியிற் பொருட்சிறப்புடையதாய்க் காலத்தைக் குறிப்பாகக் காட்டி வேற்றுமையுருபேலாது வரும். வினைக்குறிப்புமுற்றாலணையும் பெயர்ப்பகுபதம் விகுதியிற் பொருட்சிறப்புடையதாய்க் காலத்தைக் குறிப்பாகக் காட்டி வேற்றுமையுருபேற்றுவரும். இவையே இம்மூன்றுக்கும் வேறுபாடாம். உ-ம். பொன்னனை வணங்கினன்; சாத்தன் பண்டுபொன்னன், பண்டுபொன்னனைக் கொணர்ந்தேன் எனவரும்.

தெரிநிலைவினைமுற்றுப்பகுபதம் பகுதியிற் பொருட்சிறப்புடையதாய்க் காலத்தை வெளிப்படையாகக் காட்டி வேற்றுமையுருபேலாதுவரும். தெரிநிலைவினையாலணையும் பெயர்ப்பகுபதம் விகுதியிற் பொருட்சிறப்புடையதாய்க் காலத்தை வெளிப்படையாகக்காட்டி வேற்றுமையுருபேற்றுவரும். இவையே இவ்விரண்டற்கும் வேறுபாடாம். உ-ம். சாத்தனடந்தான்; நடந்தானைத் தடுத்தேன் எனவரும்.

எல்லாச்சொற்களையுங் கூறுங்காற் பொருள் சிறக்குமிடத்தெழுத்தை எடுத்தும், அயலெழுத்தை நலித்தும், மற்றையெழுத்துக்களைப் படுத்துங் கூறுக.

மேற்கூறிய பெயர்ப்பகுபதங்களுள் அடங்காது வேறாய் வருவனவுஞ் சிலவுள: அவை தொழிற்பெயரும், பண்புப்பெயரும், பிறபெயருமாம். உ-ம். நடத்தல், வருதல், உண்டல், சேறல் எ-ம், செம்மை, கருமை எ-ம், சேர்ந்தார்க்கொல்லி, உடுக்கை எ-ம், வரும். (௫)

[பகுபதவுறுப்புக்கள்.]

௧௩௩. பகுதி விகுதி யிடைநிலை சாரியை
சந்தி விகார மாறினு மேற்பவை
முன்னிப் புணர்ப்ப முடியுமெப் பதங்களும்.

இ-ள். பகுதி விகுதி இடைநிலை சாரியை சந்தி விகாரம் ஆறினும் - முதனிலையும் இறுதிநிலையும் இடைநிலையும் சாரியையுஞ் சந்தியும் விகாரமும் ஆகிய இவ்வாறுறுப்பினுள்ளும்,—ஏற்பவை முன்னிப் புணர்ப்ப - பொருளமைதிக்கு ஏற்பவைகளை நினைத்து அறிவுடையோர் கூட்டிமுடிக்க,—எப்பதங்களும் முடியும் - எவ்வகையான பகுபதங்களும் முடிவுபெறும். எ-று.

உ-ம். கூனி என்பது கூன்+இ எனப் பகுதிவிகுதிகளான் முடிந்தது. உண்டான் என்பது உண்+ட்+ஆன் என அவ்விரண்டுடன் இடைநிலைபெற்று முடிந்தது. உண்டனன்என்பது உண்+ட்+அன்+அன் என அம்மூன்றுடன் சாரியைபெற்று முடிந்தது. பிடித்தனன் என்பது பிடி+த்+த்+அன்+அன் என அந்நான்குடன் சந்தி பெற்று முடிந்

தத. நடந்தனன் என்பது நட+த்+த்+அன்+அன் என அவ்வைந்தும் பெற்றுச் சந்தியால்வந்த தகர வல்லொற்று மெல்லொற்றுதலாகிய விகாரமும் பெற்று முடிந்தது.

பதப்புணர்ச்சிக்கு விதிக்கப்பட்ட தோன்றன்முதலாகிய மூன்று புணர்ச்சிவிகாரங்களையும் வலித்தன்முதலாகிய ஒன்பது செய்யுள்விகாரங்களையும் இது பெறுமென மாட்டேதலால் இது மாட்டெறிந்தொழுகலென்னுமுத்தி.

பிரகிருதி என்னும் ஆரியமொழி பகுதியெனவும், விகிருதி என்னும் ஆரியமொழி விகுதி எனவுந் திரிந்து நின்றன. (சஅ)

**பரீக்ஷை வினாக்கள்:**—198. பதமாவதியாது? 199. அப்பதம் எத்தனைவகைப்படும்? 200. ஓரெழுத்து மொழிகள் எவை? 201. பகாப்பதம் எத்தனையெழுத்துமுதல் எத்தனையெழுத்தீறுகத் தொடரும்? 202. பகுபதம் எத்தனையெழுத்துமுதல் எத்தனையெழுத்தீறுசத் தொடரும்? 203. பகாப்பதமாவன யாவை? 204. பகாப்பதம் எத்தனைவகைப்படும்? 205. பகுபதமாவன யாவை? 206. பகுபதம் எத்தனைவகைப்படும்? 207. பெயர்ப்பகுபதம் எத்தனைவகைப்படும்? 208. வினைப்பகுபதம் எத்தனைவகைப்படும்? 209. தெரிநிலைவினைப்பகுபதம் எத்தனைவகைப்படும்? 210. குறிப்புவினைப்பகுபதம் எத்தனைவகைப்படும்? 211. வினையாலணையும்பெயர்ப்பகுபதம் எத்தனைவகைப்படும்? 212. பெயர்ப்பகுபதம், குறிப்புவினைப்பகுபதம், குறிப்புவினையாலணையும்பெயர்ப்பகுபதம் என்னு மூன்றிற்கும் விகற்பமென்னை? 213. தெரிநிலைவினைமுற்றுப் பகுபதம், தெரிநிலைவினையாலணையும் பெயர்ப்பகுபதம் என்னுமிரண்டற்கும் வேறுபாடென்னை? 214. பகுபதங்களெல்லாம் எவைகளான் முடிவுபெறும்?

---

## பகுதி.

[பகுதி இன்னவென்பது.]

**கஙச. தத்தம்,—**

பகாப்ப தங்களே பகுதி யாகும்.

இ-ள். தத்தம் பகாப்பதங்களே - பெயர்ப்பகுபதங்களுள்ளும் வினைப்பகுபதங்களுள்ளும் அவ்வவற்றின் முதலில் நிற்கின்ற பகாப்பதங்களே,— பகுதியாகும் - பகுதிகளாம். எ - று.

பெயர்ப்பகுபதங்கட்கும் வினைக்குறிப்புப் பகுபதங்கட்கும் பெரும்பான்மையும் பெயர்ச்சொற்களும் சிறுபான்மை இடைச்சொற்களும் பகுதிகளாம்.

உ-ம். குழையன், அகத்தன், ஆதிரையான், பல்லன், செய்யன், கூத்தன் எனப் பெயர்ப் பகுபதங்கட்கு குழை, அகம், ஆதிரை, பல், செம்மை, கூத்து என்னும் பொருளாதி யறுவகைப் பெயரும் பகுதியாய் வந்தன. வினைக்குறிப்புமுற்றிற்கும் இவை உதாரணமாமெனக் கொள்க

Digitized By Roja Muthiah Research Library

அவன், எவன், பிறன் எனப் பெயர்ப்பகுபதங்கட்கு இடைச் சொற்கள் பகுதியாய் வந்தன. அற்று, இற்று, எற்று என வினைக்குறிப்புமுற்றுப் பகுபதங்கட்கு இடைச்சொற்கள் பகுதியாய் வந்தன.

படித்தான், விதைக்கிருன், துயில்வான் என்னுந் தெரிநிலைவினைப் பகுபதங்களுக்கு முறையே படி, விதை, துயில் என்னும் வினைப்பகுதிகள் வந்தன.

தத்தம் என்றது பெயர்ப்பகுபதங்களையும் வினைப்பகுபதங்களையும். 'பொருடரிற்பதமாம்' என்று முன்னேதியதினாலும், பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி என்று பகுபதங்களைப் பகுத்தபோது பிரிந்துநின்றநிலைமையிற் பகுதிமாத்திரம் பொருட்பேறுடைய பதமாய் நிற்கும்; விகுதிமுதலானமற்றை யுறுப்புக்கள் பகுதியோடு கூடினபின்னன்றிப் பயன்படாவாமாதலினாலும், இங்கே பகாப்பதங்களே என்றது பகுதிகளையேயென்பது தெளிவாயிற்று. வ - று. படித்தனன் என்னும் பகுபதத்தில் படியென்னும் பகுதி பொருளுணர்த்திப் பதமாகின்றதன்றி த்+த்+அன்+அன் என்றுவந்த சந்தியும், இடைநிலையும், சாரியையும், விகுதியும் பிரிந்துநின்ற நிலைமைக்கண் பொருளுணர்த்தாமை காண்க. அவை காலம், திணைபான்முதலிய வுணர்த்துவனவாயினும் 'எழுத்தே தனித்துந்தொடர்ந்தும் பொருடரிற்பதமாம்' என்றது இப்பொருளையன்றென்றுணர்க. ஆதலின் விகுதி இடைநிலைமுதலிய வுறுப்புக்கள் பதமாகாமையறிக. சென்றுன் என்பதில் ற் இடைநிலையைப் பதமென்று கொள்ளின் றகரம் மொழிக்குமுதலாகி வந்ததென்றுங் கருதல்வேண்டும். அப்படிக் கருதுதல் பெருங்குற்றமாம். இப்படியே பதமென்னுதற் கியலாதவகை பலவுளவாதலாலும், பகுதியைப் பதமென்னுதற்கோரிழுக்கு மின்மையாலும் பகாப்பதங்களே பகுதியாகும் என்றுசிரியர் கூறி விளங்கவைத்தார் பிறரிதற்கு வேறுரை கூறினர். (எ)

[பண்புபபகுதிக்கு எய்தியதன்மேற் சிறப்புவிதி.]

கங. செம்மை சிறுமை சேய்மை தீமை
வெம்மை புதுமை மென்மை மேன்மை
திண்மை யுண்மை நுண்மை யிவற்றெதிர்
இன்னவும் பண்பிற் பகாநிலைப் பதமே.

இ - ள். செம்மை-நுண்மை - செம்மைமுதல் நுண்மையீருகச் சொல்லப்பட்ட பதினென்றும்,—இவற்றெதிர் - இவைகளுக்கெதிரான வெண்மைமுதலானவைகளும்,—இன்னவும் - இவைபோல்வன பிறவும்,—பண்பின் பகாநிலைப்பதம் - பண்புப்பொருளினின்றும் வேறுபொருள் பகுக்கப்படாத நிலையையுடைய பதங்களாம். எ - று.

செம்மைக்கு எதிரான மையீறு:—வெண்மை, கருமை, பொன்மை, பசுமை. சிறுமைக்கெதிரான மையீறு:—பெருமை; சேய்மைக்கு - அணிமை;



Digitized By Roja Muthiah Research Library

தீமைக்கு - நன்மை; வெம்மைக்கு - தண்மை, (குளிர்மை); புதுமைக்கு-முதுமை, (பழமை); மென்மைக்கு - வன்மை, (கடுமை); மேன்மைக்கு - கீழ்மை; திண்மைக்கு - நொய்மை; உண்மைக்கு - இன்மை; நுண்மைக்கு - பருமை.

இன்னவுமென்றதினால் இளமை, செழுமை, கொழுமை, வண்மை, அண்மை, வெறுமை, குறுமை, நெடுமை, உடைமை, பொய்மை; வறுமை என்பனவுங் கொள்க.

இவையெல்லாஞ் சொன்னிலையாற் பகுபதமாயினும் மை விகுதிக்குப் பகுதிப்பொருளல்லது வேறுபொருள் இல்லாமையினாலே பொருணிலையாற் பகாப்பதமாம் என்பது அறிவித்தற்குப் பண்பிற்பகா என்றும், இவை மை விகுதியின்றி இயங்காமையினால் இவ்விகுதியையும் பகுதியாகவே நிறுத்தி மேல்வரும் விகுதியோடு புணர்க்கத்தகும் என்பது அறிவித்தற்கு நிலைப்பதம் என்றுங் கூறினார். பண்புப் பகாப்பதமென்னாது பண்பிற் பகாநிலைப்பதம் என்றது சொற்பொருள் விரித்தலென்னுமுத்தி. செம்மை சிறுமை முதலியவாக எடுத்துக்காட்டிய வாய்பாடுகள் எடுத்துக்காட்டலென்னுமுத்தி. ()

கந௬. ஈறு போதலிடை யுகரமிய் யாதல்
ஆதி நீடலடி யகரமை யாதல்
தன்னொற் றிரட்டன்முன் னின்றமெய் திரிதல்
இனமிக லினையவும் பண்பிற் கியல்பே.

இ - ள். ஈறுபோதல் - இறுதியிலுள்ள மைவிகுதி கெடுதலும்,—இடை உகரம் இ ஆதல் - நடுநின்ற உகரம் இகரமாதலும்,—ஆதி நீடல் - முதனின்ற குறில் நெடிலாதலும்,—அடி அகரம் ஐ ஆதல் - முதனின்ற அகரம் ஐகாரமாதலும்,—தன் ஒற்று இரட்டல் - தன்மெய் நடுவே மிகுதலும்,—முன் நின்ற மெய் திரிதல் - முன்னின்றமெய் வேறொருமெய்யாதலும்,—இனம் மிகல் - வருமெழுத்திற்கு இனவெழுத்து மிகுதலும்,—இனையவும் - இவைபோல்வன பிறவும்,—பண்பிற்கு இயல்பு - அப்பண்பினுக்கு இயல்பாகும்

இவ்விகாரங்கள் பதப்புணர்ச்சிக்குங் கொள்க. இது ஒப்பின்முடித்தலென்னுமுத்தி.

உ - ம். நெடுமை+வழி=நெடுவழி நெடுமையின் மைவிகுதி கெட்டது. கருமை+அன்=கரியன் கருமையின் மை விகுதி கெட்டு நடுநின்ற உகரம் இகரமாயிற்று. பசுமை+இ=பாசி; பசுமையின் மைவிகுதி கெட்டு ஆதிநீண்டது. (ஆதிநீண்டபின்பு பாசு என்பதில் ஈற்றுகரங்கெட்டது குற்றியலுகரப் புணர்ப்புவிதியினாலென்றறிக.) பசுமை+தார்=பைந்தார் பசுமையின் மைவிகுதியும் நடுநின்ற சகரவுயிர்மெய்யுங்கெட்டு வருமெழுத்திற்கு இனவெழுத்து மிகுந்து முதலிலிருந்த அகரம் ஐகாரமாயிற்று. வெறுமை+இலை=வெற்றிலை; வெறுமையின் மைவிகுதி கெ

Digitized By Roja Muthiah Research Library

ட்டுத் தன்னொற்றிரட்டியது. (தன்னொற்றிரட்டினபின் வெற்று என்பதில் உகரங்கெட்டது குற்றியலுகரப்புணர்ச்சிவிதியினாலென்றறிக.) செம்மை+ஆம்பல்=சேதாம்பல்; செம்மையின் மைவிகுதி போய் ஆதிநீண்டு முன்னின்ற மகரமெய் தகரமெய்யாகத் திரிந்தது.

இவ்விகாரங்கள் அனபன், அழகன் முதலிய வாய்பாடுகளில் எய்தாது செம்மை, சிறுமை முதலாக எடுத்துக்காட்டிய வாய்பாடுகளிலே எய்தவைத்தலால் இது எடுத்த மொழியினெய்தவைத்தலென்னுமுத்தி. (கூ

கஙஎ. நடவா மடிசீ விடுகூ வேவை
நொப்போ வெளவுரி ஞுண்பொருந் திருந்தின்
தேய்பார் செல்வவ் வாழ்கே ளஃகென
றெய்திய விருபான் மூன்றா மீற்றவுஞ்
செய்யெ னேவல் வினைப்பகாப் பதமே.

இ - ள். நட—அஃகு என்று - நட, வா, மடி, சீ, விடு, கூ, வே, வை, நொ, போ, வெள, உரிஞ், உண், பொருந், திரும், தின், தேய், பார், செல், வவ், வாழ், கேள், அஃகு என்று,—எய்திய இருபான் மூன்று ஆம் ஈற்றவும்-முதனிலையாகப் பொருந்திய இருபத்து மூன்றாகும் உயிரு மெய்யுங் குற்றியலுகரமுமாகிய ஈற்றையுடைய இவை முதலாகிய வாய்பாடுகளெல்லாம்,—செய் என் ஏவல் (பகாப்பதம்) - செய்யென்னும் ஏவலினது பகாப்பதமாகிய பகுதியும்,—வினைப்பகாப்பதம் - மற்றவினைகளது பகாப்பதங்களாகிய பகுதிகளுமாம், எ - று.

விகற்பத்தின் முடித்தலென்னு முத்தியால் இருபத்து மூன்றீற்றனவாக விகற்பித்து எடுத்துக்காட்டும் வாய்பாடுகளெல்லாம் இப்பொதுவாய்பாட்டில் அடங்குமென்பார் முடிந்தது முடித்தலென்னுமுத்தியாற் செய்யெனவுங் கூறினார்.

வினைப்பகாப்பதம் என்ற அளவிலே ஏவற்பகாப்பதமும் அடங்கு மாயினும் நட, வா முதலிய முதனிலைகளே ஏவற்பொருளுணர்த்தாது ஆய் விகுதியோடு புணர்ந்து நின்று உணர்த்துமென்றறிவித்தற்கு வேறுகூறினார்.

'நாலாறுமீறே' என்று இருபத்துநான்கீறு சொல்லப்பட்டிருக்க இச்சூத்திரத்தில் எகரவுயிர் எ என்னும் வினை விடைச்சொல்லிலன்றிப் பிறிதொரு சொல்லிலும் ஈறாகாமையால் அது தவிர்ந்தன இவ்வினைப் பகுதிக்கீறுமென்பார் ஆ மீற்றவும் என்றார்.

நட என அகரவீற்றுளொன்றும், வா என ஆகாரவீற்றுளொன்றும், மடி என இகர வீற்றுளொன்றும், சீ என ஈகாரவீற்றுளொன்றுமாக இப்படியே இருபத்துமூன்றீற்றுக்கும் வரிசையாக எடுத்துக்காட்டிய வாய்பாட்டு வினைப்பகுதிகளைப்போல அநேக வினைப்பகுதிகளுள்ளன என்பார் அஃகாமென்னாது அஃகென்று என எய்திய விருபான்மூன்று ஈற்றவுமென்றார்.

Digitized By Roja Muthiah Research Library

ஏவற்பகுதிக்கு உதாரணம்:—நடவாய், வாராய், உண்ணாய், தின்னாய், அஃகாய் எ-ம், நடமின், வம்மின், உண்மின், தின்மின், அஃகுமின் எனவும் வருமிவ்வேவல்வினைகளில் நட, வா, உண், தின், அஃகு என்று பகுதிகள் காண்க. முன்னிலையேவலொருமை வினைச்சொற்கள் ஆய் என்னும் விகுதி குன்றி நட, வா, உண், தின், அஃகு என நிற்குமெனவுமறிக. நிற்பினும் விகுதியோடு புணர்ந்துநின்றவைகள்போலவே முன்னிலையேவலொருமைப் பொருளுணர்த்துமென்றுகொள்க. பிரயோக விவேக நூலாரும் "முன்னிலையேவலொருமைச்சொற்போலுமுதனிலைகள், அந்நிலைத்தாதுப்பகுதியென்றாகும்" என்றார். தொல்காப்பியரும் "செய்யாயென்னுமுன்னிலைவினைச்சொற், செய்யென்கிளவியாகிடனுடைத்தே" என்றார். இப்படி விகுதிபுணர்ந்து கெட்டுநிற்குஞ்சொற்கள் இன்னும் பலவுண்டு. அவையெல்லாம் பின்காட்டப்படும்.

ஏவலல்லாத மற்ற வினைப்பகுதிக்கு உதாரணம்:—நடந்தான், வந்தான், மடித்தான், சீந்தான், விட்டான், கூவினான், வெந்தான், வைத்தான், நொந்தான், போயினான், வெள்வினான், உரிஞினான், உண்டான், பொருநினான், திருமினான், தின்றான், தேய்த்தான், பார்த்தான், சென்றான், வவ்வினான், வாழ்ந்தான், கேட்டான், அஃகினான் எனவரும் இவற்றைப் பகுத்து முன்னின்றபகுதிகளை மற்றவினைகளில்வந்த பகுதிகளென்று காண்க.

ஏவல்வினை, ஏவலல்லாத மற்றவினை என்னுமிருவகை வினைப்பகுதிகளையு நோக்குங்கால், வா, வே, நொ, வாழ் என்று சிலபகுதிகள் செயப்படுபொருள் குன்றியனவும்; விடு, வை, உண், பார் என்று சிலபகுதிகள் செயப்படுபொருள் குன்றாதனவும்; மடி, தேய் என்று சிலபகுதிகள் செயப்படுபொருள் குன்றுதல், குன்றாமை என்னுமிருவகைக்கும் பொதுவானவுமாய் மூன்றுவகையுண்டென்று தெளிந்து, அவ்வப்பகுதிகளிலிருந்துண்டான வினைகளும் அம்மூவகையாக நடைபெறுமாறு காண்க.

உ-ம். வந்தான், வெந்தான், நொந்தான், போயினான் என்று செயப்படுபொருள்கொள்ளாமல் நின்றன. விட்டான், வைத்தான், உண்டான் என்று செயப்படுபொருள் கொண்டு நின்றன.

மடிந்தான், தேய்ந்தான் என்று செயப்படுபொருள் குன்றியும்; மடித்தான், தேய்த்தான் என்று செயப்படுபொருள் குன்றாமலும் வந்தன. இப்படி ஒருபகுதியிற்றோன்றி வெவ்வேறுருவமாயிருந்து செயப்படுபொருள்குன்றியுங் குன்றாமலும் வருதலுமன்றி, செயப்படுபொருள் குன்றுதற்குங் குன்றாதபெறுதற்கும் பொதுவாக ஒருபகுதியிற்றோன்றி ஒரேவடிவாயிருக்கும் வினையுமுண்டு. உ-ம். வெளுத்தான் இது தான் வெண்ணிறமாயினான் என்றும், புடவையை வெண்மையாக்கினான் என்றும் தன்வினையாயும் பிறவினையாயுமிருந்து, செயப்படுபொருள் அற்றும் பெற்றும் வந்தது. செயப்படுபொருள்குன்றிய பகுதியிலிருந்தும்

Digitized By Roja Muthiah Research Library

பிறவினையுண்டானபோது செயப்படுபொருள் கொள்ளுமென்றறிக. உ-ம். வருவிப்பான், வாழ்விப்பான் எனவரும்.

இந்நூலாசிரியர் வடநூன் மேற்கோளாகத் தனிமொழிகளை விதந்து பகாப்பதம் பகுபதமெனக் காரணப்பெயர் தாமேயிட்டு எழுத்தேயென்னுஞ் சூத்திரமுதல் இதுவரையும் பகாப்பதம் பகுபதமெனப் பலதாஞ்சொல்லுதல் தன்குறி வழக்க மிகவெடுத்துரைத்தலென்னுமுத்தி.

இத்தெரிநிலைவினைப்பகுதிகள் விகுதியோடு புணரும்போது தொழுதான், உண்டான் எனச் சில இயல்பாதலன்றியும், செல் சேறல் என முதனீண்டும், தா தந்தான் எனத் தனிநெடில் குறுகியும், சா செத்தான் என முதல் ஆகாரம் எகரமாகியும், கொணு கொணர்ந்தான் என முதலயலெழுத்துக் குறுகி ரகரமெய் விரிந்தும், விரவு விராவினன் என நடுக்குறில் நீண்டும், முழுகு முழுகினன், மூழ்கினன் என இயல்பும் விகாரமுமாக உறழ்ந்தும், வா வருகின்றன் எனத் தனிநெடில் குறுகி ஒருயிர்மெய் விரிந்தும், கல் கற்றன் என ஈற்றுமெய் வருமெய்யாகத் திரிந்தும், செல் சென்றன் என ஈற்றுமெய் வருமெழுத்திற்கு இனமாகத் திரிந்தும் இன்னும் பலவாறு விகாரப்பட்டும் வரும்.

கா, சா, தா இவை முறையே காத்தான், செத்தான், தந்தான் எ-ம், கல், நில், புல், சொல், இவை கற்றன், நின்றன், புல்லினன், சொன்னன் எ-ம், ஒருநிகராகிய பகுதிகள் பலவிதமாக விகாரப்படுதலால் அவையெல்லாந் தனித்தனி சொல்லப்புகின் விரியுமாதலால், செய்யுள் வழக்கத்தையும் உலக வழக்கத்தையு நோக்கிச் செய்யுள் விகாரமும் புணர்ச்சிவிகாரமுங்கொண்டு அமைத்துக்கொள்க.

தெரிநிலைவினைப் பகுபதங்கட்கு நட, வா முதலிய வினைச்சொற்களேயன்றிச் சிறுபான்மை பெயர்ச்சொல், இடைச்சொல், உரிச்சொற்களும் பகுதியாய்வரும். உ-ம். சித்திரித்தான், கடைக்கணித்தான் என்பவற்றில் முறையே சித்திரம், கடைக்கண் என்னும் பெயர்ச்சொற்கள் பகுதியாயின. (போன்) போன்றன், (புரை) நிகர்த்தான் என்பவற்றில் முறையே போல், நிகர் என்னும் இடைச்சொற்கள் பகுதியாயின. சான்றன், மாண்டான் என்பவற்றில் முறையே சால், மாண் என்னும் உரிச்சொற்கள் பகுதியாயின. பிறவுமிவ்வாறு வருதல் காண்க. (௫௦)

[ஏவற்பகுதிக்கு எய்தியதன்மேற் சிறப்புவிதி.]

கரு அ. செய்யென் வினைவழி விப்பி தனிவரிற்
செய்வியென் னேவ லிணையினீ ரேவல்.

இ-ள். செய் என் வினை வழி - செய்யென்னும் வாய்பாட்டு முதனிலைத் தனி வினையின்பின்,—விப்பி தனி வரின் செய்வியென் ஏவல் - விவ்விகு

தியாயினும் பிவ்விகுதியாயினுந் தனித்து வருமாயின் செய்யென்னு மேவலின்மேல் ஓரேவலாய்ச் செய்வியென்னும் வாய்பாட்டேவற் பகுதியாம்,—இவ்வினையின் ஈரேவல் - அவ்வினையின்பின் இவ்விகுதிகள் தன்னொடும் பிறிதொடும் இணைந்துவருமாயின் செய்விப்பியென்னும் வாய்பாட்டேவற்பகுதியாம்.

உ - ம். நடப்பியாய், நடப்பிப்பாய்; வருவியாய், வருவிப்பாய் எனவரும்

உரையிற் கோடலென்னு முத்தியால் சிறுபான்மை கு, சு, டு, து, பு, று என்னும் ஆறு விகுதிகளுள் ஒன்று பெற்றும் சிலபகுதிகளிலிருக்கிற மெல்லொற்று வல்லொற்றாகத் திரியப்பெற்றும், சிலபகுதிகள் விகாரப்பட்டும் அப்படியே பிறவினையாய் வருமெனக்கொள்க.

உ - ம். போ - போக்கு, பாய் - பாய்ச்சு, உருள் - உருட்டு, நட - நடத்து, எழு - எழுப்பு, துயில் - துயிற்று. இவை கு, சு, டு, து, பு, று விகுதிபெற்று வந்தன. இயங்கு - இயக்கு, திருந்து - திருத்து, தோன்று - தோற்று. இவை மெல்லொற்றுவல்லொற்றாகத் திரிபுற்றதினாற் பிறவினைகளாயின. உருகு - உருக்கு, ஆடு - ஆட்டு, ஆறு - ஆற்று, தேறு - தேற்று. இவை நடுவே இரட்டித்தலாகிய விகாரம் பெற்றுப் பிறவினைகளாயின.

நட, வா முதலிய சிறப்புவாய்பாடுகளையெல்லாம் செய்யென்னும் பொதுவாய்பாட்டுள் அடக்கி முற்சூத்திரத்திற் கூறினாராதலின் செய்யென் வினைவழியென்றார். எனவே நட, வா முதலிய பகுதிகளின்வழி விப்பிவரின் என்று கூறியவாறாம். (கக)

[ஏவலல்லாதவினையின்பகுதிக்கு எய்தியதன்மேற் சிறப்புவிதி.]

கஙகூ. விளம்பிய பகுதிவே றாதலும் விதியே.

இ - ள். விளம்பிய பகுதி - ஏவற்பகுதி வேறாதல்போல அதன்பின்னே சொல்லப்பட்ட மற்ற வினைப்பகுதிகள்,—வேறாதலும் விதி - வி, பி முதலிய பெற்று வேறுபடுதலும் விதியே யாகும். எ - று.

உ - ம். நடத்தினான், நடப்பித்தான், நடத்துவிப்பித்தான்; போக்கினான், போக்கினாய், பாய்ச்சினான், பாய்ச்சினாய், உருட்டுகின்றான், உருட்டுகின்றாய், உருட்டுகின்றேன், நடத்தினேன், எழுப்பினாய், துயிற்றுகின்றாய், இயக்கினான், திருத்தினேன், தோற்றினான்; உருக்கினாய், ஆட்டினான், ஆற்றினேன், தேற்றுகின்றான் எனவரும். இங்கே தன்வினைப் பகுதிகள் பிறவினைப்பகுதிகளாய் ஏவலல்லாத மற்றவினைகளிலும் வந்தமை காண்க. (கஉ)

**பரீக்ஷை** வினாக்கள்:—215. பகுதிகளாவன யாவை? 216. பெயர்ப்பகுபதங்கட்கும் வினைக்குறிப்புப் பகுபதங்கட்கும் எவை பகுதிகளாய் வரும்?

Digitized By Roja Muthiah Research Library

217. பண்புப்பகுதிகள் எவை? 218. மைவிகுதி புணர்ந்துநின்ற பண்புப்பெயர்கள் விகுதியோடாயினும் பதத்தோடாயினும் புணருங்கால் எப்படிப் புணரும்? 219. தெரிநிலைவினைப் பகுபதங்கட்கு எவை பகுதிகளாய் வரும்? 220. முன்னிலையேவலொருமை வினைச்சொற்கள் விகுதி புணர்ந்தேவருமோ விகுதியின்றிவருமோ? 221. தெரிநிலைவினைப் பகுபதங்கட்கு வினைச்சொற்களே யன்றிப் பிறசொற்கள் பகுதியாதலில்லையோ? 222. தெரிநிலைவினைப்பகுதிகள் விகுதிமுதலியவற்றோடு புணருங்கால் எப்படிப் புணரும்? 223. ஒருசிகரனவாகிய வினைப்பகுதிகள் விகுதி முதலியவற்றோடு புணருங்கால் ஒரேவிதமாக விகாரப்பட்டுவருமோ பலவிதமாக விகாரப்பட்டுவருமோ? 224. எவற்பகுதிகள் ஏவலின்மேல் ஓரேவலாதல் எவ்விதத்தாலுண்டாகும்? 225. அப்பகுதிகள் ஏவலின்மேல் ஈரேவலாதல் எவ்வகையாலுண்டாகும்? 226. ஏவற்பகுதிகள் விகுதிபெறுமல் வேறுவிதத்தால் ஏவலின்மேல் ஏவலாதலில்லையோ? 227. ஏவல்வினையல்லாத மற்றவினைப்பகுதிகள் பிறவினைவிகுதி முதலியன பெற்று ஈரேவல் மூவேவல்களாய் வருதலில்லையோ? 228. தெரித்தாய், தெரித்தான் என்னும் பிறவினைகள் உண்டான விதம் எது? 229. 'நடவாமடி சீ' என்னுஞ் சூத்திரத்தில் 'செய்யெனேவல் வினைப்பகாப்பதமே' என்பதற்கு இரட்டுறமொழிதலென்னு முத்தியாற் கூறும் இருபொருள்களெவை? 230. 'செய்யென்வினைவழிவிப்பிதனிவரின்' என்னுஞ் சூத்திரத்திற்கு உதாரணம் நடப்பியாய், வருவியாய் என்று எழுதியதென்னை அவற்றின்பகுதி செய்யென்பதா?

## விகுதி.

கசO. அன்ஆன் அள்ஆள் அர்ஆர் பம்மார்
அஆ குடுதுறு என்ஏன் அல்அன்
அம்ஆம் எம்ஏம் ஓமொ டும்மூர்
கடதற ஐஆய் இம்மின் இர்ஈர்
ஈயர் கயவு மென்பவும் பிறவும்
வினையின் விகுதி பெயரினுஞ் சிலவே.

இ-ள். அன் என்பவும் - அன்முதல் முப்பத்தேழாகச் சொல்லப்பட்டவைகளும்,—பிறவும் - இவைபோல்வன பிறவும்,—வினையின் விகுதி - தெரிநிலைவினைமுற்றுப் பகுபதங்களின் விகுதிகளாகும்,—சில (விகுதி) பெயரினும் - இவற்றுட் சிலவிகுதிகள் பெயர்ப்பகுபதங்களினும் வரும். எ-று.

உம் ஊர் க ட த ற—உம் என்பதேறிய க ட த ற ஒற்றுக்கள். அவை: கும், டும், தும், றும் என்பன.

அன் முதல் முப்பத் தேழாகச் சொல்லப்பட்ட விகுதிகளாவன:—அன், ஆன், அள், ஆள், அர், ஆர், ப, மார், அ, ஆ, கு, டு, து, று என், ஏன்,

Digitized By Roja Muthiah Research Library

அல், அன், அம், ஆம், எம், ஏம், ஓம், கும், டும், தும், றும், ஐ, ஆய், இ, மின், இர், ஈர், ஈயர், க, ய, உம் என்பனவாம்.

இவற்றில் அன் விகுதி தன்மைக்கு எதிரதுபோற்றலென்னுமுத்தியாற் பிற்காலத்துச் சேர்க்கப்பட்டதாகலின், வலியுறுத்தற்கு மீட்டுங் கூறினார்.

| இந்த முப்பத்தேழு விகுதிகளில் | வகை | உ-ம். |
|---|---|---|
| அன், ஆன் | ஆண்பாற்படர்க்கைவிகுதி. | நடந்தனன், நடந்தான். |
| அள், ஆள் | பெண்பாற்படர்க்கைவிகுதி. | நடந்தனள், நடந்தாள். |
| அர், ஆர், ப, மார் | பலர்பாற்படர்க்கைவிகுதி. | நடந்தனர், நடந்தார், நடப்ப, நடமார். |
| (து, டு, று) | ஒன்றன்பாற்படர்க்கை விகுதியுமாம். | நடந்தது, குண்டுகட்டு, கூயிற்று. |
| அ, ஆ | பலவின்பாற்படர்க்கைவிகுதி. | நடந்தன, நடவா. |
| கு, டு, து, று, என், ஏன், அல், அன் | தன்மையொருமைவிகுதி. | நடக்கு, உண்டு, நடந்து, சேறு, நடந்தனென், நடந்தேன், நடப்பல், நடப்பன். |
| அம், ஆம், எம், ஏம், ஓம், கும், டும், தும், றும் | தன்மைப்பன்மைவிகுதி. | நடப்பம், நடப்பாம், நடப்பெம், நடப்பேம், நடப்போம், நடக்கும், உண்டும், நடந்தும், சேறும். |
| ஐ, ஆய், இ | முன்னிலை ஒருமை விகுதி. | நடந்தனை, நடந்தாய், நடத்தி. |
| (ஆய்) | முன்னிலை ஏவலொருமை விகுதியுமாம். | நடவாய். |
| மின், இர், ஈர், (உம்) | முன்னிலை ஏவற்பன்மை விகுதி. | நடமின், நடந்தனிர், நடந்தீர், நடவும். |
| (இர், ஈர்) | முன்னிலைப் பன்மை விகுதி. | நடந்தனிர், நடந்தீர். |
| ஈயர், க, ய | வியங்கோள் விகுதி. | நிலீயர், நடக்க, வாழிய. |
| (அல்) | வியங்கோள் உடன்பாட்டெதிர்மறைகளுக்கு விகுதி. | உண்ணல், செய்யல். |
| உம் | செய்யுமென்னுமுற்றுவிகுதியும், பெயரெச்சவினை விகுதியுமாம். | காணும், பாயும். |

பிறவுமென்றதனால், மருல், அழேல் என ஆல், ஏல் முதலிய விகுதிகளும் வரும்.

பெயரினுஞ் சில என்றதனால் குறிப்பு வினையினுஞ் சிலவென்றது கூறுதே அமைதலின், வினையின்விகுதியென்றது தெரிநிலைவினை விகுதிகளெனக் கொள்க.

Digitized By Roja Muthiah Research Library

தாமே காலங்காட்டும் விகுதி குறிப்புவினைக்கு வருதலில்லையாகவும், டு, து, று என்னுங் காலங்காட்டும் விகுதிகளைக் குறிப்புவினைபெறுமென் பதென்னையெனின், டு, து, று விகுதிகள் காலங்காட்டுதல் தெரிநிலைத்தன்மை வினையிடத்திலாம்; குறிப்புவினைக்குப் படர்க்கையிலே அவ்விகுதிகள் வந்து காலங்காட்டாமனிற்குமென்றறிக.

வினைக்குறிப்புமுற்றுக்கள் குறிப்பாகக் காலங்காட்டுவன வாதலால் இவ்விகுதிகளுள்ளே தாமே காலங்காட்டும் விகுதிகளொழித்து ஒழிந்த அன், ஆன், அள், ஆள், அர், ஆர், அ, டு, து, று, என், ஏன், அம், ஆம், எம், ஏம், ஓம், ஐ, ஆய், இ, இர், ஈர் என்னும் இருபத்திரண்டு விகுதிகளோடு வருமெனக்கொள்க.

உ-ம். கரியன், கரியான்; கரியள், கரியாள்; கரியர், கரியார்; கரியன; குறுந்தாட்டு, கரிது, குழையிற்று; கரியென், கரியேன்; கரியம், கரியாம், கரியெம், கரியேம், கரியோம்; கரியை, கரியாய், வில்லி, கரியிர், கரியீரெனவரும்.

பெயரினுஞ்சில என்றதனால் இவ்விகுதிகளுள் அன், ஆன், அள், ஆள், அர், ஆர், மார், அ, து, இ என்னும் பத்தோடு மன், மான், கள், வை, தை, கை, பி, முன், அல், ன், ள், ர், வ், எ என்னும் பதின்மூன்றும் பிறவும் பெயர்விகுதிகளாம்.

உ-ம். குழையன், வானத்தான், குழையள், வானத்தாள், குழையர், வானத்தார், தேவிமார், குழையன, யாது, பொன்னி; வடமன், கோமான், கோக்கள், அவை, எந்தை, எங்கை, எம்பி, எம்முன், தோன்றல், பிறன், பிறள், பிறர், அவ் எனவரும்.

இன்னும் வினையின் விகுதி பெயரினுஞ் சில என்றதினாலும், பிறவும் என்றதினாலும் பலவகைப்பட்ட வினைகளுக்கும் பெயர்களுக்கும் இவ்விகுதிகளுள் அடங்கியும் அடங்காதும் வரும் விகுதிகளெல்லாங் கொள்ளப்படும்.

தெரிநிலைப்பெயரெச்சவிகுதிகள்: அ, உம் என்னுமிரண்டுமாம்.

உ-ம். செய்த, செய்கின்ற, செய்யும் எனவரும்.

குறிப்புவினைப்பெயரெச்சவிகுதி அ ஒன்றேயாம். கரிய எனவரும்.

உ-ம். விகுதி இடைநிலையேலாது தானே எதிர்காலங் காட்டலாற் குறிப்புவினைப் பெயரெச்சத்துக்கு வாராது.

தெரிநிலைவினையெச்ச விகுதிகள்: உ, இ, ய், பு, ஆ, ஊ, என, அ, ன், ஆல், கால், ஏல், எனின், ஆயின், ஏனும், கு, இய, இயர், வான், பான், பாக்கு, கடை, வை, இடத்து, உம், (வகை); மல், மை, மே என்னு மிருபத்தொன்பதும்பிறவுமாம். இவற்றுள் இறுதியிற் கூறிய மல், மை, மே என்னு மூன்று விகுதிகளும் எதிர்மறையில் வரும்.



Digitized By Roja Muthiah Research Library

உ-ம். நடந்து, ஓடி, போய், நக்குபு, காணு, காணா, உண்ணென, உண்ண, உண்ணின், உண்டால், உண்டக்கால், உண்டானேல், உண்டானெனின், உண்டாலுயின், உண்டானேனும், உணற்கு, உண்ணிய, உண்ணியர், சொல்லுவான், உண்பான், உண்பாக்கு, செய்தக்கடை, செய்தவழி, செய்தவிடத்து, காண்டலும், தோன்றுவகை, கைப்படாவகை, உண்ணுமல், உண்ணுமை, உண்ணுமே என வரும்.

வகையென்பது உடன்பாட்டிலும் எதிர்மறையிலும் வினையெச்ச விகுதியாகும்.

வ - று. பாரதத்தில்—"வானிடைநதியையும்வழுவிலுலகள், தானிட, ருறும்வகைதந்தையேவினுன்." என உடன்பாட்டிலும் "கதுமெனச்சென்று தாய்கைப்படாவகை" எ-ம். கந்தபுராணத்தில்—"புதல்வர்தோன்றுவகைதடுத்த" எ-ம், எதிர்மறையிலும் வகையீறு வினையெச்சத்தில்வருதலால் அதுவுமீண்டு நூதனமாய்ச்சேர்க்கப்பட்டமை யறிக. (நூதனமாய்=புதிதாய்.)

குறிப்புவினையெச்சவிகுதிகள் அ, றி, து, ஆல், மல், கால், கடை, வழி, இடத்து என்னும் ஒன்பதும் பிறவுமாம்.

உ-ம். மெல்ல, அன்றி, அல்லது, அல்லால், அல்லாமல், அல்லாக்கால், அல்லாக்கடை, அல்லாவழி, அல்லாவிடத்து என வரும்.

தொழிற்பெயர் விகுதிகள் தல், அல், அம், ஐ, கை, வை, கு, பு, உ, தி, சி, வி, உள், காடு, பாடு, அரவு, ஆனே, மை, து என்னும் பத்தொன்பதும் பிறவுமாம்.

உ-ம். நடத்தல், ஆடல், வாட்டம், கொலே, நடக்கை, பார்வை, போக்கு, நடப்பு, வரவு, மறதி, புணர்ச்சி, புலவி, விக்குள், சாக்காடு, கோட்பாடு, தோற்றரவு, வாரானே, நடவாமை, பாய்த்து எனவரும்.

மைவிகுதி: செய்தமை, செய்கின்றமை என இறந்தகாலவிடைநிலே, நிகழ்காலவிடைநிலேகளோடு கூடியும் வரும்.

துவிகுதி: அவர் செய்தது, செய்கின்றது, செய்வது என முக்காலவிடைநிலேகளோடு கூடியும் வரும்.

பண்புப்பெயர் விகுதிகள்: மை, ஐ, சி, பு, உ, கு, றி, று, அம், நர் என்னும் பத்தும்பிறவுமாம்.

உ-ம். நன்மை, தொல்லே, மாட்சி, மாண்பு, மழவு, நன்கு, நன்றி, நன்று, நலம், நன்னர் என வரும்.

பிறவினை விகுதிகள்: வி, பி, கு, சு, டு, து, பு, று என்னும் எட்டுமாம்.

உ-ம். செய்வி, நடப்பி, போக்கு, பாய்ச்சு, உருட்டு; நடத்து, எழுப்பு, துயிற்று எனவரும். "விப்பி குசுடுது புறுவெனு மாறும், ஒப்பில் பிறவினைக் குறும் விகு திகளே" என்னுஞ் சூத்திரத்தானு மறிக.

Digitized By Roja Muthiah Research Library

கரை, தேய் என்வரும் தன்வினை பிறவினைகளுக்குப் பொதுவாகிய முதனிலைகள் சிறுபான்மை இவ் விகுதி வேண்டாது கரைத்தான், தேய்த்தான்; கரைத்திலன், தேய்த்திலன்; கரைக்கின்றான், தேய்க்கின்றான்; கரைக்கின்றிலன், தேய்க்கின்றிலன்; கரைப்பான், தேய்ப்பான்; கரைக்கான், தேய்க்கான் எனப் பிறவினைப்பொருளைத் தரும்போது உடன்பாட்டிலும், எதிர்மறையிலும் வல்லெழுத்து மிக்கும்,

கரைந்தான், கரைந்திலன்; கரைகின்றான், கரைகின்றிலன்; கரைவான், கரையான் எனத் தன் வினைப்பொருளைத் தரும்போது வல்லெழுத்து மிகாதும் வருமென்றறிக.

இ, ஐ, அம் என்னும் மூன்று விகுதிகளும் வினைமுதற்பொருளையுஞ் செயப்படுபொருளையுங் கருவிப்பொருளையு முணர்த்தும்.

உ-ம். அலரி, பறவை, எச்சம் என்பன வினைமுதற்பொருளை யுணர்த்தின. ஊருணி, தொடை, தொல்காப்பியம் என்பன செயப்படுபொருளை யுணர்த்தின. மண்வெட்டி, பார்வை, நோக்கம் என்பன கருவிப்பொருளையுணர்த்தின.

விடு, ஒழி விகுதிகள் துணிவுப்பொருளையுணர்த்தும்.

உ-ம். செய்துவிட்டான், செய்தொழிந்தான் எனவரும்.

கொள் விகுதி வினைப்பயன் வினைமுதலைச் சென்றடைதலாகிய தற்பொருட்டுப்பொருளை யுணர்த்தும்,

உ-ம். (கல்லிலேகாலை) அடித்துக்கொண்டான், (நாக்கைக்) கடித்துக்கொண்டான் எனவரும்.

படு, உண் விகுதிகள் செயப்பாட்டுவினைப்பொருளுணர்த்தும்.

உ-ம். கட்டப்பட்டான், கட்டுண்டான் எனவரும்.

மை விகுதி தன்மைப்பொருளுணர்த்தும். (தன்மை=சுபாவம்)

உ-ம். பொன்மை, ஆண்மை எனவரும்.

இரு, இடு என்னும் விகுதிகள் தமக்கென வேறுபொருளின்றிப் பகுதிப்பொருள் விகுதியாய்வரும்.

உ-ம். எழுந்திருக்கின்றான், உரைத்திடுகின்றான் எனவரும்.

முன்னிலையேவலொருமை ஆய்விகுதியும், பெயரெச்சவிகுதியும், தொழிற்பெயர்விகுதியும், வினைமுதற்பொருளையுணர்த்தும் இகரவிகுதியும், செயப்படுபொருளை யுணர்த்தும் ஐ விகுதியும் பகுதியொடு புணர்ந்து பின் கெடுதலுமுண்டு. கெடினும் புணர்ந்துநின்றாற்போலவே தம்பொருளை யுணர்த்தும்.

உ-ம். நீ நட, நீ நடப்பி, நீ செல் என்பவைகளிலே ஆய்விகுதி புணர்ந்து கெட்டது. கொல்களிறு, ஓடாக்குதிரை என்பவைகளிலே பெயரெச்ச

Digitized By Roja Muthiah Research Library

விகுதிகள் புணர்ந்துகெட்டன. அடி, கேடு, இடையீடு என்பவைக ளிலே தல்லென்னுந்தொழிற்பெயர் விகுதி புணர்ந்து கெட்டது.

காய், தளிர், பூ, கனி, திரை, நரை, அலை என்பவைகளிலே வினை முதற்பொருளுணர்த்தும் இகர விகுதி புணர்ந்துகெட்டது.

ஊண், தீன், கோள் என்பவைகளிலே செயப்படுபொருளுணர்த்தும் ஐகார விகுதி புணர்ந்துகெட்டது.

சிறுபான்மை வரிப்புனைபந்து என்பதில் வரிந்து என்பதின் வினையெச்சவிகுதியும், கொள்வாருங் கள்வருநேர் என்பதில் நேர்வர் என்பதின் முற்று விகுதியுங்கெட்டுவந்தன. இவ்வாறே பிற விகுதிகளுள்ளுஞ் சில கெட்டு வருமெனவுங்கொள்க. (௯)

**பரீக்ஷை** வினக்கள்:—231. தெரிநிலைவினைமுற்று விகுதிகள் எவை? 232. குறிப்புவினைமுற்று விகுதிகளெவை? 233. பெயர்விகுதிகளெவை? 234. தெரிநிலைவினைப்பெயரெச்சவிகுதிகள் எவை? 235. குறிப்புவினைப் பெயரெச்சவிகுதிகள் எவை? 236. தெரிநிலைவினை வினையெச்ச விகுதிகள் எவை? 237. குறிப்புவினை வினையெச்சவிகுதிகள் எவை? 238. தொழிற் பெயர் விகுதிகள் எவை? 239. பண்புப்பெயர் விகுதிகள் எவை? 240. பிறவினைவிகுதிகள் எவை? 241. தன்வினைக்கும் பிறவினைக்கும் பொதுவாகிய பகுதிகள் பிறவினை விகுதிபெறாது பிறவினைப்பொருளைத் தருவன உளவோ? 242. வினைமுதற்பொருள் செயப்படுபொருள் கருவிப்பொருள்களை யுணர்த்தும் விகுதிகள் எவை? 243. அணிவுப்பொருளுணர்த்தும் விகுதிகள் எவை? 244. தற்பொருட்டுப் பொருளுணர்த்தும்விகுதி எது? 245. செயப்பாட்டுவினைப்பொருளுணர்த்தும் விகுதிகள் எவை? 246. தன்மைப் பொருளுணர்த்தும் விகுதி எது? 247. பகுதிப்பொருள் விகுதிகள் எவை? 248. பகுதியோடு புணர்ந்து பின் குன்றும் விகுதிகள் எவை? 249. வகை விகுதி வினையெச்சத்தில் உடன்பாட்டில் வருமோ எதிர்மறையில்வருமோ?

---

## இடைநிலை.

[பெயரிடைநிலை.]

௧௪௧. இலக்கியங் கண்டதற் கிலக்கண மியம்பலிற்
பகுதி விகுதி பகுத்திடை நின்றதை
வினைப்பெய ரல்பெயர்க் கிடைநிலை யெனலே.

இ-ள். இலக்கியம் கண்டு - அறிவுடையோரால் நியமிக்கப்பட்ட இலக்கியத்தைப் பார்த்து,—இலக்கணம் இயம்பலின் - அவ்விலக்கியத்தின் அமை

தியே இலக்கியத்திற்கு இலக்கணமாகச் சொல்லுதலால்,—பகுதி விகுதி பகுத்து - பெயர்ப்பகுபதத்திற் பகுதியையும் விகுதியையும் பிரித்து,—இடைநின்றதை - அப்பகுதி விகுதிகளுக்கு நடுவே நின்ற அங்கத்தை,—வினைப்பெயர் அல்பெயர்க்கு இடைநிலை எனல் - வினையாலணையும் பெயரல்லாத பெயர்ப்பகுபதங்களுக்கு இடைநிலையென்று சொல்லுக.

இடைநின்றதை என்றதினால் பகுதிவிகுதிகளான் மாத்திரம் முடிந்த பகுபதங்களையொழித்து அவற்றொடு இடைநிற்கும் அங்கத்தையுமுடைய பெயர்ப்பகுபதங்களையே ஈண்டுக்கொள்ளுக. குறிக்கப்படுமிலக்கணத்தையுடையன வெல்லாம் இயக்கியமாயினும் ஈண்டிலக்கியமென்றது பெயர்ப்பகுபதங்களை; இலக்கணமென்றதீண்டு அதனகத்துப் பகுதி விகுதி இடைநிலைகளை.

உ-ம். அறிஞன், வினைஞன், கவிஞன் என்பன ஞகரவொற்றிடைநிலை பெற்றன. ஓதுவான், பாடுவான் என்பன வகரவொற்றிடைநிலைபெற்றன. இடைச்சி, வலைச்சி என்பன சகரவொற்றிடைநிலைபெற்றன. வண்ணாத்தி, பார்ணத்தி, மலையாட்டி, வெள்ளாட்டி என்பன தகரவொற்றிடைநிலை பெற்றன. செட்டிச்சி, தச்சிச்சி என்பன இச் சிடைநிலைபெற்றன.

வினைப்பெயரல் பெயர்க்கிடைநிலையென்றார் ஓதுவான், பாடுவான் என்பன வினையாலணையும் பெயராக நிற்கமாட்டாவோ எனின்; எழுத்தொப்புமையால், வினையாலணையும்பெயராகவும் வினைமுற்றாகவும், தொழிலடியாகக் கொண்ட பெயராகவுநிற்குமாயினும் தொழிலடியாகக்கொண்ட பெயர்களாய் நின்றநிலையே ஈண்டுக்கொள்ளப்படுமென்க. தொழிலடியாகக்கொண்ட ஓதுவான் பாடுவான் என்னும் பெயர்களில் வந்த வகரவொற்றிடைநிலை காலங்காட்டாமல் நின்றது.

[இறந்தகாலவினையிடைநிலை.]

கசஉ. தடறவொற் றின்னே யைம்பான் மூவிடத்
இறந்த காலந் தருந்தொழி லிடைநிலை.

இ-ள். த ட ற ஒற்று இன் - தகரமெய்யும் டகரமெய்யும் றகரமெய்யும் இன் என்னுங் குற்றொற்றும்,—ஐம்பால் மூவிடத்து - ஐம்பான் மூவிடங்களிலும் இறந்தகாலம் தரும் தொழில்இடைநிலை - இறந்தகாலத்தைக்காட்டும் வினைப்பகுபதங்களினுடைய இடைநிலைகளாகும். எ-று.

உ-ம். நடந்தான், நடந்தாள், நடந்தார், நடந்தது, நடந்தன, நடந்தேன், நடந்தேம், நடந்தாய், நடந்தீர். எ-ம். உண்டான். எ-ம். சென்றான். எ-ம். உறங்கினான். எ-ம். வரும். உண் என்னும் பகுதியிற்றோன்றிய வினையில் இன் இடைநிலைவாராது; பிறவினையானபோதுவரும் பிறவு மாராய்ந்தறிக. சிறுபான்மை இன்னிடைநிலை கடைகுறைந்தும் முதல்குறைந்தும் வரும்.

Digitized By Roja Muthiah Research Library

எஞ்சியது என்பதில் இன் என்னும் இடைநிலையின் ஈற்று னகரவொற்றுக்குறைந்தது. குறையாதாயின் எஞ்சினது எனநிற்கும்.

போனது என்பதில் இன் இடைநிலையின் முதல் இகரவுயிர் குறைந்தது. குறையாதாயின் போயினது எனநிற்கும். (கரு)

[நிகழ்காலவிடைநிலை.]

கசங. ஆநின்று கின்று கிறுமூ விடத்தின்
ஐம்பா னிகழ்பொழு தறைவினை யிடைநிலை.

இ - ள். ஆநின்று கின்று கிறு - ஆநின்றென்பதுங் கின்றென்பதுங் கிறுவென்பதும்,—ஐம்பால் மூவிடத்தின் - ஐம்பான் மூவிடங்களிலும்,—நிகழ்பொழுது அறை வினை இடைநிலை - நிகழ்காலத்தைக்காட்டும் வினைப்பகுபதங்களினுடைய இடைநிலைகளாம். எ - று.

| | | | | |
|---|---|---|---|---|
| உ-ம். நடவாநின்றான், | நடக்கின்றான், | நடக்கிறான். | ஆண்பால் | படர்க்கை. |
| நடவாநின்றாள், | நடக்கின்றாள், | நடக்கிறாள். | பெண்பால் | |
| நடவாநின்றார், | நடக்கின்றார், | நடக்கிறார். | பலர்பால் | |
| நடவாநின்றது, | நடக்கின்றது, | நடக்கிறது. | ஒன்றன்பால் | |
| நடவாநின்றன, | நடக்கின்றன, | * | பலவின்பால் | |

(கிறுஇடைநிலை அஃறிணைப்பலவின்பால் வினையில் வரமாட்டாது.) பிறவுமாராய்க.

| | | | |
|---|---|---|---|
| நடவாநின்றேன், | நடக்கின்றேன், | நடக்கிறேன். | தன்மையொருமை |
| நடவாநின்றேம், | நடக்கின்றேம், | நடக்கிறேம். | தன்மைப்பன்மை |
| நடவாநின்றாய், | நடக்கின்றாய், | நடக்கிறாய். | முன்னிலையொருமை |
| நடவாநின்றீர், | நடக்கின்றீர், | நடக்கிறீர். | முன்னிலைப்பன்மை |

[எதிர்காலவிடைநிலை.]

கசச. பவ்வ மூவிடத் தைம்பா லெதிர்பொழு
திசைவினை யிடைநிலை யாமிவை சிலவில.

இ - ள். பவ்வ - பகரமெய்யும் வகரமெய்யும்,—ஐம்பால் மூவிடத்து - ஐம்பான் மூவிடங்களிலும்,—எதிர்பொழுது இசை வினை இடைநிலை ஆம் - எதிர்காலத்தைக்காட்டும் வினைப்பகுபதங்களினுடைய இடைநிலைகளாகும்,—இவை சில இல - இம்முக்கால விடைநிலைகளும் சில முற்றுவினை எச்சவினைகட்கு இலவாம். எ - று.

உ-ம். நடப்பான், வருவான்; நடப்பாள், வருவாள்; நடப்பார், வருவார்; நடப்பேன், வருவேன்; நடப்பேம், வருவேம்; நடப்பாய், வருவாய்; நடப்பீர், வருவீர் எனவரும்.

Digitized By Roja Muthiah Research Library

ஒன்றன்பால் பலவின்பால் வினைகளுக்குப் பகரவகரவொற்றிடைநி லைகள் வருவனவல்ல.

இப்படியே ஒன்பது இடைநிலைகளையும் ஏற்றபெற்றிகொள்க. இவை சிலவிலவெனவே இவ்விடைநிலை வரப்பெறாத சில முற்றுவினைகளிலும் எச் சவினைகளிலும் காலத்தை விகுதியாயினும், விகாரப்பட்ட பகுதியாயினும், வேறிடைநிலையாயினுங் காட்டுமென்பது பெற்றாம். அவை பின்வருஞ் சூத் திரத்தினும் உரையினுங் காண்க. (கள)

[காலங்காட்டும் விகுதி.]

கசக. றவ்வொ டுகரவு மைநிகழ் பல்லவுந்
தவ்வொ டிறப்பு மெதிர்வும் டவ்வொடு
கழிவுங் கவ்வோ டெதிர்வுமின் னேவல்
வியங்கோ ளிம்மா ரெதிர்வும் பந்தந்
செலவொடு வரவுஞ் செய்யுநிகழ் பெதிர்வும்
எதிர்மறை மும்மையு மேற்கு மீங்கே.

இ - ள், றவ்வொடு உகர உம்மைநிகழ்பு அல்லவும் - றகரமெய்யொடு கூடிய உகரவிகுதியும் உம்விகுதியும் (று, றும்) இறந்தகாலத்தையும் எதிர்கா லத்தையும்,—தவ்வொடு (உகர உம்மை) இறப்பும் எதிர்வும் - தகரமெய்யோ டுகூடிய உகரவிகுதியும் உம்விகுதியும் (து, தும்) இறந்தகாலத்தையும் எதிர் காலத்தையும்,—டவ்வொடு (உகர உம்மை) கழிவும் - டகரமெய்யொடுகூடிய உகர விகுதியும் உம் விகுதியும் (டு, டும்) இறந்தகாலத்தையும்,—கவ்வோடு (உகர உம்மை) எதிர்வும் - ககரமெய்யொடுகூடிய உகர விகுதியும் உம்விகு தியும் (கு, கும்) எதிர்காலத்தையும்,—மின் ஏவல் வியங்கோள் இ மார் எதி ர்வும் - மின்விகுதியும் மற்றைமுன்னிலையேவல் விகுதிகளும் வியங்கோள்விகு திகளும் இகரவிகுதியும் மார்விகுதியும் எதிர்காலத்தையும்,—ப அந்தம் செல வொடு வரவும் - பகரவிகுதி இறந்தகாலத்தையும் எதிர்காலத்தையும்,—செய்யு ம் நிகழ்பு எதிர்வும் - செய்யுமென்னும் வாய்பாட்டு முற்றுவிகுதி நிகழ்காலத் தையும் எதிர்காலத்தையும்,— எதிர்மறை மும்மையும் - எதிர்மறை ஆகாரவிகுதி மூன்றுகாலத்தையும்,—ஏற்கும் - ஏற்று வரும்,—ஈங்கு - மேலைச் சூத்திரத்து இவை சிலவிலவென்றவைகளுள். எ - று.

உ-ம். சென்று, சென்றும் என்பன முறையே சென்றேன், சென்றேம் எ னப் பொருள்பட்டு இறந்தகாலங் காட்டின. சேறு, சேறும் என்பன முறையே செல்வேன், செல்வேம் எனப்பொருள்பட்டு எதிர்காலங் கா ட்டின. வந்து, வந்தும் என்பன முறையே வந்தேன், வந்தேம் எனப் பொருள்பட்டு இறந்தகாலங் காட்டின. வருது, வருதும் என்பன மு றையே வருவேன், வருவேம் எனப்பொருள்பட்டு எதிர்காலங்காட்டின;

Digitized By Roja Muthiah Research Library

உண்டு, உண்டும் என்பன முறையே உண்டேன், உண்டேம் எனப் பொருள்பட்டு இறந்தகாலங் காட்டின. உண்கு, உண்கும் என்பன முறையே உண்பேன், உண்பேம் எனப்பொருள்பட்டு எதிர்காலங்காட்டின. உண்மின்; உண்ணீர், உண்ணும், உண்ணாய் என மின், ஈர், உம், ஆய் என்னும் ஏவல்விகுதிகளும்; உண்க, வாழிய, வாழியர் எனக் க, இய, இயர் என்னும் வியங்கோள் விகுதிகளும்; சேறி என இகரவிகுதியும்; உண்மார் என் மார் விகுதியும் எதிர்காலங்காட்டின. (சேறி என்பது செல்வாய் எனவும், உண்மார் என்பது உண்பார் எனவும் பொருள்படும்.) உண்ப என்பது உண்டார் எனவும் உண்பார் எனவும் பொருள்பட்டு இறந்தகாலமும் எதிர்காலமுங் காட்டின. உண்ணும் என்னும் செய்யுமென் வாய்பாட்டு வினைமுற்று நிகழ்காலமும் எதிர்காலமுங் காட்டிற்று. உண்ணு என்னும் எதிர்மறை முக்காலமுங்காட்டிற்று. இகர விகுதி எழுத்துப்பேறுய்வருந் தகரமெய்யின்மேல் ஏறிவரும்; இவ்விகுதி சென்றி, செல்லாநின்றி என இறந்தகாலவிடைநிலை நிகழ்காலவிடைநிலைகளோடு கூடிவரும்போது அவ்விடைநிலை காலங் காட்டலால் தான் காலங்காட்டாது நிற்கும். 'இர் ஈரீற்றவிரண்டு மிருதிணைப், பன்மை முன்னிலை மின்னவற்றேவல்' என்னுஞ் சூத்திரத்தில் ஈர் ஈற்றை முன்னிலை வினையென்றதன்றி ஏவலென்று சொல்லவில்லையே இங்கே ஈர் ஈற்றை ஏவலென்று விளக்கியதென்னையோவெனின் ஈர்விகுதி ஏவற்பொருளில் வரும்போது ஏவலேயாம். இர், ஈர், மின் என்னு மூன்றுவிகுதிகளையுந் தொகுத்து முன்னிலைத் தெரிநிலைவினை, குறிப்புவினை இரண்டற்குங் கூறும்போது குறிப்புவினையில் வராத ஏவற்கேயுரிய மின்விகுதியை 'மின்னவற்றேவல்' என்று வேறுபடக்கூறினாரன்றி ஈர்விகுதி ஏவலுக்கு வாராதென்றாரல்லரென்க.

'இவைசிலவில' என்றவைகளுள்ளே காலங் காட்டும் விகுதிகளை மாத்திரஞ்சொல்லிக் காலங்காட்டும் பகுதியையும் பிறவிடைநிலையையுஞ் சொல்லாமையால் அவை சிறுபான்மையின; வந்தவிடங்களிற் கண்டுகொள்க என்றாராயிற்று. அவை வருமாறு: கு, டு, று என்னும் மூன்றுயிர்மெய்யீற்றுச் சிலகுறில்இணைப்பகுதிகள் தம்மொற்றிரட்டி இறந்தகாலங் காட்டும். உ-ம். புக்கான், நக்கான், எ-ம். தொட்டான், விட்டான். எ-ம். உற்றான், பெற்றான், எ-ம். வரும்.

யகரவிடைநிலை இறந்தகாலமும்; ஆகிடந்து, ஆவிருந்து என்னும் இரண்டிடைநிலைகளும் நிகழ்காலமுங் காட்டும்.

உ-ம். போயது. எ-ம். உண்ணுகிடந்தான், உண்ணாவிருந்தான், எ-ம். வரும்.

இசின் என்பது இறந்தகாலவிடைநிலையாயும் மகரமெய்யும் மன் என்பதும் எதிர்காலவிடைநிலைகளாயுஞ் செய்யுளில் வரும். உ-ம். என்றிசினோர். எ-ம். என்மார், என்மனார். எ-ம். வரும்.

ஈங்கே என்ற மிகையால் வருதி, பெயர்தி என இகரவிகுதி நிகழ்கால ங்காட்டுதலேயும், பெயரெச்ச வினையெச்சங்களில் இடைநிலையின்றி விகுதி காலங்காட்டுதலேயும் அமைத்துக்கொள்க.

பகுதி விகுதி என்னுஞ்சூத்திரமுதல் இச்சூத்திரம்வரையும் பகுபதங்களை மேலோர் முடித்தவாறு முடித்துக்காட்டினமையால் முடித்துக்காட்டலென்னுமுத்தி. முன்னைத் தமிழ்நூல்களில் இல்லாதவைகளை இவ்வாசிரியர் தாமே பகாப்பதம் பகுபதமென முன்னே நாட்டி இச்சூத்திரம்வரையும் அவைகளுக்கு இலக்கணங்கூறி நிறுத்தினமையால், தானாட்டித்தனாதுநிறுப்பென்னுமதம். (சஅ)

பரீக்ஷாவினுக்கள்:—250. பெயரிடைநிலைகள் எவை? 251. இறந்தகால வினையிடைநிலைகள் எவை? 252. நிகழ்காலவினையிடைநிலைகள் எவை? 253. எதிர்காலவினையிடைநிலைகள் எவை? 254. இங்கேகூறிய இடைநிலைகளின்றி வேறுவகையாற் காலங்காட்டும் வினைகளுளவோ? 255. அவைகளிற் காலங்காட்டும் உறுப்புக்கள் எவை? 256. று, றும் விகுதிகள் எக்காலங்காட்டும்? 257. து, தும் விகுதிகள் எக்காலங்காட்டும்? 258. டு, டும் விகுதிகள் எக்காலங்காட்டும்? 259. கு, கும் விகுதிகள் எக்காலங்காட்டும்? 260. முன்னிலையேவல்விகுதிகளும் வியங்கோள்விகுதிகளும் இகரவிகுதியும் மார்விகுதியும் எக்காலங்காட்டும்? 261. பகரவிகுதி எக்காலங்காலங்காட்டும்? 262. செய்யுமென்னும்வாய்பாட்டுமுற்றுவிகுதி எக்காலங்காட்டும்? 263. எதிர்மறை ஆகாரவிகுதி எக்காலங்காட்டும்? 264. இகரவிகுதி எதிர்காலமன்றிப் பிறிது காலங்காட்டாதோ? 265. இகரவிகுதி தான் காலங்காட்டாது நிற்கும் இடங்களில்லையோ? 266. பகுதி விகாரப்பட்டுக்காலங்காட்டுதற்கு உதாகரணங்களெவை? 267. தடறவொற்றின்னேயன்றி இறந்தகாலங்காட்ட வேறிடைநிலையுமுண்டோ? 268. ஆநின்று, கின்று, கிறுவேயன்றி நிகழ்காலங்காட்ட வேறிடைநிலையுமுண்டோ? 269. பகர வகர வொற்றுக்களேயன்றி எதிர்காலங்காட்ட வேறிடைநிலையுமுண்டோ? 270. கிறுஇடைநிலை அஃறிணைப்பன்மை வினைமுற்றில் வருமோ?

## வடமொழியாக்கம்.

[ஆரியமொழி தமிழில் வடமொழியெனப்பட்டுவருதல்.]

கசசு. இடையி னான்கு மீற்றி லிரண்டும்
அல்லா வச்சை வருக்க முதலீறு
யவ்வாதி நான்மைளவ் வாகு மைமையம்
பொதுவெழுத் தொழிந்தநா லேழுந் திரியும்.

இ - ள். இடையில் நான்கும் ஈற்றில் இரண்டும் அல்லா அச் - (ஆரியமொழியுள் அச்சென்று வழங்கும் உயிர் பதினாறனுள்ளும்) இடையில்



Digitized By Roja Muthiah Research Library

நின்ற ஐ ஔ ஏ ஓ என்னுநான்கும் ஈற்றில் நின்ற அம் அஃ என்னுமிரண் டுமொழிந்து நின்ற அ ஆ இ ஈ உ ஊ ஏ ஐ ஓ ஔ என்னும் பத்தும்,—ஐவருக் கமுதல் ஈறு - (ஹல் என்று வழங்கும் மெய் முப்பத்தேழுள்ளும் கவர்க்க ம், சவர்க்கம், டவர்க்கம், தவர்க்கம், பவர்க்கம் என்னும்) ஐந்துவருக்கங்களி ன்முதலினின்ற க ச ட த ப என்னும் ஐந்தும் அவற்றின் ஈற்றில் நின்ற ங ஞ ண ந ம என்னும் ஐந்தும்,—ய ஆதி நான்மை ய ர ல வ என்று நான்கும் ள ஆகும் ஐயைம் பொதுவெழுத்து - ளகரமும் ஆகிய பொதுவெழுத்திருப த்தைந்தும்,—ஒழிந்த நாலேழும் திரியும் - அல்லாத (உயிருள் இடையில் நா ன்கும் ஈற்றில் இரண்டும் மெய்களுள் ஐவருக்கங்களிலும் இடையில்நின்ற ப திளைந்தும் முப்பதாமெய்ம்முதலிய எட்டனுள் ளகரமொழிந்த எழும் ஆகி ய இருபத்தெட்டுச்சிறப்பெழுத்துக்களும் தமிழில் (தத்தமக்கேற்ற பொது வெழுத்துக்களாகத்) திரிந்துவரும். எ - று.

சிறப்பெழுத்துத் திரியுமென வரையறைகூறவே, பொதுவெழுத்து இ யல்பாயுஞ் சில தமக்கேற்ற விகாரமாயும் வருமென்பதுங் கொள்ளப்படும். பொதுவெழுத்து விகாரமாதல் 'ஆவீறையுமீயீறிகரமும்' என்பதனுலுங்காண்க

## சமஸ்கிருத அக்ஷரம்.

அச் எனப்படும் உயிரெழுத்துப் பதினாறுவன:—அ ஆ இ ஈ உ ஊ ஐ ஔ ஏ ஓ வன வெ ஒ ஔ அம் அஃ இவைகளுள் ஐ ஔ ஏ ஓ அம் அஃ என்னும் ஆறும் ஆரியத்திற்குச் சிறப்பெழுத்துக்கள். ஒழிந்த பத்து யிரும் பொதுவெழுத்துக்களாம்.

மெய்யெழுத்து முப்பேத்தேழாவன:—

| | | | | |
|---|---|---|---|---|
| க வ ம வ ஊ | இவை | கவர்க்கம். | | ஐவருக்கத்துக்கு இடையி ன்மூன்றுவன:— |
| ச ஃம ஜ ஸ ஞ | ,, | சவர்க்கம். | | வ ம வ |
| ட ○ ஃ ஃ ண | ,, | டவர்க்கம். | | ஃம ஜ ஸ |
| த ய ஓ ய ந | ,, | தவர்க்கம். | | ○ ஃ ஃ |
| ப ஃப ப ஃஃ ம | ,, | பவர்க்கம். | | ய ஓ ய |
| | | | | ஃப ப ஃஃ |

இதூஉ ஆஉடுசக்ஷரம்.

ய ர ல வ ஶ ஷ ஸ ஹ ள க்ஷ ஃக ஃப

இந்த மெய்யெழுத்து முப்பத்தேழுள் ஆரியத்திற்குரிய சிறப்பெழுத்தா வன:—வ ம வ, ஃம ஜ ஸ, ○ ஃ ஃ, ய ஓ ய, ஃப ப ஃஃ, ஶ ஷ ஸ ஹ க்ஷ ஃக ஃப என்னும் இருபத்திரண்டுமோம். இவ்விருபத்திரண் டொழிய நின்ற பதினைந்துமெய்களும் பொதுவெழுத்துக்களாம். ஆரிய எ ழுத்துக்களுள் பொதுவெழுத்துக்கள் உயிரிலே பத்தும் மெய்யிலே பதினை

Digitized By Roja Muthiah Research Library

ந்துமாக இருபத்தைந்தெனவும்; ஆரியச்சிறப்பெழுத்துக்கள்: உயிரிலே ஆறு ம், மெய்யிலே இருபத்திரண்டுமாக இருபத்தெட்டெனவுந் தொகையறிக.

ஆரியச்சிறப்பெழுத்திற்கு ஒத்த ஒலியுடைய எழுத்துத் தமிழில் இல்லாமையால் ஆரியச் சிறப்பெழுத்தாலாகிய மொழியை அவ்வொலி பிறழாமல் தமிழெழுத்தாலெழுதுதல் கூடாது. ஆதலால் ஆரியச் சிறப்பெழுத்தைத் திரித்துக்கொண்டே தமிழிலெழுதத்தகும்.

பொதுவெழுத்தான்மாத்திரமுண்டாகிய ஆரியமொழியே திரிபடையாதெழுதத்தகும்.

பொதுவெழுத்துக்களும் தமிழெழுத்துப்போலன்றிப் பெரும்பாலும் வேற்றுவடிவாயேயிருக்கின்றனவேயெனின், அவை வரிவடிவிற் பேதப்படுவனவன்றி ஒலிவடிவிற் பேதப்படுவனவல்லவென்க.

இங்கே பொதுவெழுத்தாகவுஞ் சிறப்பெழுத்தாகவும் வரிவடிவெழுத்தை நோக்காது ஒலிவடிவெழுத்தையே நோக்கிக்கொள்ளுக.

இடையினுன்கும் என்னுமிச்சூத்திரத்தில் முன் அச் என்றதினால் மற்றவை (ஹல் என்னும்) மெய்யெழுத்தென்று உணரப்படுமாயினும், பொதுவெழுத்து இருபத்தைந்தென்றும், சிறப்பெழுத்து இருபத்தெட்டென்றுங் கூறியதினால் உயிருமெய்யுமான இவற்றின் தொகை ஐம்பத்துமூன்றென்று தெளியலாமேயன்றி உயிரினது தொகை இன்னதென்பதும், மெய்யினது தொகை இன்னதென்பதும் வகுத்தோதாது சுருங்கச் சொல்லிவிட்டார். உரையிற்கோடலென்னும்உத்தியால் உரையாசிரியர் விளக்கவேண்டுவ திவ்விடத்தாவசியகமென்னுங் கருத்துப்பற்றியென்றறிக.

ஆரியமொழிகள் தமிழில் வரும்போது தற்பவம், தற்சமம் என்று இரண்டுபிரகாரமாயிருக்கும்.

ஆரியத்திற்கேயுரிய சிறப்பெழுத்தாலும், பொதுவுஞ்சிறப்புமாகிய ஈரெழுத்தாலு முடிந்திருக்கிற ஆரியமொழிகள் திரிதன்முதலிய விகாரம்பெற்றுத் தமிழில்வந்து வழங்கும்போது அவை தற்பவமெனப்படும்.

உ - ம். ஸுகி=சுகி, போகி=போகி, ஶுத்தி=சுத்தி.

இவை ஆரியச்சிறப்பெழுத்தான் முடிந்திருந்து விகாரம்பெற்றுத் தமிழில் வந்த தற்பவமொழிகள்.

ஹர:=அரன், ஜப:=செபம், ஜ்ஞாநம்=ஞானம், ஹரி:=அரி.

இவை பொதுவெழுத்துச் சிறப்பெழுத்தென்னு மிருவகையாலு முடிந்திருந்து விகாரம்பெற்றுத் தமிழில் வந்த தற்பவமொழிகள்.

ஆரியத்திற்குந் தமிழிற்கும் பொதுவெழுத்தாலாகி விகாரம்பெற்றும், விகாரமின்றியும் தமிழில்வந்து வழங்கும் வடமொழிகள் தற்சமம் எனப்படும்.

Digitized By Roja Muthiah Research Library

உ - ம். கார்யம்=காரியம், மாலா=மாலை, அமலம்=அமலம், கமலம்=கமலம், காரணம்=காரணம், குங்குமம்=குங்குமம். இவை பொதுவெழுத்தாலாகியிருந்து தமிழில் திரிந்தும், திரியாதும் வந்த தற்சமமொழிகள். காரியமென்பதில் இகரம் வந்து சேர்ந்தது தோன்றல் விகாரமெனவும், மாலையென்பதில் ஈற்றுகாரம ஐகாரமானது திரிதல் விகாரமெனவுங்காண்க.

தற்பவதற்சமங்களை "ஆரியச்சிறப்பெழுத்தாற்பொதுச்சிறப்பா, லான வீரெழுத்தாலமைவதுதற்பவம்" "ஆரியந்தமிழ்பொதுவாமொழிதற்சமம்" என்று அகத்தியர் வகுத்துரைத்த சூத்திரங்களான் முறையே காண்க.

நன்னூலாரும் 'பொதுவெழுத்தானுஞ்சிறப்பெழுத்தானும், ஈரெழுத்தானுமியைவனவடசொல்' என்று (உஎ௪ ம் சூத்திரத்தால்) தற்சம தற்பவமொழிகளைக் கூறினமைகாண்க. (௪௬)

[ஆரியமொழி தமிழில் வடமொழியாய் வருதற்குச் சிறப்புவிதி.]

௧௪௭. அவற்றுள்,—

ஏழா முயிரிய்யு மிருவுமை வருக்கத்
திடையின் மூன்று மவ்வம் முதலும்
எட்டே யவ்வு முப்பது சயவும்
மேலொன்று சடவு மிரண்டு சதவும்
மூன்றே யகவு மைந்திரு கவ்வும்
ஆவீ றையு மீயீ றிகரமும்.

இ - ள். அவற்றுள் - திரியுமென்று முற்குறித்த சிறப்பெழுத்துக்களில்,— ஏழாம் உயிர் இய்யும் இருவும் - ஏழாம் உயிராகிய ருகாரம் இகரமாகவும் இருவாகவுந் திரியும்,—ஐ வருக்கத்து இடையின் மூன்றும் அவ்வம் முதலும் - ஐந்துவருக்கங்களிலும் இடைநின்ற மும்மூன்றெழுத்தும், அவ்வவ்வருக்கத்தின் முதலெழுத்தாகத் திரியும்,—எட்டு யவ்வும் - எட்டாமெய்யாகிய ஜகாரம் மொழியிடையில் யகாரமாகவுந்திரியும்,—முப்பது சயவும்- முப்பதாமெய்யாகிய ஶகாரம் மொழிமுதலிற் சகரமாகவும் இடையில் ஏற்றபெற்றி சகரமாகவும் யகரமாகவுந் திரியும்,—மேல் ஒன்று சடவும் - முப்பத்தோராமெய்யாகிய ஷகாரம் மொழிமுதலிற் சகரமாகவும் இடையிலுங் கடையிலும் டகரமாகவுந் திரியும்,—இரண்டு சதவும் - முப்பத்திரண்டாமெய்யாகிய ஸகாரம் மொழிமுதலிற் சகரமாகவும் இடையில் ஏற்றபெற்றி சகரமாகவுந் தகரமாகவுந் திரியும்,—* மூன்று அகவும் - முப்பத்துமூன்றுமெய்யாகிய ஹகாரம் மொழிமுதலில் அகரமாகவும் இடையில் ககரமாகவுந் திரியும்,—ஐந்து இரு கவ்வும் - முப்பத்தைந்தாமெய்யாகிய க்ஷகாரம் இரண்டு க்கரமாகத்திரியும்,—ஆ ஈறு ஐயும - பொதுவெழுத்துக்களுள்ளே மொழியிறுதி ஆகாரம் ஐகாரமாகத் திரியும்,—ஈ ஈறு இகரமும் - மொழியிறுதி ஈகாரம் இகரமாகத் திரியும். எ - று.

Digitized By Roja Muthiah Research Library

பயின்று வருவனவற்றிற்குத் திரிபுகூறி ஒழிந்தன அருகிவருதலால் அவற்றை வந்தவிடத்திற் காண்கவென்பார் இகரமுமாகுமென்று பயனிலைகொடுத்து முடியாது இகரமுமென அவாய்நிலையாக முடித்தார் (பயின்றுவருதல் - மிகுதியாகவருதல். அருகிவருதல் - சிறுபான்மையாகவருதல். அவாய்நிலை - முடிவுபெறுமல் மேலொன்றை வேண்டியே நிற்பது.)

உ - ம். ருஷப:=இடபம் எ - ம். ம்ருக:=மிருகம் எ - ம். ஏழாமுயிர் இகரமும் இருவுமாயிற்று. நகம்=நகம், நாக:=நாகம், மேக:=மேகம் எ - ம். ஜலவாதீ=சலவாதி, விஜய:=விசயம், ஜர்ஜரா=சருச்சரை எ - ம். பீடம்=பீடம், ஜடம்=சடம், கூடம்=கூடம் எ - ம். ஸ்தலம்=தலம், தினம்=தினம், தரா=தரை எ - ம். பலம்=பலம், பந்த:=பந்தம், பார:=பாரம் எ - ம். ஐந்துவருக்கத்திலும் இடைநின்ற மும்மூன்றெழுத்தும் அவ்வவ் வருக்கத்தின் முதலெழுத்தாயின.

பங்கஜ:=பங்கயம், ஜய:=சயம் எனஎட்டாமெய் மொழியிடையில் யகரமுமாயிற்று. சங்கர:=சங்கரன் எ - ம். பாச:=பாசம், தேய:=தேயம், ஸ்மசாந=மயானம் எ - ம். முப்பதாமெய்முதலிற் சகரமாயும், இடையில் சகரமாயும், யகரமாயும் வந்தது. ஷண்முக:=சண்முகன் எ - ம். விஷம்=விடம், பாஷா=பாடை எ - ம். முப்பத்தோராமெய் முதலிற் சகரமும், இடையிலுங் கடையிலும் டகரமுமாயிற்று. ஸபா=சபை எ - ம். வாஸ:=வாசம், மாஸ:=மாதம் எ - ம். முப்பத்திரண்டாமெய் முதலிற் சகரமும், இடையிற் சகரமுந்தகரமுமாயிற்று. ஹர:=அரன் எ - ம். மோஹ:=மோகம், மஹீ=மகி எ - ம். முப்பத்துமூன்றுமெய் முதலில் அகரமும், இடையில் ககரமுமாயிற்று. * பக்ஷ:=பக்கம் என முப்பத்தைந்தாமெய் மொழியிடையில் இரண்டு ககரமாயிற்று. மாலா=மாலை என ஆகாரவீறு ஐகாரவீறுயிற்று. புரீ=புரி என ஈகாரவீறு இகரவீறுயிற்று. உரையிற்கோடலால் க்ஷீரம்=கீரம், க்ஷணம் கணம் என முப்பத்தைந்தாமெய் மொழிமுதலில் ஒரு ககரமாகுமெனவும், கடாக்ஷ=கடாட்சம், பக்ஷண=பட்சணம் என முப்பத்தைந்தாமெய் மொழிக்கிடையில் டகரமுஞ் சகரமுமாகுமெனவும், டமருசம் தமருகம் என மொழிமுதலில் டகரம் தகரமாகத்திரிதலும் இவைபோல்வன பிறவுங்கொள்க.

*முப்பத்துமூன்றுமெய் மொழிக்கு முதலிலே அகரமாகுமென்று கூறியது அகரவுயிரொடு கூடிய முப்பதாமெய்யொன்றற்குப் பொருந்துமாயினும், ஹால=ஆலம், ஹாநி=ஆனி, ஹாடக:=ஆடசம் எ - ம். ஹிமம்=

இமம், ஹேது:=ஏது, ஹேரம்ப:=ஏரம்பன், ஹோம:=ஓமம், ஹௌத்ரி=ஔத்திரி எனவரும். இவைகளில் முப்பதாமெய் கெட அம் மெய்ம்மேல் ஏறிநின்ற உயிர்மாத்திரம் நிற்றல்கண்டு 'மூன்றேயகவும்' என் பதில் அகரமாகுமென்றல் எல்லாவற்றிற்கும் பொருந்தாமையால், மூன்று கேடொடுகவும் என்று அச்சூத்திரபாகத்தை வாசிப்பது நன்றேயாயின் வி வேகிகள் ஆராய்ந்து அவ்வாறு வழங்கத்தொடங்குக. மூன்றுகேடொடுகவு ம் என்பதற்கு முப்பதுமூன்றுமெய் மொழிமுதலிற் கெடுதலும் இடையில் ககரமாதலும் என்பது பொருள். (௨0)

**௧௪௯.** ரவ்விற் கம்முத லாமுக் குறிலும்
லவ்விற் கிம்முத லிரண்டும் யவ்விற்
கிய்யு மொழிமுத லாகிமுன் வருமே.

இ-ள். ரவ்விற்கு அ முதலாம் முக்குறிலும் - ரகரத்திற்கு அ இ உ என்னு மூன்று குற்றெழுத்துக்களில் ஒன்றும்,—லவ்விற்கு இ முதல் இரண்டு ம் - லகரத்திற்கு இ உ என்னும் இரண்டில் ஒன்றும்,—யவ்விற்கு இய்யும்- யகரத்திற்கு இகரமும்,—மொழிமுதலாகி முன்வரும் - அவ்வெழுத்துக்களை முதலிலுடைய வடமொழிகளில் ரகர லகர யகரங்களுக்கு முதலாகி அம் மூன்றெழுத்துக்களுக்கும் வரும். எ - று.

அகர இகர உகரங்கள் முன்வருதல் ஏற்றபெற்றி கொள்ளப்படும்.

உ-ம். ரங்க:=அரங்கம், ராம:=இராமன், ரோம:=உரோமம் எ-ம். லாப:=இலாபம், லோப:=உலோபம் எ-ம். யக்ஷ:=இயக்கன் எ-ம். வரும். ஏற்ற பெற்றிகொள்ளாமல் அரங்கமென்பதனை உரங்கம் என்ற ல் பொருத்தமின்றாம். உலோபம் என்பதனை இலோபமென்னுதலும் இராமன் என்பதை அராமனென்னுதலும் பொருந்தாவாம். (௨௧)

**௧௫0.** இணைந்தியல் காலை யரலக் கிகரமும்
மவ்வக் குகரமு நகரக் ககரமு
மிசைவரும் ரவ்வழி யுவ்வு மாம்பிற.

இ-ள். இணைந்து இயல் காலை - ஆரியமொழியுள் இரண்டு மெய்கள் இணைந்து ஓரெழுத்துப்போல நடக்கும்போது,—யரலக்கு இகரமும் - அவ் விணைந்த எழுத்துக்களிற் பின்னின்ற யகரத்துக்கும் ரகரத்துக்கும் லகரத் துக்கும் இகரவுயிரும்,—மவ்வக்கு உகரமும் - மகரத்துக்கும் வகரத்துக் கும் உகரமும்,—நகரக்கு அகரமும் - நகரத்திற்கு அகரமும்,—மிசை வரு ம் - மேலே வந்த வடமொழிகளாகும்,—ரவ்வழி உவ்வும் ஆம் - இணைந்து முன்னின்ற ரகரத்திற்குப் பின் உகரமும் வரும். எ - று.

இடையில் உயிர் கலக்கப்பெறுமற் பல மெய்கள் இணைந்து அவ்விணை ப்பின் ஈற்றுமெய்யின்மேல் உயிர் கலக்கப்பெற்றிருந்தால் அவ்விணைப்பிற்கு

Digitized By Roja Muthiah Research Library

ச்சம்யுக்தாக்ஷரம் என்று பெயர். மெய் முன்னும் உயிர்மெய் பின்னுமாக இணைவது சமயுக்தாக்ஷரமெனினுமாம். இணைந்தியல் காலை என்றது சம்யுக்தாக்ஷரங்களாய் வரும்போது என்றுணர்க. க்ய, ர்ய, ல்ய, த்ம, க்வ, த்ந, ர்வ என்பன முன்னே மெய்யும் பின்னே உயிர்மெய்யுமாக இணைந்துநின்றமையறிக.

உ-ம். 𑌤𑍍𑌯𑌾𑌗𑌃 (த்யாகம்)=தியாகம், 𑌶𑌾𑌵𑍍𑌯 (சாவ்ய)=சாவியம்; 𑌕𑍍𑌰𑌮𑌂 (க்ரமம்)=கிரமம், 𑌵𑌕𑍍𑌰𑌂 (வக்ரம்)=வக்கிரம்; 𑌕𑍍𑌲𑍇𑌶𑌂 (க்லேசம்)=கிலேசம், 𑌶𑍁𑌕𑍍𑌲𑌂 (சுக்லம்)=சுக்கிலம் எ-ம். 𑌪𑌦𑍍𑌮𑌂 (பத்மம்)=பதுமம் எ-ம். 𑌰𑌤𑍍𑌨𑌂 (ரத்நம்)=அரதநம் எ-ம். 𑌅𑌰𑍍𑌥𑌃 (அர்த்தம்)=அருத்தம், 𑌸𑌰𑍍𑌪 (கர்ப்ப)=சருப்பம் எ-ம். வரும்.

பிறவென்றதனால், 𑌶𑌕𑍍𑌤𑌿=சத்தி, 𑌪𑌕𑍍𑌷𑌿=(பக்கியென்பதுமன்றி) பட்சி, 𑌕𑌕𑍍𑌷𑌿=கட்சி, 𑌕𑌾𑌵𑍍𑌯𑌂=(காவியம் என்பதுமன்றிக்)காப்பியம், 𑌪𑌰𑍍𑌵𑌤𑌃=பருப்பதம், 𑌸𑌂𑌕𑌲𑍍𑌪𑌂=சங்கற்பம், 𑌅𑌲𑍍𑌪𑌂=அற்பம், 𑌪𑌤𑍍𑌨𑍀=பத்தினி பன்னி, 𑌜𑌨𑍍𑌮𑌃=சன்மம், 𑌵𑌿𑌸𑍍𑌮𑌿𑌤𑌂=விம்மிதம், 𑌦𑌰𑍍𑌪𑌃=பற்பம், 𑌕𑌲𑍍𑌪=கற்பம், 𑌉𑌤𑍍𑌸𑌾𑌹=உற்சாகம், 𑌆𑌤𑍍𑌮𑌾=ஆன்மா, 𑌵𑌾𑌤𑍍𑌸𑌲𑍍𑌯=வாற்சல்லியம், 𑌨𑍀𑌲𑍋𑌤𑍍𑌪𑌲=நீலோற்பலம், 𑌬𑍁𑌦𑍍𑌬𑍁𑌦=புற்புதம், ஸத்புத்ர=சற்புத்திரன், 𑌉𑌷𑌾=உழை, உடை, 𑌸𑍁𑌷𑍁𑌪𑍍𑌤𑌿=சுழுத்தி இவைமுதலான திரிபும்;

𑌸𑍍𑌥𑍂𑌲𑌃=தூலம், 𑌸𑍍𑌫𑌟𑌿𑌕𑌂=படிகம், 𑌸𑍍𑌤𑌂𑌭=தம்பம, 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾=பதிட்டை, 𑌪𑍍𑌰𑌵𑌾𑌳=பவளம் இவைமுதலான கெடுதியும் பிறவுங்கொள்க.

[தமிழெழுத்திலே சிறப்பெழுத்தும் பொதுவெழுத்தும்.]

௧௫0. றனழஎ ஒவ்வு முயிர்மெய்யு முயிரள
பலலாச் சார்புந் தமிழ்பிற பொதுவே.

இ-ள். றனழஎ ஒவ்வும் - முதலுஞ்சார்புமாகிய தமிழெழுத்து நாற்பதிலே றகர னகர ழகர எகர ஒகரங்கள் ஐந்தும்,—உயிர்மெய்யும் உயிரளபு அல்லாச் சார்பும் - உயிர்மெய்யும் உயிரளபெடையுமல்லாத எட்டுவகைச் சார்பெழுத்துக்களும்,—தமிழ் - தமிழுக்கே சிறப்பெழுத்துக்களாம்,—பிற பொது - ஒழிந்த இருபத்தேழெழுத்துக்களும் ஆரியத்திற்குந் தமிழிற்கும் பொதுவெழுத்துக்களாம். எ-று.

பிறபொதுவே என்றதனால் முற்கூறியவை சிறப்பென்று விளங்கிக்கிடத்தலால், தமிழ்ச்சிறப்பென்று கூறாது தமிழெனவாளாகூறினார்.

ஆரிய எழுத்துக்களைத் தமிழெழுத்துக்களோடு நோக்கி ஆரியத்திற்கே யுரியனவாகிய சிறப்பெழுத்துக்களையும், ஆரியத்திலும் தமிழிலுமிருக்கும்

Digitized By Roja Muthiah Research Library

பொதுவெழுத்துக்களையும் 'இடையிறுன்கும்' என்னுஞ் சூத்திரத்தாற் கூறினார். தமிழிலிருக்குமெழுத்துக்களையும் ஆரியவெழுத்துக்களோடு நோக்கித் தமிழிற்கேயுரியனவாகிய சிறப்பெழுத்துக்களையும், தமிழிலும் ஆரியத்திலுமிருக்கும் பொதுவெழுத்துக்களையும் இச்சூத்திரத்தால் வகுத்துக்கூறினாரென்றறிக.

முதலெழுத்தினுள், ற ன ழ எ ஒ என்னுநான்கும் தமிழ்ச்சிறப்பெழுத்து. சார்பெழுத்துக்களுள்ளே உயிர்மெய் இருநூற்றுப்பதினாறில், ற ன ழ என்னு மூவருக்கங்களாலாகிய முப்பத்தாறு எழுத்துக்களும் ற் ன் ழ் என்னுமூன்று மெய்யுமொழிய நின்றமெய் பதினைந்தில் எகர ஒகரமாகிய இரண்டுயிர்களின் கலப்பினால் வந்த உயிர்மெய் முப்பதும் ஆகிய அறுபத்தாறு உயிர்மெய்யெழுத்துக்களும்,

ஆய்தமும், ஒற்றளபெடையும், குற்றியலிகரமும், குற்றியலுகரமும், ஐகாரக்குறுக்கமும், ஔகாரக்குறுக்கமும், மகரக்குறுக்கமும், ஆய்தக்குறுக்கமும் தமிழ்ச்சிறப்பெழுத்துக்களாம்.

உயிரெழுத்துக்களுள்ளே அ ஆ இ ஈ உ ஊ ஏ ஐ ஓ ஔ என்னும் பத்தும், மெய்யெழுத்திலே க் ங் ச் ஞ் ட் ண் த் ந் ப் ம் ய் ர் ல் வ் ள் என்னும்பதினைந்தும், இப்பதினைந்துமெய்களோடு எகர ஒகர மிரண்டுமல்லாத பத்துயிருங் கலத்தலாலுண்டான உயிர்மெய் நூற்றைம்பதும், உயிரளபெடையும் தமிழிற்கும் ஆரியத்திற்கும் பொதுவெழுத்துக்களாம்.

உயிர்மெய்யைப் பொதுவெழுத்தென்று சூத்திரங்கூறியிருக்கவும் உயிர்மெய் இருநூற்றுப்பதினாறையும் பொதுவெழுத்தென்று கொள்ளாமல் அவற்றுள் நூற்றைம்பதைமாத்திரம் பொதுவெழுத்தென்றுகொண்டு, மற்றை அறுபத்தாறுயிர்மெய்களையுந் தமிழ்ச்சிறப்பெழுத்துட்கொண்டதென்னையெனின், ற் ன் ழ் என்னு மூன்றொற்றையுந் தமிழ்ச்சிறப்பெழுத்தென்றாராதலின் இந்த மூன்றொற்றும் உயிரோடு கலந்துண்டாகு முயிர்மெய்யும் ஆரியத்திலில்லையாமாதலினாலும், எ ஒ என்னு மிரண்டுயிரைத் தமிழிற்குச் சிறப்பெழுத்தென்றாராதலின் மெய்யொடு இவ்விரண்டுயிர் கலத்தலாலுண்டாகும் உயிர்மெய்யும் ஆரியத்திலில்லையாமாதலினாலும் அவற்றைக் கழித்து நின்றவற்றையே பொதுவெழுத்தாகக் கொள்ளவேண்டுதலாலென்க.

பரீக்ஷைவினாக்கள்:—270. ஆரியபாஷையில் உயிரெழுத்துக்களெவை? 271. அவைகளுள் ஆரியத்திற்குச் சிறப்பெழுத்துக்கள் எவை? 272. ஆரியத்திற்குந் தமிழிற்கும் பொதுவெழுத்துக்கள் எவை? 273. ஆரியபாஷையில் மெய்யெழுத்துக்கள் எவை? 274. அவைகளில் ஆரியத்துக்குச்சிறப்பெழுத்துக்கள் எவை? 275. ஆரியத்திற்குந் தமிழிற்கும் பொதுவெழுத்துக்கள் எவை? 276. உயிரிலும் மெய்யிலுமாக ஆரியத்திற்குரிய சிறப்பெழுத்துக்கள் எத்தனை அவ்வாறே ஆரியத்திற்குந் தமிழிற்கும் பொதுவெழுத்துக்கள் எத்தனை?! 277. உயிரை ஆரியத்துள் எவ்வாறு கூறுவர்?

Digitized By Roja Muthiah Research Library

278. ஆரியத்துள் மெய்யை எவ்வாறு கூறுவர்? 279. ஐவருக்கமென்பன எவை? 280. ஆரியத்தினின்றுந் தமிழில் வந்து வழங்கும் வடமொழி எத்தனைவகைப்படும்? 281. தற்சமம் என்பது யாது? 282. தற்பவமென்பன யாவை? 283. ஆரியமொழி தமிழில் வடமொழியாமிடத்து ஏழாமுயிர் எவ்வெழுத்தாகத் திரியும்? 284. ஐந்துவருக்கமெய்களுள்ளும் இடைநின்ற மும்மூன்றும் எவ்வெழுத்தாகத் திரியும்? 285. எட்டாமெய் சகரமாகத் திரிவதன்றி வேறெவ்வெழுத்தாகத் திரியும்? 286. முப்பதாமெய் எவ்வெழுத்தாகத் திரியும்? 287. முப்பத்தொராமெய் எவ்வெழுத்தாகத் திரியும்? 288. முப்பத்திரண்டாமெய் எவ்வாறு திரியும்? 289. முப்பத்துமூன்றுமெய் மொழிநடுவில் திரிவது எப்படி? 290. முப்பத்துமூன்றுமெய் மொழிமுதலில் திரியுமோ கெடுமோ? 291. முப்பத்தைந்தாமெய் எவ்வெழுத்தாகத் திரியும்? 292. வடமொழியிறுதி ஆகாரந் தமிழில் எவ்வெழுத்தாகத் திரியும்? 293. வடமொழியிறுதி ஈகாரந் தமிழில் எப்படித் திரியும்? 294. (தமிழில் மொழிக்கு முதலாகாத எழுத்துக்களுள்) ரகரத்தை முதலாகவுடைய ஆரியமொழிகள் தமிழில் வரும்போது எவ்வெழுத்தை முன்னுகப்பெறும்? 295. லகரத்தை முதலாகவுடைய ஆரியமொழிகள் தமிழில் வரும்போது எவ்வெழுத்தை முதலிற் பொருந்தும்? 296. யகரத்தை முதலாகவுடைய ஆரியமொழிகள் தமிழில் வரும்போது எவ்வெழுத்தை முதலிற்பெறும்? 297. (ஒற்றும் உயிர்மெய்யும் இணைந்தவடமொழி தமிழில் வருகையில்) யகரத்துக்குமுன் எவ்வுயிர் வரும், ரகரத்துக்குமுன் எவ்வுயிர்வரும், லகரத்தின்முன் எவ்வுயிர்வரும்??? 298. (ஒற்றுமுயிர்மெய்யுமிணைந்த ஆரியமொழி தமிழில் வரும்போது) மகரத்தின்முன் எவ்வுயிர்வரும், வகரத்தின்முன் எவ்வுயிர்வரும், நகரத்தின்முன் எவ்வுயிர்வரும்??? 299. சர்ப்பம் என்பது கருப்பம் என வருதற்கு விதியெது? 300. தமிழெழுத்துக்களுள்ளே ஆரியத்திற்குந் தமிழிற்கும் பொதுவெழுத்துக்கள் எவை, தமிழிற்குச் சிறப்பெழுத்துக்களெவை??

பதவியல் முற்றிற்று.



Digitized By Roja Muthiah Research Library

# ௫. உயிரீற்றுப்புணரியல்.

## புணர்ச்சி.

[புணர்ச்சி இன்னதென்பது.]

௧௫௧. மெய்யுயிர் முதலீ றாமிரு பதங்களுந்
தன்னொடும் பிறிதொடு மல்வழி வேற்றுமைப்
பொருளிற் பொருந்துழி நிலைவரு மொழிகள்
இயல்பொடு விகாரத் தியைவது புணர்ப்பே.

இ - ள். மெய் உயிர் முதல் ஈறு ஆம் இருபதங்களும் - மெய்யையும் உயிரையும் முதலு மீறுமாகவுடைய பகாப்பதம் பகுபதம் என்னும் இருவகைப்பதங்களும்,— தன்னொடும் பிறிதொடும் - தன்னொடுதானும் பிறிதொடுபிறிதுமாய்,— அல்வழி வேற்றுமைப் பொருளின் பொருந்துழி - அல்வழிப்பொருளிலேனும் வேற்றுமைப்பொருளிலேனும் பொருந்துமிடத்து,— நிலை வரு மொழிகள் - நிலைமொழியும் வருமொழியும்,— இயல்பொடு விகாரத்து இயைவது - இயல்பாகவேனும் விகாரமாகவேனும் சந்திப்பது,— புணர்ப்பு - முன்சொல்லப்பட்ட புணர்ச்சியாம். எ - று.

மெய்யுயிர் முதலீறும் எனவே:—மெய்ம்முதன் மெய்யீறு, மெய்ம்முதல் உயிரீறு, உயிர்முதல் உயிரீறு, உயிர்முதன் மெய்யீறு என்று சொற்கள் நால்வகைப்படுமென்றுணர்க. உ - ம். கனகம், கடுகு, உவகை, ஓடம் என முறையே காண்க.

தன்னொடும் பிறிதொடும் எனவே:—நிலைமொழி வருமொழிகளில் உயிரீறும் உயிர்முதலுஞ் சந்தித்தலும், உயிரீறும் மெய்ம்முதலுஞ் சந்தித்தலும், மெய்யீறும் மெய்ம்முதலுஞ் சந்தித்தலும், மெய்யீறும் உயிர்முதலுஞ்சந்தித்தலும் என்று எழுத்துவகையால் புணர்ச்சி நால்வகைப்படுமென்பதும், இருபதங்களும் என்றது பகாப்பதம் பகுபதங்களேயாதலின் தன்னொடும் பிறிதொடும் என்றது பகாப்பதத்தொடு பகாப்பதமும், பகுபதத்தொடு பகுபதமும்; பகாப்பதத்தொடு பகுபதமும், பகுபதத்தொடு பகாப்பதமும் நிலைமொழி வருமொழிகள் சந்தித்தலும் என்று பதவகையால் நால்வகைப்புணர்ச்சி குறிக்கப்படுமென்பதும். உ - ம். பொன்+ஒளி; கற்றோர்+புகன்றார்; வாழை+முறிந்தது; விழுந்தது+மரம் என முறையே காண்க.

அல்வழிவேற்றுமைப்பொருளில் பொருந்துழி எனவே:—அல்வழிச் சந்தி வேற்றுமைச்சந்தியென்று பொருணோக்கத்தாற் புணர்ச்சி யிருவகைப்படுமென்பதும். உ - ம். வாழைமுறிந்தது, பழத்தைஉண்டான் என வரும்.

இயல்பொடுவிகாரத் தியைவது எனவே இயல்புச்சந்தி விகாரச்சந்தியென்று சுபாவபேதங்களால் இருவகைப்படும் புணர்ச்சியென்பதும் உணர்க.

உ - ம். பொன்விலை, புகழ்அழகிது எ - ம். வாழைப்பழம், பொற்கலம், மாவேர் எ - ம். வரும், இவற்றிற் சுபாவமும் பேதமுங் காண்க.

Digitized By Roja Muthiah Research Library

இயல்பு, இயற்கை, தன்மை, சுபாவம் என்பன ஒருபொருட்சொற்கள்.
விகாரம், செயற்கை, செயல், விதி, பேதம்என்பன ஒருபொருட்சொற்கள்.

இவ்விருவகைகளையும் இணைத்தால், அல்வழி இயல்புச்சந்தி, அல்வழி விகாரச்சந்தி; வேற்றுமை இயல்புச்சந்தி, வேற்றுமை விகாரச்சந்தி என்று நால்வகைப்படுமென்றறிக. இவற்றில் உயிரீறு, மெய்யீறு, உயிர்முதல், மெய்ம்முதல்களும் பகாப்பதம் பகுபதங்களும் ஆகிய அனைத்தும் அடங்கி நிலைமொழி வருமொழிகளாய் நிற்றலுங்காண்க.

நிலைமொழியாவது சந்திப்பில் இடப்புறத்தில் நிற்கும் பதம்; அதற்குப்பின்னாக வலப்புறத்தில் வந்தமொழி வருமொழியாம். (சூத்திரம்.):—"சந்தியிலிடமொழி நிலைமொழியாமதன், பிந்தியவலமொழி வருமொழிப்பெயர்பெறும்" என்பதனாலறிக.

உயிர்மெய் முதலீறும் என்று முறையிற் கூறாமல், மெய்யுயிர் முதலீறும் என்று முறைபிறழக் கூறியது என்னையெனின்; உயிர்மெய் முதலீறும் என்று கூறின் உயிர்மெய்யென்னும் எழுத்தென்று கருதப்பட்டு உயிர்மெய்யெழுத்துமுதல் உயிர்மெய்யெழுத்து ஈறும் என்று பொருள்பட்டு மெய்ம்முதல் உயிரீற்றுப்பதம் மாத்திரங் குறிக்கப்பட்டு மெய்ம்முதல் மெய்யீறும், உயிர்முதலுயிரீறும், உயிர்முதல் மெய்யீறும ஆகிய மற்றை மூவகைப்பதங்களும் அடங்காவாம் ஆதலின் அந்நால்வகையும் அடங்குதற்பொருட்டு மெய்ம்முதலுயிரீறுமென்று கூறியதென்றுணர்க.

வேற்றுமையல்லாதவழி அல்வழியாதலின் வேற்றுமை யல்வழிப் பொருளின் என்று முறையிற் கூறாமல் அல்வழி வேற்றுமைப்பொருளின் என்று கூறியது என்னையெனின்; வேற்றுமை யல்வழிப்பொருளின் என்று கூறின் (வேற்றுமைவழி யல்லாததாகிய) அல்வழியென்று இவ்வொன்றுமே கருதப்பட்டு வேற்றுமைவழி கொள்ளப்படாதுபோம் ஆதலின் ஐயநீக்கி அவ்விருவழியையுங் குறித்தற்கு அல்வழியை முன்வைத்து அவ்வாறு கூறினாரென்றறிக. (௧)

[அல்வழி வேற்றுமை இவையென்பது.]

௧௫௨. வேற்றுமை யைம்முத லாறா மல்வழி
தொழில்பண் புவமை யும்மை யன்மொழி
எழுவாய் விளியீ ரெச்சமுற் றிடையுரி
தழுவு தொடரடுக் கெனவீ ரேழே.

இ-ள். வேற்றுமை - வேற்றுமைவழிப்புணர்ச்சி,—ஐ முதல் ஆறு (தழுவுதொடர்) ஆம் - ஐ ஆல் கு இன் அது கண் என்னும் ஆறுருபுகளும் மறைந்தாயினும் வெளிப்பட்டாயினும் வரப் பதங்கள் பொருந்துந் தொடர்ச்சியாம்,—அல்வழி - அல்வழிப்புணர்ச்சி,— தொழில் (தழுவுதொடர்) - வினைத்தொகையும்,— பண்பு (தழுவுதொடர்) - பண்புத்தொகையும்,—உவமை (தழுவுதொடர்) - உவமைத்தொகையும்,— உம்மை (தழுவுதொடர்) - உம்மைத்தொகையும்,—அன்மொழி (தழுவுதொடர்) - அன்மொழித்தொ

Digitized By Roja Muthiah Research Library

கையும்,—எழுவாய் (தழுவுதொடர்) - எழுவாய்த்தொடரும்,—விளி (தழுவு தொடர்) - விளித்தொடரும்,—ஈரெச்சம் (தழுவுதொடர்) - பெயரெச்சத் தொடரும் வினையெச்சத்தொடரும்,—(ஈர்) முற்று (த்தழுவுதொடர்) - தெரிநிலைவினைமுற்றுத்தொடரும் குறிப்புவினைமுற்றுத் தொடரும்,—இடை தழுவுதொடர்) - இடைச்சொற்றொடரும்,—உரி தழுவுதொடர் - உரிச்சொற்றொடரும்,—அடுக்கு - அடுக்குத்தொடரும்,—என ஈரேழே - எனப் பதங்கள் பொருந்துந் தொடர்ச்சி பதினான்காம். எ - று.

ஐம்முதலாறென்றது இரண்டாம்வேற்றுமைமுதல் ஏழாம்வேற்றுமை பரியந்தமுள்ள ஆறு வேற்றுமைகளையுங் குறித்துநின்றதாதலின் அவற்றின் உருபுகளனைத்தையுங் கொள்க. எவ்வாறெனில் மூன்றாம்வேற்றுமைக்கு ஆல் என்பதும் அன்றி ஆன், ஒடு, ஓடு கொண்டு என்பனவும் கொள்ளப்படுதல். இப்படியே மற்றவேற்றுமைகளின் பல்வுருபுகளையுஞ்சேர்த்தறிக

[வேற்றுமைவழி உதாரணம்.]

| | (வேற்றுமைத்தொகை.) | | (வேற்றுமைவிரி=தொகாநிலை.) |
|---|---|---|---|
| 1. | நிலங்கடந்தான்... | ...[ஐ] | நிலத்தைக்கடந்தான். |
| 2. | கல்லெறிந்தான்......... | [ஆல்] | கல்லாலெறிந்தான் |
| 3. | கொற்றன்மகன்...... | ...[கு] | கொற்றனுக்குமகன். |
| 4. | மலைவீழருவி... | [இன்] | மலையின்வீழருவி. |
| 5. | சாத்தன்கை... | [அது] | சாத்தனதுகை. |
| 6. | குன்றக்கூகை... | ...[கண்] | குன்றத்தின்கட்கூகை. |

[அல்வழி உதாரணம்.]

| | | | |
|---|---|---|---|
| 1. | கொல்யானை... | வினைத்தொகை. | இவ்வைந்துந் தொகைநிலைத் தொடர். |
| 2. | கருங்குதிரை... | பண்புத்தொகை. | |
| | சாரைப்பாம்பு... | இருபெயரொட்டுப்பண்புத்தொகை. | |
| 3. | மதிமுகம்... | உவமைத்தொகை. | |
| 4. | இராப்பகல்... | உம்மைத்தொகை. | |
| 5. | பொற்றொடி.... | அன்மொழித்தொகை. | |
| 6. | சாத்தன்வந்தான்... | எழுவாய்த்தொடர். | இவ்வொன்பதுந் தொகாநிலைத் தொடர். |
| 7. | சாத்தாவா... | விளித்தொடர். | |
| 8. | வந்தசாத்தன்... | பெயரெச்சத்தொடர் | |
| 9. | வந்துபோனான்... | வினையெச்சத்தொடர். | |
| 10. | வந்தான்சாத்தன்... | தெரிநிலைவினைமுற்றுத்தொடர். | |
| 11. | பெரியன்சாத்தன் | குறிப்புவினைமுற்றுத்தொடர். | |
| 12. | மற்றொன்று... | இடைச்சொற்றொடர். | |
| 13. | நனிபேதை... | உரிச்சொற்றொடர். | |
| 14. | பாம்புபாம்பு... | அடுக்குத்தொடர். | |

Digitized By Roja Muthiah Research Library

தழுவுதொடர் ஆறும் பதினொன்றுமெனக் கூறவே, அவ்விருவழியினுந்தழாத்தொடருஞ் சிலவுளவென்றாராயிற்று. கைக்களிறு என்பது கையையுடைய களிறு என விரிக்கப்படுதலால், கையென்பது களிறு என்பதைப் பொருளால் தழுவாமல் (உடைய என்பதைப் பெற்றபின்னே தழுவித்) தொடர்ந்துநின்றது: இது தழாத்தொடராகிய வேற்றுமைப்புணர்ச்சி. சுரையாழவம்மிமிதப்ப என்பது சுரைமிதப்ப அம்மி ஆழ எனக் கூட்டவேண்டுதலால், சுரையென்பது ஆழ என்பதையும், அம்மியென்பது மிதப்பவென்பதையும் (பொருளால் தழுவாது) தொடர்ந்தன: இவை தழாத்தொடராகிய அல்வழிப்புணர்ச்சி.

தழாத்தொடராவது நிலைமொழியானது வருமொழியைப் பொருட்பொருத்தமுறத் தழுவாததொடர். பொருட்பொருத்தமுறத் தழுவியதொடர்தழுவுதொடர்.

முதல்வேற்றுமையையும் எட்டாம்வேற்றுமையையும் அல்வழியென்றது என்னையெனின், இரண்டாம்வேற்றுமைமுதலிய ஆறுவகையும் வேற்றுமையுருபை மறைவிலாவது வெளிப்படையிலாவது உடையனவாயே வரும். முதல்வேற்றுமையும் எட்டாம்வேற்றுமையும் சிறுபான்மை உருபேற்றும், பெரும்பான்மை உருபேலாமல் வெறுமையாயுமிருக்கும். இப்பெரும்பான்மை யியல்புபற்றி அல்வழியென்று கொண்டார் என்க. அவ்வாறாயின் பெயரியலில் 'எட்டே' வேற்றுமை என்று வேற்றுமைக்குட்படுத்திச்சொல்லியதென்னையெனின்; முதல்வேற்றுமையும் எட்டாம்வேற்றுமையும் பெயர்ப்பொருளைக் கருத்தாப்பொருளும் விளிப்பொருளுமாக முறையே வேற்றுமைப்படுத்தல்பற்றியேயாமென்க. எனவே உருபேற்கு நியதியின்மையால் அல்வழியென்றும், பெயர்ப்பொருளை வேறுபடுத்தலால் வேற்றுமையென்றும் இரண்டற்குமுரியவாயினவென் றுணர்க.

வேற்றுமைவழிக்குச் சொல்லப்பட்ட ஆறும் தொகைநிலையாயும் வரும், தொகாநிலையாயும் வரும். எவ்வாறு வரினும் அவை வேற்றுமைவழிக்குரியனவாம்.

அல்வழிவகை பதினொன்கனுள்:—முன்னையநான்குந் தொகைநிலையாம். பின்னைய ஒன்பதும் தொகாநிலையாம் என்றுணர்க. (உ)

[இயல்புபுணர்ச்சி.]

கருங. விகார மனைத்து மேவல தியல்பே.

இ - ள். விகாரம் அனைத்தும் மேவலது - மேல்வரும் விகாரவகையனைத்தும் அடையாதது,—இயல்பு - முன்சொன்ன இயல்பாகும். எ - று உ - ம். பொன்மலை, புகழழகிது: ஒளிமணி, நீறுபூசினான் எனவரும். (ங)

[விகாரப்புணர்ச்சி]

கருச. தோன்ற றிரிதல் கெடுதல் விகாரம்
மூன்று மொழிமூ விடத்து மாகும்.

இ - ள். தோன்றல் திரிதல் கெடுதல் விகாரம் - எழுத்தாயினுஞ் சாரியையாயினுந் தோன்றுதலும் வேறுபடுதலும் கெடுதலும் முன்சொன்னவிகாரமாகும்,—மூன்றும் மொழி மூவிடத்தும் ஆகும் - இம்மூவகை விகாரமும் நிலைமொழி வருமொழிகளுடைய முதல் இடை கடை என்னுமூன்றிடத்தும் ஏற்றபடி வரும். எ - று.

உ - ம். பூ+கொடி=பூங்கொடி வருமொழிமுதலில் மெய் தோன்றிற்று. பல+தலை=பஃறலை நிலைமொழியீற்றிலும் வருமொழி முதலிலும் உள்ள மெய்கள் திரிந்தன. நிலம்+வலயம்=நிலவலயம் நிலைமொழியீற்றுமெய் கெட்டது. ஆறு+பத்து=அறுபது நிலைமொழி முதலுயிர்திரிந்து வருமொழி யிடையொற்றுக் கெட்டது. பல+பொருள்=பல்பொருள் நிலைமொழியீற்றுயிர் கெட்டது. நாழி+உரி=நாடுரி நிலைமொழியீற்றுயிர்மெய்கெட்டு டகரமெய் தோன்றிற்று. தமிழ்+பிள்ளை=தமிழப்பிள்ளை நிலைமொழியீற்றிற் சாரியை தோன்றிற்று. பனை+காய்=பனங்காய் நிலைமொழியீற்றுயிர் கெட்டு அம் சாரியை தோன்றி அவ் வம் சாரியையீற்றுமகரம் ஙகரமாய்த் திரிந்தது. இப்படியே இவ்விகாரங்கள் நிலைமொழியைச் சார்ந்து வருவனவும், வருமொழியைச் சார்ந்து வருவனவுமேயன்றி, அவ்விருமொழியைச் சார்ந்துவருவனவும் உண்டெனக் கொள்க. உ - ம். நீயோ+அரசன்=நீயோவரசன் என நிலைமொழி வருமொழிகளுக்கிடையில் வகரவுடம்படுமெய் தோன்றியது. உரி+நெய்=உரியநெய் இடையில் யகரந்தோன்றிற்று. புளி+காய்=புளியங்காய் இடையில் அம் தோன்றி அதன் ஈற்றுமகரம் ஙகரமாய்த் திரிந்தது. மேலுமிவ்வாறே காண்க. இவை நிலைமொழி வருமொழிகளுக்கிடையில் வந்தனவென்றறிக.

கருரு. வலித்தன் மெலித்த னீட்டல் குறுக்கல்
விரித்த றொகுத்தலும் வருஞ்செய்யுள் வேண்டுழி,

இ - ள். வலித்தல் - மெல்லொற்றை வல்லொற்றாக்கலும்,—மெலித்தல் - வல்லொற்றை மெல்லொற்றாக்கலும்,—நீட்டல் - குற்றெழுத்தை நெட்டெழுத்தாக்கலும்,—குறுக்கல் - நெட்டெழுத்தைக் குற்றெழுத்தாக்கலும்,—விரித்தல் - இல்லாதவெழுத்தை வருவித்தலும்,—தொகுத்தல் - உள்ளவெழுத்தை நீக்கலும்,—செய்யுள் வேண்டுழி வரும் - செய்யுளிடத்து அடிதொடை முதலானவைகளை அமைக்கவேண்டுமிடத்து வருவனவாம்.

உ - ம். "குறுத்தாட்பூதஞ்சுமந்த அறக்கதிராழியெம்மண்ணலைத்தொழினே" இதில் குறுந்தாள் எனற்பாலது குறுத்தாள் என வலிந்து நின்றது. "தண்டையினக்கிளிகடிவோள் பண்டையளல்லண்மானேக்கினனே" இங்கே தட்டை எனற்பாலது தண்டை என மெலிந்து நின்றது. "தீத்தொழிலேகன்றித்திரிதந்தெருவைபோற் போத்தரூர்புல்லறிவினுர்." இங்கே பொத்தரூர் எனற் பாலது போத்தரூர் என நீண்டு நின்றது. "யானையெருத்தத்திருந்தவிலங்கிலைவேற்றென்னன் றிருத்

தார்நன்றென்றேன்றியேன்” இங்கே தீயேன் எனற்பாலது தியேன் எனக்குறுகி நின்றது. “சிறியிலைவெதிரினெல்விளையும்மே” இங்கே விளையுமே எனற்பாலது விளையும்மே என மகரமெய் விரிந்துநின்றது. சிறியவிலை எனற்பாலது சிறியிலை என யகரவுயிர்மெய் தொக்குநின்றது. (௪)

கருசா. ஒருமொழி மூவழிக் குறைதலு மனைத்தே.

இ - ள், ஒருமொழி மூவழிக் குறைதலும் - ஒருசொல்லினுடைய முதல் இடை கடை என்னுமூன்றில் ஓரிடத்துக் குறைந்துவருதலும்,—அனைத்து - அச்செய்யுள் விகாரமாம். எ - று.

உ - ம். “மரையிதழ்புரையுமஞ்செஞ்சீறடி” இங்கே தாமரை எனற்பாலது மரை என முதற் குறைந்து நின்றது. “வேதினவெரிநினோதிமுது போத்து” இங்கே ஓந்தி எனற்பாலது ஓதி என இடைகுறைந்துநின்றது. “நீலுண்டுகிலிகைகடுப்ப” இங்கே நீலம் எனற்பாலது நீல் எனக் கடை குறைந்து நின்றது. உரையிற்கோடலால் விதியின்றி வருவனவாகிய புணர்ச்சியில் விகாரங்களுங் கொள்க. அவை: தோன்றல், திரிதல், கெடுதல், நிலைமாறுதல் என்பனவாம். உ - ம். யாது - யாவது இது தோன்றல். மாகி - மாசி; கண்ணகல் பரப்பு - கண்ணகன்பரப்பு; உயர்திணைமேல - உயர்திணைமேன இவை திரிதல். யாவர் - யார், ஆர்; யானை - ஆனை; யாடு - ஆடு; யாறு - ஆறு இவை கெடுதல். வைச்சாகி - வைகாசி; மிஞிறு - ஞிமிறு; சிவிறி - விசிறி; தசை - சதை இவை எழுத்து நிலைமாறுதல். கண்மீ - மீகண்; இல்வாய் - வாயில்; நகர்ப்புறம் - புறநகர் இவை சொன்னிலைமாறுதல்.

செய்யுளுக்குரிய இந்த ஒன்பது விகாரங்களை இங்கே சொல்லியதென்னெனின்; வழக்கினிடத்து வருதலுமன்றிச் செய்யுளிடத்தும் அல்வழி வேற்றுமையால் வரும் மூன்று விகாரமும் இந்த ஒன்பது விகாரமும் வருதலால் வேறுபாடறிதற்கும்; விரித்தல் தோன்றல் விகாரமாகவும், வலித்தலு மெலித்தலு நீட்டலுங் குறுக்கலும் திரிதல் விகாரமாகவும், தொகுத்தலு முதற்குறை இடைக்குறை கடைக்குறைகளுங் கெடுதல்விகாரமாகவும் இந்த மூவகை விகாரங்களுள் அந்த ஒன்பது விகாரங்களும் ஒருவாறடங்குமென்றறிவித்தற்குமென்க. அன்றியும்; வா; சா; தா என்பன முதலிய பலபகுதிகள் வந்தான், வருகிறான், வருவான்; செத்தான், சாகிறான், சாவான்; தந்தான், தருகிறான், தருவான் என்று பலவாறு வேறுபட்டு வருதற்கு விதியாக இச்செய்யுள்விகாரம் உபயோகப்படுதல் பற்றியுமாமென்க.

[புணர்ச்சி விகாரத்தில் வருவதோர் ஐயமொழித்தல்.]

கருஎ. ஒருபுணர்க் கிரண்டு மூன்று முறப்பெறும்.

இ - ள். ஒரு புணர்க்கு - ஒரு புணர்ச்சிக்கு,—இரண்டும் மூன்றும் - ஒன்றேயன்றி இரண்டுவிகாரமும் மூன்று விகாரமும்,—உறப் பெறும் - வரப்பெறும். எ - று.

Digitized By Roja Muthiah Research Library

உ - ம். யானை+கோடு=யானைக்கோடு ஒருவிகாரம். (தோன்றல்.) நிலம்+பனை=நிலப்பனை இரண்டுவிகாரம். (கெடுதலுந் தோன்றலும்.) பனை+காய்=பனங்காய் மூன்றுவிகாரம். (கெடுதலுந் தோன்றலுந் திரிதலும்.) (எ)

**பரீக்ஷை**வினாக்கள்:—301. புணர்ச்சியாவதியாது? 302. வேற்றுமைப் புணர்ச்சியாவதியாது? 303. அல்வழிப்புணர்ச்சியாவதியாது? 304. அல்வழிப்புணர்ச்சி பதினான்கனுள்ளே தொகைநிலைத்தொடர்களெவை? 305. தொகாநிலைத்தொடர்களெவை? 306. தழுவுதொடராவதியாது? 307. தழாத்தொடராவதியாது? 308. இயல்புபுணர்ச்சியாவதியாது? 309. விகாரப்புணர்ச்சியாவதியாது? 310. செய்யுள்விகாரங்களெவை? 311. புணர்ச்சிவிகாரங்களெவை? 312. ஒருபுணர்ச்சிக்கண் எத்தனைவிகாரம்வரும். 313. வேற்றுமைவழிப்புணர்ச்சி தொகைநிலையாயிருக்குமோ தொகாநிலையாயிருக்குமோ? 314. முதல்வேற்றுமையும் எட்டாம்வேற்றுமையும் அல்வழிக்குரியனவோ வேற்றுமைவழிக்குரியனவோ? 315. நிலைமொழியாவதியாது? 316. வருமொழியாவதியாது?

## பொதுப்புணர்ச்சி.

[எல்லாவீற்றின்முன்னும் மெல்லினமும் இடையினமும் புணர்தல்.]

கடுஅ. எண்மூ வெழுத்தீற் றெவ்வகை மொழிக்கும்
முன்வரு ஞநமய வக்க ளியல்புங்
குறில்வழி யத்தனி யைந்நொது முன்மெலி
மிகலுமாம் ணளனல வழிநத் திரியும்.

இ - ள். எண்மூவெழுத்து ஈற்று - (இயல்பினாலாயினும் விதியினாலாயினும்) இருபத்துநான்கெழுத்தையும் ஈறாகவுடைய,—எவ்வகை மொழிக்கும் முன் வரும் - பெயர்ச்சொல் வினைச்சொல் இடைச்சொல் உரிச்சொல் திசைச்சொல் வடசொல் என்னும் பலவகைப்பட்ட சொற்களுக்கும் முன்னே வரும்,—ஞ ந ம ய வக்கள் இயல்பும் - ஞகர நகர மகர யகர வகரங்கள் அல்வழி வேற்றுமை இரண்டிலும் இயல்பாதலும்,—குறில் வழிய தனி ஐ நொது முன் மெலி மிகலுமாம் - குற்றெழுத்தின் பின்னின்ற யகரமெய்யே ஓரெழுத்தொருமொழியாகிய உயிர் உயிர்மெய் என்னும் ஐகாரமே நொவ்வே துவ்வே என்பவைகளுக்கு முன்வரும் ஞகார நகார மகாரங்கள் (பிறசொற்களின்முன் இயல்பாதலன்றி) மிக்குமுடிதலுமாகும்,—ண ள ன ல வழி ந திரியும் — ண ள ன லக்களின்முன் வரும் நகரம் (பிறவீற்றின்முன் இயல்பாதலன்றித்) திரியும். எ - று.

விதியீறாவது இயல்பாகநின்ற உயிரேனும் ஒற்றேனும் போய் மற்றோருயிரீறாகவேனும் ஒற்றீறாகவேனும் நிற்பது. உ - ம். விளா என்பது விள எனவும் வட்டம் என்பது வட்ட எனவும் வாழிய என்பது வாழி எனவும் விதியீறாய் வருதல் காண்க.

Digitized By Roja Muthiah Research Library

புணரியலில் அல்வழி வேற்றுமைவழிகளுள் ஒன்றைக் குறிப்பாக வேனும் வெளிப்படையாகவேனும் விதவாத இடமெல்லாம் அவ்விருவழிகளையுங் கொள்க.

உ-ம். விள, பலா, புளி, தீ, கடு, பூ, சே, பனை, கோ, கௌ, [உரிஞ், மண், பொருந், மரம், பொன், வேய், வேர், வேல், தெவ், யாழ், வாள் எஃகு என்னும் நிலைமொழிகளோடு, அல்வழிப்புணர்ச்சிக்கு உதாரணமாக ஞான்றது, நீண்டது, மாண்டது, யாது, வலிது என்னும் வருமொழிகளையும்; வேற்றுமைவழிப்புணர்ச்சிக்கு உதாரணமாக ஞாற்சி, நீட்சி, மாட்சி, யாப்பு, வன்மை என்னும் வருமொழிகளையுங் கூட்டி,

| (அல்வழி.) | (வேற்றுமைவழி.) |
|---|---|
| உ-ம். (க,) விள ஞான்றது | விள ஞாற்சி |
| விளநீண்டது | விளநீட்சி |
| விளமாண்டது | விளமாட்சி |
| விளயாது | விளயாப்பு |
| விளவலிது | விளவன்மை |

என எல்லாவீற்றின்முன்னும் ஞ ந ம ய வக்கள் இயல்பாதல்காண்க.

உரிஞ்+ஞான்றது=உரிஞு ஞான்றது; பொருந்+ஞான்றது=பொருநு ஞான்றது; வேல்+ஞான்றது=வேன் ஞான்றது; வாள்+ஞான்றது=வாண் ஞான்றது; மரம்+ஞான்றது=மர ஞான்றது எனவரும் நிலைமொழியீறுகள் விகாரப்படுதல் அவ்வவ்வீற்றுச் சிறப்புவிதிகளிற் காண்க.

| (அல்வழி.) | (வேற்றுமைவழி.) |
|---|---|
| (உ.) மெய்ஞ் ஞான்றது | மெய்ஞ்ஞாற்சி |
| மெய்ந்நீண்டது | மெய்ந்நீட்சி |
| மெய்ம்மாண்டது | மெய்ம்மாட்சி |
| கைஞ்ஞான்றது | கைஞ்ஞாற்சி |
| கைந்நீண்டது | கைந்நீட்சி |
| கைம்மாண்டது | கைம்மாட்சி |

எனக் குறின்முன்னின்ற யகரத்தின் முன்னுந் தனி ஐம்முன்னும் மெலிமிகுதல் காண்க.

(ரு.) நொ, து முன் மெலி மிகலுமாம் என்ற எச்ச வும்மையால், அவ்விரண்டன் முன்னும் இடையெழுத்து மிகலுமாம் என்றுஆயிற்று.

| | |
|---|---|
| நொ+ஞெள்ளா=நொஞ்ஞெள்ளா | து+ஞெள்ளா=துஞ்ஞெள்ளா |
| நொ+நாகா =நொந்நாகா | து+நாகா =துந்நாகா |



Digitized By Roja Muthiah Research Library

நொ + மாடா = நொம்மாடா    து + மாடா = தும்மாடா
நொ + யவனா = நொய்யவனா    து + யவனா = துய்யவனா
நொ + வளவா = நொவ்வளவா    து + வளவா = துவ்வளவா

நொ, து என்பவை வினைச்சொற்களாதலின் அல்வழியின்மாத்திரம் வந்தன.

(௪.) ண ள ன ல் வழி நத்திரியுமென்றது பின்வரும் 'ன ல முன் றனவும்' என்னுஞ் சூத்திரத்தில் வகைபடக் காண்க.

இடைமிகும் என்று எடுத்துக் கூறாது 'குறில்வழியத்தனியைந்நொ தூமுன்மெலிமிகலுமாம்' என்றதில் மெலிமிகலுமாம என்னும் உம்மையால் இடையினமிகுமென்று தழுவியது இடையின மிகுதல் குறில்வழி யவ்வி ற்கும், தனி ஐக்கும் பொருத்தமின்மையாலென்றறிக. நொ, து என்னுமி வ்விரண்டின் முன் மெல்லினமு மிடையினமு மிகாவாயின் புணர்ச்சியின் றி விட்டிசைத்து வழுவுறுமாதலின் உம்மையாற்றழுவி நொதுக்களின்முன் இடையின மிகுதி கொள்ளப்படுதலாவசியகமென்றறிக.

நொ துமுன் மெலி மிகலுமாம் என்றெடுத்துரைத்ததினாலும் உம்மை யாலுங்கொள்ளப்பட்ட மெலிமிகுதலையும் இடையினமிகுதலையும் (நொ, து போலும்) ஏனைய தனிக்குறின் முன்னுங்கொள்ளுக.

உ-ம். 'நம்முன்' 'வம்முன்' குவ்வரும் 'உவ்வருமே' எனவரும்.

இச்சூத்திர முதலியன ஒன்றற்கொன்று தொடர்ச்சியாகப் புணர்த்த லால் தொடர்ச்சொற்புணர்த்தலென்னுமுத்தி. (அ)

[பொதுப்பெயருயர்திணைப்பெயரீறு.]

௧௫௧. பொதுப்பெய ருயர்திணைப் பெயர்க ளீற்றுமெய்
வலிவரி னியல்பா மாவி யரமுன்
வன்மை மிகாசில விகாரமா முயர்திணை.

இ-ள். பொதுப்பெயர் உயர்திணைப் பெயர்கள் ஈற்றுமெய் - பொதுப்பெயர்களுக்கும் உயர்திணைப் பெயர்களுக்கும் ஈற்றிலுள்ள மெய்கள்,— வலி வரின் இயல்பாம் - வல்லெழுத்து முதன்மொழிவரின் இயல்பாகும்,— ஆவி ய ர முன் வன்மை மிகா - உயிரையும் யகர ரகரமெய்களையும் ஈறாக வுடைய அவ்விருவகைப்பெயர்களுக்கும் முன் வரும் வல்லெழுத்துக்கள் மிகாவாம்,— உயர்திணை சில விகாரமாம் - மெய்யீறும் உயிரீறுமாகிய உயர்திணைப்பெயர்களுட் சிலபெயர்கள் நாற்கணங்களோடும் புணருமிடத்து நிலைமொழிவருமொழிகள் விகாரப்படுதலும் உடையனவாம். எ-று.

பொதுப்பெயராவது உயர்திணை அஃறிணை இரண்டுக்கும் பொது வாய் வரும்பெயர். பொதுப்பெயரெனினும் விரவுப்பெயரெனினும் ஒக்கும்.

Digitized By Roja Muthiah Research Library

உயர்திணை அஃறிணை இரண்டிலும் விரவுதலுடைய பெயர் விரவுப் பெயர். விரவுதல் - கலத்தல்.

நாற்கணமாவன:—வன்கணம், மென்கணம், இடைக்கணம், உயிர்க்கணம் என்பனவாம்.

நிலைமொழிச்செய்கையாய்த் திரிதற்குரிய எழுத்துக்கள் திரியாதியல் பாதலும், வருமொழிச்செய்கையாய் மிகுதற்குரிய எழுத்துக்கள் மிகாதியல்பாதலுங் கருதி, ஈற்றுமெய் இயல்பாமென்றும் வன்மை மிகா என்றும் பகுத்தோதினர். நிலைமொழியீற்றுயிர்போல (வருமொழிச்செய்கையாய் வன்மைமிகுதற்குரியனவாகிய) யாழக்கண் மூன்றினுள்ளும் ழகரம் பொதுப்பெயர் உயர்திணைப்பெயர்களுக்கு ஈறுசாமையால் இங்கே ஒழிக்கப்பட்டது.

உ-ம். (க.) சாத்தன், கொற்றன், ஆண் இவற்றின்முன் குறிது, சிறிது, தீது, பெரிது; குறியன், சிறியன், தீயன், பெரியன்; கை, செவி, தலை, புறம் இவற்றை வருவித்து சாத்தன் குறிது, சாத்தன் குறியன், சாத்தன் கை என முறையே கூட்டிப் பொதுப்பெயீற்று னகரணகரமெய் இருவழியும் இயல்பாதல் காண்க.

ஊரன், அவன் இவற்றின்முன் குறியன், சிறியன், தீயன், பெரியன்; கை, செவி, தலை, புறம் இவற்றை வருவித்து ஊரன்குறியன், ஊரன்கை என முறையே கூட்டி உயர்திணைப் பெயரீற்று னகரமெய் இருவழியும் இயல்பாதல் காண்க.

தோன்றல், வேள் இவற்றின்முன் குறியன, சிறியன், பெரியன்; கை, செவி, புறம் இவற்றை வருவித்து தோன்றல் குறியன், தோன்றல் கை என முறையே கூட்டி உயர்திணைப்பெயரீற்று லகரளகரமெய் இருவழியும் இயல்பாதல்காண்க.

தோன்றல்+தீயன் = தோன்றறீயன், தோன்றல்+தலை = தோன்றறலை. எ-ம். வேள்+தீயன் = வேடீயன், வேள்+தலை = வேடலை. எ-ம். லகர ளகரமெய் தகரம் வருமிடத்துக்கெடுதல் மயக்கவிதி யின்மைபற்றியென்றறிக.

(உ.) சாத்தி, கொற்றி, தாய் இவற்றின்முன் குறிது, சிறிது, தீது, பெரிது; குறியள், சிறியள், தீயள், பெரியள்; கை, செவி, தலை, புறம் இவற்றை வருவித்து சாத்தி குறிது, சாத்தி குறியள்; சாத்திகை என முறையே கூட்டிப் பொதுப்பெயரீற்று உயிர்முன்னும் யகரவொற்றின்முன்னும் வலி இருவழியும் இயல்பாதல் காண்க.

நம்பி, விடலை இவற்றின்முன் குறியன், சிறியன், தீயன், பெரியன்; கை, செவி, தலை, புறம் இவற்றை வருவித்து

நம்பிகுறியன், நம்பிகை என முறையே கூட்டியும், அவர், ஒருவர் இவற்றின்முன் குறியர், சிறியர், தீயர், பெரியர்; கை, செவி, தலை, புறம் இவற்றை வருவித்து அவர் குறியர்; அவர்கை என முறையே கூட்டியும் உயர்திணைப்பெயரீற்று உயிர்முன்னும் ரகரவொற்றின் முன்னும் வலி இருவழியு மி யல்பாதல் காண்க

(ஈ.) கபிலன்+பரணன்=கபிலபரணர், வடுகன்+நாதன்=வடுகநாதன், அரசன்+வள்ளல்=அரசவள்ளல். இவை நிலைமொழி யீறுகெ ட்டு வருமொழி இயல்பாய்முடிந்தன.

ஆசீவகர்+பள்ளி=ஆசீவகப்பள்ளி, வாணிகர்+தெரு = வா ணிகத்தெரு, இவை நிலைமொழி ஈறுகெட்டு வருமொழி வல் லெழுத்து மிக்குமுடிந்தன.

குமரன்+கோட்டம் = குமரகோட்டம், குமரக்கோட்டம்; வாசுதேவன்+கோட்டம்=வாசுதேவகோட்டம், வாசுதேவக் கோட்டம் இவை நிலைமொழியீறுகெட்டு வருமொழிவல்லெ ழுத்து இயல்பாயும், மிக்கும் முடிந்தன.

பார்ப்பான்+கன்னி = பார்ப்பனக்கன்னி இது நிலைமொழி யீற்றயல் குறுகி அகரச்சாரியை யீற்றிற்பெற்று வருமொழி வல்லெழுத்து மிக்குமுடிந்தது. வேளாளன்+பிள்ளை=வே ளாண்பிள்ளை என நிலைமொழியீற்று அன்கெட்டு ளகரமெய் ணகரமெய்யாகத்திரிந்துமுடிந்தது. (கூ)

[வினாப்பெயர் விளிப்பெயர்முன் வல்லினம்.]

கசுo. ஈற்றியா வினாவிளிப் பெயர்முன்வலி யியல்பே.

இ-ள். ஈற்று (வினாமுன்) - ஆ ஓ ஏ என்னுமூன்று ஈற்றுவினாமுன் னும்,—யா வினா (முன்) - யாவென்னும் வினாப்பெயர்முன்னும்,—விளிப் பெயர்முன் - உயிரீறும் மெய்யீறுமாகிய விளிப்பெயர் முன்னும்,—வலி இ யல்பு - வரும் வல்லெழுத்துக்கள் இயல்பாகும். எ - று.

உ-ம்.(க.) நம்பியாகொண்டான், சென்றான், தந்தான், போயினன். எ-ம். உண்கா கொற்றா, சாத்தா, தேவா, பூதா. எ-ம்.[உண்கு+ஆ= உண்கா. உண்பேனா என்பது பொருள்.] உண்பானோ கொற்றா, சாத்தா, தேவா, பூதா. எ-ம். உண்பானே கொற்றா, சாத்தா, தேவா, பூதா. ஏ-ம். ஈற்றுவினாமுன் வலியியல்பாதல் காண்க. யாகுறியன, சிறியன, தீயன, பெரியன என யாவினாமுன் வலியியல்பாதல் காண்க.

(உ.) நம்பி, நம்பீ; விடலை, விடலாய்; கிள்ளை, கிள்ளாய்; தாய், தா யே இவற்றின் முன் கொள், செல், தா, போ இவற்றை வரு

Digitized By Roja Muthiah Research Library

வித்து நம்பிகொள், நம்பிசெல், நம்பிதா, நம்பிபோ என முறையேகூட்டி விளிப்பெயர்முன் வலி யியல்பாதல் காண்க. ()

[முன்னிலைவினை ஏவல்வினைமுன் வல்லினம்.]

கசுக. ஆவி யரழ விறுதிமுன் னிலைவினை
ஏவன்முன் வல்லின மியல்பொடு விகற்பே.

இ - ள். ஆவி யரழ இறுதி - உயிரையும் யரழ என்னு மூன்று மெய்களையு மிறுதியாகவுடைய,—முன்னிலை வினை ஏவல்முன் - முன்னிலைவினை முன்னும் ஏவல்வினை முன்னும்,—வல்லினம் இயல்பொடு விகற்பு - வருங் கசதபக்கள் இயல்புடனே விகற்பமாம். எ - று.

முன்னிலை வினையென்றது தன்மைவினை படர்க்கை வினைகளுக்கு இனமாய் முன்னின்றானது தொழிலையுணர்த்தும் வினைச்சொல்லை. இது ஏவற்கருத்திற் பிரயோகிக்கப்படாதது; இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்னு முக்காலத்திலுந் தனித்தனிவரும்.

உ - ம். உண்டனை, உண்ணுகின்றனை, உண்பை எனவரும் பிறவுமன்ன.

ஏவல் வினையென்றது தன்மையிலாவது படர்க்கையிலாவது வரமாட்டாமையால் இனமின்றி முன்னிலை ஒன்றற்கே யுரியதாய் முன்னின்றானைத்தொழிற்படுத்தும் வினையை. எறி, எறிவாய், எறிவிப்பி எனவரும் பிறவுமன்ன.

விகற்பமாவது ஒருகால் இயல்பாயும் ஒருகால் விகாரமாயும் புணர்வது. விகற்பம், உறழ்ச்சி என்பன ஒருபொருட்சொற்கள். நியதியின்மை என்பது பொருள்.

உ-ம். (க.) உண்டி, உண்டனை, உண்டாய். எ-ம். உண்டனிர், உண்டீர், உண்கின்றீர், உண்பீர். எ-ம். நிறுத்தி, சாத்தா, கொற்றா, தேவா, பூதா. எ-ம். சாத்தரே, கொற்றரே, தேவரே, பூதரே. எ-ம். வருவித்து உண்டி சாத்தா; உண்டனிர் சாத்தரே எனக் கூட்டி ஆவி யர இறுதி முன்னிலைவினைமுன் வலி இயல்பாதல்காண்க. ழகரமெய் முன்னிலை வினைக்கு ஈறாகாது; ஏற்புழிக்கோட்டலால் ழகரமெய்யை ஏவல்வினைக்கீறுமென்க. முன்னிலைவினைமுன் விகற்பம் வந்தவழிக்காண்க.

(உ.) கொணு, எறி, விடு, ஆய், சேர், தாழ் என நிறுத்தி, சாத்தா, கொற்றா, தேவா, பூதா என வருவித்து, கொணுசாத்தா என முறையே கூட்டி ஆவி யரழ இறுதி ஏவல்வினைமுன் இயல்பாதல் காண்க, நட கொற்றா, நடக்கொற்றா; எய்கொற்றா; எய்க்கொற்றா என ஏவல்வினைமுன் வல்லினம் விகற்பித்தல் காண்க. (கக)

Digitized By Roja Muthiah Research Library

## உயிரீற்றுச் சிறப்புப் புணர்ச்சி

[உயிர்முன் உயிர் புணர்தல்.]

கசுஉ. இ ஈ ஐ வழி யவ்வு மேனை
உயிர்வழி வவ்வு மேமுனிவ் விருமையும்
உயிர்வரி னுடம்படு மெய்யென் றாகும்.

இ-ள். இ ஈ ஐ வழி யவ்வும் - இகர ஈகார ஐகாரங்களின் முன்னே யகரமும்,—ஏனை உயிர்வழி வவ்வும் - அ ஆ உ ஊ ஒ ஓ ஔ என்னும் இவ் வேறுயிர்களின் முன்னே வகரமும்,—ஏ முன் இவ்விருமையும் - ஏகாரத்தின்முன்னே யகரமும் வகரமும்,—உயிர்வரின் உடம்படு மெய்யென்று ஆகும் - உயிர் முதன்மொழி வரின் உடம்படுமெய்யென்று வரப்பெறும். எ- று.

உடம்படுமெய்யென்பது, நிலைமொழியீற்றினும் வருமொழிமுதலினு நின்ற உயிர்களை உடம்படுத்தும் மெய். உடம்படுத்தலெனினும், உடன் படுத்தலெனினும் ஒக்கும், வருமுயிருக்கு உடம்பாக அடுக்குமெய்யெனினும் பொருந்தும்.

உ-ம். (க.) மணி, தீ, பனை இவற்றின்முன் அழகிது, அழகு முதலிய உயிர் முதன்மொழிகளை வருவித்து, மணியழகிது, மணியழகு எனக் கூட்டி இ ஈ ஐம்முன் இருவழியும் யகரம்பெறுதல் காண்க. உடம்படுமெய்யின்மேல் வருமொழி முதலுயிரேறுதல்: 'உடன்மேலுயிர்' என்னுஞ் சூத்திரத்தாற்பெறப்படும்.

(உ.) விள, பலா, கடு, பூ, நொ, கோ, கௌ இவற்றின்முன், அழகிது, அழகு முதலிய உயிர்முதன்மொழிகளை வருவித்து, விளவழகிது, விளவழகு எனக் கூட்டி மற்றையுயிர்களின்முன் இருவழியும் வகரம்பெறுதல் காண்க.

(௩.) அவனே + அழகன் = அவனேயழகன் என இடைச்சொல்லாகிய ஏமுன் யகரமும், ஏ + எலாம் = ஏவெலாம், சே + உழுதது = சேவுழுதது என ஓரெழுத்தொருமொழியாகிய உயிர் உயிர்மெய் யென்னும் ஏமுன் வகரமும், சே + அடி = சேயடி, சேவடி எனச் செம்மையென்னும் பண்புப்பெயரின் விகாரமாகிய சே முன் யகரமும் வகரமும் பெறுதல் காண்க.

"உடம்படுமெய்யே யகர வகாரம், உயிர்முதன்மொழிவரூஉங் காலை யான" "இறுதியு முதலு முயிர்நிலை பெறினே, உறுமென மொழிப வுடம்படுமெய்யே" என்று பிறர் கூறிய சூத்திரங்களையும் உணர்ந்து, நிலைமொழியீற்றினும் வருமொழிமுதலினும் உயிர் நிற்க அவ்வுயிரிரண்டற்குமிடையே வந்த யகரமெய்யாவது வகரமெய்யாவது உடம்படுமெய்யென்று

Digitized By Roja Muthiah Research Library

சொல்லப்படும் எனவும், செல்வழிச்செல்க என்பதில் செல்+உழிச்செல்க என்பவற்றிடையே வந்த வகரமெய்யாதலின் நிலைமொழியீற்றின் மெய்யெழுத்து நிற்றலால் அவ்வகரவொற்றை உடம்படுமெய்யென்று கொள்ளலாகாதெனவும் உயிரீறும் உயிர்முதலும் சந்தித்தற்கண் ஒன்றுபட்டிணங்கமாட்டாமையால் அவற்றை உடம்படுத்தவந்தமெய் உடம்படுமெய்யெனப்படுமன்றி மெய்யுமுயிருமாக ஒன்றுபட்டுச் சந்திக்கத்தக்க இடத்தில் வரும் மெய் உடம்படுமெய்யெனப் படாதெனவும் அறிக. (க௨)

[வினாச்சுட்டின்முன் நாற்கணமும் புணர்தல்]

க௬௩. எகர வினாமுச் சுட்டின் முன்னர்
உயிரும் யகரமு மெய்தின் வவ்வும்
பிறவரி னவையுந் தூக்கிற் சுட்டு
நீளின் யகரமுந் தோன்றுத னெறியே.

இ-ள். எகர வினா (முன்னர்) - எகர வினா விடைச்சொல்லின் முன்னும்,—முச்சுட்டின் முன்னர் - மூன்று சுட்டிடைச்சொல்லின் முன்னும்,—உயிரும் யகரமும் எய்தின் வவ்வும் - உயிரும் யகரமும் வரின் வகரமெய்யும்,—பிறவரின் அவையும் - யகரமல்லாதமெய்கள் வரின் அவ் வந்த மெய்களும்,—தூக்கில் சுட்டு நீளின் யகரமும் - செய்யுளின்கட் சுட்டு நீண்டுவருமிடத்து யகரமெய்யும்,—தோன்றுதல் நெறி - மிகுதல் முறையாம் எ-று.

உ-ம். (க.) எ+அணி=எவ்வணி, எ+யானை=எவ்யானை; அ+அணி=அவ்வணி, அ+யானை=அவ்யானை; இ+அணி=இவ்வணி, இ+யானை=இவ்யானை; உ+அணி=உவ்வணி, உ+யானை=உவ்யானை; என எகர வினா முச்சுட்டின்முன் உயிர் வரவும், யகரம் வரவும் வகரமெய் தோன்றுதல் காண்க.

(உ.) எ+குதிரை=எக்குதிரை, எ+சேனை=எச்சேனை, எ+தண்டு=எத்தண்டு, எ+படை=எப்படை, எ+ஞாலம்=எஞ்ஞாலம், எ+நாடு=எந்நாடு, எ+மனை=எம்மனை, எ+வளை=எவ்வளை, எ+ஙனம்=எங்ஙனம் என யகரமொழிந்த மெய்கள்வர அவ்வந்தமெய்கள் தோன்றுதல் காண்க. இப்படியே அக்குதிரை, இக்குதிரை, உக்குதிரை எனச் சுட்டுக்களோடுங் கூட்டி யகரமொழிந்த மெய்கள் தோன்றினமை காண்க.

வருமொழிமுதலில் உயிர் வந்தவழித்தோன்றிய வகரமெய்யிரட்டுதல்: 'தனிக்குறின் முன்னொற்றுயிர்வரி னிரட்டும்' என்னுஞ் சூத்திரத்தாலும், இரட்டிய மெய்யின்மேல் வருமொழிமுதலுயிரேறுதல் 'உடன்மேலுயிர் வந்தொன்றுவதியல்பே' என்னுஞ் சூத்திரத்தாலும் பெறப்படும்.

Digitized By Roja Muthiah Research Library

(ஙு.) அ+இடை=ஆயிடை எனச் சுட்டுநீண்டவிடத்து யகரந்தோன்றுதலை "ஆயிடைத்தமிழ்கூறுநல்லுலகத்து" "ஆயிடைநின்றகிரீடியை" "ஆயிடைக்குடபால்வெற்பில்" "ஆயவன்வளர்த்த" என்று முறையே தொல்காப்பியம், பாரதம், திருவாதவூரர்புராணம், இராமாயணம் என்னு நூல்களிற் காண்க.

நெறியே யென்றமையால், யாங்ஙனம் என யாவினு முன்னும், ஆங்ஙனம், ஈங்ஙனம், ஊங்ஙனம் என நீண்ட சுட்டின் முன்னும் ஙகர மிகுதலும், ஈது. எ-ம். ஆங்கு, ஈங்கு, ஊங்கு எ-ம். சுட்டுப்பெயர் நீளுதலும்; "விண்வத்துக்கொட்கும்." எ-ம். "செல்வுழிச்செல்க." எ-ம். "சார்வுழிச்சார்ந்ததகையள்." எ-ம். மெய்யீற்றின்முன் உயிர்வர இப்படி; உடம்படுமெய்யல்லாத வகரம் பெறுதலுங்கொள்க. அன்றியும், (உயிர் மாத்திரமேயன்றி) யகரமும் எய்தின் என்றதினல் இங்கே தோன்றிய யகர வகர வொற்றுக்கள் உடம்படுமெய்யல்லவென்பதும், சுட்டு நீளின் எனவே நீளுதல் உடன்பாடென்பதும், நீண்டேவரல் வேண்டுமென்னும் நியதியின்றென்பதும், யகரமும் என்னு மிழிவு சிறப்பும்மையால், யகரமானது உயிர்வருவழித் தோன்றுதலின்றிப் பிறவழித் தோன்றுதென்பதும், வன்கணம்வரிற் சுட்டு நீளாதென்பதும் கொள்க.

எகரவினமுச்சுட்டின்முன் உயிர்வரின் வகரமும், நீண்டசுட்டின்முன் உயிர்வரின் யகரமுந் தோன்றுமென்றது 'இ ஈ ஐவழி என்னுஞ் சூத்திரத்தால் எய்தியது விலக்கிப் பிறிதுவிதிவகுத்தல்; யகரம் வரின் வகரமும், பிறமெய்களுள் ஞ ந ம வரின் அவையுந் தோன்றுமென்றது 'எண்மூவெழுத்தீற்று' என்னுஞ் சூத்திரத்தால் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல்; க ச த ப ஙு வரின் அவை தோன்றுமென்றது எய்தாததெய்துவித்தல். (கரு)

[குற்றியலுகரமுன்னும் சிலமுற்றியலுகரமுன்னும் உயிரும் யகரமும் புணர்தல்.]

க௬௪. உயிர்வரி னுக்குறண் மெய்விட் டோடும்
யவ்வரி னிய்யா முற்றுமற் றொரோவழி.

இ - ள். உக்குறள் உயிர்வரின் மெய்விட்டு ஓடும் - குற்றியலுகரம் உயிர்முதன் மொழிவந்தால் தனக்கிடமாகிய மெய்யை விட்டு நீங்கும்,— ய வரின் இய்யாம் - யகரமுதன்மொழிவந்தால் அவ்வுகரம் இகரமாகத் திரியும்,— முற்றும் அற்று ஒரோவழி - முற்றியலுகரமும் அவ்விருவிதியும் பெறும் ஒவ்வோரிடத்து. எ - று.

உ-ம். (க.) நாகு, எஃகு, வரகு, கொக்கு, குரங்கு, தெள்கு இவற்றின்முன் அரிது, அருமைமுதலிய உயிர்முதன் மொழிகளை வருவித்து

Digitized By Roja Muthiah Research Library

நாகரிது, நாகருமை எனக்கூட்டி இருவழியும் உயிர்வரக் குற்றியலுகரந் தானேறிநின்ற வல்லினமெய்யைவிட்டுக் கெடுதல்காண்க. குற்றியலுகரங்கெட நின்ற மெய்யின்மேல் வந்தவுயிரேறுதல்: 'உடன்மேலுயிர்' என்னுஞ் சூத்திரத்தாற் பெறப்படும்.

(௨) நாகு, எஃகு முதலியவற்றின்முன், யாது, யாப்பு எனவருவித்து நாகியாது, நாகியாப்பு எனக் கூட்டி இருவழியிலும் யகரம்வரக் குற்றியலுகரம் இகரமாகத் திரிதல் காண்க.

(௩) கதவு+அழகிது=கதவழகிது, கதவு+யாது=கதவியாது எ-ம். அது+ஐ=அதை எ-ம். முற்றியலுகரம் ஓரோரிடத்து அவ்விருவிதியும் பெறுதல் காண்க. கெடும் என்றது ஓடுமென்றமையால் குற்றியலுகரம் ஓரோரிடத்து 'இஈ ஐவழி' என்னுஞ் சூத்திரப் பொதுவிதி பெறுதலுங் கொள்க.

வரலாறு. 'தன்முகமாகத்தானழைப்பதுவே' இதில் அழைப்பது என்பது குற்றியலுகரமொழி ஏகார இடைச்சொல்வர: அழைப்பதேஎன முடிதற்பாலது அங்ஙனமுடியாமல் வகரவுடம்படுமெய்பெற்று அழைப்பதுவே என முடிந்தது. "அடித்தடித்துவக்காரமுன்றீற்றியவற்புதமறியேனே" இதில் அடித்து என்பது குற்றியலுகரமொழி அக்காரம் என்னும் உயிர்முதன் மொழிவர, அடித்தக்காரமென முடிதற்பாலது அங்ஙனமுடியாமல்வகரவுடம்படுமெய்பெற்று 'அடித்துவக்காரம்' என முடிந்தது.

குற்றியலுகரம் உயிர்வரிற்கெடும் என்றது 'இஈ ஐவழி' என்னுஞ் சூத்திரத்தால் எய்தியதுவிலக்கிப் பிறிதுவிதிவகுத்தல்; யவ்வரின் இய்யாம என்றது எய்தாததெய்துவித்தல்; ஓரோவிடத்து முற்றியலுகரம் இவ்விதியிரண்டனுள் முன்னையது பெறுமென்றது 'இஈஐ வழி' என்னுஞ்சூத்திரத்தால் எய்தியதன்மேற் சிறப்புவிதி; பின்னையதுபெறுமென்றது எய்தாததெய்துவித்தல். (௧௪)

பரீக்ஷைவினாக்கள்:—301. உயிரீற்றின்முன் உயிர்வரின், இருவழியும் எவ்வாறுபுணரும்? 302. உடம்படுமெய்யென்பதற்குப் பொருள் என்னை? 303. எவ்வுயிரீற்றின்முன் உயிர்வரின் யகரவுடம்படுமெய் தோன்றுவது? 304. எவ்வுயிரீற்றின்முன் உயிர்வரின் வகரவுடம்படுமெய் தோன்றுவது? 305. எவ்வுயிரீற்றின்முன் உயிர்வரின் யகரமாவது வகரமாவது உடம்படுமெய்யாய் வரும்? 306. ஏகாரவினாமுன்னும், அ இ உ என்னுமுச்சுட்டின்முன்னும் உயிரும் யகரமும் வரின் எவ்வாறு புணரும்? 307. ஏகாரவினாமுன்னும் அ இ உ என்னுமுச்சுட்டின்முன்னும் க ச த ப ஞ ந ம வ எவ்வாறு புணரும்? 308. செய்யுளிடத்து நீண்ட அகரச்சுட்டின்முன் உயிர்வரின் எவ்வாறுபுணரும்? 309. யாவினாமுன்னும் நீண்ட சுட்டின்முன்னும் யகரம் வரின் எவ்வாறுபுணரும்? 310. சுட்டெழுத்து நீளப்பெறுந் தனிமொழிகளெவை? 311. தெ



Digitized By Roja Muthiah Research Library

ய்யுளிற் சுட்டுநீளின் யகரந் தோன்றாத இடம் இல்லையா? 312. வருமொழியாக வன்கணம்வரின் செய்யுளிலே சுட்டு நீளுமா? 313. குற்றியலுகரவீற்றின்முன் உயிர்வரின் எவ்வாறு புணரும்? 314. குற்றியலுகரவீற்றின்முன் யகரம்வரின் எவ்வாறு புணரும்? 315. முற்றியலுகரங்களுட் சில இவ்விதி பெறுவா? 316. உயிர்வரிற் குற்றியலுகரம் ஓடாமல் நிற்றலுமுண்டோ?

[உயிரீற்றின்முன் வல்லினம் புணர்தல்.]

கசுரு. இயல்பினும் விதியினு நின்ற வுயிர்முன்
க ச த ப மிகும்வித வாதன மன்னே.

இ-ள். இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் - இயல்பினாலும் விதியினாலும் இறுதியாகநின்ற உயிர்களின்முன், — க ச த ப மன் மிகும் - வருங் க ச த பக்கள் பெரும்பாலு மிகும், — விதவாதன — பின் சிறப்புவிதியிற் சொல்லாதவைகள். எ-று.

உ-ம். (க) ஆடூஉக்குறியன், நம்பிக்கொற்றன் எ-ம். ஆடூஉக்கை, செட்டித்தெரு எ-ம். உயர்திணைப்பெயரின்முன் இருவழியும் வல்லெழுத்து மிக்கன. சாத்திப்பெண் எனப் பொதுப்பெயரின்முன் அல்வழியில் வல்லெழுத்து மிக்கது. விளக்குறிது, தாராக்கடிது, தீப்பெரிது, வடுத்தீது, கொக்குக்கடிது, கொண்மூக்கரிது, சேச்சிறிது, சோப்பெரிது எ-ம். ஒற்றைக்கை, வட்டக்கடல், தாழக்கோல் எ-ம். அஃறிணைப்பெயர்முன் அல்வழியில் வல்லெழுத்து மிக்கன. இவற்றுள் விள, ஒற்றை, வட்ட, தாள என்பன விதியீறு. விளக்கோடு, பலாக்காய், கிளிச்சிறை, தீக்கடுமை, கடுக்காய், கொக்குக்கால், வண்டுக்கால், கொண்மூக்குழாம, சேக்கொம்பு, தினைத்தாள், சோப்பெருமை என அஃறிணைப்பெயர்முன் வேற்றுமையில் வல்லெழுத்து மிக்கன.

(உ) ஆடிக்கொண்டான், ஆடாக்கொண்டான், ஆடூஉக்கொண்டான், ஆடென்னக்கொண்டான், ஆடக்கொண்டான், உண்பாக்குச்சென்றான், பூத்துக்காய்த்தது, பொளளென்னப்பரந்தது, சாலப்பகைத்தது எ-ம். இருளின்றிக்கண்டார், பொருளன்றிக்காணார் எ-ம். தெரிநிலைவினையெச்சத்தின்முன்னுங் குறிப்புவினையெச்சத்தின்முன்னும் வல்லெழுத்து மிக்கன. கூவிற்றுக்கோழி எ-ம். குண்டுகட்டுக்களிறு எ-ம். தெரிநிலைவினைமுற்றின்முன்னுங் குறிப்புவினைமுற்றின்முன்னும் வல்லெழுத்து மிக்கன.

(ங) ஆங்கக்கொண்டான், இனிச்செய்வேன், மற்றைத்தெரு என இடைச்சொல்லின்முன் வல்லெழுத்து மிக்கன.

(ச) தவப்பெரியன், கடிக்கமலம், பணைத்தோள் என உரிச்சொல்லின்முன் வல்லெழுத்து மிக்கன.

Digitized By Roja Muthiah Research Library

(ரு) சொன்றிக்குழிசி எனத் திசைச்சொன்முன்னும், கங்கைச்சடை என வடசொன்முன்னும் வல்லெழுத்துமிக்கன.

விதவாதனபெரும்பாலு மிகும் எனவே, விதந்தன சிறுபான்மை மிகும் எனவும், விதவாதன சிறுபான்மை மிகா எனவுங் கூறினாராயிற்று. (விதப்பு- சிறப்புவிதி.)

அவை வருமாறு:—

(க) நொக்கொற்று, துக்கொற்று, சாத்தா, தேவா, பூதா என்பன: 'ஏவன்முன்வல்லினமியல்பொடுவிகற்பே' என முற்கூறிய சிறப்புவிதிபெறாது வல்லெழுத்து மிக்கேவந்தன. எனவே நொ, து முன் மூவினமும் மிகுமென்றாராயிற்று.

(உ) எரிகரை, குழவிகை, குழந்தைகை, "பழமுதிர்சோலைமலைகிழவோனே" எ-ம். கூப்புகரம், ஈட்டுதனம், நாட்டுபுகழ் எ-ம். முறையே வேற்றுமையிலும், அல்வழியிலும் பின் விதவாதன மிகாவாயின.

விதப்பாவது: பொதுவாசத் தொகுத்துரைக்கப்பட்டவைகளிலிருந்து வகுத்தெடுத்து விதிகூறுதல்=சிறப்புவிதி.

வல்லினம் உயிரீற்றுப்பொதுப்பெயர், உயர்திணைப்பெயர்களுக்கு முன்மிகும் என்றது 'ஆவியரமுன் வன்மைமிகா' என எய்தியதன்மேற்சிறப்புவிதி; அஃறிணைப்பெயர்களுக்கு முன்னும், வினைமுதலியவைகளுக்குமுன்னும் மிகுமென்றது எய்தாததெய்துவித்தல். (கரு)

[உயிரீற்றுச்சிலமரப்பெயர்முன் வல்லினம் புணர்தல்.]

ககசு. மரப்பெயர் முன்ன ரினமெல் லெழுத்து
வரப்பெறு னவுமுள வேற்றுமை வழியே.

இ-ள். மரப்பெயர் முன்னர் = உயிரீற்றுச்சில மரப்பெயர்களுக்கு முன்,—இன மெல்லெழுத்து வரப்பெறுனவும் உள - மேற்கூறிய பொது விதியால் வரும் வல்லெழுத்து மிகாமல் அவற்றிற்கினமாகிய மெல்லெழுத்து மிகப்பெறுவனவுஞ் சிலவுளவாம்,—வேற்றுமைவழி - வேற்றுமைவழியில். எ-று.

பெறுவனவும் எனற்பாலது பெறுனவும் என்று தொகுத்தலாயிற்று.

உ-ம். விள+காய்=விளங்காய், களா+கனி=களாங்கனி, மா+துளிர்=மாந்துளிர், காயா+பூ=காயாம்பூ என வரும்.

யாங்கோடு, யாக்கோடு; யாஞ்செதிள், யாச்செதிள்; யாந்தோல், யாத்தோல்; யாம்பூ, யாப்பூ; காயாங்கோடு, காயாக்கோடு; காயாஞ்செதிள், காயாச்செதிள்; காயாந்தோல், காயாத்தோல்; காயாம்பூ, கா

Digitized By Roja Muthiah Research Library

யாப்பூ என மெல்லெழுத்தும் வல்லெழுத்தும் மிக்கு விகற்பித்துவருதல் உரையிற்கோடல் என்பதனுற் கொள்க.

இது 'இயல்பினும் விதியினும்' என்னுஞ் சூத்திரத்தால் எய்தியது ஒருவழிவிலக்கிப் பிறிதுவிதிவகுத்தல். (௩௬)

**பரீக்ஷைவினுக்கள்:**—317. உயிரீற்றின்முன் வல்லினம்வரின் இருவழியும் எவ்வாறுபுணரும்? 318. எவ்வினைமுன்வரும் வல்லினம் மிக்கே வருதலுமுண்டோ? 319. உயிரீற்றஃறிணைப்பெயர்களின் முன்வரும் வல்லினம் வேற்றுமையில் இயல்பாதலுண்டோ? 320 வன்றொடர்க்குற்றியலுகரவீற்றின்முன் வரும் வல்லினம் வினைத்தொகையில் எவ்வாறும்? 321. உயிரீற்றின்முன் ஓரிடத்தும் மெல்லெழுத்து மிகாவோ? 322. உயிரீற்றின்முன் மெல்லெழுத்து மிக்கும் வல்லெழுத்துமிக்கும் உறழ்ந்துவருதலுமுண்டோ?

[அகரவீற்றுச்சிறப்புவிதி.]

௧௬௭. செய்யிய வென்னும் வினையெச்சம் பல்வகைப
பெயரி னெச்சமுற் றாறு னுருபே
அஃறிணைப் பன்மை யம்மமுன் னியல்பே.

இ - ள். செய்யிய என்னும் வினையெச்சம் - செய்யியவென்னும்வாய்பாட்டு வினையெச்சவினையும்,—பல்வகைப்பெயரினெச்சம் - பல்வகைப்பட்ட பெயரெச்சவினையும்,—(பல்வகை) முற்று - பல்வகைப்பட்ட முற்றுவினையும்,—ஆறனுருபு - ஆறும்வேற்றுமை அகரவுருபும்,—அஃறிணைப் பன்மை - அஃறிணைப்பன்மைப்பெயரும்,—அம்ம - அம்மவென்னும் உரையசை யிடைச்சொல்லும்,—முன் இயல்பு - ஆகிய அகரவீற்றுச்சொற்களாறுவகையின்முன்னும் வரும் வல்லெழுத்துக்கள் இயல்பாம். எ - று.

இச்சூத்திரத்தின்முதலிலும் ஈற்றிலும் (செய்யிய என்றும், அம்ம என்றும்) அகரவீற்றுச்சொல் வைத்தமை இடைநின்றனவும் அகரவீற்றுச்சொற்கள் என்று கருதுக.

பல்வகைப்பெயரெச்சமென்றது நால்வகைவினையடியினும் பிறந்த பெயரெச்சங்களை. பல்வகைமுற்றென்றது நால்வகைவினையடியினும் பிறந்த முற்றுவினைகளை. வினையடி நான்காவன: இயற்கையான வினையடி ஒன்றும் பெயர் இடை உரி அடியாகப்பிறந்த மற்றை செயற்கைவினையடி மூன்றுமாம்.

முன்னே முற்றெண வகுத்தமையால், பின் அஃறிணைப்பன்மையென்றது பெயரையென்றறிக.

உ - ம். (க) உண்ணியகொண்டான், உண்ணியசென்றான், தந்தான், போயினன் எனச் செய்யியவென்னும் வினையெச்சமுன இயல்

Digitized By Roja Muthiah Research Library

பாயின. (உண்ணிய என்பதன்பொருள் உண்ண என்று எதிர்காலத்திற்கொள்ளுக.)

(உ) உண்ட, உண்ணாநின்ற, உண்ணாத எ - ம். கடைக்கணித்த, சித்திரித்த, வெளுத்த, சினவிய, கறுவிய, அமரிய எ - ம். திண்ணென்ற, பொன்போன்ற எ - ம். சான்ற, உற்ற எ - ர். வரும் நால்வகைத்தெரிநிலைப்பெயரெச்சவினைமுன்னும், அமர்முகத்த, கடுங்கண்ண, சிறிய, பெரிய, உள, இல, பல, சில எ - ம். பொன்னன்ன எ - ம். கடிய எ - ம். வரும் மூவகைவினைக்குறிப்புப் பெயரெச்சமுன்னும், குதிரை, செந்நாய், தகர், பன்றி இவற்றை வருவித்து உண்டகுதிரை, உண்டசெந்நாய், உண்டதகர், உண்டபன்றி, என முறையேகூட்டிப் பல்வகைப்பெயரெச்சமுன் வல்லினம் இயல்பாதல்காண்க. குறிப்புவினை இயற்கை (சுபாவம்) வினையடி எலாமையால் மூவகையாயிற்று.

(ங) உண்டன, உண்ணாநின்றன, உண்பன, உண்ணாதன என்னுந் தெரிநிலைவினைமுற்றுமுன்னும், அமர்முகத்தன, கரியன என்னுங் குறிப்புவினைமுற்றுமுன்னும், குதிரை, செந்நாய், தகர், பன்றி இவற்றை வருவித்து, உண்டனகுதிரை, உண்டன செந்நாய் எனக்கூட்டி முற்றுமுன் இயல்பாதல் காண்க. இனி, மேற்காட்டிய பெயரெச்சவினைகட்கும், ஒன்பெறுத அகரவீற்றுப்பலவகை முற்றுவினைகட்கும், பொருள்வேறுபாடன்றிச் சொல்வேறுபாடின்மையால் அவையே உதாரணமாகக் கொள்க. வாழ்கொற்றா, சாத்தா, தேவா, பூதா என வியங்கோண்முற்றின்முன் இயல்பாயின. வாழிய என்பதனோடும் இப்படியே கூட்டுக. முற்றுமுன் இயல்பாமெனவே, அருத்தாபத்தியால் இவ்வினைமுற்று வினையெச்சமாகியும் குறிப்புமுற்று ஈரெச்சமாகியும் நின்றபோதுவரும் வல்லினம் இயல்பாதலுங் கொள்க. வ - று:—உண்டகண்டன இது உண்டுகண்டன என்ப பொருள்படுதலால், வினைமுற்று வினையெச்சமாயிற்று. அமர்முகத்தகலக்கின இது அமர்முகத்தவாகிக் கலக்கின எனப் பொருள்படுதலால், குறிப்புமுற்று வினையெச்சமாயிற்று.

அமர்முகத்தகுதிரைவந்தன இது அமர்முகத்தனவாகிய குதிரைவந்தன எனப் பொருள்படுதலால் குறிப்புமுற்றுப்பெயரெச்சமாயிற்று. இவற்றின்முன் வல்லினம் இயல்பாதல் காண்க.

(ச) தனைகைகள், செவிகள், தாள்கள், பதங்கள் என ஆறனுருபின்முன் வல்லினம் இயல்பாயின.

Digitized By Roja Muthiah Research Library

(ரு) பல குதிரைகள், செந்நாய்கள், தகர்கள், பன்றிகள் எ - ம். பல கொடுத்தான், செய்தான், தந்தான், புணர்ந்தான் எ - ம். அஃறிணைப்பன்மைப்பெயர்முன் இருவழியும் இயல்பாயின.

(சு) அம்மகொற்றா, சாத்தா, தேவா, பூதா என உரையசை யிடைச்சொன்முன் இயல்பாயின.

இது 'இயல்பினும் விதியினு' மென்னுஞ் சூத்திரத்தால் எய்தியது சில அகரவீற்றுச் சொற்களுக்கு விலக்கல். (சஎ)

கசுஅ. வாழிய வென்பத னீற்றி னுயிர்மெய்
ஏகலு முரித்தஃ தேகினு மியல்பே.

இ - ள். வாழிய என்பதன் ஈற்றின் உயிர்மெய் - வாழிய என்னும் வியங்கோண்முற்றினுடைய இறுதியிலிருக்கின்ற யகர வுயிர்மெய்,—ஏகலும் உரித்து - நீங்கிப்போதலும் உரித்தாகும்,—அஃது ஏகினும் இயல்பே - அவ்வுயிர்மெய் போய் இகரவீறாய் நின்றாலும் இதன்முன்வரும் வல்லினம் பொதுவிதியால் மிகாது சிறப்புவிதியிற் கூறிய இயல்பேயாம். எ - று.

உ - ம். (க) ஆவாழி, அந்தணர்வாழி, என ஈற்றுயிர்மெய்குறைந்தது.

(உ) வாழிகொற்றா, சாத்தா, தேவா, பூதா என ஈற்றுயிர்மெய் குறைந்தவிடத்தும் வந்த வல்லினம் இயல்பாயின. வியங்கோண்முற்றின் ஈற்றுயிர்மெய் குறையுமென்றது எய்தாததெய்துவித்தல்; ஈற்றுயிர்மெய் குறைந்தவிடத்தும் வரும் வல்லினம் இயல்பேயாம் என்றது, 'செய்யிய' என்னுஞ்சூத்திரத்தால் எய்தியதிகந்துபடாமைக்காத்தல். (சஅ)

கசுகூ. சாவவென் மொழியீற் றுயிர்மெய்சா தலும்விதி.

இ - ள். சாவ என் மொழி ஈற்று உயிர்மெய் - சாவவென்னுஞ் செயவெனெச்ச வினைச்சொல்லினுடைய இறுதியிலுள்ள வகரவுயிர்மெய்,—சாதலும் விதி - கெட்டுப்புணர்தலும் விதியாகும். எ - று.

உ-ம். சாவ + குத்தினன் = சாக்குத்தினன் என வரும்.
இப்புணர்ச்சி சாவக்குத்தினன் என்னும் புணர்ச்சிபோற் சிறந்ததல்லாமையாற் சாதலும் விதி என்றார்.

இது நிலைமொழிக்கு எய்தாததெய்துவித்தல். (சகூ)

கஎ0. பலசில வெனுமிவை தம்முன் றாம்வரின்
இயல்பு மிகலு மகர மேக
லகரம் றகர மாகலும் பிறவரின்
அகரம் விகற்ப மாகலு முளபிற.

Digitized By Roja Muthiah Research Library

இ-ள். பல சில எனும் இவை தம்முன் தாம் வரின் - பலசில என்னு மிவ்விரு சொல்லுந் தமக்கு முன்னே தாம் வருமாயின்,—இயல்பும் மிகலும் – இயல்பாதலும் மிகுதலும்,—அகரம் ஏக லகரம் றகரமாகலும் - அகரங்கெட லகரம் றகரமாகத்திரிதலும்,—பிறவரின் அகரம் விகற்பம் ஆகலும் உள - இவற்றின்முன் பிறமொழிகளுள் யாதாயினு மொன்று வரின் அகரம் நிற்றலும் நீங்கலும் உளவாம். எ-று.

உ-ம். (௧.) பல பல, சில சில என இயல்பாயின.

(௨) பலப்பல, சிலச்சில என மிக்கன.

(௩.) பற்பல, சிற்சில என அகரங்கெட லகரமெய் றகரமெய்யாயிற்று.

(௪.) பலகலை, பல்கலை; பலசாலை, பல்சாலை; பலதாழிசை, பஃறாழிசை; பல படை, பல்படை; பல ஞானம், பன்ஞானம்; பல நாள், பன்னாள்; பல மணி, பன்மணி; பல வேளை, பல்வேளை பல யாழ், பல்யாழ்; பல வணி, பல்வணி; பலவாயம், பல்லாயம் எனப் பிறவர அகரம் விகற்பமாயிற்று.

பிறவென்ற மிகையினாலே, பல்பல, சில்சில என அகரங்கெட லகரம் றகரமாகாது ஒரோவிடத்து அருகிவருதலும், இன்னும் அகரவீற்றுப்புணர்ச்சியுள் அடங்காது வருவனவுங் கொள்க.

பலசில வெனுமிவை தம்முன்றாம்வரி னியல்பு என்றது, வருமொழிக்கு 'செய்யிய' என்னுஞ் சூத்திரத்தால் எய்தியதிகந்துபடாமைக்காத்தல்; மிகல் என்றது, அதன்மேற் சிறப்புவிதி; ஒம்மிகுதல் 'செய்யிய' என்னுஞ் சூத்திரத்தால் விலக்கி இங்கே விதித்தமையாற் சிறப்புவிதி; அகரமேக லகரம் றகரமாகலும் பிறவரின் அகரம் விகற்பமாகலும் உள என்றது நிலைமொழிக்கு எய்தாததை எய்துவித்தல். (௨௦)

பரீக்ஷை வினாக்கள்:—323. செய்யிய வென்னும் வாய்பாட்டு வினையெச்சத்தின்முன் வலிவரின் எவ்வாறும்? 324. அகரவீற்றுப் பெயரெச்சத்தின்முன் வலிவரின் எவ்வாறும்? 325. அகரவீற்று வினைமுற்றுச் சொன்முன் வலிவரின் எவ்வாறும்? 326. வினையடி எத்தனை வகைப்படும்? 327. குறிப்புவினை இந்நால்வகைவினையடியும் ஏற்குமா? 328. அ என்னும் ஆறனுருபின்முன் வலிவரின் எவ்வாறும்? 329. அகரவீற்றஃறிணைப்பெயர்முன் வல்லினம் வரின், எவ்வாறும்? 330. அம்ம என்னும் உரையசையிடைச்சொன்முன் வலிவரின் எவ்வாறும்? 331. வாழிய என்னும் வியங்கோள் வினைமுற்று வேறுவிதிபெறுமோ? 332. சாவவென்னும் வினையெச்சம் எப்பொழுதுந் தன்னியல்பினின்றே புணருமா? 333. பல சில என்னும் இவ்விருசொல்லும், தம்முன்னே தாம் வரின் எவ்வாறு புணரும்? 334. பல சில என்னும் இவ்விருசொல்லும், அவ்வழியிற் பிறமொழிகள் வரின் எவ்வாறும்?

Digitized By Roja Muthiah Research Library

## ஆகாரவீற்றுச் சிறப்புவிதி.

கஎ௭. அல்வழி யாமா மியாமுற்று முன்மிகா.

இ-ள். அல்வழி ஆமா - அல்வழியில் ஆவும் மாவுமாகிய இருபெயரும்,— மியா - மியா என்னும் முன்னிலையசையிடைச்சொல்லும்,— முற்று - ஆகாரவீற்றஃறிணைப்பன்மையெதிர்மறை முற்றுவினையுமாகிய,— முன்மிகா - இவற்றின் முன் வரும் வல்லினம் இயல்பாகும். எ - று.

உ-ம். (க) ஆகுறிது, மாகுறிது, சிறிது, தீது, பெரிது என அல்வழியில் ஆவுமாவுமாகிய இருபெயர்முன்னும் வலி இயல்பாயின.

(உ.) கேண்மியாகொற்ற, சாத்தா, தேவா, பூதா என மியா என்னும் முன்னிலையசையிடைச்சொன்முன் வலி இயல்பாயின.

(ங.) உண்ணாகுதிரைகள், செந்நாய்கள், தகர்கள், பன்றிகள் என ஆகாரவீற்றஃறிணைப்பன்மையெதிர்மறைமுற்று வினைமுன் வலி இயல்பாயின. உண்ணாக்குதிரைகள் எனப் பொதுவிதியால் மிகுமாயின், தகரவீறு குறைந்த எதிர்மறைப் பெயரெச்சமாமெனக் கொள்க.

ஆமா என்ற மாத்திரமே காட்டுப்பசு எனவும் பொருள்பட இரட்டுறமொழிந்தமையால், ஆமா என்னும் பெயர்முன்னும் வலிமிகாமைகொள்க.

வ-று. ஆமாகுறிது, சிறிது, தீது, பெரிது எனவரும்.

முற்றுமுன் மிகா எனவே, அருத்தாபத்தியால், அவ்வினையாலணையும் பெயர் முன்னும், அவ்வினைமுற்று வினையெச்சமாயவற்றின் முன்னும் அவ்வாறுமிகாமை கொள்க.

வ-று. உண்ணாகிடந்தன, சென்றன, தந்தன, போயின எனவரும். இங்கே உண்ணா என்றது, வினையாலணையும் பெயராயின், உண்ணாதனவாகிய குதிரைகள் கிடந்தன. எ-ம். வினைமுற்று வினையெச்சமாயின், உண்ணாதனவாய்க் கிடந்தன. எ-ம். பொருள்படும். உண்ணாக்கிடந்தன எனப் பொதுவிதியால் மிகுமாயின், உண்டு எனப் பொருள்படுஞ் செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சமும், உண்ணாது எனப் பொருள்படுந் துவ்வீறு குறைந்த செய்யா என்னும் எதிர்மறை வினையெச்சமுமாமெனக் கொள்க.

இங்கே மா என்றது மரமன்று விலங்கேயாம். முற்றெனப்பொதுவாகக் கூறினும், ஆகாரவீற்றுச் சிறப்புவிதி கூறுமிடமாதலின் ஆகாரவீற்றுமுற்றென்பது அதிகாரத்தால் விளங்கியது.

இது 'இயல்பினும்விதியினும்' என்னுஞ் சூத்திரத்தால் எய்தியது ஒருமருங்கு விலக்கல்.

Digitized By Roja Muthiah Research Library

௬௭௨. குறியதன் கீழாக் குறுகலு மதனோ
டுகர மேற்றலு மியல்புமாந் தூக்கின்.

இ - ள். குறியதன் கீழ் ஆக்குறுகலும் - குற்றெழுத்தின் கீழ்நின்ற ஆகாரம் அகரமாதலும், — அதனோடு உகரம் ஏற்றலும் - அவ்வகரமாதலுடனே உகரம் பெறுதலும், — இயல்பும் - அவ்விரண்டுமின்றித் தன்னியல்பின் நிற்றலுமாகிய மூன்று விதியும், — ஆம் தூக்கின் - ஆகும் பாட்டினிடத்து. எ - று.

உ-ம். நிலவிரிகானல்வாய் நின்று........(நிலா) (குறுகல்.)
மருவினென்செய்யுமோநிலவு......நிலா: (குறுகலோடு உகரமேற்றல்)
நிலாவணங்குவெண்மணன்மேனின்ற (இயல்பு)
செய்யுளில் இம்மூன்றுமாமெனவே, வழக்கில் இரண்டுமாம் ஒன்றுமாம் என்றூராயிற்று

வ-று. உதித்தது நிலவு, உதித்தது நிலா; கண்டேன்கனவு, கண்டேன் கனா எனக் குறுகுதலோடு உகரமேற்றலுந் தன்னியல்புமாகிய இரண்டும் வந்தன.

குறுகலும், உகரமேற்றலும் என்றதினால்: இயல்பாயிருத்தலுமேயன்றி என்று கருதப்பட்டு, அது இயல்புமாயிருக்குமென்பது விளங்கும்; விளங்கவும் அதன்மேலும் இயல்புமாம் என்றது குறுகுதல், உகரமேற்றல் என்னு மிரண்டினுளொன்றும் பெறுதியல்பாகவேயிருக்குங் குறியதன்கீழாகாரமொழிகளு முளவென்றறிவுறுத்தற்பொருட்டாம். உ-ம். தரா, மிடா, கடா என்பன. இவை — தர, தரவு; மிட, மிடவு; கட, கடவு என்று விகாரப்படாமல் இயல்பாயேயிருத்தலறிக.

"நறவங்கண்ணிநற்போர்ச்செம்பியன்" "கழித்துணிநறவமாந்தி" "நூரவநீடியகொன்றையங்கானல்" "குரவங்குமிழ்கொங்கலர்கொம்பினொடும்" என்பன ஆகாரங்குறுகியவழி அம்முச்சாரியைபெறுதல் உரையிற்கொள்க.

இயல்புமாம் என்று சுபாவமுங் கூறப்பட்டதினால் இவ்வியல்புவிகாரங்கள் அல்வழி வேற்றுமை இரண்டினும் வருமென்றும், வருமொழியாக நாற்கணங்கள்வரினு மிமமூவகையுமாமென்றும் அறிக.

ஆக்குறுகலும் அதனோடுகரமேற்றலுமாம் என்றது எய்தாதன எய்துவித்தல்; இயல்புமாம் என்றது அவ்விடத்து வருவதோரைய மறுத்தல். (௭)

பரீக்ஷைவினாக்கள்:—335. ஆ மா, என்னும் பெயர்களின்முன் வரும் வலியினம் வேறு விதிபெறுமோ? 336. மியா என்னும் முன்னிலையசையின்முன் சொன்முன் வலிவரின் எவ்வாரும்? 337. ஆகாரவீற்றெதிர்மறைப்பன்மை யெதிர்மறைமுற்றுவினைமுன் வலிவரின் எவ்வாரும்? 338. குறியதன்கீழாகாரங் குறுகியவழிச் சாரியை பெறுவனவுமுளவோ? 339. செய்து என்னும் வினையெச்சப்பொருளில் வரும் ஆவீற்றுவினையெச்சத்தின்முன்னும் செய்யாத என்னும் எதிர்மறைப்பெயரெச்சவீறு குறைந்து செய்



Digitized By Roja Muthiah Research Library

யா' எனவரும் ஆகாரவீற்றுச் சொன்முன்னும் வலிவரின் எவ்வாறாம்? 340. செய்யாத என்னும் எதிர்மறைவினையெச்சவீறு குறைந்து செய் யா' என நிற்குமிடத்து வலிவரின் மிகாதோ? 341. 'காக்கைகரவாகரைந் துண்ணும்' என்பதிலே கரவா என்றது மறையாது எனப் பொருள்படவு ம் அதன்முன் வலி இயல்பாதலென்னையோ? 342. தனிக்குறிற்கீழ் நின்ற ஆகாரம் வேறு விதிபெறுதோ? 343. வழக்கினிடத்து இம்மூன்றுவிதிகளு ள் எவ்விதிபெறும்?

—o—

## இகரவீற்றுச்சிறப்புவிதி.

களங. 'அன்றி யின்றியென் வினையெஞ் சிகரந்
தொடர்பினு ளுகர மாய்வரி னியல்பே.

இ - ள். அன்றி இன்றி என்வினையெஞ்சு இகரம் - அன்றி இன்றி எ ன்னும் வினையெச்சக்குறிப்புச் சொற்களின் ஈற்றிலுள்ள இகரம்.—தொடர் பினுள் உகரம் ஆய்வரின் - செய்யுளில் உகரமாய்த் திரிந்துவரின்,—இயல்பு- வருங் க ச த ப க்கள் பொதுவிதியான் மிகாது இயல்பாகும். எ - று.

உ - ம். வாளன்றுபிடியாவன்கணடவர் (வாள், அன்றி.)
விண்ணின்றுபொய்ப்பின் (விண், இன்றி.)
உகரமாய்த் திரியாவிடின், வாளன்றிப்பிடியா, விண்ணின்றிப்பொய்ப் பின் என வல்லெழுத்து மிகுமெனக் காண்க.

உகரமாய்வரின் எனவே உகரமாதற்கும் விதி (வேறுகூறுமையால்) இ துவேயாமென்பதும், உகரமாதல் நியமமன்று என்பதும் பெறப்பட்டன.

வினையெஞ்சிகரந் தொடர்பினுள் உகரமாமென்றது எய்தாததெய்துவித் தல்! அஃதெய்தியவிடத்துப் புணரும் வல்லினம் இயல்பாம் என்றது 'இய ல்பினும்விதியினும்' என்னுஞ் சூத்திரத்தால் எய்தியதுவிலக்கல். (உரு)

களச. உரிவரி னாழியி னீற்றுயிர் மெய்கெட
மருவும் டகர முரியின் வழியே
யகரவுயிர் மெய்யா மேற்பன வரினே.

இ - ள். உரி வரின் நாழியின் ஈற்றுயிர்மெய்கெட டகரம் மருவும் - உரி என்னும் அளவுப்பெயர்வரின், நாழி என்னும் அளவுப்பெயரினது ஈற்றி லுள்ள ழிகரவுயிர்மெய் நீங்க டகரமெய் வரும்,—உரியின்வழி யகரவுயிர்மெ ய் ஆம் ஏற்பனவரின் - உரியென்னும் அளவுப்பெயரின் பின் யகரவுயிர்மெ ய் வரும் அவ்வுயிர்மெய் வருதற்கு ஏற்ற வருமொழிகள் வருமாயின். எ-று.

உ - ம். (க) நாழி + உரி = நாடுரி என நாழியின் ஈற்றுயிர்மெய் கெட்டு டக ரந் தோன்றிற்று. இது நாவுரி என இக்காலத்து மருவிற்று.

(உ) உரி + உப்பு = உரியவுப்பு, உரியபயறு, உரியமிளகு, உரியவரகு என உரியின்பின் யகரவுயிர்மெய் வந்தது.

Digitized By Roja Muthiah Research Library

ஏற்பனவரின் எனவே, ஏலாதனவரின், உரியரிசி, உரியாழாக்கு, உரியெண்ணெய் எனப் பொதுவிதி பெறுதல் கொள்க.

ஆழாக்கிரண்டுகொண்டது உழக்கு; உழக்கிரண்டுகொண்டது உரி; உரியிரண்டுகொண்டது நாழி.

உரிவரின்நாழியின் ஈற்றுயிர்மெய்கெட மருவும் டகரம் என்றது, 'இ ஈ ஐவழி' என்னுஞ் சூத்திரத்தால் எய்தியது விலக்கிப் பிறிது விதிவருத்தல்; உரியின்வழி யகரவுயிர்மெய்யாம் ஏற்பன வரின் என்றது எய்தாததெய்துவித்தல். (உ௪)

௧௭௫. சுவைப்புளி முன்னின மென்மையுந் தோன்றும்.

இ - ள். சுவைப்புளிமுன் - அறுசுவையுள் ஒன்றை யுணர்த்துகின்ற புளியென்னும் பெயர்முன், — இன மென்மையுந் தோன்றும் - வரும் வல்லெழுத்துக்கண் மிகுதலன்றி அவற்றிற்கு இனமாகிய மெல்லெழுத்துக்களும் ஓரோவிடத்து மிகும். எ - று.

உ - ம். புளிங்கறி, புளிஞ்சோறு, புளிந்தயிர், புளிம்பாளிதம் என வரும். புளிப்பாகியகறி எனவும், புளிப்பையுடைய கறி எனவும் விரிக்கப்படுதலால், இருவழிக்கும் இவையே உதாரணமாமெனக.

மென்மையும் என்ற இறந்ததுதழீஇய இழிவுசிறப்பும்மையால், புளிக்கறி எனப் பொதுவிதியால் வரும் வல்லெழுத்து மிகலே சிறப்புடைத்தெனக் கொள்க.

இனமென்மையுந் தோன்றும், என்றது 'இயல்பினும் விதியினும்' என்னுஞ் சூத்திரத்தால் எய்தியதன்மேற் சிறப்புவிதி. (உ௫)

பரீக்ஷைவினாக்கள்:— 344. அன்றி இன்றி என்னும் வினையெச்சத்தின் முன் வன்கணம் வரின், வேறுவிதி பெறுதலில்லையோ? 345. நாழி என்னும் அளவுப்பெயர்முன் உரி என்னும் அளவுப்பெயர் வரின், எவ்வாறும்? 346. உரி என்னும் அளவுப்பெயர்முன் நாற்கணமும் வரின் எவ்வாறும்? உரியின்முன் எந்தமொழி வரினும் இடையில் யகரவுயிர்மெய் தோன்றுமோ? 347. புளிப்பையுணர்த்தும் புளி என்பதன்முன் வன்கணம்வரின், வேறுவிதி பெறுதலில்லையோ?

—o—

## இகர ஐகாரவீற்றுச் சிறப்புவிதி.

௧௭௬. அல்வழி இ ஐம் முன்ன ராயின்
இயல்பு மிகலும் விகற்பமு மாகும்.

இ - ள். இ ஐம் முன்னர் - இகர ஐகாரவீற்றஃறிணைப் பெயர்முன், — அல்வழி ஆயின் - வல்லினம் அல்வழியினிடத்து வருமாயின், — இயல்பும் -

Digitized By Roja Muthiah Research Library

இயல்பாதலும்,—மிகலும் - பொதுவிதியான் மிகுதலும்,—விகற்பமும் ஆகும் - ஒன்றற்கே ஒருகால் மிகாமையும் ஒருகால்மிகுதலும் ஆகும். எ-று.

ஒப்பின்முடித்தலால், ஐகாரவீறும் உடன் கூறினர்.

உ-ம். (க) பருத்திகுறிது, யானைகரிது என எழுவாய்த்தொடரிலும், பரணி கார்த்திகை, யானைகுதிரை என உம்மைத் தொகையிலும், வலி இயல்பாயின.

(உ) மாசித்திங்கள், சாரைப்பாம்பு எனப் பண்புத்தொகையிலும், சாவிக்கண், பனைக்கை என உவமைத்தொகையிலும் வலிமிக்கன.

(ரு) இளிகுறிது, இளிக்குறிது, தினைகுறிது, தினைக்குறிது என எழுவாய்த்தொடரில் விகற்பித்தன.

இயல்பு என்றது 'இயல்பினும் விதியினும்' என்னுஞ் சூத்திரத்தால் எய்தியதொருவழிவிலக்கல்; மிகல் என்றது எய்தியதிகந்துபடாமைக்காத்தல்; விகற்பம் என்றது எய்தியதுவிலக்கலுடன்விலக்காமை. (உரு)

பரீக்ஷை வினாக்கள்:—348. இசர ஐகாரவீற்றஃறிணைப் பெயர்முன் வல்லினம் வரின் எவ்வாரும்? 349. இம்மூன்றுவிதியுள் இயல்பு எவ்விடத்துக் கொள்ளப்படும்? 350. மிகுதி எவ்விடத்துக்கொள்ளப்படும்? 351. விகற்பம் எவ்விடத்துக்கொள்ளப்படும்?

## ஈகாரவீற்றுச்சிறப்புவிதி.

கஎஎ. ஆமுன் பகரவீ யனைத்தும்வரக் குறுகும்
மேலன வல்வழி யியல்பா கும்மே.

இ-ள். ஆ முன் பகரவீ அனைத்தும் வரக் குறுகும் - ஆ என்னும் பெயர் முன் நின்ற பகரவீகாரம் இருவழியும் நாற்கணமும்வரிற் குறுகும்,—அல்வழி மேலன இயல்பு ஆகும் - குறுகி விதியிகரவீருக நின்ற அதன்மேல்வரும் வல்லினம் அல்வழியிலே மேலைச்சூத்திரத்துட் கூறிய விதி மூன்றனுள் இயல்பைப் பெறும். எ-று.

பகரவீ என்றது இடக்கரடக்கல்; வருஞ் சூத்திரத்திற் பவ்வீ என்பதும் அது. இடக்கரென்பது சபையிலே சொல்லத்தகாதசொல். இடக்கர் அவையல்கிளவி என்பன ஒருபொருட்சொற்கள். இடக்கரடக்கல் என்பது சொல்லத்தகாதசொல்லை அவ்வாய்பாடு மறைத்துப் பிறவாய்பாட்டாற் சொல்லல்.

உ-ம். ஆப்பியரிது, ஆப்பிகுளிரும், ஆப்பிநன்று, ஆப்பிவலிது எ-ம். ஆப்பியருமை, ஆப்பிக்குளிர்ச்சி, ஆப்பிநன்மை ஆப்பிவன்மை எ-ம் வரும்.

Digitized By Roja Muthiah Research Library

ஆமுன் பகரவீ அனைத்தும் வரக்குறுகும் என்றது எய்தாததெய்துவித்தல். அஃதெய்தியவழி வரும் வல்லினம் அல்வழியில் இடல்பாகும் என்றது மேலைச்சூத்திரத்தால் எய்தியதிகந்துபடாமைக்காத்தல். (உள)

களஅ. பவ்வீ நீ மீ முன்ன ரல்வழி
இயல்பாம் வலிமெலி மிகலுமா மீக்கே.

இ - ள். பவ்வீ நீ மீ முன்னர் அல்வழி இயல்பு ஆம் - பகரமெய்யின் மேல் ஏறிநின்ற ஈகாரவீற் றிடக்கர்ப்பெயரும் நீ என்னு முன்னிலைப்பெயரும் மீ என்னு மேலாகிய பண்பையும் மேலிடத்தையும் உணர்த்தும்பெயருமாகிய இம்மூன்றன்முன்னும் வரும் வல்லினம் அல்வழியில் இயல்பாகும்,—மீக்கு வலி (மிகலும் ஆம்) மெலி மிகலும் ஆம் - இவற்றுள்ளே மீயென்னுஞ் சொற்கு முன் வல்லெழுத்து மிகுதலுமாகும் மெல்லெழுத்து மிகுதலுமாகும். எ - று.

உ-ம், (க) பீகுறிது, சிறிது, தீது, பெரிது எ - ம். நீகுறியை, சிறியை, தீயை, பெரியை எ - ம். மீகண் எ - ம். இயல்பாயின.

(உ) மீக்கூற்று, மீக்கோள் என எய்திபதிகந்து படாமல் வலிமிக்கது; மீந்தோல் என மெலிமிக்கது.

மீக்கண் என்பது, சண்ணினது மேலிடம் எனப் பொருடந்து நிற்குமாயினும், வருமொழி நிலைமொழியாக மாறி நின்றதனால் இலக்கணப்போலியாய் அல்வழியாயிற்று.

மீக்கூற்றென்பது புகழ்; அது மேலாயசொல்லாற் பிறந்தது எனப்பொருள்படும். மீக்கோளென்பது மேற்போர்வை; அது சரீரத்தின்மேற் கொள்ளப்படுவது எனப் பொருள்படும். மீந்தோலென்பது மேற்றோல்; இது இக்காலத்துப் பீந்தோல் என மருவிற்று.

நீ என்னும் பொதுப்பெயர், அல்வழியிலே நீ என்றும் வேற்றுமையிலே நின் என்றும் நிற்கையினாலே, 'பொதுப்பெயர் உயர்திணைப்பெயர்' என்னுஞ் சூத்திரத்துள் அடங்காது.

பவ்வீ நீ மீ முன்னரல்வழியியல்பாம் என்றது ஒருவழி 'இயல்பினும் விதியினும்' என்னுஞ் சூத்திரத்தால் எய்தியது விலக்கல்; மீக்கு முன் வலிமிகலாம் என்றது அச்சூத்திரத்தால் எய்தியதிகந்துபடாமைக் காத்தல்; மீக்குமுன் மெலிமிகலாம் என்றது அச்சூத்திரத்தால் எய்தியது விலக்கிப் பிறிதுவிதிவகுத்தல். (உஅ)

பரீக்ஷை வினாக்கள்:—352. ஆ என்பதன்முன் பீ என்னுமொழிவரின், எவ்வாறும்? 353. பகரவீ என்பது எவ்வகை வழக்கு? 354. இடக்கரென்பதென்னை? 355. ஆப்பி என்பதன்முன் அல்வழியில் வன்கணம் வரின் எவ்வாறும்? 356. பீ நீ மீ என்பவைகளின்முன் அல்வழியில் வன்கணம் வரின் எவ்வாறும்? 357. மீ என்பதன்முன் வன்கணம்வரின் வேறு விதி பெறுமோ?

Digitized By Roja Muthiah Research Library

## முற்றுகரவீற்றுச்சிறப்புவிதி.

கஎகூ. மூன்றா றுருபெண் வினைத்தொகை சுட்டீ
றாகு முகர முன்ன ரியல்பாம்.

இ - ள். மூன் (றுருபு) - மூன்றும்வேற்றுமையுருபிற்கும்,—ஆறுருபு- ஆறும்வேற்றுமையுருபிற்கும்,—எண் - இயல்பாயும் விகாரமாயும் வரும் எண்ணிற்கும்,—வினைத்தொகை – வினைத்தொகைக்கும்,— சுட்டு – சுட்டுப் பெயருக்கும்,—ஈறு ஆகும் உகரமுன்னர் இயல்புஆம்—ஈறாகிய முற்றியலுகரத்தின்முன் வரும் வல்லினம் இயல்பாகும். எ - று.

உ - ம். (க) சாத்தனொடுகொண்டான், சென்றான், தந்தான், போயினான் என மூன்றும் வேற்றுமை யுருபின்முன் இயல்பாயின.

(உ) சாத்தனதுகை, செவி, தலை, புறம் என ஆறும்வேற்றுமையுருபின்முன் இயல்பாயின.

(௩) ஒருகை, செவி, தலை, புறம் என எண்ணுப்பெயர்முன் இயல்பாயின. இரு, அறு, எழு, ஏழு என்பவற்றோடும் இப்படியே ஒட்டுக. ஏழு என்பது இயல்பாய எண்ணுப்பெயர்; மற்றவை விகாரவெண்ணுப்பெயர். ஏழ் என்பதே இயல்பானதென்பது தொல்காப்பியர் கருத்து. ஏழு என்பது இயல்பானதென்பது நன்னூலார் கருத்து.

(ச) அடுகளிறு, சேனை, தானை, படை என வினைத்தொகைமுன் இயல்பாயின. தரு, புகு, தெறு, எழு, விரவு முதலியவற்றோடும் இப்படியே ஒட்டுக.

(ரு) அதுகுறிது, சிறிது, தீது, பெரிது எ - ம். அதுகண்டான், செகுத்தான், தந்தான், படைத்தான், எ - ம். சுட்டுப்பெயர்முன் இருவழியும் இயல்பாயின. இது உது என்பவற்றோடும் இப்படியே ஒட்டுக. உதுகாண், உதுக்காண் என விகற்பித்து வருவது 'இயல்பின் விகாரமும்' என்னும் இரண்டாம்வேற்றுமைப்புணர்ச்சிச் சூத்திரத்தில் 'அன்னபிறவும்' என்பதனால் அமையும்.

இது 'இயல்பினும் விதியினும்' என்னுஞ் சூத்திரத்தால் எய்தியது விலக்கல். (உகூ)

கஅ0. அதுமுன் வருமன் றான்றந் தூக்கின்.

இ - ள். அதுமுன் வரும் அன்று - அது என்னுஞ் சுட்டுப்பெயர்முன் வரும் அன்றென்னும் வினைக்குறிப்புமுற்று,—தூக்கின் ஆன்று ஆம் - பாட்டினிடத்து முதனீளும். எ - று.

உ - ம். அது+அன்று=அதான்று எனவரும். ஆன்றேயாம என இயல்பைவிலக்காமையால், அதுவன்று, அதன்று எனவும் வரும். ஆன்றான்றும் என்றது எய்தாததெய்துவித்தல். (௩0)

Digitized By Roja Muthiah Research Library

பரீக்ஷைவினாக்கள்:—358. ஒடு வுருபின் முன்னும் அதுவுருபின்முன்னும் வலிவரின் எவ்வாறும்? 359. ஒடுருபின்முன்னும் அதுருபின்முன்னும் வலிவரின் எவ்வாறும்? 360. இவற்றிற்குவிதி எச்சூத்திரத்தாற் பெறப்படும்? 361. முற்றுகரவீற்றெண்ணுப்பெயர்முன் வலிவரின் எவ்வாறும்? 362. முற்றுகரவீற்று வினைத்தொகைமுன் வலிவரின் எவ்வாறும்? 363. முற்றுகரவீற்றுச் சுட்டுப்பெயர்முன் வலிவரின் எவ்வாறும்? 364. உதுமுன் காணென்னுஞ் சொல்வரின் எவ்வாறும்? 365. அது என்பதன்முன் அன்று என்னுஞ்சொல்வரின் எவ்வாறும்?

## குற்றுகரவீற்றுச்சிறப்புவிதி.

௧௮௧. வன்றொட ரல்லன முன்மிகா வல்வழி.

இ-ள். வன்றொடர் அல்லன முன் அல்வழி மிகா - வன்றொடரொழிந்த ஐந்து குற்றியலுகரவீற்றின்முன்னும் வரும் வல்லினம் அல்வழியில் இயல்பாகும். எ-று.

உ-ம். நாகுகடிது, எஃகுசிறிது, வரகுதீது, குரங்குபெரிது, தெள்குகொடிது எ-ம். எருகால், அஃகுபிணி, பெருகுதனம், ஓங்குகுலம், எய்துபொருள் எ-ம். சேறுகொற்றா, வருதுசாத்தா, வந்துதேவா, செய்துபூதா எ-ம் பொருதுசென்றான், அறிந்துதந்தான், எய்துகொன்றான் எ-ம். அல்வழியில் இயல்பாயின.

ஏழாம்வேற்றுமையிடப்பொருளுணரநின்ற அங்கு, இங்கு, உங்கு, எங்கு, ஆங்கு, ஈங்கு, ஊங்கு, யாங்கு, யாண்டு என்னும் மென்றொடர்க் குற்றுகரவீற்றிடைச்சொற்களின்முன்வரும் வல்லினம் மிகும்.

வ-று. அங்குக்கொண்டான், இங்குக்கொண்டான், உங்குக்கொண்டான், எங்குக்கொண்டான், ஆங்குக்கொண்டான், ஈங்குக்கொண்டான், ஊங்குக்கொண்டான், யாங்குக்கொண்டான், யாண்டுக்கொண்டான், சென்றான், தந்தான், போயினான் என வரும்.

ஏழாம்வேற்றுமைக்காலப்பொருளுணரநின்ற அன்று, இன்று, என்று, பண்டு, முந்து என்னும் மென்றொடர்க்குற்றுகர வீற்றிடைச்சொற்களின் முன்வரும் வல்லினம், அன்றுகண்டான், இன்றுசென்றான், என்றுதந்தான், பண்டுபெற்றான், முந்துகொண்டான் என இயல்பாயே முடியும்.

இது 'இயல்பினும் விதியினும்' என்னுஞ் சூத்திரத்தால் எய்தியதொருவழிவிலக்குதல். (௫௧)

௧௮௨. இடைத்தொட ராய்தத் தொடரொற் றிடையின்
மிகாநெடி லுயிர்த்தொடர் முன்மிகா வேற்றுமை.

Digitized By Roja Muthiah Research Library

இ - ள். இடைத்தொடர் (முன்) — இடைத்தொடர் முன்னும்,— ஆய்தத்தொடர் (முன்)-ஆய்தத்தொடர்முன்னும்,— ஒற்று இடையின் மிகா நெடிற்(றொடர்முன்) - ஒற்று இடையே மிகாத நெடிற்றொடர்முன்னும்,—(ஒற்றுஇடையின் மிகா) உயிர்த்தொடர்முன — ஒற்று இடையே மிகாத உயிர்த்தொடர்முன்னும்,— வேற்றுமை மிகா - வரும் வல்லினம் வேற்றுமையில் இயல்பாம். எ - று.

உ - ம். (க) தெள்குகால், சிறை, தலை, புறம் என இடைத்தொடர்க்குற்றியலுகரத்தின்முன வேற்றுமையில் வலி இயல்பாயின.

(உ) எஃகுகடுமை, சிறுமை, தீமை, பெருமை என ஆய்தத்தொடர்க்குற்றியலுகரத்தின்முன் வேற்றுமையில் வலி இயல்பாயின.

(௩) நாகுகால், செவி, தலை, புறம் என ஒற்றிடையே மிகாத நெடிற்றொடர்க்குற்றியலுகரத்தின்முன் வேற்றுமையில் வலிஇயல்பாயின.

(௪) வரகுகதிர், சோறு, தாள், பதர் என ஒற்றிடையே மிகாத உயிர்த்தொடர்க்குற்றியலுகரத்தின்முன் வேற்றுமையில் வலி இயல்பாயின. ஒற்றிடையே மிகும் நெடிற்றொடர் உயிர்த்தொடர்க் குற்றுகரங்கள் வருஞ் சூத்திரத்தாற் கூறப்படும் அவற்றின்முன் வரும் வல்லினம் மிகும்.

இதுவும் 'இயல்பினும் விதியினும்' என்னுஞ் சூத்திரத்தால் எய்தியதொருவழிவிலக்குதல். (௬உ)

கஅ௩. நெடிலோ டுயிர்த்தொடர்க் குற்றுக ரங்களுட்
டறவொற் றிரட்டும் வேற்றுமை மிகவே.

இ - ள். நெடிற்றொடர் உயிர்த்தொடர்க் குற்றுகரங்களுள் - நெடிற்றொடர்களும் உயிர்த்தொடர்களுமாகிய குற்றியலுகரமொழிகளுள்,— டற ஒற்று - அவ்வுகரப் பற்றுக்கோடாகிய வல்லொற்றாறனுள் டகர றகரமென்னும் இரண்டொற்றும்,— மிக வேற்றுமை இரட்டும் - பெரும்பாலும் வேற்றுமையில் இரட்டும். எ - று.

வருமெழுத்தைச் சொல்லாமையால் நாற்கணமுங் கொள்க.

உ - ம். ஆடு + கால் = ஆட்டுக்கால், பாறு + கால் = பாற்றுக்கால், முருடு + கால் = முருட்டுக்கால், முயிறு + கால் = முயிற்றுக்கால் என வரும். செவி, தலை, புறம், ஞாற்சி, நிறம், மயிர், யாப்பு, வன்மை, அடி என்பவற்றையும் ஒட்டி வேற்றுமையிலே டறவொற்றிரட்டுதல் காண்க.

இவ்விரண்டொற்றும் பெரும்பாலும் வேற்றுமையில் இரட்டும் எனவே, சிறுபான்மை வேற்றுமையில் இரட்டாமையும், சிறுபான்மை அல்வழியில் இரட்டுதலும், சிறுபான்மை இருவழியும் பிறவொற்றிரட்டுதலுங் கொள்க.

வ-று. (க) 'சாவிரிபுரக்குநாடுகிழவோனே' 'காடகமிறந்தார்க்கேநாடுமென்மனனேகாண்' 'கறைமிடறணியலுமணிந்தன்றக்கறை' என்பன

வற்றுள், நாடுகிழவோன், காடகம், மிடறணியல்என வேற்று மையிலே டறவொற்றிரட்டாவாயின.

(உ) காடு+அரண்=காட்டரண், எறு+எனம்=எற்றேனம், வரடு+ஆடு=வரட்டாடு, குருடு+கோழி=குருட்டுக்கோழி, வெளிறு+பனை=வெளிற்றுப்பனை என அல்வழியிலே டறவொற் றிரட்டின.

(ங) வெருகு+கண்=வெருகுக்கண், எருது+கால்=எருத்துக்கால். எ-ம். எருது+மாடு=எருத்துமாடு. எ-ம். இருவழியும் பிற வொற்றிரட்டின.

வேற்றுமை மிகவே என்பதற்கு வேற்றுமையிலே பெரும்பாலும் என்றுரைத்தலுமன்றி, வேற்றுமையில் வருமொழிவல்லெழுத்து மிகும்படி டகர றகர ஒற்றுக்கள் நிலைமொழியில் இரட்டுமென்றும் பொருளுரைக்க.

டறவொற்று மெய்வரின் இரட்டும் என்றது எய்தாததெய்துவித்தல்; உயிர்வரின் இரட்டும் என்றது 'உயிர்வரினுக்குறள்' என்னுஞ் சூத்திரத்தால் எய்தியதன்மேற் சிறப்புவிதி. (ஙங)

கஅச. மென்றொடர் மொழியுட் சிலவேற் றுமையிற்
றம்மின வன்றொட ராகா மன்னே.

இ-ள். மென்றொடர் மொழியுள் சில - மென்றொடர்க் குற்றியலுகர மொழிகளுள்ளே சிலமொழிகள், — வேற்றுமையில் தம் இனவன்றொடர் - வேற்றுமையிலே தமக்கினமாகிய வன்றொடர்க்குற்றியலுகரமொழிகளாம், — ஆகாமன் - ஆதலையொழிந்தன பெரும்பாலன. எ - று.

வருமெழுத்தைச் சொல்லாமையால், நாற்கணமுங்கொள்க.

உ-ம். மருந்து+பை=மருத்துப்பை, சுரும்பு+நாண்=சுருப்புநாண், கரும்பு+வில்=கருப்புவில், கன்று+ஆ=கற்றா எனவரும்.

வண்டுக்கால், பந்துத்திரட்சி முதலியனவெல்லாம் வன்றொடராகாதன.

சிலவன்றொடராம் எனவே, ஆகாதன பலவென்பது தானேவந் தியையவும், மன்னே என்ற மிகையாலே, எற்புடம்பு, அற்புத்தளை, குரக்கு மனம் எனச் சிறுபான்மை அல்வழிக்கண் வன்றொடராதலுங் கொள்க.

சிலமென்றொடர்க் குற்றியலுகரமொழிகள் மூவினமும் வரிற் றம்மின வன்றொடராம் என்றது எய்தாததெய்துவித்தல், உயிர்வரிற் றம்மின வன்றொடராம் என்றது 'உயிர்வரினுக்குறள்' என்னுஞ் சூத்திரத்தால் எய்தியதன்மேற் சிறப்புவிதி. (ஙச)

கஅரு. ஐயீற் றுடைக்குற் றுகரமு முளவே,



Digitized By Roja Muthiah Research Library

இ-ள். ஐ ஈற்று உடைக் குற்றுகரமும் உள - ஐகாரச்சாரியையை இறுதியிலேபெற்றுவரும் மென்றொடர்க் குற்றியலுகரமொழிகளுஞ் சில வுளவாம்.

மேலைச்சூத்திரத்தைச்சாரவைத்தமையால், இதுவும் மென்றொடரொன்பது பெற்றாம். வருமெழுத்தைச் சொல்லாமையால் நாற்கணமுங் கொள்க.

உ-ம். பண்டு+காலம்=பண்டைக்காலம், இன்று+நாள்=இற்றைநாள் எ-ம். அன்று+கூலி=அற்றைக்கூலி, இன்று+நலம்=இற்றைநலம், எ-ம். இருவழியும் வரும்.

மேலைச்சூத்திரத்தைச் சாரவைத்தாரேனும், ஐயீற்றுடைக்குற்றுகரம் எனப் பொதுப்படக் கூறினமையால், நேற்று+பொழுது=நேற்றைப்பொழுது. எ-ம். நேற்று+கூலி=நேற்றைக்கூலி. எ-ம். இருவழியும் வன்றொடர் ஐகாரச்சாரியை பெறுதலும், ஐயீற்றுடைக் குற்றுகரம் என உடைமையாக்கிக் கூறினமையால், வருமொழி நோக்காது ஒன்று ஒற்றை, இரண்டு இரட்டை என ஒருமொழியாகநின்று ஐகாரம்பெறுதலும், ஓராண்டு ஓராட்டை, ஈராண்டு ஈராட்டை எனத் தொடர்மொழியாகநின்று ஐகாரம் பெறுதலுங் கொள்க.

சிலமென்றொடர்க் குற்றியலுகரமொழிகள் ஐகாரச்சாரியை பெறும் என்றது எய்தாததெய்துவித்தல்; வன்றொடராதலோடு ஐகாரச்சாரியையும் பெறும் என்றது 'மென்றொடர்மொழி' என்னும் மேலைச் சூத்திரத்தால் எய்தியதன்மேற் சிறப்புவிதி. (ரூஞி)

௧௮௪. திசையொடு திசையும் பிறவுஞ் சேரின்
நிலையீற் றுயிர்மெய் கவ்வொற்று நீங்கலும்
றகரம் னலவாத் திரிதலு மாம்பிற.

இ-ள். திசையொடு திசையும் பிறவும் சேரின் - திசைப்பெயரோடு திசைப்பெயரும் பிறபெயர்களும் புணருமிடத்து,—நிலை ஈற்று உயிர்மெய் கவ்வொற்று நீங்கலும்,—நிலைமொழியீற்றிலே நின்ற உயிர்மெய்யும் அதன்மேனின்ற ககரமெய்யுங் கெடுதலும்,—றகரம் ன ல ஆத்திரிதலும் ஆம் - அவ்விடத்துநின்ற றகரமெய் னகரமெய்யாகவும் லகரமெய்யாகவுந் திரிதலும் ஆகும். எ-று.

பிற என்ற மிகையினாலே, திசைப்பெயரோடு திசைப்பெயர் புணரும்போது நிலைமொழியாய் நிற்பன வடக்குந் தெற்குமே எனவும், தெற்கென்பதன் றகரம் னகரமாகவும் மேற்கென்பதன் றகரம் லகரமாகவுந் திரியும் எனவும், மேற்கென்பதன் றகரந் தகரம்வரும்வழித் திரியாது எனவும், கிழக்கென்பதன் ழகரத்து அகரங் கெட்டு முதனீண்டேவரும் எனவுங்கொள்க.

உ-ம். வடக்கு - வடமேற்கு, வடதிசை, வடபால், வடமலை, வடவேங்கடம், எ-ம். தெற்கு - தென்கிழக்கு, தென்மேற்கு, தென்குமரி, தென்

மலை, தென்வீதி. எ-ம். மேற்கு - மேல்கடல், மேனாடு, மேல்வீதி, மேற்றிசை. எ-ம். குடக்கு - குடதிசை, குடகடல், குடநாடு. எ-ம். குணக்கு - குணதிசை, குணகடல். எ-ம். கிழக்கு - கீழ்கரை, கீழ்சார், கீழ்த்திசை. எ-ம். வரும்.

இன்னும், பிற என்ற மிகையாலே, கீழைக்குளம், கீழைச்சேரி; மேலைக்குளம், மேலைச்சேரி என ஐகாரம் பெறுதலும், வடக்கூர், வடக்குமலை; தெற்கூர், தெற்குமலை என மேற்காட்டிய விகாரமின்றியும் வருதலும், சிலதிசையொடு திசை புணரும்போது தெற்கு வடக்கு, வடக்குத்தெற்கு, கிழக்குமேற்கு, மேற்குக்கிழக்கு எனப் பொதுவிதி பெறுதலுங் கொள்க.

வடகிழக்கென்பது வடக்குங் கிழக்குமாயதோர்கோணம் என உம்மைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. வடதிசையென்பது வடக்காகியதிசை எனப் பண்புத்தொகை. வடமலையென்பது வடக்கின்கண்மலை என ஏழாம்வேற்றுமைத்தொகை. தெற்குவடக்கென்பது தெற்கும் வடக்கும் என உம்மைத்தொகை.

இது எய்தாதெய்துவித்தல். (௩௬)

௧௮௭. தெங்குநீண் டீற்றுயிர் மெய்கெடுங் காய்வரின்.

இ-ள். காய் வரின் - காயென்னுஞ் சொல்வருமாயின்,—தெங்கு நீண்டு ஈற்று உயிர்மெய்கெடும்,—தெங்கென்னு நிலைமொழி முதனீண்டு ஈற்றிலுள்ள உயிர்மெய் நீங்கும். எ-று.

உ-ம். தெங்கு+காய்=தேங்காய் எனவரும். கெட்டே புணருமென்னாமையால், தெங்கங்காய் என வருவதுங் கொள்க. (௩௭)

௧௮௮. எண்ணிறை யளவும் பிறவு மெய்தின்
ஒன்று முதலெட் டீறு மெண்ணுண்
முதலீ ரெண்முத னீளு மூன்று
மாறு மேழல் லவற்றின்
ஈற்றுயிர் மெய்யு மேழ னுயிரும்
ஏகு மேற்புழி யென்மனார் புலவர்.

இ-ள். எண் நிறை அளவும் பிறவும் எய்தின்—எண்ணுப்பெயரும் நிறைப்பெயரும் அளவுப் பெயரும் பிறபெயர்களும் வரின்,—ஒன்றுமுதல் எட்டு ஈறு ஆம் எண்ணுள் - நிலைமொழியாக நின்ற ஒன்றுமுதல் எட்டீறாகும் எண்களுள்,—முதல் ஈரெண் முதல் நீளும் - முதலிலுள்ள இரண்டெண்களும் முதற்குறினீளும்,—மூன்று ஆறு ஏழ் (முதல்) குறுகும்,—மூன்றும் ஆறும் ஏழும முதனெடில் குறுகும்,—ஆறு ஏழு அல்லவற்றின் ஈற்று உயிர்மெய்யும் ஏழன் (ஈற்று) உயிரும் ஏகும்,—ஆறும் ஏழுமல்லாத ஆறெண்களினுடைய இறுதியிலுள்ள உயிர்மெய்களும் ஏழனுடைய இறுதி

Digitized By Roja Muthiah Research Library

யிலுள்ள உயிருங் கெடும்,—எற்புழி என்மனார் புலவர் - ஏற்குமிடங்களில் என்று சொல்லுவர் புலவர். எ-று.

இச்சூத்திரத்துட் கூறிய விகாரமும், இப்புணர்ச்சி முற்ற முடித்தற்குப்பின் ஐந்து சூத்திரத்தாற் கூறும் விகாரமும், பண்புத்தொகைக்கே உரியனவாம்.

ஏற்புழி என்றதனால், முதலிரண்டெண்ணும் முதனீள்வது உயிர் வருவழி எனவும், மெய்வருவழி நீளா எனவும், மூன்றும் ஆறும் ஏழும் முதல்குறுகுவது மெய்வருவழி எனவும், உயிர்வருவழிக்குறுகா எனவும், ஆறும் ஏழும் அல்லாதவைகளின் ஈற்றுயிர்மெய்கெடுவது நாற்சணமும் வருவழியெனவும், ஏழு என்பதன் ஈற்றுயிர் கெடுவது முதல் குறுகாவழி எனவுங் கொள்க. ஏற்புழிஎன்பதை இப்பொருண்மையதிகாரம் முற்றுமளவும் உய்த்துரைத்துக்கொள்க.

ஏழு என்பது, முற்றியலுகரவீறாயினும், ஒன்றினமுடித்த றன்னினமுடித்தலென்னும் உத்தியால் இங்கே சொல்லப்பட்டது.

உ-ம். ஆறு + பத்து = அறுபது, அறுகழஞ்சு, அறுநாழி, அறுவட்டி என ஆறு நெடுமுதல் குறுகிமுடிந்தது.

ஏழு + பத்து = எழுபது, எழுகழஞ்சு, எழுநாழி, எழுவகை என ஏழு நெடுமுதல் குறுகி முடிந்தது. ஏழு + கடல் = எழ்கடல் என ஏழனீற்றுயிர் கெட்டது. ஏழாயிரம் என உயிர்வருமிடத்து உகரங்கெடுதல் 'முற்றுமற்றொரோவழி' என்பதனாற் கொள்க.

மற்றவைகளுக்கு உதாரணம் பின்னே காட்டப்படும்.

இன்னும் ஏற்புழி என்றதினால், ஒன்றுமுதலெட்டீறாமெண்ணுள், இரண்டுமுதலியன இரண்டுகழஞ்சு, மூன்றுபடி, நான்குபொருள், ஐந்துபூதம், ஆறுகுணம், ஏழுகடல், எட்டுக்கோடிஎனப் பொதுவிதியான் முடிதலும், 'ஒன்றுதேரினொருவன்கூற்றமே' எனச் சிறுபான்மை ஒன்றும் அங்ஙனமுடிதலுங் கொள்க. (கூஅ)

கஅகூ. ஒன்றன் புள்ளி ரகர மாக
இரண்ட னொற்றுயி ரேகவுவ் வருமே.

இ-ள். ஒன்றன் புள்ளி ரகரம் ஆக - ஈற்றுயிர்மெய் கெடநின்ற ஒன்றென்னும் எண்ணினது னகரமெய் ரகரமெய்யாக,—இரண்டன் ஒற்று உயிர் ஏக - இரண்டென்னும் எண்ணினது ணகரமெய்யும் ரகரத்தை ஊர்ந்து நின்ற அகரவுயிருங்கெட,—உவ்வரும் அவ்விரண்டு ரகரமெய்மேலும் உகரம் வரும்,—(ஏற்புழி) - ஏற்குமிடத்து. எ-று.

ஏற்புழி என்றதனால், ரகரமெய் உகரம்பெறுவது மெய்வரின் எனவும், உயிர்வரின் உகரம்பெறா எனவுங்கொள்க.

Digitized By Roja Muthiah Research Library

உ-ம். ஒருபது, இருபது; ஒருகழஞ்சு, இருகழஞ்சு; ஒருநாழி, இருநாழி; ஒருவகை, இருவகை. எ-ம். ஒரொன்று, ஈரொன்று; ஒரெடை, ஈரெடை; ஒருழக்கு, ஈருழக்கு; ஒரிலை, ஈரிலை. எ-ம். வரும்.

இன்னும், எற்புழி என்றதனால் ஆயிரம் வருமிடத்து, ஓராயிரம், ஈராயிரம் என முடிதலேயன்றி, ஒராயிரம், இராயிரம்என முதனீளாது முடிதலும், யகரம் வருமிடத்து, ஒருயானை, இருயானை என முடிதலேயன்றி ஓர்யானை, ஈர்யானை என உகரம்பெறாது முதனீண்டுமுடிதலுங் கொள்க. (௩௯)

கசம0. மூன்றனுறுப் பழிவும் வந்தது மாகும்.

இ-ள். மூன்றன் உறுப்பு - இறுதியுயிர் மெய்கெடநின்ற மூன்றென்னும் எண்ணினது னகரமெய்,— அழிவும் - கெடுதலும்,— வந்ததும் ஆகும - வருமெய்யாகத் திரிதலும் ஆகும்,—(எற்புழி எற்குமிடத்து.) எ-று.

எற்புழி என்றதனால், னகரமெய் கெடுவது உயிர்வருமிடத்தெனக்கொள்க.

உ-ம். மூவொன்று, மூவெடை, மூவுழக்கு, மூவுலகு. எ-ம். முப்பது, முக்கழஞ்சு, முந்நாழி, முந்நூல், முவ்வட்டி எ-ம். வரும்.

இன்னும் எற்புழி, என்றதனால், வகரம் வருமிடத்து முவ்வட்டி என முடிதலேயன்றி, மூவட்டி என முதல்குறுகாது னகரமெய்கெட்டு முடிதலுங்கொள்க. (௪0)

கசகக. நான்கன் மெய்யே லறவா கும்மே.

இ-ள். நான்கன் மெய் - இறுதியுயிர்மெய் கெடநின்ற நான்கென்னும் எண்ணினது னகரமெய்,— லற ஆகும் - லகரமெய்யாகவும் றகரமெய்யாகவுந் திரியும்,— (எற்புழி - எற்குமிடத்து.) எ-று.

எற்புழி என்றதனால், னகரமெய் லகரமாகத் திரிவது உயிரும் இடையினமும் வருமிடத்தெனவும், றகரமாகத் திரிவது வல்லினம் வருமிடத்தெனவும், மெல்லினம் வருமிடத்து னகரவீற்றுப்புணர்ச்சிபோல் முடியும் எனவுங் கொள்க.

உ-ம். நாலொன்று, நாலெடை, நாலுழக்கு, நாலடி. எ-ம். நால்வட்டி. எ-ம். நாற்பது, நாற்கழஞ்சு. எ-ம். நான்மணி, நானாழி. எ-ம். வரும். (௪க)

கசகஉ. ஐந்தனொற் றடைவது மினமுங் கேடும்.

இ-ள். ஐந்தன் ஒற்று - இறுதியுயிர்மெய் கெடநின்ற ஐந்தென்னும் எண்ணினது நகரமெய்,— அடைவதும் - வருமெய்யாகத் திரிதலும்,—

Digitized By Roja Muthiah Research Library

இனமும் - வருமெய்க்கினமாகத் திரிதலும், — கேடும் - கெடுதலுமாம், — ஏற்புழி - ஏற்குமிடத்து. எ - று.

ஏற்புழி என்றதனால், நகரமெய் வருமெய்யாகத்திரிவது மெல்லினம் வருமிடத்தெனவும், இனமாகத் திரிவது வல்லினம் வருமிடத்தெனவும், கெடுவது உயிரும் இடையினமும் வருமிடத்தெனவுங் கொள்க.

உ-ம். ஐம்மூன்று, ஐஞ்ஞாண். எ-ம். ஐம்பது, ஐங்கழஞ்சு, ஐங்கலம், ஐம்பொறி. எ-ம். ஐயொன்று. எ-ம். ஐவட்டி. எ-ம். வரும்.

அடைவதும் இனமும்என்றமையின், அருத்தாபத்தியால், நகரதகரங்கள் வருமிடத்து ஐந்நூறு, ஐந்தூணி என நகரமெய் தன்னியல்பினிற்றலுங் கொள்க.

இன்னும், ஏற்புழி என்றதனால், வகரம்வருமிடத்து ஐ வண்ணம் என முடிதலேயன்றி, - ஐவ்வண்ணம் என நகரமெய் வருமெய்யாகத் திரிந்து முடிதலுங் கொள்க. (௪௨)

௧௬௩. எட்ட னுடம்புணவ் வாகு மென்ப.

இ - ள். எட்டன் உடம்பு - இறுதியுயிர்மெய் கெடநின்ற எட்டென்னும் எண்ணினது டகரமெய், — ண ஆகும் என்ப - நாற்கணமும்வர ணகரமெய்யாகத் திரியும் என்று சொல்லுவர் புலவர். எ - று.

உ-ம். எண்பது, எண்கழஞ்சு, எண்கலம், எண்குணம். எ-ம். எண்ணாழி. எ-ம். எண்வகை. எ-ம். எண்ணைந்து. எ-ம். வரும். (௪௩)

௧௬௪. ஒன்பா னொடுபத்து நூறு மொன்றின்
முன்னதி னேனைய முரணி யொவ்வொடு
தகர நிறீஇப்பஃ தகற்றி னவ்வை
நிரலே ணளவாத் திரிப்பது நெறியே.

இ - ள். ஒன்பானொடு பத்தும் நூறும் ஒன்றின் - ஒன்பதுடனே பத்தென்பதும் நூறென்பதும் வந்து புணருமாயின், — முன்னதின் ஏனைய முரணி - (எட்டின்மேலொன்று அவ்வொன்றுவரத் திரிந்துநின்ற பத்து என்று) நிலைமொழியைப்போல (வருமொழியாகிய) பத்தையு நூற்றையும் முறையே நூறு எனவும் ஆயிரம் எனவுந் திரித்து, — ஒவ்வொடு தகரம் நிறீஇ - நிலைமொழி முதலிலுள்ள ஒகரவுயிரோடு தகரமெய்யை அதற்கு ஆதாரமாக நிறுத்தி, — பஃது அகற்றி - அந்நிலைமொழியிறுதியிலுள்ள பஃதைக் கெடுத்து, — னவ்வை நிரலே ணளவா திரிப்பது நெறி - அம்மொழிமுதற்கு அயனின்ற னகரமெய்யை முறையே ணகரமெய்யாகவும் ளகரமெய்யாகவுந் திரிப்பது முறையாகும். எ - று.

நெறியே என்ற இலேசானே, தனிக்குறின் முன்னொற் றிரட்டித்தலுங் கொள்க.

Digitized By Roja Muthiah Research Library

உ-ம். (க.) ஒன்பது + பத்து = (ஒன்பதுநூறு, தொன்பதுநூறு, தொன்நூறு, தொண்நூறு) தொண்ணூறு.

(உ) ஒன்பது + நூறு = (ஒன்பதுஆயிரம், தொன்பதுஆயிரம், தொன்ஆயிரம், தொள்ஆயிரம்) தொள்ளாயிரம். இது தொளாயிரம் என இக்காலத்து மருவியது.

முன்னதின் என்பதில் இன் ஒப்புப்பொருளில் வந்த ஐந்தனுருபு. ஒப்புப்பொருளாகக் கொள்ளாவிடின் அத்திரிபு இன்னதுபோலாயிருக்குமென்று விளங்காமற்போம். விளங்குதற்பொருட்டு உவமைமுகத்தாற் கூறினர்.

பஃதென்னுந் தானத்திற்கு வரமாட்டாத குறைவுடைய ஒன்பஃது பஃதென்னு மிறுதியைப்பெற்றதுபோல, நூறென்னுந் தானத்திற்குறைந்த நிலையிலிருக்கின்ற பத்து நூறு என்றுதிரிந்தும், ஆயிரம் என்னுந் தானத்திற்குறைந்த நிலையிலிருக்கிற நூறுஎன்பது ஆயிரம் என்று திரிந்தும் வருமொழியாகவந்து மற்றுவிகாரங்களும் பெற்றுமுடிந்தன காண்க.

ஒன்பானொடு பத்தும் நூறும் ஒன்றின் என்றதினால் நிலைமொழி ஒன்றும், வருமொழி தனித்தனி இரண்டுமாதலால், ஏனைய என்றபன்மை இங்கே வருமொழிகளைக் குறித்துநின்றன.

பஃதகற்றியென்பதனோடு பொருந்த ஒன்பஃதனோடென்னாது ஒன்பானொடென்றமையால், ஒன்பதுநின்று புணரினும், இவ்விதியே பெறுமென்றறிக. (சச)

கசுரு. முதலிரு நான்கா மெண் முனர்ப் பத்தின்
இடை யொற் றேக லாய்த மாகல்
எனவிரு விதியு மேற்கு மென்ப.

இ-ள். முதல் இருநான்கு ஆம் எண்முனர்ப்பத்தின் - ஒன்றுமுதலாகிய எட்டெண்களின் முன்னும் வரும் பத்தென்னும் எண்ணினது,— இடை ஒற்று ஏகல் - நடுநின்ற தகரமெய் கெடுதலும்,—ஆய்தம் ஆகல் - தகரநின்றவிடத்து அதுகெட ஆய்தம் வருதலும்,—என இருவிதியும் ஏற்கும் என்ப - என்னும் இவ்விரண்டு விதியும் பொருந்தும் என்று சொல்லுவர் புலவர். எ - று.

உ-ம். ஒருபது, ஒருபஃது; இருபது, இருபஃது; முப்பது, முப்பஃது; நாற்பது, நாற்பஃது; ஐம்பது, ஐம்பஃது; அறுபது, அறுபஃது; எழுபது, எழுபஃது; எண்பது, எண்பஃது எனவரும். (சரு)

கசுசு. ஒருபஃ தாதிமுன் னொன்றுமுத லொன்பான்
எண்ணு மவையூர் பிறவு மெய்தின்
ஆய்த மழியவாண் டாகுந் தவ்வே.

Digitized By Roja Muthiah Research Library

இ - ள். ஒருபஃது ஆதிமுன் - ஒருபஃது முதலாகிய எட்டெண்ணின் முன்னும்,—ஒன்றுமுதல் ஒன்பான் எண்ணும் - ஒன்றுமுதலாகிய ஒன்பதெண்களும்.—அவை ஊர் பிறவும் எய்தின் - அவ்வெண்களை ஊர்ந்த மற்றவையும் வந்து புணருமாயின்,— ஆய்தம் அழியத் த ஆண்டு ஆகும் - நிலைமொழியிலே நின்ற ஆய்தங்கெட இயல்பாகிய தகரம் அவ்வாய்த நின்றவிடத்து வரும். எ - று.

உ-ம். ஒருபத்தொன்று, இருபத்தொன்றேகாலேயரைக்கால், முப்பத்தொருகழஞ்சு, எழுபத்தெண்கலனேதூணி, எண்பத்தொன்பதியாண்டு எனவரும். மற்றவைகளும் இப்படியே.
ஆய்தங்கெடத் தகரம் வரும் என்றமையின், அருத்தாபத்தியால், ஆய்தமில்லாத ஒருபதுமுதலானவைகளுந் தகரம் பெறுமென்றாராயிற்று.

கக௭. ஒன்றுமுத லீரைந் தாயிரங் கோடி
எண்ணிறை யளவும் பிறவரிற் பத்தின்
ஈற்றுயிர் மெய்கெடுத் தின்னு மிற்றும்
ஏற்ப தேற்கு மொன்பது மினைத்தே.

இ - ள். ஒன்று முதல் ஈரைந்து ஆயிரம் கோடி எண் - ஒன்றுமுதலியபத்தும் ஆயிரமுங் கோடியுமாகிய எண்ணுப்பெயரும்,— நிறை - நிறைப்பெயரும்,— அளவும் - அளவுப்பெயரும்,—பிறவரின் - பிறபெயரும் வந்து புணருமாயின்,—பத்தின் ஈற்று உயிர்மெய் கெடுத்து - நிலைமொழியாகிய பத்தினது இறுதியிலுள்ள தகரவுயிர்மெய்யை அழித்து,—இன்னும் இற்றும் ஏற்பது ஏற்கும் - இன்சாரியையாயினும் இற்றுச்சாரியையாயினும் அவ்விடத்திற் கேற்பது ஏற்று நிற்கும்,— ஒன்பதும் இனைத்து - ஒன்பதென்னும் நிலைமொழியும் இப்படியே எண்ணுப்பெயர் முதலானவை வந்து புணருமாயின் இன்னையினும் இற்றையினும் அவ்விடத்திற்கு ஏற்பது ஏற்று நிற்கப்பெறும். எ - று.

உ - ம். பதினொன்று, பதின்மூன்று, பதினாயிரம், பதின்கழஞ்சு, பதின்கலம், பதின்மடங்கு. எ-ம். பதிற்றொன்று, பதிற்றிரண்டு, பதிற்றுமூன்று, பதிற்றுக்கோடி, பதிற்றுத்தூணி. எ-ம். ஒன்பதினாயிரம், ஒன்பதின் கழஞ்சு, ஒன்பதின் கலம், ஒன்பதின் மடங்கு எ-ம், ஒன்பதிற்றொன்று, ஒன்பதிற்றிரண்டு, ஒன்பதிற்றுக்குறுணி. எ-ம். வரும். மற்றவைகளும் இப்படியே பதினொன்று உம்மைத்தொகை, பதிற்றொன்று பண்புத்தொகை.

ஏற்பதேற்கும் என்றதனால், பத்துக்கோடி, ஒன்பதுகோடி எனப் பொதுவிதிப்படியே முடிந்துநிற்றலுங் கொள்க. (௭௭)

கக௮. இரண்டு முன்வரிற் பத்தினீற் றுயிர்மெய்
கரந்திட வொற்றுனவ் வாகு மென்ப.

Digitized By Roja Muthiah Research Library

இ - ள். இரண்டு முன்வரின் - இரண்டென்பது முன்வருமாயின்,— பத்தின் ஈற்று உயிர்மெய் கரந்திட - பத்தென்னுநிலைமொழியினது ஈற்றிலுள்ள துகரவுயிர்மெய் கெட,—ஒற்று ன ஆகும் என்ப - தகரமெய் னகரமெய்யாகத் திரியும் என்று சொல்லுவர் புலவர். எ - று.

உ-ம். பன்னிரண்டு எனவரும். இது உம்மைத்தொகை. (சஅ)

கசுசு. ஒன்ப தொழித்தவெண் ணொன்பது மிரட்டின்
முன்னதின் முன்னல வோட வுயிர்வரின்
வவ்வு மெய்வரின் வந்தது மிக்னெறி.

இ - ள். ஒன்பது ஒழித்த எண் ஒன்பதும் இரட்டின் - ஒன்றென்னும் எண்ணொன்றனையும் ஒழித்து நின்ற ஒன்றுமுதற் பத்தீருகிய ஒன்பதெண்ணினையும் இரட்டித்துச் சொல்லின்,—முன்னதின் முன் அல ஓட - நிலைமொழியினது முதலெழுத்தல்லாதவைகளெல்லாங் கெட,—உயிர்வரின வவ்வும் - உயிர்முதலான எண்வரின் வகரமெய்யும்,—மெய் வரின் வந்தது ம் - மெய்முதலான எண்வரின் வந்தமெய்யும்,—மிகல் நெறி - மிகுதல் முறையாம். எ - று.

உ-ம். ஒவ்வொன்று, இவ்விரண்டு, மும்மூன்று, நந்நான்கு, ஐவைந்து, அவ்வாறு, எவ்வேழு, எவ்வெட்டு, பப்பத்து எனவரும்.

நெறி என்றமையால், நந்நான்கு என நான்கிற்குக் குறுக்கமும், ஓரோவொன்று, ஒன்றொன்று, சழுக்கழஞ்சு என இரட்டித்தலும், இன்னுங் குற்றியலுகரப் புணர்ச்சியுள் அடங்காதனவுங் கொள்க. (சகூ)

பரீக்ஷை வினுக்கள்:—366. அறுவகைக் குற்றுகரங்களுள் எவற்றின் முன்வரும் வல்லினம் அல்வழியில் இயல்பாம்? 367. வன்றொடர்க் குற்றுகரவீற்றின்முன் இருவழியும் வல்லினம் வரின் எவ்வாரும்? 368. அது எச்சூத்திரத்தாற் பெறப்படும்? 369. வன்றொடர்முன் வரும் வல்லினம் எங்கும் இயல்பாதலில்லையோ? 370. அது எதனுற்பெறப்படும்? 371. மென்றொடர்க்குற்றுகர வீற்றின் முன் வரும் வல்லினம் வேற்றுமையில் எவ்வாரும்? 372. அது எச்சூத்திரத்தாற் பெறப்படும்? 373. இடப்பொருள் தந்து ஏழாம்வேற்றுமைப்பொருள்படவரும் மென்றொடர்க் குற்றுகரவீற்றிடைச்சொற்களின்முன் வலிவரின் எவ்வாரும்? 374. காலப்பொருள் தந்து ஏழாம்வேற்றுமைப்பொருள்படவரும் மென்றொடர்க் குற்றுகரவீற்றிடைச்சொற்களின்முன் வலிவரின் எவ்வாரும்? 375. எக்குற்றுகரங்களின்முன்வரும் வல்லினம் வேற்றுமையிலும் இயல்பாம்? 376. நெடிற்றொடர்க் குற்றுகரமொழிகளுள்ளும், உயிர்த்தொடர்க் குற்றுகரமொழிகளுள்ளும் எவ்வெவைகள் இடையே மெய்யிரட்டித்துவரப்பெறும்? 377. அல்வழியில் எங்கும் இவ்வாறிரட்டுதலில்லையோ? 378. வேற்றுமையில் இரட்டாது வருதலில்லையோ? 379. டறவொற்றன்றிப் பிறவொற்று இருவழியும் இரட்டுதலில்லையோ? 380. மென்றொடர்க்குற்றுகரமொழி வேறுவிதி பெருதோ? 381. அல்வழியில் இங்ஙனம் வராதோ? 382. மென்றொடர்க் குற்றுகரம் இன்னும் எவ்வாரும்? 383. வேறுகுற்



Digitized By Roja Muthiah Research Library

றுகரம் ஐகாரச்சாரியை பெறாதோ? 384. திசைப்பெயரோடு திசைப்பெயர் புணருமிடத்து எத்திசைப்பெயரோடு எத்திசைப்பெயர் புணரும்? 385. திசைப்பெயர் வந்துபுணரும்போது நிலைமொழிகளாகநிற்குந் திசைப்பெயர்கள் எவை? 386. வடக்கு என்பதன்முன் திசைப்பெயரும் பிறபெயரும்வரின் எவ்வாறாம்? 387. தெற்கு என்பதன்முன் திசைப்பெயரும் பிறபெயரும்வரின் எவ்வாறாம்? 388. மேற்கு என்பதன்முன் பிறபெயர்வரின் எவ்வாறாம்? 389. குணக்கு குடக்கு என்பவற்றின்முன் பிறபெயர்வரின் எவ்வாறாம்? 390. கிழக்கு என்பதன்முன் பிறபெயர்வரின் எவ்வாறாம்? 391. கிழக்கு மேற்கு என்னும் பெயர்கள் வேறுவிதியும் பெறுமோ? 392. திசைப்பெயர்கள் பொதுவிதிபெறாவோ? 393. தெங்கு என்பதன்முன் காய்வரின் எவ்வாறாம்? 394. ஒன்றுமுதல் எட்டீறாகிய எண்ணுப்பெயர்கள், தம்முன்னே எண்ணுப்பெயர்முதலிய பெயர்கள்வரின் எவ்வாறாம்? 395. ஆறு என்பதன்முன் முக்கணமும் வரின் எவ்வாறாம்? 396. ஆறன்முன் உயிர்க்கணம்வரின் எவ்வாறாம்? 397. ஏழு என்பதன்முன் முக்கணமும் வரின் எவ்வாறாம்? 398. ஏழன்முன் உயிர்க்கணம்வரின் எவ்வாறாம்? 399. ஒன்று என்பதன்முன் முக்கணம்வரின் எவ்வாறாம்? 400. ஒன்றன்முன் உயிர்க்கணம்வரின் எவ்வாறாம்? 401. ஒன்றன்முன் உயிர்வந்தவிடத்து வேறுவிதியும் பெறுமோ? 402. ஒன்று மற்றைக் கணத்தில் வேறுவிதியும்பெறுமோ? 403. இரண்டு என்பதன்முன் முக்கணமும்வரின் எவ்வாறாம்? 404. இரண்டன்முன் உயிர்க்கணம்வரின் எவ்வாறாம்? 405. இரண்டன்முன் உயிர்வந்தவிடத்து வேறுவிதியும்பெறுமோ? 406. மூன்று என்பதன்முன் உயிர்க்கணம் வரின் எவ்வாறாம்? 407. மூன்றன்முன் வன்கணம் மென்கணம்வரின் எவ்வாறாம்? 408. மூன்றன்முன் இடைக்கணம்வரின் எவ்வாறாம்? 409. நான்கு என்பதன்முன் உயிர்க்கணமும் இடைக்கணமும் வரின் எவ்வாறாம்? 410. நான்கன்முன் வன்கணம்வரின் எவ்வாறாம்? 411. நான்கன்முன் மென்கணம்வரின் எவ்வாறாம்? 412. ஐந்து என்பதன்முன் மென்கணம்வரின் எவ்வாறாம்? 413. ஐந்தின்முன் வன்கணம் வரின் எவ்வாறாம்? 414. ஐந்தின்முன் உயிர்க்கணமும் இடைக்கணமும் வரின் எவ்வாறாம்? 415. எட்டு என்பதன்முன் நாற்கணமும் வரின் எவ்வாறாம்? 416. ஒன்பஃது என்பதன் முன் பத்து வரின் எவ்வாறாம்? 417. ஒன்பது என்பதன்முன் நூறுவரின் எவ்வாறாம்? 418. ஒன்றுமுதலிய எட்டெண்களின்முன் பத்துவரின் எவ்வாறுபுணரும்? 419. ஒருபஃது முதலிய எட்டெண்களின் முன்னும் ஒன்றுமுதலொன்பதெண்ணும் அவ்வெண்களை யூர்ந்த பிறபெயரும் வரின் எவ்வாறாம்? 420. பத்து என்பதன்முன் எண்ணுப்பெயர்முதலிய பெயர்கள்வரின் எவ்வாறாம்? 421. ஒன்பது என்பதன்முன் எண்ணுப்பெயர் முதலிய பெயர்கள் வரின் எவ்வாறாம்? 422. பத்தின்முன் இரண்டுவரின் வேறுவிதிபெறுமோ? 423. ஒன்பதொழிந்த ஒன்றுமுதற் பத்தீறாகிய ஒன்பதெண்களையும் இரட்டித்துச் சொல்லுமிடத்து எவ்வாறாம்?

Digitized By Roja Muthiah Research Library

## ஊகாரவீற்றுச்சிறப்புவிதி.

உ00. பூப்பெயர் முன்னின மென்மையுந் தோன்றும்.

இ - ள். பூப்பெயர்முன் - பூவென்னும் பலபொருட்பெயர்ச் சொல்லின்முன்,—இன மென்மையும் தோன்றும் - வல்லினம்வரிற் பொதுவிதியான் மிகுதலேயன்றி அவற்றிற்கினமாகிய மெல்லினமும் மிகும், எ-று.

உ-ம். பூங்கொடி, பூஞ்சோலை, பூந்தடம், பூம்பணை எனவரும். இவைகளுள்ளே பூவென்பது மலராயின், இரண்டாம்வேற்றுமைத்தொகை; அழகாயிற் பண்புத்தொகை.

இனமென்மையுந் தோன்றும் என்றது 'இயல்பினும்விதியினும்' என்னுஞ்சூத்திரத்தால் எய்தியதன்மேற் சிறப்புவிதி. (ரு0)

**பரீக்ஷை** வினா:—424. பூ என்னும் பெயர்முன் வல்லினம்வரின் வேறு விதியும் பெறுமோ?

---

## ஏகார ஓகார வீற்றுச் சிறப்புவிதி.

உ0க. இடைச்சொல் லேயோ முன்வரி னியல்பே.

இ - ள். இடைச்சொல் ஏ (முன்) ஓ முன் - இடைச்சொல்லாகிய ஆறேகாரத்தின்முன்னும் எட்டோகாரத்தின் முன்னும்,—வரின் இயல்பு - வல்லினம்வரிற் பொதுவிதியான் மிகாது இயல்பாகும், எ - று.

உ-ம். (க.) அவனேகொண்டான் என்பது பிரிநிலையும் வினாவும் ஈற்றசையுந் தேற்றமுமாம். "ஏயேயினையென்றோரிருடிவினவ" என்பது இசைநிறை.

(உ.) அவனோகொண்டான் என்பது ஒழியிசை முதலிய எட்டுமாம். ஏகாரவோகாரத்துக்கு முன்னியல்பாதல் 'ஈற்றியாவினாவிளிப் பெயர்முன்வலியியல்பே' என்னுஞ்சூத்திரத்திலடங்காதோ வேறுகூறவேண்டுவது என்னையெனின்; அங்கே வினாப்பொருளில் வரும் ஏகாரவோகாரங்கள் மாத்திரம் அடங்குமன்றி, மற்றப்பொருள்களில்வரும் ஏகார வோகாரங்கள் அடங்கமாட்டா ஆதலின் வேறுகூறப்பட்டன என்றறிக. இவ்விடத்துக்கு உதாரணம் வினாப்பொருளில் வராத ஏகார ஓகாரங்களிற்கொள்க. வினாப்பொருளில் வந்த ஏகாரவோகாரங்களுக்குதாரணம் 'ஈற்றியாவினாவிளிப்பெயர்' என்னுஞ் சூத்திரத்திற் காண்க. ஏகாரவோகாரங்கள் பலபொருளில் வருமென்பது இடைச்சொல்லியலிற் காண்க. அறமே பொருளே காமமே துறவே நிலமே காற்றே தேயுவே ககனமே என்பன எண்ணுப்பொருளன.

ஏ ஓ முன் வரின் இயல்பு என்றது 'இயல்பினும் விதியினும்' என்னுஞ் சூத்திரத்தால் எய்தியது விலக்கல். (ருக)

Digitized By Roja Muthiah Research Library

பரீக்ஷை. வினா:—425. சொல்லின் கடையில்வரும் ஏ ஓ என்னும் இடைச்சொற்களின்முன் வல்லினம்வரின் எவ்வாறாம்?

## ஐகாரவீற்றுச் சிறப்புவிதி.

உ0உ. வேற்றுமை யாயி னைகா ரிறுமொழி
ஈற்றழி வோடுமம் மேற்பவு முளவே.

இ - ள். ஐகார னிறுமொழி - ஐகாரவீற்றுச்சொற்கள்,—வேற்றுமை ஆயின் - வேற்றுமைக்கண்வருமாயின்,—ஈற்று அழிவோடும் அம் ஏற்பவும் உள - ஈற்றைகாரங் கெடுதலுடனே அம்முச்சாரியைபெற்று முடிவனவும் சிலவுள. எ - று.

அழிவோடும் என்றமையால், அழியாமையோடும் அம் ஏற்பவு முளவெனக்கொள்க. வருமெழுத்தைச் சொல்லாமையால், நாற்கணத்துள் ஏற்பனகொள்க.

உ-ம். (க.) வழுதுணை+காய்=வழுதுணங்காய், தாழை+பூ=தாழம்பூ, ஆவிரை+வேர்=ஆவிரம்வேர் என ஈற்றைகாரங்கெட்டு அம்முச்சாரியைபெற்றன.

(உ.) புன்னை+கானல்=புன்னையங்கானல், முல்லை+புறவம்=முல்லையம்புறவம் என ஈற்றைகாரங்கெடாமல் அம்முச்சாரியை பெற்றன.

ஏற்பவுமுள என்றதனால், முல்லைப்புறவம் என வரினுங் கொள்க.

முல்லைப்புறவம் என்பதற்கு முல்லைகளையுடைய புறவமென்று வேற்றுமைவழிப்பொருள்கொள்ளுக. இது எய்தாததெய்துவித்தல். (ருஉ)

உ0ங. பனைமுன் கொடிவரின் மிகலும் வலிவரின்
ஐபோ யம்முந் திரள்வரி னுறழ்வும்
அட்டுறி னைகெட்டந் நீள்வுமாம் வேற்றுமை.

இ - ள். பனைமுன் - பனையென்னும் பெயர்முன்,—கொடிவரின் மிகலும் - கொடியென்னும்பெயர் வருமாயின் வந்ததுமிகுதலும்,—வலிவரின் ஐபோய் அம்மும் - க ச த ப க்கள் வருமாயின் நிலைமொழியீற்றைகாரங் கெட்டு அம்முப்பெறுதலும்,—திரள்வரின் உறழ்வும் - திரளென்னும்பெயர் வருமாயின் வந்தது மிகுந்தும் ஐபோய் அம்முப்பெற்றும் விகற்பித்தலும்,—அட்டு உறின் ஐ கெட்டு அ நீள்வும்,—அட்டென்னும் பெயர் வருமாயின் ஐகாரங் கெட்டு வருமொழி அகரம் ஆகாரமாதலும்,—ஆம் வேற்றுமை - ஆகும் வேற்றுமைக்கண். எ - று.

உ-ம். பனைக்கொடி, எ-ம். பனங்காய், செறும்பு, தூண், பழம். எ-ம். பனைத்திரள், பனந்திரள். எ-ம். பனாட்டு எ-ம். வரும். பனைக்கொடி-பனையை எழுதியகொடி. பனாட்டு - பனங்கனிச்சாரம்வெயிலிலுலர்த்தப்பட்டது.

Digitized By Roja Muthiah Research Library

பனைமுன் கொடிவரின் மிகும் என்றது 'இடல்பினும்விதியினும்' என்னுஞ் சூத்திரத்தால் எய்தியதிசந்துபடாமைக் காத்தல்; வலிவரின் ஐபோய் அம்முப்பெறும் என்றது 'வேற்றுமையாயின்' என்னும் மேலைச்சூத்திரத்தால் எய்தியதிகந்துபடாமைக் காத்தல்; திரள்வரின் உறழ்வும் என்றது 'இயல்பினும்' என்பதனாலும் மேலைச்சூத்திரத்தாலும் எய்தியதிகந்துபடாமைக் காத்தல்; அட்டுறின் ஐகெட்டு அந்நீளும் என்றது 'இஈஐவழி' என்பதனால் எய்தியதுவிலக்கிப் பிறிதுவிதிவகுத்தல். (ருங)

**பரீக்ஷை** விஞக்கள்:—426. ஐகாரவீற்றுப்பெயர்களின்முன் வேற்றுமையில் நாற்கணத்துள் எற்பனவரின் எவ்வாறும்? 427. பனைமுன் கொடிவரின் எவ்வாறும்? 428. பனைமுன் வல்லினம்வரின் எவ்வாறும்? 429. பனைமுன் திரள்வரின் எவ்வாறும்? 430. பனைமுன் அட்டுவரின் எவ்வாறும்?

உயிரீற்றுப்புணரியன் முற்றிற்று.

## ௪. மெய்யீற்றுப்புணரியல்.

### மெய்யீற்றின்முன் உயிர்.

உ0௪. உடன்மே லுயிர்வந் தொன்றுவ தியல்பே.

இ-ள். உடல் மேல் - நிலைமொழியீற்றினின்ற மெய்யின்மேல்,—உயிர்வந்து ஒன்றுவது இயல்பே - வருமொழி முதலுயிர்வந்து ஒன்றுபட்டிணங்கிநிற்பது இயல்பு புணர்ச்சியேயாம். எ - று.

"புள்ளியீற்றின்முன்னுயிர்தனித்தியலாது, மெய்யொடுசிவணுமவ்வியல்கெடுத்தே" என ஆசிரியர் தொல்காப்பியனார் கூறுதலுங் காண்க.

உ-ம். தோன்றல்+அழகன்=தோன்றலழகன், உரிஞ்+அழகிது=உரிஞழகிது, புகழ்+அழகிது=புகழழகிது. எ-ம். வேல்+எறிந்தான்=வேலெறிந்தான். எ-ம். வரும். (௧)

உ0௫. தனிக்குறின் முன்னொற் றுயிர்வரி னிரட்டும்.

இ-ள். தனிக்குறில் முன் ஒற்று - தனிக்குற்றெழுத்தின்முன்னின்றமெய்,—உயிர்வரின் இரட்டும் - உயிர்வரின் இரட்டித்துநிற்கும். எ - று.

உ-ம். மண்+அரிது=மண்ணரிது, பொன்+அரிது=பொன்னரிது எ-ம். மண்+அகம்=மண்ணகம், பொன்+ஒளி=பொன்னொளி எ-ம். வரும்.

இது மேலைச்சூத்திரத்தால் எய்தியதன்மேற் சிறப்புவிதி. உயிரேற இடங்கொடுத்தலேயன்றி இரட்டித்தும் நிற்குமென்றலின். (உ)

**பரீக்ஷைவினாக்கள்:**—431. மெய்யீற்றின்முன் உயிர்வரின் எவ்வாறு புணரும்? 432. தனிக்குறிலைச் சார்ந்துநின்ற மெய்முன் உயிர்வரின் எவ்வாறும்?

### மெய்யீற்றின்முன் மெய்.

உ0௬. தன்னொழி மெய்ம்முன் யவ்வரி னிகரந்
துன்னு மென்று துணிநரு முளரே.

இ-ள். தன் ஒழி மெய்ம்முன் - தன்னையொழிந்த ஞ ண ந ம ன ர ல வ ழ ள என்னும் பத்துமெய்களின் முன்னும்,—ய வரின் - யகரம்வந்தால்,—இகரம் துன்னும் என்று துணிநரும் உளர் — இகரச்சாரியையைத் தன்முன் பொருந்துமென்று அரிதிற் கொள்வாருஞ் சிலருளர். எ - று.

Digitized By Roja Muthiah Research Library

உ-ம். வேளியாவன், மண்ணியாது, எ-ம். வேளியானே; மண்ணியானே எ-ம் வரும்.

துணிநருமென்ற எதிர்மறையாய இழிவுசிறப்பும்மையால் வேள்யாவன், மண்யாது எனப் பொதுவிதி பெறுமென்பார் பலருளரெனக் கொள்க. மண்ணியாது, மண்ணியானே என்பனவற்றில் ககரம் நோக்கித் தனிக்குறின் முன்னொற்றிரட்டித்ததுகாண்க. இது 'எண்ணுமெழுத்தீற்று' என்னுஞ்சூத்திரத்தால் எய்தியதன்மேற் சிறப்புவிதி. (௫)

உ0எ. ஞணநமலவளன வொற்றிறு தொழிற்பெயர்
ஏவல் வினைநனி யவ்வன் மெய்வரின்
உவ்வுறு மேவ லுறுசில சில்வழி.

இ-ள். ஞணநமலவளன ஒற்று இறு தொழிற்பெயர் ஏவல்வினை - ஞணநமலவளன என்னும் எட்டுமெய்களும் இறுதியாகிய முதனிலைத்தொழிற்பெயர்களும் ஏவல்வினைகளும்,—ய அல் மெய்வரின் — யகரமொழிந்த மெய்கள் வருமாயின்,—நனி உ உறும் - பெரும்பாலும் உகரச்சாரியையை இறுதிக்கட்பொருந்தும்,—சில ஏவல் சில்வழி உறு — சிலவேவல்வினைகள் சிலவிடங்களிலே அவ்வுகரச்சாரியையைப் பொருந்தாவாம்.

முதனிலைத்தொழிற்பெயராவது தொழிற்பெயர் விகுதி குன்றி முதனிலைமாத்திரநின்று தொழிற்பெயர்ப்பொருளைத் தருவதாம்.

உ-ம். (க) உரினுக்கடிது, உண்ணுக்கடிது, பொருநுக்கடிது, திருமுக்கடிது, தின்னுக்கடிது, நீண்டது, வலிது எ-ம். கடுமை, நீட்சி, வன்மை எ-ம். தொழிற்பெயர்கள் இருவழியும் உகரம்பெற்றன. மற்றவைகளும் இப்படியே. இவை உரிஞுதல் உண்ணல் என்புழி வரும் விகுதி குன்றி, நின்றமை காண்க.

(உ) உரிஞுகொற்று, உண்ணுகொற்று, பொருநுகொற்று, திருமுகொற்று, தின்னுகொற்று, நாகா, வளவா என ஏவல்வினை உகரம் பெற்றன. மற்றவையும் இப்படியே.

உகரச்சாரியைபெற்றும் பெறுதும் வரும் ஏவல்வினைகள் ண ன ல ள என்னு நான்கீற்றனவுமாம். வருமாறு: உண்கொற்று, தின்சாத்தா, வெல்பூதா, துள்வளவா, என வரும். ஞ ந ம வ என்னுநான்கீறும் உகரம்பெற்றேவரும்.

உரிஞு, உண்ணு என வருமொழியின்றி உகரம்பெறுதலும், மணலைவாரு, சருகைவாரு எனச் சிறுபான்மை சொல்லாத ஈறு உகரம்பெறுதலும் சொல்லவந்தவர் நனி என்றும்.

உண்ணுகொற்று, உண்கொற்று என உகரச்சாரியை பெற்றும், பெறுதும் வருவனவும்; உரிஞுகொற்று என்றாற்போல உகரம் பெற்றே வருவனவும் உளவென்பார் சில வேவலுறு சில்வழி என்றுங் கூறினார். இது எய்தாததெய்துவித்தல். (௬)

Digitized By Roja Muthiah Research Library

௨௦௮. நவ்விறு தொழிற்பெயர்க் கவ்வுமாம் வேற்றுமை.

இ - ள். ந இறு தொழிற்பெயர்க்கு - நகரமிறுதியாகிய முதனிலைத் தொழிற்பெயர்க்கு,—அவ்வும் ஆம் வேற்றுமை - உகரச்சாரியையேயன்றி அகரச்சாரியையுமாகும் வேற்றுமைக்கண். எ - று.

உ - ம். பொருநக்கடுமை, நன்மை, வன்மை எனவரும். [பொருநுதல் - ஒத்தல். அது ஒருவர்மற்றொருவர்போல வேடங்கொள்ளும் பொருநரது தொழில். பொருநர் — கூத்தர்.]

இது மேலைச்சூத்திரத்தால் எய்தியதன்மேற் சிறப்புவிதி.

**பரீக்ஷை** வினாக்கள்:—433. யகரமல்லாத மற்றைய மெய்கண்முன் யகரம்வரின் எவ்வாறாம்? 434. ஞ ண ந ம ல வ ள ன என்னும் எட்டுமெய்களையும் ஈறாகவுடைய முதனிலைகள் முதனிலைத்தொழிற்பெயராங்காலத்தும், ஏவல்வினையாங்காலத்தும் அவைகளின்முன் மெய்வரின் எவ்வாறாம்? 435. முதனிலைத் தொழிற்பெயரென்பதென்னை? 436. இவ்வெட்டீற்றேவல் வினைகளுள் உகரச்சாரியைபெறுதும் வருவன உளவோ? 437. முதனிலைத் தொழிற்பெயர்களுள், பொருந் என்பது உகரமன்றி வேறு சாரியையும் பெறுமோ?

---

## ணகர னகரவீறு.

௨௦௯. ண ன வல் லினம்வரட் டறவும் பிறவரின்
இயல்பு மாகும் வேற்றுமைக் கல்வழிக்
கனைத்துமெய் வரினு மியல்பா கும்மே.

இ - ள். ண ன - ணகார னகாரமெய்கள்,—வேற்றுமைக்கு வல்லினம் வரட்டறவும் - வேற்றுமைக்கண் வன்கணம் வந்தால் முறையே டகரமும் றகரமும்,—பிறவரின் இயல்பும் ஆகும் - மெல்லினமும் இடையினமும் வந்தால் இயல்பும் ஆம்,—அல்வழிக்கு அனைத்து மெய்வரினும் இயல்பு ஆகும் - அல்வழிக்கண் மூவினமெய்களும் வந்தாலும் இயல்பேயாகும். எ - று.

உ - ம். (க) சிறுகண்+களிறு=சிறுகட்களிறு, பொன்+தகடு=பொற்றகடு என வேற்றுமையிலே வல்லினம்வர ண னக்கள் திரிந்தன.

(உ) மண்ஞாற்சி, பொன்ஞாற்சி, நீட்சி, மாட்சி, யாப்பு, வன்மை என வேற்றுமையிலே மெல்லினமும் இடையினமும் வர ண னக்கள் இயல்பாயின.

(௩) மண்கடிது, பொன்கடிது, சிறிது, தீது, பெரிது, ஞான்றது, நீண்டது, மாண்டது, யாது, வலிது என அல்வழியிலே மூவினமும் வர ண னக்கள் இயல்பாயின.

Digitized By Roja Muthiah Research Library

ஒப்பின்முடித்தலால், னகரமும் உடன்கூறினர். பின்னே கூட்டிச்சொல்லப்படும் எழுத்துக்களுக்கும் இவ்வுத்தியே கொள்க. (கூ)

உகO. குறிலணை வில்லா ணனக்கள் வந்த
நகரந் திரிந்துழி நண்ணுங் கேடே.

இ - ள். குறில் அணைவு இல்லா ண னக்கள் - தனிக்குறிலொன்றனையுஞ் சாராது ஒருமொழி தொடர்மொழிகளைச் சார்ந்த ணகார னகாரமெய்கள்,—வந்த நகரம் திரிந்துழி - வருமொழிக்கு முதலாக வந்த நகரம் மயக்கவிதியில்லாமையினாலே திரிந்தவிடத்து,—கேடு நண்ணும் - கெடுதலைப்பொருந்தும். எ-று.

உ - ம். (க) தூண்+நன்று=தூணன்று, பசுமண்+நன்று=பசுமணன்று எ-ம் நன்மை எ-ம். ணகரம் இருவழியுங்கெட்டது.

(உ) அரசன்+நல்லன்=அரசனல்லன், செம்பொன்+நன்று=செம்பொனன்று எ - ம். நன்மை எ - ம் னகரம் இருவழியுங்கெட்டது.

ணனக்கள் வந்த நகரந் திரிந்துழி நண்ணுங்கேடு என்றது மேலைச்சூத்திரத்தால் எய்தியதுவிலக்கிப் பிறிது விதிவகுத்தல். (எ)

உகக. சாதி குழூஉப்பரண் கவண்பெய ரிறுதி
இயல்பாம் வேற்றுமைக் குணவெண் சாண்பிற
டவ்வா கலுமா மல்வழி யும்மே.

இ - ள். சாதிப் (பெயர்) - சாதிபற்றிவரும் பெயர்களுக்கும்,—குழூஉப் (பெயர்) திரள்பற்றிவரும் பெயர்களுக்கும்,—பரண்கவண்பெயர் - பரண்கவணென்னும் பெயர்களுக்கும்,— இறுதி - ஈற்று ணகரம்,—வேற்றுமைக்(கும்) இயல்பு ஆம் - வேற்றுமைக்கண்ணும் வல்லினம் வரின் இயல்பாகும்,—உண்வு எண் (பெயர்) - உணவுக்குரிய எள்ளின் திரிசொல்லாகிய எண்ணென்னும் பெயருக்கும்,—சாண் (பெயர்) - சாண் என்னும் நீட்டலளவைப்பெயருக்கும்,—(இறுதி) - ஈற்று ணகரம்,—அல்வழியும் டவ்வாகலும் ஆம் — அல்வழிக்கண்ணும் வல்லினம் வரின் திரிந்து டகரமாதலும் பொருந்தும். எ - று.

உ-ம். (க.) பாண்குடி. எ-ம். அமண்குடி. எ-ம். பரண்கால். எ-ம். கவண்கல். எ-ம். வேற்றுமையிலும் இயல்பாயிற்று. [பாண் - பாடுதற்றொழிலுடையதொருசாதி. உமண் - உப்பமைத்தற்றொழிலுடையதொருசாதி. அமண் - அருகனை வழிபடுவதொரு கூட்டம்.]

(உ.) எண்+கடிது=எட்கடிது, சாண்+கோல்=சாட்கோல் என அல்வழியிலுந்திரிந்தது. டவ்வாகலுமாம் என்ற உம்மையால், எண்கடிது, சாண்கோல் என இயல்பாதலே சிறப்பாம்.



Digitized By Roja Muthiah Research Library

பிறஎன்ற மிகையால், வேற்றுமையில் பாணக்குடி என அகரச்சாரியைபெறுதலும், அட்டேண்டுழனி என்னும் இயல்பும், மட்குடம், மண்குடம், என்னும் உறழ்வும், இருவழியினும் இன்னும் ணகரவீற்றுள் அடங்காதவையுண்டேல் அவையுங்கொள்க.

இயல்பாம் வேற்றுமைக்கு என்றது 'ணனவல்லினம்வரட்டறவும்' என எய்தியதுவிலக்கல்; டவ்வாகலுமாம் அல்வழியும் என்றது 'அல்வழிக்கனைத்துமெய்வரினுமியல்பாகும்' என எய்தியதன்மேற்சிறப்புவிதி. (அ)

உகஉ. ணஃகான் கிளைப்பெய ரியல்பு மஃகான்
அடைவு மாகும் வேற்றுமைப் பொருட்கே.

இ-ள். ணஃகான் கிளைப்பெயர் - ணகரத்தையிறுதியிலுடைய சாதிப்பெயர்,—இயல்பும் - வல்லினம் வர ஈறுதிரியாதியல்பாதலும்,—அஃகான் அடைவும் - அகரச்சாரியை பெறுதலும்,—வேற்றுமைப்பொருட்கு ஆகும் - வேற்றுமைப்பொருட்புணர்ச்சிக்கண் ஆகும். எ-று.

உ-ம். எயின்குடி - எயினக்குடி, சேரி, தோட்டம், பாடி எனவரும். [எயின் - வேட்டுவச்சாதி.]

பொருட்கே என்ற மிகையால், எயினமரபு, எயினவாழ்வு, எயினவணி என மற்றைக்கணம்வரினும் அகரச்சாரியைபெறுதலும், எயினக்கன்னி எயினப்பிள்ளை, எயினமன்னன் என அல்வழியில் அகரச்சாரியை பெறுதலுங்கொள்க.

வேற்றுமைப்பொருட்கு இயல்பு என்றது 'ணனவல்லினம்வரட்டறவும்" என எய்தியதுவிலக்கல்; அஃகானடைவு என்றது பிறிதுவிதிவகுத்தல். (கூ)

உகங. மீன்றவ் வொடுபொரூஉம் வேற்றுமை வழியே.

இ-ள். மீன் - மீனென்னுமொழியிறுதி னகரம்,—வேற்றுமைவழி - வேற்றுமைக்கண் வல்லெழுத்து வரின்,—றவ்வொடு பொரூஉம் - றகரத்தோடு உறழ்ந்துவரும். எ-று.

உ-ம். மீன்+கண்=மீற்கண், செவி, தலை, புறம் என வரும்.

றவ்வொடுபொரூஉம் வேற்றுமைவழி என்றது 'ணனவல்லினம்வரட்டறவும்' என எய்தியதொருவாற்றால் விலக்கல். (கo)

உகச. தேன்மொழி மெய்வரி னியல்பு மென்மை
மேவி னிறுதி யழிவும் வலிவரின்
ஈறுபோய் வலிமெலி மிகலுமா மிருவழி.

இ-ள். தேன்மொழி - தேனென்னுஞ்சொல்,—மெய்வரின் இயல்பும் - மூவினமெய்களும் வரின் இறுதி னகரமெய் இயல்பாதலும்,—மென்

ணமை மேவின் இறுதி அழிவும் - மெல்லினம்வரின் அம்மெய் இயல்பாதலேயன்றிக் கெடுதலும், — வலிவரின் ஈறு போய் வலி மெலி மிகலும் ஆம் - வல்லினம் வரின் அம்மெய் இயல்பாதலேயன்றிக் கெட வந்த வல்லினமாவது அதற்கினமாவது மிகுதலும் ஆகும், — இருவழி - இருவழிக்கண்ணும்.

உ-ம். (க.) தேன்கடிது, தேன்ஞான்றது, தேன்யாது. எ-ம். தேன்மொழி, தேமொழி. எ-ம். தேன்குழம்பு, தேக்குழம்பு, தேங்குழம்பு, எ-ம். அல்வழியில் வந்தன.

(உ) தேன் கடுமை, தேன் மலிவு, தேன்யாப்பு. எ-ம். தேன்மலர், எ-ம். தேமலர். எ-ம். தேன்குடம், தேக்குடம், தேங்குடம். எ-ம். வேற்றுமையில் வந்தன.

தேன் என்பது பலபொருளொருசொல்லாதலால், மணங்கமழ்சோலை என்னும்பொருளைக்கொண்டு தேன்கமழ்சோலை, தேங்கமழ்சோலை என இந்த விகாரங்களையேற்று வருவனவுங் கொள்க.

(சூ) "தேனென்கிளவி வல்லெழுத்தியையின், மேனிலையொத்தலும்வல்லெழுத்துமிகுதலு, மாமுறையிரண்டுமுரிமையுமுடைத்தே, வல்லெழுத்துமிகுவழியிறுதியில்லை. எ-ம். மெல்லெழுத்து மிகினு மானமில்லை. எ-ம். மெல்லெழுத்தியையி னிறுதியோடுறழும்." எ-ம். ஆசிரியர் தொல்காப்பியனார் கூறுதலுங் காண்க.

இருவழி மெய் வரின் இயல்பு என்றது 'ணனவல்லினம்வரட்டறவும்' என எய்தியது விலக்கலும்; 'பிறவரினியல்புமாகும்வேற்றுமைக்கல்வழிக்கனைத்துமெய்வரினுமியல்பாகும்' என எய்தியதிகந்துபடாமைக் காத்தலும், மென்மை மேவினிறுதியழிவும் வலிவரினீறுபோம் என்றது இச்சூத்திரத்தில் இயல்பு என எய்தியதன்மேற்சிறப்புவிதி; வலி மெலி மிகும் என்றது 'இயல்பினும்விதியினும்' என்பதனால் எய்தியதன்மேற் சிறப்புவிதி. (கக)

உகரு. மரமல் லெகின்மொழி யியல்பு மகரம்
மருவ வலிமெலி மிகலு மாகும்.

இ - ள். மரம் அல் எகின்மொழி - மரமல்லாத அன்னத்தையுணர்த்தும் எகினென்னுஞ்சொல், — இயல்பும் - வேற்றுமையிலும் வல்லினம் வர இறுதி இயல்பாதலும், — அகரம் மருவ வலி மெலி மிகலும் ஆகும் - இருவழியிலும் அகரச்சாரியை பொருந்த வரும் வல்லெழுத்தாவது அதற்கு இனமாவது மிகுதலும் ஆகும். எ - று.

உ-ம். (க.) எகின்கால், சிறை, தலை, புறம் என வேற்றுமையிலும் இயல்பாயிற்று.

(உ.) எகினப்புள், எகினம்புள். எ-ம். எகினக்கால், எகினங்கால், எ-ம். இருவழியிலும் அகரம் வர வலி மெலி மிகுந்தன.

Digitized By Roja Muthiah Research Library

அகரம் வருதற்கு வருமெழுத்தைச் சொல்லாமையால், நாற்கணமுங் கொள்க. எகின மாட்சி எகினவாழ்க்கை, எகின வழகு என வரும்.

எகின்மொழியியல்பு என்றது 'ணனவல்லினம்வரட்டறவும்' என எய்தியது விலக்கல்; அகரம் மருவும் என்றது அச்சூத்திரத்தால் இருவழிக்கண்ணும் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல்; வலி மெலி மிகும் என்றது 'இயல்பினும்விதியினும்' என்பதனால் எய்தியதன்மேற் சிறப்புவிதி.

உகசு. குயினூன் வேற்றுமைக் கண்ணு மியல்பே.

இ - ள். குயின் ஊன் - குயினென்னும் பெயரும் ஊனென்னும் பெயரும், — வேற்றுமைக்கண்ணும் இயல்பு - வேற்றுமையினிடத்தும் இயல்பாகும். எ - று.

உ-ம். குயின் கடுமை, ஊன்கடுமை, சிறுமை, தீமை, பெருமை எனவரும். [குயின் - மேகம்.]

வேற்றுமைக்கண்ணுமியல்பு என்றது 'ணனவல்லினம்வரட்டறவும்' என எய்தியது விலக்கல். (கங)

உகஎ. மின்பின் பன்கன் றொழிற்பெய ரனைய
கன்னவ் வேற்று மென்மையோ டுறழும்.

இ - ள். மின் பின் பன் கன் தொழிற்பெயர் அனைய - மின்முதலிய நான்கு சொற்களும் முதனிலைத்தொழிற்பெயர்போல யகரமல்லாத மெய்கள்வரின் உகரச்சாரியை பொருந்தும்,—கன் அ ஏற்று மென்மையோடு உறழும் - இவற்றுட் கன்னென்னுஞ் சொல் உகரச்சாரியையே யன்றி அகரச்சாரியையும் பெற்று வல்லினம் வந்தால் வருமெழுத்தாவது அதற்கு இனமாவது மிகப்பெறும். எ - று.

உ-ம். மின்னுக்கடிது, பின்னுக்கடிது, பன்னுக்கடிது, கன்னுக்கடிது, நன்று, வலிது. எ-ம். கடுமை, நன்மை, வன்மை. எ-ம். கன்னத்தட்டு, கன்னந்தட்டு. எ-ம். கன்னத்தூக்கு; கன்னந்தூக்கு. எ-ம். அல்வழி வேற்றுமையில் முறையே வந்தன. [பன்-ஓர்புல். கன் - சிறுதராசுத்தட்டு.]

தொழிற்பெயரனைய என்றதும் அவ்வேற்கும் என்றதும் 'ணனவல்லினம்வரட்டறவும்' என்னுஞ் சூத்திரத்தால் எய்தியது விலக்கிப் பிறிதுவிதிவகுத்தல்; மென்மையோடுறழும் என்றது, 'இயல்பினும்விதியினும்' என்னுஞ்சூத்திரத்தால் எய்தியதன்மேற் சிறப்புவிதி. (கச)

உகஅ. தன்னென் னென்பவற் றீற்றுனவ் வன்மையோ
டுறழு நின்னீ றியல்பா முறவே.

இ - ள். தன் என் என்பவற்று ஈற்று ன - தன் என் என்னும் விகாரமொழிகளுடைய இறுதியிலுள்ள னகரமெய்,—வன்மையோடு உறழும் - வல்லினம்வரிற் பொதுவிதியால் றகரமாகத் திரிதலும் அவ்விதியேலாது இய

Digitized By Roja Muthiah Research Library

ல்பாதலுமாம், — நின் ஈறு இயல்பு ஆம் - நின்னென்னும் விகாரமொழியி னது இறுதியிலுள்ள னகரமெய் வல்லினம்வரிற் றிரியாது இடல்பேயாகும்.

உ-ம். தன்பகை, தற்பகை, என்பகை, எற்டகை. எ-ம். நின்டகை. எ-ம். வரும்.

உறவே என்றமிகையால், மின்பின்முதலியவை, மின்கடிது, மின்கடுமை என இருவழியுஞ் சாரியைபெறுதலுந் திரிதலுமின்றி வருதலும், மான் குளம்பு, அழன்கை, கான்கோழி, வான்சிறப்பு, அலவன்கால், கலுழன் சிறை என வேற்றுமையிலே சிறப்புவிதி சொல்லப்பெறுதவைகள் இய ல்பாதலும், வரிற்கொள்ளும் எனச் செயினென்னும் வாய்பாட்டுவினை யெச்சம் பொதுச்சூத்திரத்தால் இயல்பாகாது திரிதலும், இன்னும் னகரமெய்யீற்றுள் அடங்காதவை இருந்தால் அவையுங்கொள்க. [அழ ன் - பிணம்.]

னவ்வன்மையோடுறழும் என்றது 'ணனவல்லினம்வரட்டறவும்' என எய்தியதொருவாற்றான்விலக்கல், நின்னீறியல்பாம் என்றது எய்தியதுவிலக் கல். (கரு)

பரீக்ஷை வினாக்கள்: — 438. ணனமுன்வேற்றுமையில் வன்கணம் வரின் எவ்வாறும்? 439. ண ன முன் வேற்றுமையில் மென்கணமும் இடைக் கணமும் வரின் எவ்வாறும்? 440. ண ன முன் அல்வழியில் முக்கணமெ ய்யும் வரின் எவ்வாறும்? 441. செயின் என்னும் வாய்பாட்டு வினையெச்ச த்திறுதினகரம் வன்கணம் வரின் எவ்வாறும்? 442. இதற்கு விதி எதனாற் கொள்ளப்படும்? 443. தனிக்குறிலைச் சாராது நெடின்முதலியவற்றைச் சார்ந்துநின்ற ணகர னகரம் எங்கும் இயல்பாகவே நிற்குமோ? 444. ண கரம் எந்தமொழியினும் வேற்றுமையிற் றிரிந்தேவருமோ? 445. ணகரம் எந்தமொழியினும் அல்வழியில் வல்லினம் வரின் இயல்பே பெறுமோ? 446. வேற்றுமையிலும் இயல்பேபெறும் ணகரவீற்றுச்சொல் இன்னும் உ ண்டோ? 447. ணகரம் வன்கணம்வரின் வேற்றுமையில் உறழ்ந்துவருதல் எங்குமில்லையோ? 448. எந்தமொழியினும் னகரம் வேற்றுமையிற் றிரி ந்தேவருமோ? 449. எயினென்னுஞ்சாதிப்பெயர் வேற்றுமையில் வேறு விதிபெறுமோ? 450. இப்பெயர் அல்வழியில் அகரச்சாரியைபெறுதோ? 451. மீனென்னு மொழியிறுதி னகரம் வேற்றுமையில் வன்கணம் வரின் இயல்பேபெறுமோ? 452. தேனென்பதன்முன் முக்கணமும் வரிற் பொது விதியே பெறுமோ? 453. அன்னத்தை யுணர்த்தும் எகினென்னும் மொ ழியிறுதி னகரம் வேற்றுமையிற் றிரிந்தேவருமோ? 454. இவ்வெகினெ ன்பது வேறுவிதியும் பெறுமோ? 455. குயின் ஊன் என்னும் பெயர்கள் வேற்றுமையிற் றிரிந்தேவருமோ? 456. மின் பின் பன் கன் என்னு நா ன்கு பெயரும் இருவழியும் எவ்வாறும்? 457. கன்னென்னும்பெயர் வே று சாரியையும் பெறுமோ? 458. தன் என் எனபவற்றின் னகரம் வலிவ ரின் எவ்வாறும்? 459. நின் இங்ஙனம் வராதோ? 460. வேற்றுமையிலே சிறப்புவிதி சொல்லப்பெறுமிடத்தும் இயல்பாகவே வரும் னகரவீற்றுப்

Digitized By Roja Muthiah Research Library

பெயர்கள் இன்னும்முளவோ? 461. மின் முதலிடநான்கும் மற்றும் விதி பெறுவோ?

## மகரவீறு.

௨௧௯. மவ்வீ றொற்றழிந் துயிரீ றொப்பவும்
வன்மைக் கினமாத் திரிபவு மாகும்.

இ - ள். மவ்வீறு - மகரவீற்றுச்சொற்கள்,—ஒற்று அழிந்து உயிரீறு ஒப்பவும் - நாற்கணமும் வர இறுதியிலுள்ள மகரமெய்கெட விதியுயிரீறாய் நின்று இயல்புயிரீறுபோலப் புணர்வனவும்,—வன்மைக்கு இனம் ஆத்திரிபவும் ஆகும் - வல்லினம்வரிற் கெடாது அவற்றிற்கு இனமாகத் திரிவனவும் ஆகும். எ - று.

உயிரீறொத்தலாவது, உயிர் வரின் அவை உடம்படுமெய் பெறவும், வல்லினம் வரின் அவை மிகவும், மெல்லினமும் இடையினமும் வரின் அவை இயல்பாகவும் புணர்தல்.

மகரமெய் உயிரும் இடையினமும் வல்லினமும் வரக் கெடுவது வேற்றுமையிலும் அல்வழியிலே பண்புத்தொகை உவமைத்தொகைகளிலுமாம் எனவும், மெல்லினம் வரக் கெடுவது இருவழியிலுமாம் எனவுங் கொள்க.

மகரமெய் வல்லினம் வரக் கெடாது இனமெல்லெழுத்தாகத் திரிவது பண்புத்தொகை உவமைத்தொகை யிரண்டுமொழிந்தொழிந்த அல்வழிப் புணர்ச்சியிலாம் எனவும், வினையாலணையும் பெயரிறுதி மகரமும், தனிக்குறிலைச்சார்ந்த மகரமும், வேற்றுமையிலும், வல்லினம்வரிற்கெடாது இனவெழுத்தாகத்திரியும் எனவுங்கொள்க.

உ-ம். (க.) மரம்+அடி=மரவடி, மரம்+வேர்=மரவேர், மரம்+கோடு=மரக்கோடு, என வேற்றுமையிலும்; வட்டம்+ஆழி=வட்டவாழி, வட்டம்+வடிவம்=வட்டவடிவம், வட்டம்+கல்=வட்டக்கல் எனப் பண்புத்தொகையிலும்; பவளம்+இதழ்=பவளவிதழ், பவளம்+வாய்=பவளவாய், கமலம்+கண்=கமலக்கண் என உவமைத்தொகையிலும் உயிரும் இடையினமும் வல்லினமும் வர ஈறுகெட்டு உயிரீறுபோன் முடிந்தன. மரம்+நார்=மரநார். எ-ம். மரம்+நீண்டது=மரநீண்டது, வட்டம்+நேமி=வட்டநேமி. எ-ம். மெல்லினம் வர ஈறுகெட்டு உயிரீறுபோன் முடிந்தன.

(௨.) நாம்+கடியம்=நாங்கடியம், நிலம்+தீ=நிலந்தீ, உண்ணும்+சோறு=உண்ணுஞ்சோறு, உண்டனம்+சிறியேம்=உண்டனஞ்சிறியேம், பூதனும்+தேவனும்=பூதனுந்தேவனும் என அல்வழிக்கண் எழுவாய்த்தொடர் முதலியவற்றில் வல்லினம்வர

Digitized By Roja Muthiah Research Library

ஈறு திரிந்து முடிந்தது. சிறியேம்+கை=சிறியேங்கை. எ-ம். நம்+கை=நங்கை எனவும் வினையாலணையும் பெயரிறுதி மகரமுந் தனிக்குறிலைச் சார்ந்த மகரமும் வேற்றுமையிலும் வல்லினம் வரத் திரிந்துமுடிந்தன.

இனமாத்திரியும் என்றமையின், அருத்தாபத்தியால், நாம்பெரியம், சிறியேம் பண்பு எனப் பரம் வரும்வழித் திரியாதென்பது பெற்றும். (கசு)

உஉ0. வேற்றுமை மப்போய் வலிமெலி யுறழ்வும்
அல்வழி யுயிரிடை வரினியல் பும்முள

இ - ள். வேற்றுமை மப்போய் வலிமெலி உறழ்வும,—வேற்றுமைக்கண் மகரவிறுதி கெட வல்லினமாவது அவற்றிற்கு இனமாவது மிகுதலும்,—அல்வழி உயிர் இடை வரின் இயல்பும் உள - அல்வழிக்கண் உயிரும் இடையினமும் வரிற் கெடாதியல்பாதலும் உளவாம். எ - று.

மகரமெய் உயிரும் இடையினமும் வர இயல்பாவது பண்புத்தொகை உவமைத்தொகை யிரண்டுமொழித் தொழிந்த அல்வழிப்புணர்ச்சியிலெனக்கொள்க.

உ-ம். (க.) குளம்+கரை=குளக்கரை, குளங்கரை என வேற்றுமையில் ஈறுகெட்டு உறழ்ந்தது.

(உ.) மரமடைந்தது, மரம்வலிது. எ-ம். வலமிடம், நிலம்வானம். எ-ம். உண்ணுமுணவு, ஆளும்வளவன். எ-ம். உண்டனமடியேம், உண்டனம்யாம். எ-ம். அரசனுமமைச்சனும், புலியும் யானையும் எ-ம். எழுவாய்த்தொடர்முதலிய அல்வழியில் உயிரும் இடையினமும் வர ஈறுகெடாதியல்பாகமுடிந்தது.

வினையாலணையும் பெயரிறுதி மகரமுந் தனிக்குறிலைச்சார்ந்த மகரமும், சிறியேமன்பு, சிறியேம்வாழ்வு. எ-ம். நம்மன்பு, நம்வாழ்வு. எ-ம். வேற்றுமையிலும் உயிரும் இடையினமும் வர இயல்பாமெனக் கொள்க.

மப்போம் என்றது மேலைச்சூத்திரத்தால் எய்தியதிகந்துபடாமைக் காத்தல்; வலி மெலி யுறழும் என்றது 'இயல்பினும்விதியினும்' என்னுஞ் சூத்திரத்தால் எய்தியதன்மேற்சிறப்புவிதி; அல்வழியுயிரிடைவரினியல்பாம் என்றது மேலைச்சூத்திரத்தால் எய்தியதுவிலக்கல். (கஎ)

உஉக. நுந்தம்,
எம் நம் மீறு மவ்வரு ஞநவே.

இ - ள். நும் தம் எம் நம் ஈறு ஆம் ம - நும்முதலிய நான்குவிகாரமொழிகளுக்கும் இறுதியாகிய மகரமெய்,—வரு ஞ ந - வருஞகர நகரங்களாகத்திரியும், எ - று.

Digitized By Roja Muthiah Research Library

உ-ம். நுஞ்ஞாண், நுந்நூல், தஞ்ஞாண், தந்நூல், எஞ்ஞாண், எந்நூல், நஞ்ஞாண், நந்நூல் எனவரும்.

ஞ ந வரின் அவையாகத்திரியும் எனவே; ஒழிந்த மகரம் வரின், நும்மணி என இயல்பாமென்பது பெற்றாம்.

மவ்வரு ஞ ந என்றது 'மவ்வீறொற்றழிந்து' என எய்தியது விலக்கிப் பிறிதுவிதிவகுத்தல். (௧௮)

௨௨௨. அகமுனர்ச் செவிகை வரினிடை யனகெடும்.

இ - ள். அகமுணர்ச் செவிகை வரின் - அகமென்னும் இடப்பெயர்முன் செவி, கை யென்னுஞ் சினைப்பெயர்கள் வந்தால்,—இடையன கெடும் - நிலைமொழியிறுதி மகரம் வன்மைக்கு இனமாகத் திரிதலேயன்றி அதனடு நின்ற ககரமெய்யும் அதன்மேலேறிய அகரவுயிருங் கெடும். எ - று.

உ-ம். அகம்+செவி=அஞ்செவி, அகம்+கை=அங்கை என வருவனவுங் கொள்க. கெட்டே வரும் என்னுமையால், அகஞ்செவி, அகங்கை என வருவனவுங் கொள்க.

செவி அகம், கை அகம் என்னும் இடவுறுப்புத்தற்கிழமைப்பெயரொடு முடிந்த ஆறாம் வேற்றுமைத் தொகைச்சொல்லை முன்பின்னாக மாற்றிவழங்கலால் இவ்விரண்டும் இலக்கணப்போலியாய்த் தழாத்தொடராகிய அல்வழிச் சந்தியில் ஒன்றாமென்க.

இடையன கெடும் என்றது 'வன்மைக்கினமாத்திரியும்' என எய்திய தன்மேற் சிறப்புவிதி. (௧௯)

௨௨௩. ஈமுங்,
கம்மு முருமுந் தொழிற்பெயர் மானும்
முதலன வேற்றுமைக் கவ்வும் பெறுமே.

இ-ள். ஈமும் கம்மும் உருமும் - ஈம் கம் உரும் என்னு மூன்று சொல்லும்,—தொழிற்பெயர் மானும்,—இருவழியும் முதனிலைத் தொழிற்பெயர் போல யகரமல்லாத மெய்கள் வரின் உகரச்சாரியை பெற்றுமுடியும்,—முதலன வேற்றுமைக்கு அவ்வும் பெறும் - இவற்றுள்ளே முதற்கணின்ற ஈமுங் கம்மும் வேற்றுமைக்கண் உகரச்சாரியையன்றி அகரச்சாரியையும் பெறும். எ - று.

உ-ம். ஈமுக்கடிது, கம்முக்கடிது, உருமுக்கடிது, நீண்டது, வலிது. எ-ம். கடுமை, நீட்சி, வன்மை. எ-ம். ஈமக்குடம், கம்மக்குடம். எ-ம். வரும். [ஈம் - சுடுகாடு. கம் - கம்மியரது தொழில். உரும் - இடி.]

கம்மக்குடம் - கம்மியரது தொழிலாற்செய்தகுடம்.

இது 'மவ்வீறொற்றழிந்து' என்னுஞ் சூத்திரத்தால் எய்தியது விலக்கிப் பிறிதுவிதிவகுத்தல். (௨௦)

Digitized By Roja Muthiah Research Library

பரீக்ஷை வினாக்கள்:—462. மகரவீற்றின்முன் நாற்கணமும் வரின் எவ்வாறும்? 463. உயிரீறொத்தலென்பதென்னை? 464. மகரமெய் உயிரும் இடையினமும் வல்லினமும் வரக் கெடுவது எவ்விடத்து? 465 வல்லினம்வரக்கெடாது இனமெல்லெழுத்தாகத்திரிவது எவ்விடத்து? 466. வேற்றுமையில் இனமெல்லெழுத்தாகத் திரிந்துவருதல் எங்குமில்லையோ? 467. வேற்றுமையில் மகரங்கெட்டவழி வரும் வல்லெழுத்து மிகுதலன்றி வேறுவிதி பெறாதோ? 468. மகரவீறு உயிரும் இடையினமும் வர இயல்பாவது எவ்விடத்து? 469. வேற்றுமையில் உயிரும் இடையினமும் வர மகரங்கெடா தியல்பாதல் எங்குமில்லையோ? 470. மெல்லினம் வர மகரங்கெடாதமுடிதல் எங்குமில்லையோ? 471 அகம் என்பதன்முன் செவி, கை என்பன வரின் வேறுவிதியும் பெறுமோ? 472. மகரவீறு கெடுதல் திரிதல் இயல்பாதலன்றி வேறுவிதிபெறுதல் எங்குமில்லையோ? 473. ஈம் கம் இவ்விரண்டும் உகரமன்றி வேறுசாரியையும் பெறுமோ?

---

## யரழ வீறு.

உ௨௪. யரழ முன்னர்க் கசதப வல்வழி
இயல்பு மிகலு மாகும் வேற்றுமை
மிகலு மினத்தோ டுறழ்தலும் விதிமேல்.

இ - ள். யரழ முன்னர்க் கசதப - யகர ரகர ழகர மெய்களின் முன் ககர சகர தகர பகரங்கள் வரின்,—அல்வழி இயல்பும் மிகலும் - அல்வழியில் இயல்பாதலும் மிகுதலும்,—வேற்றுமை மிகலும் இனத்தோடு உறழ்தலும்,—வேற்றுமையில் மிகுதலும் வல்லினமாவது மெல்லினமாவது மிகுதலும்,—விதி (ஆகும்) - விதியாகும். எ - று.

அல்வழியியல்பு மிகுதியிரண்டனுள் இயல்பு எழுவாய்த்தொடர் உம்மைத்தொகை வினைத்தொகைகளிலும், மிகுதி பண்புத்தொகை உவமைத்தொகைகளிலுங் கொள்ளப்படும். யகரவீற்று வினையெச்சத்தின்முன் வரும் வல்லினம் மிகும்; ரகரவீற்று வினையெச்சத்தின்முன் வரும் வல்லினம் இயல்பாம்.

உ-ம். (க.) வேய் குறிது, வேர்சிறிது, யாழ்பெரிது. எ-ம். பேய்பூதம், நீர்கனல், இகழ்புகழ். எ-ம். செய்கடன், தேர்பொருள், வீழ்புனல். எ-ம். உண்ணியர் போவான். எ-ம். எழுவாய்த்தொடர்முதலியவற்றில் இயல்பாயின. மெய்க்கீர்த்தி, கார்ப்பருவம், பூழ்ப்பறவை. எ-ம். வேய்த்தோள், கார்க்குழல், காழ்ப்படிவம். எ-ம். போய்க்கொண்டான். எ-ம். பண்புத்தொகை முதலியவற்றில் மிகுந்தன.

(உ.) நாய்க்கால், தேர்த்தலை, பூழ்ச்செவி என வேற்றுமையில் மிகுந்தன. வேய்க்குழல், வேய்ங்குழல்; ஆர்க்கோடு, ஆர்ங்கோடு என வேற்றுமையில் இனத்தோடுறழ்ந்தன.



Digitized By Roja Muthiah Research Library

மேல் என்றமிகையால், வாய்புகுவதனினும் என வேற்றுமையில் இயல்பாதலும், பாழ்க்கிணறு, பாழ்ங்கிணறு எனப் பண்புத்தொகையில் உறழ்தலும், காய்+யாது=காயாது, நோய்+யானை=நோயானை எனத் தனிக்குறிலைச்சாராத யகரத்தின்முன் யகரம் வரின் இருவழியும் நிலைமொழியிறுதி யகரங்கெடுதலும், இன்னும் அடங்காதவைகளிருந்தால் அவைகளுங் கொள்க. (உக)

உஉரு. தமிழவ் வுறவும் பெறும்வேற் றுமைக்கே
தாழுங் கோல்வந் துறுமே லற்றே.

இ-ள். தமிழ் வேற்றுமைக்கு அ உறவும் பெறும் - தமிழென்னுஞ் சொல் நாற்கணமும் வரின் வேற்றுமைக்கண் அகரச்சாரியைபொருந்தவும் பெறும்,—தாழும் கோல் வந்து உறுமேல் அற்று - தாழென்னுஞ் சொல்லுங்கோலென்னுஞ் சொல்வந்து பொருந்துமாயின் அவ்வகரச்சாரியையைப் பெறும். எ-று.

உ-ம். தமிழப்பிள்ளை, தமிழநாகன், தமிழவளவன், தமிழவரசன். எ-ம். தாழக்கோல் எ-ம். வரும். தமிழையுடையபிள்ளை, தாழைத்திறக்குங்கோல் என விரியும். [தாழக்கோல் - திறவுகோல்.]

இது எய்தாததெய்துவித்தல். (உஉ)

உஉசு. கீழின்முன் வன்மை விகற்பமு மாகும்.

இ-ள். கீழின்முன் வன்மை - கீழென்னுஞ் சொல்லின்முன்வரும் வல்லினம்,—விகற்பமும் ஆகும் - ஒருகால் இயல்பாகியும் ஒருகால் மிக்கும் வரும் விகற்பத்தையும் பொருந்தும். எ-று.

உ-ம். கீழ்குலம், கீழ்க்குலம்; கீழ்சாதி, கீழ்ச்சாதி எனவரும்.

விகற்பமும் என்னும் இழிவுசிறப்பும்மையால், இவற்றுள் இயல்பே சிறப்புடைத்தென்றறிக.

வன்மை விகற்பமுமாகும் என்றது 'டரழமுன்னர்' என்னுஞ் சூத்திரத்தால் எய்தியது பெரும்பாலும் விலக்கல். (உசு)

பரீக்ஷை வினாக்கள்:—474. யரழ வீற்றின்முன் வல்லினம் வரின் எவ்வாறும்? 475. அல்வழியில் யரழ வொற்றின்முன் வரும் வல்லினம் எவ்விடத்தியல்பாம் எவ்விடத்துமிகும்? 476. ழகரவொற்றின்முன் வரும் வல்லினம் அல்வழியில் இனத்தோடுறழ்தல் எங்குமில்லையோ? 477. தமிழென்னுஞ் சொன்முன் வேற்றுமையில் நாற்கணமும் வரின் வேறுவிதி பெறுதோ? 478. தாழ் என்பதன்முன் கோல் வரின் வேறுவிதி பெறுதோ? 479. கீழ் என்பதன்முன் வேற்றுமையில் வன்கணம் வரின் எவ்வாறும்?

Digitized By Roja Muthiah Research Library

## லகர ளகர வீறு.

௨௨௭. லளவேற் றுமையிற் றடவு மல்வழி
அவற்றோ டுறழ்வும் வலிவரி னாமெலி
மேவி னணவு மிடைவரி னியல்பும்
ஆகு மிருவழி யானு மென்ப.

இ - ள். ல ள - லகர ளகரமாகிய இரண்டு மெய்யீறுகளும்,—வலிவரின் - வல்லினம் வந்தால்,—வேற்றுமையில் றடவும் - வேற்றுமைக்கண் முறையே றகர டகாரமெய்களும்,—அல்வழி அவற்றோடு உறழ்வும் ஆம் - அல்வழிக்கண் றகர டகாரங்களுடனே உறழ்வனவும் ஆகும் - இருவழியானும் - இருவழிக்கண்ணும்,—மெலி மேவின் னணவும் - மெல்லினம்வந்தால் முறையே னகார ணகாரமெய்களும்,—இடைவரின் இயல்பும் ஆகும் - இடையினம்வந்தால் இயல்பும் ஆகும்,—என்ப - என்றுசொல்லுவர் புலவர். எ - று.

உ-ம். (௧.) கல்+குறை=கற்குறை, முள்+குறை=முட்குறை என வல்லினம் வர வேற்றுமையில் றகர டகரங்களாகத் திரிந்தன.

(௨.) கல்+குறிது=கல்குறிது, கற்குறிது; முள்+குறிது=முள்குறிது, முட்குறிது என வல்லினம்வர அல்வழியில் ஒருகால் இயல்பாகியும் ஒருகாற்றிரிந்தும் உறழ்ந்தன.

(௩.) கல்+மாண்டது=கன்மாண்டது, முள்+மாண்டது=முண்மாண்டது. எ-ம். கல்+மாட்சி=கன்மாட்சி, முள்+மாட்சி=முண்மாட்சி. எ-ம். மெல்லினம் வர இருவழியும் னகர ணகரமாகத் திரியும்.

(௪.) கல்+யாது=கல்யாது, முள்+யாது=முள்யாது. எ-ம். கல்+யாப்பு=கல்யாப்பு, முள்+யாப்பு=முள்யாப்பு எ-ம். இடையினம் வர இருவழியும் இயல்பாயின. அல்வழியவற்றோடுறழ்வும் என்றாரேனும், இவற்றோடு மயங்காத தகரம் வரின், ஏற்புழிக் கோடலால், கற்றீது, முட்டீது எனத் திரிபொன்றுமேகொள்க.

௨௨௮. குறில்வழி லளத்தவ் வணையி னாய்தம்
ஆகவும் பெறூஉ மல்வழி யானே.

இ - ள். குறில் வழி ல ள - தனிக்குறிலின் பின்னின்ற லகர ளகர மெய்கள்,—அல்வழியான் த அணையின் - அல்வழிக்கண்ணே தகரம் வருமாயின்,—ஆய்தம் ஆகவும் பெறூஉம் - றகர டகரங்களாகத் திரிதலே யன்றி ஆய்தமாகத் திரிதலையும் பொருந்தும். எ - று.

உ-ம். கல்+தீது=கஃறீது, முள்+தீது=முஃடீது என்வரும்.

இது மேலைச்சூத்திரத்தால் எய்தியதன்மேற் சிறப்புவிதி. (உ௫)

Digitized By Roja Muthiah Research Library

உஉகூ. குறில்செறி யாலள வல்வழி வந்த
தகரந் திரிந்தபிற் கேடுமீ ரிடத்தும்
வருநத் திரிந்தபின் மாய்வும் வலிவரின்
இயல்புந் திரிபு மாவன வுள்பிற.

இ-ள். குறில் செறியா லள - தனிக்குறிலொன்றனையுஞ் சாராத லகார ளகாரமெய்கள்,—அல்வழிவந்த தகரம் திரிந்தபின் கேடும் - அல்வழிக்கண் வருமொழிக்கு முதலாய்வந்த தகரந் திரியுமிடத்துக் கெடுதலும்,—ஈரிடத்தும் வருநத் திரிந்தபின் மாய்வும்,—இருவழிக்கண்ணும் வருமொழிக்கு முதலாய் வந்த நகரந் திரியுமிடத்துக் கெடுதலும்,—வலி வரின் இயல்பும் திரிபும் ஆவன உள - வல்லெழுத்து முதன்மொழிவந்தால் அல்வழிக்கண் உறழாது இயல்பாதலுந் திரிதலும் வேற்றுமைக்கண்ணே திரியாதியல்பாதலும் பொருந்துவனவுள. எ-று.

லளக்கள் அல்வழியில் வல்லினம் வர உறழாதியல்பாவது எழுவாய்த்தொடர் உம்மைத்தொகை விளித்தொடர் வினைமுற்றுத்தொடர் வினைத்தொகைகளிலும், திரிவது பண்புத்தொகை உவமைத்தொகை வினையெச்சங்களினுமெனக்கொள்க.

உ-ம். (க.) வேல்+தீது=வேறீது, தோன்றல்+தீயன்=தோன்றறீயன், வாள்+தீது=வாடீது, வேள்+தீயன்=வேடீயன் என அல்வழியிலே தகரந்திரியுமிடத்துக் கெட்டன.

(உ.) தோன்றல்+நல்லன்=தோன்றனல்லன், வேள்+நல்லன்=வேணல்லன். எ-ம். தோன்றல்+நன்மை=தோன்றனன்மை, வேள்+நன்மை=வேணன்மை. எ-ம். இருவழியிலும் நகரந் திரியுமிடத்துக்கெட்டன.

(ங.) கால்கடிது, மரங்கள்கடிய. எ-ம். கால் கை, பொருள் புகழ். எ-ம். தோன்றல்கூறாய், மக்காள்சொல்லீர். எ-ம். உண்பல்சிறியேன், கேள்சாத்தா. எ-ம். கால் சுடர், அருள் குரு. எ-ம். அல்வழியிலே எழுவாய்த்தொடர் முதலியவற்றில் உறழாதியல்பாயின. வேற்படைக்குமரன், வாட்படைக்கையன். எ-ம். வேற்கண் வாட்கண். எ-ம். வந்தாற்கொள்ளும், வந்தக்காற்கொள்ளும். எ-ம். அல்வழியிலே பண்புத்தொகை முதலியவற்றில் உறழாது திரிந்தன.

(ச.) கால்குதித்தோடிக்கடல்புகமண்டி, வாள்போழ்ந்தட்டநீள்கழன் றவர் என வேற்றுமையிலே வலி வரத் திரியாதியல்பாயின.

பிற என்றமிகையால், தோன்றறுள், வேடோள் என, நிலைமொழி உயர்திணைப்பெயராயின், வேற்றுமையினுந் தகரந்திரியுமிடத்துக் கெடுதலும், காற்றூணை, தாட்டூணை. எ-ம். பிறங்கற்றோள், வாட்டாரை. எ-ம். அல்வழியிலும் பண்புத்தொகை உவமைத்

Digitized By Roja Muthiah Research Library

தொகைகளிற் கெடாமையுங்கொள்க. இன்னும் பிறஎன்ற மி கையால், தனிக்குறிலைச்சார்ந்த லளக்களும்; விற்படை. எ-ம் விற்புருவம். எ-ம். பண்புத்தொகை உவமைத்தொகைகளில் உறழாது திரிதலும், கொல்களிறு, கொள்பொருள். எ-ம். நில் கொற்ற, கொள்பூதா. எ-ம். வினைத்தொகை வினைமுற்றுத் தொடர்களில் இயல்பாதலுங்கொள்க.

இனிப் பிற என்றமிகையாலே, தோன்றறீவை, வேட்கை என வேற்றுமையிலும் தகரந்திரியுமிடத்துக் கெடுதலும்; கார்த்து ணை, தாட்டுணை எனக் கொடாமையும்; செல்களிறு, கொள் பொருள் என வினைத்தொகையில் இயல்பாதலும் இன்னும் இ வ்விரண்டீற்றுள் அமையாதனபிறவுங்கொள்க.

இங்கே உயர்திணையிலேகாட்டிய விகாரங்கள் மயக்கவிதியில்லா ததினாலே வந்தனவாதலால் சிலவிகாரமா முயர்திணை என்பதி ல் அடங்காமை காண்க.

இது 'லளவேற்றுமையிற்றடவும்' என்னுஞ்சூத்திரத்தால் எய்தியதுவில க்கிப் பிறிதுவிதிவகுத்தல். (உகூ)

உகூ0. லளவிறு தொழிற்பெய ரீரிடத்து முவ்வுறு
வலிவரி னல்வழி யியல்புமா வனவுள.

இ-ள். லள இறு தொழிற்பெயர் ஈரிடத்தும் உவ்வுறு - லகாரத்தை யிறுதியாகவுடைய விகுதிபெற்ற தொழிற்பெயரும் ளகாரத்தை யிறுதியாக வுடைய முதனிலைதிரிந்த தொழிற்பெயரும் இருவழியிலும் யகரமல்லாத மெய்கள்வந்தால் உகரம்பெறுவாம்,—வலிவரின் அல்வழி இயல்பும் ஆவன உள - வல்லினம்வந்தால் அல்வழிக்கண் உறழா தியல்பாவனவுஞ் சிலவுள.

உ-ம். (க.) ஆடல்சிறந்தது, ஆடற்சிறந்தது; ஆடனன்று, ஆடல்வலிது. எ-ம். ஆடற்சிறப்பு, ஆடனன்மை, ஆடல்வன்மை. எ-ம். கோள்கடி து, கோட்கடிது; கோணன்று, கோள்வலிது. எ-ம். கோட்கடு மை, கோணன்மை, கோள்வன்மை. எ-ம். இருவழியும் உகர ம்பெறுது பொதுவிதியான்முடிந்தன. (கோள் - கொள்ளுதல்)

(உ.) நடத்தல்கடிது, நடப்பித்தல்கடிது எனச் சில உறழாது அல்வழி யில் இயல்பாயின.

இயல்பும் என்ற உம்மையால், பின்னல்கடிது, பின்னற்கடிது; உ ன்னல்கடிது, உன்னற்கடிது எனப் பொதுவிதியால் உறழ்த லே பெரும்பாலனவென்க.

ஈரிடத்தும் உவ்வுறு என்றது ஐயமறுத்தல்; வலிவரி னல்வழியியல் புமாவனவுள என்றது ஒருவாறு 'அல்வழியவற்றோடுறழ்வும்' என எய்தியது விலக்கல். (உஎ

Digitized By Roja Muthiah Research Library

உகூக. வல்லே தொழிற்பெய ரற்றிரு வழியும்
பலகைநாய் வரினும் வேற்றுமைக் கவ்வுமாம்.

இ - ள். வல் இருவழியும் தொழிற்பெயர் அற்று - வல்லென்னுஞ் சூதாடுகருவிப்பெயர் யகரமல்லாதமெய்கள் வரின் முதனிலைத்தொழிற்பெயர் போல இருவழியும் உகரச்சாரியைபெறும்,— பலகை நாய் வரினும் வேற்றுமைக்கு அவ்வுமாம் - பலகை நாயென்னும் இருபெயர்வரினும் பிறபெயர்கள் வரினும் வேற்றுமைக்கண் உகரச்சாரியையேயன்றி அகரச்சாரியையும் பெறும். எ - று.

உ-ம். (க) வல்லுக்கடிது, நன்று, வலிது. எ-ம். வல்லுக்கடுமை, நன்மை வன்மை. எ-ம். இருவழியுந் தொழிற்பெயர்போல உகரச்சாரியைபெற்றது. [வல் - சூதாடுகருவி.]

(உ.) வல்லப்பலகை, நாய், புலி, குதிரை. எ-ம். வல்லுப்பலகை, நாய், புலி, குதிரை. எ-ம். வேற்றுமையில் அகரச்சாரியையும் உகரச்சாரியையும் பெற்றது. வல்லப்பலகை - வல்லினதறைவரைந்த பலகை. வல்லநாய் - வல்லினுணாய் எனவிரியும். வல் என்பது 'வன்மூலயணங்கிஞேரும்' என்பதில் உகரச்சாரியைபெருது லகரந்திரிந்தருகிவந்ததுங் காண்க.

இது 'ளவேற்றுமையிற்றடவும்' என்னுஞ் சூத்திரத்தால் எய்தியது விலக்கிப் பிறிதுவிதிவகுத்தல். (உஅ)

உகூஉ. நெல்லுஞ் செல்லுங் கொல்லுஞ் சொல்லும்
அல்வழி யானும் றகர மாகும்.

இ - ள். நெல்லும் செல்லும் கொல்லும் சொல்லும் - நென்முதலிய நான்கு சொற்களினீற்று லகரமெய்,—அல்வழியானும் றகரம் ஆகும் - பொதுவிதியால் உறழாது அல்வழிக்கண்ணும் வேற்றுமைபோல றகரமெய்யாகத்திரியும். எ - று.

உ-ம். நெற்கடிது, செற்கடிது, கொற்கடிது, சொற்கடிது, சிறிது, தீது, பெரிது எனவரும். [செல் - மேகம். கொல் - கொல்லன்.] கொல் என்பது உயர்திணைப்பொருடந்துநின்றதோர் அஃறிணைச்சொல்லாதலின் கடிது என அஃறிணைமுடிபாயிற்று.

இதுவும் 'ளவேற்றுமையிற்றடவும்' என்னுஞ் சூத்திரத்தால் எய்தியதுவிலக்கிப் பிறிதுவிதிவகுத்தல். (உகூ)

உகூங. இல்லெ னின்மைச் சொற்கை யடைய
வன்மை விகற்பமு மாகா ரத்தொடு
வன்மை யாகலு மியல்பு மாகும்.

இ - ள். இன்மை இல் என் சொற்கு - இன்மைப்பண்பையுணர்த்திநிற்கும் இல் என்னும் சொல்லுக்கு,— ஐ அடைய வன்மை விகற்பமும் - ஐ

Digitized By Roja Muthiah Research Library

காரச்சாரியை பொருந்த அவ்விடத்து வரும் வல்லினம் விகற்பித்தலும், — ஆகாரத்தோடு வன்மை ஆகலும் - ஆகாரச்சாரியை பொருந்த அவ்விடத்து வரும் வல்லினம் மிகலும், — இயல்பும் ஆகும் - இவ்விருவிதியும் பெறுதியல்பாதலும் பொருந்தும். எ - று.

சாரியை பெறுதற்கு வருமெழுத்தைச் சொல்லாமையால், நாற்கணமுங்கொள்க.

உ-ம். இல்லைப்பொருள், இல்லைபொருள், இல்லாப்பொருள், இல்பொருள்' ஞானம், வன்மை, அணி என வரும்.

இல் என்பது பெறும் ஐகாரமும், ஆகாரமும் சாரியைகளேயாம்; விகுதிகளல்லவென்றறிக. விகுதியடைவதைப்பற்றிப் பதவியலிலன்றி இங்கே கூறவேண்டியதில்லை. இந்த ஆகாரத்தைச் சாரியை என்று சொல்லாமல் எதிர்மறைவிகுதி என்று கொள்ளின்; இல் என்பதே எதிர்மறைப்பொருளையுடையதாயிருக்க அதன்மேல் எதிர்மறைவிகுதி வந்து எதிர்மறுக்குமாயின் எதிர்மறையின் எதிர்மறை சொல்லானவலன் என்பது போல உடன்பாட்டுப்பொருளேயாதலாலும், உடன்பாட்டுப்பொருளை இல்லா என்பது தராமையாலும், இடல்பும் ஆகும் என்றதினால், இல் என்பதும் இல்லா என்பதும் பொருளினால் ஒன்றையொன்று மறுத்தெதிர்க்காமல் இரண்டும் ஒத்த இன்மைப்பொருளையே உடையனவாயிருத்தலாலும், எதிர்மறைவிகுதியென்னும் அக்கொள்கை சிறிதும் பொருந்தாதென்பதறிக.

(சூ) "இல்லென்கிளவியின்மைசெப்பின், வல்லெழுத்துமிகுதலுமையிடை வருதலு, மியற்கையாகலுமாகாரம்வருதலுங், கொளத்தகுமரபினாகிடனுடைத்தே." என்று ஆசிரியர் தொல்காப்பியருங் கூறியதுகாண்க.

இல்லென்னும் பண்புச்சொல் ஐகார ஆகாரச்சாரியைகள் பெறும் என்றதும், இயல்பாம் என்றதும், 'ளவ்வற்றுமையிற்றடவுமல்வழியவற்றொடுறழ்வும்' என எய்தியது விலக்கிப் பிறிது விதிவகுத்தல்; ஐகாரச்சாரியை முன் வல்லினம் விகற்பமாம் என்றது 'அல்வழிஇஐம்முன்னராயின்' என்னுஞ் சூத்திரத்தால் எய்தியதிகந்துபடாமைக் காத்தல்; ஆகாரச்சாரியை முன் வல்லின மிகும் என்றது 'இயல்பினும்விதியினும்' என்னுஞ் சூத்திரத்தால் எய்தியதிகந்துபடாமைக் காத்தல். (௩௦)

உ௩௪. புள்ளும் வள்ளுந் தொழிற்பெயரு மானும்.

இ - ள். புள்ளும் வள்ளும் தொழிற்பெயரும் மானும் - இவ்விருசொற்களும் இருவழியும் யகரமல்லாத மெய்கள் வர்தாற பொதுவிதியான்முடிதலேயன்றித் தொழிற்பெயர்போல உகரச்சாரியையும் பெற்றுப் புணரும்.

உ-ம். புள்ளுக்கடிது, வள்ளுக்கடிது, நன்று, வலிது. எ-ம். புள்ளுக்கடுமை, வள்ளுக்கடுமை, நன்மை, வன்மை. எ-ம். வரும்.

இது 'ளவேற்றுமையிற்றடவும்' என்னுஞ் சூத்திரத்தால் எய்தியதன் மேற் சிறப்புவிதி,

Digitized By Roja Muthiah Research Library

**பரீக்ஷை** வினக்கள்:—480. லள வீற்றின் முன் மூவினமெய்களும் வரின் எவ்வாறும்? 481. லள வீற்றின் முன் அவற்ரோடு மயங்காத தகரம் வரின் அல்வழியில் உறழ்ச்சி முடிபு எப்படிக்கூடும்? 482. லளக்கள் தகரம் வருமிடத்து றடக்களாதலன்றி வேறு திரிபும் பெறுமோ? 483. லளக்கள் திரிதல் இயல்பாதலன்றிக் கெடுதல் எவ்விடத்தும் இல்லையோ? 484. தனிக்குறிலைச் சாராத லளக்கள் அல்வழியிலே தகரம்வரிற் கெடுதலன்றித் திரிதல் எங்கும்பெருவோ? 485. தனிக்குறிலைச்சாராத லளக்கள் அல்வழியில் வல்லினம் வரின் உறழாது இயல்பாதலுந் திரிதலும் பெருவோ? 486. தனிக்குறிலைச்சாராத லளக்கள் வேற்றுமையில் வல்லினம் வரிற் றிரியாது எங்கும் இயல்பாதலில்லையோ? 487. தனிக்குறிலைச்சாராத லளக்கள் வேற்றுமையிலே தகரம் வரிற் றிரிதலேயன்றிக் கெடுதல் யாண்டும்பெருவோ? 488. லகாரத்தை யிறுதியாகவுடைய விகுதிபெற்ற தொழிற்பெயரும் ளகாரத்தை யிறுதியாகவுடைய முதனிலை திரிந்த தொழிற்பெயரும் முதனிலைத்தொழிற்பெயர்போல உகரச்சாரியை பெறுமோ? 489 இத்தொழிற்பெயரிறுதி லளக்கள் வல்லினம் வரின் அல்வழியில் உறழ்தலேயன்றி வேறுவிதியும்பெறுமோ? 490. வல் என்னுஞ் சூதாடுகருவிப்பெயர்முன் யவ்வொழிந்த மெய்கள் வரின் எவ்வாறும்? 491. வல் என்பது வேறு சாரியையும் பெறுமோ? 492. நெல், செல், கொல், சொல் என்னுஞ் சொற்கள் வல்லினம் வரின் அல்வழியிலே பொதுவிதியால் உறழ்ந்துவருமோ? 493. இன்மையை யுணர்த்தும் இல் என்பதன் முன் நாற்கணமும் வரின் எவ்வாறும்? 494. புள் வள் என்னுஞ் சொற்கள் யகரமொழிந்த மெய்கள் வரிற் பொதுவிதியே யன்றி வேறு விதியும் பெறுமோ?

---

## வகர வீறு.

உகுரு. சுட்டு வகரமூ வினமுற முறையே
ஆய்தமு மென்மையு மியல்பு மாகும்.

இ - ள். சுட்டு வகரம் - அவ் இவ் உவ் என்னும் அஃறிணைச் சுட்டுப்பெயர்களீற்று வகரமெய்,—மூவினம் உற - வல்லினமும் மெல்லினமும் இடையினமும் வர,—முறையே ஆய்தமும் மென்மையும் இயல்பும் ஆகும் - முறையாக ஆய்தமும் வருமெல்லினமும் இயல்பும் ஆகும். எ - று.

உ-ம். (க.) அவ்+கடிய=அஃகடிய, இவ்+கடிய=இஃகடிய, உவ்+கடிய= உஃகடிய என வல்லினம் வர ஆய்தமாகத்திரிந்தது.

(உ.) அவ்+ஞானம்=அஞ்ஞானம், இவ்+ஞானம்=இஞ்ஞானம், உவ்+ஞானம்=உஞ்ஞானம் என மெல்லினம்வர வருமெழுத்தாகத்திரிந்தது.

Digitized By Roja Muthiah Research Library

(௩) அவ்+யானை=அவ்யானை, இவ்+யானை=இவ்யானை, உவ்+ யானை=உவ்யானை என இடையினம் வர இயல்பாயிற்று.

வேற்றுமைப்புணர்ச்சிக்கு அற்றுச்சாரியைபெறும் என மேல் விதந்த லால் இவ்விதி அல்வழிக்கென்க் காண்க. (௩௨)

உ௩௫. தெவ்வென் மொழியே தொழிற்பெய ரற்றே
மவ்வரின் வஃகான் மவ்வு மாகும்.

இ - ள். தெவ் என் மொழி தொழிற்பெயர் அற்று - தெவ்வென்னும் பகைமையுணர்த்தும் பெயர் யகரமல்லாத மெய்களோடு புணருமிடத்து த் தொழிற்பெயர்போல உகரச்சாரியை பெற்று முடியும்,—மவ்வரின் வஃ கான் மவ்வும் ஆகும் - மகரமெய்வரின் உகரச்சாரியை பெறுதலேயன்றி ஒ ரோவிடத்து வகரமெய் மகரமெய்யாகத் திரியவும் பெறும். எ - று.

உ - ம். (க) தெவ்வுக்கடிது, தெவ்வுமாண்டது, தெவ்வுவலிது எ - ம். தெ வ்வுக்கடுமை, தெவ்வுமாட்சி, தெவ்வுவலிமை எ - ம். இருவ ழியும் உகரச்சாரியை பெற்றது.

(உ) தெவ்வுமன்னர், தெம்மன்னர் எ - ம். தெவ்வுமுனை, தெம்முனை எ - ம் இருவழியும் மகரமெய்வர உகரச்சாரியைபெற்றும், மக ரமெய்யாகத்திரிந்தும் வந்தது. (௩௩)

பரீக்ஷைவினாக்கள்:—495. வகரவீற்றுச் சுட்டுப்பெயர்முன் அல்வழியி ல் மூவினமெய்களும் வரின் எவ்வாறும்? 496. தெவ் என்னும் பெயர்மு ன் யகரமொழிந்த மெய்கள் வரின் எவ்வாறும்? 497. தெவ் என்பது ம கரம் வரின் வேறுவிதியும் பெறுமோ?

## வருமொழித்தகர நகரத் திரிபு.

உ௩எ. னலமுன் றனவும் ணளமுன டணவும்
ஆகுந் தநக்க ளாயுங் காலே.

இ - ள். னலமுன் (தநக்கள்) றனவும் - னகர லகரங்களின்முன் வரு ந்தகரம் றகரமாம் அவற்றின்முன் வரும் நகரம் னகரமாம்,—ணளமுன் தந க்கள் டணவும் ஆகும் - ணகர ளகரங்களின்முன் வருந் தகரம் டகரமாம் அவற்றின்முன்வரும் நகரம் ணகரமாம்,— ஆயுங்கால் - ஆராயுமிடத்து.

உ - ம். பொன்+தீது=பொன்றீது, கல்+தீது=கற்றீது, பொன்+நன் று=பொன்னன்று, கல்+நன்று=கன்னன்று எ - ம். மண்+தீது=ம ண்டீது, முள்+தீது=முட்டீது, மண்+நன்று=மண்ணன்று, முள்+ நன்று=முண்ணன்று எ - ம். அல்வழியிலே திரிந்தன. பொற்றீமை, கற்றீமை, பொன்னன்மை, கன்னன்மை எ - ம். மட்டீமை, முட்டீ மை, மண்ணன்மை, முண்ணன்மை எ - ம். வேற்றுமையிலே திரிந்தன.



Digitized By Roja Muthiah Research Library

ஆயுங்காலேயென்றதனால், அல்வழி வேற்றுமைப் பொருணோக்கத்தால ன்றி மயக்கவிதியின்மையால் இப்படிப் புணருமுதலீரிரண்டனுள் ஒன்றே னும் இரண்டேனும் விகாரப்பட்டு மயங்குதற்கு உரியனவாகிப் புணருமெ ன்பதும், மயக்கவிதியுள்ளனவற்றிற்கு விகாரம் அல்வழி வேற்றுமைப்பொ ருணோக்கத்தால் வருமென்பதும் பெற்றாம்.

பரீக்ஷைவினாக்கள்:—498. ணகர லகரங்களின்முன் தகரம்வரின் எவ்வா றாம்? 499. ணகர லகரங்களின்முன் நகரம் வரின் எவ்வாறாம்? 500. ண கர ளகரங்களின்முன் நகரம் வரின் எவ்வாறாம்?

[வேற்றுமைப் பொருட்புணர்ச்சியை
உருபுபுணர்ச்சியோடு மாட்டெறிதல்.]

**உகூஅ. உருபின் முடிபவை யொக்கும் பொருளினும்.**

இ - ள். உருபின் முடிபவை - மேல் உருபுபுணர்ச்சிக்கண் முடியு முடிபுகள், — அப்பொருளினும் ஒக்கும் - அவ்வுருபின் பொருட்புணர்ச்சிக்க ண்ணும் ஒத்துமுடியும். எ - று.

உருபுபுணர்ச்சியாவது வேற்றுமையுருபு வெளிப்பட்டுநிற்பப் புணரு ம்புணர்ச்சி; உறிக்கட்டயிர் என்பதுபோல. வேற்றுமைப் பொருட் புணர்ச் சியாவது வேற்றுமையுருபின்றி அவ்வுருபினது பொருள்படப் புணரும் பு ணர்ச்சி; உறித்தயிர் என்பதுபோல.

உ - ம். (க) எல்லாவற்றதும் என்பது உருபுபுணர்ச்சி; எல்லாவற்றுக்கோ டும் என்பது பொருட்புணர்ச்சி. மேல் உருபுபுணரியலில் "எ ல்லாமென்பதிழிதிணையாயின் அற்றோடுருபின்மேலும்முறு மே" என்ற விதிப்படி எல்லாவற்றதும் என்ற உருபுபுணர்ச் சிக்கு அஃறிணைக்கண் அற்றும் உருபின்மேல் உம்மும் பெற் றாற்போல எல்லாவற்றுக்கோடும் என்னும்பொருட்புணர்ச்சிக் கும் பெற்றன. எல்லா நமதும் என்பது உருபுபுணர்ச்சி; எல் லாநங்கையும் என்பது பொருட்புணர்ச்சி "அன்றேனம்மி டையடைந்தற்றாகும்" என்ற விதிப்படி எல்லாநமதும் என்னு ம் உருபுபுணர்ச்சிக்கு உயர்திணைக்கண் நம்மும் உருபின்மேல் உம்மும் பெற்றாற்போல, எல்லாநங்கையும் என்னும் பொருட் புணர்ச்சிக்கும் பெற்றன.

(உ) எல்லார்தமதும், எல்லீர்நுமதும் என்பன உருபுபுணர்ச்சி; எல் லார்தங்கையும், எல்லீர்நுங்கையும் என்பன பொருட்புணர்ச் சி. மேல் உருபுபுணரியலில் "எல்லாருமெல்லீருமென்பவற்று ம்மை, தள்ளிநிரலேதம்நும்சாரப், புல்லுமுருபின்பின்னரும் மே" என்ற விதிப்படி எல்லார்தமதும் எல்லீர்நுமதும் என் னும் உருபுபுணர்ச்சிக்கு எல்லாரும் எல்லீரும் என்பவைகளி ன் இறுதியிலுள்ள முற்றும்மைகளைத் தள்ளி முறையே தம்

Digitized By Roja Muthiah Research Library

முச்சாரியையும் நம்முச்சாரியையும் வந்து பொருந்த அவைகளிறுலே தள்ளுண்ட முற்றும்மைகள்உருபுகளின் பின்னேவந்து புணர்ந்தாற்போல, எல்லார்நங்கையும் எல்லீர்நுங்கையும்என்னும் பொருட்புணர்ச்சிக்கும் முடிந்தன.

(௩) தனது, தமது, நமது என்பன உருபுபுணர்ச்சி; தன்கை, தங்கை, நங்கை என்பன பொருட்புணர்ச்சி; மேல் உருபுபுணரியலில் "தான்றாநாமுதல்குறுகும்" என்ற விதிப்படி உருபுபுணர்ச்சிக்குத் தான் தாம் நாம்என்பன முறையே தன் தம் நம என்விகாரப்பட்டாற்போலப்பொருட்புணர்ச்சிக்கும் விகாரப்பட்டன. எனது, எமது, நினது, நுமது என்பன் உருபுபுணர்ச்சி; என்கை, எங்கை, நின்கை, நுங்கை என்பன பொருட்புணர்ச்சி; "யான் யாம் நீ நீர் என் எம் நின் நும் ஆம்" என்ற விதிப்படி உருபுபுணர்ச்சிக்கு யான் யாம் நீ நீர் என்பன முறையே என் எம் நின் நும் என விகாரப்பட்டாற்போலப்பொருட்புணர்ச்சிக்கும் விகாரப்பட்டன.

(௪) ஆனது, மானது, கோனது என்பன உருபுபுணர்ச்சி. ஆன்கோடு, மான்கோடு, கோன்குணம் என்பன பொருட்புணர்ச்சி; மேல் உருபுபுணரியலில் "ஆமாகோனவ்வணையவும்பெறுமே" என்றவிதிப்படி உருபுபுணர்ச்சிக்கு னகரச்சாரியை வந்தாற்போலப், பொருட்புணர்ச்சிக்கும் வந்தது.

(௫) அவற்றது, இவற்றது, உவற்றது என்பன உருபுபுணர்ச்சி; அவற்றுக்கோடு, இவற்றுக்கோடு, உவற்றுக்கோடு என்பன பொருட்புணர்ச்சி; மேல் உருபுபுணரியலில் "வவ்விறுசுட்டிற்கற்றுறல்வழியே" என்ற விதிப்படி உருபுபுணர்ச்சிக்கு அற்றுச்சாரியை வந்தாற்போலப் பொருட்புணர்ச்சிக்கும் வந்தது.

(௬) அதனது, இதனது, உதனது என்பன உருபுபுணர்ச்சி; அதன்கோடு, இதன்கோடு, உதன்கோடு என்பன பொருட்புணர்ச்சி; மேல் உருபுபுணரியலில் "சுட்டின்முன்னாய்தமன்வரிற்கெடுமே" என்ற விதிப்படி உருபுபுணர்ச்சிக்கு அன்சாரியைப்பேறும் ஆய்தக்கேடும் வந்தாற்போலப் பொருட்புணர்ச்சிக்கும் வந்தன.

இவைபோல்வன பிறவும் இப்படியே முடித்துக்கொள்க.

பரீக்ஷைவினுக்கள்:—501. உருபுபுணர்ச்சியாவதியாது? 502. வேற்றுமைப்பொருட்புணர்ச்சியாவதியாது? 503. உருபுபுணரியலில் உருபுபுணர்ச்சிக்குக் கூறுஞ் சாரியைப்பேறுமுதலியவிதி அவ்வுருபு தொக்கபொருட்புணர்ச்சிக்கும் வருமோ?

## புணரியல்களுக்குப் புறனடை.

௨௫௯. இடையுரி வடசொலி னியம்பிய கொளாதவும்
போலியு மரூஉம் பொருந்திய வாற்றிற்
கியையப் புணர்த்தல் யாவர்க்கு நெறியே.

இ - ள். இடை உரி வடசொலின் இயம்பிய கொளாதவும் - இடைச் சொற்களுள்ளும் உரிச்சொற்களுள்ளும் வடசொற்களுள்ளும் உயிரீறும் ஒற்றீறுமான புணரியலிலே தோன்றல் திரிதல் கெடுதல் இயல்பாதல் எனச்சொல்லிய புணர்ச்சியிலக்கணங்கள் பொருந்தாது வேறுபட்டுவருவனவும்,—போலியும் - இலக்கணப்போலிமொழிகளும்,—மரூஉவும் - மரூஉமொழிகளும்,—பொருந்திய ஆற்றிற்கு இயையப்புணர்த்தல் - இருவகைவழக்கிலும் நடக்குமுறைமைக்குப் பொருந்துமாறு புணர்க்கை,—யாவர்க்கும் நெறி - அறிவுடையோரெல்லார்க்கும் முறை. எ - று.

உ - ம். (௧) "மடவைமன்றதடவுநிலைக்கொன்றை" என அகரவீற்றிடைச் சொன்முன் வல்லெழுத்து மிகாதியல்பாயிற்று. ஆன்கன்று, மான்கன்று, வண்டின்கால், தேரின்செலவு, யாழின்புறம் என வேற்றுமைப்புணர்ச்சிக்கண் னகரவீற்றுச்சாரியை யிடைச் சொற்கள் திரியாதியல்பாயின.

(௨) மழகளிறு, உறுபுனல் எ - ம். கமஞ்சூல், தடஞ்செவி, தடந்தோள், கயந்தலை எ - ம். உயிரீற்றுச்சொன்முன் வல்லெழுத்து மிகாதியல்பாயும் மெல்லெழுத்து மிகுந்தும் வந்தன.

(௩) அளிகுலம், தனதடம், ஆதிபகவன் என உயிரீற்றுவடசொன்முன் வல்லெழுத்து மிகாதியல்பாயின.

(௪) இல் + முன் = முன்றில், பொது + இல் = பொதியில் என வரும்இலக்கணப்போலி மொழிகளும், அருமருந்தன்னபிள்ளை = அருமந்தபிள்ளை, குணக்குள்ளது = குணாது, தெற்குள்ளது = தெனாது, வடக்குள்ளது = வடாது, சோழநாடு = சோணாடு, பாண்டியனாடு = பாண்டிநாடு, மலையமானாடு = மலாடு, தொண்டைமானாடு = தொண்டைநாடு, தஞ்சாவூர் = தஞ்சை, ஆற்றூர் = ஆறை, ஆதன்றந்தை = ஆந்தை, பூதன்றந்தை = பூந்தை, வடுகன்றந்தை = வடுகந்தை என வரு மரூஉமொழிகளும், நிலைமொழி வருமொழிகளுள் எற்குஞ் செய்கையறிந்து முடித்துக்கொள்க. மற்றவைகளும் இப்படியே.

வடமொழிச்சமாசபதங்கள் தமிழில் வருமிடத்துப் பெரும்பாலும் அவ்வடநூற்சந்தியேபெறும். சமாசமெனினும் தொகைநிலையெனினும் ஒக்கும். சந்தியெனினும் புணர்ச்சியெனினும் ஒக்கும்.

அச்சந்தி தீர்க்கசந்தி, குணசந்தி, விருத்திசந்தி என மூவகைப்படும். தீர்க்கசந்தி பூர்வபதாந்தத்திலும் உத்தரபதாதியிலும் சவர்ணமான உயிருந்

Digitized By Roja Muthiah Research Library

தால் உத்தரபதாதியிலிருக்கின்ற உயிரெழுத்துக்கெட பூர்வபதாந்தத்திலே குறிலிருந்தால் அது நெடிலாய்விடும்; நெடிலிருந்தால் அது இருந்தபடியே யிருக்கும்.

பூர்வபதமெனினும் நிலைமொழியெனினும் ஒக்கும். உத்தரபதமெனினும் வருமொழியெனினும் ஒக்கும் அந்தமெனினும் ஈறெனினுமொக்கும். ஆதியெனினும் முதலெனினுமொக்கும். சவர்ணமெனினும் சஜாதியெனினும் இனவுயிரெழுத்தெனினும் ஒக்கும்.

அ ஆக்களும், இ ஈக்களும், உ ஊக்களும் ஒன்றற்கொன்று சவர்ணமெனப்படும். "அதீர்கோ தீர்க்க தாம் யாதி நாஸ்தி தீர்கஸ்ய தீர்கதா, பூர்வ தீர்க்கஸ்வரந் த்ருஷ்ட்வா பரலோபோ விதீயதே" என்பது சாரஸ்வதவியாகரணம் இதில் இப்படியே தீர்க்கசந்தி விதியமைந்திருத்தலறிக.

இச்சுலோகத்தின்பொருள்: குற்றெழுத்து நெட்டெழுத்தாகிவரும்; நெட்டெழுத்துக்கு நெட்டெழுத்தாகுந் தன்மையில்லை. முன்னிருக்கிற நெட்டெழுத்தைக் கண்டு பின்னுள்ள உயிருக்குக் கேடுவிதிக்கப்படுகின்றது. என்பதாம்.

எனவே, தீர்க்கசந்திவிஷயத்தில் நிலைமொழியீற்றிலும் வருமொழிமுதலிலும் இருக்கிற உயிர்களில் நிலைமொழியீற்றிலே குறிலிருந்தால் அது நெடிலாய்த் திரியும், வருமொழிமுதலில் இருக்கிற உயிர் கெட்டுப்போம்; நிலைமொழியீற்றிலே நெடிலிருந்தால் அது இருந்தபடியேயிருக்கும், வருமொழிமுதலுயிர் கெட்டுப்போம் என்றவிளக்கம் பலிதமாயிற்று.

(தீர்க்கசந்திக்கு உதாரணம்.)

அ+அ=ஆ

𑌵𑍇𑌦+𑌅𑌰𑌣𑍍𑌯𑌂=𑌵𑍇𑌦𑌾𑌰𑌣𑍍𑌯𑌂; வேத+அரணியம்=வேதாரணியம் (மறைக்காடு)

𑌪𑌾𑌦+𑌅𑌰𑌵𑌿𑌨𑍍𑌦𑌂=𑌪𑌾𑌦𑌾𑌰𑌵𑌿𑌨𑍍𑌦𑌂; பாத+அரவிந்தம்=பாதாரவிந்தம் (அடித்தாமரை)

𑌇𑌨𑍍𑌦𑍍𑌰+𑌅𑌧𑌿𑌕𑌾𑌰𑌃=𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌧𑌿𑌕𑌾𑌰𑌃; இந்திர+அதிகாரம்=இந்திராதிகாரம் (இந்திரனது அதிகாரம்)

அ+ஆ=ஆ

𑌶𑌿𑌵+𑌆𑌲𑌯𑌃=𑌶𑌿𑌵𑌾𑌲𑌯𑌃; சிவ+ஆலயம்=சிவாலயம் (சிவன் கோயில்)

𑌕𑍁𑌲+𑌆𑌚𑌾𑌰𑌃=𑌕𑍁𑌲𑌾𑌚𑌾𑌰𑌃; குல+ஆசாரம்=குலாசாரம் (குலவொழுக்கம்)

𑌪𑌰+𑌆𑌨𑌨𑍍𑌦𑌂=𑌪𑌰𑌾𑌨𑌨𑍍𑌦𑌂; பர+ஆநந்தம்=பராநந்தம் (மேலான இன்பம்)

ஆ+அ=ஆ

𑌗𑌣𑌿𑌕𑌾+𑌅𑌨𑍁𑌰𑌾𑌗𑌃=𑌗𑌣𑌿𑌕𑌾𑌨𑍁𑌰𑌾𑌗𑌃; கணிகா+அநுராகம்=கணிகாநுராகம் (வேசையில் விருப்பம்)

𑌗𑌂𑌗𑌾+𑌅𑌮𑍃𑌤𑌂=𑌗𑌂𑌗𑌾𑌮𑍃𑌤𑌂; கங்கா+அமிர்தம்=கங்காமிர்தம் (கங்கைநீர்)

𑌪𑍂𑌜𑌾+𑌅𑌧𑌿𑌕𑌾𑌰𑌃=𑌪𑍂𑌜𑌾𑌧𑌿𑌕𑌾𑌰𑌃; பூசா+அதிகாரம்=பூசாதிகாரம் (பூசையிலதிகாரம்)

Digitized By Roja Muthiah Research Library

ஆ முன் ஆ
க்ரியா + ஆரம்ப: = க்ரியாரம்ப:; கிரியைத்தொடக்கம்.
அணிமா + ஆதி: = அணிமாதி:; அணிமைமுதலியது.
வ்யயா + ஆக்ஷேப: = வ்யயாக்ஷேப:; வீணாட்சேபம்.

இ முன் இ
முநி + இந்த்ர: = முநீந்த்ர:; முனித்தலைவன்.
பதி + இச்சா = பதீச்சா; கடவுளின்விருப்பு.
ரவி + இந்து = ரவீந்து; சூரியசந்திரர்.

இ முன் ஈ
கிரி + ஈச: = கிரீச:; மலைத்தலைவன்.
முநி + ஈச்வர: = முநீச்வர:; முனித்தலைவன்.
ச்ருதி + ஈப்ஸு: = ச்ருதீப்ஸு:; சுருதியைப்பெற விரும்புகிறவன்.

ஈ முன் இ
வாணீ + இஷ்டம் = வாணீஷ்டம்; சரசுவதியால் விரும்பப்பட்டது.
தீ + இந்த்ரியம் = தீந்த்ரியம்; ஞானேந்திரியம்.
ப்ருத்வீ + இவ = ப்ருத்வீவ; பூமிபோல.

ஈ முன் ஈ
ஸகீ + ஈப்ஸிதம் = ஸகீப்ஸிதம்; தோழியாற்பெற விரும்பப்பட்டது.
கௌரீ + ஈக்ஷணம் = கௌரீக்ஷணம்; உமையின்காட்சி.
காசீ + ஈச்வர: = காசீச்வர:; காசியிற்கடவுள்.

உ முன் உ
குரு + உபதேச: = குரூபதேச:; குருவினுபதேசம்.
பாநு + உதய: = பாநூதய:; சூரியோதயம்.
சாரு + உத்ஸவ: = சாரூத்ஸவ:; அழகியஉற்சவம்.

உ முன் ஊ
ஸாது + ஊஹ: = ஸாதூஹ:; நல்லவனது ஊகம்.
ஜாநு + ஊரு = ஜாநூரு; முழங்காலுந்தொடையும்.
ஸிந்து + ஊர்மி: = ஸிந்தூர்மி:; கடலின்திரை.

ஊ முன் உ
வதூ + உத்பத்தி: = வதூத்பத்தி:; பெண்ணினுற்பத்தி.
தநூ + உசித: = தநூசித:; சரீரத்துக்கேற்றது.
ஸ்வயம்பூ + உபதேச: = ஸ்வயம்பூபதேச:; பிரமனுபதேசம்.

ஊ முன் ஊ
ஸ்வயம்பூ + ஊர்த்வலோக: = ஸ்வயம்பூர்த்வலோக:; கடவுளின்மேலுலகம்.
தநூ + ஊர்மி: = தநூர்மி:; சரீரப்பிரகாசம்.
வதூ + ஊடம் = வதூடம்; பெண்ணாலேதைக்கப்பட்டது.

Digitized By Roja Muthiah Research Library

(குணசந்திக்கு உதாரணம்.)

அகரம் இகரம்

பூர்ண + இந்து: = பூர்ணேந்து:; பூரணசந்திரன்.
ஜ்ஞாந + இந்த்ரியம் = ஜ்ஞாநேந்த்ரியம்; அறிபொறி.
அந்த்ய + இஷ்டி: = அந்த்யேஷ்டி:; ஈற்றுவேள்வி.

அகரம் ஈகாரம்

சிதம்பர + ஈச்வர: = சிதம்பரேச்வர:; தில்லைநாதன்.
பர + ஈப்ஸிதம் = பரேப்ஸிதம்; பிறராற்பெறவிரும்பப்பட்டது.
அர்த + ஈஹா = அர்தேஹா; பொருளாசை.

ஆகாரம் இகரம்

ராஜா + இந்த்ர: = ராஜேந்த்ர:; இராசேந்திரன்.
வித்யா + இச்சா = வித்யேச்சா; கல்வியில்விருப்பு.
கந்யா + இதரா = கந்யேதரா; கன்னியின்வேறானவள்.

ஆகாரம் ஈகாரம்

ப்ரஜா + ஈச்வர: = ப்ரஜேச்வர:; பிரசைக்குஅதிபதி.
க்ருபா + ஈக்ஷணம் = க்ருபேக்ஷணம்; அருட்பார்வை.
உமா + ஈச: = உமேச:; உமையுஞ்சிவனும்.

அகரம் உகரம்

சந்த்ர + உதய: = சந்த்ரோதய:; சந்திரஉதயம்.
பூர்ண + உபமா = பூர்ணோபமா; நிறைஉவமை.
லோக + உபகார: = லோகோபகார:; உலகுக்குதவி.

ஆகாரம் உகரம்

மஹா + உத்ஸவ: = மஹோத்ஸவ:; பெரியவிழா.
கங்கா + உதகம் = கங்கோதகம்; கங்கைநீர்
ப்ரஜா + உதய: = ப்ரஜோதய:; சனங்களின்நல்வாழ்வு.

அகரம் ஊகாரம்

பர + ஊர்ஜித: = பரோர்ஜித:; மேலானவலியுடையவன்
ஏக + ஊந: = ஏகோந:; ஒன்றுகுறைந்தது.
தவ + ஊர்த்வம் = தவோர்த்வம்; உனக்குமேலே

ஆகாரம் ஊகாரம்

ரம்பா + ஊரு: = ரம்போரு:; வாழைபோலுந் தொடையுடையாள்.
வித்யா + ஊஹ: = வித்யோஹ:; கல்வியில் ஊகம்:
தீக்ஷா + ஊர்த்வ: = தீக்ஷோர்த்வ:; தீக்கையாலுயர்ந்தவன்.

(விருத்திசந்திக்கு உதாரணம்.)

அகரம் ஏ

க்ருஷ்ண + ஏகாதசீ = க்ருஷ்ணைகாதசீ; அபரபக்க ஏகாதசி.
ச்ராத்த + ஏகோத்திஷ்டம் = ச்ராத்தைகோத்திஷ்டம்; சிராத்தமாகியஏகோத்திட்டம்.
ஜ்ஞாந + ஏதித: = ஜ்ஞாநைதித:; அறிவின்வளர்ந்தவன்.

Digitized By Roja Muthiah Research Library

ஐ விருத்தி

சிவ + ஏகத்வம் = சிவைகத்வம்; சிவனோடொற்றுமை.
இந்த்ர + ஐராவத: = இந்த்ரைராவத:; இந்திரனது வெள்ளையானை.
மனுஷ்ய + ஐந்த்ரியகம் = மனுஷ்யைந்த்ரியகம்; மனுஷரது இந்திரியவுணர்வு.

ஐ விருத்தி

பூஜா + ஏககாமுக: = பூஜைககாமுக:; பூசையில் ஒருப்பட்ட மனமுடையன்.
வஸுதா + ஏஷணா = வஸுதைஷணா; பூமியில்விருப்பம்.
க்ரீடா + ஏகவீர: = க்ரீடைகவீர:; விளையாட்டில்ஒருவீரன்

ஐ விருத்தி

பூர்வா + ஐந்த்ரீ = பூர்வைந்த்ரீ; கிழக்காகியஇந்திரதிசை
ப்ரஜா + ஐக்யம் = ப்ரஜைக்யம்; சனங்களின் ஒற்றுமை.
மஹா + ஐச்வர்யம் = மஹைச்வர்யம்; பெரிய ஐசுவரியம்.

ஔ விருத்தி

க்ருத + ஓதந: = க்ருதௌதந:; நெய்ச்சோறு.
திவ + ஓகா: = திவௌகா:; சுவர்க்கத்தைத் தானமாகவுடையவன்.
ஸமுத்ர + ஓக: = ஸமுத்ரௌக:; கடற்பெருக்கு.

ஔ விருத்தி

மஹா + ஓஜா: = மஹௌஜா:; பெரியவலிமையுடையவன்.
கங்கா + ஓக: = கங்கௌக:; கங்கையின்பெருக்கு.
ரமா + ஓஜ: = ரமௌஜ:; இலக்குமியின்பிரகாசம்.

ஔ விருத்தி

திவ்ய + ஔஷதம் = திவ்யௌஷதம்; திவ்வியமருந்து.
ஜ்ஞான + ஔத்ஸுக்யம் = ஜ்ஞானௌத்ஸுக்யம்; ஞானஅவா.
தீக்ஷித + ஔர்த்வதேஹிகம் = தீக்ஷிதௌர்த்வதேஹிகம்; தீக்ஷிதனுடைய அந்தியக்கிரியை.

ஔ விருத்தி

மஹா + ஔஷதம் = மஹௌஷதம்; பெரியமருந்து.
தீக்ஷா + ஔசித்யம் = தீக்ஷௌசித்யம்; தீக்ஷையின்தகுதி.
சாகா + ஔன்னத்யம் = சாகௌன்னத்யம்; சாகையின்உயர்வு.

கற்போர் உதாரணந்தேடி யுலையாதபடி தீர்க்கசந்தி, குணசந்தி, விருத்திசந்திகளில் ஒவ்வொரு ஈறுமுதல்களுக்கும் மும்மூன்று உதாரணங்கள் எழுதப்பட்டன. இவற்றைத் தமிழெழுத்தாலெழுதும்போது சில வாங்மயந்தோன்றுமற் றிரிபுறும் ஆதலின் இவை சமஸ்கிருத எழுத்தாலெழுதப்பட்டன. இவற்றைத் தமிழானுமெழுதி மூவகைச்சந்திகளையும் வகுத்துணர்க. (வாங்மயம் - சொல்வடிவத்தன்மை.)

Digitized By Roja Muthiah Research Library

குணசந்தி விஷயத்தில்,

பூர்வபதாந்தத்தில் அ, ஆக்களில் ஒன்று நிற்க உத்தரபதாதியில் இ, ஈக்களில் ஒன்று வருமாயின் பூர்வபதாந்தத்தில் நின்ற உயிர்கெடும் உத்தரபதாதியில் இருக்கிற உயிர் ஏகாரமாகத்திரியும்.

பூர்வபதாந்தத்தில் அ, ஆக்களில் ஒன்று நிற்க உத்தரபதாதியில் உ, ஊக்களில் ஒன்றுவருமாயின் பூர்வபதாந்தத்தில் நின்ற உயிர்கெடும். உத்தரபதாதியில் இருக்கிற உயிர் ஓகாரமாகத்திரியும்.

விருத்திசந்திவிஷயத்தில்,

பூர்வபதாந்தத்தில் அ, ஆக்களில் ஒன்று நிற்க உத்தரபதாதியில் ஓகாரமாவது ஔகாரமாவது வரின், பூர்வபதாந்தத்தில் நின்ற உயிர்கெடும். உத்தரபதாதியில் ஓகாரம் ஔகாரமாகத்திரியும் ஔகாரமியல்பாயிருக்கும்.

(பதாதி - மொழிமுதல்; பதாந்தம் - மொழியிறுதி.)

மூவகைச்சந்திகளையும் உற்றுநோக்கின் தீர்க்கசந்தியில் வருமொழிமுதல்கெடுதலும், குணசந்தி விருத்திசந்திகளில் நிலைமொழியீறு கெடுதலும் உண்டென்பது விளங்கும்.

## க. தீர்க்கசந்தி.

(க) அ ஆவின்முன் அ ஆ வந்ததற்கு உதாரணம்:—

| | | | | | |
|---|---|---|---|---|---|
| உ-ம். | பத | + | அம்புயம் | = | பதாம்புயம் |
| | சிவ | + | ஆலயம் | = | சிவாலயம் |
| | சேநா | + | அதிபதி | = | சேநாதிபதி |
| | சதா | + | ஆநந்தம் | = | சதாநந்தம் |

(உ) இ ஈயின்முன் இ ஈ வந்ததற்கு உதாரணம்:—

| | | | | | |
|---|---|---|---|---|---|
| உ-ம். | கிரி | + | இந்திரன் | = | கிரீந்திரன் |
| | கிரி | + | ஈசன் | = | கிரீசன் |
| | மகீ | + | இந்திரன் | = | மகீந்திரன் |
| | நதீ | + | ஈசன் | = | நதீசன் |

(ஙு) உ ஊவின்முன் உ ஊ வந்ததற்கு உதாரணம்:—

| | | | | | |
|---|---|---|---|---|---|
| உ-ம் | குரு | + | உபதேசம் | = | குரூபதேசம் |
| | மேரு | + | ஊர்த்துவம் | = | மேரூர்த்துவம் |
| | வதூ | + | உத்துவாசம் | = | வதூத்துவாசம் |
| | வதூ | + | ஊரு | = | வதூரு |

## உ. குணசந்தி.

(க) அ ஆவின்முன் இ ஈவரின் ஈறுகெட இகரமாவது ஈகாரமாவது ஏயாகும்:—



Digitized By Roja Muthiah Research Library

| | | | | |
|---|---|---|---|---|
| உ-ம். நர | + | இந்திரன் | = | நரேந்திரன் |
| சுர | + | ஈசன் | = | சுரேசன் |
| தரா | + | இந்திரன் | = | தரேந்திரன் |
| மகா | + | ஈசன் | = | மகேசன் |

(உ) அ ஆவின்முன் உ ஊவரின் ஈறுகெட, உகரமாவது ஊகாரமாவது ஓவாகும்:—

| | | | | |
|---|---|---|---|---|
| உ-ம். பாத | + | உதகம் | = | பாதோதகம் |
| ஞான | + | ஊர்ச்சிதன் | = | ஞானோர்ச்சிதன் |
| கங்கா | + | உற்பத்தி | = | கங்கோற்பத்தி |
| தயா | + | ஊர்ச்சிதன் | = | தயோர்ச்சிதன் |

ங. விருத்திசந்தி.

(க) அ ஆவின்முன் ஏ ஐவரின், ஈறு கெட ஏகாரம் ஐயாகும், ஐ திரியாது கூடும்.

| | | | | |
|---|---|---|---|---|
| உ-ம். லோக | + | ஏகநாயகன் | = | லோகைகநாயகன் |
| சிவ | + | ஐக்கியம் | = | சிவைக்கியம் |
| தரா | + | ஏகவீரன் | = | தரைகவீரன் |
| மகா | + | ஐசுவரியம் | = | மகைசுவரியம் |

(உ) அ ஆவின்முன் ஓ ஔவரின், ஈறு கெட ஓ ஔவாகும், ஔ இயல்பாயிருக்கும்:—

| | | | | |
|---|---|---|---|---|
| உ-ம். கலச | + | ஓதனம் | = | கலசௌதனம் |
| திவ்விய | + | ஔடதம் | = | திவ்வியௌடதம் |
| கங்கா | + | ஓகம் | = | கங்கௌகம் |
| மகா | + | ஔதாரியம் | = | மகௌதாரியம் |

பரீக்ஷைவினாக்கள்:—504. இதுவரையுங் கூறப்பட்ட புணர்ச்சிவிதிகளுள் வேறுபட்டு வருவனவும் உளவோ? 505. வடமொழித்தொகைப்பதங்கள் தமிழில் எப்படி வந்து வழங்கும்? 506. வடமொழிச்சந்தி எத்தனை வகைப்படும்?

மெய்யீற்றுப்புணரியல் முற்றிற்று.

Digitized By Roja Muthiah Research Library

# ரு. உருபுபுணரியல்.

## உருபுகள்.

[எட்டுருபுகளுஞ் சாருமிடவகையால் இத்தனையாமென்பது.]

உ௪0. ஒருவ னொருத்தி பலரொன்று பலவென
வருபெய ரைந்தொடு பெயர்முத லிருநான்
குருபு முறழ்தர நாற்பதா முருபே.

இ-ள். ஒருவன் ஒருத்தி பலர் ஒன்று பல என வருபெயர் ஐந்தொடு - ஒருவனும் ஒருத்தியும் பலரும் ஒன்றும் பலவும் என்று கருதவரும் ஐந்துபெயரோடும்,—பெயர் முதல் இருநான்கு உருபும் உறழ்தர - எழுவாய்வேற்றுமையானபெயர் முதல் விளி யீறாகநின்ற எட்டுருபுகளையும் பெருக்க,—உருபு நாற்பது ஆம் - வேற்றுமையுருபுகள் நாற்பதாகும். எ-று.

சொல்லின்மேல்வைத்துக் கூறினுல் இப்பெயர்களோடன்றிப் பொதுப்பெயர்களோடு உருபுகள் வாராவெனப் பொருள்படுதலால் எல்லாப்பெயருமடங்குதற்குப் பொருளின்மேல்வைத்து எனவருபெயரைந்தொடென்றார்.

உ-று. நம்பி, சாத்தி, மக்கள், மரம், மரங்கள் என்னும் இவற்றுள், நம்பி, நம்பியை, நம்பியால், நம்பிக்கு, நம்பியின், நம்பியது, நம்பிகண், நம்பீ என ஒருவனென்னும் வாய்பாட்டுயர்திணையாண்பாற் பெயரோடு எட்டுருபுகளும் வந்தன. மற்றை நான்கு பெயர்களோடும் இப்படியே யொட்டுக. (௧)

[வேற்றுமையுருபுகள் வருதற்குக் காரணமும் வருமிடமும்.]

உ௪௧. பெயர்வழித் தம்பொரு டரவரு முருபே.

இ-ள். உருபு - வேற்றுமையுருபுகள்,—தம்பொருள்தர - தம்பொருளைக்கொடுக்க,—பெயர்வழி வரும் - பெயர்க்குப்பின்வரும். எ-று.

தம்பொருள் என்றது:—கருத்தா, கருமம், (கருமம்—செயப்படுபொருள்) கருவி, முதலியன.

உ-று. நம்பிபெற்றான், நம்பியைப்பெற்றான், நம்பியாற்பெற்றான் எனவரும். மற்றவைகளும் இப்படியே. (உ)

[ஐம்முதலிய ஆறுருபும் நிலைமொழி வருமொழியோடு புணருமாறு.]

உ௪உ. ஒற்றுயிர் முதலீற் றுருபுகள் புணர்ச்சியின்
ஒக்குமன் னப்பெயர் வேற்றுமைப் புணர்ப்பே.

Digitized By Roja Muthiah Research Library

இ-ள். ஒற்று உயிர் முதல் ஈற்று உருபுகள் - நிலைமொழியோடும் வருமொழியோடும் புணரும் மெய்யுயிர்களை முதலும் ஈறுமாகவுடைய ஐம்முதலிய ஆறுருபுகளும்,—புணர்ச்சியின் மன் ஒக்கும்,—இடைச்சொல்லாயினும் இயல்பொடு விகாரத்தினையும் புணர்ச்சிவகையாற் பெரும்பாலும் ஒக்கும்,—வேற்றுமைப்புணர்ப்பு - பேரினிரண்டியலுள்ளும் வேற்றுமைப்புணர்ச்சிக்கண்,—அப்பெயர் - இயல்பொடு விகாரத்தினையுந்த மெய்யுயிர் முதலீற்றுப்பெயர்களை. எ-று.

மன் என்றமையால், சிறுபான்மை ஒவ்வாவென்பதாம்.

இந்தவுருபுகளின் முதலீறுகட்கு மாட்டேற்றால் இவ்விதி கூறவே உருபின் இருமருங்கும் புணரும் நிலைமொழியீறும் வருமொழிமுதலும் படுஞ் செய்கைகளுக்கு விதிபோன இரண்டியலுள்ளும் வேற்றுமைப்புணர்ச்சிக்கென விதித்தவற்றுள் அடங்குமாதலின் அவையும் இந்தமாட்டேற்றால் அமைத்திலரென்பதும், அப்படி அடங்குதற்கு 'மூன்ருறுருபெண்வினைத்தொகைசுட்டீறுகுமுகரமுன்னரியல்பே' என்னுஞ் சூத்திரமே சான்றென்பதும் பெறப்படும்.

உ-ம். நம்பிகண்வாழ்வு; இங்கே 'ஆவியரமுன்வன்மைமிகா' என்றும், 'ணனவல்லினம்வரட்டறவும்பிறவரினியல்புமாகும்வேற்றுமைக்கு' என்றும் சொல்லியபடியே, கண்ணுருபின் முதலுமீறும் இயல்பாயின.

உறிக்கட்டயிர்; இங்கே 'இயல்பினும் விதியினு நின்ற வுயிர்முன் க ச த ப மிகும்' என்றும் 'ண ன வல்லினம் வரட்டறவும்' என்றுஞ் சொல்லியபடியே, கண்ணுருபின் முதலுமீறும் விகாரமாயின.

பழிக்கஞ்சி; இங்கே 'இயல்பினும் விதியினு நின்ற வுயிர்முன் க ச த ப மிகும்' என்றும் 'முற்றுமற் றொரோவழி' என்றுஞ் சொல்லியபடியே குவ்வுருபின் முதலுமீறும் விகாரமாயின

நம்பிக்குப்பிள்ளை; இங்கே 'ஆவி ய ர முன் வன்மை மிகா' என்ற விதியொவ்வாமற் குவ்வுருபின் முதல்வல்லொற்று மிக்கது. மற்றவையும் இப்படியே வருதலை ஆராய்ந்தறிக. (௩)

பரீக்ஷை வினக்கள்:—507. வேற்றுமையுருபுகள் தாஞ்சாருமிடவகையால் எத்தனையாம்? 508. வேற்றுமையுருபுகள் எதன்பொருட்டு எவ்விடத்து வரும்? 509. ஐம்முதலிய வேற்றுமையுருபாறும் நிலைமொழியோடும் வருமொழியோடும் எப்படிப்புணரும்?

---

சாரியை.

[சாரியை வருமாறு.]

உசரு. பதமுன் விகுதியும் பதமு முருபும்
புணர்வழி யொன்றும் பலவுஞ் சாரியை
வருதலுந் தவிர்தலும் விகற்பமு மாகும்.

Digitized By Roja Muthiah Research Library

இ - ள். பதமுன் விகுதியும் பதமும் உருபும் புணர்வழி - பதத்தின்முன் இறுதிநிலையாவது பதமாவது உருபாவது புணருமிடத்து,—சாரியை ஒன்றும் (சாரியை) பலவும் - ஒருசாரியையாயினும் பலசாரியையாயினும்.—வருதலும் தவிர்தலும் விகற்பமும் ஆகும் - வருதலும் வராதொழிதலும் இவ்விரண்டுமொகிய விகற்பமும் ஆகும். எ - று.

உ-ம். (க.) நடந்தனன், நடவாநின்றனன், படித்தனன், படியாநின்றனன் என்பன விகுதிப்புணர்ச்சியில் சாரியைபெற்றேநின்றன. இவைகளில் சாரியை அன்.

(உ.) நடந்தான், நடவாநின்றான், படித்தான், படியாநின்றான் என்பன விகுதிப்புணர்ச்சியில் சாரியைபெறாமலே நின்றன.

(ங.) நடந்தன், நடந்த; ஓடாநின்றன, ஓடாநின்ற என்பன விகுதிப்புணர்ச்சியில் சாரியை விகற்பித்து (=பெற்றும்பெறாதும்) வந்தன.

புளியங்காய், ஆலம்பழம், வேப்பம்பலகை எனப் பதப்புணர்ச்சியில் சாரியைபெற்றேவந்தன.

புளிக்கறி, தினைச்சோறு, நீர்க்குடம் என்பன பதப்புணர்ச்சியிற் சாரியைபெறாதேவந்தன.

நெல்லின்குப்பை, நெற்குப்பை; மண்ணுங்கட்டி, மண்கட்டி என்பன பதப்புணர்ச்சியிற் சாரியைவிகற்பித்து (=பெற்றும பெறாதும்) வந்தன.

அவற்றை, மரத்தை, பழத்தை என்பன உருபுபுணர்ச்சியுட் சாரியைபெற்றேவந்தன.

தன்னை, சருக்கரையை என்பன உருபு புணர்ச்சியுட் சாரியைபெறாதே வந்தன.

ஆனை, ஆவை; கோனை, கோவை; நந்தமை, நம்மை என்பன உருபு புணர்ச்சியுட் சாரியை விகற்பித்து (=பெற்றும்பெறாதும்) வந்தன.

ஆவினுக்கு, மரத்தினுக்கு, என்றனக்கு என்பன சாரியைபலபெற்றுவந்தன. (சு)

[சாரியைகள் இவையென்பது.]

உசச. அன் ஆன் இன்அல் அற்றிற் றத்தம்
தம் நம் நும் ஏ அ உ ஐகுன
இன்ன பிறவும் பொதுச்சா ரியையே.

இ - ள். அன்-ன - அன் முதல் னகரமெய்யீறாகச் சொல்லப்பட்ட பதினேழும்,—இன்ன பிறவும் - இவைபோல்வன பிறவும்,—பொதுச்சாரியை - விகுதிபதமுருபென்னு மூன்று புணர்ச்சிகளிலுந் தனிமொழிகளிலும் வருதலினாலே பொதுச்சாரியையாகும். எ - று.

Digitized By Roja Muthiah Research Library

உ-ம். அன் - ஒன்றன்கூட்டம், ஆன் - ஒருபாற்கு, இன் - வண்டின்கால், அல் - தொடையல், அற்று - பலவற்றை, இற்று - பதிற்றுப்பத்து, அத்து - மரத்திலே, அம் - மன்றம், தம் - எல்லார்தம்மையும், நம் - எல்லாநம்மையும், நும் - எல்லீர்நும்மையும், ஏ - கலனேதூணி, அ - நடந்தது, உ - சாத்தனுக்கு, ஐ - ஏற்றை, கு - உய்குவை, ன் - ஆன் என முறையே காண்க.

இன்னபிறவும் என்றதனால், தன் - அவன்றனை, தான் - அவன்றான், தாம் - அவர்தாம், ஆம் - புற்றஞ்சோறு, ஆ - இல்லாப்பொருள், து - செய்துகொண்டான் என்பனவும், இன்னும் வருவன உளவாயின் அவையுங்கொள்க. (ரு)

பரீக்ஷை வினாக்கள்:—510. பகுபதவுறுப்பாறனுட் சாரியைகளென்பன எவ்வெவற்றிற்கு வேண்டப்படும்? 511. சாரியைகள் விகுதிப்புணர்ச்சி பதப்புணர்ச்சி உருபுபுணர்ச்சியென்னு மூன்றுக்கும் இன்றியமையாதனவோ? 512, ஒருபுணர்ச்சிக்குச்சாரியை ஒன்றேவருமோ பலவருதலுமுண்டோ? 513. சாரியைகளென்பன எவை? 514.இன்னபிறவும் என்றதனாற் கொள்ளப்படுஞ்சாரியைகள் எவை?

---

## உருபு புணர்ச்சிக்குச் சிறப்புவிதி.

உசரு. எல்லா மென்ப திழிதிணை யாயின்
அற்றோ டுருபின் மேலும் முறுமே
அன்றே னம்மிடை யடைந்தற் றுகும்

இ - ள். எல்லாம் என்பது - எல்லாம் என்னும்பொதுப்பெயர்,—இழிதிணை ஆயின் (இடை) அற்று உருபின் மேல் உம் உறும் - அஃறிணையில் வரும்போது அதனோடு ஆறுருபுகளும் புணரின் இடையிலே அற்றுச்சாரியையும் உருபின்மேல் முற்றும்மையும் பெறும்,—அன்றேல் இடை நம் அடைந்து அற்று ஆகும்,—உயர்திணையில் வரும்போது இடையிலே நம்முச்சாரியை யடைந்து உருபின்மேல் முற்றும்மையும் பெறும். எ - று.

உ-ம். எல்லாவற்றையும், எல்லாநம்மையும் எனவரும். மற்றையுருபுகளோடும் இப்படியே யொட்டுக. எல்லாநம்மையும் உயர்திணைத்தன்மைப் பன்மை.

இனி, இரட்டுறமொழிதலால், இழிதிணையாய் இன் அற்றோடு எனக்கொண்டு, எல்லாவற்றினையும் என வருதலுங் கொள்க. (சு)

உசசு. எல்லாரு மெல்லீரு மென்பவற் றும்மை
தள்ளி நிரலே தம்நும் சாரப்
புல்லு முருபின் பின்ன ரும்மே.

Digitized By Roja Muthiah Research Library

இ - ள். எல்லாரும் எல்லீரும் என்பவற்று உம்மை தளளி - ஆறுருபும் புணருமிடத்து எல்லாரும் எல்லீரும் என்னும் இருபெயர்களினுடைய இறுதியிலுள்ள முற்றும்மைகளைத் தள்ளி,—நிரல் தம் நும் சார - முறையே தம்முச்சாரியையும் நும்முச்சாரியையும் அவையிருந்த இடங்களிலே பொருந்த,—உம் உருபின் பின்னர்ப்புல்லும் - அவற்றினாலே தள்ளுண்ட முற்றும்மைகள் உருபுகளின் பின்னேவந்து பொருந்தும். எ - று.

உ-ம். எல்லார்தம்மையும், எல்லாரையும். எ-ம். எல்லீர்நும்மையும், எல்லீரையும். எ-ம். விகற்பித்துவந்தன. மற்றையுருபுகளோடும் இப்படியேயொட்டுக.

நந்தம்மை, நுந்தம்மை எனப் படர்க்கைக்குரிய தம்முச்சாரியை தன்மை முன்னிலைகளில் வருதல் 'ஓரிடம்பிறவிடந்தழுவலுமுளவே' என்னும் வழுவமைதி. (எ)

உசஎ. தான் தாம் நாம் முதல் குறுகும் யான் யாம்
நீ நீர் என் எம் நின் நு மாம்பிற
குவ்வி னவ்வரு நான்கா றிரட்டல.

இ - ள். தான் தாம் நாம் முதல் குறுகும் - தான் தாம் நாம் என்னு மூன்று பெயர்களும் உருபுகள் புணருமிடத்து நெடுமுதல்குறுகி முறையே தன் தம் நம் எனவரும்,—யான் யாம் நீ நீர் என் எம் நின் நும் ஆம் - யான் யாம் நீ நீர் என்னு நான்குபெயர்களும் உருபுகள் புணருமிடத்து முறையே என் எம் நின் நும் எனத்திரியும்,—குவ்வின் அவ்வரும் - இவ்வேழுபெயரோடு குவ்வுருபு புணருமிடத்து நடுவே அகரச்சாரியை வரும்,—நான்கு ஆறு இரட்டல - குவ்வுருபின் அகரச்சாரியை வரினும் ஆறும்வேற்றுமை யுருபுயிர்கள் வரினும் இவ்வேழு விகாரமொழிகளி னிறுதியிலுள்ளனவாகிய தனிக்குறின் முன்னொற்றுக்கள் இரட்டாவாம். எ - று.

உ-ம். (க.) தான்+ஐ=தன்னை, தாம்+ஐ=தம்மை, நாம்+ஐ=நம்மை. எ-ம். யான்+ஐ=என்னை, யாம்+ஐ=எம்மை, நீ+ஐ=நின்னை, நீர்+ஐ=நும்மை. எ-ம். வரும். ஒழிந்த உருபுகளோடும் இப்படியேயொட்டுக.

(உ.) தனக்கு, தமக்கு எனக் குவ்வுருபு புணருமிடத்து அகரச்சாரியை பெற்றன.

(ங.) தனக்கு. எ-ம். தனது, தனது, தன. எ-ம். அகரச்சாரியையும் ஆறும்வேற்றுமை யுருபுயிர்களும் வந்தவிடத்துந் தனிக்குற்றொற்றிரட்டாவாயின.

பிற என்றமிகையால், நீ நீர் என்பன முறையே உன் உம் எனவுந் திரிந்து வருதல் கொள்க. (அ)

உசஅ. ஆமா கோனவ் வணையவும் பெறுமே.

Digitized By Roja Muthiah Research Library

இ - ள். ஆ மா கோ - ஆவென்னும் பசுவின்பெயரும் மாவென்னும் விலங்கின்பொதுப்பெயரும் கோவென்னும் இறைவனை யுணர்த்திநிற்கும்பெயரும்,—னவ்வணையவும் பெறும் - உருபுகள் புணருமிடத்து னகரச்சாரியை பொருந்தவும் பெறும். எ - று.

உ-ம். ஆனை, ஆவை; மானை, மாவை; கோனை, கோவை என விகற்பித்து வருதல்காண்க. மற்றையுருபுகளோடும் இப்படியே ஒட்டுக.

அணையவும் என்ற உம்மையால், குவ்வுருபு புணரும்போது, ஆனுக்கு, மானுக்கு, கோனுக்கு என உகரச்சாரியையும் உடன்பெறுதலும், ஆவுக்கு, மாவுக்கு, கோவுக்கு என உகரச்சாரியை யொன்றே பெறுதலும், ஆவினுக்கு, மாவினுக்கு, கோவினுக்கு என இன்சாரியையும் உகரச்சாரியையும் உடன்பெறுதலும், ஆவினை, மாவினை, கோவினை என இன்னுருபொழிந்த வுருபுகள் புணரும்போது இன்சாரியை பெறுதலுங் கொள்க.

இனி, இரட்டுறமொழிதலால், ஆமா என ஒருசொல்லாய்க்காட்டுப் பசுவை யுணர்த்தி நின்றவிடத்தும், ஆ மானை, ஆமானுக்கு, ஆமாவினுக்கு என இவ்விதிகள் பெறுதலும், அணையுமென்றெழியாது பெறும் என்றமையால், ஆன், மான், கோன், ஆமான் எனத் தனிமொழிக்கண்ணும் னகரச்சாரியைவருதலுங் கொள்க. (௬)

உ௪௯. ஒன்று முதலெட் டீறு மெண்ணூர்
பத்தின்முன் னான்வரிற் பவ்வொற் றொழியமேல்
எல்லா மோடு மொன்ப தூமிற்றே.

இ - ள். ஒன்று முதல் எட்டு ஈறு ஆம் எண் ஊர் பத்தின்முன் - ஒன்றுமுதல் எட்டீறாகிய எண்களோடு புணர்ந்த பத்தென்னுமெண்முன் உருபுகள் புணருமிடத்து,—ஆன் வரின் - ஆன்சாரியை வருமாயின், பவ்வொற்று ஒழிய மேல் எல்லாம் ஓடும் - அப்பத்தென்னு மெண்ணினது பகரமெய்யொன்றுமே நிற்க அதன்மேலே நின்ற எல்லாவெழுத்துங் கெடும்,—ஒன்பதும் இற்று - ஒன்பதென்னு மெண்முன்னும் உருபுகள் புணருமிடத்து ஆன்சாரியை வரின் அதன் பகரமெய் நிற்கமேலேநின்ற எல்லாவெழுத்துங் கெடும். எ - று.

உ-ம். ஒருபானை, ஒருபதை, ஒருபஃதை. எ-ம். ஒன்பானை, ஒன்பதை, ஒன்பஃதை, எ-ம். விகற்பித்து வரும். மற்றவைகளோடும் இப்படியே யொட்டுக.

ஒருபது, ஒருபஃது என விகாரப்பட்டுவரும் பத்தென்பார், எண்ணூர்பத்தென்றார்.

ஆன் வருதலைப் பராமுகமாகச் சொன்னமையால், உகரச்சாரியை இன்சாரியைகளும் வேண்டியவிடத்து வருமெனக் கொள்க. (௧0)

உ௫0. வவ்விறு சுட்டிற் கற்றுறல் வழியே.

Digitized By Roja Muthiah Research Library

இ-ள். வவ்விறு சுட்டிற்கு - வகரமெய்யீற்று மூன்று சுட்டுப்பெயர்களுக்கும்,—அற்று உறல் வழி - உருபுகள் புணருமிடத்து அற்றுச்சாரியை பொருந்துதல் முறையாம். எ-று.

உ-ம். அவற்றை, இவற்றை, உவற்றை என அற்றுச்சாரியைவேண்டியே வருதல் காண்க.

வழியே என்ற மிகையால், அவற்றினை, இவற்றினை, உவற்றினை என இன் சாரியை வருதலும், தனிக்குறின் முன்னொற்று உயிர்வரி னிரட்டாமையுங் கொள்க. ஒழிந்த உருபுகளோடும் இப்படியே யொட்டுக. (௧௧)

௨௫௧. சுட்டின்முன் னாய்த மன்வரிற் கெடுமே.

இ-ள். சுட்டின் முன் ஆய்தம் - அஃது இஃது உஃது என்னு மூன்று சுட்டுப்பெயர்களில் அம்மூன்று சுட்டெழுத்துக்களின் முன்னின்ற ஆய்தம்,— அன்வரின் கெடும் - உருபுகள் புணருமிடத்து அன்சாரியைவரிற் கெடும். எ-று.

உ-ம். அஃது + ஐ = அதனை, அஃதை; இஃது + ஐ = இதனை, இஃதை; உஃது + ஐ = உதனை, உஃதை எனச் சாரியை விகற்பித்து வருதலும் வந்தவழி ஆய்தங்கெடுதலுங் காண்க.

அன்சாரியை வருதலை நோக்கி ஆய்தங்கெட்டவழி, அது, இது, உது என ஆய்தமில்லாச் சுட்டும்பெயர்களாய்ப், பின்பு அன் சாரியை பெறுதலால், ஆய்தமில்லாச் சுட்டுப்பெயர்களுக்கும் இதுவே விதியெனக்கொள்க.

அன் வருதலைப் பராமுகமாகக் கூறலால், குவ்வுருபு புணரும்போது அதற்கு என அன்சாரியை தனித்துவருதலேயன்றி, அதனுக்கு என உகரச்சாரியையுடன் வருதலுங்கொள்க.

௨௫௨. அத்தி னகர மகரமுனை யில்லை.

இ-ள். அத்தின் அகரம் - அத்துச்சாரியையினது அகரவுயிர்,—அகரமுனை இல்லை - இயல்பினும் விதியினு நின்ற அகரவுயிரீற்றின்முன் வரின் வகரவுடம்படுமெய்பெறாது கெடும். எ-று.

உ-ம். மக + அத்து + கை = மகத்துக்கை, மர + அத்து + குறை = மரத்துக்குறை என இரண்டு அகரவீற்றின்முன்னுங் கெட்டது.

பரீக்ஷை வினாக்கள்:—515. எல்லாமென்னும்பெயர் ஐம்முதலிய ஆறுருபும் ஏற்குமிடத்து எவ்வாறும்? 516. எல்லாருமென்னும் படர்க்கைப்பெயரும் எல்லீருமென்னு முன்னிலைப்பெயரும் ஆறுருபும் ஏற்குமிடத்து எவ்வாறும்? 517. தான் தாம் நாம் என்னும் பெயர்கள் ஆறுருபும் ஏற்குமிடத்து எவ்வாறும்? 518. யான் யாம் நீ நீர் என்னும் பெயர்கள் ஆறுருபும் ஏற்குமிடத்து எவ்வாறும்? 519. இவ்வேழுபெயரும் குவ்வுருபு புண

௨௫

Digitized By Roja Muthiah Research Library

ருமிடத்து வேறுவிதியும் உடன்பெறுமோ? 520. விகாரமடைந்துநின்ற இவ்வேழுபெயர்களின் முன்னும் அகரச்சாரியையும் ஆறும்வேற்றுமை யுருபுமிர்களும் புணருமிடத்துத் தனிக்குறின் முன்னொற்றுக்கள் இரட்டுமோ? 521. நீ நீர் என்பன பிறவாறு திரிதலுண்டோ? 522. ஆ மா கோ என்னும் பெயர்கள் உருபுகள் ஏற்குமிடத்து எவ்வாறும்? 523. ஆ முதலியபெயர்கள் குவ்வுரு பேற்குமிடத்து வேறுசாரியையும் உடன்பெறுமோ? 524. ஆ முதலிய பெயர்கள் ஐம்முதலிய உருபுகளேற்குமிடத்து னகரச்சாரியையன்றி வேறுசாரியை பெறுவோ? 525. ஆ முதலிய பெயர்கள் உருபேலாது தனித்துநிற்குமிடத்துச் சாரியை பெறுவோ? 526. ஒன்றுமுத லெட்டெண்களும் பத்தொடு புணர்ந்து ஒருபஃது ஒருபது என இங்ஙன நிற்குமிடத்து, உருபேற்குங்கால் எவ்வாறும்? 527. இவை ஆன் சாரியைபெறுமிடத்து எவ்வாறுவரும்? 528. ஒன்பஃது ஒன்பது என்பன உருபுகளேற்குமிடத்து எங்ஙன முடியும்? 529. வகரவீற்றுச் சுட்டுப்பெயர்கள் உருபுகளேற்குமிடத்து எவ்வாறும்? 530. இச்சுட்டுப்பெயர்கள் அற்றுச்சாரியையோடு வேறுசாரியையும் உடன்பெறுவோ? 531. ஆய்தத்தொடர்க்குற்றுகரவீற்றுச் சுட்டுப்பெயர்கள் உருபேற்குமிடத்து எவ்வாறும்? 532. இவை அன்சாரியை பெறுமிடத்து எவ்வாறுவரும்? 533. ஆய்தமில்லாச் சுட்டுப்பெயர்கள் உருபேற்குமிடத்து எவ்வாறும்? 534. இச்சுட்டுப்பெயர்கள் குவ்வுருபேற்குமிடத்து வேறுசாரியையும் உடன்பெறுமோ? 535. இயல்பினும் விதியினுநின்ற அகரவீற்றுப் பால்பகாவஃறிணைப்பெயர்முன் பெயரேனும் உருபேனும் வரின எவ்வாறும்?

## புறனடை.

[சாரியைக்குப் புறனடை.]

உருக. இதற்கிது சாரியை யெனினள வின்மையின்
விகுதியும் பதமு முருபும் பகுத்திடை
நின்ற வெழுத்தும் பதமு மியற்கையும்
ஒன்ற வுணர்த்த லுரவோர் நெறியே.

இ - ள். இதற்கு இது சாரியை எனின் அளவு இன்மையின் - விகுதிமுதலிய புணர்ச்சிக்கண் இதற்கு இது சாரியையென்று அளவுசெய்து விதித்தனவற்றுள்ளும் ஒழிந்தனவற்றுள்ளுந் தனித்தனிசொல்லப்புகின் அளவுபடாமையால்,— விகுதியும் பதமும் உருபும் பகுத்து - விகுதிப்புணர்ச்சியையும் பதப்புணர்ச்சியையும் உருபுபுணர்ச்சியையுங் கண்டவிடத்துப் பகுத்து,— இடை நின்ற எழுத்தும் பதமும் - நடுவேநின்ற எகரம் அகரம் முதலியவெழுத்துச்சாரியையினையும் அன் ஆன் முதலிய பதச்சாரியையினையும்,— இயற்கையும் - இவ்விரண்டு சாரியையுந் தோன்றாத இயல்பினையும்,— ஒன்ற உணர்த்தல் உரவோர்நெறி - தெரியவறிவித்தல் பெரியோரது கடனாகும். எ - று.

உ-ம். (க.) "ஆனநெய்தெளித்துநானநீவி" விதித்தபொருட்புணர்ச்சிக்கண், "உருபின்முடிபவைபொக்கும்பொருளினும்" என்ற மாட்டேற்றால் அமைந்த னகரமெய்ச்சாரியையன்றி, அகரச்சாரியையும் உடன்வந்தது.

(உ.) இனி விதியாதொழிந்தவற்றின்கண், பாட்டின் பொருள் எனக் குற்றியலுகரத்திற்கு இன்சாரியை வந்தது.

(ங.) தன்கை, என்கைஎனச் சாரியையின்றி இயல்பாகவந்தன. இப்படியே மூவகைப் புணர்ச்சிகளையும் பகுத்துணர்ந்துகொள்க.

[நான்கு புணர்ச்சிக்கும் புறனடை.]

உருச. விகுதி பதஞ்சா ரியையுரு பனைத்தினும்
உரைத்த விதியினோர்ந் தொப்பன கொளலே.

இ-ள். விகுதி பதம் சாரியை உருபு அனைத்தினும - விகுதியும் பதமுஞ் சாரியையும் உருபும் ஆகிய நான்கின் புணர்ச்சியினிடத்தும், — உரைத்தவிதியின் ஓர்ந்து - பொதுப்படச்சொல்லப்பட்ட விதிகளுள் இவ்விதி இதற்குபபொருந்தும் இவ்விதி இதற்குப்பொருந்தாது என வுய்த்துணர்ந்து, — ஒப்பனகொளல் - எவ்விதி எதற்குப்பொருந்துமோ அவ்விதியை அதற்குக் கொள்க. எ-று.

உ-ம். (க.) விகுதிப்புணர்ச்சியுள்: "றவ்வொடு கரவும் மைநிகழ் பல்லவும்" எனப் பொதுப்படவிதித்தாரேனும், விதியுளதென்று நினைந்து, இவ்விகுதிவந்தவிடத்தெல்லாம் இவ்விரண்டுகாலமும் பொருந்தும் என்று கொள்ளற்க. சென்று, சென்றும் என்றவிடத்து இறந்தகாலமும், சேறு, சேறும் என்றவிடத்து எதிர்காலமும் பொருந்துமென்றுகொள்க.

(உ.) பதப்புணர்ச்சியுள்: "அல்வழி இ ஐம் முன்ன ராயினியல்பு மிகலும் விகற்பமு மாகும்" எனப் பொதுப்பட விதித்தாரேனும், விதியுளதென்று நினைந்து, ஆடிதிங்கள், குவளைகண் என இயல்பாமென்றும், பருத்திக்குறிது, யானைக்குதிரை என மிகுமென்றுங் கொள்ளற்க. பருத்திகுறிதுஎன எழுவாய்க்கண்ணும், யானைகுதிரை என உம்மைத்தொகைக்கண்ணும் இயல்பாமெனவும், ஆடித்திங்கள் எனப் பண்புத்தொகைக்கண்ணும், குவளைக்கண் என உவமைத்தொகைக்கண்ணும் மிகுமெனவுங் கொள்க.

(ங.) சாரியைப்புணர்ச்சியுள்: "பதமுன் விகுதியும் பதமு முருபும் புணர்வழியொன்றும் பலவுஞ் சாரியை வருதலுந் தவிர்தலும் விகற்பமு மாகும்" எனப் பொதுப்படவிதித்தாரேனும், விதியுளதென்று நினைந்து, நாட்டினினீங்கினான் என இன்னுருபிற்கு இன்சாரியை வருமென்றும், நாட்டுக்கணிருந்தான் எனக் கண்

Digitized By Roja Muthiah Research Library

னுருபிற்கு இன்சாரியை வாராதென்றுங் கொள்ளற்க; நாட்டின் கணிருந்தான் எனக் கண்ணுருபிற்கு இன்சாரியை வருமென்றும், நாட்டினீங்கினன் என இன்னுருபிற்கு இன்சாரியைவாராதென்றுங் கொள்க.

(௪.) உருபுபுணர்ச்சியுள்: "ஒற்றுயிர் முதலீற் றுருபுகள் புணர்ச்சியி னொக்குமன் னப்பெயர் வேற்றுமைப் புணர்ப்பே" எனப் பொதுப்படவிதித்தாரேனும், விதியுளதென்று நினைந்து, நம்பிகு என உயிரீற்றுயர்திணைப்பெயர்முன் வந்த குவ்வுருபு மிகாதென்றும், நம்பிக்கண் என மன்னென்றமையாற் கண்ணுருபு மிகுமென்றுங் கொள்ளற்க; நம்பிகண் எனக் கண்ணுருபு மிகாதென்றும், நம்பிக்கு எனக் குவ்வுருபு மன்னென்றமையான் மிகுமென்றுங் கொள்க. மற்றவைகளும் இப்படியே காண்க. (௧௫)

[வேற்றுமைப்புணர்ச்சிக்குப் புறனடை.]

உ௫௫. இயல்பின் விகாரமும் விகாரத் தியல்பும்
உயர்திணை யிடத்து விரிந்துந் தொக்கும்
விரவுப் பெயரின் விரிந்து நின்றும்
அன்ன பிறவு மாகுமை யுருபே.

இ - ள். இயல்பின் விகாரமும் விகாரத்து இயல்பும் - வேற்றுமைப் புணர்ச்சிக்கு விதித்த பொதுவிதியோடு தானும் ஒருங்குமுடிதலேயன்றி யப்படிவிதித்த இயல்பிலே விகாரமாகியும் விகாரத்திலே இயல்பாகியும்,—உயர்திணையிடத்து விரிந்துந்தொக்கும் - உயர்திணைப்பெயரிடத்து வெளிப்பட்டும் மறைந்தும்,—விரவுப்பெயரின் விரிந்தும் நின்றும் - பொதுப்பெயரிடத்து வெளிப்பட்டும் மறைந்தும்,—அன்ன பிறவும் ஆகும் - அவைபோல்வன பிறவேறுபாடுகளாகியும்வரும்,—ஐயுருபு - இரண்டாம்வேற்றுமைப்புணர்ச்சி;

வ-று. (௧.) வழிபடு தெய்வ நிற்புறங் காப்ப. எ-ம். மகட்கொடுத்தான், தலைவற்புகழ்ந்தான், தாய்க்கொலை, ஒன்னலர்ச்செகுத்தான். எ-ம். இயல்பாகவேண்டியவிடத்து விகாரமாயிற்று.

(உ.) சனிதின்றான், வுரைபிளந்தான், பந்துதந்தான். எ-ம். மண்சுமந்தான், பொன்கொடுத்தான். எ-ம். காய்தின்றான், தேர்செய்தான், தமிழ்படித்தான். எ-ம். பால்குடித்தான், வாள்பிடித்தான். எ-ம். வரம்பெற்றான், செயமுற்றான், மரம்வெட்டினான். எ-ம். விகாரமாகவேண்டியவிடத்து இயல்பாயிற்று. இவ்விகாரத்தியல்பு வருமொழி வினையாயவிடத்தெனக் கொள்க. வருமொழிவினையாகாது பெயராக இரண்டனுருபும் பயனும் உடன்றொக்க தொகையிலே வேற்றுமைக்கென விதித்த பொதுவிதியோடொருங்கொத்து விகாரத்தில் விகாரமாகும். மண்கூடை புண்ணை என ணகரவீறு, இரண்டனுருபும் பயனும் உடன்றொக்க

தொகையிலும், இயல்பாம் மண்சுமந்தான் என்பது, மண்ணைச்சுமந்தான் என விரிதலால், இரண்டனுருபுமாத்திரந் தொக்க தொகை. மண்கூடை என்பது, மண்ணையுடைய கூடை என விரிதலால், உருபும் பயனுமுடனொருங்கு தொகை. கற்கறித்தான், கட்குடித்தான் எனத் தனிக்குறிலைச் சார்ந்த லகர ளகரம், வருமொழிவினையாயவிடத்தும், வேற்றுமைப்பொதுவிதி யேற்றல் காண்க.

(௩.) நம்பியைக் கொணர்ந்தான், அரசனைவணங்கினான் என உயர்திணைப்பெயரிடத்தே விரிந்தது. ஆடூஉவறிசொல், மகடூஉவறிசொல், பல்லோரறியுஞ்சொல். நான்முகற்றொழுது என உயர்திணைப்பெயரிடத்தே தொக்கது.

(௪.) கொற்றனைக் கொணர்ந்தான் எனப் பொதுப்பெயரிடத்தே விரிந்தது. ஆண்பெற்றாள், பெண்பெற்றாள் எனப் பொதுப்பெயரிடத்தே தொக்கது.

அன்னபிறவும் என்றதனால், தற்கொண்டான், எற்பணியாள் என உறழவேண்டியவிடத்துத் திரிந்தே வருதலும், விளக்குறைத்தான் என இனமெல்லெழுத்து மிகவேண்டியவிடத்து வல்லெழுத்து மிகுதலும், மரங்குறைத்தான் என மவ்வீறுகெட்டு வல்லெழுத்து மிகவேண்டியவிடத்து மகரம் இனமெல்லெழுத்தாகத் திரிதலும், மாடுகொண்டான், பயறுதின்றான் என டறவொற்றிரட்டவேண்டியவிடத்து இரட்டாமையும், மருந்துதின்றான் என மென்றொடர் வன்றொடராகவேண்டியவிடத்து அங்ஙனமாகாமையும், வேறொட்டான், தாடொழுதான் என லகர ளகரந் தகரம்வரத் திரியவேண்டியவிடத்துக் கெடுதலும், குரிசிற்றடிந்தான், அவட்டொடர்ந்தான் என உயர்திணைக்கட் கெடாது திரிந்து நிற்றலும், பிறவுங் கொள்க.

இன்னும், எண்ணின்கணின்ற இறந்ததுதழீஇய இழிவுசிறப்பும்மைகளால், வேற்றுமைக்கென விதித்த பொதுவிதியோடொருங்கொத்து, தெள்குபிடித்தான், எஃகுதொடுத்தான், நாகுகட்டினான், வரகுதந்தான் என இயல்பில் இயல்பாகியும், மகட்பெற்றான், பலாக்குறைத்தான், வடுப்பெற்றான், சுக்குத்தின்றான், பூத்தொடுத்தான், சேப்பெற்றான், கோக்கறந்தான் என வருமொழிவினையாயவிடத்தும் விகாரத்தில்விகாரமாகியும் வருதலே பெரும்பாலனவென்க. (௪௬)

௨௫௪. புள்ளியு முயிரு மாயிறு சொன்முன்
றம்மி னாகிய தொழின்மொழி வரினே
வல்லினம் விகற்பமு மியல்பு மாகும்

இ - ள். புள்ளியும் உயிரும் ஆய் இறு சொன்முன் - மூன்றாம்வேற்றுமைப் புணர்ச்சியுள் ஒற்றும் உயிரும் இறுதியாகநின்ற சொற்களின்முன், —

தம்மின் ஆகிய தொழில் மொழி வரின்,—கருவி கருத்தா உடனிகழ்ச்சி என்பவற்றுட் கருத்தாவாகிய நிலைமொழிப்பொருள்களாலாகிய தொழிற்சொல்வந்தால்,—வல்லினம் விகற்பமும் இயல்பும் ஆகும் - அவ்விடத்து வரும் வல்லினம் வேற்றுமைப் பொதுமுடிபேலாது உறழ்ச்சியும் இயல்பும் ஆகும். எ-று.

இவ்விதியும் இரண்டாம்வேற்றுமைப்புணர்ச்சிபோல ஒப்பனகொள்க.

வ-று. (க.) பேய்கோட்பட்டான், பேய்க்கோட்பட்டான்; சூர்கோட்பட்டான், சூர்க்கோட்பட்டான்; புலிகோட்பட்டான், புலிக்கோட்பட்டானென வல்லினம் ஒருகான் மிகுந்தும் ஒருகாலியல்பாகியும் விகற்பித்தன.

(உ.) பேய்பிடிக்கப்பட்டான், புலிகடிக்கப்பட்டான் என வல்லினம் இயல்பாயின.

உம்மையால், அராத்தீண்டப்பட்டான், சுரப்பாயப்பட்டான் என வேற்றுமைப்பொதுவிதியான் மிக்கு முடிவனவே பெரும்பாலனவென்க, (கஎ)

[எழுத்ததிகாரத்துக்குப் புறனடை.]

உருஎ. இதற்கிது முடிபென் றெஞ்சா தியாவும்
விதிப்பள வின்மையின் விதித்தவற் றியலான்
வகுத்துரை யாதவும் வகுத்தனர் கொளலே.

இ-ள். இதற்கு இது முடிபு என்று - இதற்கு இது முடிபென்று,—யாவும் எஞ்சாது விதிப்ப - இவ்வதிகாரத்துள் விதிக்கத் தகுவனவற்றையெல்லாங் குறையாமல் தனித்தனி அளவு செய்து விதிக்கப்புகின்,—அளவு இன்மையின் - அதற்கு ஓரளவில்லாமையால்,—விதித்தவற்று இயலான் - வகுத்து விதித்தவற்றினுடைய இலக்கணங்களை ஏதுவாகக்கொண்டு,—வகுத்து உரையாதவும் வகுத்தனர் கொளல் - வகுத்து விதியுரையாதனவற்றையுங் கருதலளவையால் வகுத்து விதியுரைத்துக் கொள்க. எ-று.

விதிப்ப எனற்பாலது அகரங் குறைந்து நின்றது.

வ-று. (க.) எழுத்தியலுள், "மொழிமுதற் காரண மாமணுத் திரளொலி யெழுத்து" என உரைத்தமையால், "கட்புல னில்லாக் கடவுளைக் காட்டுஞ் சட்டகம் போலச் செவிப்புல வொலியை யுட்கொளற் கிடுமுரு பாம்வடி வெழுத்தே" எனப் பிறர்கூறியவாறு, இவ்வொலிவடிவைக் காட்டுதற்கு ஓர் கருவியாக எழுதிக்கொள்ளப்பட்டது வரிவடிவெழுத்தெனக்கொள்க.

(உ.) பதவியலுள், "அன் ஆன் அள் ஆள்" என்னுஞ் சூத்திரத்திலே முறையே அன் ஆன் விகுதி ஆண்பாற்கென உரைத்தமையால், பெருமாள் என்னும் பதம் பெருமையையுடையானென்னும் பொருள்தோன்றநின்ற பெருமான் என்னும் பதத்தினது ஆன் விகுதி ஆள்விகுதியாக ஒரோவிடத்தேதிரிந்து ஆண்பாலையே யுணர்த்தி நின்றதெனக் கொள்க.

Digitized By Roja Muthiah Research Library

(௩.) உயிரீற்றுப்புணரியலுள், "இயல்பினும் விதியினு நின்ற வுயிர்முன் க ச த ப மிகும்" என்று சொன்னமையால், "ண ன வல்லினம்வரட் டறவும்" என்றவிடத்து டகரமும் வல்லினமாதலின் மிகுந்ததெனக்கொள்க.

(௪.) மெய்யீற்றுப்புணரியலுள், "நுந்தம் எம் நம் மீறு மவ்வரு ஞநவே" என உரைத்தமையால், அம்மென்னுஞ் சொல்லிறுதி மகரமுங் குற்றொற்றாதலின் தன்னோடுமயங்காத மெல்லினம் வரின் அதுவாய்த் திரிந்து அந்நலம் என அழகினது நலமென்னும் பொருளதாய் வருமெனக்கொள்க.

(௫) உருபுபுணரியலுள், "வவ்வீறு சுட்டிற் கற்றுறல் வழியே" என உரைத்தமையால், அதுபோலும் வினவும் எவற்றை என அற்றுச்சாரியை பெறுமெனவும், இரண்டாம்வேற்றுமைக்கும் மூன்றாம் வேற்றுமைக்கும் புறனடையுரைத்தமையால், ஏழாம் வேற்றுமையும் வரைபாய் வருவடை, "மண்புகுந்தும் விண்பறந்து மாலுமயனுங்காணு வொருபொருள்" என வேற்றுமைப் பொதுவிதியேலாது சிறுபான்மைவருமெனவுங் கொள்க.

இன்னும், இவ்வைந்தியலுள்ளும் வகுத்துரையாதனவற்றையெல்லாந் துன்பப்படாது இதுவே இடமாக முடித்துக்கொள்க. (கஅ)

**பரீக்ஷை** வினாக்கள்:—536. விகுதி முதலிய புணர்ச்சிகளிலே சாரியைப்பேறு தனித்தனிசொல்லாததென்னை? 537. அளவுபடாவெனின் யாது செய்தல்வேண்டும்? 538. விகுதிமுதலிய நான்கின் புணர்ச்சிகளிடத்தும் பொதுப்படச்சொல்லப்பட்ட விதிகளை எவ்வாறமைத்தல்வேண்டும்? 539. வேற்றுமைப்புணர்ச்சிக்கென மேற்கூறிய பொதுவிதிபெறாது இரண்டாம்வேற்றுமைப்புணர்ச்சியில் வேறுபட்டுவருவனவும் உளவோ? 540. இரண்டாம்வேற்றுமைப்புணர்ச்சியில் விகாரத்தியல்பு எவ்விடத்துக்கொள்ளப்படும்? 541. விகாரத்தியல்புக்கு இவகேகாட்டிய ஈற்றுட் சில இரண்டனுருபும் பயனுமுடன்றொக்கதொகையிலும் இயல்பாதலில்லையோ? 542. இரண்டாம்வேற்றுமைப்புணர்ச்சியில் வருமொழிவினையாயவிடத்தும் விகாரத்தில் விகாரமாய்வரும் மெய்யீறு உண்டோ? 543. வேற்றுமைப்புணர்ச்சியுள் உறழவேண்டியன இரண்டாம்வேற்றுமைப்புணர்ச்சியில் எவ்வாறும்? 544. வேற்றுமைப்புணர்ச்சியில் இயல்பாமெனவிதிக்கப்பட்ட குற்றுகரங்கள் இரண்டாம்வேற்றுமைப்புணர்ச்சியில் எவ்வாறும்? 545. உயிரீற்றுப்புணர்ச்சியில் வருமொழிவினையாயவிடத்தும் விகாரத்தில் விகாரமடைவன எவை? 546. இரண்டனுருபு உயர்திணைபெயர் பொதுப்பெயர்களிடத்து எவ்வாறுநிற்பது தகுதி? 547. தொகுதல் எவ்விடத்தே தகுதியாயும் எவ்விடத்தே வலிந்துகோடலாயும் வரும்? 548. வேற்றுமைப்புணர்ச்சிக்கென மேற்கூறிய விதிபெறாது மூன்றாம்வேற்றுமைப்புணர்ச்சியுள் வேறுபட்டு வருவனவும் உளவோ? 549. இவ்வெழுத்ததிகாரத்தில் வகுத்து விதியுரையாதவைகளுக்கு யாதுசெய்யலாம்?

உருபு புணரியன் முற்றிற்று.

எழுத்ததிகார முற்றுப்பெற்றது.

Digitized By Roja Muthiah Research Library

இரண்டாவது

# சொல்லதிகாரம்.

[சொல்லினது அதிகரித்தலையுடையபடலம்.]

## க. பெயரியல்.

[கடவுள்வணக்கமும் அதிகாரமும்.]

உருஅ. மூச்சக நிழற்று முழுமதி முக்குடை
அச்சுத னடிதொழு தறைகுவன் சொல்லே.

இ - ள். மூச்சகம் நிழற்றும் முழுமதி முக்குடை அச்சுதன் அடிதொழுது - மூன்றுலகத்திற்கும் நிழலைச்செய்யும் நிறைந்தமதிபோலும் மூன்றுகுடையையுடைய அழியாத கடவுளுடைய அடிகளைவணங்கி,— அறைகுவன் சொல் - சொல்லுவேன் (முன்னதிகாரத்துட்சொல்லிய எழுத்தினலாகிய) சொல்லிலக்கணத்தை. எ - று. ஏகாரம் ஈற்றசை.

மூன்றுகுடை: ஒன்றன்மீதொன்றாக அடுக்குற்ற மூற்றைக்குடை. சொல் (சொல்லிலக்கணம் என்னும்பொருட்டாதலின்) ஆகுபெயர். (க)

### சொல்லின்பொதுவிலக்கணம்.

[சொல் இன்னதென்பது.]

உருகூ. ஒருமொழி தொடர்மொழி பொதுமொழி யென்றா
இருதிணை யைம்பாற் பொருளையுந் தன்னையும
மூவகை யிடத்தும் வழக்கொடு செய்யுளின்
வெளிப்படை குறிப்பின் விரிப்பது சொல்லே.

இ - ள். ஒருமொழி தொடர்மொழி பொதுமொழி என்றா - ஒருமொழியுந் தொடர்மொழியும் பொதுமொழியும் என மூன்றுபிரிவினதாகி,—இருதிணை ஐம்பாற் பொருளையும் தன்னையும் - இருதிணையாகிய ஐம்பாற்பொருளையும் அப்பொருளையன்றித் தன்னையும்,— மூவகையிடத்தும் - மூன்றிடத்திலும்,—வழக்கொடுசெய்யுளின் - வழக்கினிடத்துஞ் செய்யுளிடத்தும்,—



Digitized By Roja Muthiah Research Library

வெளிப்படை குறிப்பின் விரிப்பது சொல் - வெளிப்படையாலுங் குறிபபி ஞலும் விளக்குவது சொல்லாகும். எ - று.

பொருளையுந்தன்னையுமென்றதனல், உயிர்க்கு அறிவானது கருவியாய் நின்று தன்னையும் பொருளையுமுணர்த்துமாறுபோல, ஒருவருக்குச்சொல் லானது கருவியாய்நின்று தன்னையும் இருதிணையைம்பாற்பொருளையு முண ர்த்துமென்பதுபெற்றும்.

பற்பலவுறுப்புகளையும், விஷயங்களையும் பற்றிப்பேசும் நாவே நாவை ப்பற்றிப் பேசுதற்குங் கருவியாய் வாய்ந்ததுபோலச் சொல்லும் பற்பல வி ஷயங்களையுமுணர்த்துதற்குக் கருவியாயிருத்தலும் அன்றிச் சொல்லைப்பற் றியுணர்த்துதற்குங் கருவியாயிருந்தமையறிக.

"வயிரவூசியுமயன்வினையிரும்புஞ், செயிரறுபொன்னைச்செம்மைசெய் யாணியுந், தமக்கமைகருவியுந்தாமாமவைபோல், உரைத்திறமுணர்த்தலுமு ரையதுதொழிலே" என்றார் ஆசிரியரகத்தியனுருமென்க.

பொருள்—உள்பொருள், இல்பொருளெனவும்; மெய்ப்பொருள், பொ ய்ப்பொருள் எ - ம். சித்துப்பொருள், சடப்பொருளெனவும்; நித்தியப் பொருள், அநித்தியப்பொருள் எ - ம். உருவப்பொருள், அருவப்பொரு ள் எ — ம். காட்சிப்பொருள், கருத்துப்பொருள் எ — ம். இயற்கைப்பொ ருள், செயற்கைப்பொருள் எ - ம். இயங்கியற்பொருள், நிலையியற்பொரு ள் எ - ம். முதற்பொருள், சினைப்பொருள் எ - ம். பலவாற்றுனும் வகுத் துக்கூறப்படும் இருதிணை ஐம்பாற்பொருள் என்றுணர்க. (உ)

[மூவகைமொழி]

உகூ0. ஒருமொழி யொருபொரு ளனவாந் தொடர்மொழி
பல்பொரு ளனபொது விருமையு மேற்பன.

இ - ள். ஒருமொழி ஒருபொருளன ஆம் - ஒருமொழிகளாவன பகா ப்பதமேனும் பகுபதமேனும் ஒன்றுநின்று தத்தமொருபொருளைத்தருவன வாம்,—தொடர்மொழி பலபொருளன - தொடர்மொழிகளாவன அவ்விருவ கைப்பதங்களுந் தன்னேடும் பிறிதோடும் அல்வழிவேற்றுமைப்பொருளோக் கத்தால் இரண்டுமுதலியவாகத்தொடர்ந்துநின்று இரண்டுமுதலிய பலபொரு ளைத்தருவனவாம்,—பொது (மொழி) இருமையும் ஏற்பன - பொதுமொழி களாவன ஒன்றாய்நின்று ஒருபொருளைத்தந்தும் அதுவே தொடர்ந்துநின் றுபலபொருளைத்தந்தும் இவ்விரண்டற்கும் பொதுவாய்நிற்பனவாம். எ-று.

வ-று. (க) நிலம், நிலத்தன், நட, நடந்தான், தில், மன், தவ, நனி எனவ ருவன ஒருமொழிகள். ஒருமொழியெனினுந் தனிமொழியெனி னும்ஒக்கும்.

(உ) நிலம்வலிது, அதுகொல், சாலப்படகை, நிலங்கடந்தான், நிலத்தை க்கடந்தான், நிலத்தைக்கடந்தநெடுமால் எனவருவன தொடர் மொழிகள்.

(௬) எட்டு, தாமரை, வேங்கை, எழுந்திருந்தான் எனவருவன பொது மொழிகள். இவை ஒருமொழிகளாய் ஒருபொருளைத்தருவதன்றி, எள்ளைத்து, தாவுகின்றமரை, வேகின்றகை, எழுந்துபின் இருந்தான் எனத்தொடர்மொழிகளாய்ப் பலபொருளைத்தருதலுங்காண்க. [து - உண்ணென்னும் ஏவல்வினை] (௬)

[இருதிணை.]

உ௬௧. மக்க டேவர் நரக ருயர்திணை
மற்றுயி ருளஉவு மில்லவு மஃறிணை.

இ - ள். மக்கள் தேவர் நரகர் உயர்திணை - மக்களுந் தேவரும் நரகரும் உயர்திணையாகும்,—மற்று உயிர் உள்ளவும் இல்லவும் அஃறிணை - அவரையொழிந்த விலங்குமுதலாகிய உயிருள்ளவையும் நிலம் நீர் முதலாகிய உயிரில்லாதவையும் அஃறிணையாகும். எ - று.

இம்மூவகையோருடைய உடம்பையும் உயிரையும் வேருகக் குறிக்கும்போது, அவையும் அஃறிணையாம். திணை - சாதி. உயர்திணை - உயர்வாகிய சாதி; அஃறிணை (அல்+திணை) அல்லாதசாதி. (௪)

[ஐம்பால்.]

உ௬உ. ஆண்பெண் பலரென முப்பாற் றுயர்திணை.

இ - ள். ஆண்பெண் பலர்என முப்பாற்று உயர்திணை - ஆண்பாலும் பெண்பாலும் பலர்பாலும் என்று மூன்றுபாலினையுடைத்தாகும் உயர்திணை.

ஆடவர், காளையர் என்பன முதலிய ஆண்பன்மையையும், பெண்டிர், மங்கையர் என்பன முதலிய பெண்பன்மையையும், மக்கள், அவர் என்பன முதலிய அவ்விருவர்பன்மையையும் அடக்கிப் பலர்பால் என்றார். பின் பலவின்பால்என்பதும் அது. (௫)

உ௬௩. ஒன்றே பலவென் றிருபாற் றஃறிணை.

இ - ள். ஒன்று பல என்று இருபாற்று அஃறிணை - ஒன்றன்பாலும் பலவின்பாலும் என்று இரண்டுபாலினையுடைத்தாகும் அஃறிணை. எ - று.

அஃறிணையுள்ளும், களிறு, சேவல் என்பன முதலிய ஆண்பாலும், பிடி, பேடை என்பன முதலிய பெண்பாலும் உளவெனினும், அவ்வாண்பாலும் பெண்பாலும், உயிருள்ளனவற்றுள் சிலவற்றிற்கும், உயிரில்லாதனவற்றிற்கும், இல்லாமையால், அப்பகுப்பொழித்து, எல்லாவற்றிற்கும்பொருந்த ஒன்றன்பால் பலவின்பாலென்றார். (௬)

[திணைபால்களுக்குப்புறனடை.]

உ௬௪. பெண்மைவிட் டாணவா வுவபே டாண்பால்
ஆண்மைவிட் டல்ல தவாவுவ பெண்பால்
இருமையு மஃறிணை யன்னவு மாகும்.

Digitized By Roja Muthiah Research Library

இ - ள். பெண்மை விட்டு ஆண் அவாவுவ பேடு ஆண்பால் - பெண்டன்மையைவிட்டு ஆண்டன்மையை அவாவுவனவாகிய பேடுகள் உயர்திணையாண்பாலாகும், — ஆண்மைவிட்டு அல்லது அவாவுவ (பேடு) பெண்பால் - ஆண்டன்மையைவிட்டுப் பெண்டன்மையையவாவுவனவாகிய பேடுகள் உயர்திணைப்பெண்பாலாகும், — இருமையும் அஃறிணை அன்னவும் ஆகும் - இவ்விருவகைப்பேடுகளும் உயர்திணையாமன்றி அஃறிணையையொப்பனவும்மாகும். எ - று.

வ-று. "பெண்ணவாயாணிழந்தபேடியணியாளோ - கண்ணவாத்தக்ககலம்" எனப்பெண்ணிலக்கணஞ் சிறந்தமையினாலே பெண்பாற்பட்டது. ஆண்பாற்பட்டதற்கும், அஃறிணையையொத்துநின்றதற்கும், இலக்கியம்வந்தவழிக் காண்க.

பேடு, அழிதூ, அலி, மகண்மா, நபுஞ்சகம் என்பன ஒருபொருட்சொற்கள். பெண்மைவிட்டு ஆண்டன்மை அவாவிய நபுஞ்சகத்தை அலியெனவும், ஆண்மைவிட்டுப் பெண்டன்மையவாவிய நபுஞ்சகத்தைப் பேடெனவும் சேனாவரையர் கூறினர்.

கு. "பெண்மைசுட்டியவுயர்திணைமருங்கி, னாண்மைதிரிந்தபெயர்நிலைக்கிளவியுந், தெய்வஞ்சுட்டியபெயர்நிலைக்கிளவியு, மிவ்வெனவறியுமந்தந்தமக்கிலவே, யுயர்திணைமருங்கிற்பால்பிரிந்திசைக்கும்." என்னுந் தொல்காப்பியத்துள்ளுங் காண்க. (எ)

[மூன்றிடத்துஞ் சொற்றன்னையும் பொருளையும் உணர்த்துதல்.]

உசுகு. படர்க்கைவினை முற்று நாமங் குறிப்பிற்
பெறப்படுந் திணைபா லனைத்து மேனை
யிடத்தவற் றொருமைப் பன்மைப் பாலே.

இ - ள். படர்க்கைவினைமுற்று (படர்க்கை) நாமம் குறிப்பின் - படர்க்கைவினைமுற்றுச்சொல்லையும் படர்க்கைப்பெயர்ச்சொல்லையும் முன்குறித்தால்,—திணை பால் அனைத்தும் பெறப்படும் - பின் அவ்விருவகைச்சொல்லுங் கருவியாக இருதிணையும் ஐம்பாலும் பெறப்படும்,— ஏனைஇடத்து (வினைமுற்று நாமம்குறிப்பின்) - ஒழிந்த தன்மைமுன்னிலைகளின் வினைமுற்றுச்சொல்லையும் பெயர்ச்சொல்லையும் முன்குறித்தால்,—அவற்று ஒருமைப் (பால்) பன்மைப்பால் (பெறப்படும்) - பின் அந்நால்வகைச்சொல்லுங் கருவியாக இருதிணையைம்பாலுள் ஒருமைப்பாலும் பன்மைப்பாலும் பெறப்படும். எ - று.

வ-று. (க) நடந்தான், நடந்தாள், நடந்தார், நடந்தது, நடந்தன எ - ம். அவன், அவள், அவர், அது, அவை எ - ம். படர்க்கைவினைமுற்றுச்சொல்லும், படர்க்கைப்பெயர்ச்சொல்லும், முன்பு தம்மையுணர்த்திப்,பின்பு இருதிணையைம்பாற்பொருளையுமுணர்த்தின.

Digitized By Roja Muthiah Research Library

(உ) நடந்தேன், நடந்தேம் எ - ம். யான், யாம் எ - ம். தன்மைவினைமுற்றுச்சொல்லுந் தன்மைப்பெயர்ச்சொல்லும், நடந்தாய், நடந்தீர் எ - ம். நீ, நீர் எ - ம். முன்னிலைவினைமுற்றுச்சொல்லும், முன்னிலைப்பெயர்ச்சொல்லும், முன்னே தம்மையுணர்த்திப், பின்பு இருதிணையைம்பாலுள் ஒருமைப்பாலும் பன்மைப்பாலுமுணர்த்தின.

மூவிடங்களுள் ஒன்றற்குரிய வினைமுற்றும் பெயருந் தம்மையும்பொருளையும் இப்படியுணர்த்துமெனவே, இவ்விடங்களுக்குப் பொதுவாகிய வினைமுற்றுக்களும் பெயர்களும் பொதுமைநீங்கி ஓரிடத்திற்குரியவாகியும், எச்சவினைமுதலியனவும் இடைச்சொல்லும் உரிச்சொல்லும் பெயர்வினைகளைச்சார்ந்தும், இப்படியே தம்மையும் பொருளையும் உணர்த்துமெனக் கொள்க. (அ)

[மூவிடம்.]

உ௬௬. தன்மை முன்னிலை படர்க்கைமூ விடனே.

இ - ள். மூவிடன் தன்மை முன்னிலை படர்க்கை — மூவிடமாவன தன்மையும் முன்னிலையும் படர்க்கையுமாம். எ - று.

வ - று. யான், நீ, அவன் எ - ம். வந்தேன், வந்தாய், வந்தான் எ - ம். வரும்.

[வழக்கு இன்னதென்பது.]

உ௬எ. இலக்கண முடைய திலக்கணப் போலி
மரூஉவென் றாகு மூவகை யியல்பும்
இடக்க ரடக்கன் மங்கலங் குழூஉக்குறி
எனுமுத் தகுதியோ டாறும் வழக்கியல்.

இ - ள். இலக்கணமுடையது இலக்கணப்போலி மரூஉ என்று ஆகும் மூவகைஇயல்பும் - இலக்கணமுடையதென்றும் இலக்கணப்போலியென்றும் மரூஉவென்றும் வழங்கு மூவகைஇயல்புவழக்கும்,—இடக்கரடக்கல் மங்கலம் குழூஉக்குறியெனும் முத்தகுதியோடு - இடக்கரடக்கலென்றும் மங்கலமென்றுங் குழூஉக்குறியென்றும் வழங்குமூன்றுதகுதி வழக்குடனேகூட,— ஆறுஆம் வழக்கு இயல் - அறுவகைப்படும் வழக்கிலக்கணம். எ - று.

(க) இயல்புவழக்கு.

இலக்கணமுடையதென்பது இலக்கணநெறியால் வருவது. இலக்கணப்போலியென்பது, இலக்கணமில்லையாயினும், இலக்கணமுடையதுபோல் அடிப்பட்டசான்றோராலே தொன்றுதொட்டு வழங்கப்பட்டுவருவது. மரூஉவென்பது, தொன்றுதொட்டு வருதலின்றி, இடையிலே, சிலவெழுத்துக்கெட்டும், சிலவெழுத்துத்திரிந்தும், சிலவெழுத்துத்தோன்றியும், இலக்கணத்திற்சிதைந்து, தானே மருவிவழங்குவது. இம்மூன்றும், எப்பொருட்கு எச்

Digitized By Roja Muthiah Research Library

சொல் அமைந்ததோ அப்பொருளை அச்சொல்லாற்கூறுதலால், இயல்புவழக்கெனப்பட்டன.

வ - று. (க) நிலம், நீர், தீ, காற்று, வானம், நன்னிலம், தண்ணீர் வெண்ணீர் இவை முதலானவை இலக்கணமுடையன.

(உ) இன்முன்னென்பதை முன்றில்லென்றும், நகர்ப்புறமென்பதைப் புறநகரென்றும், புறவுலாஎன்பதை உலாப்புறமென்றும், கண்மீஎன்பதை மீகண்ணென்றும் கோவில்லென்பதைக் கோயில்லென்றும், பொதுவில்லென்பதைப் பொதியில்லென்றும், வழங்கும் இவை முதலானவை இலக்கணப்போலி.

(௩) அருமருந்தன்னபிள்ளை என்பதை அருமந்தபிள்ளை என்றும், மலையமானாடு என்பதை மலாடு என்றும், சோழநாடு என்பதைச் சோணாடு என்றும், பாண்டியநாடு என்பதைப் பாண்டிநாடு என்றும், தொண்டைமானாடு என்பதைத் தொண்டைநாடு என்றும், அ இ என்னுஞ் சுட்டுக்களை அந்த இந்த என்றும், மரவடி என்பதை மராடி என்றும், குளவாம்பல் என்பதைக் குளாம்பல் என்றும், யாவர் என்னும் விகுப்பெயரை யார், ஆர் என்றும், யார் என்னுங்குறிப்புவினையை ஆர் என்றும், எவன் என்னுங் குறிப்புவினையை என், என்னை, என்ன என்றும், தஞ்சாவூர் என்பதைத் தஞ்சை என்றும் வழங்கும் இவைமுதலானவை மரூஉ.

## (உ). தகுதிவழக்கு.

இடக்கரடக்கலென்பது நன்மக்களிடத்தே சொல்லத்தகாதசொல்லை அவ்வாய்பாடுமறைத்துப் பிறவாய்பாட்டாற்சொல்வது. மங்கலமென்பது மங்கலமில்லாததை யொழித்து மங்கலமாகச்சொல்வது. குழூஉக்குறியென்பது, ஒவ்வொருகூட்டத்தார் யாதாயினும் ஒரு காரணம்பற்றி ஒருபொருளினது சொற்குறியை யொழித்து வேறொரு சொற்குறியாற் சொல்வது. இம்மூன்றும், இப்பொருளையறிதற்கு அமைந்துகிடந்த இச்சொல்லாற்சொல்வது தகுதியன்று வேறொருசொல்லாற் சொல்வது தகுதியென்று நினைந்து கூறுதலால், தகுதிவழக்கெனப்பட்டன.

வ-று. (க) மலங்கழீஇவருதும் என்பதைக் கால்கழீஇவருதும் என்றும், பீ என்பதைப் பகரவீ என்றும், பவ்வீஎன்றும் வழங்கும் இவைமுதலானவை இடக்கரடக்கல்.

(உ) செத்தாரைத்துஞ்சினார் என்றும், ஓலையைத் திருமுகம் என்றும், காராட்டை வெள்ளாடு என்றும், இடுகாட்டை நன்காடு என்றும் வழங்கும் இவைமுதலானவை மங்கலம்.

(௩) பொற்கொல்லர் பொன்னைப் பறி என்றும், யானைப்பாகர் ஆடையைக் காரை என்றும், வேடர் கள்ளைச் சொல்விளம்பி என்றும் வழங்கும் இவைமுதலானவை குழூஉக்குறி. (௪0)

Digitized By Roja Muthiah Research Library

[செய்யுள் இன்னதென்பது.]

உகூஅ. பல்வகைத் தாதுவி னுயிர்க்குடல் போற்பல
சொல்லாற் பொருட்கிட னாக வுணர்வினின்
வல்லோ ரணிபெறச் செய்வன செய்யுள்.

இ - ள். பல்வகைத் தாதுவின் உயிர்க்கு உடல்போல் - தோல் இரத்தம் இறைச்சி மேதை எலும்பு மச்சை சுவேதநீர் என்னும் எழுவகைத் தாதுக்களினால் உயிர்க்கு இடமாக இயற்றப்பட்ட உடம்புபோல,— பல சொல்லால் பொருட்கு இடன்ஆக - இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொல் என்னு நால்வகைச்சொற்களாற் பொருளுக்கு இடமாக,— உணர்வினின் வல்லோர் அணிபெறச் செய்வன செய்யுள் - கல்வியறிவினாற் செய்யுள் செய்யவல்லவர் அலங்காரம்பெறச் செய்வன செய்யுளாம். எ - று.

உணர்வினின் வல்லோர் செய்வன என்றதினால், அப்பலசொற்களும் (அசை சீர் அடி தொடைகளாய்) அமைதற்கேற்றவாறே செய்யப்படுவன வென்று வகுத்துணர்க. இங்ஙனம் வகுத்துணராவிடின், வாசகநடைக்குஞ் செய்யுணடைக்கும் பேதமில்லாமல், ஒன்றைக்குறித்துச் சொல்லுமிலக்கணம் மற்றொன்றற்கு மொத்துவருதலாகிய அதிவியாத்தியென்னுங் குற்றமுண்டாமென்றறிக.

உபமானமாக எடுத்துக்கூறிய உடலினும், என்புகள்-இருக்கவேண்டிய இடத்தும், அவற்றின்பொருத்து-இருக்கவேண்டுமிடத்தும், தோல்- இருக்கவேண்டுமிடத்தும், மற்றைத் தாதுக்கள் -விசேடமாயிருக்கவேண்டுமிடத்தும், நுண்ணிதினமைந்திருத்தல் பிரத்தியக்ஷமாயறியத்தக்கனவாதலின், உவமையை விரித்தோதாது உடல்போலென்று கூறினாரெனினும், அவ்வாறு வகுத்தறிதலே யீண்டைக்கியைபுடைத்தாமென்பதறிக.

இப்படிச்சொல்லவே, எழுத்தானது சொல்லாதலால், எழுத்துச் சொற் பொருள் அணி நான்கினாலும் நடப்பது செய்யுளென்பதாயிற்று. செய்யுள், யாப்பு, பாட்டு என்பன ஒருபொருட்சொற்கள்.

வ - று. "வருங்குன்றமொன்றுரித்தோன்றில்லையம்பலவன்மலயத், திருங்குன்றவாணரிளங்கொடியேயிடரெய்தலெம்மூர்க், கருநகுன்றமாளிகை நுண்களபத்தொளிபாயநும்மூர்க், கருங்குன்றம்வெண்ணிறக்கஞ்சுக மேய்க்குங்கனங்குழையே" இக்கட்டளைக்கலித்துறைச்செய்யுள் இடமணித்தென்றல் என்னும் பொருளுக்கிடமாகி தன்மை யுவமை யுருவக வணிகளும் பிறவுமுடைத்தாகி வருதல் காண்க. இதன்பொருள். இளங்கொடியே, கனங்குழையே, யானையையுரித்தவரும் சிதம்பரத்திலே கனகசபையில் வீற்றிருந்தருளும் நடராசனும் ஆகிய ஈசனுடைய மலையில் பெருமையானவேடர்மகளாகிய இளங்கொடிபோன்றவளே, பாரமான தோட்டையணிந்தவளே நீ (யான்பிரிந்து போவது தூரமான இடமென்று) வருந்தாதொழி. எம்மூரின்கணுள்ளவாகிய பெரியமலைபோலும் மாளிகைகளின் நுண்ணிய வெண்சாந்தொளி பரத்தலினு

Digitized By Roja Muthiah Research Library

ல் நும்மூரின் கண்ணுள்ளவாகிய கருங்கன்மலைகள் வெண்ணிறச்சட்டை இட்டாற்போலக் காணப்படும். எ - று. பிறவுமன்ன. வருங்குன்றம் - யானை. குன்றவாணர் - வேடர். களபம் - சாந்து. கஞ்சுகம் - சட்டை. எய்க்கும் - ஒக்கும். குழை - தோடு, தோட்டையணிந்தவள். தில்லை - சிதம்பரமென்னுந்தலம். அம்பலவன் - கனகசபையில் வீற்றிருக்கும் நடராயன்.

மாளிகைகளின் வெண்சாந்தொளி பரக்கக் கருங்கன்மலைகள் வெண்ணிறச்சட்டையிட்டாற்போலிருக்கும் என்றதனால் மாளிகையையுடைய தலைவனூர்க்கும் கருங்குன்றங்களையுடைய தலைவியூர்க்கும் அணிமை கூறியவாறு தெரியப்படும். (௧௧)

[வெளிப்படைகுறிப்பு]

௨௬௬. ஒன்றொழி பொதுச்சொல் விகாரந் தகுதி
ஆகு பெயரன் மொழிவினைக் குறிப்பே
முதறொகை குறிப்போ டின்ன பிறவுங்
குறிப்பிற் றருமொழி யல்லன வெளிப்படை.

இ - ள். ஒன்று ஒழி பொதுச்சொல் - இருதிணையாண்பெண்ணுள் ஒன்றனையொழிக்கும் பொதுச்சொல்லும், — விகாரம் - வலித்தன்முதலாகிய ஒன்பது விகாரச்சொல்லும், — தகுதி - மூவகைத்தகுதிவழக்குச்சொல்லும், — ஆகுபெயர் - ஆகுபெயர்ச்சொல்லும், — அன்மொழி - அன்மொழித்தொகைச்சொல்லும், — வினைக்குறிப்பு - வினைக்குறிப்புச்சொல்லும், — முதல் - முதற்குறிப்புச்சொல்லும், — தொகை - தொகைக்குறிப்புச்சொல்லும், — குறிப்பு - இம்முதற்றொகையல்லாத பலவழியாலும் வரும் குறிப்புச்சொல்லும், — இன்னபிறவும் - இவைபோல்வனபிறவும், — குறிப்பின் தருமொழி - குறிப்பினால் இருதிணையைம்பாற்பொருள்களைத் தருஞ்சொற்களாம், — அல்லனவெளிப்படை (தருமொழி) - இவையல்லனவெல்லாம் வெளிப்படையால் அப்பொருள்களைத்தருஞ்சொற்களாம். எ - று.

வ—று. (க) ஆயிரமக்கள்பொருதார் என்றவிடத்து, மக்கள் என்னும்பொதுப்பெயரும், பொருதார் என்னும் பொதுவினையும், உயர்திணைப்பெண்பாலையொழித்து ஆண்பாலைக்குறிப்பா லுணர்த்தின.

(உ) குறுத்தாட்பூதம், மரைமலர் என்றவிடத்து, இவ்விகாரச்சொற்கள், குறுந்தாள், தாமரை என்பனவற்றைக் குறிப்பாலுணர்த்தின.

(௩) கால்கழீஇவருதும், திருமுகம், பறி என்றவிடத்து, இத்தகுதிவழக்குச்சொற்கள், மலங்கழுவிவருதும், ஓலை, பொன் என்பனவற்றைக் குறிப்பாலுணர்த்தின

(௪) புளிதின்றான், கடுத்தின்றான் என்றவிடத்து, இவ்வாகுபெயர்கள் அவற்றின் பழத்தைக் குறிப்பாலுணர்த்தின.

Digitized By Roja Muthiah Research Library

(௫) பொற்றொடிதாந்தபுனைமடல், அறற்கூந்தர்கில்லையருள் என்றவிடத்து, இவ்வன்மொழித்தொகைகள், அவற்றையுடைய மகளிரைக் குறிப்பாலுணர்த்தின.

(௬) இவனிப்போதுபொன்னன் என்றவிடத்துப், பொன்னன் என்பது பெயர்ப்பொருளை யொழித்து, வினைக்குறிப்புப்பொருளைக்குறிப்பாலுணர்த்தின.

(௭) "அறத்தாறிதுவெனவெள்ளைக்கிழிபு" என்றவிடத்து, இம்முதற்குறிப்புச்சொற்கள்: "அறத்தாறிதுவெனவேண்டாசிவிகைபொறுத்தானேடூர்ந்தானிடை" எனனும்பாட்டைக் குறிப்பாலுணர்த்தின.

(௮) "அலங்குளைப்புரவியைவரொடுசினைஇ" என்றவிடத்து ஐவர் என்னுந் தொகைக்குறிப்புச்சொல் பாண்டவரைக் குறிப்பாலுணர்த்தின.

(௯) கற்கறித்து நன்கட்டாய், நீயிர் டெரிதுமறிதிர், பாயர்வேங்கை; "உவர்க்கடலன்னசெல்வருமுளரே கிணற்றூற்றன்னநீயுமாருளையே"; "பல்சான்றீரே பல்சான்றீரே கயன்முள்ளன்ன நரைமுதிர்திரைகவுட்பயனின்மூப்பிற்பல்சான்றீரே" இவைமுதலானவையெல்லாம் பலவழியாலும் வருங் குறிப்புச்சொற்கள். இன்னும், "பாயாதவேங்கைமலரப்படுமெதமாப், பூவாதபுண்டரிகமென்றஞ்சி" "சேராண்டயற்றவைரவன்வாகனஞ்சேரவந்து, பாரர்நான்முகன்வாகனந்தன்னைமுன்பற்றிக்கவ்வி, நாராயணனுயர்வாகனமாயிற்றுங்மைமுகம், பாரான்மைவாகனன்வந்தேவயிற்றினிற்பற்றினனே" வைரவன்வாகனம் - நாய்; நான்முகன்வாகனம் - அன்னம் (சோறு); நாராயணனுயர் வாகனமாயிற்று - கருடனாயிற்று. (என்றது பறந்துவிட்டது என்னும்பொருட்டு.) மைவாகனன் - ஆட்டுவாகனன். (அக்கினி=பசி) நாய் வந்து சோற்றைக் கவ்விக்கொண்டு பறந்துவிட்டது; முகம் பாராமற் பசிவந்து வயிறெரிகின்றது என்பது கருத்து.

"மையார்தடங்கண்மயிலன்னாப்தீத்தீண்டு, கையார்பிரிவித்தல்காண்" இதில் தீத்தீண்டுகையார் - வேங்கையார்=வேங்கைமரம்.

"நீத்தொழிந்தவாறைந்தடக்கிப்பின்னிச்சயமே, வாய்த்தடைந்தவாயில்பெண்ணேயும்—கூத்தற்கு, வாளேறேடோசைவிளைநிலமிவ்வல்லாற், கேளாயுடன்வருவதில்" நீத்தொழிந்தஆறு - நிலை; ஐந்தடக்கி - ஆமை; வாயில் - கடை; பெண்ணே - பிடி; வாளேறு - புண்; ஓசை - இயம்; விளைநிலம் - செய்; என்வே நிலையாமை கடைப்பிடி, புண்ணியஞ்செய என்பன குறிப்பாலாகிய பொருள்.

உள

ROJA MUTHIAH
47, HOSPITAL STREET
KOTTAIYUR-623 106
P. M. DIST - TAMIL NADU
INDIA

Digitized By Roja Muthiah Research Library

“இரவலனேயுனக்கில்லாததென்னவிதயமென்ன, பரவுணவேதுசுவையற்றதென்னசொற்பான்மையென்ன, தரவுரைசெய்திடவென்றுனதற்சொன்றுஞ்சாற்றிலன்யான், வரதிருவேங்கடநாதாவென்றேன்பொன்வழங்கினனே” இவ்வினாவுத்தரத்தின் வகையாவது: ஐந்துவினாவிற்கும் திருவேங்கடநாதா என்பதை ஐந்தாகப் பகுத்து முறையே கூட்டி வ - று. இல்லாதது என்ன? திரு; இதயம் என்ன? வேம்; உணவேது? கடன்; சுவை அற்றதென்ன? நா; சொற்பான்மை என்ன? தா என்று காண்க.

இன்னபிறவும் என்றதனால், தெரிநிலைவினை குறிப்புவினையாலணையும் பெயர்களும், தெரிநிலைவினைமுற்றுங் குறிப்புவினைமுற்றும் வருமெச்சங்களும், செய்யுமென்னுமுற்றும், “கேட்குநபோல” முதலியவாக அஃறிணையிடத்துச்சொல்லப்படுவனவும், ஆகிய இவைமுதலானவை குறிப்பாற் பொருளுணர்த்துமெனக் கொள்க.

இப்படியன்றி, நிலம், நீர், தீ, காற்று, வானம் என வருவன, வெளிப்படையாற் பொருளுணர்த்துவனவாம். (௧௨.)

**பரீக்ஷைவினாக்கள்:**— 550. சொல்லாவதியாது? 551. ஒருமொழிகளாவனயாவை? 552. தொடர்மொழிகளாவனயாவை? 553. பொதுமொழிகளாவனயாவை? 554. இருதிணையென்பனயாவை? 555. உயர்திணையாவனயாவை? 556. அஃறிணையாவனயாவை? 557. உயர்திணைஎன்பதற்குப் பொருளென்னை? 558. அஃறிணைஎன்பதற்குப் பொருளென்னை? 559. ஐம்பாலென்பன யாவை? 560. உயர்திணை எத்தனைபாலையுடையது? 561. அஃறிணை எத்தனைபாலையுடையது? 562. பேடு எத்திணையில் அடங்கும்? 563. இருதிணையும் ஐம்பாலும் எல்லாச்சொற்களாலும் அறியப்படுமோ? 564. தன்மை முன்னிலை வினைமுற்றுக்களாலுந் தன்மை முன்னிலைப் பெயர்களாலும் அறியப்படுவன எவை? 565. மூவிடங்களுக்கும் பொதுவாகிய வினைமுற்றுக்களும் பெயர்களும் இருதிணையைம்பாற்பொருளை எப்படியுணர்த்தும்? 566. எச்சவினைமுதலியனவும் இடைச்சொல்லும் உரிச்சொல்லும் எப்படிப் பொருளுணர்த்தும்? 567. மூவிடமென்பன யாவை? 568. வழக்குச் செய்யுள் என்னும் இரண்டனுள் வழக்காவனயாவை? 569. இலக்கணமுடையதென்பதுயாது? 570. இலக்கணப்போலியென்பதியாது? 571. மரூஉவென்பதியாது? 572. இம்மூன்றும் யாதுகாரணம்பற்றி இயல்புவழக்கெனப்பட்டன? 573. இடக்கரடக்கலென்பதியாது? 274. மங்கலமென்பதியாது? 575. குழூஉக்குறியென்பதியாது? 576. இம்மூன்றும் யாதுகாரணம்பற்றித் தகுதிவழக்கெனப்பட்டன? 577. செய்யுளாவன யாவை? 578. எழுவகைத் தாதுக்களென்பன எவை? 579. இருதிணையைம்பாற்பொருளைக் குறிப்பால் உணர்த்துவன எவை? 580. இருதிணையைம்பாற்பொருளை வெளிப்படையால் உணர்த்துவன எவை?

Digitized By Roja Muthiah Research Library

## சொற்பாகுபாடு.

[சொல் இத்தனைவகைப்படுமென்பது.]

உ௭௦. அதுவே,—
இயற்சொற் றிரிசொ லியல்பிற் பெயர்வினை
யெனவிரண் டாகு மிடையுரி யடுத்து
நான்கு மாந்திசை வடசொல ணுகாவழி.

இ - ள். அது இயற்சொல் திரிசொல் இயல்பின் பெயர் வினை என இரண்டு ஆகும் - மேற்காட்டிய சொல் இயற்சொல்லுந் திரிசொல்லுமென்னுந் தன்மையையுடைய பெயர்ச்சொல்லும் வினைச்சொல்லும் என்று இரண்டாகும்,—இடை யுரி அடுத்து நான்கும் ஆம் - இவற்றுடன் இடைச்சொல்லும் உரிச்சொல்லும் அடுத்து நான்குமாகும்,—திசை வடசொல் அணுகாவழி - இவற்றுடன் திசைச்சொல்லும் வடசொல்லும் சேராவிடத்து, எ-று.

எனவே, அதுவேயெனக் குறித்தசொல் பெயரியற்சொல், பெயர்த்திரிசொல், வினையியற்சொல், வினைத்திரிசொல், இடையியற்சொல், இடைத்திரிசொல், உரியியற்சொல், உரித்திரிசொல் என எண்வகைப்படுமென்பதும், திசைச்சொல்லும் வடசொல்லுஞ்சேர்ந்தவிடத்துப் பத்துவகைப்படுமென்பதும் பெற்றும். (௧௩)

[இயற்சொல்]

உ௭௧. செந்தமி ழாகித் திரியா தியார்க்குந்
தம்பொருள் விளக்குந் தன்மைய வியற்சொல்.

இ - ள். செந்தமிழ் ஆகி - செந்தமிழ்நிலத்து மொழியாகி,—திரியாது யார்க்கும் தம்பொருள் விளக்கும் தன்மைய இயற்சொல் - திரிசொற்போலாகாது கற்றோருக்குங் கல்லாதோருக்கும் ஒப்பத் தம்பொருளைவிளக்குந் தன்மையையுடைய உலகவழக்கே இயற்சொல்லாகும். எ - று.

உலகவழக்கு என்பது கற்றாருங்கல்லாருமாகிய உலகர் பேசுஞ் சொல், எளிதிற் பொருளறியப்படுஞ்சொல் என்பது விளக்கம். இயற்சொல் கற்றறியாது இயல்பாற் பொருளுணருஞ்சொல்.

வ - று. (௧) மண், பொன் என்பன பெயரியற்சொல்.

(உ) நடந்தான், வந்தான் என்பன வினையியற்சொல்.

(௩) மற்று, உம், ஓ என்பனவும் அவனை, அவனால் என்பவற்றுள், ஐ ஆல் என்பனவும் இடையியற்சொல்.

(௪) நல், மிக, பெரு, சிறு என்பன உரியியற்சொல்.

செந்தமிழ்நாடாவது பாண்டிவளநாடு; தமிழ்முனிவராகிய அகத்தியருக்கும், தமிழை வளர்த்த பாண்டியர்களுக்கும், சங்கப்புலவர்களுக்கும் உறைவிடம் அதுவாதலாலென்றறிக. (௧௪)

Digitized By Roja Muthiah Research Library

[திரிசொல்.]

உஎஉ. ஒருபொருள் குறித்த பலசொல் லாகியும்
பலபொருள் குறித்த வொருசொல் லாகியும்
அரிதுணர் பொருளன திரிசொல் லாகும்.

இ - ள். ஒருபொருள் குறித்த பலசொல் ஆகியும் - ஒருபொருளைக் கருதிய பல சொற்களாயும்,—பல பொருள் குறித்த ஒருசொல் ஆகியும் - பல பொருள்களைக் கருதிய ஒருசொல்லாகியும்,— அரிது உணர் பொருளன திரிசொல் ஆகும் - அரிதாகக் கற்றோர் அறியும் பொருளினவாய் வருவன திரிசொல்லாகும். எ - று.

கல்லாதவராற் பொருளறியப்படாமற் கற்றோராற் பொருளறியப்படுஞ் சொற்களே திரிசொல்.

அரிதுணர்பொருளன என்றதனால், ஒருபொருள் குறித்த பலசொற்களுள்ளும், பலபொருள்குறித்த ஒருசொற்களுள்ளும், இயற்சொல்லொழிய க்கொள்க.

திரிசொல் இயற்சொல்லின் வேறுபட்டசொல். திரிதல் — வேறுபடுதல். வேறுபடுதலென்றது இயற்சொல் போல இயல்பால் உணரப்படாது அரிதின் உணரப்படுதலே.

உ - று. (க) கிள்ளை, சுகம், தத்தை என்பன, கிளி என்னும் ஒருபொருள் குறித்த பலபெயர்த்திரிசொல். வாரணம் என்பது, யானையுங் கோழியுஞ் சங்கு முதலாகிய பலபொருள்குறித்த ஒரு பெயர்த்திரிசொல்.

(உ) படர்ந்தான், சென்றான் என்பன, போயினான் என்னும் ஒருபொருள்குறித்த பலவினைத்திரிசொல். வரைந்தான் என்பது, நீக்கினான், கொண்டான் என்னும் பலபொருள்குறித்த ஒருவினைத்திரிசொல்.

(௩) சேறும், வருதும் என்பவற்றுள், றும், தும் என்னும் விகுதிகள், தன்மைப்பன்மை யெதிர்காலம் என்னும் ஒருபொருள் குறித்த பலவிடைத்திரிசொல். கொல் என்பது, ஐயமும் அசைநிலையுமாகிய பலபொருள்குறித்த ஓரிடைத்திரிசொல்.

(௪) சால், உறு, தவ, நனி, கூர், கழி என்பன, மிகுதி என்னும் ஒருபொருள்குறித்த பலவுரித்திரிசொல். கடி என்பது, காப்பு, கூர்மை, அச்சம், கரிப்பு, விளக்கம், சிறப்பு, மணம் முதலிய பலபொருள்குறித்த ஓருரித்திரிசொல்.

இப்பகுப்பினவுமன்றி ஒருபொருள்குறித்த ஒருசொல்லாகிவரினும் அரிதுணர் பொருளுடைய சொல் திரிசொல்லேயாமென்றுணர்க. (கரு)

Digitized By Roja Muthiah Research Library

[திசைச்சொல்.]

௨௭௩. செந்தமிழ் நிலஞ்சேர் பன்னிரு நிலத்தினும்
ஒன்பதிற் றிரண்டினிற் றமிழொழி நிலத்தினுந்
தங்குறிப் பினவே திசைச்சொ லென்ப.

இ - ள். செந்தமிழ் நிலம் சேர் பன்னிரு நிலத்தினும் - செந்தமிழ்நிலத்தைச்சேர்ந்த பன்னிரண்டு கொடுந்தமிழ்நிலங்களினும்,— ஒன்பதிற் றிரண்டினில் தமிழ் ஒழி நிலத்தினும் - பதினெண்மொழிகளுள்ளே தமிழ்நிலமொழிந்த நிலங்களினுமுள்ளோர்,— தங்குறிப்பின திசைச்சொல் என்ப - தங்குறிப்பினவாய் அத்திசைகளினின்றுஞ் செந்தமிழ்நிலத்து வந்து வழங்குவன திசைச்சொல்லென்று சொல்லுவர் புலவர். எ - று.

கொடுந்தமிழ்நாடு பன்னிரண்டையும்: "தென்பாண்டி குட்டங்குடங்கற்காவேண்பூழி, பன்றியருவாவதன்வடக்கு—நன்றாய, சீதமலாடுபுனனாடு செந்தமிழ்சே, ரேதமில்பன்னிருநாட்டெண்" என்னும் வெண்பாவாலறிக. புனனாடென்றது சோழநாட்டை.

இவற்றுட் செந்தமிழ்ப்பாண்டிநாட்டுக்குத் தென்றிசையிலுள்ள தென்பாண்டிநாட்டார் ஆவினைப் பெற்றமென்றும், சோற்றைச் சொன்றியென்றும், குட்டநாட்டார் தாயைத் தள்ளையென்றும், குடநாட்டார் தந்தையை அச்சனென்றும், கற்காநாட்டார் வஞ்சரைக் கையரென்றும், வேணாட்டார் தோட்டத்தைக் கிழாரென்றும், பூழிநாட்டார் சிறுகுளத்தைப் பாழியென்றும், அருவாநாட்டார் செய்யைச் செறுவென்றும், சிறுகுளத்தைக் கேணியென்றும், அருவாவடதலையார் புளியை எகினென்றும், சீதநாட்டார் தோழனை எலுவனென்றும், தோழியை இகுளையென்றும் வழங்குவர். பிறவும் வந்தவிடத்துக்காண்க.

இனித் தமிழ்நிலத்தைச்சூழ்ந்த பதினேழ்நிலத்தையும்: "சிங்களஞ்சோனகஞ்சாவகஞ்சீனந்துளுக்குடகங், கொங்கணங்கன்னடங்கொல்லந்தெலுங் கங்கலிங்கம்வங்கங், கங்கமகதங்கடாரங்கவுடங்கடுங்குசலந், தங்கும்புகழ்த்தமிழ்சூழ்பதினேழ்புவிதாமிவையே" என்னுங் கட்டளைக் கலித்துறையாலறிக. சிங்களம் என்றது ஈழநாட்டை.

அந்தோ என்பது சிங்களச்சொல். எருத்தைப் பாண்டில் என்பது தெலுங்குச்சொல். மாமரத்தைக் கொக்கு என்பது துளுவச்சொல். ஒழிந்தன வந்தவிடங்களிற்காண்க.

செல்வத்தைச் செல்ல என்பதும், என்ன என்பதை எந்த என்பதும் மலையாளச்சொல். தகுதிப்படுத்திச் சொல்லுதற்கு சிப்பார்சு என்பது பார்சிகபாஷைச்சொல். இது தமிழில்வந்த பிறபாஷைத் திசைச்சொல். ()

[வடசொல்.]

௨௭௪. பொதுவெழுத் தானுஞ் சிறப்பெழுத் தானும்
ஈரெழுத் தானு மியைவன வடசொல்

Digitized By Roja Muthiah Research Library

இ - ள். பொது எழுத்தானும் - ஆரியத்திற்குந் தமிழிற்கும் பொதுவெழுத்தாலும்,—சிறப்பு எழுத்தானும் - ஆரியத்திற்கேயுரிய சிறப்பெழுத்துத்திரிந்த வெழுத்தாலும்,—ஈரெழுத்தானும் - இவ்விரண்டெழுத்தினாலும்,—இயைவன வடசொல் – ஆக்கப்படுவனவாகிச் செந்தமிழ்ச்சொல்லையொப்பனவாகிய வடதிசையிலிருந்து செந்தமிழ்நிலத்துவந்து வழங்குவன வடசொல்லாம். எ - று.

வ - று. (க) அமலம், கமலம், மேரு, காரணம், காரியம் என்பன பொதுவெழுத்தாலியைந்தன.

(உ) சுகி, போகி, சுத்தி என்பன சிறப்பெழுத்தாலியைந்தன.

(ங) அரன், அரி, கடினம்; சலம் என்பன ஈரெழுத்தாலுமியைந்தன.

(1) வதி = பதி, உவகார = உபகாரம், குலாசார = குலாசாரம் இச்சொற்களிலிருக்கிற எழுத்துக்கள் தமிழிலும் சமஸ்கிருதத்திலும் ஒரே ஒலியுடையனவாதலின் இவை பொதுவெழுத்தான்முடிந்தன.

(2) ஸாது = சாது, ஸகி = சகி, தீக்ஷா = தீக்கை இச்சொற்களிலிருக்கிற எழுத்துக்களின் ஒலி தமிழில் இன்றிச் சமஸ்கிருதத்திலே யிருத்தலாற் சிறப்பெழுத்துத்திரிந்த எழுத்தான்முடிந்தபதங்களிவை.

(3) ஜ்ஞாந = ஞானம், கிரி = கிரி, வேத = வேதம் இச்சொற்கள் ஒவ்வொன்றும் சமஸ்கிருதத்திற்கேயுரிய சிறப்பெழுத்துத் திரிந்தவெழுத்துந் தமிழிற்குஞ் சமஸ்கிருதத்திற்கும் பொதுவான எழுத்துமாகிய இருவகையெழுத்துக்களாலுமுடிந்த பதங்கள். வடவெழுத்தாகத் தமிழெழுத்தாக வரிவடிவெழுத்தைக் கொள்ளாது ஒலிவடிவையேகொண்டு பேதாபேதங்களைநோக்கி மூவகை வடமொழிகளையுமுணர்க.

மேற்காட்டப்பட்ட அமலம்முதல் சலம் ஈறாகிய உதாரணங்களையும் சமஸ்கிருத எழுத்தாலுந் தமிழெழுத்தாலுமெழுதி அபேத பேதங்களையுணர்க. "வடசொற்கிளவி வடவெழுத்தொரீஇ, யெழுத்தொடுபுணர்ந்தசொல்லாகும்மே, சிதைந்தனவரினுமியைந்தனவரையார்" என்றார் தொல்காப்பியரும்.

**பரீக்ஷைவினக்கள்:**—581. சொல் எத்தனைவகைப்படும்? 582. இயற்சொல் எத்தனைவகைப்படும்? 583. திரிசொல் எத்தனைவகைப்படும்? 584. இயற்சொல்லாவனயாவை? 585. இயற்சொல்லென்பதற்குப்பொருளென்னை? 586. செந்தமிழ்நாடெனப்படுவதியாது? 587. திரிசொல்லாவனயாவை? 588. திரிசொல்லென்பதற்குப் பொருளென்னை? 589 திசைச்சொல்லாவனயாவை? 590. கொடுந்தமிழ்நாடு பன்னிரண்டென்பனவை? 591. வடசொல்லாவன யாவை?

Digitized By Roja Muthiah Research Library

## பெயர்ச்சொல்.

[பெயரின் பொதுவிலக்கணம்].

உஎரு. இடுகுறி காரண மரபோ டாக்கந்
தொடர்ந்து தொழிலல காலந் தோற்றா
வேற்றுமைக் கிடனாய்த் திணைபா லிடத்தொன்
றேற்பவும் பொதுவு மாவன பெயரே.

இ - ள். இடுகுறி காரணம் மரபு ஆக்கம் தொடர்ந்து - இடுகுறியும் காரணக்குறியும் மரபினையும் ஆக்கப்பாட்டினையுந் தொடர்ந்து,—தொழில் அல காலம் தோற்றா - வினையாலணையுங் காரணக்குறியொன்றுங் காலங்காட்ட அல்லாதன காலங்காட்டாதனவாகி,— வேற்றுமைக்கு இடன் ஆய் - எட்டுவேற்றுமையுஞ் சார்தற்கு இடமாகி,—திணை பால் இடத்து ஒன்று ஏற்பவும் - இருதிணையிலும் ஐம்பாலிலும் மூவிடத்திலும் ஒன்றனையேற்பனவும்,—பொதுவும் - பலவற்றினையேற்பனவும்,— ஆவன பெயர் - ஆகிவருவனபெயர்களாம். எ - று.

வ - று. (க) மரம், விளா, பனை என்பன இடுகுறிமரபு.

(உ) அவன், அவள், விலங்கு, பறவை என்பன காரணக்குறிமரபு.

(ங) "பொன்போலுங்கள்ளிப்பொறிபறக்குங்கானலிலே, யென்பேதை செல்லற்கியைந்தனளே—மின்போலு, மானவேன்முட்டைக் குமாறாயதெவ்வர்போங், கானவேன்முட்டைக்குங்காடு" என்னும் பொய்யாமொழிப்புலவர் பாட்டில், வேட்டுக்குமரன் றன்பெயர் முட்டையென்றது இடுகுறியாக்கம்.

(ச) பொன்னன், பூணன், "மலைமகண்மகனே மாற்றோர்கூற்றே" என்பன காரணக்குறி காலங்காட்டின.

(ரு) நடந்தவனை, நடந்தோனை என்பன வினையாலணையுங் காரணக்குறிகாலங்காட்டின.

மரம் பனை முதலாகிய இடுகுறிப்பெயரும், அவன், அவள் முதலாகிய காரணப்பெயரும், அவ்வவ் விலக்கணங்களோடு தோற்றிய பொருள்களுக்கெல்லாந் தொன்றுதொட்டு மரபுபற்றிவருவன. முட்டைமுதலாகிய இடுகுறிப்பெயரும், பொன்னன்முதலாகிய காரணப்பெயரும், மரபுபோலத்தொன்றுதொட்டு வருதலின்றி நடுவிலே ஒருவரால் ஆக்கப்பட்டுவருவன.

[உயர்திணையாண்பாற்பெயர்.]

உஎசு. அவற்றுள்,—
கிளையெண் குழூஉமுதற் பல்பொரு டிணைதேம்
ஊர்வா னகம்புற முதல நிலன்யாண்

Digitized By Roja Muthiah Research Library

டிருது மதிநா ளாதிக் காலந்
தோள்குழன் மார்புகண் காது முதலுறுப்
பளவறி வொப்பு வடிவு நிறங்கதி
சாதி குடிசிறப் பாதிப் பல்குணம்
ஓத லீத லாதிப் பல்வினை
இவையடை சுட்டு வினாப்பிற மற்றோ
டுற்ற னவ்வீறு நம்பி யாடூஉ
விடலை கோவேள் குரிசி றோன்றல்
இன்னன வாண்பெய ராகு மென்ப.

இ - ள். அவற்றுள் - மேற்பெயரேயென்றவற்றுள்,—கிளை எண் குழூஉ முதல் பல்பொரு(ளோடு) - சுற்றமும் எண்ணுங் கூட்டமும் முதலாகிய பலபொருள்களோடும்,—திணை தேம் ஊர் வான் அகம் புறம் முதல நில(னோடு) - ஐந்திணையுந் தேயமும் ஊரும் வானும் அகமும் புறமும் முதலியனவாகிய இடங்களோடும்,—யாண்டு இருது மதி நாள் ஆதிக்கால(மோடு) - வருடமும் பருவமும் மாதமும் நாண்மீனும் முதலாகிய காலங்களோடும்,—தோள் குழல் மார்பு கண் காது முதல் உறுப்(போடு) - புயமும் மயிரும் மார்புங் கண்ணுங் காதும் முதலாகிய அவயவங்களோடும்,—அளவு அறிவு ஒப்பு வடிவு நிறம் கதி சாதி குடி சிறப்பு ஆதிப் பல்குண(மோடு) - அளவும் அறிவும் ஒப்பும் வடிவும் நிறமும் நாற்கதியுஞ் சாதியுங் குடியுஞ் சிறப்பும் முதலாகிய பலகுணங்களோடும்,—ஓதல் ஈதல் ஆதிப் பல்வினை (யோடு) - ஓதுதலுங் கொடுத்தலும் முதலாகிய பலதொழில்களோடும்,—இவை அடை சுட்டு வினாப் பிற மற்றோடு - இவற்றையடைந்த சுட்டும் வினாவும் பிறவும் மற்றுமாகிய நான்கனோடும்,—உற்ற னவ்வீறு - பொருந்திய னகர மெய்யீற்றுப் பெயர்களும்,—நம்பி ஆடூஉ விடலை கோ வேள் குரிசில் தோன்றல் - நம்பி முதலாகச் சொல்லப்பட்ட இப்பெயர்களும்,—இன்னன - இவை போல்வன பிறவும்,—ஆண்பெயர் ஆகும் என்ப - உயர்திணையாண்பாற்பெயர்களாகும் என்று சொல்லுவர் புலவர். எ - று.

## வரலாறு.

(௧.) பொருளால் வரு பெயர்களாவன:—

தமன், நமன், நுமன், எமன் என்பன கிளையால் வருபெயர்.

ஒருவன் என்பது எண்ணால் வருபெயர்.

அவையத்தான், அத்திகோசத்தான் என்பன குழூஉவால் வருபெயர்.

பொருளன், பொன்னன், முடியன் என்பன முதலென்றதனால் வருபெயர்.

(௨.) இடத்தால் வரு பெயர்களாவன:—

வெற்பன், பொருப்பன் என்பன குறிஞ்சித்திணையால் வருபெயர்,

மறவன், எயினன் என்பன பாலைத்திணையால் வருபெயர்.

Digitized By Roja Muthiah Research Library

இடையன், ஆயன் என்பன முல்லைத்திணையால் வருபெயர்.
ஊரன், மகிழ்நன் என்பன மருதத்திணையால் வருபெயர்.
சேர்ப்பன், துறைவன் என்பன நெய்தற்றிணையால் வருபெயர்.
சோழியன், கொங்கணன் என்பன தேயத்தால் வருபெயர்.
கருவூரான், மதுரையான் என்பன ஊரால் வருபெயர்.
வானத்தான், அகத்தான், புறத்தான் என்பன வான் முதலிய மூன்றாலும் வருபெயர்.
மண்ணகத்தான், பாதலத்தான் என்பன முதலவென்றதனால் வருபெயர்.

(௩.) காலத்தால் வரு பெயர்களாவன:—
மூவாட்டையான், பிரபவன் என்பன வருடத்தால் வருபெயர்.
வேனிலான், காரான் என்பன பருவத்தால் வருபெயர்.
தையான், மாசியான் என்பன மாதத்தால் வருபெயர்.
ஆதிரையான், ஓணத்தான் என்பன நாண்மீனால் வருபெயர்.
நெருநலான், காலையான் என்பன ஆதியென்றதனால் வருபெயர்.

(௪.) சினையால் வரு பெயர்களாவன:—
திணிதோளன், செங்குஞ்சியன், வரைமார்பன், செங்கண்ணன், குழைக்காதன் என்பன தோண் முதலிய ஐந்துறுப்பாலும் வருபெயர்.
குறுந்தாளன், நெடுங்கையன் என்பன முதலவென்றதனால் வருபெயர்.

(௫.) குணத்தால் வரு பெயர்களாவன:—
பெரியன், சிறியன் என்பன அளவால் வருபெயர்.
அறிஞன், புலவன் என்பன அறிவால் வருபெயர்.
பொன்னொப்பான், மணியனையான் என்பன ஒப்பால் வருபெயர்.
கூனன், குறளன் என்பன வடிவால் வருபெயர்.
கரியன், செய்யன் என்பன நிறத்தால் வருபெயர்.
மானுடன், தேவன் என்பன கதியால் வருபெயர்.
அந்தணன், வேளாளன் என்பன சாதியால் வருபெயர்.
சேரன், சோழன், பாண்டியன் என்பன குடியால் வருபெயர்.
ஆசிரியன், படைத்தலைவன் என்பன சிறப்பால் வருபெயர்.
நல்லன், தீயன் என்பன ஆதியென்றதனால் வருபெயர்.

(௬.) தொழிலால் வரு பெயர்களாவன:—
ஓதுவான், ஈவான் என்பன ஓதன்முதலிய இரண்டாலும் வருபெயர்.
கணக்கன், தச்சன் என்பன ஆதியென்றதனால் வருபெயர்.

(௭.) சுட்டால் வருபெயர்முதலானவை:—
அவன், இவன், உவன் என்பன சுட்டிடைச்சொல்லால் வருபெயர்.
எவன், ஏவன், யாவன் என்பன வினாவிடைச்சொல்லால் வருபெயர்.
பிறன், மற்றையான் என்பன பிற மற்று என்பவற்றால் வருபெயர்



Digitized By Roja Muthiah Research Library

(அ.) நம்பி முதலாகிய ஏழுபெயர்களும் உரைக்கிடையிற் காண்க.

இன்னன என்றதனால், வில்லி, வாளி, கிள்ளி, சென்னி, ஏந்தல், செம்மல், ஏனாதி, காவிதி, வழுதி, பாரி, சக்கிரி, குடுமி, அண்ணல் என உயர்திணையாண்பாற் பொருள் குறித்து வருவனவெல்லாங் கொள்க.

சுட்டு, வினா, பிற, மற்று என்னும் இந்நான்கிடைச்சொல்லையும் பற்றி வரும்பெயர்கள், பொருளாதியாறனுள்ளே, சொல்லுவான் குறிப்பின்படி, ஒன்றில் அடங்கும் ஆதலின் இவை யடைசுட்டுவினாப்பிற மற்றுடுற்ற னவ்வீறென்றார்.

பின் 'வினாச்சுட்டுடனும்வேறுமாம்பொருளாதியுறுது' என்பதினாலு மறிக.

இருது - இருமாதம். ஒருவருடத்தில் ஆறு இருது உள்ளன:—அவை யாவன: கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என்பனவாம். ஆவணிமுதல் இவ்விரண்டுமாதங்களை முறையே அந்த ஆறுபருவங்களென்று கொள்ளுக.

பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னு மிவ்வறுவகையுள்ளும் பெயர்கள் அடங்குமென்பார் அவ்வறுவகையாகப்பகுத்தும் அப்பகுப்பில் ஒவ்வொன்றையுஞ் சிறிது வகுத்துங் கூறினார்.

இடம், காலம், சினை, குணம், தொழில்களும் ஒருவாற்றாற் பொருளெனப்படுமாயினும் இவ்வைவகையுமொழித்தொழிந்துநின்றவைகளே இங்ஙனம் பொருளெனப்படுமென்றறிக. இங்ஙனங்கொள்ளுதலைச் சேஷார்த்த நிர்ணயமென்பது வடமொழிவழக்கு. (கக)

[உயர்திணைப்பெண்பாற்பெயர்.]

உஎஎ. கிளைமுத லாகக் கிளந்த பொருள்களு<br>
ளவ்வொற் றிகரக் கேற்ற வீற்றவுந்<br>
தோழி செவிலி மகடூ நங்கை<br>
தையலோ டின்னன பெண்பாற் பெயரே.

இ - ள். கிளை முதல் ஆகக் கிளந்த பொருள்களுள் - மேலைச்சூத்திரத்துச் சுற்றமுதலாகப் பகுத்துச் சொல்லப்பட்ட அறுவகைப்பொருள்களுள்,—ளவ்வொற்று இகரக்கு ஏற்ற ஈற்றவும் - ளகரமெய்யும் இகரவுயிரும் பொருந்துதற்கு ஏற்ற அவ்விரண்டீற்றுப்பெயர்களும்,—தோழி செவிலி மகடூஉ நங்கை தையலோடு - தோழிமுதலாக எடுத்துச்சொல்லப்பட்ட பெயர்களுமாகிய இவற்றுடனே,—இன்னன - இவைபோல்வன பிறவும்,—பெண்பாற்பெயர் - உயர்திணைப்பெண்பாற்பெயர்களாம். எ - று.

Digitized By Roja Muthiah Research Library

வரலாறு.

(க.) பொருளால் வருபெயர்:—தமள், நமள், நுமள், எமள். எ-ம். ஒருத்தி. எ-ம். அவையத்தாள், அவையத்தி. எ-ம். பொன்னாள், பொன்னி. எ-ம். வரும்.

(உ.) இடத்தால் வருபெயர்:—குறத்தி, எயிற்றி, ஆய்ச்சி, உழத்தி, பரத்தி. எ-ம். மலையாட்டி, சோழிச்சி. எ-ம். கருவூராள், கருவூரி. எ-ம். வானத்தாள், வானத்தி. எ-ம். அகத்தாள், அகத்தி. எ-ம். புறத்தாள், புறத்தி. எ-ம். மண்ணகத்தாள், மண்ணகத்தி. எ-ம். வரும்.

(ஙு.) காலத்தால் வருபெயர்:—மூவாட்டையாள். எ-ம். வேனிலாள். எ-ம். தையாள். எ-ம். ஆதிரையாள். எ-ம். நெருநலாள். எ-ம். வரும்.

(ச.) சினையால் வருபெயர்:—திணிதோளாள், திணிதோளி. எ-ம். சுரிகுழலாள், சுரிகுழலி. எ-ம். நெடுமார்பாள், நெடுமார்பி. எ-ம். தடங்கண்ணாள், தடங்கண்ணி. எ-ம். குழைக்காதாள், குழைக்காதி. எ-ம். குறுந்தாளாள், குறுந்தாளி. எ-ம். வரும்.

(ரு.) குணத்தால் வருபெயர்:—பெரியள். எ-ம். புலமையள். எ-ம். பொன்னனையாள். எ-ம். கூனள், கூனி. எ-ம். கரியள். எ-ம். மானுடத்தி. எ-ம். பார்ப்பினி. எ-ம். படைத்தலைவி. எ-ம். நல்லள். எ-ம். வரும்.

(சா.) தொழிலால் வருபெயர்:—ஓதுவாள். எ-ம். ஈவாள். எ-ம். தச்சிச்சி. எ-ம். வரும்.

(எ.) சுட்டால் வருபெயர் முதலானவை:—அவள், இவள், உவள். எ-ம். எவள், ஏவள், யாவள். எ-ம். பிறள். எ-ம். மற்றையாள். எ-ம். வரும்.

(அ.) தோழி முதலிய ஐந்துபெயரும் உரைக்கிடையிற் காண்க. இன்னன என்றதனால், பேதை, பெதும்பை, இருளை, மடந்தை, மாது, பாங்கி, பெண்டு, அங்கனை, அரிவை என உயர்திணைப்பெண்பால்குறித்து வருவனவெல்லாங்கொள்க. (உம்)

[உயர்திணைப்பலர்பாற்பெயர்.]

உஎஅ. கிளந்த கிளைமுத லுற்ற ரவ் வீற்றவுங்
கள்ளொ டிற்றி னேற்பவும் பிறவும்
பல்லோர் பெயரின் பகுதி யாகும்.

இ-ள். கிளந்த கிளைமுதல் உற்ற ரவ்வீற்றவும் - முன்னே சொல்லப்பட்ட சுற்றமுதலாகிய அறுவகைப்பொருளையும் பொருந்திய ரகரமெய்யீற்

றுப்பெயர்களும்,— கள் என் ஈற்றின் ஏற்பவும் - கள்ளென்னும் விகுதியை ஈறுகவுடைய பெயர்களுள் இவ்விடத்துக்குப் பொருந்திவருவனவும்,—பிற வும் - இவைபோல்வன பிறவும்,—பல்லோர் பெயரின் பகுதி ஆகும் - உயர் திணைப்பலர்பாற் பெயர்களாம். எ - று.

கள் விகுதி அஃறிணைப்பன்மைக்கும் வருதலால், ஏற்பவுமென்றார்.

உ - று. தமர், நமர், நுமர், எமர், இருவர், மூவர் எனப் பொருளாதியாற ஞேடு மொட்டுக.

கோக்கள், மனுக்கள் என்றற்றொடக்கத்தன பகுதிப்பொருள் விகுதியீ ற்றுப்பெயர்கள்.

தமர்கள், நமர்கள் என்றற்றொடக்கத்தன விகுதிமேல் விகுதியீற்றுப்பெ யர்கள்,

பிற என்றமையால், மாந்தர், மக்கள், மகார், சிறார், வேளிர் எனப் பலர் பாலைக்குறித்து வருவனவெல்லாங்கொள்க.

இப்பலர்பால் ஆண்பன்மையும், பெண்பன்மையும், இருவர்பன்மையுமெ ன மூவகைப்படும். மைந்தர், வேளிர் என்றற்றொடக்கத்தன ஆண்பன்மைகு றித்துவந்த பலர்பாற்சொல். மாதர், நாரியர் என்றற்றொடக்கத்தன பெண்ப ன்மை குறித்துவந்த பலர்பாற்சொல். மனிதர், மக்கள் என்றற்றொடக்கத் தன ஆண்பெண் என்னு மிருபன்மைக்கும் பொதுப்பலர்பாற்சொல். இப் பொதுப்பலர்பாற்சொல் ஆண்பன்மையைமாத்திரங் குறித்தும், பெண்பன் மையை மாத்திரங் குறித்துஞ் சிலவிடத்தில் வரும். (௩௪)

[அஃறிணையொன்றன்பாற்பெயர்.]

உ௭௩. வினச்சுட் டுடனும் வேறு மாம்பொருள்
ஆதி யுறுதுச் சுட்டணை யாய்தம்
ஒன்றனெண் ணின்னன வொன்றன் பெயரே.

இ - ள். வினச் சுட்டு உடனும் - வினவிலுஞ் சுட்டிலும் மறைந்து அவற்றுடனாகியும்,—வேறும் ஆம் - வினவவுஞ் சுட்டும்படாது வேறாகி யும் வரும்,—பொருள் ஆதி உறு து - பொருளாதியாறனையும்பொருந்திய து வ்விகுதியீற்றுப் பெயரும்,—சுட்டு அணை ஆய்தம் - சுட்டோடு கூடிய ஆய்த த்தைப் பொருந்திய துவ்விகுதியீற்றுப்பெயரும்,—ஒன்றன் எண் - ஒன்றெ ன்னும் எண்ணுக்குப்பெயரும்,—இன்னன - இவைபோல்வன பிறவும்,—ஒன்ற ன்பெயர் - அஃறிணையொருமைப்பாற்பெயராகும். எ - று.

உ - று. (க.) எது, ஏது, யாது. எ - ம், அது, இது, உது. எ - ம். வினவி லுஞ் சுட்டிலும் மறைந்து அவற்றுடனாகிய பொருளாதியா றையும் பொருந்திய துவ்விகுதியீற்றுப்பெயர்கள் வரும்.

Digitized By Roja Muthiah Research Library

(உ.) குழையது, நிலத்தது, மூலத்தது, கோட்டது, குறியது, ஆடலது என விகுதியுஞ் சாரியையும் பெற்று வேற்றுமைப் பொருள் பொருந்திய துவ்விகுதியீற்றுப் பெயர்கள் வரும்.

(ந.) அஃது, இஃது, உஃது எனச் சுட்டோடுகூடிய ஆய்தத்தைப் பொருந்திய துவ்விகுதியீற்றுப்பெயர்கள் வரும்.

(ச.) ஒன்று என எண்ணுப்பெயர் வரும்.

இன்னன என்றமையால், பிறிது, மற்றையது என அஃறிணை ஒருமைப்பொருள் குறித்து வருவனவெல்லாங் கொள்க. ()

[அஃறிணைப் பலவின்பாற்பெயர்.]

உ௭0. முன்ன ரவ்வொடு வருவை யவ்வுஞ்
சுட்டிறு வவ்வுங் கள்ளிறு மொழியும்
ஒன்ற லெண்ணு முள்ள வில்ல
பல்ல சில்ல வுளவில பலசில
இன்னவும் பலவின் பெயரா கும்மே.

இ - ள். முன்னர் அவ்வொடு வரு வை அவ்வும் - முன்னே சொல்லப்பட்ட வினாச்சுட்டுடனும் வேற்றுமைப் பொருளாதியாதனோடும் ஏற்றபடி வரும் வை விகுதியீற்றுப்பெயர்களும் அகரவீற்றுப் பெயர்களும், — சுட்டு இறு வவ்வும் - வகரமெய்யீற்றுச் சுட்டுப்பெயர்களும், — கள் இறு மொழியும் - கள்ளென்னும் பகுதிப்பொருள் விகுதியீற்றுப்பெயர்களும், — ஒன்று அல் எண்ணும் - இரண்டுமுதலாகிய எண்ணுப்பெயர்களும், — உள்ள இல்ல பல்ல சில்ல உள இல பல சில - உள்ளவென்பது முதலாகிய குறிப்புவினையாலணைந்த எட்டுப்பெயர்களும், — இன்னவும் - இவைபோல்வன பிறவும், — பலவின்பெயர் ஆகும் - அஃறிணைப்பன்மைப்பாற்பெயர்களாகும். எ - று.

வ - று. (க.) எவை, ஏவை, யாவை. எ - ம். அவை, இவை, உவை. எ - ம். நெடியவை, கரியவை, எ - ம். வைவிகுதிப்பெயர்கள் வரும்.

(உ.) பொருள, பொருளன; அகத்த, அகத்தன; மூலத்த, மூலத்தன; கோட்ட, கோட்டன; கரிய, கரியன; ஓதுவ, ஓதுவன என அன்சாரியை பெற்றும் பெறாதும் அகரவிகுதிப்பெயர்கள் வரும்.

(ந.) அவ், இவ், உவ் என வகரமெய்யீற்றுச் சுட்டுப்பெயர்கள் வரும்.

(ச.) யானைகள், குதிரைகள் எனக் கள்விகுதிப்பெயர்கள் வரும்.

(ரு.) இரண்டு, மூன்று, பத்து, நூறு என எண்ணுப்பெயர்கள் வரும்.

(சா.) உள்ள முதலாகிய எட்டும் உரைக்கிடையிற் காண்க.

Digitized By Roja Muthiah Research Library

இன்னவும் என்றமையால், யா, பிற, மற்றைய என அஃறிணைப் புன்மைப்பொருள் குறித்து வருவனவெல்லாங் கொள்க.

இவ்வைம்பாற் பெயர்களுள், ஆண்பாற்பெயர்க்கு 'னவ்வீறு' எனவே அன், ஆன், மன், மான், ன் இவ்வைந்தும், பெண்பாற்பெயர்க்கு 'ளவ்வொற்று' எனவே, அள், ஆள், ள் இம்மூன்றும், பலர்பாற்பெயர்க்கு 'ரவ்வீற்ற' எனவே, அர், ஆர், மார், ர் இந்நான்கும், அடங்குதலறிக.

பலர்பாற்பெயர்கூறிய சூத்திரத்தில் 'கள்ளொடு சிவணும்' என்றமையால், இச்சூத்திரத்துக் கள்ளிறுமொழியுள் ஏற்பனவே பலவின்பாற்குக் கொள்ளப்படும். (உ௬)

[அஃறிணையிருபாற்பொதுப்பெயர்.]

உ௮௬. பால்பகா வஃறிணைப் பெயர்கள்பாற் பொதுமைய.

இ - ள். அஃறிணைப் பால்பகாப் பெயர்கள் - அஃறிணைப்பெயர்களுள் இப்படிப் பால்வகுக்கப்படாத பெயர்களனைத்தும்,—பாற்பொதுமைய - அத்திணையிருபாற்கும் பொதுப்பெயர்களாம். எ - று.

பால்பகாவஃறிணைப் பெயரெனினும் அஃறிணையியற் பெயரெனினும் பொருந்தும்.

வ - று. பறவை வந்தது, பறவை வந்தன, மரம் வளர்ந்தது, மரம் வளர்ந்தன என வரும். இவை, பறவை, அலரி எனப் பகுபதமும், மரம், பனை, சொல், எனப் பகாப்பதமுமாக வரும்.

அஃறிணை இருபாற்கும் பொதுவான இப்பெயர்கள் முடிக்குஞ்சொற்களாகத் தொடர்ந்த வினை ஒருமையாயின் ஒன்றன்பாற்பட்டும், அவ்வினை பன்மையாயிற் பலவின்பாற்பட்டும் பொதுமைநீங்கும்.

(கு.) "தெரிநிலையுடையவஃறிணையியற்பெயர், ஒருமையும்பன்மையும்வினையொடுவரினே." என்பதனாலும் அறிக. பறவை வந்தது என்பதில் வந்தது என்று ஒருமைவினையான் முடிக்கப்பட்டதினால் இவ்வாக்கியத்தில் பறவை என்பது ஒன்றன்பாற்பட்டது. பறவை வந்தன என்பதில் வந்தன என்று பன்மைவினையான் முடிக்கப்பட்டதினால் இவ்வாக்கியத்திற் பறவை பலவின்பாற்பட்டது. ஏனையவு மிவ்வாறே காண்க. ()

[இருதிணைப் பொதுப்பெயர்.]

உ௮உ. முதற்பெயர் நான்குஞ் சினைப்பெயர் நான்குஞ்
சினைமுதற் பெயரொரு நான்குமுறை யிரண்டுந்
தன்மை நான்கு முன்னிலை யைந்தும்
எல்லாந் தாந்தா னின்னன பொதுப்பெயர்.

Digitized By Roja Muthiah Research Library

இ - ள். முதற்பெயர் நான்கும் - முதற்பெயராகிய நான்குபெயரும்,—சினைப்பெயர் நான்கும் - சினைப்பெயராகிய நான்குபெயரும்,—சினைமுதற்பெயர் ஒருநான்கும் - சினைமுதற்பெயராகிய நான்குபெயரும்,—முறை இரண்டும் - முறைப்பெயராகிய இரண்டுபெயரும்,—தன்மைப் (பெயர்) நான்கும் - தன்மைப்பெயராகிய நான்குபெயரும்,—முன்னிலைப் (பெயர்) ஐந்தும் - முன்னிலைப்பெயராகிய ஐந்துபெயரும்,—எல்லாம் தாம் தான் - எல்லாம் தாம் தான் என்னு மூன்றுபெயரும்,—இன்னன - இவைபோல்வன பிறவும்,—பொதுப்பெயர் - இருதிணைக்கும் பொதுப்பெயர்களாம். எ - று.

இன்னன என்றமையால், சூரியனுதித்தான், சூரியனுதித்தது; சந்திரனுதித்தான், சந்திரனுதித்தது என ஒருபொருளையே உயர்திணைப்பொருளாக்கியும் அஃறிணைப்பொருளாக்கியுங் கூறும் பொதுப்பெயர் முதலானவையும் ஊமைவந்தான், ஊமைவந்தாள் என உயர்திணையிருபாலையும் உணர்த்தும் பொதுப்பெயர் முதலானவையும், தன்மைமுன்னிலைவினையாலணையும் பெயர்களும் பிறவுங் கொள்க. (௨௫)

[முதற்பெயர்முதலிய நான்கையும்வகுத்தல்.

உ௭௩. ஆண்மை பெண்மை யொருமை பன்மையின்
ஆமந் நான்மைக ளாண்பெண் முறைப்பெயர்

இ - ள். ஆண்மை பெண்மை ஒருமை பன்மையின் - ஆண்மை முதலாகிய இந்நான்குபாலுங் காரணமாக,—அவ் நான்மைகள் ஆம் - அம்முதற்பெயர் சினைப்பெயர் சினைமுதற்பெயர் என்னு மூன்றும் ஒவ்வொன்று நந்நான்காகும்,—ஆண் பெண் முறைப்பெயர் - ஆண்மை பெண்மை என்னும் இருபாலுங் காரணமாக முறைப்பெயர் இரண்டாகும். எ - று.

'முறையிரண்டும்' என்று முற்சூத்திரங்குறித்தலால் இச்சூத்திரத்தில் தொகைகொடாது ஆண்பெண் முறைப்பெயரென்று கூறியதினாலும் அப்பொருளமைவதறிக.

வ - று. (க.) சாத்தன் ஆண்மைமுதற்பெயர். சாத்தி பெண்மைமுதற்பெயர். கோதை ஒருமைமுதற்பெயர். கோதைகள் பன்மைமுதற்பெயர். ஆக ௪.

(உ.) முடவன் ஆண்மைச்சினைப்பெயர். முடத்தி பெண்மைச்சினைப்பெயர். செவியிலி ஒருமைச்சினைப்பெயர். செவியிலிகள் பன்மைச்சினைப்பெயர். ஆக ௪.

(௩.) முடக்கொற்றன், ஆண்மைச்சினைமுதற்பெயர். முடக்கொற்றி பெண்மைச்சினைமுதற்பெயர். கொடும்புறமருதி ஒருமைச்சினைமுதற்பெயர். கொடும்புறமருதிகள் பன்மைச்சினைமுதற்பெயர். ஆக ௪.

Digitized By Roja Muthiah Research Library

(௬.) தந்தை ஆண்மைமுறைப்பெயர்; தாய் பெண்மை முறைப்பெயர்; ஆக உ. (உ௬)

[திணைப்பொதுப்பெயர் பாற்பொதுவாதல்.]

உ௪௬. அவற்றுள்,—
ஒன்றே யிருதிணைத் தன்பா லேற்கும்.

இ - ள். அவற்றுள் - முதற்பெயர்முதலாகச் சொல்லப்படும் இருபத்தாறும் பிறவுமாகிய பொதுப்பெயர்களுள்,—ஒன்றே இருதிணைத் தன்பால் ஏற்கும் - ஒவ்வொன்றே இருதிணையிலுந் தன்றன் பால்களை ஏற்று வரும். எ-று.

எனவே, ஆண்மைப்பொதுப்பெயர் உயர்திணையாண்பாலையும் அஃறிணையாண்பாலையும், பெண்மைப்பொதுப்பெயர் உயர்திணைப்பெண்பாலையும் அஃறிணைப்பெண்பாலையும், ஒருமைப்பொதுப்பெயர் உயர்திணையாணொருமை பெண்ணொருமைகளையும் அஃறிணையொருமையையும், பன்மைப்பொதுப்பெயர் உயர்திணைப்பன்மையையும் அஃறிணைப்பன்மையையும் ஏற்குமென்பதாயிற்று.

வரலாறு.

(௧.) முதற்பெயர் நான்கு:— (முதலெனினும் அங்கியெனினும் ஒண்டொக்கும்)

சாத்தனிவன், சாத்தனிவ்வெருது என ஆண்மை முதற்பெயர் இருதிணையாண்பாற்கும் பொதுவாயிற்று.

சாத்தியிவள், சாத்தியிப்பசு எனப் பெண்மை முதற்பெயர் இருதிணைப் பெண்பாற்கும் பொதுவாயிற்று.

கோதையிவன், கோதையிவள், கோதையிது என ஒருமைமுதற்பெயர் இருதிணையொருமை மூன்றற்கும் பொதுவாயிற்று.

கோதைகளிவர், கோதைகளிவை எனப் பன்மைமுதற்பெயர் இருதிணைப்பன்மைக்கும் பொதுவாயிற்று. இவை அங்கியாகிய முழுப்பொருளைக் குறித்தமையால் முதலெனப்பட்டன.

(உ.) சினைப்பெயர் நான்கு:— (சினையெனினும் அங்கமெனினுமொக்கும்.)

முடவனிவன், முடவனிவ்வெருது என ஆண்மைச்சினைப்பெயர் இருதிணையாண்பாற்கும் பொதுவாயிற்று.

முடத்தியிவள், முடத்தியிப்பசு எனப் பெண்மைச்சினைப்பெயர் இருதிணைப்பெண்பாற்கும் பொதுவாயிற்று.

செவியிலியிவன், செவியிலியிவள், செவியிலியிது என ஒருமைச்சினைப்பெயர் இருதிணையொருமை மூன்றற்கும் பொதுவாயிற்று.

Digitized By Roja Muthiah Research Library

செவியிலிகளிவர், செவியிலிகளிவை எனப பன்மைச்சினைப் பெயர் இருதிணைப்பன்மைக்கும் பொதுவாயிற்று. இவை அங்கியின்கூறுகிய விகார அங்கத்தைக் குறித்தமையால் சினையெனப்பட்டன.

(௩) சினைமுதற்பெயர் நான்கு:—

முடக்கொற்றனிவன், முடக்கொற்றனிவ்வெருது என் ஆண்மைச்சினைமுதற்பெயர் இருதிணையாண்பாற்கும் பொதுவாயிற்று.

முடக்கொற்றியிவள், முடக்கொற்றியிப்பசு எனப் பெண்மைச்சினைமுதற்பெயர் இருதிணைப் பெண்பாற்கும் பொதுவாயிற்று

கொடும்புறமருதியிவன், கொடும்புறமருதியிவள், கொடும்புறமருதியிது என ஒருமைச் சினைமுதற்பெயர் இருதிணையொருமை மூன்றற்கும பொதுவாயிற்று.

கொடும்புறமருதிகளிவர், கொடும்புறமருதிகளிவை எனப் பன்மைச்சினைமுதற்பெயர் இருதிணைப்பன்மைக்கும் பொதுவாயிற்று. இவை அங்காங்கிகளிரண்டையும் விஷயீகரித்து வந்தமையாற் சினைமுதலெனப்பட்டன. விஷயீகரித்தல் - விஷயமாகக் கொள்ளுதல்.

(௪) முறைப்பெயரிரண்டு:—

தந்தையிவன், தந்தையிவ்வெருது என ஆண்மைமுறைப்பெயர் இருதிணையாண்பாற்கும பொதுவாயிற்று.

தாயிவள், தாயிப்பசு எனப் பெண்மைமுறைப்பெயர் இருதிணைப்பெண்பாற்கும் பொதுவாயிற்று.

(௫) தன்மைப்பெயர் நான்கு:—

யானம்பி, யானங்கை, யான்பூதம் என யானென்னுந் தன்மைப்பெயர் இருதிணையொருமை மூன்றற்கும் பொதுவாயிற்று. நானென்பதனோடும் இவ்வாறொட்டுக.

யாமக்கள், யாம்பூதங்கள், என யாமென்னுந் தன்மைப்பெயர் இருதிணைப்பன்மைக்கும் பொதுவாயிற்று. நாமென்பதனோடும் இவ்வாறொட்டுக.

(௬) முன்னிலைப்பெயர் ஐந்து:—

நீ நம்பி, நீ நங்கை, நீ பூதம் என நீயென்னு முன்னிலைப்பெயர் இருதிணையொருமைமூன்றற்கும் பொதுவாயிற்று.

நீர்மக்கள், நீர்பூதங்கள் என நீரென்னு முன்னிலைப்பெயர் இருதிணைப்பன்மைக்கும் பொதுவாயிற்று. எல்லீர், நீயிர் நீவிர் என்பவற்றோடும் இவ்வாறொட்டுக.



Digitized By Roja Muthiah Research Library

(எ) எல்லாம், தாம், தான்:—

அவரெல்லாம், அவையெல்லாம் என எல்லாமென்பது இருதிணைப்பன்மைக்கும் பொதுவாயிற்று.

அவர்தாம், அவைதாம் எனத் தாமென்பது இருதிணைப்பன்மைக்கும் பொதுவாயிற்று.

அவன்றான், அவடான், அதுதான் எனத் தானென்பது இருதிணையொருமைமூன்றற்கும் பொதுவாயிற்று. (உஎ)

[தன்மை முன்னிலை படர்க்கைப் பெயர்கள்.]

உஅரு. தன்மை யானான் யாநா முன்னிலை
எல்லீர் நீயிர் நீவிர் நீர்நீ
அல்லன படர்க்கை யெல்லா மெனல்பொது.

இ - ள். தன்மை யான் நான் யாம் நாம் - தன்மைப்பெயர் நான்காவன யான் நான் யாம் நாம் என்பனவாம்,—முன்னிலை எல்லீர் நீயிர் நீவிர் நீர் நீ - முன்னிலைப்பெயர் ஐந்தாவன எல்லீர் நீயிர் நீவிர் நீர் நீ என்பனவாம்,—அல்லன படர்க்கை - இவ்வொன்பதுமல்லாத பெயர்களெல்லாம் படர்க்கையிடத்திற்குரியனவாம்,—எல்லாம் எனல் பொது - அவற்றுள் எல்லாமென்னும் பெயரொன்றும் மூவிடத்திற்கு முரித்தாம். எ - று.

எல்லாமென்பது மூவிடத்தும் வருமாறு:—யாமெல்லாம், நீரெல்லாம், அவரெல்லாம், அவையெல்லாம் என வரும். (உஅ)

[தொழிற்பெயர்க்கும் வினையாலணையும் பெயர்க்கும் இடம்வகுத்தல்.]

உஅகூ. வினையின் பெயரே படர்க்கை வினையால்
அணையும் பெயரே யாண்டு மாகும்.

இ - ள். வினையின் பெயர் படர்க்கையே - வினைப்பெயர்கள் படர்க்கையிடத்திற்கே உரியவாகும்,—வினையாலணையும் பெயர் யாண்டும் ஆகும் - வினையாலணையும் பெயர்கள் தனித்தனி மூவிடத்திற்கு முரியவாகும்

வினைப்பெயரெனினுந் தொழிற்பெயரெனினும் ஒக்கும்.

வ - று. யானுணல், நீயுணல், அவனுணல் எ - ம். உண்டேனை, உண்டாயை, உண்டானை எ - ம். வரும். வினையாலணையும் பெயரே யாண்டுமாகும் என்றது வினையாலணையும் பெயருக்கு 'அல்லனபடர்க்கை' என்றதனால் எய்தியதுவிலக்கி இடம் வகுத்தது; வினையின்பெயரே படர்க்கை என்றது சில வினைப்பெயருக்கு 'அல்லனபடர்க்கை' என்றதனால் எய்திய இடம் இங்கே யாண்டு மாகும் என்பதனால் இகந்துபடாமற்காத்தது. இங்கே வினையின்பெயரென்றது எல்லாவினைப்பெயரையுமன்று. யானுணல், நீயுணல், அவனுணல் என்புழி வரும் வினைப்பெயர், யா

Digitized By Roja Muthiah Research Library

னுண்டேன், நீயுண்டாய், அவனுண்டான் என்புழி வரும் முற்றுவினை போல, யான், நீ, அவன் என்னு மூவிடப்பெயர்களுக்குப் பயனிலையாகி அவ்வப்பெயரோடும் ஒன்றுபட்டு நிற்றலினால், அவ்வவ்விடத்திற்குரியவாம் எனக் கொள்ளக்கிடக்கும்; ஆதலால் இவ்வினைப்பெயருக்கு எய்திய இடம் இசைந்தபடும் என்பது பற்றி, அப்படியிசைந்துபடாமற் காக்கவேண்டிற்று. எனதுணல், நினதுணல், அவனுணல் என்றும், உணல் என்றும், வேறுபட்டுநிற்கும் வினைப்பெயர்கட்கு எய்தியவிடம் இசைந்துபடுதலில்லையென அறிக. (உ௯)

[பன்னிரண்டு பொதுப்பெயர்.]

உ௮௭ தான்யா னானீ யொருமை பன்மைதாம்
யாநா மெலாமெலீர் நீயிர்நீர் நீவிர்.

இ - ள். தான் யான் நான் நீ ஒருமை - தான் யான் நான் நீ என்னு நான்கும் இருதிணைமுக்கூற்றொருமைப்பெயர்களாம், — தாம் யாம் நாம் எலாம் எலீர் நீயிர் நீர் நீவிர் பன்மை - தாம் யாம் நாம் எல்லாம் எல்லீர் நீயிர் நீர் நீவிர் என்னுமெட்டும் இருதிணையிருகூற்றுப் பன்மைப்பெயர்களாம்.

இருதிணைமுக்கூற்றொருமையென்றது உயர்திணையாணொருமை உயர்திணைப்பெண்ணொருமை அஃறிணையொருமைகளை. இருதிணையிருகூற்றுப் பன்மையென்றது உயர்திணைப்பன்மை அஃறிணைப்பன்மைகளை. (௬0)

[எண்ணால்வரும் உயர்திணைப்பெயருக்குப் புறனடை.]

உ௮௮. ஒருவ னொருத்திப் பெயர்மே லெண்ணில.

இ - ள். ஒருவன் ஒருத்தி - ஒன்றென்னு மெண்ணால் ஒருவன் ஒருத்தி என வருவனவன்றி, — மேல் எண் பெயர் இல - இவற்றின்மேல் இரண்டு முதலாகிய எண்களால் இவ்வாண்பாற்பெயரும் பெண்பாற்பெயரும் வருவன விலவாம். எ - று. (௬௧)

உ௮௯. ஒருவ ரென்ப துயரிரு பாற்றாய்ப்
பன்மை வினைகொளும் பாங்கிற் றென்ப.

இ - ள். ஒருவர் என்பது உயர் இரு பாற்று ஆய் - ஒருவரென வழங்கும் சொல் உயர்திணை ஆண்பெண்ணிவ்விருபாற்கும் பொதுவாய், — பன்மை வினைகொளும் பாங்கிற்று என்ப - அத்திணைப்பன்மை வாய்பாட்டு வினையைக்கொண்டுமுடியும் பாங்கினையுடைத்தாகும் என்று சொல்லுவர் புலவர்.

வ - று. ஆடவருளொருவரறத்தின்வழிநிற்பார்; பெண்டிருளொருவர்கொழுநன்வழிநிற்பார் என வரும். இங்கே, ஒருவர் நிற்பான் நிற்பாள் எனப்பகுதிக்கேற்ப ஒருமைச்சொல்லைக் கொள்ளாது விகுதிக்கேற்பப் பன்மைச்சொல்லையே கொண்டுமுடிதல் காண்க.

இனி, உரையிற்கோடலென்னுமுத்தியால், உயர்த்தற்பொருட்டு ஆரென்னுமிடைச்சொல்லை ஈற்றிற் பெற்ற இருதிணைப் பொதுப்பெயரும், பால்

Digitized By Roja Muthiah Research Library

பலர்பாலஃறிணைப்பெயரும், சிறுபான்மை உயர்திணைப்பெயரும் பன்மைச் சொல்லொடு முடியும்.

உ - று. (க) சாத்தனார்வந்தார், முடவனார்வந்தார், முடக்கொற்றனார்வந்தார், தந்தையார்வந்தார் என இருதிணைப் பொதுப்பெயர்கள் பன்மைச்சொல்லொடு முடிந்தன.

(உ) நரியார்வந்தார் எனப் பால்பகாவஃறிணைப்பொதுப்பெயர் பன்மைச்சொல்லொடு முடிந்தது. "செந்நாப்பசுங்கிளியார்சென்றார்க்கோரின்னுரை, தந்தாரேற்றந்தாரென்னின்னுயிர்" என்பதுமது.

(ங) நம்பியார்வந்தார், நங்கையார்வந்தார், இறைவனார்வந்தார், அகத்தியனார்வந்தார், தொல்காப்பியனார்வந்தார் என உயர்திணைப் பெயர்கள் பன்மைச்சொல்லொடு முடிந்தன. (கூஉ)

[ஆகுபெயர்.]

உகூ0. பொருண்முத லாறோ டளவைசொற் றானி
கருவி காரியங் கருத்த னாதியுள்
ஒன்றன் பெயரா னதற்கியை பிறிதைத்
தொன்முறை யுரைப்பன வாகு பெயரே.

இ - ள். பொருள் முதல் ஆறோடு - பொருளிடங்காலஞ்சினைகுணந் தொழிலென்னும் ஆறுடனே, — அளவை - இவற்றின் பகுதியவாகிய நால்வகையளவையும், — சொல் - சொல்லும், — தானி - தானியும், — கருவி - காரணமும், — காரியம் - காரியமும், — கருத்தன் - வினைமுதலும், — ஆதியுள் - ஆதியாகவரும்பொருள்களுள், — ஒன்றன் பெயரான் அதற்கு இயை பிறிதை - ஒருபொருளினது இயற்பெயரால் அப்பொருளினுக்கு இயைந்த பிறிதொருபொருளை, — தொன்முறை உரைப்பன ஆகுபெயர் - தொன்றுதொட்டுவரு முறையே சொல்லப்பட்டு வருவன ஆகுபெயர்களாம். எ - று.

வரலாறு.

(க) "தாமரைபுரையுங்காமர்சேவடி." என்புழித் தாமரையென்னு முதற்பொருளின் பெயர் அதன் சினைப்பொருளாகிய மலருக்காதலாற் பொருளாகுபெயர்.

(உ) "அகன்மர்ந்துசெய்யாளுறையும்" என்புழி அகமென்னும் உள்ளிடப் பெயர் அங்கிருக்கின்ற மனசிற்காதலால் இடவாகுபெயர்.

(ங) காரறுத்தது என்புழிக் காரென்னும் மழைக்காலப்பெயர் அக்காலத்துவிளையும் பயிருக்காதலாற் காலவாகுபெயர்.

(ச) வெற்றிலைநட்டான் என்புழி வெற்றிலை என்னுஞ் சினைப்பெயர் அதன் முதலாகிய கொடிக்காதலாற் சினையாகுபெயர்.

Digitized By Roja Muthiah Research Library

(௬) நீலஞ்சூடினாள் என்புழி நீலமென்னும் நிறக்குணப்பெயர் அதனையுடைய குவளைமலருக்காதலாற் குணவாகுபெயர்.

(௫) வற்றலோடுண்டான் என்புழி வற்றலென்னுந் தொழிற்பெயர் அதனைப்பொருந்திய உணவிற்காதலாற் றொழிலாகுபெயர்.

(எ) காலாலேநடந்தான் என்புழிக் காலென்னும் எண்ணலளவைப்பெயர் அவ்வளவைக்கொண்ட உறுப்பிற்காதலால் எண்ணலளவையாகு பெயர்.

இரண்டுவீசைதந்தான் என்புழி வீசை என்னும் எடுத்தலளவைப் பெயர் அவ்வளவைக்கொண்ட பொருட்காதலால் எடுத்தலளவையாகுபெயர்.

நாழியுடைந்தது என்புழி நாழியென்னும் முகத்தலளவைப்பெயர் அவ்வளவு கருவிக்காதலான் முகத்தலளவையாகுபெயர்.

கீழைத்தடிவிளைந்தது என்புழித் தடியென்னும் நீட்டலளவைப் பெயர் அதனால் அளக்கப்பட்ட கழனிக்காதலால் நீட்டலளவையாகுபெயர்.

(அ) இந்நூற்குரைசெய்தான் என்புழி உரையென்னுஞ் சொல்லின்பெயர் அதன்பொருளுக்காதலாற் சொல்லாகுபெயர்.

(௯) விளக்கு முரிந்தது என்புழி விளக்கென்னுந் தானியின்பெயர் அதற்குத்தானமாகிய தண்டிற்காதலாற் றானியாகுபெயர்.
[விளக்கு - விளக்குமொளியையுடைய பிழம்பு, தானி - தானத்தையுடையது. தானம் - இடம்]

(௧0) திருவாசகம் என்புழி அடையடுத்தவாசகமென்னு முதற்கருவியின்பெயர் அதன்காரியமாகிய ஒரு நூலிற்காதலாற் கருவியாகுபெயர்.

(௧௧) இந்நூலலங்காரம் என்புழி அலங்காரமென்னுங் காரியத்தின் பெயர் அதனையுணர்த்துதற்குக் கருவியாகிய நூலிற்காதலாற் காரியவாகுபெயர்.

(௧௨) இந்நூறிருவள்ளுவர் என்புழித் திருவள்ளுவரென்னுங் கருத்தாவின் பெயர் அவராற் செய்யப்பட்ட நூலிற்காதலாற் கருத்தாவாகுபெயர்.

ஆதி என்றதனால், காளைவந்தான், பாவைவந்தாள் என வரும் உவமையாகுபெயர் முதலானவையும், தேவர் முதலியோர் பெயரை மக்களுக்கு இட்டு வழங்குவனவுங்கொள்க.

இன்னும், இவ்வாகுபெயர், விடாதவாகுபெயர், விட்டவாகுபெயர் எ-ம். இருமடியாகுபெயர், மும்மடியாகுபெயர், நான்மடியாகுபெயர் எ-ம். அடையடுத்தவாகுபெயர் எ-ம். இருபெயரொட்டாகுபெயர் எ-ம். பெயர்பெற்று வழங்கும்.

Digitized By Roja Muthiah Research Library

உ-று. (க) கடுத்தின்முன், புளிதின்முன் என்புழிக், கடுவும் புளியுஞ், சுவையாகிய தத்தம் பொருளைவிடாதுநின்று தம்பொருளின் வேறல்லாத காய் கனி என்னும் பொருளை உணர்த்தலால், விடாதவாகுபெயர். அவ்வூர்வந்தது என்புழி, ஊரென்பது,இடமாகியதன் பொருளைவிட்டுத் தன்னிடத்துள்ள மனிதரையுணர்த்தலால், விட்டவாகுபெயர்.

(உ) புளிதின்முன் என்புழிப், புளியென்னுஞ் சுவைப்பெயர் அதனையுடைய பழத்திற்காதலால் ஆகுபெயர். புளிமுளைத்தது என்புழிப், புளியென்பது, சுவைப்பெயர் பழத்திற்காய்ப், பழத்தின்பெயர் மரத்திற்காதலால், இருமடியாகுபெயர். கார்நிசர்வண்ணை என்புழிக், காரென்னுநிறப்பெயர் அதனையுடைய மேகத்திற்காதலால் ஆகுபெயர். கார்வந்தது என்புழிக், காரென்பது நிறப்பெயர் மேகத்திற்காய், மேகத்தின்பெயர் அதுபெய்யும்பருவத்திக்காதலால் இருமடியாகுபெயர். காரறுத்தது என்புழிக், காரென்பது, நிறப்பெயர் மேகத்திற்காய், மேகத்தின்பெயர் பருவத்திற்காய், அப்பருவத்தின்பெயர் அதில்விளையும் பயிருக்காதலால் மும்மடியாகுபெயர், நான்மடியாகுபெயர் வந்தவழிக் கண்டுகொள்க.

(ங) வெற்றிலைநட்டான், மருக்கொழுந்துநட்டான், அறுபதமூரலும் என்புழி, இலை, கொழுந்து, பதம் என்னுஞ் சினைப்பெயர்கள், முறையே வெறுமை, மரு, ஆறு என்னும் அடையடுத்து, முதற்பொருள்களுக்காதலால், அடையடுத்தவாகுபெயர்.

(ச) வகரக்கிளவி, மக்கட்சுட்டு என்பன, ஒருபொருட்கு இருபெயரொட்டிநிற்க, அவற்றுள் ஒருபெயர் ஆகுபெயராக நிற்றலால், இருபெயரொட்டாகுபெயர். வகரக்கிளவியென்பதிற் கிளவியென்பது சொல்லையுணர்த்தும்போது இயற்பெயர். சொற்குக் கருவியாகிய எழுத்தையுணர்த்தும்போது ஆகுபெயர். வகரக்கிளவி வகரமாகிய எழுத்து எனப் பொருள்படும். மக்கட்சுட்டென்பதிற் சுட்டென்பது நன்குமதிப்பையுணர்த்தும்போது இயற்பெயர்; நன்குமதிக்கப்படுநிலையுடைய பொருளையுணர்த்தும்போது ஆகுபெயர். மக்கட்சுட்டு மக்களாகிய நன்குமதிக்கப்படுபொருள் எனப் பொருள்படும்.

வெற்றிலைமுதலியனவற்றைப் பொற்றொடி முதலியனபோல அன்மொழித்தொகைப்பெயரென்று கொள்ளலாகாதோ எனின்;—அன்மொழித்தொகைப்பெயர், செய்யுள் செய்யும் புலவன் ஒருவரை வியப்புமுதலிய காரணத்தினாலே தன்கூற்றாகவேனும் பிறர்கூற்றாகவேனும் பாடுமிடத்து அங்கங்கே வருவதன்றி, ஆகுபெயர்போல நியதிப்பெயராய் வருவதன்று; ஆதலால், ஆகுபெயரும் அன்மொழித்தொகையும் ஒன்றெனக் கொள்ளலாகாது. அங்ஙனமாயினும், ஆகுபெயரும் அன்மொழித்தொகைப்பெயருந் தம்பொரு

Digitized By Roja Muthiah Research Library

ளுணர்த்தாது பிறிதொருபொருளுணர்த்தலால் ஒக்குமாதலின், அவை தம்முள் வேற்றுமையாதோ எனின்;—ஆகுபெயர் ஒன்றன்பெயரால் அதனொடியைபுபற்றிய பிறிதொன்றையுணர்த்தி ஒருமொழியிடத்து வருவதாம்; அன்மொழித்தொகை இயைபுவேண்டாது இருமொழியுந்தொக்க தொகையாற்றலினாலே பிறிது பொருளுணர்த்தி இருமொழியிடத்துவருவதாம்; இவை தம்முள வேற்றுமையென்க. இருபெயரொட்டாகுபெயர் இருமொழியிடத்து வந்ததன்றோவெனின்:—வகரக்கிளவி, மக்கட்சுட்டு என்னும் இருபெயரொட்டாகுபெயர்களுள், வகரமும், மக்களுமாகிய அடைமொழிகள், கிளவி, சுட்டு என்னும் இயற்பெயர்ப்பொருளை விசேடித்து நில்லாது, எழுத்தும்பொருளுமாகிய ஆகுபெயர்ப்பொருளை விசேடித்து நிற்கக், கிளவி, சுட்டென்பனவே ஆகுபெயர்ப்பொருளை யுணர்த்த, இருபெயரும் ஒட்டிநிற்கும்; ஆதலால், இருபெயரொட்டாகுபெயர் இருமொழியிடத்து வந்ததன்றென்க. இனிப் பொற்றொடி என்னும் அன்மொழித்தொகையிலே, பொன்னென்னும் அடைமொழி, அப்படி அன்மொழித்தொகைப் பொருளாகிய பெண்ணை விசேடித்து நில்லாது, தொடியையே விசேடித்துநிற்க, அவ்விருமொழியுந்தொக்க தொகையாற்றலினாலே அன்மொழித்தொகைப்பொருளையுணர்த்துதலும் அறிக. இக்கருத்தேபற்றி மக்கட்சுட்டு முதலியவற்றைப் பின்மொழியாகுபெயரென்பாருமுளர்.

அன்மொழித்தொகை பிறிதுபொருளை இயைபுவேண்டாது உணர்த்துமென்றகருத்துத் தகுமோ தகாதோ என ஆராயுங்கால்; தாமரைபுரையுந்தாள் என்பதில் தாமரை என்னும் ஆகுபெயர் இயைபுபற்றி மலரையுணர்த்தியதுபோல், தாழ்குழல் என்னும் அன்மொழித்தொகையிலும் குழல் என்பது இயைபுபற்றி அக்குழலையுடையாளை யுணர்த்திற்று. பான்மொழி என்னும் ஆகுபெயரிலும் அப்படியே உணர்த்திற்று. பிறவு மன்ன. இங்ஙனமாகவும் அன்மொழித்தொகை இயைபுவேண்டாது பிறிதுபொருளுணர்த்துமென்று கூறியது ஒக்குமோ ஒவ்வாதோ என்று ஆராய்ந்து துணிவது விவேகிகளுக்குக் கடனும்.

இனி இந்த ஆகுபெயர்ச்சொற்கள் தம்பொருளை விட்டுநீங்காது நின்று தம்பொருளின் வேறல்லாதபொருளை யுணர்த்தலும், தம்பொருளைவிட்டுப் பிறிதுபொருளுணர்த்தலும் ஆகிய இலக்கணத்தையுடைய விடாத ஆகுபெயரும் விட்ட ஆகுபெயரும் என இருவகையெனவும், அவற்றிற்கு உதாரணம் முறையே கடுத்தின்றான், புளித்தின்றான், தாமரைத்தாளினான் (என்வருமிவற்றில் தம்பொருளின் வேறல்லாத பொருள் காய் கனி மலர் என்பன ஆதலால்) விடாத ஆகுபெயரெனவும்; குழிப்பாடிநேரிது, உயர்நிலந்துன்புற்றது (எனின் குழிப்பாடியென்னும் ஊரிலுள்ளோர் நேர்மை யிதுஎனவும், உயர்நிலத்துள்ள குடிகள் துன்புற்றன எனவும் இடத்தைவிட்டு இடத்து நிகழ் பொருளையுணர்த்துதலால்) விட்ட ஆகுபெயரெனவும் பிறர்கூறுதலு முய்த்துணர்ந்துகொள்க.

(சூ.) முதலிற்கூறுஞ்சினையறிகிளவியுஞ், சினையிற்கூறுமுதலறிகிளவியும், பிறந்தவழிக்கூறலும்பண்புகொள்பெயரு, மியன்றதுமொழிதலுமிரு

பெயரொட்டும், வினைமுதலுரைக்குங்கிளவியொடுதொகைஇ, யனைய்மரபினவேயாகுபெயர்க்கிளவி. எ - ம். அவைதாம், தத்தம்பொருள்வயிற்றம்மொடுசிவணலு, மொப்பில்வழியாற்பிறிதுபொருள்சுட்டலு, மப்பண்பினவேநுவலுங்காலே. எ - ம். அளவுநிறையுமவற்றொடுகொள்வழி, யுளவெனமொழிபவுணர்ந்திசினோரே. எ - ம். கிளந்தவல்லவேறுபிறதோன்றினுங், கிளந்தவற்றியல்பாலுணர்ந்தனர்கொளலே. எ-ம். ஆசிரியர் தொல்காப்பியனார் கூறதலுங் காண்க. (௫௩)

பரீக்ஷை விஞக்கள்:—592. பெயர்ச்சொல்லாவதியாது? 593. இடுகுறிமரபாவன யாவை? 594. காரணக்குறி மரபாவனயாவை? 595. இடுகுறியாக்கமாவன யாவை? 596. காரணக்குறியாக்கமாவனயாவை? 597. திணைபாலிடங்களுள் ஒவ்வொன்றற்கேயுரியவாய்வரும் என்ற பெயர்களுள், உயர்திணையாண்பாற்குரிய பெயர்கள் யாவை? 598. சுட்டு, விஞ, பிற, மற்று என்னும் இந்நான்கிடைச்சொற்களையும்பற்றிவரும் பெயர்கள் பொருளாதியாறனுள் அடங்குமோ அடங்காவோ? 599. உயர்திணைப்பெண்பாற்குரிய பெயர்கள் யாவை? 600 உயர்திணைப்பலர்பாற்குரிய பெயர்கள் யாவை? 601. அஃறிணையொன்றன்பாற்குரிய பெயர்கள் யாவை? 602. அஃறிணைப்பலவின்பாற்குரிய பெயர்கள் யாவை? 603. ஐம்பாற்பெயர்களுள் ஆண்பாற்பெயருக்கு னவ்வீறு என்றதனால் எவ்விகுதிகள் அடங்கும்? 604. பெண்பாற்பெயருக்கு ளவ்வொற்று என்றதனால் எவ்விகுதிகள் அடங்கும்? 605. பலர்பாற்பெயருக்கு ரவ்வீறு என்றதனால் எவ்விகுதிகள் அடங்கும்? 606. திணைபாலிடங்களுட் பலவற்றிற்குப் பொதுவாய் வரும் என்றபெயர்களுள், அஃறிணையிற் பாற்பொதுவாய்வரும் பெயர்கள் யாவை? 607. இருதிணைக்கும்பொதுவாய்வரும்பெயர்கள் யாவை? 608 சூரியன் சந்திரன் என்றாற்போலவருந் தெய்வப்பெயர்கள் அஃறிணைச்சொல்லைக்கொண்டு முடிதலுமுண்டோ? 609 முதற்பெயர் நான்காவனவெவை? 610. சினைப்பெயர் நான்காவன எவை? 611. முறைப்பெயரிரண்டாவன எவை? 612. திணைப்பொதுவாய்நின்றபெயர்கள் எப்படிப் பாற்பொதுவாய் நிற்கும்? 613. தன்மைப்பெயர் நான்காவன எவை? 614. முன்னிலைப்பெயர் ஐந்தாவன எவை? 615. படர்க்கைப்பெயர்கள் எவை? 616. மூவிடத்திற்கும் பொதுவாய்வரும் பெயர் எது? 617. வினையாலணையும்பெயர்கள் எவ்விடத்திற்குரியனவாம்? 618. மூவிடத்தெழுவாய்கட்குப் பயனிலையாய் வருந் தொழிற்பெயர் அவ்வவ்விடத்திற்கே உரியவாமோ? 619. தான்முதலாகிய பன்னிரண்டு பொதுப்பெயர்களுள்ளும், இருதிணைமுக்கூற்றொருமைப்பெயர்கள் எவை? 620 இருதிணையிருகூற்றுப் பன்மைப்பெயர்கள் எவை? 621. உயர்திணையில் ஆண்பாற்பெயரும் பெண்பாற்பெயரும் எவ்வெண்ணால் வரும்? 622. எவ்வெண்ணால்வரா? 623. உயர்திணையிற் பாற்பொதுவாய்வரும் பெயர் யாது? 624 ஒருவரென்னும் பாற்பொதுப்பெயர் ஒருமைச்சொற்கொண்டு முடியுமோ பன்மைச்சொற்கொண்டு முடியுமோ? 625 ஒருமைப்பெயர் உயர்த்தற்பொருட்டு எதனைப்பெற்றுவரும்? 626. உயர்த்தற்பொருட்டு ஆரென்னும் இடைச்சொல்லை யீற்

Digitized By Roja Muthiah Research Library

திற் பெற்றுவரும் பெயர்கள் ஒருமைச்சொல்லோடு முடியுமோ பன்மைச் சொல்லோடுமுடியுமோ? 627. ஆகுபெயராவனயாவை? 628. அவ்வாகு பெயர்கள் எத்தனைவகைப்படும்? 629. ஆகுபெயர்கள் இன்னும் எவ்வெவ்வகை யிற் பெயர்பெற்று வழங்கும்? 630, விடாதவாகுபெயராவதியாது? 631. விட்டவாகுபெயராவதியாது? 632. இருமடியாகுபெயராவதியாது? 633. மும்மடியாகுபெயராவதியாது? 634. அடையடுத்தவாகுபெயராவதியாது? 635. இருபெயரொட்டாகுபெயராவதியாது? 636. அன்மொழித்தொகைப்பெயருக்கும் அடையடுத்தவாகுபெயருக்கும் வேறுபாடியாதோ? 637. இருபெயரொட்டாகுபெயருக்கும் அன்மொழித்தொகைப்பெயருக்கும் வேறுபாடியாதோ? (கக)

## வேற்றுமை.

[வேற்றுமை இனையவென்பதும் இத்துணையவென்பதும்.]

உகக. ஏற்கு மெவ்வகைப் பெயர்க்குமீ றாய்ப்பொருள்
வேற்றுமை செய்வன வெட்டே வேற்றுமை.

இ - ள். ஏற்கும் எவ்வகைப் பெயர்க்கும் ஈறு ஆய் - தம்மையேற்றுக்கொள்ளுதற்குரிய எவ்வகைப்பட்ட பெயர்களுக்கும் இறுதியாய்,—பொருள் வேற்றுமை செய்வன வேற்றுமை எட்டே - அப்பெயர்ப்பொருளை வேற்றுமைப்படுத்துவனவாகிய வேற்றுமைகள் எட்டேயாகும். எ - று.

"பகுபதம்பகாப்பதமிருவகைத்தொடர்பதம் வினைமுற்றுப்பெயர்குறிப்புமுற்றுப்பெயர், தொழிற்பெயராதியிற்றோன்றுமெட்டுருபே" என்பதனால் வேற்றுமையுருபையேற்கும் பெயர்களின்வகையறிக.

வினைமுதலியமூன்றும் வேற்றுமைகொள்ளாமையால் அவற்றைநீக்கிப்பெயர்க்கென்றார். மேல் எழுவாயுருபிற்கு எய்தியதுவிலக்கிப் பிறிதுவிதி கூறுதலால் அதனையொழித்து விளியுருபிற்குப் பெயரின் இறுதியாகியஅகப்பாட்டெல்லையையும் மற்ற ஆறு உருபிற்கும் அதன் இறுதியாகிய புறப்பாட்டெல்லையையும் தழுவுதற்குப் பொதுமையினீறென்றார்; பொருளையன்றிச்சொல்லையும் வேறுபடுத்துவது எழுவாயுருபிற்கு இல்லாததினாலும் பொருளைவேறுபடுத்துவது எட்டுருபிற்கும் உண்மையாலும் சொல்லையொழித்துப் பொருள்வேற்றுமைசெய்வன வேற்றுமையெட்டென்றுங் கூறினார்; வேற்றுமையென்னுங் காரியத்தைச் செய்யுங் கருத்தாவாகிய எட்டுவேற்றுமையுருபிற்கும் வேற்றுமை எனப் பெயர்தந்தது காரியஆகுபெயர்.

சூத்திரம். "எழுவாய்முறையதெதிர்முகவேற்றுமை, வேறெனவிளம்பான் பெயரதுவிகாரமென், றோதியபுலவனுமுளனொருவகையா, னிந்திரனெட்டாம்வேற்றுமையென்றனன்" என ஆசிரியர் அகத்தியனார் கூறுவராகலின் விளியுருபுபடர்க்கைச்சொல்லையும் பொருளையும் முன்னிலை



Digitized By Roja Muthiah Research Library

ச்சொல்லும் பொருளுமாக வேற்றுமைசெய்தலால் அதை எழுவாயுள் அடக்காமல் வேருக்குதலே தமது துணிவென்று சொல்லவந்தவர் எட்டே வேற்றுமையென்றார்.

சூத்திரம். "வேற்றுமைதாமேயேழெனமொழிப, விளிகொள்வதன்கண்விளியோடெட்டே" என ஆசிரியர் தொல்காப்பியனார் கூறுதலுங்காண்க.

[வேற்றுமையின் பெயரு முறையும்.]

உ௬௧. பெயரே ஐ ஆல் கு இன் அது கண்
விளியென் றாகு மவற்றின் பெயர்முறை.

இ - ள். அவற்றின் பெயர் முறை - முன்னே எட்டுவேற்றுமையெனப்பட்டவைகளினுடைய பெயர்களுங் கிடக்கைமுறையுமாவன,— பெயர் ஐ ஆல் கு இன் அது கண் விளி என்று ஆகும் - பெயருமஐயும் ஆலுங் குவ்வும் இன்னும் அதுவும் கண்ணும் விளியும் என்றிப்படிச்சொல்லப்பட்டவையாகும். எ - று. (௬௫)

[எழுவாயுருபு மற்றையுருபுகளையேற்றல்.]

உ௬௨. ஆற னுருபு மேற்குமவ் வுருபே.

இ - ள். அவ்வுருபே - பெயராய்நிற்கும் அவ்வெழுவாயுருபே,—ஆறனுருபும் எற்கும் - ஐம்முதலாகிய ஆறு வேற்றுமையுருபுகளையும் ஏற்கும்.

[ஐமுதலிய உருபேலாப்பெயர்கள்.]

உ௬௪. நீயிர் நீவிர் நா னெழுவா யலபெறா.

இ - ள். நீயிர் நீவிர் நான் - நீயிர்முதலாகிய இம்மூன்றுபெயர்களும்,— எழுவாய் அல பெறா - எழுவாயல்லாத வேற்றுமைகளை எலாவாம். எ - று.

[பெயர்வேற்றுமை.]

உ௬௫. அவற் றுள்,—
எழுவா யுருபு திரிபில் பெயரே
வினைபெயர் வினாக்கொள லதன்பய னிலையே.

இ - ள். அவற்றுள் - முன்சொல்லப்பட்ட எட்டுவேற்றுமைகளுள்,— எழுவாய் உருபு திரிபு இல் பெயரே - முதல்வேற்றுமையினுருபாவது ஐம்முதலிய உருபேற்றுத் திரிதலில்லாத பெயரேயாம்,—வினை பெயர் வினாக்கொளல் அதன் பயனிலை - வினையையும் பெயரையும் வினாவையுங் கொள்ளவருதல் அவ்வுருபினது பொருணிலையாய் வருதலாம். எ - று.

எனவே, அத்திரிபில்லாத பெயர்தானே தன்பொருளை வினைமுதற்பொருளாக வேற்றுமை செய்யுமென்பதாயிற்று.

இவ்வெழுவாய்கொள்ளும்பெயர் இன்னது, இவ்வளவிற்று என்னும் பொருள்பட வரும்பெயராம்.

Digitized By Roja Muthiah Research Library

உ-ம். (க) சாத்தன்வந்தான்; கொற்றன்வாழ்க இவை தெரிநிலைவினைகொளவந்தன. அவன்பெரியன்; ஆவுண்டு இவை குறிப்புவினைகொளவந்தன.

(உ) சாத்தனிவன்; கொற்றனவன் இவை இன்னது என்னும் பொருள்படவரும் பெயர்கொள வந்தன. ஆவொன்று; யானைநூறு இவை இவ்வளவிற்று என்னும் பொருள்படவரும் பெயர்கொள வந்தன.

(௩) அவன்யார்; ஆயாது இவை வினாக்கொளவந்தன.

வினைமுதற்பொருளாவது ஒரு தொழினிகழ்ச்சியிலே தன்வயத்ததாகக் குறிக்கப்படும் பொருளாம். வினைமுதல், செய்பவன், கருத்தா என்பன ஒருபொருட்சொற்கள்.

உ-ம். சாத்தன்வந்தான் என்புழித் தொழினிகழ்ச்சி வருதல்; அத்தொழினிகழ்ச்சியிலே தன்வயத்ததாகக் குறிக்கப்படும்பொருள் சாத்தனாதலாற் சாத்தன் வினைமுதற்பொருள்.

இவ்வெழுவாய்க்கு, ஐமுதலியன போன்ற உருபில்லையாயினும், உரையிற்கோடலென்னுமுத்தியினாலே, சிறுபான்மை ஆனவன், ஆகின்றவன், ஆவான், என்பவன் முதலிய ஐம்பாற்சொற்களுஞ் சொல்லுருபுகளாக வருமெனக்கொள்க.

உ-ம். சாத்தனானவன்வந்தான்; சாத்தியானவள்வந்தாள்; சாத்தரானவர் வந்தார்; யானையானதுவந்தது; யானையானவைவந்தன என வரும். பிறவுமன்ன. இன்னும், இவ்வுத்தியைப் பின்வரும் வேற்றுமைகளிலே காட்டப்படுஞ் சொல்லுருபுகளுக்கெல்லாங்கொள்க.

சூத்திரம். "வினைநிலையுரைத்தலும்வினாவிற்கேற்றலும், பெயர்கொளவருதலும்பெயர்ப்பயனிலையே" என ஆசிரியர் அகத்தியனரு மிவ்வாறு கூறுதல் காண்க. (௩அ)

[இரண்டாம்வேற்றுமை.]

உ௬௬. இரண்டா வதனுரு பையே யதன்பொருள்
ஆக்க லழித்த லடைத லீத்தல்
ஒத்த லுடைமை யாதி யாகும்.

இ-ள். இரண்டாவதன் உருபு ஐயே - இரண்டாம்வேற்றுமையின் உருபு முன்சொல்லப்பட்ட ஐயொன்றுமேயாம்,—அதன்பொருள் - அதன் பொருள்களாவன,—ஆக்கல் - ஆக்கப்படுபொருளும்,—அழித்தல் - அழிக்கப்படுபொருளும்,—அடைதல் - அடையப்படுபொருளும்,—நீத்தல் - துறக்கப்படுபொருளும்,—ஒத்தல் - ஒக்கப்படுபொருளும்,—உடைமை - உடைமைப்பொருளும்,—ஆதி ஆகும் - முதலியனவாக அவ்வுருபையேற்ற பெயர்ப்பொருள்கள் வேறுபட்ட செயப்படுபொருள்களாம். எ-று.

Digitized By Roja Muthiah Research Library

(உதாரணம்.)

| | |
|---|---|
| குடத்தை வனைந்தான் | ஆக்கப்படுபொருள். |
| கோட்டையை யிடித்தான் | அழிக்கப்படுபொருள். |
| ஊரை யடைந்தான் | அடையப்படுபொருள். |
| மனைவியைத் துறந்தான் | துறக்கப்படுபொருள். |
| புலியை யொத்தான் | ஒக்கப்படுபொருள். |
| பொன்னை யுடையான் | உடைமைப்பொருள். |

செயப்படுபொருளாவது வினைமுதற்றொழிற் பயனுறுவது. செயப்படுபொருள், செய்பொருள், கருமம், காரியம் என்பனவொருபொருட்சொற்கள்.

உ-ம். குடத்தை வனைந்தான் என்புழி மண் கூட்டுகை திரிகை சுழற்றுகை முதலியன வினைமுதலினது தொழில்; குடத்தினது தோன்றுதல் அத்தொழிலின்பயன்; அப்பயனுறுவது குடமாதலாற் குடஞ் செயப்படுபொருள். கோட்டையை யிடித்தான் என்புழிக் கோட்டையை யிடித்தல் வினைமுதலினது தொழில்; அதனது வடிவுகுலைதல் அத்தொழிலின்பயன்; அப்பயனுறுவது கோட்டையாதலாற் கோட்டை செயப்படுபொருள். ஊரை யடைந்தான் என்புழி நடந்துசெல்லுதல் வினைமுதலினது தொழில்; ஊரைச்சேர்தல் அத்தொழிலின்பயன்; அப்பயனுறுவது ஊராதலால் ஊர் செயப்படுபொருள். மனைவியைத் துறந்தான் என்புழி வெறுத்துவிடுதல் வினைமுதலினது தொழில்; உரிமைக்கேடு அத்தொழிலின்பயன்; அப்பயனுறுவது மனைவியாதலான் மனைவி செயப்படுபொருள். புலியை யொத்தான் என்புழி அஞ்சாது பாய்ந்துகொல்லுதலாற் புலியை உவமானமாகக் கொள்ளுதல் வினைமுதலினது தொழில்; உவமானமாகக் கொள்ளப்படுதல் அத்தொழிலின் பயன்; அப்பயனுறுவது புலியாதலாற் புலி செயப்படுபொருள். பொன்னை யுடையான் என்புழிச் சம்பாதித்தல் வினைமுதலினது தொழில்; தனதாகுகை அத்தொழிலின்பயன்; அப்பயனுறுவது பொன்னாதலாற் பொன் செயப்படுபொருள்.

ஆதி என்றதனால், வீட்டை விரும்பினான்; நூற்பொருளையறிந்தான் என விரும்புதலும் அறிதலுமாகிய வினைமுதற்றொழில்களுக்கு விடயமாகிய வீடும் நூற்பொருளுஞ் செயப்படுபொருளாகுகை முதலானவையுங்கொள்க.

அச்செயப்படுபொருள் கருத்திற் செயப்படுவதும், கருத்தின்றிச்செயப்படுவதும், இருமையிற் செயப்படுவதும் என மூவகைப்படும்.

உ-ம். (க) சோற்றையுண்டான் என்புழிச், சோறு, உண்ணப்படுவதாக வினைமுதலால் இச்சிக்கப்பட்ட செயப்படுபொருள்.

(உ) சோற்றைக் குழைத்தான் என்புழிச், சோறு, குழைக்கப்படுவதாக வினைமுதலால் இச்சிக்கப்படாத செயப்படுபொருள். (ஈண்டுக் குழைத்தான் என்பது பதத்தின்மேற்பட வேகப்படுதலையென்றறிக.)

(ங) பதரையு நெல்லையும் பணத்திற்குக் கொண்டான் என்புழிப், பதர், கொள்ளப்படுவதாக வினைமுதலால் இச்சிக்கப்படாத செயப்ப டுபொருள்; நெற், கொள்ளப்படுவதாக வினைமுதலால் இச்சி க்கப்பட்ட செயப்படுபொருள்.

செயப்படுபொருள் குன்றாத முதனிலைகளின்மேல் வி பி முதலிய வி குதிகள் புணர்ந்து வருவனவாகிய பிறவினைகளுள்ளே, சிலவற்றிற்கு, இய ற்றும்வினைமுதல் இரண்டாம்வேற்றுமையில் வருதலால், இரண்டுசெயப்ப டுபொருள் வரும்; சிலவற்றிற்கு, இயற்றும் வினைமுதல் மூன்றாம்வேற்று மையில் வருதலால், செயப்படுபொருள் ஒன்றேவரும், இரண்டு வாராவாம்.

உ-ம். (க) பகைவரைச் சிறைச்சாலையையடைவித்தான்; சாத்தனைச் சோற் றையுண்பித்தான். இருசெயப்படுபொருள் வந்தமை காண்க.

(உ) கொற்றனாற் பூதனைக் கொல்வித்தான்; சாத்தனாற் பசுவைப் புர ப்பித்தான். செயப்படுபொருள் ஒவ்வொன்றே வந்தமைகாண்க.

செயப்படுபொருள் குன்றாத தன்வினைகளுள்ளே, கறத்தல், குறைத்த ல் முதலிய சில வினைகளுக்கு இரண்டு செயப்படுபொருள்கள் வருதலுமு ண்டு; வரினும், முன்னின்ற செயப்படுபொருள் சிறப்புடைத்தன்றெனக் கொள்க.

உ-ம். பசுவைப் பாலைக்கறந்தான்; யானையைக் கோட்டைக்குறைத்தான் எ னவரும். இவற்றுள், கறத்தலாவது உள்ளிருக்கு நெகிழ்ச்சிப் பொரு ட்பிரிவையுண்டாக்குந் தொழிலையுண்டாக்குந் தொழில்; ஆதலால், வி னைமுதற்றொழிற்பயன் இரண்டாகவே, அப்பயனுறுவதாகிய செயப் படுபொருளும் இரண்டாயின. எங்ஙனமெனின்;— உள்ளிருக்கு நெகி ழ்ச்சிப்பொருள் பால்; அப்பாற்கும் பசுவிற்கும் பிரிவையுண்டாக்குந் தொழில் பாலிலிருக்கும் வீழ்ச்சி; அவ்வீழ்ச்சியை யுண்டாக்குந்தொழி ல் முலைபற்றியுருவல்; இவற்றுள் வீழ்ச்சித்தொழிலா னிகழும் பிரிவா கிய பயனுறுவது, பசுவெனவும், முலைபற்றியுருவற்றொழிலானிகழும் வீழ்ச்சியாகிய பயனுறுவது பாலெனவும் அறிக. மற்றையுதாரணமும் இப்படியே காண்க. குறைத்தலாவது, இங்கே பிரிவையுண்டாக்குந் தொழிலையுண்டாக்குந் தொழில். இப்பசுவையும் யானையையுஞ் செயப் படுபொருளாகக் கருதாது, நீக்கப்படுபொருளாகக் கருதின், பசுவினி ன்றும் பாலைக் கறந்தான், யானையினின்றுங் கோட்டைக்குறைத்தான் என ஐந்தனுருபும்; சம்பந்தப்பொருளாகக் கருதின், பசுவினது பா லைக்கறந்தான், யானையினது கோட்டைக் குறைத்தான் என ஆறனுரு பும் வருமெனக் கொள்க.

இன்னும் அச்செயப்படுபொருள் அகநிலையாகவும், தானே கருத்தாவா கவும் வரும்.

உ-ம். (க) நடத்தலைச்செய்தான்; உண்டலைச்செய்தான் எனத் தெரிநிலைவி னைகளை விரித்துரைக்குமிடத்துச் செயப்படுபொருள் அகநிலை யாய் வந்தது.

Digitized By Roja Muthiah Research Library

(ட) தன்னைக்குத்தினான்; தன்னைப் புகழ்ந்தான் எனச் செயப்படுபொருளே கருத்தாவுமாயிற்று. (ருகூ)

[மூன்றாம்வேற்றுமை.]

**உகூஎ.** மூன்றா வதனுரு பாலா னோடொடு
கருவி கருத்தா வுடனிகழ் வதன்பொருள்.

இ - ள். மூன்றாவதன் உருபு ஆல் ஆன் ஓடு ஒடு - மூன்றாம்வேற்றுமையினுருபு முன்சொல்லப்பட்ட ஆலேயன்றி ஆனும் ஓடும் ஒடுவுமாம்,- அதன்பொருள் - அவ்வுருபுகளின் பொருள்களாவன,— கருவி - கருவிப்பொருளும்,— கருத்தா - வினைமுதற்பொருளும்,— உடனிகழ்வு - உடனிகழ்ச்சிப்பொருளும் ஆகிய அவ்வுருபுகளையேற்ற பெயர்ப்பொருள்கள் வேறுபட்ட மூன்றுமாகும். எ - று.

இந்நான்குருபுகளுக்கும் மூன்றுபொருள்களுமாமெனக் கூட்டிச்சொன்னாராயினும், ஏற்புழிக் கோடலென்னுமுத்தியால், அவ்வுருபுகளுள், ஆல் ஆன் உருபுகளுக்குக் கருவியும் வினைமுதலும், ஓடு ஒடு உருபுகளுக்கு உடனிகழ்ச்சியுஞ் சிறந்தனவெனக் கொள்க.

[உதாரணம்.]

| | |
|---|---|
| வாளால் வெட்டினான்.......... | கருவி. |
| வாளான் வெட்டினான்..... | |
| அரசனாலாகிய கோயில்.......... | கருத்தா. |
| அரசனானாகிய கோயில்.............. | |
| மைந்தனோடு தந்தைவந்தான்......... | உடனிகழ்ச்சி. |
| மைந்தனொடு தந்தை வந்தான்......... | |

கருவியாவது வினைமுதற்றொழிற்பயனைச் செயப்படுபொருளிற் சேர்ப்பது. கருவி, காரணம், ஏது என்பன ஒருபொருட்சொற்கள்.

உ - ம். வாளாற் பகைவனை வெட்டினான் என்புழி, வாளைப் பற்றிவீசுதல் வினைமுதலினது தொழில்; பகைவனுடம்பறுதல் அத்தொழிற்குப்பயன்; அப்பயனைப் பகைவனாகிய செயப்படுபொருளிலே சேர்ப்பது வாளாதலால் வாள் கருவிப்பொருள்.

அக்கருவிப்பொருள் முதற்கருவியுந் துணைக்கருவியுமென இருவகைப்படும். அவற்றுள், முதற்கருவியாவது செயப்படுபொருளோ டொற்றுமையுடையது. (இங்கே ஒற்றுமை என்றது முதற்கருவியும் அம்முதற்கருவியாலாகிய செயப்படுபொருளும் வஸ்துவால் வேறாகாமல் ஒன்றாயிருத்தல்) முதற்காரணம், ஆதிகாரணம், சமவாயிகாரணம் என்பன ஒருபொருட்சொற்

சன். துணைக்கருவியாவது முதற்கருவிக்குத் துணையாய் அம்முதற்கருவி காரியப்படுமளவும் உடனிகழ்வது.

உ - ம். (க) மண்ணாற் குடத்தைவனைந்தான் என்புழிக், குடமாகிய காரியத்தோடொற்றுமையுடையது மண்ணாதலான் மண்முதற்கருவி.

(உ) திரிகையாற் குடத்தைவனைந்தான் என்புழி, மண்ணாகிய முதற்கருவிக்குத் துணையாய் அம்மண் குடமாசக் காரியப்படுமளவும் உடனிகழ்வது திரிகையாதலாற் றிரிகை துணைக்கருவி.

இக்கருவிப்பொருள் அகக்கருவி புறக்கருவி ஒற்றுமைக்கருவி என மூன்றாயும் வருமெனக் கொள்க.

உ - ம். மனத்தானினைந்தான; வாளால்வெட்டினான்; அறிவாலறிந்தான் என முறையே வரும்.

வினைமுதல் இன்னதென்பது முன்னே எழுவாய்ச்சூத்திரவுரையிற் காட்டப்பட்டது. அவ்வெழுவாய் வேற்றுமையில் வரும் வினைமுதற்பெயர் தன் விகுதிவினையினாலே முடியும; இம்மூன்றாம்வேற்றுமையில்வரும வினைமுதற்பெயர் செயப்படுபொருள் விகுதிவினையினாலே முடியும்; இதுவே அவ்விரண்டிற்கும் வேறுபாடாம்.

உ - ம். (க) குயவன் குடத்தை வனைந்தான் என்புழிக், குயவனென்னும் எழுவாய்க்கருத்தாத் தனக்குரிய ஆன்விகுதி வினையினாலே முடிந்தது.

(உ) குயவனாற் பானை வனையபபட்டது என்புழிக், குயவனென்னும் மூன்றனுருபின் கருத்தாத் தனக்குரிய ஆன்விகுதிவினையினாலே முடியாது, செயப்படுபொருட்குரிய துவ்விகுதிவினையினாலே முடிந்தது.

அவ்விருவகை வினைமுதலும், தனித்தனியே, இயற்றும்வினைமுதலும், ஏவும்வினைமுதலும் என இருவகைப்படும். அவற்றுள், இயற்றும்வினைமுதலாவது கருவியைத் தொழிற்படுத்துவது. ஏவும வினைமுதலாவது அவ்வியற்றும் வினைமுதலினது தொழிலையுண்டாக்குந் தொழிலுடையது.

உ - ம். (க) தச்சன் கோயில் கட்டினான்; தச்சனாற் கோயில் கட்டப்பட்டது என்புழித் தச்சன் இயற்றுதற்கருத்தா.

(உ) அரசன் கோயில் கட்டுவித்தான்; அரசனாற் கோயில் கட்டுவிக்கப்பட்டது என்புழி அரசன் ஏவுதற்கருத்தா.

உடனிகழ்ச்சிப்பொருளாவது வினைகொண்டுமுடியும் பொருளின்றொழிலைத் தன்னிடத்தும் உடனிகழ்வதாகவுடைய பொருளாம்.

உ - ம். மைந்தனோடு தந்தைவந்தான் என்புழித் தந்தை வினைகொண்டுமுடியும்பொருள்; வருதல் அப்பொருளின் றொழில்; அவ்வருதற்றொழிலைத்

Digitized By Roja Muthiah Research Library

தன்னிடத்தும் உடனிகழ்வதாகவுடையபொருள் மைந்தனுதலால் மைந்தன் உடனிகழ்ச்சிப்பொருள்.

அவ்வுடனிகழ்ச்சிப்பொருள் தலைமைப்பொருளும், தலைமையில்பொருளுமென இருவகைப்படும். அவற்றுள், தலைமைப்பொருளாவது வினைகொண்டுமுடியும் பொருளினுயர்வுடையது. தலைமையில்பொருளாவது வினைகொண்டுமுடியும் பொருளினிழிவுடையது.

உ - ம். (க) மன்னவனோடு மந்திரி வந்தான் என்புழி, வினைகொண்டுமுடியுப்பொருள் மந்திரி; அப்பொருளினுயர்வுடையபொருள் மன்னவனுதலால், உடனிகழ்ச்சிப்பொருள் தலைமைப்பொருளாயிற்று.

(உ) மாணாக்கனோடாசிரியன்வந்தான் என்புழி, வினைகொண்டு முடியும்பொருள் ஆசிரியன்; அப்பொருளினிழிவுடையபொருள் மாணாக்கனுதலால், உடனிகழ்ச்சிப்பொருள் தலைமையில்பொருளாயிற்று.

ஆல் ஆன் உருபுகள் உடனிகழ்ச்சிப்பொருளிலும், ஒடு ஓடு உருபுகள் வினைமுதற்பொருள் கருவிப்பொருள்களிலும், ஒரோவிடத்து அருகி வரும்.

உ - ம். (க) "தூங்குகையானோங்குநடைய" "உறழ்மணியானுயர்மருப்பின" என ஆனுருபு உடனிகழ்ச்சிப்பொருளில் வந்தது காண்க. இவற்றிற்குத், தூங்குகையோடு என்றும், உறழ்மணியோடு என்றும் பொருள்கொள்க. தூங்குகையானோங்குநடைய என்புழி, நடத்தலாகிய வேறிடப் புணர்ச்சி கைக்கும் யானைக்கும் உளதாதலறிக. உறழ்மணியானுயர்மருப்பின என்புழி, யானையினது உடைமை மணிக்கு மருப்பிற்கும் உளதாதலறிக.

(உ) "கொடியொடுதுவக்குண்டான்" "ஊசியொடுகுயின்றதூசும்பட்டும்" என்புழிக், கொடியொடு, ஊசியொடு என்பன கொடியால், ஊசியால் எனப் பொருள்படுதலும், கொடி, ஊசி, என்பன முறையே வினைமுதற்பொருள் கருவிப்பொருளாதலுங்காண்க.

சிறுபான்மை ஆல் ஆன் உருபுகள், முதற்பொருண்மேலேற்றிச் சொல்லப்படும் விகாரத்தையுடைய சினைப்பொருளிலும், தொறுப்பொருளிலும் வரும்.

உ - ம். (க) கண்ணாற்குருடன்; காலான்முடவன் என்புழிக், குருடன் முடவன் முதற்பொருள்கள்; அவைகளின்மேலேற்றிச் சொல்லப்படும் விகாரங் குருட்டுத்தன்மையும் முடத்தன்மையும். அவ்விகாரத்தையுடைய சினைப்பொருள்கள் கண்ணுங் காலுமாதல்காண்க.

Digitized By Roja Muthiah Research Library

(உ) "ஊராஞ்ஞர் தேவகுலம்" என்புழி, ஊர்தோறு மொவ்வொருதேவகுலம் எனப் பொருள்கொள்ளப்படும். தொறுவென்பது தன்னையேற்ற பெயர்ப்பொருளெங்கும் அப்பெயர்ப்பொருளோடியையும் பொருளிருக்கை. இங்கே தொறு இடப்பன்மையில்வந்தது. ஒவ்வொரு ஊரிலும் தேவகுலமென்பது கருத்து. [குலம் - கோயில்.]

சிறுபான்மை ஒடு ஒடு உருபுகள், வேறுவினையுடனிகழ்ச்சிப்பொருளிலும், வினையில்பொருளிலும், கலப்புறுபொருளிலும், ஒப்புப்பொருளிலும், ஒப்பலொப்புப்பொருளிலும், ஒற்றுமைப்பொருளிலும், அடைமொழிப்பொருளிலும் வரும்.

உ - ம், (க) "தொடியொடுதொல்கவின்வாடியதோள்" என்புழி, வினைகொண்டுமுடியும்பொருள் கவின்; அதனது தொழில் வாடல்; அத்தொழில் நிகழுங்காலையில் நிகழும் வேறுதொழில் சோர்தல்; அதனையுடையது தொடியாதலால், தொடி வேறுவினையுடனிகழ்ச்சிப்பொருள்.

(உ) "மலையொடுபொருதமால்யானை" என்புழிப், பொருதல் யானைக்கல்லது மலைக்கில்லாமையால், மலை வினையில்பொருள்.

(ங) "பாலொடுதேன்கலந்தற்றே" என்புழித், தேனைக் கலக்கப்படுதலாற் பால் கலப்புறுபொருள்.

(ச) மதியொடொக்குமுகம் என்புழி, முகத்துக்கு உவமானமாகையால், மதி ஒப்புப்பொருள்.

(ரு) "விலங்கொடுமக்களனையர்" என்புழி, ஒப்பல்லாத விலங்கு ஒப்பாகச்சொல்லப்படுதலால், விலங்கு ஒப்பலொப்புப்பொருள்.

(சு) "எழுத்தொடுபுணர்ந்தசொல்" என்புழி, உருபைத்தொடர்ந்தசொல்லென்னும் பொருளோடு ஒற்றுமையுடையதாதலால், எழுத்து ஒற்றுமைப்பொருள்.

(எ) கோபத்தோடுவந்தான் என்புழி, வருதற்கு விசேடணமாதலால், கோபம் அடைமொழிப்பொருள்.

ஆல் ஆன் உருபுகள் நிற்றற்குரியவிடத்துக் கொண்டென்பதும், ஒடு ஒடு உருபுகள் நிற்றற்குரியவிடத்து உடனென்பதும் சொல்லுருபுகளாக வரும்.

உ - ம். வாள்கொண்டுவெட்டினுன், தந்தையுடன் மைந்தன்வந்தான் என வரும்.

மேலே ஆல் ஒன்றையும் இதற்கு உருபாகச்சொல்லி, இங்கே உருபு நான்கு என்றது மயக்கமெனின்; அங்கே பெயரையும் முறையையுங் காட்டுகிற நிமித்தம் வழக்கிடத்துஞ் செய்யுளிடத்தும் வழங்கிவருவதைச் சொ



Digitized By Roja Muthiah Research Library

ன்னூர். இங்கே அவ்வேற்றுமைக்கு வருமஉருபுகளையெல்லாமெடுத்துச் சொல்லவேண்டுமாதலால் நான்கென்க் கூறியது மயக்கமன்றென்க. இந்தவி னவிடைகளை மேல்வருவனவற்றிற்கு மூரைத்துக்கொள்க. (௬௦)

[நான்காம் வேற்றுமை.]

உகூஅ. நான்கா வதற்குரு பாகுங் குவ்வே
கொடைபகை நேர்ச்சி தகவது வாதல்
பொருட்டுமுறை யாதியி னிதற்கிதெனல் பொருளே.

இ - ள். நான்காவதற்கு உருபு குவ்வே ஆகும் - நான்காம்வேற்றுமைக்குருபு முன்சொல்லப்பட்ட குவ்வொன்றுமேயாம் —பொருள் - அவ்வுருபின்பொருள்களாவன,—கொடை - கொடையும்,—பகை - பகையும், நேர்ச்சி - நட்பும்,—தகவு - தகுதியும்,—அது ஆதல் - முதற்காரணமும், பொருட்டு - நிமித்தகாரணமும், முறை ஆதியின் - முறையும் முதலான பொருட்சொற்களின் புணர்ச்சியில்,—இதற்கு இது எனல் - இதற்கு இதுவென்பதுபடவருவனவாகிய அவ்வுருபேற்ற பெயர்ப்பொருள்வேறுபட்ட பலவுமாம்.

கொடையெனவே கோடற்பொருளும், பகை நேர்ச்சியெனவே பகைதொடர்பொருளும் நட்புத்தொடர்பொருளும், தகுதியெனவே தகுதியுடைப்பொருளும், அதுவாதலெனவே முதற்காரண காரியப்பொருளும், பொருட்டெனவே நிமித்தகாரண காரியப்பொருளும், முறையெனவே முறைக்கிளைபொருளும் குவ்வுருபின் பொருள்களாமென்பது பெற்றாம்.

(உதாரணம்.)

இரவலர்க்குப் பொன்னைக் கொடுத்தான்............கோடற்பொருள்.
பாம்புக்குப்பகை கருடன்.............................பகைதொடர்பொருள்.
சாத்தனுக்கு நட்பாளன் கொற்றன்...................நட்புத்தொடர் பொருள்.
அரசர்க் குரித் தருங்கலம் ..............................தகுதியுடைப்பொருள்.
குண்டலத்திற்குப் பொன்...............................முதற்காரணகாரியப் பொருள்.
கூலிக்கு வேலைசெய்தான்..............................நிமித்தகாரணகாரியப் பொருள்.
சாத்தனுக்கு மகன் கொற்றன்..........................முறைக்கிளைபொருள்.

கோடற்பொருளாவது கொடுத்தற்றொழிலின் செயப்படுபொருளைத் தனக்குரியதாக்கிக்கொள்ளுதலையுடைய பொருளாம். கோடற்பொருள் கோளிப்பொருள் என்பன ஒருபொருட்சொற்கள்.

உ - ம். இரவலர்க்குப் பொன்னைக் கொடுத்தான் என்புழிக், கொடுத்தலின் செயப்படுபொருள் பொன்; அதனைத் தனக்குரியதாக்கிக்கொள்ளுதலையுடையபொருள் இரவலராதலால், இரவலர் கோடற்பொருள்.

Digitized By Roja Muthiah Research Library

இன்னும், மாணாக்கனுக்கறிவுகொடுத்தான் என்புழி, அறிவாகிய செயப்படுபொருள் கொடுப்போன்பொருளாய்க் கொள்வோனிடத்துச் செல்லாது ஆண்டுத் தோன்றினும் அதனைத் தனக்குரியதாக்கிக்கொள்ளுதலால், மாணாக்கன் கோடற்பொருள். அன்றியும், மாணாக்கனுக்கு நூற்பொருளுரைத்தான் என்புழிச், சொல்லுதலின் செயப்படுபொருளாகிய நூற்பொருளை அறிதலையுடைய பொருளாகிய மாணாக்கனுங் கோடற்பொருளேயாம். இன்னும், அவர் கொடுத்தற்குடம்பட்டார் என உடம்படுதற்கு விடயமான பொருளும் ஒருகோடற்பொருளாகவே வரும்.

கோடல் பலவகைப்படும்; அவை:- கேளாதேற்றல், கேட்டேயேற்றல், ஏலாதேற்றல், ஈவோனேற்றல், உயர்ந்தோனேற்றல், இழிந்தோனேற்றல், ஒப்போனேற்றல், உணர்வின்றேற்றல், விருப்பாயேற்றல், வெறுப்பாயேற்றல் முதலியன.

உ-ம். ஆவிற்கு நீர்விட்டான் என்பது கேளாதேற்றல். வறியார்க்கீந்தான் என்பது கேட்டேயேற்றல். மாணாக்கனுக் கறிவுகொடுத்தான் என்பது ஏலாதேற்றல். தனக்குச் சோறிட்டான் என்பது ஈவோனேற்றல். அரனுக்குக் கண்ணலர் கொடுத்தானரி என்பது உயர்ந்தோனேற்றல். அரிக்குச் சக்கரங் கொடுத்தானரன் என்பது இழிந்தோனேற்றல். சோழனுக்கு விருந்திட்டான் சேரன் என்பது ஒப்போனேற்றல். சோற்றிற்கு நெய்விட்டான்என்பது உணர்வின்றேற்றல். மாணாக்கனுக்குக்கசையடிகொடுத்தா னாசிரியன் என்பது விருப்பாயேற்றல். கள்ளனுக்குக் கசையடிகொடுத்தா னரசன் என்பது வெறுப்பாயேற்றல். [கசை - குதிரைச்சம்மட்டி.]

கொடுத்தலும் பலவகைப்படும்; அவை: வழக்கத்திற்கொடுத்தல், உரிமையிற்கொடுத்தல், அச்சத்திற்கொடுத்தல், பாவனையிற்கொடுத்தல், உவகையிற்கொடுத்தல், வெகுளியிற்கொடுத்தல், அவலத்திற்கொடுத்தல் முதலியன.

உ-ம். மருமகனுக்கு மகளைக் கொடுத்தான் என்பது வழக்கத்திற்கொடுத்தல். மகனுக் கரசு கொடுத்தான் என்பது உரிமையிற்கொடுத்தல். அரசற்குத் திறைகொடுத்தான் என்பது அச்சத்திற்கொடுத்தல். தந்தை தாய்க்குத் திதிகொடுத்தான் என்பது பாவனையிற்கொடுத்தல். அவனுக்குப் பரிசு கொடுத்தான் என்பது உவகையிற் கொடுத்தல். அவனுக்குத் தண்டனை கொடுத்தான் என்பது வெகுளியிற் கொடுத்தல். வாய்க்கரிசியிட்டான் என்பது அவலத்திற்கொடுத்தல்.

பகைதொடர்பொருளாவது ஒரு பொருளினிடத்துள்ள பகை தொடர்தற்கு இடமாகிய பொருளாம்.

உ-ம். பாம்புக்குப் பகை கருடன் என்புழிக், கருடனிடத்துள்ளபகை தொடர்தற்கு இடம் பாம்பாதலாற் பாம்பு பகைதொடர்பொருள்

Digitized By Roja Muthiah Research Library

நட்புத்தொடர்பொருளாவது ஒரு பொருளினிடத்துள்ள நட்புத் தொடர்தற்கு இடமாகிய பொருளாம்.

உ-ம். சாத்தனுக்கு நட்பாளன் கொற்றன் என்புழிக், கொற்றனிடத்துள்ள நட்புத் தொடர்தற்கு இடஞ் சாத்தனாதலாற் சாத்தன் நட்புத்தொடர்பொருள்.

வைவின்றீமை தொடர்பொருளும் வாழ்த்தினன்மைதொடர்பொருளும் பகைநேர்ச்சிகளில் அடங்குமெனக் கொள்க. அவை; தீயோர்க்குக் கேடுண்டாகுக; நல்லோர்க்குச் செல்வமுண்டாகுக என வரும்.

தகுதியுடைப்பொருளாவது தன்னோடு பொருந்துதற்குத் தகுதியாகிய பொருளையுடைய பொருளாம்.

உ-ம். அரசர்க்குரித் தருங்கலம் என்புழி, அரசரோடு பொருந்துதற்குத் தகுதியாகியபொருள் அருங்கலம்; அப்பொருளையுடையபொருள் அரசராதலால் அரசர் தகுதியுடைப்பொருள்.

முதற்காரணகாரியப்பொருளாவது முதற்காரணத்தாலாகும்பொருளாம்

உ-ம். குண்டலத்திற்குப் பொன் என்புழிப் பொன் முதற்காரணம், அதனாலாகிய காரியங் குண்டலமாதலாற் குண்டலம் முதற்காரணகாரியப்பொருள்.

நிமித்தகாரண காரியப்பொருளாவது நிமித்தகாரணத்தாலாகும் பொருளாம்.

உ-ம். கூலிக்கு வேலைசெய்தான் என்புழி வேலை நிமித்தகாரணம்; அதனாலாகிய காரியங் கூலியாதலாற் கூலி நிமித்தகாரண காரியப்பொருள்.

முறைக்கியைபொருளாவது பிறப்பினால் ஒருபொருளின் முறைக்குத்தான் இயைந்துநிற்கும் பொருளாம்.

உ-ம். சாத்தனுக்கு மகன் கொற்றன் என்புழிக் கொற்றனிடத்துள்ள மகனென்னு முறைக்குத் தான் இயைந்துநிற்கும்பொருள் சாத்தனாதலாற் சாத்தன் முறைக்கியைபொருள்.

ஆதி என்றதனால், மழைக்கு மின்னல் என உற்பாதத்தாற் குறிக்கப்படுவதும், அவனுக்கிதுபோதும் எனக் குறைவின்மையைக் கொள்வதும், பிறவுங் கொள்க. [உற்பாதம்-மேல்விளையுநன்மை தீமையையறிவிக்குங்குறி.]

குவ்வுருபு நிற்றற்குரிய சிலவிடங்களிலே, பொருட்டு, நிமித்தம் என்பனவும், குவ்வுருபின்மேல் ஆகவென்பதும் சொல்லுருபுகளாக வரும்.

உ-ம். கூழின்பொருட்டு வேலைசெய்தான்; கூலியினிமித்தம் வேலைசெய்தான்; கூலிக்காக வேலைசெய்தான் எனவரும். (சக)

Digitized By Roja Muthiah Research Library

[ஐந்தாம்வேற்றுமை.]

உ௬௬. ஐந்தா வதனுரு பில்லு மின்னும்
நீங்கலொப் பெல்லை யேதுப் பொருளே.

இ - ள். ஐந்தாவதன் உருபு இல்லும் இன்னும் - ஐந்தாம்வேற்றுமையின் உருபாவன இல்லும் முன்சொலப்பட்ட இன்னுமாம், — பொருள் - அவ்வுருபுகளின் பொருள்களாவன, — நீங்கல் - நீக்கப்பொருளும், — ஒப்பு - ஒப்புப்பொருளும், — எல்லை - எல்லைப்பொருளும், — ஏது - ஏதுப்பொருளுமாகிய இவ்வுருபுகளையேற்ற பெயர்ப்பொருள்கள் வேறுபட்ட இந்நான்குமாம்.

(உதாரணம்.)

| | |
|---|---|
| மலையின்வீழருவி........................ | நீக்கப்பொருள். |
| காக்கையிற்கரிது களம்பழம்...... | ஒப்புப்பொருள். |
| மதுரையின் வடக்குச் சிதம்பரம்... | எல்லைப்பொருள். |
| கல்வியிற்பெரியன் கம்பன் | ஏதுப்பொருள். |

நீக்கப்பொருளாவது பிரிவையுண்டாக்குந் தொழிலின்றிப் பிரிவைமாத்திரந் தன்னிடத்துடைய பொருளாம்.

உ - ம். மலையின்வீழருவி என்புழி, அருவியின் வீழ்ச்சி பிரிவையுண்டாக்குந்தொழில்; அதி தன்னிடத்தில்லாமல் அவ்வீழ்ச்சியாலாகிய பிரிவொன்றையே தன்னிடத்துடையது மலையாதலால் மலை நீக்கப்பொருள். (அருவி வீழ்தற்கு மலையின் சரிவு காரணமாயினும் அதனையொழித்து அருவிமீது வைத்துப் பலரும் வழங்குகின்றரென்பது உற்றுநோக்கியறிக.)

ஒப்புப்பொருளாவது உவமேயப்பொருளிலுந் தன்னிலுமிருக்கின்ற பொதுத்தன்மையால் உவமானமாகும்பொருளாம். உவமேயம், புகழ்பொருள் என்பன ஒருபொருட்சொற்கள்.

உ - ம். காக்கையிற்கரிது களம்பழம் என்புழிக் களம்பழம் உவமேயம்; உவமேயத்திலுந் தன்னிலுமுள்ள பொதுத்தன்மை கருமை; அதனால் உவமானமாகிய பொருள் காக்கையாதலாற் காக்கை ஒப்புப்பொருள்.

எல்லைப்பொருளாவது அறியப்படாத பொருளினது திசையளவு வழியளவு காலவளவு பண்புமுதலியவற்றைக் குறிப்பித்தற்கு எல்லையாக நிற்கும்பொருளாம்.

உ - ம். (க) மதுரையின் வடக்குச் சிதம்பரம் என்புழி, அறியப்படாத சிதம்பரத்தினது திசையைக் குறிப்பித்தற்கு எல்லையாக நிற்பது அறியப்பட்டபொருளாகிய மதுரையாதலால், மதுரை எல்லைப்பொருள்.

(உ) கச்சியிற் றிருத்தணிகை முக்காவதம் என்புழி, அறியப்படாத திருத்தணிகையினது வழியளவை அறிவித்தற்கு எல்லையாக நி

Digitized By Roja Muthiah Research Library

ற்பது அறியப்பட்ட பொருளாகிய சச்சியாதலாற் சச்சி எல்லைப்பொருள்.

(௩) சாத்தனிலிரண்டாண்டு மூத்தவன் கொற்றன் என்புழி, அறியப்படாத கொற்றனுடைய பிராயத்தைக் குறிப்பித்தற்கு எல்லையாக நிற்கும்பொருள் அறியப்பட்ட சாத்தனாதலாற் சாத்தன் எல்லைப்பொருள்.

(௪) அரசரிற்பெரியரந்தணர்; ஆவினிழிந்ததுமேதி என்புழி, அறியப்படாத அந்தணரும் மேதியுமாகிய பொருள்களின் உயர்வுதாழ்வுகளைக் குறிப்பித்தற்கு எல்லையாக நிற்கும்பொருள்கள் அறியப்பட்ட அரசரும் ஆவுமாதலால், அரசரும் ஆவும் எல்லைப்பொருள்கள். இவ்வுயர்வு தாழ்வுகளை நீக்கப்பொருளென்பாருமுளர். உறழ்பொருள் என்பாருமுளர்.

ஏதுப்பொருளாவது ஒருபொருளின் பெருமை முதலியவற்றிற்கு ஏதுவாகும்பொருளாம்.

உ-ம். கல்வியிற்பெரியன் கம்பன் என்புழிக், கம்பனுடைய பெருமைக்கு ஏதுக் கல்வியாதலாற் கல்வி ஏதுப்பொருள்.

இன்னும், மாயையிற்றோன்றியதுலகம் என முதற்காரணப்பொருளினும், மண்ணுலகின் வேறு விண்ணுலகம் என வேற்றுமைக் கெதிர்ப்பொருளினும், பாவத்தின் வெறுக்கின்றான் என விடயப்பொருளினும், ஐந்தனுருபு வருமெனக்கொள்க.

நீக்கப்பொருளினும், எல்லைப்பொருளினும், இன் இல் உருபுகளின்மேல், நின்று, இருந்து என்பவை, உம் பெற்றும் பெறாதுஞ் சொல்லுருபுகளாக வரும்.

உ-ம். (௧) ஊரினின்றும் போயினான்; ஊரினின்று போயினான். ஊரிலிருந்தும்போயினான்; ஊரிலிருந்து போயினான் இவை நீக்கப்பொருள்.

(௨) காட்டினின்றுமூர்காவதம், காட்டினின்றூர்காவதம்; காட்டிலிருந்துமூர்காவதம், காட்டிலிருந்தூர்காவதம் இவை எல்லைப்பொருள்.

நீக்கப்பொருளை அபாதானமென்பர் வடநூலார். அது சலாபாதானம், அசலாபாதானமென இருவகைப்படும்.

குதிரையினின்று மிறங்கினான் என்பது சலாபாதானம். சலம் என்பது இயங்கியற்பொருள். மலையினின்றுமிறங்கினான் என்பது அசலாபாதானம். அசலம் என்பது நிலையியற்பொருள். (௯௯)

[ஆறாம்வேற்றுமை.]

௧௦௦. ஆறனுருமைக் கதுவு மாதுவும்
பன்மைக் கவ்வு முருபாம் பண்புறுப்

Digitized By Roja Muthiah Research Library

பொன்றன் கூட்டம் பலவி னீட்டந்
திரிபி னாக்க மாந்தற் கிழமையும்
பிறிதின் கிழமையும் பேணுதல பொருளே.

இ - ள். ஆறன் ஒருமைக்கு அதுவும் ஆதுவும் ஆரும்வேற்றுமையி னது வருமொழியினொருமைப் பொருண்மைக்கு முன்சொல்லப்பட்ட அதுவேயன்றி ஆதுவும்,— பன்மைக்கு அவ்வும் உருபு ஆம் - வருமொழியின் பன்மைப்பொருண்மைக்கு அகரமும் உருபாம்,— பொருள் - அவற்றின் பொருள்களாவன,— பண்பு - குணமுந் தொழிலுமாகிய பண்பும்,— உறுப்பு - அவயவமும்,— ஒன்றன் கூட்டம் - ஒருபொருட்கூட்டமும்,— பலவின் ஈட்டம் - பலபொருட்கூட்டமும்,— திரிபின் ஆக்கம் - ஒன்றுதிரிந்தொன்றாதலும்,— ஆம் தற்கிழமையும்- ஆகிய ஐந்து தற்கிழமைபொருள்களையும்,— பிறிதின்கிழமையும் - அவையல்லாத பிறிதின்கிழமைப்பொருள்களையும்,— பேணுதல் - உடையனவாக அவ்வுருபுகளையேற்ற பெயர்ப்பொருள்கள் வேறுபட்ட இவ்விருவகைச்சம்பந்தப் பொருள்களுமாம். எ - று.

தற்கிழமைப்பொருளாவது தன்னோடொற்றுமையுடையது. பிறிதின் கிழமைப்பொருளாவது தன்னின்வேறாயது. தற்கிழமைப்பொருள் இவையெனவே, இவையல்லாதபொருளும் இடமுங் காலமுமாகிய மூன்றும் பிறிதின்கிழமைப் பொருளென்றாகும். ஆகவே, இப்படிப் பலவகையாலும் வருஞ் சம்பந்தப்பொருளே இவ்வேற்றுமையுருபுகளின் பொருளென்பதாயிற்று.

உ - ம். க. தற்கிழமை.

| | |
|---|---|
| சாத்தனது கருமை [குணம்.]<br>சாத்தனது வரவு ...[தொழில்.] | பண்புத்தற்கிழமை. |
| சாத்தனது கை..................<br>புலியது வால்................ | உறுப்புத்தற்கிழமை. |
| மாந்தரது தொகுதி............<br>நெல்லது குப்பை.............. | ஒன்றன்கூட்டத்தற்கிழமை. |
| படைகளது தொகுதி............<br>பறவைகளது கூட்டம்......... | பலவின்கூட்டத்தற்கிழமை. |
| நெல்லினது பொரி...............<br>மஞ்சளது பொடி................ | ஒன்றுதிரிந் தொன்றாயதன்றற்கிழமை. |

Digitized By Roja Muthiah Research Library

## உ. பிறிதின்கிழமை.

சாத்தனது பசு ........................ } பொருட்பிறிதின்கிழமை.
முருகனது வேல் ....................

சாத்தனது வீடு ...................... } இடப்பிறிதின்கிழமை.
முருகனது குறிஞ்சி ..............

சாத்தனது நாள் ...................... } காலப்பிறிதின்கிழமை.
மாறனது வேனில் ....................

எனது கை, நினது தலை, தனது புறம் ...... அதுவுருபு.
என கைகள், தன்தாள்கள் ........ அகரவுருபு.

இராகுவினது தலை, எனதுயிர் என ஆறனுருபு, உடையதும் உடைமைப்பொருளும் வேறாகாத ஒற்றுமைப்பொருளில் வருதலுங் கொள்க. இராகுவே தலையாதலாலும், நானெனப்பட்டது உயிரேயாதலாலும், ஒற்றுமைப்பொருளாயின. ஒற்றுமையென்பது அபேதம்.

அஃறிணையொருமை பன்மைகளுக்கு இயைந்த உருபுகள் இங்ஙனங் கூறவே, உயர்திணையொருமை பன்மையாகிய கிழமைப் பொருளுக்கு இவ்வுருபுகள் வாராவென்பது பெற்றாம். தொல்காப்பியர் "அதுவென்வேற்றுமையுயர்திணைத்தொகைவயின், அதுவெனுருபுகெடக் குகரம்வருமே" என்றாராதலின் உயர்திணைப்பெயர் வரும்போது, சாத்தனுக்கு மகன் எனக் குவ்வுருபு வருமென்றறிக. ஆயினும் சிறுபான்மை "அரனது தோழன்" "குன்றவர்தமதுசெம்மல்" என உயர்திணையொருமைப் பொருண்மைக்கும், "நினதடியாரொடல்லால்" என உயர்திணைப்பன்மைப்பொருண்மைக்கும், எனதுகைகள் "எனதுயிரரசுவாழ்வெண்பயாவையும்" என அஃறிணைப்பன்மைப்பொருண்மைக்கும் அதுவுருபும் வரும்.

இவ்வாறனுருபுகளுள் ஒன்று நிற்றற்குரியவிடத்தே உடைய என்பது சொல்லுருபாக வரும்.

உ - ம். சாத்தனுடைய புதல்வன், சாத்தனுடைய புதல்வர்; சாத்தனுடைய வீடு, சாத்தனுடைய வீடுகள் என வரும்.

இவ்வீடெனது, அத்தோட்டமவனது என வருவனவற்றில், எனது, அவனது என்பன, துவ்விகுதியும் அகரச்சாரியையும் பெற்று நின்ற குறிப்புவினைமுற்று. எனது போயிற்று, அவனதை வாங்கினேன் என வருவனவற்றில், எனது, அவனது என்பன மேற்கூறியபடி வந்த குறிப்புவினையாலணையும்பெயர். இங்ஙனமன்றி, இவ்விடங்களில் வரும் அது என்பது ஆறாம்வேற்றுமையுருபன்று.

Digitized By Roja Muthiah Research Library

சூத்திரம். ஆறனுருபேயதுவாதவ்வே, வேறொன்றுடையதைத்தனக்குரிய தையென, விருபாற்கிழமையின் மருவுறத்தோன்றும், ஐம்பாலுரிமை மன்றதற்கிழமை, பொருளிடங்காலமாம்பிறிதின்கிழமை என்றார் ஆசிரியர் அகத்தியனார். (௪௯)

[ஏழாம்வேற்றுமை.]

௯0௬. ஏழ னுருபுகண் ணாதி யாகும்
பொருண்முத லாறு மோரிரு கிழமையின்
இடனாய் நிற்ற லிதன்பொரு ளென்ப.

இ - ள். ஏழன் உருபு கண் ஆதி ஆகும் - ஏழாம்வேற்றுமையினுருபு முன்சொல்லப்பட்ட கண்ணேயன்றி அதுமுதலாகிய பிறவுமாம்,—இதன்பொருள் - இவ்வுருபுகளின் பொருளாவது,—பொருள் முதல் ஆறும் ஓரிருகிழமையின் இடன் ஆய் நிற்றல் என்ப - பொருளாதியாகிய ஆறும் ஆறும்வேற்றுமைச்சூத்திரத்திலே சொல்லப்பட்ட இருகிழமைப் பொருள்களுக்கும் இடமாய்நிற்கும் உருபேற்ற பெயர்ப்பொருள் வேறுபட்ட அவ்விடப்பொருளாம் என்று சொல்லுவர் புலவர்.

(உதாரணம்.)

| | | |
|---|---|---|
| மணியின்கணிருக்கின்றதொளி...... | தற். | பொருளிடமாயிற்று. |
| பனையின்கண்வாழ்கின்றதன்றில்............... | பிறி. | |
| ஊரின்கணிருக்குமில்லம்....................... | தற். | இடமிடமாயிற்று. |
| ஆகாயத்தின்கட்பறக்கின்றதுபருந்து | பிறி. | |
| நாளின்கணாழிகையுள்ளது..................... | தற். | காலமிடமாயிற்று. |
| வேனிற்கட்பாதிரிபூக்கும்....................... | பிறி. | |
| கையின்கணுள்ளதுவிரல்..................... | தற். | சினையிடமாயிற்று. |
| கையின்கண்விளங்குகின்றது கடகம்......... | பிறி. | |
| கறுப்பின்கண்மிக்குள்ளதழகு.................... | தற். | குணமிடமாயிற்று. |
| இளமையின்கண்வாய்த்தது செல்வம்......... | பிறி. | |
| ஆடற்கணுள்ளது சதி........................... | தற். | தொழிலிடமாயிற்று. |
| ஆடற்கட் பாடப்பட்டது பாட்டு................ | பிறி. | |



Digitized By Roja Muthiah Research Library

வினைமுதல்வழியாக வினைமுதற்றொழிற்காயினும், செயப்படுபொருள் வழியாகச் செயப்படுபொருளிலிருக்கின்ற பயனுக்காயினும் இடமாகும் பொருள் இடப்பொருளென்பர் வடநூலார்.

உ - ம். (க) மணியின்கணிருக்கின்ற தொளி என்புழி, ஒளியென்னும் வினைமுதலின்வழியாக அதனது இருத்தற்றொழிற்கு மணியிடமாயிற்று.

(உ) கழுவின்கட் கள்ளனையேற்றினன் என்புழிக், கள்ளனென்னுஞ் செயப்படுபொருளின் வழியாக அச்செயப்படுபொருளிலிருக்கின்ற உயிர்ப்பிரிவாகிய பயனுக்குக் கழு இடமாயிற்று.

இடப்பொருள் தன்னிற் சிறிதிடமாவதும், தான் முழுதுமிடவாதும் விடயமாவதும் என மூவகைப்படும்.

உ - ம். (க) ஊர்க்கணிருந்தான், பாயிலிருக்கின்றான். சிறிதிடம் (ஊர்முழுவதிலும் பாய்முழுவதிலும் ஒருவனிராமல் சிறிதுபாகத்தில்மாத்திரமிருத்தலால்.)

(உ) மணியின்கணொளி, உயிரின்கணுணர்வு, பாலின்கட்சுவை, தீயின்கட்சூடு, நீரின்கட்சீதம் முழுதுமிடம். (ஒளிமணியில் எங்கும் வியாபகமாதலின்.) மற்றவைகளும் அப்படியேயாம்.

(ங) கல்வியின்கணாசைவைத்தான், குருவின்கணன்பு செய்தான். விடயம்.

சிறுபான்மை ஏழனுருபுகள், கூட்டிப்பிரித்தற்கெல்லையாகும் பொருளினும், பிரித்துக்கூட்டலிற் குழுவாகும்பொருளிலும், ஒருதொழிற்காலத்தைக்குறிக்கும் பிறிது தொழிலாகும்பொருளிலும் வரும்.

உ - ம். (க) மக்களிலுயர்ந்தோரந்தணர்; குறிலைந்தனுள் அ இ உ. இம்மூன்றும் சுட்டு. கூட்டிப்பிரிக்குமெல்லைப்பொருள்.

(உ) அறஞ்செயுமகன்றேவருள்வைக்கப்படுவான்; கல்வியறிவில்லாதவன் விலங்கினுள்வைத்தெண்ணப்படுவான், பிரித்துக்கூட்டுங் குழுப்பொருள்.

(ங) பால்கறக்கையில்வந்தான்; பொருதற்கண் மழைபெய்தது. ஒருதொழிற்காலத்தைக் குறிக்கும் பிறிது தொழில். (சச)

[கண்முதலிய உருபுகள்.]

ங0உ, கண்கால் கடையிடை தலைவாய் திசைவயின்
முன்சார் வலமிட மேல்கீழ் புடைமுதல்
பின்பா டளைதே முறைவழி யுழியுளி
உள்ளகம் புறமில் லிடப்பொரு ளுருபே.

Digitized By Roja Muthiah Research Library

இ - ள். கண் — இல் - கண்முதலாக இல்லீருகச் சொல்லப்பட்ட இவ்விருபத்தெட்டும்,— இடப்பொருள் உருபு - தம்மையேற்ற பெயர்ப்பொருளை இடப்பொருளாக வேற்றுமைசெய்யும் உருபுகளாம். எ - று.

(கண்ணொழிந்த உருபுகளுக்கு உதாரணம்.)

கால் — "ஊர்க்காணிவந்த பொதும்பர்." [பொருள்.)
கடை — "வேலின்கடைமணிபோற்றிண்ணியான்." (வேலினிடத்தென்பது
இடை — "நல்லாரிடைபபுக்கு."
தலை — "வலைத்தலைமானன்னநோக்கியர்."
வாய் — "குரைகடல்வாயமுதென்கோ."
திசை — "தேர்த்திசையிருந்தான்."
வயின் — "அவர்வயிற்செல்லாய்."
முன் — "கற்ருர்முற்ருேன்ருகழிவிரக்கம்."
சார் — "காட்டுச்சாரோடுங்குறமுயால்."
வலம் — "கைவலத்துள்ளதுகொடுக்கும்."
இடம் — "இல்லிடப்பரத்தை."
மேல் — "தன்மேற்கடுவரைநீரிற்கடுத்துவரக்கண்டும்." [கடுப்பு - விரைவு.]
கீழ் — "பிண்டிக்கண்ணூர்நிழற்கீழெழுந்தமடிகள்."
புடை — "எயிற்புடைநின்ருன்." [னிடத்துவந்த என்பது பொருள்.
முதல் — "சுரன்முதல்வந்தவுரன்மாய்மாலை." [சுரன் - பாலைநிலம்.] சுரத்தி
பின் — "காதலிபின்சென்றதம்ம."
பாடு — "நம்பாடணையாதநாள்."
அளை — "கல்லளைச்சுனைநீர்." [கல்லளை — கல்லிடத்து.]
தேம் — "தோழிக்குரியவை கோடாய்தேய்த்து." [கோடாய் - கைத்தாய்.]
உழை — "அவனுழைவந்தான்."
வழி — "நின்றதோராறவேங்கைநிழல்வழியசைந்தன்ன."
உழி — "உறையுழியோலைபோல." [உறை — வாழ்நாள்.]
உளி — "குயில்சேர்குளிர்காவுளிசேர்புறையும்."
உள் — "முல்லைபங்குவட்டுள்வாழும்."
அகம் — "பயன்சாராப்பண்பில்சொற்பல்லாரகத்து."
புறம் — "செல்லுமெனனுயிர்ப்புறத்திறுத்தமருண்மாலை."
இல் — "ஊரிலிருந்தார்."

இனிக், கண் கால் முதலியன, இடவேறுபாடுகளை யுணர்த்தும்போது ஒருதிறத்தனவாகிய உருபாகாது, பலதிறத்தனவாகிய இடங்களையுணர்த்தும்பெயர்களாம்.

உ - ம். கண்ணகன்ஞாலம், அகத்திருந்தான், வீட்டின்புறத்திருந்தான், மேலிடத்திருந்தான், முன்னிருந்தான், கடைநாள், இடைச்சுரம், தலையாயார், தென்றிசை எனவரும். பிறவுமன்ன. (சரு)

Digitized By Roja Muthiah Research Library

[எட்டாம்வேற்றுமை.]

௩௦௩. எட்ட னுருபே யெய்துபெய ரீற்றின்
திரிபு குன்றன் மிகுத லியல்பயற்
றிரிபு மாம்பொருள் படர்க்கை யோரைத்
தன்முக மாகத் தானழைப் பதுவே.

இ - ள். எட்டன் உருபு — எட்டாம்வேற்றுமையி னுருபுகளாவன,- எய்து பெயர் ஈற்றின் திரிபு - விளியடைந்த பெயரீற்றினுடைய திரிதலும்,—குன்றல் - கெடுதலும்,—மிகுதல் - மிகுதலும்,—இயல்பு - இயல்பாதலும்,—அயற்றிரிபும் ஆம் - ஈற்றயலெழுத்துத் திரிதலுமாகும்,—பொருள் படர்க்கையோரைத் தன்முகம் ஆக அழைப்பது - அவற்றின் பொருளாவது படர்க்கைப்பெயர்ப்பொருளைத் தனக்கெதிர்முகமாக அழைப்பதாலாகிய விளிக்கப்படுபொருளாம். எ - று.

தான் அசைநிலை. விளித்தற்குக் கருவியாகிய உருபை விளியென்றது காரியவாகுபெயர்.

படர்க்கையோரை அழைப்பது என்றதனால்தன்மைப்பெயரும் முன்னிலைப்பெயரும் விளிவேற்றுமையைக் கொள்ளமாட்டாவென்பதாயிற்று. படர்க்கைப்பெயருள்ளுஞ் சிலபெயர்கள் விளிகொள்ளாவென்பது 'நுவ்வொடு வினுச்சுட்டு' என்னுஞ் சூத்திரத்தாலும் பெறப்படும். மேலும் படர்க்கையோரை எனப் பலர்பாலாற் கூறினும் 'ஒருமொழியொழிதன்னினங்கொளற்குரித்தே' என்பதனால் ஏனைநாற்பாலுங் கொள்ளப்படும். அவ்வாறு வருதல் பிற்சூத்திரங்களாலு முணர்க. (சுசு)

[விளிக்கப்படுபெயர்கள்.]

௩௦௪. இ உ ஊவோ டையோ ன ள ர ல
யவ்வீற் றுயர்திணை யோரவல் லிவற்றொடு
ணஃகா னுவீ றாகும் பொதுப்பெயர்
ஞ ந வொழி யனைத்தீற் றஃறிணை விளிப்பன.

இ - ள். இ உ ஊவோடு ஐ ஓ ன ள ர ல ய ஈற்று உயர்திணைப் (பெயர்) - இகரமும் உகரமும் ஊகாரமும் ஐகாரமும் ஓகாரமும் என்னுமுயிர்களும் ன ள ர ல ய என்னுமெய்களும் ஆகிய பத்தெழுத்துக்களையும் இறுதியிலுடைய உயர்திணைப்பெயர்களும்,—ஓ ர அல் இவற்றொடு ணஃகான் ஆ ஈறு ஆகும் பொதுப்பெயர் - இவற்றுள் ஓகாரவுயிரும் ரகரமெய்யுமாகிய இரண்டுமொழித்துநின்ற எட்டுடனே ணகரமும் ஆகாரமுமாகிய இரண்டுங்கூடிய பத்தெழுத்துக்களும் இறுதியாகிய பொதுப்பெயர்களும்,— ஞ ந ஒழி அனைத்து ஈற்று அஃறிணைப் (பெயர்) - ஞகர நகரங்களும் (ஈறுகாத எகரமு)மொழிந்த இருபத்தோரெழுத்துக்களையும் ஈற்றிலுடைய அஃறிணைப்பெயர்களும்,—விளிப்பன - அழைக்கப்படுவன. எ - று.

Digitized By Roja Muthiah Research Library

(விளித்தல் — அழைத்தல்.) சூத்திரம். இ உ ஐ ஓ வென்னுமிறுதி, ய ப்பாலன்கேயுடர் திணைமருங்கின, மெய்ப்பொருள் சுட்டிய விளிகொள்பெய ரே. எ - ம். ன ர ல ள வென்னுமந்நான்கென்ப, புள்ளியிறுதிவிளிகொள் பெயரே. எ - ம். ஊகாரமும் யகரவொற்றும் விலக்கி ஆசிரியர் தொல்காப் பியர் கூறியது காலவழுக்கெனக் காண்க. (சஎ)

[பொதுவாகிய விளியுருபு.]

கூ0ரு. இம்முப் பெயர்க்கண் ணியல்பு மேயும்
இகர நீட்சியு முருபா மன்னே.

இ - ள். இம்முப் பெயர்க்கண் - முன் விளிக்கப்படுமென்ற மூவகைப் பெயர்களிடத்தும்,—இயல்பும் ஏயும் இகரநீட்சியும் உருபு ஆம் மன் - இயல் பாதலும் ஏகாரமிகுதலும் இகரம் ஈகாரமாதலும் பெரும்பாலும் விளியுருபு களாகும். எ - று.

உ - ம். (க) முனிகூறாய், வேந்துகூறாய், ஆடூஉக்கூறாய், விடலைகூறாய், கோ க்கூறாய், கோன்கூறாய், வேள்கூறாய், மாந்தர்கூறீர், தோன் றல்கூறாய், சேய்கூறாய். எ -ம். முனியேகூறாய், வேந்தேகூறா ய். எ— ம். நம்பீகூறாய். எ - ம். உயர்திணைப் பெயர்களிலே மூன்றுருபுகளும் வந்தன.

(உ) பிதாக்கூறாய், ஆண்கூறாய். எ - ம், பிதாவேகூறாய், ஆணேகூறா ய். எ - ம். சாத்திகூறாய். எ -ம். பொதுப்பெயர்களிலே மூன்று ருபுகளும் வந்தன.

(ங) விளக்கொடியை, புல்வாய்கொடியை. எ -ம் விளவேகொடியை, புல்வாயேகொடியை. எ - ம். மந்திகொடியை. எ - ம். அஃறி ணைப்பெயர்களிலே மூன்றுருபுகளும்வந்தன. காட்டாதொழிந் தபெயர்களும் இப்படியேவரும்.

பெரும்பாலும் என்றதனால், இவ்வுருபுகள் சிலவற்றிற்குப் பொருந்தா மையுளவேற்கொள்க. (சஅ)

[விளியுருபுக்கு எய்தியதன்மேற் சிறப்புவிதி.]

கூ0சு. ஐயிறு பொதுப்பெயர்க் காயு மாவும்
உருபா மல்லவற் றாயு மாகும்.

இ - ள். ஐ இறு பொதுப்பெயர்க்கு ஆயும் ஆவும் - ஐகாரவீற்றுப்பொ துப்பெயர்க்குப் பொதுவிதியால் இயல்பும் ஏகாரமிகுதலுமன்றி ஐகாரம் ஆ யும் ஆவுமாகத் திரிதலும்,— அல்லவற்று ஆயும் - உயர்திணையஃறிணைப்பெய ர்களுக்கு அவ்விரண்டுருபுகளன்றி ஐகாரம் ஆயெனத் திரிதலும்,— உருபு ஆ கும் - விளியுருபுகளாம். எ - று.

உ - ம். (க) அன்னை, அன்னாய், அன்னா பொதுப்பெயர்க்கு ஆயும ஆவும்வ ந்தன.

Digitized By Roja Muthiah Research Library

(உ) விடலை - விடலாய். எ - ம். நாரை - நாராய். எ - ம். உயர்திணைப்பெயர்க்கும் அஃறிணைப்பெயர்க்கும் ஆய் வந்தது.

உரையிற்கோடலென்னுமுத்தியால் "அன்னேயுன்னையல்லாலினியாரைநினைக்கேனே." எ - ம். "என்னம்மேயென்னும்" எனவும், பொதுப்பெயர்க்கு ஐகாரம் ஏகாரமாகத் திரிதலுங்கொள்க. (௪௧)

௱௰௭. ஒருசார் னவ்வீற் றுயர்திணைப் பெயர்க்கண்
அளபீ றழிவய னீட்சி யதனொ
டீறு போத லவற்றொ டோவுறல்
ஈறழிந் தோவுற லிறுதியவ் வாதல்
அதனொ டயறிரிந் தேயுற லீறழிந்
தயலே யாதலும் விளியுரு பாகும்.

இ - ள். னவ்வீற்று உயர்திணைப் பெயர்க்கண் - பொதுவிதியன்றி னகரமெய்யீற்றுயர்திணைப் பெயர்களுள்,—ஒருசார் அளபு - சிலஅளபெடுத்தலும்,—(ஒருசார்) ஈறுஅழிவு - சில ஈறுகெடுதலும்,—(ஒருசார்) அயல்நீட்சி - சில ஈற்றயனீளுதலும்,—(ஒருசார்) அதனொடு ஈறுபோதல் - சில ஈற்றயனீண்டு ஈறு கெடுதலும்,—(ஒருசார்) அவற்றொடு ஓ உறல் - சில ஈறுகெட்டு ஈற்றயனீண்டு ஓகாரமிகுதலும்,—(ஒருசார்) ஈறு அழிந்து ஓ உறல் - சில ஈறுகெட்டு ஓகாரமிகுதலும்,—(ஒருசார்) இறுதி யவ்வாதல் - சில இறுதி னகரமெய் யகரமெய்யாதலும்,—(ஒருசார்) அதனொடு அயல் திரிந்து ஏ உறல் - சில ஈற்றுனகரமெய் யகரமெய்யாகத் திரிந்து அயலில் ஆகாரம் ஓகாரமாய் ஏகாரமிகுதலும்,—(ஒருசார்) ஈறு அழிந்து அயல் ஏ ஆதலும் - சில ஈறு கெட்டு அயலில் அகரம் ஏகாரமாதலும்,—விளியுருபு ஆகும் - விளியுருகளாகும். எ - று.

உ - ம். அம்பர்கிழான்—அம்பர்கிழாஅன் அளபாயிற்று. புலவன்—புலவ ஈறழிந்தது. பெருமன்—பெருமான் ஈற்றயனீண்டது. மன்னன்—மன்னா ஈற்றயனீண்டு ஈறுகெட்டது. ஐயன்—ஐயாவோ ஈற்றயனீண்டு ஈறுகெட்டு ஓகாரமிக்கது. திரையன்—திரையவோ ஈறழிந்து ஓகாரமிக்கது. வாயிலான்—வாயிலாய். இறுதியவ்வாயிற்று. வாயிலான்—வாயிலோயே இறுதியவ்வாய் ஈற்றயலாகாரம் ஓகாரமாய் ஏகாரமிக்கது. ஐயன்—ஐயே ஈறழிந்து அயலிலகரம் ஏகாரமாயிற்று.

இவ்வொருசாரென்பதை விளியதிகாரமுழுதுங் கூட்டுக. (௫௰)

௱௰௮. ளஃகா னுயர்பெயர்க் களபீ றழிவயல்
நீட்சி யிறுதி யவ்வொற் றாதல்
அயலி லகரமே யாதலும் விளித்தனு.

இ - ள். ளஃகான் உயிர்பெயர்க்கு - பொதுவிதியன்றி ளகரமெய் யீற்றுயர்திணைப்பெயர்களுள்,—(ஒருசார்) அளபு - சில அளபெடுத்தலும்,—

Digitized By Roja Muthiah Research Library

(ஒருசார்) ஈறு அழிவு - சில ஈறுகெடுதலும்,—(ஒருசார்) அயல்நீட்சி - சிலஈற்றயனீளுதலும்,—(ஒருசார்) இறுதி யவ்வொற்று ஆதல் - சில இறுதி ளவ்வொற்று யவ்வொற்றாதலும்,—(ஒருசார்) அயலில் அகரம் ஏ ஆதலும் - சில ஈற்றயலகரம் ஏகாரமாதலும்,—விளித்தனு - விளியுருபுகளாகும்.

உ - ம். வேள்—வேஎள் அளபெடுத்தது. எல்லாள்—எல்லா ஈறுகெட்டது. மக்கள்—மக்காள் ஈற்றயனீண்டது. குழையாள்—குழையாய் ளவ்வொற்று யவ்வொற்றாயிற்று. அடிகள்—அடிகேள் ஈற்றயலகரம் ஏகாரமாயிற்று. (அடிகள் - ஆசாரியர்.) (ருக)

௩0௬. ரவ்வீற் றுயர்பெயர்க் களபெழ லீற்றயல்
அகரம் இ ஈ யாத லாண்மையா
ஈயாத லதனோ டேயுற லீற்றே
மிக்கயல் யாக்கெட் டதனய னீடல்
ஈற்றி னீருற லிவையு மீண் டுருபே.

இ - ள். ரவ்வீற்று உயர்பெயர்க்கு - பொதுவிதியன்றி ரகரமெய்யீற்றுயர்திணைப்பெயர்களுள்,—(ஒருசார்) அளபுஎழல் - சில அளபெடுத்தலும்,—(ஒருசார்) ஈற்றயல் அகரம் இ ஈயாதல் - சில ஈற்றயலகரம் இகரமாதலும் ஈகாரமாதலும்,—(ஒருசார்) ஆண்மை ஆ ஈயாதல் - சில அவ்வீற்றயலாகாரம் ஈகாரமாதலும்,—(ஒருசார்) அதனோடு ஏ உறல் - சில அதனோடு ஏகாரம் ஏற்றலும்,—(ஒருசார்) ஈற்று ஏ மிக்கு அயல் யாக் கெட்டு அதன் அயல் நீடல் - சில ஈற்றில் ஏகாரமிக்கு அயலில் யாக் கெட்டு அதனயலிகரம் ஈகாரமாதலும்,—(ஒருசார்) ஈற்றின் ஈர் உறல் - சில ஈற்றில் ஈர் ஆதலும்,—இவையும் ஈண்டு உருபு - ஆகியவிவையும் இவ்விடத்து விளியுருபுகளாகும்.

உ - ம். சிறார்—சிறாஅர் அளபெடுத்தது. தெவ்வர்—தெவ்விர் ஈற்றயலகரம் இகரமாயிற்று. நாய்கர்—நாய்கீர் ஈற்றயலகரம் ஈகாரமாயிற்று. சான்றார்—சான்றீர் ஈற்றயலாகாரம் ஈகாரமாயிற்று. கணியார்—கணியீரே ஈற்றயலாகாரம் ஈகாரமாய் ஏகாரமிக்கது. நம்பியார்—நம்பீரே ஈற்றிலேகாரமிக்கு அயல் யாக் கெட்டு அதனயலிகரம் ஈகாரமாயிற்று. எமர்—எமரீர் ஈரேற்றது.

ஈண்டென்ற மிகையால், கடலாரே, கடலீரே; சாத்தியாரே, சாத்தியீரே எ - ம். அஃறிணைப்பெயர் பொதுப்பெயர்களைச் சிறப்பித்து, ரவ்வீற்றுயர்திணைப்பெயர்போலக் கூறினும், இவ்வுருபேற்றல்கொள்க. * (ருஉ)

௩௧0. லகாரவீற் றுயர்பெயர்க் களபய னீட்சியும்
யகார வீற்றிற் களபுமா முருபே.

இ - ள். லகார ஈற்று உயர்பெயர்க்கு - பொதுவிதியன்றி லகரமெய்யீற்றுயர்திணைப்பெயர்க்கு,—(ஒருசார்) அளபு - சில அளபெடுத்தலும்,—(ஒருசார்) அயல்நீட்சியும் - சில ஈற்றயனீளுதலும்,—யகாரவீற் (றுயர்பெய

Digitized By Roja Muthiah Research Library

ர்க்கு) அளபும் - யகரமெய்யீற்றுயர்திணைப்பெயர்க்கு அளபெடுத்தலும்,— உருபு ஆம் - விளியுருபுகளாகும். எ - று.

உ - ம். மால்—மாஅல் எ - ம். தோன்றல்—தோன்றால் எ-ம். சேய்—சேஎய் எ - ம். அம்மூன்றுருபுகளும் வந்தன. (௫௩)

௧௧௧. னவ்வீற் றுயர்திணை யல்லிரு பெயர்க்கண்
இறுதி யழிவத னோடய னீட்சி.

இ - ள். னவ்வீற்று உயர்திணை அல் இருபெயர்க்கண் - பொதுவிதியன்றி னகர மெய்யீற் றஃறிணைப்பெயர் பொதுப்பெயர்களிடத்து,—(ஒருசார்) இறுதி அழிவு - சில ஈறுகெடுதலும்,—(ஒருசார்) அதனோடு அயல் நீட்சி - சில ஈறு கெடுதலுடனே ஈற்றயனீளுதலும் (விளியுருபுகளாம்.) எ - று.

உ - ம். அலவன்—அலவ. எ - ம். கலுழன்—கலுழா. எ - ம். சாத்தன்—சாத்த. எ - ம். கொற்றன்—கொற்றா. எ -ம். முறையே அஃறிணைப்பெயரிலும் பொதுப்பெயரிலும் அவ்விரண்டும் வந்தன. (௫௪)

௧௧௨. லளவீற் றஃறிணைப் பெயர்பொதுப் பெயர்க்கண்
ஈற்றய னீட்சியு முருபா கும்மே.

இ - ள். ல ள ஈற்று அஃறிணைப்பெயர் பொதுப்பெயர்க்கண் - லகர ளகர மெய்யீற்றஃறிணைப் பெயர்க்கும் பொதுப்பெயர்க்கும்,—ஈற்றயல் நீட்சியும் உருபு ஆகும் - பொதுவிதியன்றி ஈற்றயலெழுத்து நீளுதலும் விளியுருபாகும். எ - று.

உ - ம். முயல்—முயால், கிளிகள்—கிளிகாள். எ - ம். தூங்கல்—தூங்கால், மக்கள்—மக்காள். எ - ம். வரும். (௫௫)

[விளியுருபுகளுக்குப் புறனடை.]

௧௧௩. அண்மையி னியல்புமீ றழிவுஞ் சேய்மையின்
அளபும் புலம்பி னோவு மாகும்.

இ - ள். முன்சொல்லப்பட்ட விளியுருபுகளுள்—இயல்பும் ஈறு அழிவும் அண்மையின் - இயல்பாதலும் ஈறுகெடுதலுஞ் சமீபவிளிக்கண்ணும்,—அளபு சேய்மையினும் - அளபெடுத்தல் தூரவிளிக்கண்ணும்,—ஓ புலம்பினும் ஆகும் - ஓகாரமிகுதல் புலம்பல் விளிக்கண்ணும் வரும். எ - று.

எனவே, மற்றைவிளியுருபுகள் இம்மூன்றிடத்துங் கலந்து வருமென்பதுபெற்றாம். (௫௬)

[விளியுருபேலாப்பெயர்கள்.]

௧௧௪. நுவ்வொடு வினைச்சுட் டுற்ற ன ள ர
லைதுத் தாந்தா னின்னன விளியா.

இ - ள். நுவ்வொடு வினுச்சுட்டு உற்ற ன ள ர - நுவ்வுடனே மூன்றுமுதல்வினுவையும் மூன்றுசுட்டையும் முறையே பொருந்திய ன ள ர என்னுமூன்றீற்றுயர்திணைப்பெயர்களும்,—வை து - வை து என்னு மிரண்டீற்றஃறிணைப் பெயர்களும் தான் - தானென்னும் பொதுப்பெயரும்,—இன்னன - இவைபோல்வன பிறவும்,—விளியா - விளிக்கப்படுவனவல்ல. எ - று.

வை து என்னுமிரண்டும் நுவ்வொடு பொருந்தா என்பார், ஒடுக்கொடுத்துப் பிரித்தார்.

மகரவீற்றுப் பொதுப்பெயர் முன்னரே விலக்கப்பட்டமையால் இங்கே தாம் என்றது அசைநிலை.

உ-ம். நுமன், நுமள், நுமர். எ - ம். எவன், எவள், எவர், எவை, எது. எ-ம். யாவன், யாவள், யாவர், யாவை, யாது. எ - ம். ஏவன், ஏவள், ஏவர், ஏவை, ஏது. எ - ம். அவன், அவள், அவர்; அவை, அது. எ - ம். இவன், இவள், இவர், இவை, இது. எ - ம். உவன், உவள், உவர், உவை, உது. எ-ம். தான். எ - ம். வரும் இப்பெயர்கள் விளியேலாமை காண்க.

இன்னன என்றதனால், மற்றையான், மற்றையாள், மற்றையார், மற்றையது, மற்றையன, மற்றயவை, பிறன், பிறள், பிறர், பிறிது, பிறமுதலியனவுங்கொள்க.

சூத்திரம். தானென்பெயருஞ்சுட்டுமுதற்பெயரும், யானென்பெயரும்வினுவின்பெயரு, மன்றியனைத்தும்விளிகோளிலவே. எ - ம். தநநுஎனவவைமுதலாகித், தன்மைகுறித்தனளரவெனிறுதியு, மன்னபிறவும்பெயர்நிலைவரினே, யின்மைவேண்டும்விளியொடுகொளலே. எ - ம். ஆசிரியர் தொல்காப்பியனுர் கூறுதலுங் காண்க. (௩௭)

[முதல்சினைத்தொடர்பின்கண் அவ்விரண்டினும்இரண்டனுருபுவாராதெனல்.]

௩௧௫. முதலை யையுறிற் சினையைக் கண்ணுறும்
அதுமுதற் காயிற் சினைக்கை யாகும்.

இ - ள். முதலை ஐ உறின் சினையைக் கண் உறும் - முதலினை ஐயுருபு பொருந்தினுற் சினையினைக் கண்ணுருபு பொருந்தும்,—அது முதற்கு ஆயின் சினைக்கு ஐ ஆகும் - அதுவுருவு முதலுக்குவரிற் சினையினுக்கு ஐயுருபுவரும். எ - று.

உ - ம். யானையைக் காலின்கண்வெட்டினுன், யானையது காலைவெட்டினுன். எ - ம். கையை விரலின்கட்பிடித்தான், கையினது விரலைப்பிடித்தான் எனவும் வரும்.

இனி இரட்டுறமொழிதலென்னும்உத்தியால், அது என்பதைச் சுட்டாக்கி, அந்தக் கண்ணுருபு முதற்பொருளுக்காயின், எனவும், பொருளுரைத்துக்கொள்க.



Digitized By Roja Muthiah Research Library

உ - ம். யானையின்கட்காலைவெட்டினான், கையின்கண்விரலைப்பற்றினான் எனக்காண்க. இதனுள், விரலைச் சினைப்பொருளாகக் குறித்தபோது, கை, முதற்பொருளாய்நின்றது. ஆதலால் முதல்சினையிரண்டிடத்தும் ஐயுருபு வாராதென்பது இவர்கருத்து.

இனி ஆசிரியர் தொல்காப்பியனார், (சூத்திரம்) முதற்சினைக்கிளவிக்கது வென்வேற்றுமை, முதற்கண்வரினேசினைக்கைவருமே. எனக்கூறி இதையுருபுமயக்கமெனவும், (சூத்திரம்.) முதன்முனைவரிற்கண்ணென்வேற்றுமை, சினைமுன்வருதறெள்ளிதென்ப. என்க்கூறியதைப் பொருள்மயக்கமெனவும், முதல்சினையிரண்டிடத்தும் ஐயுருபு வருமெனவுங் கொண்டது அவர்கருத்தென்பதை யவ்வுரையினாலுமுணர்க. இனி உரையிற்கோடலெனனுமுத்தியால், உருபுமயக்கம், பொருள்மயக்கமென மயக்கமிருவகைப்படுமெனவும், அவற்றுள், உருபுமயக்கமாவது, ஒருருபின்பொருளொடு தன்பொருள்விடுத்துத் தலைமயங்குதலெனவும், அதற்குதாரணம், மணலுளீன்ற என்னும் ஏழாம்வேற்றுமைப்பொருளிலே, மணற்கீன்ற, என நான்காவது தன்பொருளைவிட்டு மயங்கிற்றெனவும், பொருள்மயக்கமாவது, பிறிதொன்றன் பொருளொடு தன்பொருள்விடாது தலைமயங்குதலெனவும், அதற்குதாரணம், கோட்டைக்குறைத்தான் எனவரும். இரண்டாவதன்பொருளிலே, கோட்டின்கட்குறைத்தான், என ஏழாவது, தன்பொருளைவிடாது மயங்கிற்றெனவும், இந்த இருவகைமயக்கங்களில் உருபேற்றசொல்லும் உருபுநோக்கியசொல்லுந் தம்முள் இயைந்துநிற்பது, பொருள்மயக்கமெனவும், இசையாதுநிற்பது உருபுமயக்கமெனவுங்கொள்க. (ருஅ)

[ஐயுருபுமுதல் சினையிரண்டினும் வாராமைக்குக் காரணமும் மேலைச்சூத்திரப்பொருளோடு இப்பொருளைப் பிண்டப்பொருளுக்கும் ஏற்பித்தலும்.]

ருகசு. முதலிவை சினையிவை யெனவே றுளவில
உரைப்போர் குறிப்பின வற்றே பிண்டமும்.

இ - ள். முதல் இவை சினை இவை எனவேறு உள இல - கடங்களிவை படங்களிவை என்றாற்போல் முதற்பொருள்களிவை சினைப்பொருள்களிவை என்பதற்கு இரண்டாக வேறுள்ளனவில்லவாம்,—உரைப்போர்குறிப்பின - ஒரு பொருளையே இரண்டாகப் பகுத்துச் சொல்வோரது குறிப்பின் மாத்திரையனவேயாம்,—பிண்டமும் அற்று - பிண்டப்பொருளும் அத்தன்மைத்தாம். எ - று.

யானையைக்குறித்தபோது யானையுண்டாக அதனுடைய கை கால் கொம்பு முதலியவை வேறில்லையாம்; அவ்வவயவங்களைக் குறித்தபோது அவையுண்டாக யானை வேறில்லையாம்; ஆதலால் இப்படிச்சொல்லப்பட்டன.

இனிப் பிண்டப்பொருள்: நெல்லைப் பொலியின்கண்வாரினான், நெல்லினது பொலியைவாரினான் எனவரும். பிண்டப்பொருளாகிய பொலிக் குப்பையும் பிண்டித்த பொருளாகிய நெல்லும் வேறாகாமையால், அவ்விரண்டினிடத்தும் ஐயுருபுவருவது சிறப்பன்றெனவறிக.(குப்பை - குவியல்.)

Digitized By Roja Muthiah Research Library

சூத்திரம். முதலுஞ்சினையும்பொருள்வேறுபடா, நுவலுங்காலைச் சொற்கு றிப்பினவே. பிண்டப்பெயருமாயியற்றியா, பண்டியன்மருங்கின்மரீஇ யமரபே. எனக் கூறியதினாலும் அவ்வுரையாலும், முதலாயது சினை யாவுஞ் சினையாயது முதலாயும் மாறிவருதலும் அங்ஙனமாறிவருங்கா ல், முதல்சினை ஒருபொருளாயினும் சொல்லுவான்குறிப்பின்வழி இ ருபொருட்பரவனையாய் வருதலுங் கொள்க. (௫௩)

[உருபுமயக்கம்.]

௩௭. யாத னுருபிற் கூறிற் றாயினும்
பொருள்செல் மருங்கின் வேற்றுமை சாரும்.

இ - ள். யாதன் உருபின் கூறிற்று ஆயினும் - ஒருவேற்றுமைப்பொ ருள் மற்றொரு வேற்றுமையுருபாற் சொல்லப்பட்டதாயினும்,—பொருள் செல் மருங்கின் வேற்றுமை சாரும் - அப்பொருள் சென்றவழியே அவ்வுரு புசேரும். எ - று.

எனவே, பொருளுக்கு இயையாது மயங்கி வந்த உருபைப் பொருளுக் கியைந்த உருபாகத் திரித்துக்கொள்க என்பதாயிற்று.

உ - ம். (௧) "நாகுவேயொடுநக்குவீங்குதோள்" என்புழி, வேய் உடனிகழ் ச்சிப்பொருளாகாது செயப்படுபொருளாய் நிற்றலால், ஒடுவு ருபை ஐயுருபாகத் திரித்துக்கொள்க.

(உ) "கிழங்குமணற்கீன்றமுளை" என்புழி, மணல் கோடற்பொருளா காது இடப்பொருளாய்நிற்றலால், குவ்வுருபைக் கண்ணுருபா கத் திரித்துக்கொள்க. பிறவுமன்ன.

இனி உரையிற்கோடலென்னுமுத்தியால், ஒரு வேற்றுமைப்பொருள் மற்றை வேற்றுமையுருபுகளோடு தகுதியாக வருதலும் உண்டெனக்கொள் க. அவைவருமாறு:—

௧. வினைமுதற்பொருள், எழுவாயுருபு மூன்றனுருபுகளோடன்றிச், சிறுபான்மை நான்கனுருபு ஆறனுருபுகளோடும் வரும்.

சூத்திரம். "ஒன்றுமூன்றுநான்காறெனுமுருபொடு வருமேவினைமுதலென வகுத்தனரே."

உ-ம். அவர்க்குச்செய்யத்தகுமக்காரியம்: ச—கு. அவரது வரவு: சு—அது. எனவரும்.

உ. செயப்படுபொருள், இரண்டனுருபோடன்றிச், சிறுபான்மை எ ழுவாய்வேற்றுமையுருபுமுதல் ஏழாம்வேற்றுமையுருபீறாய உருபுகள் எல் லாவற்றோடும் வரும்.

சூத்திரம்: "எல்லாவுருபொடுஞ்செயப்படுபொருளெழும்."

உ - ம். சோறப்பட்டது: எழுவாய். அரிசியாற் சோறாக்கினான்: ௩—ஆல். அவட்குக்கொள்ளுமிவ்வணிகலம்: ச—கு. பழியினஞ்சும்: ௫—இன்.

நாலது குற்றங்கூறினன்: ௬—அது. தூணின்கட்சார்ந்தான்: ௭—கண். எனவரும்.

௩. கருவிப்பொருள், மூன்றனுருபு ஐந்தனுருபுகளோடன்றிச், சிறுபான்மை எழுவாயுருபு நான்கனுருபு ஆறனுருபுகளோடும் வரும்.

சூத்திரம்: "ஒன்றுமூன்று நான்கைந்தாறுருபொடு கருவிவருமெனக்கருதினர்பெரியோர்",

உ-ம், கண்காணும்: எழுவாய். கண்ணிற்குக்காணலாம்: ௪—கு. கண்ணது காட்சி: ௬—அது. எனவரும்.

௪. கோடற்பொருள், நான்கனுருபோடன்றிச், சிறுபான்மை எட்டாம்வேற்றுமையொழிந்த எல்லாவுருபுகளோடும் வரும்.

சூத்திரம்: "எல்லாவுருபொடுங்கொள்வோனெழுமே."

உ-ம், "இரப்பவரென்பெறினுங்கொள்வர்" எழுவாய். "செய்யவடவ்வையைக்காட்டிவிடும்." உ—ஐ. நாகராற்பலி: ௩—ஆல். நாகரினன்புசெய்தான்: ௫—இன். நாகரதுபலி: ௬—அது. நாகர்கணன்புசெய்தான்: ௭—கண். எனவரும்.

௫. ஐந்தாம்வேற்றுமைப்பொருள்களுள், நீக்கப்பொருள் சிறுபான்மை இரண்டனுருபோடும், எல்லைப்பொருள் சிறுபான்மை நான்கனுருபோடும் வரும்.

சூத்திரம்: "இரண்டொடுநான்கைந்தொடுமெழுமேநீக்கம்."

உ-ம். மதுரையைநீங்கினன்: உ—ஐ. நீக்கப்பொருள். மதுரைக்குவடக்குச்சிதம்பரம்: ௪—கு. எல்லைப்பொருள்.

௬. சம்பந்தப்பொருள், ஆறனுருபோடன்றிச், சிறுபான்மை நான்கனுருபு ஐந்தனுருபு ஏழனுருபுகளோடும், வரும்.

சூத்திரம்: "நான்கைந்தாறேழொடுதுறைநடக்கும்."

உ-ம். சாத்தனுக்குமகன்: ௪—கு. மரத்தினிங்கினகொம்பு: ௫—இன். உயிரின்கணுணர்வு: ௭—கண். எனவரும்.

௭. இடப்பொருள், ஏழனுருபோடன்றிச், சிறுபான்மை எழுவாயுருபு இரண்டனுருபு நான்கனுருபுகளோடும் வரும்.

சூத்திரம்: "ஒன்றிரண்டுநான்கேழொடிடமெழும்."

உ-ம். தூண்போதிகைதொட்டது: எழுவாய்: தூணைச்சார்ந்தான்: உ—ஐ. இன்றைக்கு, நாளைக்கு, பகலைக்கு, அந்திக்கு, சந்திக்கு, மாலைக்கு, காலைக்கு, ஊர்க்கு, வீட்டிற்கு வருவன்: ௪—கு. எனவரும். (௬0)

[சிலவேற்றுமையுருபு செய்யுளிடத்துத் திரிந்துவருதல்.]

௩௱௧௮. ஐயான்குச் செய்யுட் கவ்வு மாகும்
ஆகா வஃறிணைக் கானல் லாதன,

இ-ள். ஐ ஆன் குச்செய்யுட்கு அவ்வும் ஆகும் - ஐயும் ஆனும் குவ்வுமாகிய மூன்றுருபுகளுஞ் செய்யுளிடத்து ஒரோவழி அகரமாகத் திரிந்துவரவும்பெறும்,— அஃறிணைக்கு ஆன் அல்லாதன ஆகா - அஃறிணையிடத்து ஆனல்லாத ஐயும் குவ்வும் அகரமாகத் திரியாவாம். எ - று.

ஆகாவஃறிணைக் கானல்லாதன எனவே, உயர்திணையிலே மூன்றுருபுந் திரியுமென்பது பெற்றாம்.

உ - ம். (க) காவலோனைக் களிறஞ்சும்மே என்பது "காவலோனக் களிறஞ்சும்மே" என்றும், புலவரான் என்பது "புலவரான" என்றும், கடிநிலையின்றே யாசிரியர்க்கு என்பது "கடிநிலையின்றேயாசிரியற்க" என்றும், உயர்திணையிலே மூன்றுருபுந் திரிந்தன.

(உ) புள்ளினான் என்பது "புள்ளினான" என ஆனுருபொன்றும் அஃறிணையிலே திரிந்தது. அவ்வுமாகும் என்னுமிழிவுசிறப்பும்மையால் இவ்வாறு திரிதல் நியமமன்றாம்.

ஐ உருபு அகரமாகத் திரியும் எனவும், ஆன் உருபும் குவ்வுருபும் அகரஞ்சார்ந்துநிற்கப் பெறும் எனவும் பொருள்விளக்கங் கொள்ளுக. (௬௧)

[எட்டுவேற்றுமைக்கும் முடிக்குஞ்சொல்]

௩௧௬. எல்லை யின்னு மதுவும் பெயர்கொளும்
அல்ல வினைகொளு நான்கே ழிருமையும்
புல்லும் பெரும்பாலு மென்மனார் புலவர்.

இ-ள். எல்லை இன்னும் அதுவும்பெயர் கொளும் - எல்லைப்பொருட்டாகிய ஐந்தாம்வேற்றுமையும் ஆறாம்வேற்றுமையும் பெயரைக்கொண்டு முடியும்,—அல்ல வினை கொளும் - ஒழிந்த எழுவாய்முதலிய வேற்றுமைச்சொல்லாம் வினையைக்கொண்டு முடியும்,—நான்கு ஏழு இருமையும் புல்லும் - அவற்றுள் நான்காம் வேற்றுமையும் ஏழாம்வேற்றுமையும் வினையையேயன்றி வினையொடு பொருந்தும் பெயரையுங்கொண்டு முடியும்,—பெரும்பாலும் என்மனார் புலவர் - பெரும்பாலுமென்று சொல்லுவர் புலவர்.

பெரும்பாலும் என்றதனால், வினைகொளற்குரியன சிறுபான்மை தொழிற்பெயரையும் வினையாலணையும்பெயரையுங் கொண்டுமுடிதலும், அவற்றுள் எழுவாய்வேற்றுமை வினைகொண்டு முடிதலேயன்றிச் சிறுபான்மை பெயரையும் வினாவையுங்கொண்டு முடிதலுங்கொள்க.

உ - ம். (க) கருவூரின்கிழக்கு, சாத்தனது கை, என எல்லையின்னும் அதுவும்பெயர்கொண்டன.

(உ) சாத்தன்வந்தான், சாத்தனல்லன்; குடத்தைவனைந்தான், குடத்தையுடையன்; வாளால்வெட்டினான், வாளால்வலியன்; சாத்தனுக்குக்கொடுத்தான், சாத்தனுக்குநல்லன்; நோயினீங்கினான்

Digitized By Roja Muthiah Research Library

நோயிற்சொடியன்; அவையின்கணிருந்தான், அவையின்கட் பெரியன்; கொற்றுமொள், கொற்றுவலியை என அல்லவை வினைகொண்டன.

(௩) பிணிக்குமருந்து, மணியின்கணொளி என நான்காம்வேற்றுமையும் ஏழாம்வேற்றுமையும் வினையேயன்றிப் பெயருங்கொண்டன. இப்பெயர்கள், எல்லையின்னும் அதுவுங் கொள்ளும் பெயர்கள் போலாகாது, பிணிக்குக்கொடுக்குமருந்து மணியின்கணிருக்குமொளி என வினைவேண்டிநிற்றலின், வினையொடுபொருந்தும் பெயர்களாயின.

(௪) சாத்தன்வருதல், சாத்தன்வந்தவன்; குடத்தைவனைதல், குடத்தைவனைந்தவன் எனச் சிறுபான்மை தொழிற்பெயரும் வினையாலணையும்பெயருங் கொண்டன. பிறவுமன்ன.

(௫) சாத்தனவன், சாத்தன்யாவன், சாத்தன்யார் என எழுவாய்வேற்றுமை சிறுபான்மை சுட்டுப்பெயரும் வினாப்பெயரும் வினாவினைக்குறிப்புங்கொண்டது. வினையாலணையும்பெயருக்குந் தொழிற்பெயருக்கும் பகுதி வினையாதலின் அவற்றைக்கொள்ளுதலும் ஒருவாறுவினை வினைகொண்டதாம். முடிக்குஞ்சொல்லாக வந்தபோது சுட்டும் வினாவுங் குறிப்புவினைப்பாற் படுமாதலின் முடிபும் ஒருவாறு வினைமுடிபாம். இக்கருத்துப்பற்றிமுதல்வேற்றுமை வினைகொளுமென்பதை அல்லவினைகொளுமென்பதிலடக்கிக் கூறினரென்றறிக.

எட்டுவேற்றுமைகளுள், எட்டாவதும் ஆறாவதுமொழிந்த ஆறுவேற்றுமைப்பொருள்களும் வினைகொண்டுமுடியிற் காரகமெனப் பெயர்பெறும். ஆறாவதும் வினைப்பெயர்கொள்ளின், அப்பெயர்பெறும்.

சூத்திரம். "விளிகுறை யிரண்டையும் விட்டவேற் றுமைகள்
வினையான் முடியிற் காரக மெனப்பெறுங்
குறையும் வினைகொளி னஃதோவழிக் கூடும்
நாரா யணன்பூ வோரா யிரத்தைக்
கரத்தாற் கொய்தோ ரரற்கே கொடுத்துச்
சக்கரச் சிறுமையி னீங்கி நற்சுவைப்
பாற்கடற் கண்ணே பள்ளிகொண் டானெனக்
காரக முழுதும் வந்தன காண்க.
இவற்றினு ளொன்றே யியம்பினுங் காரகம்."

இன்பெயர்கொளுமென்றது, எல்லை இன் ............... பெயர்கொளும் என்றதினால் "விசும்பிற்றுளிவீழினல்லான்மற்றாங்கே, பசும்புற்றலைகாண்பரிது." என்பதில் விசும்பின் என்னும் ஐந்தனுருபு வீழின் என்னும் வினைகொண்டது, எல்லைப்பொருளில் வாராது நீக்கப்பொருளில் வந்தமையாலென்றறிக. (௬௨)

Digitized By Roja Muthiah Research Library

**பரீக்ஷை வினுக்கள்:**— 638. வேற்றுமையாவன யாவை? 639. எட்டுவேற்றுமைகளின் பெயரும் முறையுமெவை? 640. ஐம்முதலிய வேற்றுமையுருபுகளை யேற்பதியாது? 641. ஐம்முதலிய உருபேலாப்பெயர்கள் எவை? 642. எழுவாய்வேற்றுமை யுருபியாது? 643. அவ்வெழுவாயுருபின் பொருள்யாது? 644. எழுவாய்கொள்ளும் பெயர் எத்தன்மையது? 645. வினைமுதற்பொருளாவது யாது? 646. சாத்தன் வந்தான் என்னும் உதாரணத்தில் வினைமுதற்பொருட்குக் கூறிய இலக்கணம் இருக்குமாறெங்ஙனம்? 647. எழுவாய்க்கு வருஞ் சொல்லுருபுகளெவை? 648. இரண்டாம் வேற்றுமையுருபியாது? 649. அவ்விரண்டாம்வேற்றுமை யுருபிற்குப் பொருளென்னை? 650. செயப்படுபொருளாவதியாது? 651, குடத்தை வனைந்தான் என்னும் உதாரணத்திற் செயப்படுபொருளுக்குக் கூறிய இலக்கணம் இருக்குமாறெங்ஙனம்? 652. விருப்பமும் அறிவும் வினைமுதற்றொழிலாகுமிடத்துச் செயப்படுபொருளாவதியாது? 653. செயப்படுபொருள் எத்தனைவகைப்படும்? 654. ஒரோவிடத்து இரண்டுசெயப்படுபொருள் வருதலுண்டோ? 655. செயப்படுபொருள் குன்றாத வினையில் எங்கும் இரண்டு செயப்படுபொருள் வருதலின்றோ? 656. இன்னும் அச்செயப்படுபொருள் எவ்வாறு வரும்? 657 மூன்றாம்வேற்றுமையுருபுகள்யாவை? 658· அம்மூன்றாம்வேற்றுமையுருபுகளுக்குப் பொருளென்னை? 659. அந்நான்குருபுகளுள், எவ்வெவ்வுருபுகட்கு அம்மூன்றுபொருள்களுள் எவ்வெப்பொருள் சிறந்தன? 660. கருவிபொருளாவதியாது? 661. அக்கருவி எத்தனைவகைப்படும்? 662. முதற்கருவியாவதியாது? 663. துணைக்கருவியாவதியாது? 664. இன்னும்அக்கருவிப்பொருள் எவ்வாறு வரும்? 665. எழுவாய்க்கருத்தாவிற்கும் மூன்றனுருபின் கருத்தாவிற்கும் வேறுபாடென்னை? 666. வினைமுதல் எத்தனைவகைப்படும்? 667. இயற்றும்வினைமுதலாவதியாது? 668. ஏவும்வினைமுதலாவதியாது? 669. உடனிகழ்ச்சிப்பொருளாவதியாது? 670. அவ்வுடனிகழ்ச்சிப்பொருள் எத்தனைவகைப்படும்? 671. தலைமைப்பொருளாவதியாது? 672. தலைமையில்பொருளாவதியாது? 673. ஆல் ஆன் உருபுகள் உடனிகழ்ச்சிப்பொருளில் வாராவோ? 674. ஓடு ஒடு உருபுகள் வினைமுதற்பொருள் கருவிப்பொருள்களில் வாராவோ? 675. ஆல் ஆன் உருபுகள் கருவிமுதலிய மூன்றுபொருள்களிலன்றி வேறுபொருளில் வாராவோ? 676. ஓடு ஒடு உருபுகள் வேறுபொருளில் வாராவோ? 677. நான்காம்வேற்றுமையுருபியாது? 678. அந்நான்காம்வேற்றுமையுருபிற்குப் பொருளென்னை? 679. கோடற்பொருளாவதியாது? 680, கோடல் எத்தனைவகைப்

Digitized By Roja Muthiah Research Library

படும்? 681. கொடுத்தல் எத்தனைவகைப்படும்? 682. பகைதொடர்பொருளாவதியாது? 683. நட்புத்தொடர்பொருளாவதியாது? 684. தகுதியுடைப்பொருளாவதியாது? 685 முதற்காரணகாரியப்பொருளாவதியாது? 686 நிமித்தகாரணகாரியப்பொருளாவதியாது? 687. முறைக்கியைபொருளாவதியாது? 688. குவ்வுருபு வேறுபொருளில் வாராதோ? 689. ஐந்தாம்வேற்றுமையுருபுகள் யாவை? 690. அவ்வைந்தாம்வேற்றுமையுருபுகளுக்குப் பொருளென்னை? 691. நீக்கப்பொருளாவதியாது? 692 ஒப்புப்பொருளாவதியாது? 693. எல்லைப்பொருளாவதியாது? 694. எதுப்பொருளாவதியாது? 695. ஐந்தனுருபுகள் வேறுபொருளில் வாராவோ? 696 ஆறும்வேற்றுமையுருபுகள் யாவை? 697 அவ்வாறும்வேற்றுமையுருபுகளுக்குப் பொருளென்னை? 698. தற்கிழமைப்பொருளாவதியாது? 699 பிறிதின்கிழமைப்பொருளாவதியாது? 700. ஆறனுருபு வேறுபொருளில் வருதலின்றோ? 701. அதுவுருபு வருமொழி யஃறிணையொருமைக்கன்றி அஃறிணைப்பன்மை உயர்திணை யொருமைபன்மைகளுக்கு வருதலின்றோ? 702. ஏழாம்வேற்றுமையுருபுகள் யாவை? 703. அவ்வேழாம்வேற்றுமையுருபுகளுக்குப் பொருளென்னை? 704. இடப்பொருளிலக்கணம் வடநூலார் எவ்வாறு கூறுவர்? 705 இடப்பொருள் எத்தனைவகைப்படும்? 706. ஏழனுருபுகள் இடப்பொருளிலன்றி வேறுபொருளில் வாராவோ? 707. கண்முதலிய உருபுகளென்றவை யெவை? 708. எட்டாம்வேற்றுமையுருபுகள் யாவை? 709. அவ்வெட்டாம்வேற்றுமையுருபுகட்குப் பொருளென்னை? 710. எவ்வெப்பெயர்கள் விளியுருபேற்கும்? 711. இம்முப்பெயர்க்கும் பெரும்பாலும் பொதுப்படவரும் விளியுருபுகளெவை? 712. ஐகாரவீற்றுப்பொதுப்பெயர்க்கு மற்றும் எவை விளியுருபாம்? 713. ஐகாரவீற்றுயர்திணைப்பெயர் அஃறிணைப்பெயர்கட்கு மற்றுமெவை விளியுருபாம்? 714. னகரவீற்றுயர்திணைப்பெயர்க்கு மற்றுமெவை விளியுருபாம்? 715. ளகரவீற்றுயர்திணைப்பெயர்க்கு மற்றுமெவை விளியுருபாம்? 716. ரகரவீற்றுயர்திணைப்பெயர்க்கு மற்றுமெவை விளியுருபாம்? 717. லகரவீற்றுயர்திணைப்பெயர்க்கு மற்றுமெவை விளியுருபாம்? 718. யகரவீற்றுயர்திணைப்பெயர்க்கு மற்றுமெது விளியுருபாம்? 719. ணகரவீற்றஃறிணைப்பெயர்க்கும் பொதுப்பெயர்க்கும் மற்றுமெவை விளியுருபாம்? 720. லளவீற்றஃறிணைப்பெயர்க்கும் பொதுப்பெயர்க்கும் மற்றுமெது விளியுருபாம்? 721. இவ்விளியுருபுகளுள் எவ்வெவ்விளியுருபுகள் எவ்வெவ்விடத்தில் வரும்? 722. இவ்விளியுருபுகளையேலாதுநிற்கும் பெயர்களும் உளவோ? 723. முதலுஞ் சினையுந் தொடர்ந்து வரும்போது, அவ்விரண்டன்பாலும் ஐயுருபு வருமோ? 724. முதல்சினையிரண்டன்பாலும் ஐயுருபுவாராமைக்குக் காரணமென்னை? 725. பிண்டப்பொருளும் பிண்டித்தபொருளுந் தொடரும்போது, அவ்விரண்டன்பாலும் ஐயுருபு வருமோ? 726. ஒருவேற்றுமைப்பொருள் மற்றொரு

Digitized By Roja Muthiah Research Library

வேற்றுமையுருபாற் சொல்லப்பட்டதாயின், யாதுசெய்தல்வேண்டும்? 727. வினைமுதற்பொருள் எழுவாயோடும் மூன்றனுருபோடு மன்றி மற்றைவேற்றுமையுருபுகளோடு வருதலின்றோ? 728. செயப்படுபொருள் இரண்டனுருபோடன்றி மற்றைவேற்றுமையுருபுகளோடு வருதலின்றோ? 729 கருவிப்பொருள் மூன்றனுருபு ஐந்தனுருபுகளோடன்றி மற்றை வேற்றுமையுருபுகளோடு வருதலின்றோ? 730. கோடற்பொருள் நான்கனுருபோடன்றி மற்றை வேற்றுமையுருபுகளோடு வருதலின்றோ? 731. ஐந்தாம்வேற்றுமைப்பொருள்கள் மற்றை வேற்றுமையுருபுகளோடுவருதலின்றோ? 732. சம்பந்தப்பொருள் ஆறனுருபோடன்றி மற்றை வேற்றுமையுருபுகளோடு வருதலின்றோ? 733. இடப்பொருள் ஏழனுருபோடன்றி மற்றை வேற்றுமையுருபுகளோடு வருதலின்றோ? 734. ஐம்முதலிய ஆறுருபுகளுஞ் செய்யுளிற் றிரிதலுண்டோ? 735. உருபுகளுள், பெயரைக்கொண்டு முடிவன எவை? 736. வினையைக்கொண்டு முடிவன எவை? 737. இருமையையுங்கொண்டுமுடிவன எவை? 738. வினைகொளற்குரியன பிறகொண்டு முடிதலின்றோ? 739. எழுவாய்வேற்றுமை வினைகொண்டுமுடிதலேயன்றிப் பிறகொண்டு முடிதலின்றோ? 740. வினைகொண்டுமுடியும் வேற்றுமைகள் எங்ஙனம்பெயர்பெறும்? 741. ஆறும்வேற்றுமை தொழிற்பெயர்கொண்டவிடத்து அப்பெயர்பெறுதலின்றோ? 742. நீக்கப்பொருளில்வரும் ஐந்தாம்வேற்றுமை பெயரைக்கொண்டுமுடியுமோ வினையைக்கொண்டு முடியுமோ?

பெயரியன் முற்றிற்று.



Digitized By Roja Muthiah Research Library

# ௨. வினையியல்

## வினைச்சொல்.

[தெரிநிலை வினைச்சொல்லின் பொதுவிலக்கணம்.]

**௩௨0.** செய்பவன் கருவி நிலஞ்செயல் காலஞ்
செய்பொரு ளாறுந் தருவது வினையே.

இ - ள். செய்பவன் கருவி நிலம் செயல் காலம் செய்பொருள் ஆறும் - கருத்தாவுங் காரணமும் இடமுஞ் செயலுங் காலமுஞ் செயப்படுபொருளுமாகிய அறுவகைப்பொருளையும்,—தருவது வினை - தருவது தெரிநிலைவினைச்சொல்லாம். எ - று.

வினையென்றது ஆகுபெயர். வருஞ்சூத்திரத்தில் 'வினைக்குறிப்பே' என்னுதலால் இச்சூத்திரத்தாற் கூறப்பட்டது தெரிநிலைவினையெனக்கொள்க.

நட வா முதலிய எல்லாந் தழுவுதற்குச் செய்யென்றார்.

செய்பவனென ஆண்பாலின்மேல் சொன்னாரேனும், 'ஒருமொழி யொழிதன் னினங்கொளற் குரித்தே' என்பதனால் ஐம்பாலுங் கொள்க.

வ - று. வனைந்தான் என்புழிக் குயவனாகிய செய்பவனும், மண்ணாகிய முதற்காரணமும், தண்ட சக்கர முதலிய துணைக்காரணங்களும், வனைதற்காதாரமாகிய இடமும், வனைதலாகிய செயலும் இறந்தகாலமும், குடமுதலிய செயப்படுபொருளுந் தோன்றுதல்காண்க.

ஆறும் என்னு முற்றும்மையை உயர்வுசிறப்பும்மையாக்கி, இழிந்தன சிலவுள அவையும் வேண்டுமேற் கொள்க எனப்பொருளுரைத்து, இன்னதற்கு, இது பயன், என்பவைகளுங் கூட்டிக்கொள்க. அவை: பிறர்க்கு வனைந்தான், பொருள்கருதி வனைந்தான் எனவரும். இவ்விரண்டும் ஏதுவின்பாற்பட்டுக் கருவியுள் அடங்கவும் பெறுமாதலால், இழிந்தனவாயின.

இன்னும் ஆறுந்தருவது வினை என்றதற்கு 'முற்றும்மை யொரோவழி யெச்சமு மாகும்' என்னுஞ் சூத்திரத்தால் இத்தொகையிற் சிலகுறைந்து வரவும் பெறும் எனப் பொருளுரைத்துக் கொள்க. கொடியாடிற்று என்புழி, ஆடுதல் வினைக்குச் செயப்படுபொருள் குறைந்தது.

முற்றுவினைகளிலே பகுதியாற் செயலும், விகுதியாற் செய்பவனும், இடைநிலை முதலியவற்றாற் காலமும், பெயரெச்ச வினையெச்சங்களிலே இம்முறையே செயலுங் காலமும் வெளிப்படையாகவும், மற்றவை குறிப்பாகவுந் தோன்றுமெனக்கொள்க.

Digitized By Roja Muthiah Research Library

(கு) "வினையெனப்படுவது வேற்றுமைகொள்ளாது நினையுங்காலைக் கால மொடுதோன்றும்" என்றார் தொல்காப்பியனார். (௧)

[குறிப்புவினைச்சொல்லின் பொதுவிலக்கணம்.]

௩௨௧. பொருண்முத லாறினுந் தோற்றிமுன் னாறனுள்
வினைமுதன் மாத்திரை விளக்கல்வினைக் குறிப்பே.

இ - ள். பொருள் முதல் ஆறினும் தோற்றி - பொருளாதியாறும் முதனிலையடியாக அவற்றினிடத்தே பிறந்து,—முன் ஆறனுள் வினைமுதல் மாத்திரை விளக்கல் - முன் சொல்லப்பட்ட செய்பவன் முதலாகிய ஆறனுள் கருத்தாவொன்றையுமே விளக்குதல்,—வினைக்குறிப்பு - வினைக்குறிப்புச் சொல்லிலக்கணமாம். எ - று.

வ - று. குழையினன், பொன்னினன். எ - ம். அகத்தினன், புறத்தினன். எ - ம். ஆதிரையான், ஓணத்தான். எ - ம். குறுந்தாளன், செங்கண்ணன். எ - ம். கரியன், நல்லன். எ - ம். கடுநடையன், இன்சொல்லன். எ-ம். வரும். இவற்றுள், விகுதியாற் செயப்பவன் விளங்கிற்று; மற்றவைகள் குறிப்பாக உண்டெனக்கொள்க. ஒன்றைக்குழையினன், ஒன்றுற்குழையினன் எனவாராமையால், குழையினன் என்பதற்குக் கருவியுஞ்செயப்படுபொருளுமில்லை எனவும், ஒன்றையுடையன் ஒன்றாலுடையன் எனவருதலால், உடையன் என்பதற்கு ஆறும் உண்டெனவுங் கொள்க.

இவை, பொருளாதியாறால் ஒரு பொருளை வழங்குதற்கு வரும் பெயராய் நில்லாது, குழையை யுடையனாயினன், ஆகின்றான், ஆவான். எ - ம். அகத்தின்கணிருந்தான், இருக்கின்றான், இருப்பான். எ-ம். குறுந்தாளையுடையனாயினன், ஆகின்றான், ஆவான். எ - ம். கருவண்ணமாயிருந்தான், இருக்கின்றான், இருப்பான். எ - ம். கடுநடையாக நடந்தான், நடக்கின்றான், நடப்பான். எ - ம். வருதலால், வினைக்குறிப்புச்சொல்லாயின. இவை, முன்பு வினைக்குறிப்பாய்ப் பின்பு பொருள்களை வழங்குதற்குரிய பெயராய் வரின், அவை குறிப்புவினையாலணையும் பெயராம். இவை தம்முள் வேற்றுமை யென்க.

நெடியன், நிலத்தன், இளையன், துடியன், சிலம்பன். எ - ம். "காலிற் கட்டிய கழலன் கச்சினன், மாலைத் தோளினன் வரிவில் வாளியன், நீலக்குஞ்சியன் நெடியன்" எ - ம். இளையள், தொடியள், உடையள். எ - ம். நெடியர், உடையர், குறியர். எ - ம். உயர்திணை வினைக்குறிப்புவந்தன.

"கரிதரிது தீது கடிது நெடிது
பெரிதுடைத்து வெய்து பிறிது—பரிதென
ஆயிழாய் பன்மையிலுஞ் சொல்க வஃறிணையின்
மேய வினைக் குறிப்பா மிக்கு." என நேமிநாதவெண்பாவிற்

Digitized By Roja Muthiah Research Library

குறிக்கப்பட்ட கரிது, அரிது முதலியனவும், கரியன, அரியன, தீயன, கடியன, நெடியன, பெரியன, உடையன, வெய்யன, பரியன. எ - ம். அஃறிணை வினைக்குறிப்புவந்தன. (உ)

[வினைச்சொற்களை வகுத்தல்.)

௬உஉ. அவைதாம்,—
முற்றும் பெயர்வினை யெச்சமு மாகி
ஒன்றற் குரியவும் பொதுவு மாகும்.

இ - ள். அவைதாம் - முன்னிரண்டு சூத்திரங்களாலுந் தெரிநிலையாயுங் குறிப்பாயும் வருமென்ற வினைச்சொற்கள்,—முற்றும் பெயரெச்சமும், வினையெச்சமும் ஆகி - முற்றுவினைச்சொற்களும் பெயரெச்சவினைச்சொற்களும் வினையெச்ச வினைச்சொற்களுமாகி,—ஒன்றற்கு உரியவும் பொதுவும் ஆகும் - திணைபாலிடங்களுள் ஒன்றற்குச் சிறப்பாய் வருவனவும் பலவற்றிற்குப்பொதுமையினிற்பனவுமாகும். எ - று.

இவற்றிற்கு உதாரணந் தத்தஞ் சிறப்புச் சூத்திரங்களிற் காண்க.

இனி 'ஒருமொழி யொழிதன் னினங் கொளற் குரித்தே' என்பதனால் பிறவழியால் ஒன்றற்குரியவும் பொதுவுமாய் நிற்பனவுஞ் சிலவுளவெனக் கொள்க.

வ - று. (க.) நடந்தான் தன்வினை; நடத்தினான் பிறவினை; வெளுத்தான் தன்வினை பிறவினையிரண்டற்கும் பொதுவினை.

(உ.) நடந்தான் விதிவினை; நடவான் மறைவினை; சாவான், வேவான் விதிவினை மறைவினை யிரண்டற்கும் பொதுவினை.

(௩.) உண்டான் செய்வினை; உண்ணப்பட்டது செயப்பாட்டுவினை; புலிகொன்ற யானை, மீன் விழுங்கினவன் செய்வினை செயப்பாட்டுவினையிரண்டற்கும் பொதுவினை. (புலியைக்கொன்றயானை, புலியாற்கொல்லப்பட்டயானை என்று பொருள்.) (மீனை விழுங்கினவன், மீனால் விழுங்கப்பட்டவன் என்று பொருள்.)

(௪.) தேடிய சாத்தன், தேடிய வந்தான் எனச் சொல்லொன்றே பெயரெச்சம் வினையெச்சமிரண்டற்கும் பொதுவாயின. இவை போல்வன பிறவு மன்ன.

உண்டு, வந்து, சென்று என்பன முற்றுவினையாயும் எச்சவினையாயும் வந்தன. (உண்டேன், வந்தேன், சென்றேன் என்று பொருள் தரும்போது முற்றுவினை; எச்சவினைப்பொருள் வெளிப்படை.) (௩)

Digitized By Roja Muthiah Research Library

பரீக்ஷை வினாக்கள்:--743, தெரிநிலைவினைச்சொல்லாவதியாது? 744. வினைநிகழ்ச்சிக்குக் கருத்தாமுதலிய ஆறுகாரணங்களுமன்றிப் பிறகாரணங்களுமுளவோ? 745. எல்லாவினைகளுக்குங் கருத்தாமுதலிய ஆறுங் குறையாது வருமோ? 746. கருத்தாமுதலிய ஆறுந் தெரிநிலைவினைச்சொற்களில் எவ்வாறு தோன்றும்? 747. குறிப்புவினைச்சொல்லாவதியாது? 748. கருத்தாமுதலிய ஆறுங் குறிப்புவினைச்சொற்களில் எவ்வாறு தோன்றும்? 749. குறிப்புவினைச்சொற்களிற் கருத்தாமுதலிய ஆறுமுண்டோ? 750. குழையினன் முதலியன எப்போது பெயராய் வரும்? 751. எப்போது குறிப்புவினையாய் வரும்? 752. எப்போது குறிப்புவினையாலணையும் பெயராய்வரும்? 753. தெரிநிலைவினைச்சொல்லுங் குறிப்புவினைச்சொல்லுந் தனித்தனி எத்தனைவகைப்பட்டு எவ்வாறு வழங்கும்? 754. வினைச்சொற்கள் திணைபாலிடங்களிலன்றிப் பிறவழியிலும் ஒன்றற்குரியவும் பொதுவுமாய் நிற்பனவுளவோ?

## முற்றுவினை.

[முற்றுவினை இனையவென்பது.]

௩உ௩. பொதுவியல் பாறையுந் தோற்றிப் பொருட்பெயர்
முதலறு பெயரல தேற்பில முற்றே.

இ - ள்.) பொது இயல்பு ஆறையும் தோற்றி - பல்வகை வினைகளுக்கும் பொதுவிலக்கணமாகிய செய்பவன் முதலிய ஆறையுந் தோன்றச்செய்து,—பொருட்பெயர் முதல் அறுபெயர் - பொருட்பெயர் முதலிய அறுவகைப்பெயரையும் பயனிலையாக ஏற்பனவாகி,— அலது ஏற்பு இல - மற்றொன்றையுமேலாதன,— முற்று - முற்றுவினை வினைக்குறிப்புக்களாம், எ - று,

பெரும்பான்மைபற்றிப் பெயரைக்கொண்டு முடியுமென்றாரேனும் வினையைக் கொண்டுமுடியும் முற்றுவினையுஞ் சிறுபான்மையுண்டு. 'மார்வினையொடுமுடிமே.' 'செய்கென்ஒருமையுஞ் செய்துமென்பன்மையும் வினையொடுமுடியினும் விளம்பியமுற்றே.' என்பவற்றாலறிக.

(வரலாறு.)

(௧.) தெரிநிலைவினைமுற்று:—

| | |
|---|---|
| செய்தானவன்<br>உண்கின்றான் சோறு ........... | பொருட்பெயர் கொண்டது. |
| குளிர்ந்தது நிலம்<br>சுடுகின்றது வனம் ........... | இடப்பெயர் கொண்டது. |

Digitized By Roja Muthiah Research Library

வந்தது கார் ⎫
நிற்கின்றது பூரணை ............ ⎭ காலப்பெயர் கொண்டது.

குவிந்தது கை.................... ⎫
நடக்கின்றது கால் ............... ⎭ சினைப்பெயர் கொண்டது.

பரந்தது பசப்பு ⎫
ஓங்குகின்றது புண்ணியம்...... ⎭ குணப்பெயர் கொண்டது.

ஒழிந்தது பிறப்பு ⎫
ஓய்ந்தது நடை ............ ⎭ தொழிற்பெயர் கொண்டது.

(உ.) குறிப்புவினைமுற்று:—

நல்லனவன்............ ⎫
கரியன குதிரைகள்...... ⎭ பொருட்பெயர் கொண்டது.

நல்லது நிலம்..................... ⎫
பெரியது வீடு.................... ⎭ இடப்பெயர் கொண்டது.

நல்லது கார்..................... ⎫
தீயது வேனில்... ........... ⎭ காலப்பெயர்கொண்டது.

நல்லது கை ⎫
நெடியது கால்.................... ⎭ சினைப்பெயர் கொண்டது.

நல்லது பசப்பு....... ⎫
வெய்யது செம்மை............. ⎭ குணப்பெயர் கொண்டது.

நல்லது பிறப்பு............. ⎫
எளியது இரப்பு............ ..... ⎭ தொழிற்பெயர் கொண்டது.

மற்றைத்திணைபாலிடங்காலங்களோறும் ஒட்டுக.

Digitized By Roja Muthiah Research Library

(சூத்) "மற்றுச் சொன்னோக்கா மரபினவினைத்து, முற்றி நிற்பன முற்றியன் மொழியே." என்றார் ஆசிரியர் அகத்தியனார்.

முற்றாகவேனும் எச்சமாகவேனும் வருகின்ற தெரிநிலைவினைகளுக்குங் குறிப்புவினைகளுக்கும் மாணுக்கர்) வேறுபாடறியின்; பகுத்துப்பார்க்கும் போது தெரிநிலைவினையின் பகுதிகள் ஏவல்போலிருக்கும். குறிப்புவினைப்பகுதிகளோ அப்படி ஏவல்போலிருக்கமாட்டா என்று ஒருவாறு சோதனையாலறிக.

வ - று. நடந்தான் என்னுந் தெரிநிலைவினையைப் பகுத்துப்பார்க்குமிடத்துப் பகுதியாகிய நட என்பது ஏவல்போலிருத்தல் காண்க. வெய்து, கரிது என்னுங் குறிப்புவினைகளைப் பகுத்துப் பார்க்குமிடத்து, வெம், கரு என்னும் பகுதிகள் ஏவல்போல்வாராமை காண்க. ஏனையவுமன்ன.

[தெரிநிலைவினைமுற்று விகற்பம்.]

நஉச. ஒருவன்முத லைந்தையும் படர்க்கை யிடத்தும்
ஒருமைப் பன்மையைத் தன்மைமுன் னிலையினு
முக்கா லத்தினு முரண முறையே
மூவைந் திருமூன் றாறாய் முற்று
வினைப்பத மொன்றே மூவொன் பானாம்.

இ - ள். ஒருவன் முதல் ஐந்தையும் படர்க்கையிடத்தும் - ஆண்பான் முதலாகிய ஐம்பால் வினைமுற்றுக்களையும் படர்க்கையிடத்திலும்,— ஒருமை பன்மையைத் தன்மை முன்னிலையினும் - ஒருமை வினைமுற்றையும் பன்மை வினைமுற்றையுந் தன்மையிடத்திலும் முன்னிலையிடத்திலும் வைத்து,— முக்காலத்தினும் முரண - முக்காலங்களாலும் மாற,—முறையே - சொல்லப்பட்டமுறையே,—மூவைந்து — படர்க்கை வினைமுற்றுக்கள் பதினைந்தும்,— இருமூன்று - தன்மை வினைமுற்றுக்கள் ஆறும்,— ஆறு ஆய் - முன்னிலைவினைமுற்றுக்கள் ஆறும் ஆகி,—முற்று வினைப் பதம் ஒன்றே மூவொன்பான் ஆம் - தெரிநிலைவினைமுற்றுப்பதமொன்றுமே இருபத்தேழாகும். எ - று.

வ - று. (க.) நடந்தான், நடந்தாள், நடந்தார், நடந்தது, நடந்தன. இவை இறந்தகால வினைமுற்று - ரு. நடக்கின்றான், நடக்கின்றாள், நடக்கின்றார், நடக்கின்றது, நடக்கின்றன. இவை நிகழ்கால வினைமுற்று - ரு. நடப்பான், நடப்பாள், நடப்பார், நடப்பது, நடப்பன இவை எதிர்கால வினைமுற்று - ரு. ஆக படர்க்கை வினைமுற்று - கரு.

(உ.) நடந்தேன், நடந்தேம் இவை இறந்தகால வினைமுற்று - உ. நடக்கின்றேன், நடக்கின்றேம் இவை நிகழ்கால வினைமுற்று-உ. நடப்பேன், நடப்பேம் இவை எதிர்கால வினைமுற்று - உ. ஆக தன்மை வினைமுற்று - சு.

Digitized By Roja Muthiah Research Library

(௬) நடந்தாய், நடந்தீர் இவை இறந்தகால வினைமுற்று - ௨. நடக்கின்றாய், நடக்கின்றீர் இவை நிகழ்கால வினைமுற்று - ௨. நடப்பாய், நடப்பீர் இவை எதிர்கால வினைமுற்று - ௨. ஆக முன்னிலை வினைமுற்று - ௬.

ஆக வகை மூன்றுக்கும் முற்றுவினை - ௨௭.

'முற்றும்பெயர்வினையெச்சமுமாகி' என்று பகுக்கப்பட்டவற்றுள் எச்சவினைகளல்ல முற்றுக்களே இருபத்தேழாகுமென்பார் முற்றுவினைப்பதமொன்றே மூவொன்பானுமென்று பிரிநிலையேகாரங்கொடுத்தோதினர். முக்காலத்தான் முரணப்பட்டு வெவ்வேறுருவமாகுதல் குறிப்புவினைக்கியையாமையால் இருபத்தேழாகுதல் தெரிநிலைவினைமுற்றென்றும், எற்புழிக்கோடலால் முக்காலப் பகுப்பொழித்துக் குறிப்புவினைமுற்றுக்கள் ஒன்பதென்னுமளவாகப் பல்குமென்றுங் கொள்ளுக.

சிறியன், சிறியள், சிறியர், சிறிது, சிறியன; சிறியேன், சிறியேம்; சிறியை, சிறியீர். என்று முக்காலந்தவிர ஐம்பால் மூவிட ஒருமை பன்மைகளாற் குறிப்புவினைமுற்றுப் பல்கிவந்தவாறு காண்க.

இன்னும் முற்றுவினைப்பதமொன்றே என்பதற்கு ஒருபகுதியிற்றோன்றிய முற்றேயென்றுங் கொள்ளுக. குறிப்புவினைமுற்றுந் தனக்கியைந்தமட்டிற்பல்குதலை ஈண்டுக்கொள்ளுங் கருத்துப் புதிதாயினும் பின் வகுக்குஞ் சிறப்புச்சூத்திர வுரைகளோடிணங்கிநிற்றல் காண்க.

ஒருவன் என்றது ஈண்டு அப்பெயரையன்று ஆண்பாலையுணர்த்திநின்றது. தெரிநிலைவினைமுற்று மேற்சுட்டியவகையால் இருபத்தேழாகுமெனவே; விதிவினை, மறைவினை. எ-ம். தன்வினை, பிறவினை. எ-ம். செய்வினை, செயப்பாட்டுவினை. எ-ம். வரும் இவ்வகைகளாலுந் தாக்க மிகப் பெருகிவருமென்று கொள்ளுக.

வ-று. உண்டான், உண்டிலன் — விதிவினை, மறைவினை.
உண்டான், உண்பித்தான் - தன்வினை, பிறவினை.
உண்டான், உண்ணப்பட்டது - செய்வினை, செயப்பாட்டுவினை.

இப்படியே தெரிநிலைவினைமுற்றை யாராயுமிடத்து ஒருவினைமுற்றே விதிவினை மறைவினைகளுள் யாதாயினும் ஒன்றாயிருக்கும்; அதுவே தன்வினை பிறவினைகளுள்ளும் யாதாயினும் ஒன்றாயிருக்கும்; மேலும் அதுவே செய்வினை செயப்பாட்டுவினைகளுள்ளும் யாதாயினும் ஒன்றாயிருக்குமென்று கருதுக.

விதிவினையெனினும் உடன்பாட்டுவினையெனினும் ஒக்கும். மறைவினையெனினும் எதிர்மறைவினையெனினும் ஒக்கும். சூட்டுவிக்கப்படுகின்றில- என்பது எதிர்மறைச் செயப்பாட்டுப் பிறவினைமுற்று. சூடுகின்றான் - என்பது உடன்பாட்டுச் செய்வினைத் தன்வினைமுற்று. சூட்டப்பட்டது - என்பது

Digitized By Roja Muthiah Research Library

உடன்பாட்டுச் செயப்பாட்டுத் தன்வினைமுற்று. சூட்டுவித்திலன் - என்பது எதிர்மறைச்செய்வினைப் பிறவினைமுற்று. சூட்டுவித்தான் - என்பது உடன்பாட்டுப் பிறவினைச் செய்வினைமுற்று. சூட்டப்படுகின்றில - என்பது எதிர்மறைச் செயப்பாட்டுத் தன்வினைமுற்று.

இப்படியே அவ்விகற்பங்களைச் சொற்சோதனையாற் கண்டுகண்டு தெளிக.

விதிவினை மறைவினைகளில், விதிவினையாயிருந்தால் அதுமறைவினையாகாது. மறையானால் விதியாகாது. (இவ்விரண்டற்கும் பொதுவாய் அருகிவருதலுமுண்டு. உ - ம். சொல்லாய்) (அருகுதல் - சிறுபான்மையினுஞ்சிறுபான்மையாதல்)

தன்வினை பிறவினைகளில் - தன்வினையாயிருந்தால் அது பிறவினையாகாது. பிறிதாயிற றனதாகாது. (இவ்விரண்டற்கும் பொதுவாய் அருகிவருதலுமுண்டு. உ - ம். வெருந்தான்.) செய்வினை செயப்பாட்டுவினைகளில் செய்வினையாயிருந்தால் அதுசெயப்பாட்டுவினையாகாது. செயப்பாடானால் செய்யாகாது. (இவ்விரண்டற்கும் பொதுவாய் அருகிவருதலுமுண்டு. உ-ம். உண்டது) ஒருவனால் உண்ணப்பட்டது. மாடு உண்டது என்று பொருள் வருப்புக்காண்க. (௫)

[ஆண்பாற்படர்க்கை வினைமுற்று.]

௩௨௫. அன் ஆன் இறுமொழி யாண்பாற் படர்க்கை.

இ - ள். அன் ஆன் இறு மொழி - அன் ஆன் என்னும் இருவிகுதியையும் இறுதியிலுடைய மொழிகள்,— ஆண்பாற்படர்க்கை - உயர்திணையாண்பாற் படர்க்கைவினைமுற்றுங் குறிப்புமுற்றுமாம். எ - று.

(வரலாறு.)

| இ. தெரி. | நி. தெரி. | எ. தெரி. | குறி. | |
|---|---|---|---|---|
| நடந்தனன் | நடக்கின்றனன் | நடப்பன் | குழையன் | } அவன். |
| நடந்தான் | நடக்கின்றான் | நடப்பான் | குழையான் | |

மற்றவைகளும் இப்படியே வரும். (௬)

[பெண்பாற்படர்க்கை வினைமுற்று.]

௩௨௬. அள் ஆள் இறுமொழி பெண்பாற் படர்க்கை.

இ - ள். அள் ஆள் இறு மொழி - அள் ஆள் என்னும் இரண்டுவிகுதியையும் இறுதியிலுடைய மொழிகள்,— பெண்பாற்படர்க்கை - உயர்திணைப்பெண்பாற் படர்க்கைவினைமுற்றுங் குறிப்புமுற்றுமாம்.

| இ. தெரி. | நி. தெரி. | எ. தெரி. | குறி. | |
|---|---|---|---|---|
| நடந்தனள் | நடக்கின்றனள் | நடப்பள் | குழையள் | } அவள். |
| நடந்தாள் | நடக்கின்றாள் | நடப்பாள் | குழையாள் | |



Digitized By Roja Muthiah Research Library

மற்றவைகளும் இப்படியே வரும். (சூத்) "அன்னான் அள்ளாள் என்னு நான்கும், ஒருவர்மருங்கிற் படர்க்கைச்சொல்லே" என்றார் தொல்காப்பியனாரும். (எ)

[பலர்பாற்படர்க்கை வினைமுற்று]

கூஉஅ. அர் ஆர் பவ்வூ ரகரமாரீற்ற
பல்லோர் படர்க்கைமார் வினையொடு முடிமே.

இ - ள். அர் ஆர் பவ்வூர் அகரம் மார் ஈற்ற - அர் ஆர் ப மார் என்னும் நான்குவிகுதிகளையும் இறுதியிலுடையமொழிகள்,—பல்லோர் படர்க்கை - உயர்திணைப் பலர்பாற்படர்க்கை வினைமுற்றுங் குறிப்புமுற்றுமாம்,—மார்வினையொடும் முடியும் - இவற்றுள் மாரீற்று வினைமுற்றுப் பொதுவிதியாற் பெயருடன் முடிவதன்றி வினையுடனுமுடியும். எ - று. முடியும் என்பது முடிம் என்றாயிற்று.

'மாரெதிர்வும் பாந்தஞ் செலவொடு வரவும்' எனப் பதவியலுட காலங்கூறினமையால் இவ்விருவிகுதியுங் குறிப்புவினைமுற்றிலே வாராவெனவும், மார்வினையுடனு முடியுமென்றதினால் இதற்குப்பொதுவிதிமேற் சிறப்புவிதி கூறினாரெனவுங் கொள்க.

(வரலாறு.)

| இ. தெரி. | நி. தெரி. | எ. தெரி. | குறி. | |
|---|---|---|---|---|
| நடந்தனர் | நடக்கின்றனர் | நடப்பர் | குழையர் | } அவர். |
| நடந்தார் | நடக்கின்றார் | நடப்பார் | குழையார் | |

நடப்ப, எய்துப, மொழிப அவர் எனப் பகரவிகுதி வரும்.

"பெரிய வோதினுஞ் சிறியவுணராப், பீடின்று பெருகியதிருவிற், பாடின்மன்னரைப் பாடன்மாரெமரே" என மாரீற்று வினைமுற்றுப்பெயருடன் முடிந்தது. பாடன்மார் என்பது பாடுவாரல்லர் எனப் பொருள்படும்; அல் எதிர்மறையிடைநிலை.

"ஆர்த்தார் கொண்மார் வந்தார்" என மாரீற்று வினைமுற்று வினையொடுமுடிந்தது. கொண்மார் என்பது கொள்வார் எனப் பொருள்படும்.

இம்மார் வினைகொண்டுமுடிதலை வினைமுற்று வினையெச்சமென்றால் என்னெனின், வினைமுற்றியவழி அதற்குஇயைந்த பெயர்ப்பயனிலை வாராமல் இயையாத வினைவந்தால் அதற்கு இயையவினைமுற்று வினையெச்சமாயிற்றெனப்படும்; இந்த மாரீற்று வினைமுற்றிற்குப் பெயர்போல வினையும் இயைந்துவருதலால் முற்று எச்சமாயினதன்று முற்றேயாமென்க. பின்வருஞ் 'செய்கெனொருமையுஞ் செய்குமென் பன்மையும்' என்னும் முற்றுக்களும் இவ்வாறு நின்றனவெனக்கொள்க. (சூ) "காலமொடு கருதவரினு மாரை, மேலைக் கிளவியொடு வேறுபாடின்றே." என்றார் ஆசிரியர் அகத்தி

Digitized By Roja Muthiah Research Library

யனார். (சூ) "மாரைக் கிளவியும் பல்லோர் படர்க்கை, காலக் கிளவி யொடு முடியுமென்ப." என்றார் ஆசிரியர் தொல்காப்பியனாரும் எனக்கா ண்க. (அ)

[ஒன்றன்பாற்படர்க்கை வினைமுற்று.]

௯௨அ. துறடுக் குற்றிய லுகர வீற்ற
ஒன்றன் படர்க்கைடுக் குறிப்பி னாகும்.

இ - ள். து று டுக் குற்றியலுகர ஈற்ற - து று டு என்னுமூன்றுவி குதிகளையும் இறுதியிலுடைய குற்றியலுகரவீற்றுமொழிகள்,—ஒன்றன்ப டர்க்கை - அஃறிணையொன்றன்பாற் படர்க்கை வினைமுற்றுங் குறிப்புமு ற்றுமாம்,—டுக்குறிப்பின் ஆகும் - இவற்றுள் டுவ்விகுதி குறிப்புவினைமு ற்றிலன்றித் தெரிநிலைவினை முற்றில் வாராது. எ - று.

துவ்விகுதி இறந்தகாலவிடைநிலையோடு மாத்திரங் கூடிவருமெனக் கொள்க.

| இ. தெரி. | நி. தெரி. | எ. தெரி. | குறி. | |
|---|---|---|---|---|
| நடந்தது | நடக்கின்றது | நடப்பது | குழையது | அது. |
| கூயிற்று | ——— | ——— | அற்று | |
| ——— | ——— | ——— | பொருட்டு | |

றுவ்விகுதி, வந்தன்று, உண்டன்று, சென்றன்று எனத் தடறவொற்றி டைநிலைகளின்முன்னும், புக்கன்று, விட்டன்று, பெற்றன்று என விகாரப் பட்டிறந்தகாலங்காட்டும் கு டு று வீற்றுப் பகுதிகளின் முன்னும், அன்சா ரியைபெற்றுவரும். இவை, முறையே வந்தது, உண்டது, சென்றது, புக்க து, விட்டது, பெற்றது எனப் பொருள்படும். றுவ்விகுதி, கூயிற்று, ஓடிற் றுஎன இன்னிடைநிலையின்முன் மாத்திரஞ் சாரியை பெறாதுவரும். தந்தி ன்று என றுவ்விகுதி தகரவிடைநிலையின்முன் இன் சாரியை பெற்றதன் றோ எனின்; அன்று. அது தந்தன்று என்னும் உடன்பாட்டுவினையை மறு த்தற்குத் தகரவிடைநிலைக்கும் றுவ்விகுதிக்கும் இடையே இல்லென்னும் எ திர்மறையிடைநிலை ஏற்றுவந்த மறைவினையென்றறிக. தந்தின்று - தந்தது இல்லையெனப் பொருள்படும்.

அற்று, இற்று, எற்று என்பவை, சுட்டினும் வினாவினும் வந்த வினைக் குறிப்புமுற்றுக்கள். அத்தன்மைத்து, இத்தன்மைத்து, எத்தன்மைத்து என ப் பொருள்படும்.

பதவியலில் 'டவ்வொடு கழிவும்' என்றதினால் டுகரவிகுதி காலங்கா ட்டுமெனக் கூறியிருக்கவும் டுக்குறிப்பினாகுமென்று இங்கே டுகரவிகுதி யைக் குறிப்புவினைக் குபயோகித்ததென்னையெனின்; அப்படியன்று. டவ் வொடுகழிவுமெனக் கூறிய டுகரம் காலங்காட்டித் தன்மைவினைமுற்றில்வந் தது. இது காலங்காட்டாமற் படர்க்கையிலே வந்த டுகரமென்க. இவை தம்முள்வேற்றுமை.

Digitized By Roja Muthiah Research Library

[பலவின்பாற்படர்க்கைவினைமுற்று.]

௩உகூ. அ ஆ ஈற்ற பலவின் படர்க்கை
ஆவே யெதிர்மறைக் கண்ண தாகும்.

இ-ள். அ ஆ ஈற்ற - அ ஆ என்னும் இருவிகுதிகளை யிறுதியிலுடைய மொழிகள், — பலவின் படர்க்கை - அஃறிணைப் பலவின்பாற் படர்க்கைவினைமுற்றுங் குறிப்புமுற்றுமாம், — ஆ எதிர்மறைக்கண்ணது ஆகும் - அவற்றுள் ஆகாரம் எதிர்மறையினிடத்து வருமன்றி உடன்பாட்டினிடத்துவாராது. எ - று.

ஆவேயெதிர்மறைக் கண்ணதாகும் என்றதனால், மற்றவிகுதி உடன்பாட்டிலும் எதிர்மறையிலும் வருமென்பது பெறும்.

அகரவிகுதி அன்சாரியைபெற்றும் பெறாதும் வரும்.

| இ. தெரி. | நி. தெரி. | எ. தெரி. | குறி. | |
|---|---|---|---|---|
| நடந்தன | நடக்கின்றன | நடப்பன | கரியன | அவை. |
| நடந்த | நடக்கின்ற | நடப்ப | கரிய | |

நடந்தில, நடவாநின்றில, நடவா — அவை.

இல்லன, இல்ல என்னும் எதிர்மறைவினைக்குறிப்புமுற்றின்கட் பகுதியே எதிர்மறைப்பொருள்தந்து நிற்றலின், இதற்கெதிர்மறையாகாரம் வேண்டாமையின், ஏற்புழிக்கோடலென்னுமுத்தியால், இவ்வெதிர்மறை விகுதி தெரிநிலைக்கே கொள்க.

இங்கே காட்டிய அன்பெறாத நடப்ப என்னும் பல வறிசொல்லின் இறுதிநோக்கி, உயர்திணைப்பன்மைப்படர்க்கைக்கும் அஃறிணைப்பன்மைப்படர்க்கைக்கும் பொதுவினையெனக் கொள்ளாதொழிக. இதனுட் பகரவொற்று எதிர்காலவினை. யிடைநிலையாதலால், இத்தொடக்கத்தனவெல்லாம் பலபொருளொருசொல்லென்றுணர்க.

இனி ஆசிரியர் தொல்காப்பியனார் (சூத்திரம்.) "அ ஆ வ என வருஉமிறுதி, யப்பான்மூன்றேபலவற்றுப்படர்க்கை." என வகர வுயிர்மெய்யு முடன்கூறினார். அதை யிவர் அகரஈற்றுள் அடக்கி வகரவொற்றை யிடைநிலையாகக் கொண்டார். (௯௦)

[இருதிணைப் பொதுவினை.]

௩௩௦. தன்மை முன்னிலை வியங்கோள் வேறிலை
உண்டு ரெச்ச மிருதிணைப் பொதுவினை.

இ-ள். தன்மை - தன்மைவினை வினைக்குறிப்புமுற்றுக்களும், — முன்னிலை — முன்னிலைவினை வினைக்குறிப்புமுற்றுக்களும், — வியங்கோள் - வியங்கோள்வினைமுற்றுக்களும், — வேறு இலை உண்டு - வேறு இல்லை உண்டு

Digitized By Roja Muthiah Research Library

என்னு மூன்று வினைக்குறிப்புமுற்றுக்களும், — ஈரெச்சம் - பெயரெச்சவினை வினைக்குறிப்புக்களும் வினையெச்சவினை வினைக்குறிப்புக்களும், — இருதிணைப் பொதுவினை - உயர்திணை அஃறிணை என்னும் இருதிணைக்கும் பொதுவினைகளாம். எ - று.

செய்யுமென்னும் பெயரெச்சமே செய்யுமென்னு முற்றாதலால், அம்முற்றும் இருதிணைப் பொதுவினையாமென்பது தோன்றுதல் காண்க. அது 'பல்லோர்படர்க்கை முன்னிலைதன்மையிற் செல்லாதாகுஞ் செய்யுமென்முற்றே' என்பதனாற் பின் விளக்கப்படுமாயினும் ஈண்டுக் கூறிய பொதுவினைகளோடு எடுத்தோதாதது இருதிணையிலும் வருதற்கண் சிறிது குறைவுடைமையாலென்றும், அக்குறைவு உயர்திணைப்பன்மையில் வரயாட்டாமையென்றும் அறிக.

பொதுவினையெனப் பிற்கூறியதினாலே, முன்னே தன்மைமுன்னிலை என்றது முற்றுவினைகளையெனக் கொள்க. (௧௧)

[தன்மையொருமைவினைமுற்று]

௩௩௧. குடுதுறு வென்னுங் குன்றிய லுகரமோ
டல்லன் னென்னே னாகு மீற்ற
இருதிணை முக்கூற் றொருமைத் தன்மை.

இ - ள். கு டு து று என்னும் குன்றியலுகரமோடு - கு டு து று என்னுங் குற்றியலுகர விகுதிகளும், — அல் அன் என் ஏன் ஆகும் - அல் அன் என் ஏன் என்னும் நான்குமெய்யீற்று விகுதிகளும் ஆகிய, — ஈற்ற - இவ்வெட்டுவிகுதிகளையும் இறுதியிலேயுடைய மொழிகள், — இருதிணை முக்கூற்று ஒருமைத் தன்மை - இருதிணையிடத்தனவாகிய ஒருவன ஒருத்தி ஒன்று என்னு மூன்றுபால்களுக்கும் பொதுவாகிய ஒருமைத்தன்மை வினைமுற்றுங் குறிப்புமுற்றுமாம். எ - று.

கு டு து று என்னுநான்குந் தாமே காலங்காட்டுதலால் தன்மைக்குறிப்புவினைக்கு வாரா. அல்விகுதி தன்மையில் நிகழ்கால எதிர்காலவிடைநிலைகளோடு மாத்திரம்வரும். கு டு து று வை ஒடு என்பதனாற் பிரித்தது குறிப்புவினையில் வராமைபற்றியாம்.

(வரலாறு.)

| இ. தெரி. | எ. தெரி. | |
|---|---|---|
| ——— | உண்கு | யான். |
| உண்டு | ——— | |
| வந்து | வருது | |
| சென்று | சேறு | |
| ——— | உண்டல் | |

Digitized By Roja Muthiah Research Library

| இ. தெரி. | நி. தெரி. | எ. தெரி. | குறி. | |
|---|---|---|---|---|
| ——— | உண்ணாநிற்பல் | உண்பல் | ——— | யான். |
| உண்டனன் | உண்ணாநின்றனன் | உண்பன் | தாரினன் | |
| உண்டனென் | உண்ணாநின்றனென் | உண்பென் | தாரினென் | |
| உண்டேன் | உண்ணாநின்றேன் | உண்பேன் | தாரினேன் | |

அல்விகுதி பகர வகர இடைநிலைபெற்றுப் பெரும்பாலும் எதிர்காலத்தும், உண்ணாநிற்பல் எனச்சிறுபான்மை நிகழ்காலத்தும் வருதலறிக.

இனி ஆசிரியர் தொல்காப்பியனார் (சூத்திரம்.) "கடதறவென்னும், அந்நான்கூர்ந்தகுன்றியலுகரமோ, டென்னேனல்லெனவருஉமேழுந், தன்வினையுரைக்குந்தன்மைச்சொல்லே." என அன்விகுதியின்றிக் கூறினார் அக்காலத்து வழங்காததினால்; இக்காலத்து வழங்கிவருதலால் இவரதனைக்கூட்டிக்கூறினாரென்றறிக. (சஉ)

ஙஙஉ. அம்மா மென்பன முன்னிலை யாரையும்
எம்மே மோமிவை படர்க்கை யாரையும்
உம்மூர் கடதற விருபா லாரையுந்
தன்னொடு படுக்குந் தன்மைப் பன்மை.

இ - ள். தன்னிலையின் நிற்பதன்றி — அம் ஆம் என்பன முன்னிலை யாரையும் - அம் ஆம் என்னும் இவ்விரு விகுதிகளையும் இறுதியிலுடைய மொழிகள் முன்னிலையிடத்தாரையும், — எம் ஏம் ஓம் இவை படர்க்கையாரையும் - எம் ஏம் ஓம் என்னும் இம்மூன்றுவிகுதிகளையும் இறுதியிலுடைய மொழிகள் படர்க்கையிடத்தாரையும், — உம் ஊர் க ட த ற இருபாலாரையும் - கும் டும் தும் றும் என்னும் இந்நான்குவிகுதிகளையும் இறுதியிலுடைய மொழிகள் முன்னிலை படர்க்கை என்னும் ஈரிடத்தார்களையும், — தன்னொடு படுக்குந் தன்மைப்பன்மை — தன்னுடன் கூட்டும் உளப்பாட்டுத் தன்மைப் பன்மைவினைமுற்றுங் குறிப்புமுற்றுமாம். எ - று.

கும் டும் தும் றும் என்னுநான்குந் தாமே காலங்காட்டுதலாற் குறிப்புவினைக்கு வாரா.

(வரலாறு.)

| இ. தெரி. | நி. தெரி. | எ. தெரி. | குறி. | |
|---|---|---|---|---|
| உண்டனம் | உண்கின்றனம் | உண்பம் | தாரினம் | யாம். |
| உண்டாம் | உண்கின்றாம் | உண்பாம் | தாரினாம் | யானுநீயும். |
| உண்டனெம் | உண்கின்றனெம் | உண்பெம் | தாரினெம் | யாம். |
| உண்டேம் | உண்கின்றேம் | உண்பேம் | தாரினேம் | யானுமவனும். |
| உண்டோம் | உண்கின்றோம் | உண்போம் | தாரினோம் | |

Digitized By Roja Muthiah Research Library

| இ. தெரி. | எ. தெரி. | |
|---|---|---|
| ——— | உண்கும் | யாம். |
| உண்டும் | ——— | யானுநீயுமனும். |
| வந்தும் | வருதும் | |
| சென்றும் | சேறும் | |

இவை சிறுபான்மை இந்நியதியின்றி மயங்கிவருதலுமுண்டு. மற்றவைகளும் இப்படியே வரும்.

இனி, ஆசிரியர் தொல்காப்பியனார் (சூத்திரம்.) "அவைதாம், அம் ஆம் எம் ஏம் என்னுங்கிளவியு, மும்மொடுவரூஉங்கடதறவென்னு, மந்நாற்கிளவியோடாயெண்கிளவியும், பன்மையுரைக்குந்தன்மைச்சொல்லே." என, ஓம்விகுதியின்றிக் கூறியதற்கும் இவர் கூட்டிக்கூறியதற்கும் மேலேயுரைத்தவாறு உரைத்துக்கொள்க.

சொல்லுவோர் தன்மையிடம், கேட்போர் முன்னிலையிடம், சொல்லப்படுவோர் படர்க்கையிடம் என்று இலக்கணநூல்கள் கூறுதலாலே; தன்மையோடு மற்ற இடங்களில் ஒன்றும் பலவுங் கலந்து தன்மைப்பன்மையுண்டாகுமன்றிக் கலப்பின்றித் தன்மைப்பன்மை யுண்டாகமாட்டாதென்றுணரல்வேண்டும்.

எங்ஙனமாயின், வந்தாம், வந்தோம், வந்தும் என்னும்போது, அச்சொல்லைக் கூறினவர் ஒருவரே. அவர் முன்னிலையிடத்தவரையேனும் படர்க்கையிடத்தவரையேனும் அவ்வீரிடத்தவரையுமேனுஞ் சேர்த்துக்கொண்டே அங்ஙனங்கூறியதென்று விளங்கல் வேண்டும். அல்லாவிடின் தன்மையிடத்திலக்கணஞ் சிதைவுறுதலோடு உத்தி அநுபவங்களுக் கியையாமையுங் காண்க. ஆதலின் இடக்கலப்புற்றே தன்மைப்பன்மையுண்டாகுமென்பது விளங்கத் தன்னொடு படுக்குந் தன்மைப்பன்மையென்று வராலாறுதோன்றச் சூத்திரித்தனரென்றறிக. இன்னுமிதன்திறமெல்லாம் விரிக்கிற்பெருகும். இக்கருத்து இந்நன்னூற்சூத்திரத்திற்குப் புதிதாயினும் உத்தியனுபவங்களுக் கியைந்ததோ இயையாததோஎன்று விவேகிகள் உற்றுநோக்கிக் கொள்ளத்தகுவதேற் கொள்ளுக. "அவைதாம், அம் ஆம் எம் ஏம் என்னுங் கிளவியும்" என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்திற்குச் சேனாவரையர் உரைத்த விசேடஉரைப்பாகம் நோக்கியும் உணர்க. அவ்வுரைப்பாகமாவது "தனக்குஒருமையல்லதின்மையிற் றன்மைப்பன்மையாவது தன்னொடு பிறரை உளபடுத்ததேயாம். அவ்வுளப்படுத்தன் மூவகைப்படும்; முன்னின்றாரை உளப்படுத்தலும், படர்க்கையாரை உளப்படுத்தலும், அவ்விருவரையும் ஒருங்குளப்படுத்தலுமென" என்பதாம். (௧௫)

[வினையுடனுமுடியுந்தன்மை வினைமுற்றுக்கள்.]

௫௫௫. செய்கெ னொருமையுஞ் செய்குமென் பன்மையும்
வினையொடு முடியினும் விளம்பிய முற்றே.

Digitized By Roja Muthiah Research Library

இ - ள். செய்கு என் ஒருமையும் - செய்கெனனுந் தன்மையொருமைமுற்றும்,—செய்கும் என் பன்மையும் - செய்குமென்னுந் தன்மைப்பன்மைமுற்றும்,—வினையொடும் முடியினும் - பெயருடனேயன்றி வினையொடும் முடியினும்,—விளம்பிய முற்றே - முன்சொல்லப்பட்ட முற்றுக்களேயாம். எ - று.

வ - று. உண்குவந்தேன். உண்கும்வந்தேம் எனவரும். இங்ஙனமாயின், உண்பேன்வந்தேன், உண்பேம்வந்தேம் என இவையும் வினையொடுமுடியுமென்றால், என்னெனின், அவை பெயரொடும் வினையொடும் முடிதல் மரபாயினாற்போல இவையங்ஙனமுடிதல், மரபன்றென்க. ஆசிரியர் தொல்காப்பியனார் (சூத்திரம்.) "அவற்றுட் செய்கெனொருமைவினையொடுமுடியினு, மவ்வியறிரியாதென்மனார்புலவர்." என ஒருமைக்கே கூறினார். இவர் பன்மைக்குங் கூறியது ஒருமொழியொழிதன்னினங்கொளற்குரித்தென்பதனாற் போலும். இவ்வழக்கு இக்காலத்தரிதாயிற்று. (௧௪)

[உளப்பாட்டுப் பன்மைமுன்னிலை.]

௩௩௪. முன்னிலை கூடிய படர்க்கையு முன்னிலை.

இ - ள். தன்மையோடு கூடிய முன்னிலைப்படர்க்கைகள் தன்மையானாற்போல—முன்னிலை கூடிய படர்க்கையும் முன்னிலை - முன்னிலையோடுகூடிய படர்க்கையும் முன்னிலைப் பன்மைவினைமுற்றுங் குறிப்புமுற்றுமாம். எ - று.

(வரலாறு.)

| | | |
|---|---|---|
| உண்டனிர் | குழையினிர் | நீயுமவனும். |
| உண்டீர் | குழையீர் | |
| உண்மின் | ——— | |

இச்சூத்திரம் முன்னிலைப் பன்மைமுற்றுக் கூறியவழியே கூறுது, ஒன்றினமுடித்தறன்னினமுடித்தல் என்னுமுத்தியால், இங்கே கூறப்பட்டது. தன்மையிடப்பொருளும் முன்னிலையிடப்பொருளுங் கலப்புறினும், தன்மையிடப்பொருளும் படர்க்கையிடப்பொருளுங் கலப்புறினும், மூவிடப்பொருளுங் கலப்புறினுந் தன்மைப்பன்மையாய் முடிதல்போல; முன்னிலையிடப்பொருளொடு படர்க்கையிடப்பொருள் கலப்புறின் முன்னிலையாய் முடிவுறுமென் றறிவித்தற்கு இறந்ததுதழீஇய எச்சவும்மைகொடுத்துப்படர்க்கையும் முன்னிலையென்றார். (௧௫)

[முன்னிலையொருமை வினைமுற்று.]

௩௩௫. ஐயா யிகர வீற்ற மூன்றும்
ஏவலின் வருஉ மெல்லா வீற்றவும்
முப்பா லொருமை முன்னிலை மொழியே.

Digitized By Roja Muthiah Research Library

இ-ள். ஐ ஆய் இகர ஈற்ற மூன்றும் - ஐ ஆய் இ என்னுமூன்று விகுதிகளை இறுதியிலுடைய மொழிகளும்,—ஏவலின் வரூஉம் எல்லா ஈற்றவும் - விகுதி குன்றுதுங் குன்றியு நிற்பனவாகிய ஏவலிலே வரும் இருபத்துமூன்றீற்றுமொழிகளும்,—முப்பால் ஒருமை முன்னிலைமொழி - ஒருவன் ஒருத்தி ஒன்று என்னு மூன்றுபால்களுக்கும் பொதுவாகிய முன்னிலையொருமை வினைமுற்றுங் குறிப்புமுற்றுமாம். எ - று.

இகரவிகுதி எதிர்காலத்தை இடைநிலையின்றித் தானே காட்டுதல் பதவியலிற் பெறப்பட்டது.

ஏவல்வினைமுற்றுத் தெரிநிலைவினையொன்றற்கே யுரிமையின், உம்மைகொடுத்துப் பிரித்தார்.

(வரலாறு.)

| இ. தெரி. | நி. தெரி. | எ. தெரி. | குறிப். | |
|---|---|---|---|---|
| உண்டனை | உண்கின்றனை | உண்பை | குழையினை | நீ. |
| உண்டாய் | உண்கின்றாய் | உண்பாய் | குழையாய் | |
| உண்டி | உண்ணாநின்றி | சேறி | வில்லி | |

நட, வா, விடு, வை, உண், பார், செல், வாழ், கேள் } நீ. (என்று ஆய்விகுதிகுன்றிவந்த) ஏவல்வினைமுற்றுக்காண்க.

அல், ஏல், ஆல் என்னும் மூன்றுவிகுதிகளும் எதிர்மறையிடத்துவரும் ஏவல் ஒருமைவினைமுற்றுக்களாம்.

(வரலாறு.)

உண்ணல் உண்ணேல் மறால் } நீ.

எதிர்மறையேவலொருமை வினைமுற்றுக்கள், உண்ணாதே, உண்ணாதி என, எதிர்மறை ஆகாரவிடைநிலையின்முன் தகரவெழுத்துப் பேற்றோடு, ஏகாரவிகுதி இகரவிகுதிகளுள் ஒன்று பெற்றும்வரும்.

இவர் விகுதிகுன்றிய நடவாமுதலிய ஏவல்வினைகளை முன்னிலைவினைமுற்றென்றது ஆசிரியர் தொல்காப்பியனார்க்கு உடன்பாடன்றென்பதை, (சூத்திரம்.) "அவற்றுண்முன்னிலைக்கிளவி, இ ஐ ஆ யெனவரூஉமூன்றும், மொப்பத்தோன்று மொருவர்க்கு மொன்றற்கும்." என அவர் கூறிய இச்சூத்திரத்தாற்காண்க. (கரு)

௩௩௬. முன்னிலை முன்ன ரீயு மேயும்
அந்நிலை மரபின் மெய்யூர்ந்து வருமே.

இ-ள். முன்னிலைமுன்னர் - முன்னிலையேவன்முற்றென் முன்சொல்லப்பட்டவற்றிற்குமுன்,—ஈயும் ஏயும் - ஈகாரமும் ஏகாரமும்,—அந்நிலை மரபின் மெய் ஊர்ந்து வரும் - அவ்விடத்து நிற்றற்குரிய மரபினையுடைய யாதானுமொரு மெய்யை யூர்ந்துவரும். எ - று.



Digitized By Roja Muthiah Research Library

வ - று. "சென்றீ பெருமநிற் றகைக்குநர் யாரே." எ - ம். "அட்டிலோலை தொட்டனையின்மே." எ - ம். வரும். இவ்வீகார ஏகாரங்கள் விகுதிகளல்ல; ஆய்விகுதிகுறைந்த ஏவலில்வரும் முன்னிலையசையாம். இங்கே, ஈயும் ஏயும் முறையே றகரவொற்றையும் மகரவொற்றையும் ஊர்ந்துவந்தன. றகரவொற்றும் மகரவொற்றும் எழுத்துப்பேறு. (கஎ)

[முன்னிலைப்பன்மைவினைமுற்று.]

௩௩௭. இர் ஈ ரீற்ற விரண்டு மிருதிணைப்
பன்மை முன்னிலை மின்னவற் றேவல்.

இ - ள். இர் ஈர் ஈற்ற இரண்டும் - இர் ஈர் என்னும் இரண்டு விகுதிகளையும் இறுதியிலுடைய மொழிகள்,— இருதிணைப் பன்மை முன்னிலை - இருதிணைக்கும் பொதுவாகிய பன்மை முன்னிலை வினைமுற்றுங் குறிப்புமுற்றுமாம்,— மின் அவற்று ஏவல் - மின் என்னும் விகுதியை ஈறாகவுடைய மொழிகள் அவ்விருதிணைப் பன்மைமுன்னிலையேவன்முற்றும். எ - று.

மின்னவற்றேவல் என்றதினால் மினவிகுதி குறிப்புவினையில் வாராதெனக் கொள்க. முன்னிலையேவற்பன்மைக்கு, ஈர் என்னும் விகுதியும், புதியனபுகுதலால் உம் என்னும் விகுதியும் வருமெனக் கொள்க.

(வரலாறு.)

| இ. தெரி. | நி. தெரி. | எ. தெரி. | குறி.ப் | |
|---|---|---|---|---|
| உண்டனிர் | உண்கின்றனிர் | உண்பிர் | குழையினிர் | } நீர். |
| உண்டீர் | உண்கின்றீர் | உண்பீர் | குழையீர் | } |

உண்மின், உண்ணீர், உண்ணும் என ஏவல்வினைமுற்றுவந்தன. (கஅ)

[வியங்கோள்வினைமுற்று]

௩௩௮. கயவொடு ரவ்வொற் றீற்ற வியங்கோள்
இயலு மிடம்பா லெங்கு மென்ப.

இ - ள். கய வொடு ரவ்வொற்று ஈற்ற வியங்கோள் - கயவென்னும் இரண்டுயிர்மெய்யினையும் ரகரமெய்யினையும் இறுதியிலுடைய மொழிகள் வியங்கோண்முற்றுக்களாம்,— இடம் பால் எங்கும் இயலும் என்ப — அவை மூன்றிடங்களிலும் ஐம்பால்களிலுஞ் செல்லும் என்று சொல்லுவர் புலவர்.

(வரலாறு.)

| | | | |
|---|---|---|---|
| வாழ்க | உண்க | ஆடுக | } யான், யாம், நீ, நீர், |
| வாழிய | உண்ணிய | ஆடிய | } அவன், அவள், அவர், அது, அவை. |
| வாழியர் | உண்ணியர் | ஆடியர் | } |

உரையிற்கோடலென்னுமுத்தியால், "நான்மறையறங்களோங்க நற்றவம்வேள்விமல்க." "மக்கட்பதடியெனல்." "மனத்துக்கண்மாசிலனாதல்."

Digitized By Roja Muthiah Research Library

என அ, அல், தல், என்பனவும் வியங்கோள்விகுதிகளாய் வருமெனக் கொள்க.

வியங்கோள்வினைமுற்று: "ஆறிருதடந்தோள்வாழ்கவறுமுகமவாழ்க" என வாழ்த்துதற்பொருளிலும், நடக்க, வருக, உண்க என உயர்ந்தோன் இழிந்தோனை இன்னது செய்கவென விதித்தற்பொருளிலும், "போற்றிய ருளுகநின்னடியாம்பாதமலர்" என வேண்டிக்கோடற்பொருளிலும், "பரந்து கெடுகவுலகியற்றியான்" என வைதற்பொருளிலும் வருமெனக் காண்க. விதித்தற்பொருள் தன்மையில் வாராது.

கயவொடு ரவ்வொற்றென்று ஒடுக்கொடுத்தது க ய என்பன உயிர்மெய்யென்பதும், பின்பு ய ஒடு ரவ்வொற்றென்று கொண்டு (தனியே ரகர வொற்று வருவதன்று) யகரத்தைச் சார்ந்துவரும் ரகரவொற்றென்பதும் அறிவித்தற்காம்.

வியங்கோள் என்பதும் ஏவல் என்பதுஞ் சொற்பொருளால் ஒக்குமாயினும், ஐம்பால் மூவிடங்களிலுஞ் செல்வதை வியங்கோள் என்பதும் முன்னிலையொன்றற்கே யுரியதை ஏவலென்பதும் தொன்னெறிமரபெனக் காண்க. (௧௯)

[வேறு, இல்லை, உண்டு.]

௩௩௯. வேறில்லை யுண்டைம் பான்மூ விடத்தன.

இ-ள். வேறு இல்லை உண்டு - வேறு இல்லை உண்டு என்னுமூன்று வினைக்குறிப்பு முற்றுக்களும்,—ஐம்பால் மூவிடத்தன - ஐம்பாலுக்கும் மூவிடத்திற்குமுரியனவாம். எ - று.

வ - று. யான்வேறு, யாம்வேறு, நீவேறு, நீர்வேறு, அவன்வேறு, அவள் வேறு, அவர்வேறு, அதுவேறு, அவைவேறு; இல்லை உண்டு என்பவற்றையும் மூவிடப்பெயர்களோடும் ஒட்டுக. இல்லை என்பது சிறுபான்மை இல் என நிற்றலுமுண்டு.

இனி, மொழிந்தபொருளோடொன்ற வவ்வயின் மொழியாததனையு முட்டின்றுமுடித்தலென்னுமுத்தியால், வேண்டும், தகும், படும் என்னுஞ் சொற்களும் ஐம்பான்மூவிடத்துக்கும் பொதுவாமெனக் கொள்க. இம்மூன்றும் ஒருபொருட்சொற்களாய்த் தொழிற்பெயராய்த் தோற்றப் பொருள்பட்டேநிற்கும்.

வ - று. அவரோதல்வேண்டும்; நீ போதல்வேண்டும்; யானுண்ணல்வேண்டும். எ - ம். இச்சோறுண்ணத்தகும்; இவராலிக்காரியஞ் செய்யத்தகும். எ - ம். வஞ்சரையஞ்சப்படும்; "கற்றறிந்தோரைத்தலைநிலத்து வைக்கப்படும்." எ - ம். வரும்.

(சூத்திரம்.) "வேறிலையுண்டியார் வேண்டுந்தகும்படும், வினைபெயரெச்சம் வியங்கோள்பத்துந், திணைபாலிடமெலாஞ் செல்லுமென்ப." என்று இலக்கணக்கொத்துக் கூறியதுங்காண்க. (௨௦)

Digitized By Roja Muthiah Research Library

**பரீக்ஷைவினாக்கள்:**—755. முற்றுவினைகளாவன யாவை? 756. தெரிநிலை வினைமுற்றுச்சொல் ஒவ்வொன்றெத்தனைவகையாம்? 757. எப்படி இருபத்தேழாம்? 758. ஒருவினைப்பகுபதமே இடத்தினாலுங் காலத்தினாலும் இருபத்தேழாதற்குக் காரணமெப்படி? 759. திணைபாலிடங்களில் ஒன்றற்குரிய வினைகள் யாவை? 760. அவைகளுள், உயர்திணையாண்பாற்படர்க்கைவினைமுற்றுக்கள் யாவை? 761. உயர்திணைப் பெண்பாற்படர்க்கைவினைமுற்றுக்கள் யாவை? 762. உயர்திணைப் பலர்பாற்படர்க்கைவினைமுற்றுக்கள் யாவை? 763. அஃறிணையொன்றன்பாற்படர்க்கைவினைமுற்றுக்கள்யாவை? 764. து று டு என்னுமூன்றுவிகுதியுந் தெரிநிலைவினைகுறிப்புவினையிரண்டினும் வருமோ? 765. றுவ்விகுதி எல்லாவிடைநிலையோடுங் கூடிவருமோ? 766. றுவ்விகுதி எவ்வெவ்விடத்துவரும்? 767. அஃறிணைப் பலவின்பாற்படர்க்கைவினைமுற்றுக்கள் யாவை? 768. திணைபாலிடங்களுட் பலவற்றிற்குப் பொதுப்படவரும் வினைச்சொற்களெவை? 769. இருதிணைப்பொதுவினை இவைகளேயன்றி வேறில்லையோ? 770. அவற்றுள், தன்மையொருமைவினைமுற்றுக்கள் யாவை? 771. இவ்விகுதிகளெல்லாந் தெரிநிலைவினை குறிப்புவினையிரண்டினும்வருமோ? 772. அல் அன் என் ஏன் என்னு நான்குவிகுதியும் எல்லாவிடைநிலைகளோடுங் கூடிவருமோ? 773. தன்மைப்பன்மைமுற்றுக்கள் யாவை? 774. இவ்விகுதிகளெல்லாந் தெரிநிலைவினை குறிப்புவினையிரண்டினும் வருமோ? 775. பெயருடனன்றி வினையுடனுமுடியுமுற்றுவினை யில்லையோ? 776. முன்னிலையோடு கூடிய படர்க்கை எவ்விடத்ததாம்? 777. முன்னிலையொருமை வினைமுற்றுக்கள் யாவை? 778. முன்னிலையொருமைவினைமுற்றில் ஏவல்வினைமுற்றுக்கள் யாவை? 779. சென்றீ, நின்மே என்னும் ஏவல்வினைமுற்றுக்களில் ஈற்றினிற்பன விகுதிகளல்லவோ? 780. முன்னிலைப் பன்மை வினைமுற்றுக்கள் யாவை? 781. முன்னிலைப்பன்மைவினைமுற்றுக்களில் ஏவல்வினைமுற்றுக்கள் யாவை? 782. வியங்கோள்வினைமுற்றுக்கள்யாவை? 783. இவைஎவ்விடங்களில் எப்பால்கட்குப் பொதுவாய்வரும்? 784. வியங்கோண்முற்றுக்கு இவ்விகுதிகளன்றி வேறுவிகுதிகள் இல்லையோ? 785. இவ்வியங்கோள் எவ்வெப்பொருளில் வரும்? 786. வேறு இல்லை உண்டு என்பன எவ்வாறு பொதுப்படவரும்? 787. இவைபோல் ஐம்பான்மூவிடங்கட்கும் பொதுவாவன மற்றுமுண்டோ? 788. இம்மூன்றும் எவ்வகைச்சொல்லாய் எப்பொருள்பட்டுநிற்கும்?

## பெயரெச்சம்.

[பெயரெச்சம் இனையவென்பது.]

கூசo. செய்த செய்கின்ற செய்யுமென் பாட்டிற்
காலமுஞ் செயலுந் தோன்றிப் பாலொடு

Digitized By Roja Muthiah Research Library

செய்வ தாதி யறுபொருட் பெயரும்
எஞ்ச நிற்பது பெயரெச் சம்மே.

இ - ள். செய்த செய்கின்ற செய்யும் என் பாட்டில் - செய்தவென்றுஞ் செய்கின்றவென்றுஞ் செய்யுமென்றுஞ் சொல்லப்படும் மூவகைச் சொற்களிலே, — காலமுஞ் செயலுந் தோன்றி - முறையே இறப்பு நிகழ்வு எதிர்வு என்னு மூன்று காலங்களுந் தொழிலுந் தோன்றி, — பாலொடு - வினைமுற்றுதற்கு வேண்டும் பாலொன்றுந் தோன்றாது அப்பாலுடனே, — செய்வது ஆதி அறுபொருட்பெயரும் - செய்பவன் கருவி நிலம் செயல் காலம் செயப்படுபொருள் என்னும் அறுவகைப் பொருட்பெயர்களும், — எஞ்சநிற்பது பெயரெச்சம் - ஒழியநிற்பன பெயரெச்சவினைவினைக்குறிப்புக்களாம். எ - று.

நிற்பதென்பது தொகுதியொருமை.

ஏற்புழிக்கோடலால், தோன்றியென்பதுவரைக்குந் தெரிநிலைவினையுடன்பாட்டிற்கும், ஒழிந்தவிதி தெரிநிலையுங் குறிப்புமாகிய உடன்பாடெதிர்மறை யிரண்டற்குங் கொள்க.

(வரலாறு.)

| இற. | நிகழ். | எதிர். | | |
|---|---|---|---|---|
| (க) உண்ட | உண்கின்ற | உண்ணும் | சாத்தன் | வினைமுதல். |
| | | | கலம் | கருவி. |
| | | | இடம் | நிலம். |
| | | | உண்ணுதல் | தொழில். |
| | | | நாள் | காலம். |
| | | | சோறு | செயப்படுபொருள். |

(உ) "வேலாண்முகத்தகளிறு"; "மூவிலையவேல்"; உள்ளபொருள், கரியகுதிரை, புதியநட்பு எனக் குறிப்புவினைப் பெயரெச்சம் வரும்.

(ங) உண்ணாதகுதிரை, உண்கலாதகுதிரை, உண்கிலாதகுதிரை என எதிர்மறைத தெரிநிலைவினைப்பெயரெச்சம் வரும்.

(ச) இல்லாதபொருள், அல்லாதகுதிரை என எதிர்மறைக் குறிப்புவினைப் பெயரெச்சம் வரும்.

இங்கே உண்ட என்பது; உணவென்னுந் தொழிலும் இறந்தகாலமுந் தோன்றி, அத்தொழினிகழ்த்துதற்குவேண்டும் பாறோன்றாமையும் அப்பாலுடனே பெயரொழிய நின்றமையுமறிக.

அறுபொருட்பெயரும் என்ற உம்மையால், இன்னதற்கு, இதுபயனென்னும் இருபொருட்பெயர் எஞ்சநிற்பனவும், பிறபெயர் எஞ்சநிற்பனவுங் கொள்க.

வ - று. (க.) களை கட்ட பயிர்; இது இன்னதற்கென்னும் பெயரெஞ்சநின்றது. களை கட்ட கூலி; இது இதுபயனென்னும் பெயரெஞ்ச நின்றது.

Digitized By Roja Muthiah Research Library

(உ.) உண்டவிளைப்பு, ஆறு சென்ற வியர், உண்டவெச்சில். எ-ம். குடிபோனவூர், பழமுதிர்ந்த கோடு. எ-ம். பொன்பெரிய நம்பி, எ - ம். பிறபெயர்களெஞ்ச நின்றன "நின்முகங்காணுமருந்தினேன்" என்புழிக் காட்சியை மருந்தென்றதாகலிற் றொழிற்பெயரெஞ்ச நின்றது. (ஆறு - வழி.)

'காலங்கரந்தபெயரெச்சம்வினைத்தொகை.' எனக் கூறலால், கொல்புலி, அடுகளிறு, வளர்மதி என்பவற்றில் நிலைமொழியும் பெயரெச்சவினையெனக்கொள்க. காலந்தோன்றி என்பது இவற்றிற்குப் பொருந்தாதாயினும், அல்வழியவை பதினான்கனுள்ளே பெயரெச்சத்தொடரும் வினைத்தொகையும் வெவ்வேறாயினும் வினையின் பகுப்பினுள் இது எப்பகுப்பின்பாற்படுமெனிற் பெயரெச்சத்தின்பாற்படுமென்பதே அமைவுடையதாதலா லென்றறிக.

(சூ.) "காலமும் வினையுந் தோன்றிப் பாலோடுளவாது, பெயர்கொள்ளும்மது பெயரெச்சம்மே." என்றார் ஆசிரியரகத்தியனார். (உ.க)

[செய்யுமெனெச்சத்திற்கு எய்தியதன்மேற் சிறப்புவிதி.]

௩௪௧. செய்யுமெ னெச்சவீற் றுயிர்மெய் சேறலுஞ்
செய்யுளு ளும்முந் தாகலு முற்றேல்
உயிரு முயிர்மெய்யு மேகலு முளவே.

இ - ள். செய்யும் என் எச்ச ஈற்று உயிர்மெய் சேறலும் - செய்யுமென்னும் வாய்பாட்டுப் பெயரெச்சத்தினுடைய இறுதியிலுள்ள உயிர்மெய் கெடுதலும்,—செய்யுளுள் உம் உந்து ஆகலும் - செய்யுளிடத்து உம்விகுதி உந்து எனத் திரிதலும்,— முற்றேல் உயிரும் உயிர்மெய்யும் ஏகலும் உள- அது முற்றாயின் அதனிறுதியுயிராயினும் உயிர்மெய்யாயினுங் கெடுதலும் உளவாம். எ - று.

செய்யுமெனெச்சம், செய்யுமென்முற்று இரண்டு செய்யுளுளும்முந்தாம் எனவே, மற்றவிதிகள் வழக்குச்செய்யு ளிரண்டிடத்துமாம் என்பதும், முற்றேல் எனவே, செய்யுமென்னும் பெயரெச்சம்முற்றுவினையுமாம் என்பதும் பெற்றாம்.

வி-றை. (க.) ஆகும்பொருள் - ஆம்பொருள்; போகும்போது - போம்போது என வழக்கினும், "ஆம்பொருள்க ளாதுமவை யார்க்கு மழிப் புண்ணுவாம்" "வாம்புரவி வழுதி" எனச் செய்யுளினும், செய்யுமெனெச்சத்தீற்றுயிர் மெய்கெட்டன. இவை, மகரவொற்று நிற்றலின், வினைத்தொகையாகாவென்க.

(உ.) "தெண்கடற் றிரைமிசைப பாயுந்து;" "நீர்க்கோழி கூப்பெயர்க்குந்து" எனச் செய்யுளிற் பாயும் என்பது பாயுந்து எனவும், கூப்பெயர்க்கும் என்பது கூப்பெயர்க்குந்து எனவும் உம் உந்தாயின.

Digitized By Roja Muthiah Research Library

(௩.) அஃதாம், இவைபோம் என வழக்கில், ஆகும், போகும் என்பன, முற்றுயவிடத்து, ஆம், போம் என ஈற்றுயிர்மெய்கெட்டன. "சாரலுடைவென் றோழியுங் கலுழ்மே;" அம்பலூரு மவனொடு மொழிமே" எனச் செய்யுளிற், கலுழும் மொழியும் என்பன, முற்றுயவிடத்துக், கலுழ்ம், மொழிம், என உயிரும் உயிர்மெய்யுங் கெட்டன.

செய்யுமென்னு முற்றென்றுயினுஞ் செய்யுமென்னுமேவன்முற்றென்றுயினும் விதவாது, பொதுமையின் முற்றேலென்றமையின், "மாமறை மாக்கள் வருகுலங் கேண்மோ;" "முதுமறை யந்தணிர் முன்னிய துரைமோ" எனக் கேளும் உரையும் என்னுமேவன்முற்றும் இவ்வாறு உயிரும் உயிர்மெய்யுங் கெட்டு வருதல் கொள்க. இவை இங்ஙனமாதலால், 'சொற்றொறு மிற்றிதன் பெற்றி' என்னுஞ் சூத்திரத்தால், ஆவொமோ என்னுந் தன்மைப்பன்மைமுற்றும் "பொன்னூசலாடாமோ" என எதிர்காலவிடைநிலை கெட்டு வருதலும் பிறவுங் கொள்க. (௨௨)

பரீக்ஷை வினுக்கள்:—789. பெயரெச்சங்களாவன யாவை? 790. வினைமுதன் முதலிய அறுபொருட்பெயர்களேயன்றி வேறுபெயர்கள் எஞ்சநிற்கும் பெயரெச்சங்களும் உளவோ? 791. பெயரெச்சம் விகாரப்பட்டு வருதலில்லையோ? 792 செய்யுமென்னும் பெயரெச்சம் முற்றுவினையாமிடத்து விகாரப்படுதலில்லையோ? 793. செய்யுமென்னு மேவன்முற்று விகாரப்படுதலில்லையோ?

## வினையெச்சம்.

[வினையெச்சம் இனையவென்பது.]

௩௪௨. தொழிலுங் காலமுந் தோன்றிப பால்வினை
ஒழிய நிற்பது வினையெச் சம்மே.

இ - ள். தொழிலும் காலமும் தோன்றி - பின்பு விதந்து சொல்லப்படும் வாய்பாடுகளிலே தொழிலுங் காலமும் விளங்கி,—பால்வினை ஒழிய நிற்பது - வினைமுற்றுதற்கு வேண்டும் பாலொன்றுந் தோன்றுது அப்பாலுடனே வினையெஞ்ச நிற்பன,—வினையெச்சம் - வினையெச்சவினை வினைக்குறிப்புக்களாகும். எ - று.

வினையெனப் பொதுப்படக் கூறினமையால், உடன்பாடும் எதிர்மறையும் பற்றி வருந் தெரிநிலையுங் குறிப்புமாகிய வினைமுற்றும், பெயரெச்சமும், வினையெச்சமும், வினையாலணையும்பெயருந், தொழிற்பெயருமாகிய ஐவகைவினைச்சொற்களுங் கொள்க.

Digitized By Roja Muthiah Research Library

வ - று. உண்டு வந்தான் தெரிநிலைவினையெச்சம், அருளின்றிச்செய்தான் குறிப்புவினையெச்சம். இவற்றுள்; உண்டு என்பது, உணவென்னுந் தொழிலும் இறந்தகாலமுந்தோன்றி, அத்தொழினிகழ்த்துதற்கு வேண்டும் பாருென்ருமையும் அப்பாலுடனே வினையொழிய நின்றமையுமறிக. தோன்றி என்பதுவன்றயுங் குறிப்புவினைக்கில்லை.

உண்டு வந்த மாணிடன், பொருளின்றி வருந்தின மிடியன் இவை வந்த, வருந்தின என்னும் பெயரெச்சவினைகொண்டன. உண்டுமகிழ்ந்தவன், பொருள்இன்றி வருந்தினவன் இவை வினையாலணையும் பெயர்கொண்டன. உண்டு மகிழ்ந்து, பொருளின்றி வருந்தி இவை வினையெச்சங்கொண்டன. உண்டு மகிழ்தல், பொருள் இன்றி வருந்தல் இவை தொழிற்பெயர்கொண்டன. எதிர்மறையில் வருஞ்சொற்களையும் உண்டு மகிழாத, பொருளின்றிவருந்தாத என்று கூட்டி அனைத்துங் காண்க.

(சூ.) "காலமும் வினையுந் தோன்றிப் பாருென்ருது, வினைகொள்ளும் மது வினையெச்சம்மே" என்ருர் ஆசிரியர் அகத்தியனுர். (உரு)

[வினையெச்ச வாய்பாடுகள்.]

௩௪௩. செய்து செய்பு செய்யாச் செய்யூச்
செய்தெனச் செயச்செயின் செய்யிய செய்யியர்
வான்பான் பாக்கின வினையெச் சம்பிற
ஐந்தொன் றுறுமுக் காலமு முறைதரும்.

இ - ள். செய்து செய்யியர் - செய்தென்பது முதற் செய்யியரென்பதீருகிய ஒன்பது வாய்பாட்டால் வருவனவும்,—வான் பான் பாக்கு - வான் பான் பாக்கென்னு மூன்றுவிகுதிகளைக்கொண்டு வருவனவும்,—இன வினையெச்சம் - இவைபோல்வன பிறவும் வினையெச்சவினைகளாம்,—ஐந்து ஒன்று ஆறு - முன்னையவைந்தும் நடுநின்ற ஒன்றும் பின்னைய ஆறும் முக்காலமும் முறை தரும் - இறந்தகாலமும் நிகழ்காலமும் எதிர்காலமும் முறையே காட்டுவனவாம். எ - று.

இவற்றுட் செய்து, செய்தென என்னு மிரண்டும் இடைநிலையாலும், ஒழிந்தன இறுதிநிலையாலுங் காலங்காட்டுமென வுணர்க.

வான் பான் பாக்கென்பன அவ்வவ் வெச்சவிகுதிகளையுடைய மொழிகளை யுணர்த்திநின்ற குறிப்புச்சொல்.

இன என்றமையால், ஆடிக் கொண்டான், போய்க் கொண்டான் எனச் செய்தென்வாய்பாடு பற்றி இகரவிகுதியும் யகரமெய் விகுதியும் வருமெனவும், தழீஇக்கொண்டான் என விகுதி விகாரப்பட்டும் வருமெனவும், புக்குவந்தான் எனப் பகுதி விகாரப்பட்டும்வருமெனவும், உணற்கு வந்தான் எனச் செயவென்வாய்பாடுபற்றிக் குவ்விகுதிவருமெனவும், உண்டாற் பசி தீரும், உண்டக்காற் பசி தீரும்,

Digitized By Roja Muthiah Research Library

உண்டக்கடைப் பசி தீரும், உண்டவழிப் பசி தீரும், உண்டவிடத்துப் பசி தீரும், உண்ணுமேற் பசி தீரும் எனச் செயினென்வாய்பாடுபற்றி ஆல், கால், கடை, வழி, இடத்து, எல் விகுதிகள் வருமெனவும், என்னுமேனும் வரும், காண்டலு மிதுவே கூறும் என ஏனும்உம்மும் ஓரோவிடத்து விகுதிகளாய் வருமெனவும், உண்ணுமே வந்தான், உண்ணாமை வந்தான், உண்ணாமைக்கு வந்தான், உண்ணாமல் வந்தான் என எதிர்மறையிடத்து, மே, மை, மைக்கு, மல் விகுதிகள் வருமெனவும், அருளின்றி வந்தான், அறமல்லாதில்லை, அறமல்லாமேயில்லை, அறமல்லாமையில்லை, அறமல்லாமலில்லை, நீயல்லாலில்லை என வினையெச்சக் குறிப்புக்களுக்கு, றி, து, மே, மை, மல், ஆல் என்பவை விகுதிகளாமெனவுங் கொள்க.

உரையிற்கோடலென்னுமுத்தியினாலே, செயவெனெச்சம் நிகழ்காலமன்றி மற்றைக்காலமுந் தருமெனக்கொள்க. அது தனக்குரிய நிகழ்காலத்தின்கண் இது நிகழாநிற்க இது நிகழ்ந்தது என்னும் பொருட்டாயும், இறந்த காலத்திற் காரணப்பொருட்டாயும், எதிர்காலத்திற்காரியப்பொருட்டாயும், வரும். காரணப்பொருட்டாய் வருதலாவது முடிக்குஞ்சொல்லால் உணரப்படுந் தொழிற்கு வினையெச்சத்தால் உணரப்படுந் தொழில் காரணமென்பது படவருதல். காரியப்பொருட்டாய் வருதலாவது முடிக்குஞ்சொல்லால் உணரப்படுந் தொழிற்கு வினையெச்சத்தாலுணரப்படுந்தொழில் காரியமென்பது படவருதல்.

வ - று, சூரியனுதிக்க வந்தான்....................நிகழ்.
மழை பெய்ய நெல் விளைந்தது..........இற.
நெல் விளைய மழை பெய்தது... ......எதிர்.

இன்னும், உரையிற்கோடலென்னுமுத்தியால், வான், பான், பாக்கென்னுமூன்றுஞ் சிறுபான்மை தொழிற்பெயர்விகுதிகளாயும் வருமெனக்கொள்க.

வ - று. நீ வருவானேன்; யானுரைப்பானேன்; "ஒழுக்கத்தி னொல்கா ரூரவோ ரிழுக்கத்தி, னேதம்படுபாக் கறிந்து" என வரும். இங்கே, வருவான், உரைப்பான், படுபாக்கு என்பன முறையே, வருதல், உரைத்தல், படுதல் என்ப பொருள்படுதல் காண்க.

(சூ.) செய்து செய்யூச் செய்பு செய்தெனச், செயயியர் செயிய செயின் செயச் செயற்கென, வவ்வகை யொன்பதும் வினையெஞ்சுகிளவி. எ - ம். பின்முன் கால்கடை வழியிடத்தென்னு, மன்னமரபிற் காலங்கண்ணிய, வென்னகிளவியு மவற்றியல்பினவே, எனவுங் கூறப்பட்டமை காண்க. (உக)



Digitized By Roja Muthiah Research Library

[வினையெச்சங்களுக்கு முடிபுவேறுபாடு.]

௩௩௪. அவற்றுள்,—
முதலி னான்கு மீற்றின் மூன்றும்
வினைமுதல் கொள்ளும் பிறவுமேற் கும்பிற.

இ - ள். அவற்றுள் - மேலைச்சூத்திரத்துச் சொல்லிய வினையெச்சங்களுள், முதலில் நான்கும் - முதலிலுள்ள செய்து செய்பு செய்யாச் செய்யூ என்னு நான்கும்,—ஈற்றில் மூன்றும் - இறுதியிலுள்ள வான் பான் பாக்கு என்னும் விகுதிகளையுடைய மூன்றும்,—வினைமுதல் கொள்ளும் - வினைமுதல் வினையைக்கொண்டு முடியும்,—பிற - நடுவிலுள்ள செய்தென, செய, செயின், செய்யிய, செய்யியர் என்னும் ஐந்தும் இவை போல்வன பிறவுமென்றதனால் வருஞ் செய்தால் முதலியவையும் வினையெச்சக்குறிப்புக்களும் ஆகிய இவைகள்,—பிறவும் ஏற்கும் - செய்பவனையன்றி மற்றவினைமுதல் வினைகளையுங் கொண்டுமுடியும். எ - று.

| | | |
|---|---|---|
| உ | — தானடந்து வந்தான் | முதலினான்கும் ஈற்றின் மூன்றும் தன் வினைமுதல் வினைகொண்டு முடிந்தன. |
| பு | — தானுண்குபு போனான் | |
| ஆ | — அவன் கல்லாக் கழித்தான் | |
| ஊ | — தான் காணூ மகிழ்ந்தான் | |
| வான் | — தான் கொல்வான் செல்வான் | |
| பான் | — தானலைப்பான் புகுந்தான் | |
| பாக்கு | — தான்றருபாக்கு வருவான் | |

| | | |
|---|---|---|
| என | தானுண்டென மகிழ்ந்தான்<br>பிறனுண்டென மகிழ்ந்தான் | இடையினைந்தும் தன்வினைமுதல்வினையும் பிறவினை முதல்வினையுங் கொண்டன. |
| அ | தானுண்ண வருகிறான்<br>பிறனுண்ணக் காண்கிறான் | |
| இன் | தானுண்ணின் மகிழ்வான்<br>பிறனுண்ணிற் கொடுப்பான் | |
| இய | தானுண்ணிய வருவான்<br>பிறனுண்ணிய கொடுப்பான் | |
| இயர் | தானுண்ணியர் போவான்<br>பிறனுண்ணியர் வழங்குவான் | |

உண்டாலுவக்கும், உண்டாற்பசிதீரும். எ-ம். விருந்தின்றியுண்டான் மழையின்றிப்பொய்ப்பின். எ - ம். இன்னவென்றதனால் வருஞ் செய்தால் முதலியவையும் வினையெச்சக்குறிப்பும் இப்படியே தன்வினைமுதல் வினையும் பிறவினைமுதல்வினையு மேற்றல் காண்க.

Digitized By Roja Muthiah Research Library

இச்சூத்திரத்தில் வினைமுதல்கொள்ளும் பிறவுமேற்கும் பிற என்பதற்கு வேறுகருத்துக் கூறினருமுளர். அக்கருத்துப் பின்வரும் 'சினைவினை சினையொடும்' என்னுஞ் சூத்திரப்பொருளுக் கியையாமையிருத்தலும், "அவற்றுள், முதனிலை மூன்றும் வினைமுதன் முடிபின" எ - ம். "அம்முக் கிளவியுஞ் சினைவினை தோன்றிற், சினையொடு முடியா முதலொடு முடியினும், வினையோ ரனைய வென்மனார் புலவர்." எனவும் வருந் தொல்காப்பியச்சூத்திரங்களோடும் அவற்றிற்குச் சேனாவரையர் உரைத்தவுரையோடும் இயையாதிருத்தலும் நோக்கியுணர்க. அவற்றை ஈண்டு விரிப்பிற் பெருகும்.

[வினைமுதல் கொள்ளுமென்றவற்றிற்கு ஓர் புறனடை.]

௩௪௫. சினைவினை சினையொடு முதலொடுஞ் செறியும்.

இ - ள். சினை வினை - முதலினான்கும் ஈற்றின் மூன்றும் என்ற வினையெச்சங்கள் சினைவினையாயின் அவை,—சினையொடும் - முன்வினைமுதல்கொள்ளும் என்ற விதியினாலே சினைவினையுடனே யன்றி,—முதலொடும் செறியும் - ஒற்றுமைபற்றி முதல்வினையுடனும் முடியும். எ - று.

காலிற்று வீழ்ந்தது, கண்சிவந்து நொந்தது எனச் சினைவினையோடு முடிந்தன.

வ - று. காலொடிந்து விழுந்தான்; கண் வருவான் கதிரவனைத் தொழுதான் என முதல்வினையோடு முடிந்தன.

பிறவுமன்ன. ஒடிந்து சினைவினை; விழுந்தான் முதல்வினை. வருவான் சினைவினை; தொழுதான் முதல்வினை.

காலிறுபு வீழ்ந்தான், காலிறூஉ வீழ்ந்தான், காலிறாஉ வீழ்ந்தான், என்ப் பிறவாய்பாடுகளோடும் ஒட்டிக்கொள்க. சினையொடு முதற்கு ஒற்றுமையுண்மையின், சினைவினை முதல்வினையைக்கொண்டுமுடியினும் பிறவினையைக்கொள்ளாது தன் கருத்தாவின் வினைகொண்டதொக்குமென்றபடி. (உ௬)

௩௪௬. சொற்றிரி யினும்பொருடிரியா வினைக்குறை.

இ - ள். வினைக்குறை சொல் திரியினும் - முதலினான்கு மீற்றின் மூன்றும் என்ற வினையெச்சவாய்பாடுகளாகப் பிறவினை யெச்சவாய்பாடுகள் வேறுபடினும்,--பொருள் திரியா - அவற்றின் பொருள்கள் வேறுபடாவாம்.

வ - று. (க.) ஞாயிறு பட்டு வந்தான் என்புழிப், படவென்னுஞ் செயவென் வாய்பாட்டு நிகழ்கால வினையெச்சம் பட்டெனத் திரிந்து நின்றது.

(உ.) மழை பெய்து நெல் விளைந்தது என்புழிப், பெய்ய வென்னுங் காரணப்பொருட்டாகிய செயவென்வாய்பாட் டிறந்

Digitized By Roja Muthiah Research Library

தகாலவினையெச்சம் திரிந்து நின்றது. ஆ கிடந்து செறு விளைந்தது; பூணணிந்து விளங்கிய புகழ் சான் மார்ப; உண்டு பசி கெட்டது என்புழிக், கிடக்க, அணிய, உண்ண என்பன முறையே, கிடந்து, அணிந்து, உண்டு எனத் திரிந்து நின்றன.

(ரு.) யான் கொள்வான் பொன் கொடுத்தான் என்புழிக், சொளவென்னுஞ் செயவென்வாய்பாட்டு வினையெச்சங் கொள்வானெனத் திரிந்து நின்றது.

"குடிபொன்றிக்—குற்றமு மாங்கே தரும்;" "குடிமடிந்து குற்றம் பெருகும்;" "இருணீங்கி யின்பம் பயக்கும்." என்புழிப், பொன்றுவித்து, மடிவித்து, நீங்குவித்து எனற்பாலன, பொன்றி, மடிந்து, நீங்கி என விவ்விகுதி தொக்குநின்றன.

(கூ.) "வினையெஞ்சுகிளவியும்வேறுபல்குறிய" என்றார் ஆசிரியர் தொல்காப்பியனார். (உஎ)

**பரீக்ஷை** வினாக்கள்:—794. வினையெச்சங்களாவன யாவை? 795. வினையெச்சத்திற்கு ஒழிபாகிய வினை எத்தனைவகைப்படும்? 796. அவ்வினையெச்ச வாய்பாடுகளெவை? 797. இவற்றுள், எவ்வெவ்வாய்பாடு எவ்வெக்காலங் காட்டும்? 798. இவ்வினையெச்சவிகுதிகளே காலங்காட்டுமோ இடைநிலை காலங்காட்டலுமுண்டோ? 799. இனவென்றதனாற் சொள்ளப்படும் வினையெச்சவிகுதிகள் எவை? 800. செயவெனெச்சம் நிகழ்காலமன்றி மற்றைக்காலமுங் காட்டுமோ? 801. செயவெனெச்சம் எவ்வெக்காலத்தில் எவ்வெப்பொருட்டாய்வரும்? 802. காரணப்பொருட்டாய் வருதலாவதென்னை? 803. காரியப்பொருட்டாய் வருதலாவதென்னை? 804. வான் பான் பாக்கென்னு மூன்றும் வினையெச்ச விகுதிகளாயன்றிப் பிறவிகுதிகளாயும் வருமோ? 805. இவ்வினையெச்சங்களுள், தன்கருத்தாவைக்கொண்டுமுடிவன எவை? 806. தன்கருத்தாவையும் பிறகருத்தாவையுங் கொண்டுமுடிவன எவை? 807. தன்கருத்தாவையே கொண்டுமுடியுமென்ற வினையெச்சங்கள் பிறகருத்தாவைக்கொண்டுமுடிதல் எங்கும் இல்லையோ? 808. வினையெச்சங்களுள், ஒன்று மற்றொன்றாகத் திரிதலுமுண்டோ? 809. செயவெனெச்சம் எவ்வெவ்விடத்துச் செய்தெனெச்சமாகத் திரியும்?

———o———

## ஒழிபு.

[வினைக்குறிப்பு.]

ருசஎ, ஆக்க வினைக்குறிப் பாக்கமின் றியலா,

Digitized By Roja Muthiah Research Library

இ - ள். ஆக்க வினைக்குறிப்பு - ஆக்கத்தால் வரும் வினைக்குறிப்புச் சொற்கள்,—ஆக்கம் இன்று இயலா - விரிந்தாயினுந் தொக்காயினும்வரும் ஆக்கச்சொல்லின்றி வாராவாம். எ - று.

உ - ம். சாத்தனல்லனாயினன், சாத்தனல்லன்; கல்வியாற்பெரியனாயினன், கல்வியாற்பெரியன்; கற்றுவல்லனாயினன், கற்றுவல்லன் என ஆக்கச் சொல் விரிந்துந் தொக்கும் வந்தன. எனவே, நல்லனென்பது இயற்கைவினைக்குறிப்பாயின், விரிதல் தொகுதலென்னும் இரண்டனுள் ஒருவாற்றானும் ஆக்கம்வேண்டாது, சாத்தனல்லனென்றே வருமென்பதாயிற்று. ஆக்கமாவது - இயற்கையாய் இல்லாமல் பின்னுண்டானதன்மை. கற்றுவல்லனாயினன் என்பதில் ஒருவன் பிறந்தபோதே அக்கல்வி வன்மையின்றிப் பின்னுண்டானதறிக. ஏனையவு முய்த்துணர்க. ஆக்கமெனினுஞ் செயற்கையெனினும் ஒக்கும். (உஅ)

[செய்யுமென்முற்று.]

கூசஅ. பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மையிற்
செல்லா தாகுஞ் செய்யுமென் முற்றே.

இ - ள். ஆகும் செய்யும் என் முற்று - செய்யுமென்னுமெச்சத்தாலாகுஞ் செய்யுமென்னு முற்றானது,—பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மையில் செல்லாது - உயர்திணைப் பன்மைப்படர்க்கையிலும் முன்னிலையிலுந் தன்மையிலுஞ் செல்லாது. எ - று.

எனவே, பலரொழிந்த படர்க்கை நாற்பாலினுஞ் செல்லுமென்பது பெற்றாம்.

உ - ம். அவனுண்ணும், அவளுண்ணும், அதுவுண்ணும், அவையுண்ணும் எனவரும்.

அவை யெத்திறத்தானும பெயராமுடிபினவே, என்றும், பெயரலதேற்பிலமுற்றே, என்றுங் கூறினமையால், இதனை முற்றென்றுகூறி, அவனுண்ணும் என எழுவாய்ப்பயனிலையாக உதாரணங்காட்டியதென்னை, அவனுண்ணுமூண் என மற்றுச்சொல் நோக்கிற்றெனின், இருதிணைக்கும் பொதுவாகிய செய்யும் என்னுஞ் சொல் எச்சமோ முற்றோ என் ஐயத்தை விளைத்து உண்ணும் என நின்றபோது, அவன், அது, என்னும் வினைமுதல்வந்து திணையும் பாலும் விளக்கத் தொடர்மொழிப் பொருளுணர்த்தி எடுத்தலோசையால் மற்றோர் சொல்லை நோக்காது செப்பின் புணர்ச்சிபோல, உண்ணுமவன் என முடிந்து பின்னர் அவனுண்ணும், அதுவரும் என மாறிநிற்பது மரபாதலால் இது முற்றிற்கு இலக்கணமென்றும், உண்ணுமவன், வாழுமில் எனப் படுத்தலோசையாற் கூறியபோது, அவன், இல் என்ற முடிக்குஞ்சொல்லால் அமையாது, உண்ணுமவன் நல்லன், வாழுமில் நன்று என மற்றோர் சொல்

Digitized By Roja Muthiah Research Library

லை நோக்கிநிற்பது எச்சத்திற்கு இலக்கணமென்றும விடைகொடுத்து ஐயம் கற்றக. (உ௯)

[பாற்பொதுவினை.]

**௩௪௯. யாரென் வினாவினைக் குறிப்புயர் முப்பால்.**

இ - ள். வினா யார் என் வினைக்குறிப்பு - வினாப்பொருளைத்தரும் யாரென்னும் வினைக்குறிப்புமுற்று,—உயர் முப்பால் - உயர்திணை முப்பால்களுக்கும் பொதுவினையாம். எ - று.

வ - று. அவன் யார், அவள் யார், அவர் யார் எனவரும்.

அஃதியார், அவையார். எ - ம். யான் யார், யாம யார். எ - ம். நீ யார், நீர் யார். எ - ம். அஃறிணையிருபாலினும், மற்றையீரிடத்திலும் வருதல் புதியன புகுதலாமென்க.

யார் என்பது ஆரென விகாரப்பட்டும் வரும். இங்கே சொன்ன யார் என்பது, யாவரென்னும் உயர்திணைப்பலர்பாற்சொல் விகாரப்பட்ட யாரென்பதன்று. (௩௰)

**௩௫௰. எவனென் வினாவினைக் குறிப்பிழி யிருபால்.**

இ - ள். வினா எவன் என் வினைக்குறிப்பு - வினாப்பொருளைத்தரும் எவனென்னும் வினைக்குறிப்புமுற்று,— இழி இருபால் - அஃறிணையிருபாலுக்கும் பொதுவினையாம். எ - று.

வ - று. அஃதெவன், அவையெவன் என வரும்.

எவனென்பது, என், என்ன, என்னையென விகாரப்பட்டும் வரும். இங்கே சொன்ன எவனென்பது, உயர்திணையாண்பாலையுணர்த்தும் எவனென்பதன்று. (௩௧)

[இருவகைமுற்றிற்கும் ஓர் புறனடை.]

**௩௫௧. வினைமுற் றேவினை யெச்ச மாகலுங்**
**குறிப்புமுற் றீரெச்ச மாகலு முளவே.**

இ - ள். வினைமுற்றே வினையெச்சம் ஆகலும் - தெரிநிலைவினைமுற்றே வினையெச்சமாகிவருதலும்,— குறிப்புமுற் (றே) ஈரெச்சம் ஆகலும் உள - வினைக்குறிப்புமுற்றே வினையெச்சமாகியும் பெயரெச்சமாகியும் வருதலும் உளவாம். எ - று.

வ - று. (௧.) கண்டனன் வணங்கினன் என்பது கண்டு வணங்கினன். எ - ம். முகந்தனர் கொடுத்தார் என்பது முகந்துகொடுத்தார். எ - ம். பொருள்படுதலால், வினைமுற்று வினையெச்சமாதல் காண்க.

Digitized By Roja Muthiah Research Library

(உ.) அவன் வில்லினன் வந்தான் என்பது அவன் வில்லினனாகிவந் தான் எனப் பொருள்படுதலாற் குறிப்புமுற்று வினையெச்ச மாதல் காண்க. "வெந்திறலினன் விறல் வழுதியொடு" என் பது வெந்திறலினனாகிய வழுதி எனப் பொருள்படுதலாற் கு றிப்புவினைமுற்றுப் பெயரெச்சமாதல் காண்க. பிறவுமன்ன.

ஒருகருத்தாவைப்பற்றிய பல்முற்றுவினைகள் அடுக்கிவருமிடத்தே ஈற் றுவினையொழித்து முன்னின்றவினை எச்சமாகத்திரியுமெனச.

இவற்றை வினையெச்சங்களே வினைமுற்றுருபமாய் நின்றனவென்றல் அமையாதோவெனின்; அமையாது. இடமூன் றிணையும் எண்ணுங் காட்டிச் சிறப்பியல்பு பொருந்திநிற்கும் முற்றின்றன்மையை அவ்வியல்பில்லாத எச் சந்தருமென்றல் பொருந்தாதாதலின் என்க. பிறவாற்றானும் வகுத்துணர்க.

பரீக்ஷை வினாக்கள்:—810. வினைக்குறிப்புச்சொல் இன்னும் எத்தனை வ கையிற் பிரிவுபடும்? 811. ஆக்கவினைக்குறிப்பாவதியாது? 812. இயற்கை வினைக்குறிப்பாவதியாது? 813. ஆக்கவினைக்குறிப்பெவ்வாறுவரும்? 814. இயற்கைவினைக்குறிப்பெவ்வாறுவரும்? 815. செய்புமென்வாய்பா ட்டுவினைமுற்று எவ்வாறு பொதுப்பட வரும்? 816. இருதிணையுள்ளும் பாற்பொதுவாய்நிற்கும் வினைகள் யாவை? 817. யாரென்னும் வினாவினை க்குறிப்புமுற்று எவ்வாறு பொதுப்படவரும்? 818. எவனென்னும் வினா வினைக்குறிப்புமுற்று எவ்வாறு பொதுப்படவரும்? 319. வினைமுற்றுக் கள் எச்சப்பொருடருதலில்லையோ?

வினையியன் முற்றிற்று.

Digitized By Roja Muthiah Research Library

# ௩. பொதுவியல்.

———:o:———

[இது முன் வந்த பெயருக்கும் வினைக்கும் பின் வரும் இடைக்கும் உரிக்கும் பொதுவிலக்கணங்களைச் சிங்கநோக்காக அறிவிக்கும்பொருட்டு நடுவே வைக்கப்பட்டது.]

[பாற்பொதுமை நீங்குநெறி.]

௩௫௨. இருதிணை யாண்பெண் ணுள்ளொன் றனையொழிக்கும்
பெயரும் வினையுங் குறிப்பி னானே

இ - ள். இருதிணைப்பெயரும் வினையும் - இருதிணையினும் ஆண்பால் பெண்பால்களுக்குப் பொதுவாகிய பெயர்ச்சொற்களும் அப்படிப்பட்டவினைச்சொற்களும், — ஆண் பெணுள் ஒன்றனை ஒழிக்கும் குறிப்பினான் - அவ்வாண்பால் பெண்பால்களுள் ஒருபாலை நீக்குங் குறிப்பினால். எ - று.

வ - று. (க.) ஆயிரமக்கள் போர் செய்யப் போயினார் என்புழி, மக்களென்னும் உயர்திணையாண்பெணிருபாற்கும் பொதுபெயரும், போயினாரென்னும் உயர்திணையாண்பெணிருபாற்கும் பொதுவினையும், போர் செய்யவென்னுங் குறிப்பினாற் பெண்பாலை யொழித்தன. பெருந்தேவி பொறையுயிர்த்தகட்டிற்கீழ் நால்வர் மக்களுளர் என்புழி, மக்களென்னும் பொதுப்பெயரும் உளரென்னும் பொதுவினைக்குறிப்பும், பொறையுயிர்த்தலென்னுங் குறிப்பினான் ஆண்பாலை யொழித்தன. [பொறையுயிர்த்தல் - பிரசவித்தல்]

(உ.) இப்பெற்றங்களுழ வொழிந்தன என்புழிப், பெற்றங்களென்னும் அஃறிணையாண்பெணிருபாற்கும் பொதுப்பெயரும், ஒழிந்தனவென்னும் அஃறிணையாண்பெணிருபாற்கும் பொதுவினையும், உழவென்னுங் குறிப்பினாற் பெண்பாலையொழித்தன. இப்பெற்றங்கள் பால்சொரிந்தன என்புழிப், பெற்றங்களென்னும் பொதுப்பெயரும், சொரிந்தனவென்னும் பொதுவினையும், பாலென்னுங் குறிப்பினால் ஆண்பாலை யொழித்தன. பெற்றம் - பசு, காளை இரண்டற்கும் பொது. (க)

[பெயர் வினையிடத்து ஈற்றயல் திரிதல்]

௩௫௩. பெயர்வினை யிடத்து னளரய வீற்றயல்
ஆவோ வாகலுஞ் செய்யுளு ளுரித்தே.

Digitized By Roja Muthiah Research Library

இ - ள். பெயர் வினையிடத்து - பெயரிடத்தும் வினையிடத்தும்,—ன ள ர ய ஈற்று அயல் ஆ ஓ ஆகலும் - னகர ளகர ரகர யகர ஒற்றீற்றிற்கு அயலிலுள்ள விகுதிமுதல் ஆகாரம் ஓகாரமாதலும்,—செய்யுளுள் உரித்து - செய்யுளிடத்துரித்தாம். எ - று.

வ - று. (க.) "வில்லோன் காலன கழலே;" "தொடியோண் மெல்லடி மேலன சிலம்பே;" "நல்லோர் யார் கொல்;" "வரையாது கொடுத்தோய்" எனப் பெயரிடத்து ஆகாரம் ஓகாரமாயிற்று.

(உ.) "படைத்தோன் மன்றவப் பண்பிலாளன்;" "நல்லோண் மன்ற கூடப்பெயர்த்தோளே;" "சென்றோ ரன்பிலர் தோழி;" "வந்தோய் மன்ற தெண்கடற் சேர்ப்ப" என வினையிடத்து ஆகாரம் ஓகாரமாயிற்று.

வினையாலணையும் பெயரிடத்தன்றி வினையிடத்தும் ஒரோவழி ஆவோவாகத் திரிந்து வருதலின், அதனையு முடன்கூறினார்.

ஆவோவாகலு மென்றவும்மையை ஆக்கவும்மையாகக்கொண்டு; "பழமுதிர் சோலை மலைகிழ வோனே" என ஒரோவழி அகரம் ஓகாரமாதலுங் கொள்க. பெரியோர், தீயோர், நல்லோர், மேலோர் எனச் சிறுபான்மை வழக்கினிடத்தும் ஆவோவாதலுண்மையால், செய்யுளுளுரித்தேயென்றது பெரும்பான்மைபற்றியென்றறிக. (கு.) "பாலறிமரபினம்மூவீற்று, மாவோவாகுஞ்செய்யுளுள்ளே, ஆயெஞ்சிளவியுமவற்றொடுகொள்ளும்." என்றார் ஆசிரியர் தொல்காப்பியனாரும். (உ)

[உருபும் வினையீறும் எதிர்மறையினுந் திரியாமை.]

**௩௫௪. உருபும் வினையு மெதிர்மறுத் துரைப்பினுந்**
**திரியா தத்தமீற் றுருபி னென்ப.**

இ - ள். உருபும் வினையும் - எட்டுவேற்றுமையுருபுகளும் மூவகைவினைச்சொற்களும்,—எதிர்மறுத்து உரைப்பினும் - எதிர்மறுத்துச் சொல்லுமிடத்தும்,—தத்தம் ஈற் (றின்) உருபின் திரியா என்ப - தத்தமீற்றினின்றும் அவ்வவ்வுருபினின்றும் வேறுபடா என்று சொல்லுவர் புலவர். எ - று.

உருபு உருபினின்றும், வினை ஈற்றினின்றும் என எதிர் நிரனிறையாகப்பொருள் கொள்க.

உருபின்கண் எதிர்மறுத்தல் அவைகளின் பயனிலைகளையெனக் காண்க.

வ - று. சாத்தன் வாரான்; குடத்தை வனையான்; வாளாலெறியான்; புல்லர்க்குக் கொடான்; நிலையினீங்கான்; பொருளினதின்மை; தீயர்கட் சேரான்; சாத்தா போகேல். எ-ம். நடவான், நடவாத, நடவாது. எ-ம். வரும். ஓடாக்குதிரை, இதில் ஓடாதவென்னும் பெயரெச்சவீறுகெட்டது.



Digitized By Roja Muthiah Research Library

உரையிற்கோடலால், செய - செய்யாமல், செய்யாமே, செய்யாமை என வரும் வினையெச்சமும், நடத்தல் - நடவாமை எனத் தொழிற்பெயரும்; உண்ணும் - உண்ணேல், உண்ணாதே என ஒருமையேவலும், ஈறு திரிந்தும் வருமெனக் கொள்க. (சூத்) எதிர்மறுத்துமொழியினுந் தத்தமரபிற், பொருணிலைதிரியா வேற்றுமைச்சொல்லே. எ - ம். பெயரெஞ்சுகிளவியும் வினையெஞ்சுகிளவியு மெதிர்மறுத்துமொழியினும் பொருணிலைதிரியா. எ-ம். ஆசிரியர் தொல்காப்பியனார் கூறியதுங் காண்க. (௩)

[உருபும் வினையும் அடுக்கி முடிதல்.]

௩௫௫. உருபுபல வடுக்கினும் வினைவே றடுக்கினும்
ஒருதம் மெச்ச மீறுற முடியும்.

இ - ள். உருபு பல அடுக்கினும் - வேற்றுமையுருபுகள் விரிந்துந் தொக்குந் தம்முள்விரவிப் பலவடுக்கிவரினும் வெவ்வேறு பலவடுக்கிவரினும்,—வினை வேறு (பல) அடுக்கினும் - மூவகைவினைச்சொற்களும் வெவ்வேறு பலவடுக்கிவரினும்,—ஒருதம்மெச்சம் ஈறு உற முடியும் - தத்தமெச்சமொன்று இறுதியில் வர அதனோடேனைத்தாமுடியும். எ - று.

வ - று. (க.) அரசனானவன் பகைவனை வாளால் வெட்டினான் என உருபுகள், விரிந்து, தம்முள் விரவிப் பலவடுக்கி, வெட்டினானென்னும் ஒருவினைகொண்டன. வாள்கைக்கொண்டான் என உருபு தொக்கு அவ்வாறு வந்தன.

(உ.) சாத்தனையுங் கொற்றனையும் வாழ்த்தினான். எ - ம். சாத்தனுக்குங் கொற்றனுக்குந் தந்தை. எ - ம். ஐயுருபுங் குவ்வுருபும், விரிந்து, வேறுபலவடுக்கி, வாழ்த்தினானென்னும் ஒருவினையும் தந்தையென்னும் ஒருபெயரும் முறையே கொண்டன. அருளறமுடையான் என உருபு தொக்கு, அவ்வாறு வந்தன.

(௩.) ஆடினான் பாடினான் சாத்தன். எ - ம். இளையண் மெல்லியண் மடந்தை. எ - ம். வினைமுற்றுங் குறிப்புமுற்றும், வேறுபலவடுக்கிச், சாத்தன், மடந்தை என்னும் ஒருபெயர் முறையே கொண்டன.

(௪.) கற்ற கேட்ட பெரியோர். எ - ம். நெடிய பெரிய மனிதன். எ - ம். தெரிநிலைவினைப்பெயரெச்சமுங் குறிப்புவினைப்பெயரெச்சமும், வேறு பல வடுக்கிப், பெரியோர், மனிதனென்னும் ஒருபெயர் முறையே கொண்டன.

(௫.) கற்றுக் கேட்டறிந்தார். எ - ம். விருப்பின்றி வெறுப்பின்றியிருந்தார். எ-ம். தெரிநிலைவினையெச்சமுங் குறிப்புவினையெச்சமும், வேறு பலவடுக்கி, அறிந்தார், இருந்தார் என்னும் ஒருவினை முறையே கொண்டன.

Digitized By Roja Muthiah Research Library

(சூத்திரம்.) உருபு தொடர்ந்தடுக்கிய வேற்றுமைக்கிளவி, யொருசொன்னடைய பொருள்சென் மருங்கே. எ - ம். அவைதாம், தத்தங்கிளவியடுக்குநவழினு, மெத்திறத்தானும் பெயர்முடிபினவே. எ - ம். பன்முறையானும் வினையெஞ்சுகிளவி, சொன்முறைமுடியாதடுக்குவரினு, முன்னதுமுடிய முடியுமன்பொருளே. எனவுங் கூறிப் பெயரெச்சவடுக்கை இலேசினுற்றமுவினர் ஆசிரியர் தொல்காப்பியனுரெனக் காண்க. (௪)

[இடைப் பிற வரல்.]

௩௫௪. உருபு முற்றீ ரெச்சங் கொள்ளும்
பெயர்வினை யிடைப்பிற வரலுமா மேற்பன.

இ - ள். உருபு முற்று ஈரெச்சம் கொள்ளும் பெயர் வினையிடை - வேற்றுமையுருபுகளும் முற்றுக்களும் பெயரெச்சங்களும் வினையெச்சங்களுங் கொண்டுமுடியும் பெயர்க்கும் வினைக்குமிடையே — பிற வரலும் ஆம் ஏற்பன - பிறசொற்கள் வருதலுமாம் அவ்விடத்திற்குப்பொருந்துவன. எ - று.

(வரலாறு.)

(௧.) சாத்தன் (வயிறார) உண்டான்.
அறத்தை (அழகு பெறச்) செய்தான்.
வாளான் (மாய) வெட்டினான்.
தேவர்க்குச் (செல்வம் வேண்டிச்) சிறப்பெடுத்தான்.
மலையினின்று (உருண்டு) வீழ்ந்தான்.
சாத்தனது (இத்தடக்கை) யானை.
ஊர்க்கண் (உயர்ந்தவொளி) மாடம்.
சாத்தா (விரைந்து ஓடி) வா.
} வேற்றுமையுருபு

(௨.) வந்தான் (அவ்வூர்க்குப்போன) சாத்தன்........வினைமுற்று.
(௩.) வந்த (வடகாசி) மன்னன்........................பெயரெச்சம்.
(௪.) வந்து (சாத்தனவ்வூர்க்குப்) போயினான்........வினையெச்சம்.

இனி ஏற்பன என்றதனால், ஏலாதனவரிற் பொருள் கவர்படுமாதலால், அவை இடையில் வரப்பெறாவென்பதாயிற்று. கவர்படுதல் இருபாற்பட்டுத் துணிவு தோன்றாவண்ண நிற்றல்.

வ - று. உண்டு விருந்தோடு வந்தான் என்புழி, விருந்தோடு என்பது, பொருள் கவர்படுதலால், இதுபோல்வன இடையில் வரப்பெறாவென்றறிக. (விருந்தோடு உண்டு என்றும், விருந்தொடு வந்தான் என்றும் இருதிறப்பொருள்படுதலறிக.)

வல்ல மெறிந்த நல்லிளங்கோசர் தந்தை மல்லல் யானைப் பெருவழுதி என்புழி, வல்லமெறிதல், வழுதிமேலாகாது, நல்லிளங்கோசர் மேலுமாகிப் பொருள் கவர்படுதலால், இதுபோல்வன இடையில் வரப்பெறாவென்றறிக. (வல்லமெறிந்த வழுதி என்பதே ஈண்டுப் பொருளந்வயம்.)

Digitized By Roja Muthiah Research Library

[முடிக்குஞ் சொன்னிற்குமிடம்.]

**௩௫௭. எச்சம் பெயர்வினை யெய்து மீற்றினும்.**

இ - ள். எச்சப் பெயர்வினை - உருபுகளும் முற்றுக்களும் பெயரெச்சங்களும் வினையெச்சங்களுங் கொண்டு முடியுமெச்சமாகிய பெயரும் வினையும்,—ஈற்றினும் எய்தும் - அவற்றிற்கீற்றிலும் வரும். எ - று.

ஈற்றினுமென்ற உம்மையால், முதலினும் வருதல் கொள்க.

(வரலாறு.)

| ஈற்றில். | முதலில். | |
|---|---|---|
| சாத்தன் வந்தான் | வந்தான் சாத்தன் | உருபுகளினெச்சங்களீரிடத்தும் வந்தன. |
| மரத்தைக் குறைத்தான் | குறைத்தான் மரத்தை | |
| சாத்தனால் உய்ந்தான் | உய்ந்தான் சாத்தனால் | |
| சாத்தனுக்குக் கொடுத்தான் | கொடுத்தான் சாத்தனுக்கு | |
| சாத்தனி னீங்கினான் | நீங்கினான் சாத்தனின் | |
| சாத்தனதாடை | ——— ——— ——— | |
| சாத்தன்கட் சென்றான் | சென்றான் சாத்தன்கண் | |
| சாத்தா வா | வா சாத்தா | |

| | | |
|---|---|---|
| வந்தான் சாத்தன் | சாத்தன் வந்தான் | முற்றெச்சங்களினெச்சங்கள் ஈரிடத்தும் வந்தன. |
| வந்த சாத்தன் | ——— ——— — | |
| வந்து போயினான் | போயினான் வந்து | |

எய்துமீற்றின் என்றாற்போல முதற்கண் வருதலை யெடுத்தோதாது உம்மையாற்றழுவிக்கொண்டார், ஆறனுருபினெச்சமும், ஏழனுருபினெச்சப்பெயரும், பெயரெச்சத்தினெச்சமும் முதற்கண் வாரா என்பதூஉம், ஒழிந்தன முதற்கண்வரினும் இறுதிக்கண் வருதல்போற் சிறப்பினவல்ல என்பதூஉந் தோன்றுதற்கென்க.

எழுவாயுருபு வினைமுற்றுப் பயனிலையை இறுதியிலே கொண்டதும், வினைமுற்று பெயர்ப்பயனிலையை முதலிலே கொண்டதும், சாத்தன் வந்தான் என வரும். தம்முள் வேற்றுமை யாதோவெனின்; கேட்போர்க்குச் சாத்தனிது செய்தான் என வினையை யுணர்த்தும்போது, சாத்தனென்னுமெழுவாய்க்கு வந்தானென்னு முற்றுவினை பயனிலையாகக்கொள்ளப்படும்; இதுசெய்தான் சாத்தன் என வினைமுதலை யுணர்த்தும்போது, வந்தானென்னு முற்றுவினைக்குச் சாத்தனென்னும் பெயர் பயனிலையாகக் கொள்ளப்படும். வந்தான் சாத்தன் என்னு முற்றுத் தொடருக்கும் இவ்வாறறிக.

Digitized By Roja Muthiah Research Library

[ஒருமொழி வேறொன்றை யமைத்தல்.]

௩௫அ. ஒருமொழி யொழிதன் னினங்கொளற் குரித்தே.

இ - ள். ஒருமொழி - பெயர் வினை யிடை யுரி யென்னு நால்வகைச் சொற்களுள் ஒவ்வொன்று,—ஒழி தன் இனம் கொளற்கு உரித்து - ஒழிந்து நின்ற தன்ற னினங்களைக்கொண்டு முடிதற்குரித்தாகும் எ - று.

வ - று. சோற்றை நனி யுண்டான் என்றவழிக், கறியை நனி தின்றான் எ ன்றற்றொடக்கத்தனவும், பாக்கை நனி தின்றான் என்றவழி, வெற் றிலையை நனி தின்றான், சுண்ணும்பை நனி தின்றான் என்பனவு ம், நஞ்சுண்டவன் சாவான் என்றவழி நஞ்சுண்டவள் சாவாள், ந ஞ்சுண்டது சாம் என்பனவுங் கூறுதே யமைதலின், இனங்களாயெ ஞ்சி நின்றன. இவற்றுள், சோற்றையென்னும் பெயர்ச்சொல்லு கறி யையென்னும்பெயர்ச்சொல்லையும் உண்டானென்னும் வினைச்சொ ல்லு தின்றானென்னும் வினைச்சொல்லையுங் கொள்ளுதற்குரியவாய் நிற்றல் காண்க. பார்ப்பான் கள்ளுண்ணுன் என்றவழி, பார்ப்பனி கள்ளுண்ணுள். எ - ம். வாழ்க அந்தணர் என்றவழி மற்றைச் சாதி யாரும் வாழ்க. எ - ம். வருதல் கொள்க. இவைபோல்வன பிற வு மிவ்வாறேயாம். இவ்வாறு பொருள்படநிற்பதனை வடநூலார் உ பலக்ஷணமென்பர். (எ)

[திணைபாலிடப் பொதுமை நீங்கு நெறி.]

௩௫௯. பொதுப்பெயர் வினைகளின் பொதுமை நீக்கும்
மேல்வருஞ் சிறப்புப் பெயர்வினை தாமே.

இ - ள். பொதுப் பெயர் வினைகளின் பொதுமை நீக்கும் - திணைபா லிடங்கட்குப் பொதுவாகிய பெயர்வினைகளுடைய பொதுத்தன்மையை நீக் கி ஒன்றற்குரிமை செய்யும்,—மேல் வரும் சிறப்புப் பெயர்வினை தாமே - மேலேவருஞ் சிறப்பாகிய பெயர்வினைகடாமே. எ - று.

ஒன்றற்கு முன் பின் என்னும் இருமருங்கும் மேலெனப்படுதலாற், சி றப்புப் பெயர் வினை யெவ்விடத்து வரினுங் கொள்க.

வ - று. (௧.) சாத்தனிவன்; சாத்தனிது. எ - ம். சாத்தன் வந்தான்; சாத் தன் வந்தது, எ-ம். பெயர்த்திணைப் பொதுமையைப், பின் வந்த சிறப்புப்பெயரும் வினையும், நீக்கி ஒருதிணையை யு ணர்த்தின.

(௨.) ஒருவரென்னையர்; ஒருவரென்றாயர். எ - ம். மரம் வளர்ந்த து; மரம் வளர்ந்தன. எ - ம். பெயர்ப்பாற் பொதுமையைப் பின்வந்த சிறப்புப்பெயரும் வினையும், நீக்கி ஒருபாலை யுண ர்த்தின.

Digitized By Roja Muthiah Research Library

(ரு.) யாமெல்லாம் வருவம்; நீயிரெல்லாம் போமின்; அவரெல்லாமிருந்தார் எனப் பெயரிடப் பொதுமையை, முன் வந்த சிறப்புப்பெயரும், பின்வந்த சிறப்புவினையும், நீக்கி ஒவ்வோரிடத்தை யுணர்த்தின.

(சு.) வாழ்க அவன், அவள், அவர், அது, அவை, யான், யாம், நீ, நீர் என வினைத்திணைபாலிடப்பொதுமையைப், பின்வந்த சிறப்புப்பெயர்கள், நீக்கி ஒருதிணையையும் பாலையும் இடத்தையும் உணர்த்தின. பிறவுமன்ன. (அ)

[எச்சங்களின் முடிபு.]

ருகூ0. பெயர்வினை யும்மைசொற் பிரிபஎன வொழியிசை
எதிர்மறை யிசையெனுஞ் சொலலொழி பொன்பது
குறிப்புந் தத்த மெச்சங் கொள்ளும். [ந

இ - ள். பெயர்ச் (சொல்லொழிபு) - பெயரெச்சமும்,—வினைச் (சொல்லொழிபு) - வினையெச்சமும்,—உம்மைச் (சொல்லொழிபு) - உம்மையெச்சமும்,—சொற் (சொல்லொழிபு) - சொல்லெச்சமும்,—பிரிப்புச் (சொல்லொழிபு) - பிரிநிலையெச்சமும்,—எனச் (சொல்லொழிபு) - எனவெச்சமும்,—ஒழியிசைச் (சொல்லொழிபு) — ஒழியிசையெச்சமும்,—எதிர்மறைச் (சொல்லொழிபு) - எதிர்மறையெச்சமும்,—இசைச் (சொல்லொழிபு) - இசையெச்சமும்,—எனும் சொல்லொழிபு ஒன்பதும் — என்னுஞ் சொல்லெச்சங்கள் ஒன்பதும்,—குறிப் (பொழிபும்) - குறிப்பெச்சமொன்றும்,—தத்தம் எச்சம் கொள்ளும் - தத்தமெச்சங்களைக்கொண்டு முடியும்; எ - று.

ஏனவே, எச்சங்கள் சொல்லெச்சங் குறிப்பெச்சமென இருவகைப்படுமென்பதாயிற்று,

இப்பத்தெச்சங்களுள்ளும், பெயரெச்சம் வினையெச்சம் என வெச்சமென்னு மூன்றற்கும் எச்சச் சொற்கள் வாக்கியங்களில் வெளிப்பட்டு நிற்கும்; ஒழிந்தனவற்றிற்கு எச்சச்சொற்கள் வருவித்துரைக்கப்படும்.

(வரலாறு.)

(க.) செய்த சாத்தன், நல்லசாத்தன் எனப் பெயரெச்சங்கள் தம்மெச்சமாகிய செய்பவனது பெயர் கொண்டன.

(உ.) செய்து வந்தான், செய்து நல்லனாயினன் என வினையெச்சங்கள் தம்மெச்சமாகிய வினைமுற்றுங் குறிப்புமுற்றுங் கொண்டன.

(ரு.) சாத்தனும் வந்தான் என்னும் உம்மையெச்சம் முன்னே கொற்றன் வந்தான் எனத் தன்னெச்சங் கொண்டது.

Digitized By Roja Muthiah Research Library

(௪.) நல்லவனென்றான் என்னுஞ் சொல்லெச்சம் நல்லவனென்று சொன்னான் எனச் சொல்லென்னுந் தன்னெச்சங் கொண்டது.

(௫.) சாத்தனே கொண்டான், சாத்தனோ கொண்டான் என்பன பிரிநிலையெச்சம். இவை பிறர் கொண்டிலரெனத் தம்மெச்சங் கொண்டன. கோடற்றொழிலாற் சாத்தனினின்றும் பிரிக்கப்பட்டார் பிறராதலிற் பிரிநிலை யென்க.

(௬.) கடலொல்லென வொலித்தது, நரம்பு விண்ணென விசைத்தது, தலை யிடியென விடித்தது என்பன எனவெச்சம். இவை தம்மெச்சமாகிய வினைகொண்டன. மிகவு மொலித்தது, மிகவு மிசைத்தது, மிகவு மிடித்தது என்பன இவற்றிற்குப் பொருளாமாதலின், இவ்வெனவெச்சம் மிகுதிப்பொருளைத் தருவதோரிடைச் சொல்லாமென்க.

(௭.) கூரியதோர் வாண்மன், உண்ணுதற்கோ வந்தான் என்பன ஒழியிசையெச்சம். இவை முறையே கோடிற்று, கலசஞ் செய்யவந்தான் எனத் தம்மெச்சங் கொண்டன.

(௮.) "மறப்பினு மோத்துக் கொளலாகும்" யானோ செய்தேன் என்பன எதிர்மறையெச்சங்கள். இவை, முறையே, மறக்கலாகாது, யான் செய்திலேன் எனத் தமமெச்சங் கொண்டன.

(௯.) இசையெச்சமாவது வாக்கியங்களில் அவ்வவ்விடத்திற் கேற்ப ஒருசொல்லும் பலசொல்லுமாக வருவித்துரைக்கப்பட்டு வருவதாம். இசையென்பது சொல். "கற்றதனா லாய பயனென்" என்புழி, நூலைக் கற்றதனால் என ஒருசொல்லும், "அந்தா மரையன்ன மேனின்னை யானகன் றுற்றவனோ" என்புழி என்னுயிரினுஞ்சிறந்த நின்னை எனப் பலசொற்களும் வருவிக்கப்படுதல் காண்க.

(௰.) குறிப்பெச்சமாவது பெயரியலிலே பன்னிரண்டாஞ் சூத்திரத்திலே 'ஒன்றொழி பொதுச்சொல்' என்பது முதலாக 'இன்னபிறவும்' என்றது வரைக்குஞ் சொல்லப்பட்டவைகளாம், ஆயிரமக்கள் பொருதார் என்புழி, மக்களென்னும் பொதுப்பெயர் ஆடவரென்னுஞ் சிறப்புப்பெயர் கொண்டது. பிறவும் அச்சூத்திரவுரையிற் காண்க. இச்சூத்திரத்திற் கூறப்பட்டவைகளில் நாலாவதாகிய சொல்லெச்சத்தைப்பற்றி ஆசிரியர் தொல்காப்பியர் "சொல்லெனெச்சமுன்னும்பின்னுஞ், சொல்லளவல்லதெஞ்சுதலின்றே." என்றார். "பிறவிப்பெருங்கடனீந்துவர்" என்பதில் சேர்ந்தார் என்பது சொல்லெச்சமாய் நின்றதென்று பரிமேலழகருரைசெய்தது மறிக.

(௯)

Digitized By Roja Muthiah Research Library

**பரீக்ஷை** வினுக்கள்:—820. உயர்திணையாண்பெண்ணிருபாற்கும் பொதுப்பெயரும் பொதுவினையும், அஃறிணையாண்பெண்ணிருபாற்கும் பொதுப்பெயரும் பொதுவினையும், அவ்வாண்பால்பெண்பால்களுள் ஒருபாலை எவ்வாறொழிக்கும்? 821. பெயரிடத்தும் வினையிடத்தும் எவ்வெழுத்தேனும் வேறெழுத்தாகத் திரிதலுமுண்டோ? 822. ஈற்றயலாகாரமன்றி அகரமுந் திரிதலுண்டோ? 823. வேற்றுமையுருபுகளும் மூவகைவினைச்சொல்லீறுகளும் எதிர்மறையில் வேறுபடுமோ உடன்பாட்டிற்போல வேறுபடாதே நிற்குமோ? 824. எதிர்மறையில் வினைச்சொல்லீறு வேறுபடுதல் எங்குமில்லையோ? 825. தொடர்மொழிகளுள், வேற்றுமையுருபுகள் தம்முள் விரவிப் பலவடுக்கிவரினும், வெவ்வேறு பலவடுக்கிவரினும், முற்றெச்சங்கள் வெவ்வேறு பலவடுக்கிவரினும் அப்பலவும், எவ்வாறு முடியும்? 826. வேற்றுமையுருபுகளையும் முற்றுவினைகளையும் எச்சவினைகளையும் முடிக்கவருஞ் சொல்லுக்கு நடுவே பிறசொற்கள் வருதலுண்டோ? 827. வேற்றுமையுருபுகளும் முற்றெச்சங்களுங் கொண்டு முடியும் எச்சமாகிய பெயரும் வினையும் அவற்றினீற்றில் வருமோ முதலில் வருமோ? 828. முதலில் வாரா எச்சப்பெயர்களும் உளவோ? 829. சாத்தன் வந்தான் என்புழி, வந்தானென்பதை எழுவாய்க்குப் பயனிலையாகக் கருதுங்காற் பொருளென்னை? 830 வந்தானென்பதற்குச் சாத்தனென்னும் பெயரைப் பயனிலையாகக் கருதுங்காற் பொருளென்னை? 831. நால்வகைச் சொற்களுள் ஒவ்வொன்றைக் கூறவே, அதனதனினங்கூறாதே அமைந்துகிடக்குமோ, இனமெல்லாங் கூறல்வேண்டுமோ? 832. திணைபாலிடங்கட்குப் பொதுவாகிய பெயர்வினைகளின் பொதுமையை நீக்குவன யாவை? 833. பெயரியல் வினையியல்களுள் அடங்கியும் அடங்காதும் வரும் எச்சங்களனைத்தும் எத்தனையாம்? 834. அவ்வெச்சங்கள் எவ்வாறு முடியும்? 835. இப் பத்தெச்சங்களுள்ளும் எவ்வெவற்றிற்கு எச்சச்சொற்கள் வெளிப்பட்டு நிற்கும், எவ்வெவற்றிற்கு எச்சச்சொற்கள் வருவித்துரைக்கப்படும்? 836. இசையெச்சமாவது யாது?

---

## தொகைநிலைத்தொடர்மொழி.

[தொகைநிலைத் தொடர்மொழி இனையவென்பது.]

௩௬௧. பெயரொடு பெயரும் வினையும் வேற்றுமை
முதலிய பொருளி னவற்றி னுருபிடை
ஒழிய விரண்டு முதலாத் தொடர்ந்தொரு
மொழிபோ னடப்பன தொகைநிலைத் தொடர்ச்சொல்.

இ - ள். பெயரொடு பெயரும் - பெயர்ச்சொல்லோடு பெயர்ச்சொல்லும்,—(பெயரொடு) வினையும் - பெயர்ச்சொல்லோடு வினைச்சொல்லும்,—வேற்றுமை முதலிய பொருளின் - பின்சொல்லப்படுமே வேற்றுமை முதலாகிய அறுவகைப் பொருட்புணர்ச்சிக்கண்,—அவற்றின் உருபு இடை ஒழிய - அவற்றினுருபுகள் நடுவிலே தொக்கு நிற்ப,—இரண்டு முதலாத் தொடர்ந்து ஒருமொழிபோல் நடப்பன - இரண்டுசொற்கள் முதலாகப் பலசொற்கள் தொடர்ந்து ஒருசொற்போல நடப்பவை,—தொகைநிலைத் தொடர்ச்சொல் - தொகைநிலைத் தொடர்ச்சொற்களாம். எ - று.

தொகைநிலையை வடநூலார் சமாசமென்பர்.

தொகையென்பது இங்கே யுருபு மறைதல். ஈண்டு உருபாவன: வேற்றுமைத்தொகையில்—வேற்றுமையுருபும், வினைத்தொகையில் இடைநிலை முதலாயினவும், பண்புத்தொகையில் பண்பை விளக்கும் (ஆகியவென்னுஞ்) சொல்லும், உவமைத்தொகையில் உவமவாசகமும், உம்மைத்தொகையில் உம் என்பதும், அன்மொழித்தொகையில் உடையான், உடையாள் முதலான சொல்லுமாம்.

பெயர்ச்சொல் நிலைமொழியாய் நிற்கப் பெயர்ச்சொல்லே வருமொழியாக வருதலும்; வினைச்சொல் வருமொழியாக வருதலுமன்றி; நிலைமொழியாக வினைச்சொன்னிற்ப வருமொழியாகப் பெயர்ச்சொல் வருந் தொகைநிலையு முண்டாதலின் அதனையுந் தழுவுதற்பொருட்டு நிலைமொழி வருமொழியென்று வரைந்தோதாது பெயரொடு பெயரும்வினையுமென்று பொதுப்படவோதினாரென்றறிக. இவ்வாறு பொருள்கொள்ளாவிடின் வினைத்தொகை யடங்காதவாறறிக. (௪௦)

[தொகைநிலைத்தொடர்ப்பாகுபாடு.]

௩௬௨. வேற்றுமை வினைபண் புவமை யும்மை
அன்மொழி யெனவத் தொகையா றாகும்.

இ - ள். வேற்றுமைத் (தொகை) - வேற்றுமைத்தொகையும்,—வினைத் (தொகை) - வினைத்தொகையும்,—பண்புத் (தொகை) - பண்புத்தொகையும்,—உவமைத் (தொகை) - உம்மைத்தொகையும்,—அன்மொழித் (தொகை) என - அன்மொழித்தொகையுமென,—அத்தொகை ஆறு ஆகும் - முன்னே சொல்லப்பட்ட தொகைநிலைத் தொடர்மொழிகள் ஆறுவகைப்படும்.

[வேற்றுமைத்தொகை.]

௩௬௩. இரண்டு முதலா மிடையா றுருபும்
வெளிப்பட லில்லது வேற்றுமைத் தொகையே.

இ - ள். இடை இரண்டு முதல் ஆம் ஆறு உருபும் - எழுவாய்க்கும் விளிக்குமிடையே நின்ற இரண்டாவது முதலிய ஆறுவேற்றுமையுருபுகளும்,—வெளிப்படல் இல்லது வேற்றுமைத் தொகை - தொக்கதொடர்மொழிகள் வேற்றுமைத்தொகைகளாம். எ - று.



Digitized By Roja Muthiah Research Library

இரண்டுமுதலாம் ஆறுருபும் எனவே முதலாவதும் எட்டாவதுமாகிய இருவகை வேற்றுமையு மொழிக்கப்பட்டுக் குறித்த ஆறுவேற்றுமைகளுந் தெரியப்படுதலின், இடையாறுருபும் வெளிப்படவில்லதென்றல் அநாவசிகமாதலின்; இரண்டுமுதலா ஆறுருபும் இடை வெளிப்படவில்லது வேற்றுமைத்தொகையென்று அந்வயஞ்செய்து பொருளுரைப்பது நன்று. 'பெயரொடு பெயரும்' என்னும் பொதுச்சூத்திரத்தில் 'அவற்றினுருபிடையொழிய' என்றதினாற் பெறப்பட்ட இடையைப் பின்னுங் கூறவேண்டாவெனின் தொகைநிலைத் தொடர்மொழி யிலக்கணங் கூறிய இடத்தில் அது பொதுவகையாற் பெறப்பட்டது. அறுவகைத் தொகையும் வகுத்துக் கூறப்படும்போது முதலாவதாகக் கூறப்படும் வேற்றுமைத்தொகையில் இடையென்பதனை எடுத்தோதினர். அதுவும் ஏனையவைந்தும் மறைதலிடையிலென்று ஞாபகங்கூறி வலியுறுத்தற்பொருட்டென்க.

(வரலாறு.)

நிலங்கடந்தான்..................இரண்டாம்வேற்றுமைத்தொகை.
தலைவணங்கினன் ........மூன்றும்வேற்றுமைத்தொகை.
சாத்தன்மைந்தன் ...............நாலாம்வேற்றுமைத்தொகை.
ஊர்நீங்கினன் ...................ஐந்தாம்வேற்றுமைத்தொகை.
சாத்தன்கை .....................ஆறும்வேற்றுமைத்தொகை.
குன்றக்கூகை ...................ஏழாம்வேற்றுமைத்தொகை.
யானைக்கோட்டுநுனி குறைத்தான்...இது பன்மொழித்தொடர்.

இனி ஆறுருபும் என்னு முற்றும்மையை எச்சவும்மையாக்கிக், கைக்களிறு, பொற்குடம்என ஒரோவிடத்து உருபும் பொருளும் உடன்றொக்கனவும் வேற்றுமைத்தொகையெனக் கொள்க. அவை விரியுமிடத்துக், கையையுடைய களிறு, பொன்னாற்செய்த குடம் என, விரியும்.

இனி ஆசிரியர் தொல்காப்பியனார்: "ஐயுங் கண்ணு மல்லாப் பொருள்வயின் — மெய்யுருபு தொகா விறுதி யான" எனக் கூறுதலால், ஐயுருபுங் கண்ணுருபு மல்லாத நான்குருபும் இடையிலன்றி இறுதியிலே தொகாவெனவும், அவ்விரண்டுருபும், நிலங்கடந்தான், கடந்தானிலம்; குன்றத்திருந்தான், இருந்தான்குன்றத்துஎன இடையிலும் இறுதியிலுந்தொகுமெனவுங் கொள்க.

வேற்றுமையுருபுகள் இடையிலே தொகுமென்றாராயினும், அவை விரிந்து நிற்குமிடத்து எப்பொருள்படுமோ அப்பொருள்படுமிடத்தே தொக்குநிற்கப் பெறும்; அப்பொருள்படாதவிடத்தே தொக்கு நிற்கப் பெறாவென்றுணர்க.

Digitized By Roja Muthiah Research Library

வ - று. சாத்தனையடித்தான் என ஐயுருபு விரிந்துநிற்குமிடத்துச் செயப்படுபொருள்படுதல்போலச், சாத்தனடித்தான் என ஐயுருபு தொக்குநிற்குமிடத்து அப்பொருள்படாமையால், இவ்விடத்தில் ஐயுருபு தொக்குநிற்கப்பெறுதென்றறிக.

சாத்தனொடு வந்தான் என ஒடு வுருபு விரிந்து நிற்குமிடத்து உடனிகழ்ச்சிப்பொருள்படுதல்போலச், சாத்தன் வந்தான் எனத் தொக்குநிற்குமிடத்து அப்பொருள்படாமையால், இவ்விடத்தில் ஒடு வுருபு தொக்குநிற்கப்பெறுதென்றறிக. ஏனையவு மிவ்வாறே காண்க.

வேற்றுமைத்தொகையை வடநூலார் தற்புருஷசமாசமென்பர். (௧௨)

[வினைத்தொகை.]

௩௬௪. காலங் கரந்த பெயரெச்சம் வினைத்தொகை.

இ - ள். காலம் கரந்த பெயரெச்சம் - காலம் பற்றிப் புடைபெயரும் வினையுருபாகிய தம்மிறுதிகள் தொக்க பெயரெச்சவினைகள், — வினைத்தொகை - வினைத்தொகைகளாம். எ - று.

காலமென்றது ஆகுபெயர். காலம் பற்றிப் புடைபெயர் வினையுருபுகள் தொகுமெனவே, முதனிலை மாத்திரந் தொகாதிருக்குமென்பது பெற்றும்.

(வரலாறு.)

| | |
|---|---|
| நேற்றுக் கொல் களிறு<br>முன் விடு கணை | இறந்தகால வினைத்தொகை. |
| இன்று கொல் களிறு<br>இப்பொழுது விடு கணை | நிகழ்கால வினைத்தொகை. |
| நாளைக் கொல் களிறு<br>பின் விடு கணை | எதிர்கால வினைத்தொகை. |

இவை, விரியுமிடத்துக், கொன்ற, கொல்கின்ற, கொல்லும். எ - ம். விட்ட, விடுகின்ற, விடும். எ - ம். முறையே விரியுமெனக்கொள்க.

உழுபடை, இறைகூடை, மிதிமரம், அரிவாள் என்பன முக்காலவினைத்தொகை.

கொல் களிறு, விடு கணை என்றற்போல்வனவும் முக்காலமும் பற்றிவரின், முக்காலவினைத்தொகை எனப்படும்.

வருபுனல், தருசுடர், நடந்திடுதிரை என வினைப்பகுதி விகாரப்பட்டும் வினைத்தொகை வரும்.

Digitized By Roja Muthiah Research Library

வினைத்தொகைக்கு நிலைமொழிவினையும் வருமொழி பெயருமாதலால், இவ்வினைத்தொகையாகவே அடுத்து இரண்டிறந்த பன்மொழித்தொடர் வருதலில்லையென்றுணர்க.

சிலபெயரெச்சவினைகளின் பகுதிமாத்திரம் அப்பெயரெச்சவினைகள்கொண்டுமுடியும் பெயர்களோடு மருவி யொருசொன்னீர்மைப்பட்டு வருவன வினைத்தொகையென்றறிக. கொல்களிறு, அடுபுலி, பாய்மா என்பன்போலொருசொன்னீர்மைப்பட்டன வினைத்தொகையாமன்றி, நடகளிறு, போகுதிரை என ஒருசொன்னீர்மைப்படாதன வினைத்தொகையாக வரமாட்டாவென்றறிக.

(சூத்திரம்.) "வினையின்றொகுதி காலத்தியலும்" எனப் பொதுப்பெயரெச்சத்து ஈறுதொக்கு மூன்றுகாலத்தும் நிகழ்வது வினைத்தொகையென்று, ஆசிரியர் தொல்காப்பியனாரு மிவ்வாறுகூறுதல் காண்க. (௩௫)

[பண்புத்தொகை.]

௩௬௫. பண்பை விளக்கு மொழிதொக் கனவும்
ஒருபொருட் கிருபெயர் வந்தவுங் குணத்தொகை.

இ - ள். பண்பை விளக்கும் மொழி தொக்கனவும்,—பண்போடு பண்பிக்கு உளதாகிய ஒற்றுமை நயத்தை விளக்குதற்கு வரும் ஆகியவென்னும் பண்புருபு தொக்குநின்றவையும்,—ஒருபொருட்கு இருபெயர் வந்தவும் - ஒருபொருளுக்குப் பொதுப்பெயருஞ் சிறப்புப்பெயருமாகிய இரு பெயர்கள் வந்தவையும்,—குணத்தொகை - பண்புத்தொகைகளாம். எ-று.

குணத்தொகையென்றதனால், ஒருபொருளுக்கு வரும் அவ்விருபெயர் நடுவில் ஆகியவென்னும் பண்புருபு தொக்குவருமென்பது பெறப்பட்டது.

பண்பெனப் பொதுப்படச்சொன்னதனால், வண்ணம், வடிவு, அளவு, சுவை முதலாயினவையெல்லாங் கொள்க.

(வரலாறு.)

| | |
|---|---|
| செந்தாமரை<br>கருங் குதிரை | வண்ணப் பண்புத் தொகை. |
| வட்டக்கல்<br>சதுரப் பலகை | வடிவுப் பண்புத் தொகை. |
| ஒரு பொருள்<br>முக் குணம் | அளவுப் பண்புத் தொகை. |
| துவர்க் காய்<br>இன் சொல். | சுவைப் பண்புத் தொகை. |

Digitized By Roja Muthiah Research Library

ஆயன் சாத்தன்
சாரைப் பாம்பு } இருபெயரொட்டுப் பண்புத்தொகை.

செந்நிறக் குவளை
கரும்புருவச்சிலை } பன்மொழித்தொடர்.

இவை, விரியுமிடத்துச், செம்மையாகிய தாமரை, வட்டமாகிய கல், ஒன்றாகிய பொருள், துவர்ப்பாகியகாய், ஆயனாகிய சாத்தன் செம்மையாகிய நிறமாகிய குவளை என விரியும்.

(சூத்திரம்.) வண்ணத்தின் வடிவினளவிற் சுவையினென், றன்ன பிறவு மதன்குண நுதலி, யின்ன திதுவென வரூஉ மியற்கை, யென்ன கிளவியும் பண்பின் றொகையே. எனச் சூத்திரஞ்செய்தார். இதன் பொருளாவது: இப்பல்வேறுவகைப்பட்ட பண்புகளில் அந்தந்தக் குணங்களைக் குறித்து இன்ன குணத்தையுடையது இதுவெனவரு மெவ்வகைப்பட்ட சொற்களும் இவை போல்வன பிறவும் பண்புத்தொகைச் சொற்களாமென்பது. பண்புத்தொகையை வடநூலார் கர்மதாரயசமாசமென்பர். (௧௭)

[உவமத் தொகை.]

௩௬௬. உவம வுருபில துவமத் தொகையே.

இ - ள். உவம உருபு இலது - வினை பயன் மெய் உரு என்பவற்றைப் பற்றி வரும் உவமவுருபுகள் தொக்க தொடர் மொழிகள்,— உவமத்தொகை - உவமத்தொகைகளாம். எ - று.

(வரலாறு.)

புலிக் கொற்றன்
குருவி கூப்பிட்டான் } வினையுவமத்தொகை.

மழைக்கை
கற்பக வள்ளல் } பயனுவமத்தொகை.

துடியிடை
குரும்பை முலை } மெய்யுவமத்தொகை. (மெய்-வடிவம்.)

பொற் சுணங்கு
பவள வாய் } உருவுவமத்தொகை. (உரு - நிறம்.)

மரகதக் கிளிமொழி
இருகண் மழைக்கை } பன்மொழித்தொடர்.

Digitized By Roja Muthiah Research Library

இவை, விரியுமிடத்துப், புலிபோலுங்கொற்றன், மழைபோலுங்கை, துடிபோலுமிடை, பொன்போலுஞ்சுணங்கு, மரகதம்போலுங் கிளிபோலு மொழி என விரியும். செயப்படுபொருள் குறித்தவிடத்தும், புலியைப்போலுங் கொற்றன் என ஐயுருபும் உடன் விரியும். (௪௫)

[உவமவுருபுகள்.]

௩௬௭. போலப் புரைய வொப்ப வுறழ
மானக் கடுப்ப வியைய வேய்ப்ப
நேர நிகர வன்ன வின்ன
என்பவும் பிறவு முவமத் துருபே.

இ - ள். போல—நிகர - இப்போல முதலாகிய செயவெனெச்சம் பத்தும்,—அன்ன இன்ன என்பவும் - அன்ன இன்ன என்னும் பெயரெச்சக்குறிப்பிரண்டும்,—பிறவும் - இவைபோல்வன பிறவும்,—உவமத்துருபு - உவமவுருபுகளாம். எ - று.

பிறவென்றதனால், போல், புரை என்றற்றொடக்கத்து வினையடியாற் பிறத்தற்குரிய மற்றை வினையெச்ச விகற்பங்களும், பெயரெச்சவிகற்பங்களும், பொருவ, ஏற்ப, அனைய, இகல, எதிர, சிவண, மலைய முதலானவையுங் கொள்க. (௧௬)

[உம்மைத்தொகை.]

௩௬௮. எண்ண லெடுத்தன் முகத்த னீட்டல்
எனுநான் களவையு ளும்மில தத்தொகை.

இ - ள். எண்ணல் எடுத்தல் முகத்தல் நீட்டல் எனும் நான்கு அளவையுள் - எண்ணலளவை எடுத்தலளவை முகத்தலளவை நீட்டலளவையென்னும் நால்வகையளவைகளாற் பொருள்களை அளக்குமிடத்துத் தொடரும் அவ்வளவைப் பெயர்களுள்,—உம் இலது அத்தொகை - உம்மையாகிய உருபு தொக்கு நிற்பவை அவ்வும்மைத்தொகைகளாம். எ - று.

[வரலாறு.]

| | |
|---|---|
| ஒன்றே கால்<br>கபில பரணர் | எண்ணலும்மைத்தொகை. |
| கழஞ்சே கால்<br>தொடியே கஃசு | எடுத்தலும்மைத்தொகை. |
| கலனே தூணி<br>நாழி யாழாக்கு | முகத்தலும்மைத்தொகை. |

Digitized By Roja Muthiah Research Library

| | |
|---|---|
| சாணங்குலம்<br>சாணரை | நீட்டலளவைத்தொகை. |
| சேரசோழ பாண்டியர்<br>புலி விற் கெண்டை | பன்மொழித்தொடர். |

இவை, விரியுமிடத்து, ஒன்றுங்காலும், கழஞ்சுங்காலும், கலனுந்தூணியும், சாணுமங்குலமும், சேரனுஞ்சோழனும் பாண்டியனும் என விரியும். மற்றைய உதாரணங்களையும் விரித்துக் காண்க.

கபிலபரணர்ப் பரவினன் என வரும்வழிக் கபிலனையும் பரணனையும் பரவினன் என வேற்றுமையுருபும் உடன் விரியுமன்றோ எனின், பரவினனென்னும் வருமொழி நோக்கி வேற்றுமைத்தொகையாகவும், கபிலபரணரென்னு நிலைமொழி யிரண்டையு நோக்கி உம்மைத்தொகையாகவுங் கொள்ளப்படுமென்க.

இனி ஆசிரியர் தொல்காப்பியனார். (சூத்) இருபெயர்பலபெயரளவின் பெயரே, யெண்ணியற்பெயரே நிறைப்பெயர்க்கிளவி, யெண்ணின் பெயரோடவ்வறுகிளவியுங், கண்ணியநிலைத்தே யும்மைத்தொகையே, என அறுவகையாற் கூறலின், இவர் நால்வகையளவையுளும் மிலதத்தொகையென்றல் மாறுகொளக்கூறலன்றோ எனின், அவர், எண்ணலளவையை, இருபெயர், பலபெயர், எண்ணியற்பெயர், எண்ணின்பெயர், என நான்காக வகுத்தும், முகத்தலளவை, நீட்டலளவை என்னுமிரண்டையும், அளவின்பெயரெனத் தொகுத்துங்கூறலால் அன்றென்க. வடநூலார் உம்மைத்தொகையைத் துவந்துவசமாசமென்பர். (சூ) "உவமைத்தொகையேயுவமவியல்" என்பது தொல்காப்பியம். (௧௭)

[அன்மொழித்தொகை.]

௩௧௯. ஐந்தொகை மொழிமேற் பிறதொக லன்மொழி.

இ - ள். ஐந்தொகை மொழிமேல் - வேற்றுமைத்தொகை முதலிய ஐவகைத் தொகைநிலைத் தொடர்மொழிகளுக்கும் புறத்தே—பிறதொகல்—அவையல்லாத பிறமொழிகளாகிய உருபுகள் தொக்குவருவன,—அன்மொழி - அன்மொழித்தொகைகளாம். எ - று.

(வரலாறு)

(௧.) பூங்குழல் என்பது இரண்டாம்வேற்றுமைத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. இது பூவையுடைய குழலினையுடையாள் என விரியும்.

பொற்றொடி என்பது மூன்றும்வேற்றுமைத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. இது பொன்னலாகிய தொடியினையுடையாள் என விரியும்.

Digitized By Roja Muthiah Research Library

கவியிலக்கணம் என்பது நான்காம் வேற்றுமைத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. இது கவிக்கிலக்கணஞ் சொல்லப்பட்ட நூல் என விரியும்.

பொற்றொடி என்பது ஐந்தாம்வேற்றுமைத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை. இது பொன்னினாகிய தொடியினையுடையாள் என விரியும்.

கிள்ளிகுடி என்பது ஆறாம் வேற்றுமைத்தொகைப்புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை. இது கிள்ளியினது குடியிருக்குமூர் என விரியும்.

கீழ்வயிற்றுக் கழலை என்பது ஏழாம் வேற்றுமைத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. இது கீழ்வயிற்றின்கண் எழுந்த கழலைபோல்வான் என விரியும்.

(உ.) தாழ்குழல் என்பது வினைத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. இது தாழ்ந்த குழலினையுடையாள் என விரியும்.

(௩.) கருங்குழல் என்பது பண்புத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. இது கருமையாகிய குழலினையுடையாள் என விரியும்.

(௪.) துடியிடை என்பது உவமத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. இது துடிபோலுமிடையினையுடையாள் என விரியும்.

(௫.) தகரஞாழல் என்பது உம்மைத்தொகைப்புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை. இது தகரமுஞாழலுங் கலந்துண்டாகிய சாந்து என விரியும்.

தகரஞாழன்முலை என்பது பன்மொழித்தொடர். இது தகரமுஞாழலுங் கூடியுண்டாகிய சாந்தையணிந்த முலையினையுடையாள் என விரியும்.

இனிப் பன்மொழித்தொடரில் அறுவகைத்தொகைகளுங் கலந்து தொகுமாறு:—திகழ்செவ்வான் மதித் திருமுகப் பூங்குழல் என வரும். இவை, விரியுமிடத்துத், திகழ்ந்த செம்மையாகிய வானத்தின்கண் மதிபோலுந் திருமுகத்தினையும் பூவையணிந்த குழலினையுமுடையாள் என விரியும்.

வடநூலார் அன்மொழித்தொகையை வெகுவிரீஹிசமாசமென்பர். ("சேஷோவெகுவிரீஹி:" என்பது அன்மொழித்தொகையை யுணர்த்திய வியாகரணசூத்திரம்.) ஆசிரியர் தொல்காப்பியனார். (சூத்) பண்பு தொக வரூஉங்கிளவியானு, மும்மை தொக்க பெயர்வயினானும், வேற்றுமைதொக்கபெயர்வயினானு, மீற்றுநின்றியலுமன்மொழித்தொகையே. என இம்முத்தொகையீற்றுநின்றியலு மன்மொழியெனக்கூறினார் இவரைந்தொகை மொழிமேலுஞ்மொழி தொகுமெனக்கூறியது மலைவாமெனின், அவர், எதிரது தழீஇயெண்ணிநின்ற எச்சவும்மைகளால் உவமத்தொகை வினைத்தொகை

யீற்றினுநின்றியலு மன்மொழியெனத் தமிழ்இயினர் அவ்வயக்காலத்தரியன போலுமென்க. (கூத்) வேற்றுமைமுதலியவைந்தொகை மொழியினு மீற்று நின்றியலு மன்மொழித்தொகையே, எனப் பிறர் கூறுதலுங் காண்க. (௧அ)

[தொகைநிலைத்தொடர்மொழிகளிற் பொருள்சிறக்கும் இடங்கள்.]

௩௭௦. முன்மொழி பின்மொழி பன்மொழி புறமொழி
எனுநான் கிடத்துஞ் சிறக்குந் தொகைப்பொருள்.

இ - ள். முன்மொழி - முன்மொழியும்,—பின்மொழி - பின்மொழியும்,—பன்மொழி - அனைத்துமொழியும்,—புறமொழி - அனைத்து மொழிக்கும் புறத்து வருமொழியும்,—எனும் நான்கு இடத்தும் - என்று சொல்லப் படும் இந்நான்கிடங்களுள் ஒன்றிலே,—தொகைப்பொருள் சிறக்கும் - தொகைநிலைத்தொடர்ப்பொருள் சிறந்து நிற்கும். எ - று.

(வரலாறு.)

(௧.) குடம் வனைந்தான், குழிசி வனைந்தான், வேங்கைப்பூ, சண்பகப்பூ, விரிபூ, குவிபூ, செந்தாமரை, வெண்டாமரை, வேற்கண், கயற்கண் என்பவைகளிலே, குடமுதலிய முனமொழிகள் இனம் விலக்கிநிற்றலால், அம்முன்மொழிகளிற் பொருள் சிறந்தன. (பூர்வபதப்பிரதானமாய் வந்தன.)

(௨.) நிலமுழுதான், கண்ணிமை, நீர்க்குவளை, சுடுதீ, செஞ்ஞாயிறு என்பவைகளிலே, நிலமுதலிய முன்மொழிகள் இனமும் இனத்தை விலக்குதலுமின்றி நிற்றலால், உழுதான்முதலிய பின்மொழிகளிற் பொருள் சிறந்தன. (உத்தரபதப்பிரதானமாய் வந்தன.)

(௩.) கபிலபரணர், சேரசோழபாண்டியர், புலிவிற்கெண்டை என்றற்றொடக்கத்து உம்மைத்தொகைகளிலே, அனைத்துமொழிகளிலும் பொருள் சிறந்தன. (சர்வபதப்பிரதானமாய் வந்தன.)

(௪.) பூங்குழல், உயிர்மெய் என்றற்றொடக்கத்து அன்மொழித்தொகைகளிலே, சொல்லுவோனுடைய கருத்து இவ்விருமொழிப் பொருண்மேலதாகாது இவ்விருமொழியு மல்லாத உடையாண் முதலிய புறமொழிப் பொருண்மேலதாதலால், அப்புறமொழிகளிற் பொருள் சிறந்தன. (அந்நியபதார்த்தப் பிரதானமாய்வந்தன.)

"தற்புருடன்றுவிகுக்கர்மதாரயன்றுமுதன்மை, பிற்பதமாமெழுவாயா மொரூஉத்தொகைபெண்ணணங்கே, முற்பதமவ்வியயீபாவமொப்பு முறைபிறழுஞ், சொற்பதந்தொக்கவையெல்லாமுதன்மைதுவந்தனுக்கே" என்னும் பிரயோக விவேகநூற் கருத்தையு முணர்க. (௧௧)



Digitized By Roja Muthiah Research Library

[இடத்தொகை பெயர்த்தொகைகட்கு வேறுபாடறிகுறி.

௩௭௧. வல்லொற்று வரினே யிடத்தொகை யாகும்
மெல்லொற்று வரினே பெயர்த்தொகை யாகும்.

இ - ள். வல்லொற்று வரின் இடத்தொகை ஆகும் - வல்லொற்றுனது இடையே வந்தால் இடத்தின்கண்ணேதொக்க தொகையாகும்,—மெல்லொற்று வரின் பெயர்த்தொகை ஆகும் — மெல்லொற்றுனது இடையே வந்தாற் பெயரின்கண்ணே தொக்கதொகையாகும். எ - று.

உ - று. (௧) வடுகக்கண்ணன் இது வடுகநாட்டிற்பிறந்த கண்ணன் என விரியும். வடுகங்கண்ணன் இது வடுகனுகிய கண்ணன் என்றுயினும், வடுகனுக்கு மகனுகிய கண்ணன் என்றுயினும் விரியும்

(௨) துளுவச்சாத்தன் இது துளுவநாட்டிற் பிறந்த சாத்தன் என விரியும். துளுவஞ்சாத்தன் இது துளுவனுகிய சாத்தன் என்றுயினும், துளுவனுக்கு மகனுகியசாத்தன் என்றுயினும்விரியும்

வடுகக்கண்ணனென்னும் இடத்தொகை 'மவ்வீறொற்றழிந்து' என்னுஞ்சூத்திரவிதியாலும் 'இயல்பினும்விதியினும்' என்னுஞ்சூத்திரவிதியாலும் புணர்ந்தது. வடுகங்கண்ணனென்னும் பெயர்த்தொகை 'சிலவிகாரமாமுயர்திணை' என்னும்விதியாற் புணர்ந்தது.

வல்லொற்றுவரின் மெல்லொற்றுவரின் என்றதனுல், வல்லினமுதன்மொழிவந்து புணர்ந்து இடத்தொகையும் பெயர்த்தொகையுமாய் ஐயுறநிற்கும்போது இக்குறியினுலே துணியப்படுமென்பதும், வடுகநாகன், வடுகவணிகன், வடுகவரசன் எனவரிற் சொல்லுவான் குறிப்பாலன்றி இவ்வாறு துணியப்படாவென்பதுந் தாமே போதருமென்க. (௨0)

[உம்மைத்தொகைக்குப் புறனடை.]

௩௭௨. உயர்திணை யும்மைத் தொகைபல ரீறே.

இ - ள். உயர்திணை உம்மைத்தொகை - உயர்திணையொருமையில்வரும் உம்மைத்தொகைகளானவை,— பலர் ஈறே - ரவ்வொற்றுங் கள்ளுமாகிய பலர்பால்விகுதியையுடையனவேயாம். எ - று.

உ - று. கபிலபரணர், கல்லாடமாமூலர், சேரசோழபாண்டியர், தேவன்றேவிகள் எனவரும். னகரவீறு இடையே கெடுதல் 'சிலவிகாரமாமுயர்திணை' என்பதனுலும், இறுதிக்கட்கெடுதல் இதனுட் 'பலரீறே' என்பதனுலுங்கொள்க.

பலரீறே என்னுந் தேற்றத்தால், அஃறிணையொருமையில் வரும் உம்மைத்தொகைகளும் பொதுத்திணையொருமையில்வரும் உம்மைத்தொகை

Digitized By Roja Muthiah Research Library

களுந் தத்தம் பன்மையீறாகவே வரல்வேண்டுமென்னும் நியதியின்றி, உண்மையின்மைகள், உண்மையின்மை, இராப்பகல்கள், இராப்பகல் எ-ம். தந்தைதாயர், தந்தைதாய்கள், தந்தைதாய்; சாத்தன்சாத்தியர், சாத்தன்சாத்திகள், சாத்தன்சாத்தி எ-ம். பன்மையீற்றாலும் இயல்பாய ஒருமையீற்றாலும் வருமென்பதாயிற்று. இயல்பாகிய ஒருமையீற்றால் வந்தனவாயின், உம்மைத்தொகையாகாது, கபிலன் பரணனிருவரும் வந்தாரென்றாற் போலச் செவ்வெண்ணுமன்றோவெனின், பலமொழிகளையுந் திரட்டி ஒருபிண்டமாகக் கூறியபோது உம்மைத்தொகையாகவும், பிளவுபடக்கூறிய போது செவ்வெண்ணாகவுங் கொள்ளப்படுமென்க. (உக)

[தொகைநிலைத் தொடர்மொழிகள் பலபொருள்படுதல்.]

௩௭௩. தொக்குழி மயங்குந விரண்டு முதலே
யெல்லைப் பொருளின் மயங்கு மென்ப.

இ-ள். தொக்குழி மயங்குந - வேற்றுமையுருபுமுதலாகிய உருபுகள் தொக்குநின்றவழிப் பொருள்களினாலே மயங்குந் தன்மையனவாகிய தொடர்மொழிகள்,—இரண்டுமுதல் எழு எல்லைப்பொருளின் மயங்கும் எ ன்ப - இரண்டுமுதல் ஏழீறாகிய பொருள்களால் மயங்கும் என்று சொல் லுவர்புலவர். எ-று.

(வரலாறு.)

(க) தெய்வவணக்கம் என்பது, தெய்வத்தை வணங்கும்வணக்கம், தெய்வத்துக்கு வணக்கம் என இருபொருள்களினாலே மயங்கியது.

(உ) தற்சேர்ந்தார் என்பது, தன்னைச்சேர்ந்தார், தன்னொடுசேர்ந்தார், தன்கட்சேர்ந்தார் என மூன்று பொருள்களினாலே மயங்கியது.

(௩) சொல்லிலக்கணம் என்பது சொல்லினதிலக்கணம், சொற்கிலக்கணம், சொல்லின்கணிலக்கணம், சொல்லினதிலக்கணஞ்சொன்னநூல் என நான்குபொருள்களினாலே மயங்கியது.

(௪) பொன்மணி என்பது, பொன்னாலாகியமணி, பொன்னாகியமணி, பொன்னின்கண்மணி, பொன்னொடுசேர்ந்தமணி, பொன்னும்மணியும் என ஐந்துபொருள்களினாலே மயங்கியது.

(௫) மரவேலி என்பது, மரத்தைக்காக்கும்வேலி, மரத்திற்குவேலி, மரத்தினதுவேலி, மரத்தின்புறத்துவேலி, மரத்தாலாகியவேலி, மரமாகியவேலி என ஆறுபொருள்களினாலே மயங்கியது.

(௬) சொற்பொருள் என்பது, சொல்லாலறியப்படும்பொருள், சொல்லினதுபொருள், சொற்குப்பொருள், சொல்லின்கட்பொருள், சொல்லு

ம்பொருளும், சொல்லாகியபொருள், சொல்லானதுபொருள் என ஏழுபொருள்களினாலே மயங்கியது. சொல்லானது பொருளென்றது தொகாநிலைப்பொருளாகிய எழுவாய்த்தொடர்.

(எ) புலி கொல் யானை என்னும் பன்மொழித்தொடர், புலியைக்கொன்றயானை, புலியானது கொன்றயானை, புலியினாலேகொல்லப்பட்டயானை என மூன்றுபொருள்களினாலே மயங்கியது.

இவ்வாறு செம்பொருள்கொள்ளாது வலிந்து பொருள்சொள்ளப்புகின், ஏழெல்லையென்னும் வரையறையினில்லாது பலவாமாதலின், அது தொன்னெறியன்றென்பது விளக்குதற்கு, என்ப என்றார். (உஉ)

பரீக்ஷைவினாக்கள்:—837. சொல்லோடு சொற்றொடரும் தொடர்ச்சி எத்தனைவகைப்படும்? 838. தொகைநிலைத்தொடர்மொழிகளாவன யாவை? 839. தொகைநிலைத்தொடர் எத்தனைவகைப்படும்? 840. வேற்றுமைத்தொகையாவன யாவை? 841. இடையிலும் இறுதியிலுந் தொகும் உருபுகளெவை? 842. இடையிலன்றி இறுதியிலே தொகா உருபுகளெவை? 843. வேற்றுமையுருபுகள் எவ்விடத்துந்தொகப்பெறுமோ? 844. வினைத்தொகையாவனயாவை? 845. கொல்களிறு முதலியன முக்காலமும்பற்றிவரின், எவ்வாறு பெயர்பெறும்? 846. வினைப்பகுதி விகாரப்பட்டும் வினைத்தொகைவருமோ? 847. பண்புத்தொகையாவனயாவை? 848. பண்பென்பன எவை? 849. செந்தாமரையென்பதிற் பண்பெது பண்பியெது? 850. உவமத்தொகையாவன எவை? 851. உவமை என்பற்றிவரும்? 852. உவமத்தொகையில் வேற்றுமையுருபும் உடன்விரிதலுண்டோ? 853. உவமவுருபுகளெவை? 854. உம்மைத்தொகையாவனயாவை? 855. கபிலபரணர்ப் பரவினன் என்பது எத்தொகையாகக் கொள்ளப்படும்? 856. அன்மொழித்தொகையாவன யாவை? 857. தொகைநிலைத்தொடர்மொழிகளினிடத்து எவ்வெம்மொழியிற் பொருள் சிறந்துநிற்கும்? 858. வல்லெழுத்து முதன்மொழிவந்து புணரப்பெற்று இடத்தொகையோ பெயர்த்தொகையோவென ஐயுறநிற்குந் தொகைகளில் இஃதின்னதென்பது எதனாலே துணியப்படும்? 859. உயர்திணையொருமையில் வரும் உம்மைத்தொகையீறு எவ்வாறு நிற்கும்? 860. அஃறிணையொருமை யும்மைத்தொகையீறு பொதுத்திணையொருமை யும்மைத்தொகையீறுகள் எவ்வாறு நிற்கும்? 861. இயல்பாகிய ஒருமையீற்றால் வந்தன உம்மைத்தொகையாவதெங்ஙனம், செவ்வெண்ணன்றோ? 862. தொகைநிலைத்தொடர்மொழிகளை விரித்துப் பொருள்கொள்ளுமிடத்து, அவற்றுள், ஒருபொருள் படுவனவன்றிப் பலபொருள் படுவனவுமுளவோ?

Digitized By Roja Muthiah Research Library

[தொகாநிலைத்தொடர்மொழி.]

கூஎச. முற்றீ ரெச்ச மெழுவாய் விளிப்பொருள்
ஆறுரு பிடையுரி யடுக்கிவை தொகாநிலை.

இ - ள். முற்று ஈரெச்சம் எழுவாய் விளிப் பொருள் - வினைமுற்றும் பெயரெச்சமும் வினையெச்சமும் எழுவாயும் விளியுமாகிய ஐவகைப்பொருள்களிலே பெயர்வினைகள் புணரும் புணர்ச்சியும், — ஆறு உருபு - வேற்றுமைப்பொருள்களில் அவற்றினுருபுகளாகிய இரண்டாவதுமுதலிய ஆறுருபுகளும் இடையே விரிந்துநிற்கப் பெயர்வினைகள் புணரும் புணர்ச்சியும், — இடை உரி - இடைச்சொற்புணர்ச்சியும் உரிச்சொற்புணர்ச்சியும், — அடுக்கு - ஒருசொல்லடுக்கிவரும் புணர்ச்சியுமாகிய, — இவை தொகாநிலை - இவ்வொன்பதுந் தொகாநிலைத்தொடர்மொழிகளாம். எ - று.

(வரலாறு.)

| | | |
|---|---|---|
| (க) | உண்டான்சாத்தன்<br>குழையன்கொற்றன் | வினைமுற்றுத்தொடர். |
| (உ) | உண்டசாத்தன்<br>கரியசாத்தன் | பெயரெச்சத்தொடர். |
| (ங) | உண்டுவந்தான்<br>உழுதன்றியுண்ணன் | வினையெச்சத்தொடர். |
| (ச) | சாத்தன்வந்தான் | எழுவாய்த்தொடர். |
| (ரு) | சாத்தாவா | விளித்தொடர். |
| (சு) | குடத்தைவனைந்தான்<br>வாளால்வெட்டினான்<br>இரப்போர்க்கீந்தான்<br>மலையினிழிந்தான்<br>சாத்தனதுகை<br>மலையின்கணுளி | வேற்றுமைத்தொகாநிலைத்தொடர். |
| (எ) | மற்றொன்று ...................... | இடைச்சொற்றொடர். |
| (அ) | நனிபேதையே ...................... | உரிச்சொற்றொடர். |
| (கூ) | பாம்புபாம்பு | அடுக்குத்தொடர். |

வேற்றுமைத்தொகை விரிந்தவிடத்து வேற்றுமைத்தொகாநிலைத்தொடராம். வேற்றுமையுருபும் பொருளும் உடன்றொக்கதொகைவிரிந்தவிடத்து, முன்னது வேற்றுமைத் தொகாநிலைத்தொடரும், பின்னது பெயரெச்ச

Digitized By Roja Muthiah Research Library

த்தொகாநிலைத்தொடருமாம். வினைத்தொகைவிரிந்தவிடத்துப் பெயரெச்சத்தொகாநிலைத்தொடராம். பண்புத்தொகையும் உம்மைத்தொகையும் விரிந்தவிடத்து இடைச்சொற்றொடராம். உவமத்தொகை விரிந்தவிடத்து, முன்னது இடைச்சொற்றொடரும், பின்னது இடைச்சொல்லடியாகப்பிறந்த பெயரெச்ச வினையெச்சத்தொடருமாம். அன்மொழித்தொகை விரிந்தவிடத்து வேற்றுமைத் தொகாநிலைத்தொடர் முதலாக ஏற்பனவாம். (உ௩)

பரீக்ஷை வினாக்கள்:— 863. தொகாநிலைத் தொடர்மொழிகளென்பன எவை? 864. வேற்றுமைத்தொகை விரிந்தவிடத்து என்ன தொகாநிலைத்தொடராம். 865. வேற்றுமையுருபும் பொருளும் உடன்றொக்கதொகை விரிந்தவிடத்து என்ன தொகாநிலைத்தொடராம்? 866. வினைத்தொகை விரிந்தவிடத்து என்ன தொகாநிலைத்தொடராம்? 867. பண்புத்தொகையும் உம்மைத்தொகையும் விரிந்தவிடத்து என்ன தொடராம்? 868. உவமத்தொகைவிரிந்தவிடத்து என்னதொடராம்? 869. வேற்றுமைத்தொகைப்புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை விரிந்தவிடத்து என்னதொடராம்? 870. வினைத்தொகைப்புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை விரிந்தவிடத்து என்னதொடராம்? 871. பண்புத்தொகைப்புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை விரிந்தவிடத்து என்னதொடராம்? 872. உவமைத்தொகைப்புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை விரிந்தவிடத்து என்னதொடராம்? 873. உம்மைத்தொகைப்புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை விரிந்தவிடத்து என்னதொடராம்?

## வழாநிலை வழுவமைதி.

[வழுவிகற்பங்கள்.]

௩எரு. திணையே பாலிடம் பொழுது வினாவிறை
மரபா மேழு மயங்கினும் வழுவே.

இ - ள். திணை பால் இடம் பொழுது வினா இறை மரபு ஆம் ஏழும் - இருதிணையும் ஐம்பாலும் மூவிடமும் முக்காலமும் வினாவும் விடையும் பலவகை மரபுகளும் ஆகிய ஏழும், — மயங்கின் வழு ஆம் - தத்தநெறி மயங்கின் வழுவாம். எ - று.

திணைமுதலியவனைத்தும் மரபாமாயினும், இங்ஙனம் விதவாதொழிந்தவற்றை மரபெனக் கொள்கவென்பார், அதனை இறுதியிலே சொன்னார். மரபாவது தொன்றுதொட்டு வழங்கு முறைமை.

Digitized By Roja Muthiah Research Library

(வரலாறு.)

(க) அவன்வந்தது திணைவழு.

(உ) அவன்வந்தாள் ....... பால்வழு.

(௩) யான்வந்தான் இடவழு.

(௪) நாளைவந்தான் காலவழு.

(௫) கறக்கிறவெருமை பாலோ சினையோ? ................. வினாவழு.

(௬) கடம்பூர்க்குவழியாது? எனின், * இடம்பூணி யென்னுவின் கன்றன்று என்பது } விடைவழு.

(எ) யானைமேய்ப்பானை இடையன் ஆடுமேய்ப்பானைப் பாகன் என்பன } மரபுவழு.

நூல் முரிந்தது, சட்டை உடைந்தது, தண்ணீர் தின்றான் என்பன வினைச்சொல்லில்வந்த மரபுவழு.

இவ்வாறே எழுவகை வழுக்களையுமுணர்ந்து, வழக்கினுள்ளுஞ் செய்யுளுள்ளும் அவை வாராமல் நீக்குக. (உ௪)

[திணையோடு வினாவிடையும் பாலோடு வினாவிடையும் வழுவாமற் காத்தல்.]

௩௭௬. ஐயந் திணைபா லவ்வப் பொதுவினும்
மெய்தெரி பொருண்மே லன்மையும் விளம்புப.

இ - ள். திணை பால் ஐயம் அவ்வப் பொதுவினும் - திணையைத்தையும் பாலையத்தையும் அவ்வவற்றின் பொதுச்சொல்லாலும்,—மெய்தெரி பொருண்மேல் அன்மையும் - துணிந்த பொருண்மேல் அல்லாத தன்மையை வைத்தும்,—விளம்புப - சொல்லுவர் புலவர். எ - று.

(வரலாறு.)

வினா. (க) ஒருபொருளைக் கண்டவிடத்துக் குற்றியோ மகனோ என்று திணையில் ஐயந்தோன்றியபோது, குற்றியோ மகனோ அவ்விடத்துத் தோன்றுகின்ற வுரு எனப் பொதுச்சொல்லால் வினவுக. குற்றிக்கும் மகனுக்கும் உருப்பொதுப்பட நிற்றலால், உருப்பொதுச்சொல்லாயிற்று. [குற்றி - மரக்கட்டை.] இங்கே உருவின் பரியாயமெல்லாங் கொள்க. இங்ஙனங் கூறுது, தோன்றுநின்றது, தோன்றுநின்றான் எனச் சிறப்புச்சொல்லாற் கூறிற் றிணைவழுவும் வினாவழுவுமாம்.

* இடம்பூணி — இடப்பக்கத்தில் எருது.

Digitized By Roja Muthiah Research Library

(௨) ஆண்மகனோ பெண்மகளோ என உயர்திணையிற் பாலையந்தோன்றியபோது, ஆண்மகனோ பெண்மகளோ அங்கே தோன்றுகிறவர் எனப் பொதுச்சொல்லால் வினவுக. ஆண்பெண்ணிரண்டல்லது பலர்பாலென வேறொன்றின்றி அவ்விருபாற்கும் பொதுப்பட நிற்றலால், தோன்றுகின்றவரென்பது பொதுச்சொல்லாயிற்று. இங்ஙனங் கூறாது, தோன்றுகிறவன், தோன்றுகிறவள் எனச் சிறப்புச்சொல்லாற் கூறிற் பால்வழுவும் வினவழுவுமாம்.

(௩) ஒன்றோ பலவோ என அஃறிணையிற் பாலையந்தோன்றியபோது, ஒன்றோ பலவோ இச்செய் புக்க பெற்றம் எனப் பொதுச்சொல்லால்வினவுக. பெற்றமென்பது பால்பகாவஃறிணைப்பெயராய் அத்திணையிருபாற்கும் பொதுப்பட நிற்றலாற் பொதுச்சொல்லாயிற்று. [செய் - வயல். பெற்றமென்பது பசு அல்லது காளை.] இங்ஙனங் கூறாது, புக்கது, புக்கன எனச் சிறப்புச்சொல்லாற் கூறிற் பால்வழுவும் வினவழுவுமாம்.

விடை. (௧) குற்றியோ மகனோ என்றையுற்றபோது, துணிந்தபொருள் குற்றியெனின், மகனன்று. எ - ம். மகனெனிற் குற்றியல்லன். எ - ம். துணிந்த பொருண்மேல் மற்றொன்றல்லாத தன்மையை வைத்துக் கூறுக. (இக்கருத்திற்குக் குற்றியன்று என்னல் சிறப்பாகாது.)

(௨) ஆண்மகனோ பெண்மகளோ என்றையுற்றபோது, துணிந்தபொருள் ஆண்மகனெனின், பெண்மகளல்லன். எ - ம். பெண்மகளெனின், ஆண்மகனல்லள். எ - ம். துணிந்தபொருண்மேல் மற்றொன்றல்லாத தன்மையை வைத்துக் கூறுக. (இக்கருத்துகளில் பெண்மகளல்லள். எ - ம். ஆண்மகனல்லன் எனவுங் கூறல் சிறப்பாகாது.)

(௩) ஒன்றோ பலவோ என்றையுற்றபோது, துணிந்தபொருள் ஒன்றெனின், பலவன்று. என்றும். பலவெனின், ஒன்றல்ல. எ - ம். துணிந்த பொருண்மேல் மற்றொன்றல்லாத தன்மையைவைத்துக் கூறுக. இக்கருத்துக்களில் பலவல்ல. எ - ம். ஒன்றன்று எனவுங்கூறல் சிறப்பாகாது.)

மகனன்று என்பதை மகனினன்று என ஐந்தாம்வேற்றுமைப்புணர்ச்சியென்பாருமுளர். அதுபோல்வரும் நீயல்லன் என்பதை அங்ஙனம் விரித்தல் கூடாமையால், அல்வழிப்புணர்ச்சியுள் எடுத்து விதந்த பதின்றைன்கின் புறத்ததாய் அடங்குமென்க. ஒழிந்த ஐந்துதாரணங்களும் அவ்வாறேயாமென்க.

Digitized By Roja Muthiah Research Library

மகனல்லன் அவ்வுருக்குற்றி எனக் கூறின் வேண்டாகூற்ருய்ச் சொற்பல்குதலென்னும் விடைவழுவாம். இனி ஆசிரியராகத் தியனுர் (சூ) "கண்டபொன்மடங்குமைக்கிளவி, நின்ரோர்வருவோரென்றுசொன்னிசழ்க, காணுவையமும்பல்லோர்படர்க்கை." எனக்கூறலும், தொல்காப்பியனாரும், "பான்மயக்குற்றவையக்கிளவி, தானறிபொருள்வயிற்பன்மைகூறல், உருவென்மொழியினுமஃறிணைப்பிரிப்பினு, மிருவீற்றுமுரித்தேசுட்டுங்காலை, தன்மைசுட்டலுமுரித்தெனமொழிப, வன்மைக்கிளவிவேறிடத்தான" எனக் கூறுதலுங் காண்க.

உருவெனமொழியினுமென்றும் பாடமுண்டு. (உ௫)

[திணைவழுவமைதி.]

௩௨௭ உயர்திணை தொடர்ந்த பொருண்முத லாறும்
அதனொடு சார்த்தி னத்திணை முடிபின.

இ-ள். உயர்திணை தொடர்ந்த பொருள் முதல்ஆறும் - உயர்திணையெழுவாயைத்தொடர்ந்த அஃறிணைப்பொருளாதியாறும், - அதனொடு சார்த்தின் - அவ்வுயர்திணையோடு சேர்த்து முடிக்கின், — அத்திணை முடிபின - அவ்வுயர்திணை முடிபினவாம். எ - று.

தொடர்தலாவது அஃறிணைப்பொருளாதியாறும் உயர்திணைக்குக்கிழமைப்பொருள்களாய் நிற்றல். சார்த்தலாவது உயர்திணையெழுவாயின் பயனிலையோடு அஃறிணையெழுவாயையும் உடன்முடித்தல்.

| | | |
|---|---|---|
| வ-று. | நம்பிபொன்பெரியன் | இங்கே உயர்திணையெழுவாயின் பயனிலையோடு அஃறிணையெழுவாயு முடிந்தததிக. |
| | நம்பிநாடுபெரியன் | |
| | நம்பிவாழுநாள்பெரியன் | |
| | நம்பிமூக்குக்கூரியன் | |
| | நம்பிகுடிமைநல்லன் | |
| | நம்பிநடைகடியன் | |

"சொற்ருெறுமிற்றிதன்பெற்றி" என்பதனுலே, கிணறு நீரூறிற்று, மாடு கோடு கூரிது என அஃறிணையோடு சேர்ப்பின் அஃறிணை முடிபினவாதலுங் கொள்க.

சார்த்தின் எனவே, சார்த்தாவிடின், வழாநிலையாக, நம்பிக்குப் பொன் பெரிது, மூக்குக் கூரிது எனத் தமமுடிபு கொள்ளுமென்க.

பொன்னென்னும் அஃறிணையெழுவாய், நம்பியென்னும் உயர்திணையெழுவாயின்து பயனிலையாகிய பெரியனென்னும் உயர்திணைவினையைக்கொண்டு முடிதலால் வழுவாகித், தொடர்புண்டாயிருத்தல்பற்றிச் சார்த்திமுடித்தலால் வழுவமைதியாயிற்று. (உ௬)



Digitized By Roja Muthiah Research Library

[திணைபான்மரபு வழுவமைதி.]

**௩௭௮.** திணைபால் பொருள்பல விரவின சிறப்பினும்
மிகவினு மிழிபினு மொருமுடி பினவே.

இ - ள். திணை - திணைகளும்,— பால் - பால்களும், — பலபொருள் - வெவ்வேறு வினைக்குரிய பல பொருள்களும், — விரவின - தத்தமிற்கலந்து ஒருதொடராக வருவனவாயின் அவை,— சிறப்பினும் மிகவினும் இழிபினும் ஒருமுடிபின - சிறப்பினாலும் மிகுதியினாலும் இழிவினாலும் ஒருமுடிபின வாகும். எ - று.

(வரலாறு.)

திணை: (௧.) "அங்கண் விசும்பி னகனிலாப் பாரிக்கும்—திங்களுஞ் சான்றோரு மொப்பர்மற் - றிங்கள்—மறுவாற்றுஞ் சான்றோரஃ தாற்றார் தெருமருந்து—தேய்வ ரொரு மாசுறின்" என்புழி, இருதிணையுங் கலந்து, சிறப்பினால் 'ஒப்பர்' என்னும் உயர்திணைமுடிபைப் பெற்றன. சான்றோர் திங்கள்போல மறுத் தாங்கமாட்டாமை இங்கே சிறப்பு.

(௨.) "பார்ப்பார் தவரே சுமந்தார் பிணிப்பட்டார்—மூத்தா ரிளையார் பசுப்பெண்டி ரென்றிவர்கட்—காற்ற வழி விலங்கினாரே பிறப்பிடைப்—போற்றி யெனப்படுவார்" என்புழி இருதிணையுங் கலந்து, மிகுதியால் 'இவர்கள்' என்னும் உயர்திணைமுடிபைப் பெற்றன. பசுவென அஃறிணைப்பொருள் ஒன்றேயாகப், பார்ப்பார் முதலிய உயர்திணைப்பொருள் ஏழாதல் இங்கே மிகுதி.

(௩.) "மூர்க்கனு முதலையுங் கொண்டது விடா" என்புழி, இருதிணையுங் கலந்து, இழிவினால் 'விடா' என அஃறிணைமுடிபைப் பெற்றன.

பால்: "நானு மென்சிந்தையு நாயகனுக் கெவ்விடத்தோந்—தானுந்தன் றையலுந் தாழ்சடையோ னாண்டிலனேல்—வானுந் திசைகளு மாகடலு மாயபிரான்—றேனுந்து சேவடிக்கே சென்றூதாய் கோத்தும்பீ" என்புழி, ஆண்பாலும் பெண்பாலுங் கலந்து சிறப்பினால் 'ஆண்டிலன்' என ஆண்பான்முடிபைப் பெற்றன. பெண்ணினும் ஆண் உயர்ந்தமை இங்கே சிறப்பு.

"சொற்பொரு ளிற்றிதன் பெற்றி" என்பதனாலே கலவாதெண்ணித், தோழனுந் தானும் வந்தான், தோழியுந் தானும் வந்தாள் என முடிதலுங் கொள்க.

Digitized By Roja Muthiah Research Library

மரபு: கறியுஞ் சோறுமுண்டான்; மாலையும்முடியுங் கவித்தான் என்புழி, வேறுவினைப் பல்பொருள்கள் கலந்து, சிறப்பினால் 'உண்டான்' 'கவித்தான்' என ஒருபொருட்குரிய வினைமுடிபைப் பெற்றன. உண்டலென்னும் வினைக்குரிய சோறு தின்றலென்னும் வினைக்குரிய கறியினும் தலைமையுடைமையும், கவித்தலென்னும் வினைக்குரிய முடி சூடுதலென்னும் வினைக்குரிய மாலையினுந் தலைமையுடைமையும் இங்கே சிறப்பு.

இங்கே இறுதியிற் சொல்லிய மரபுவழுவமைதி "வேறுவினைப் பல்பொரு டழுவிய பொதுச் சொல்லும்—வேறவற் றெண்ணுமோர் பொதுவினை வேண்டும்" என்னுஞ் சூத்திரத்தோடு மாறுகொளக் கூறலன்றோவெனின், சிறப்பு முதலிய குறியாது ஒத்த நிலைமையில் எண்ணியபோது முடியு மரபு அங்கே கூறுதலால், அதற்கு சிறப்புமுதலிய குறித்துவரும் இது மாறுகொளக் கூறலன்றென்க. (உஎ)

[திணைபால் வழுவமைதி.]

கூஎகூ. உவப்பினு முயர்வினுஞ் சிறப்பினுஞ் செறலினும்
இழிப்பினும் பாறிணை யிழுக்கினு மியல்பே.

இ - ள். உவப்பினும் - மகிழ்ச்சியினாலும்,—உயர்வினும் - மேன்மையினாலும்,—சிறப்பினும் - சிறப்பினாலும்,—செறலினும் - கோபத்தினாலும்,—இழிப்பினும் - பழிப்பினாலும்,—பால்திணை இழுக்கினும் இயல்பு - பாலுந் திணையும் வழுவி வரினும் இயல்பாம். எ - று.

(வரலாறு.)

பால்: (க.) தன்புதல்வனை என்னம்மை வந்தாள் என்பது உவப்பினால் ஆண்பால் பெண்பாலாயிற்று.

(உ.) ஒருவனை அவர் வந்தார் என்பது உயர்வினால் ஒருமைப்பால் பன்மைப்பாலாயிற்று.

(ஙு.) "தாதாய் மூவேழுலகுக்குந் தாயே" என்பது சிறப்பினால் ஆண்பால் பெண்பாலாயிற்று.

(ச.) "எனைத்துணைய ராயினு மென்னாந் தினைத்துணையுந்—தேரான் பிறனில்புகல்" என்பது செறலினாற் பன்மைப்பால் ஒருமைப்பாலாயிற்று.

(ரு.) பெண்வழிச் செல்வானை நோக்கி இவன்பெண் என்பது இழிப்பினால் ஆண்பால் பெண்பாலாயிற்று.

Digitized By Roja Muthiah Research Library

திணை: (க.) ஓர் பசுவை என்னம்மை வந்தாள் என்பது உவப்பினால் அஃறிணை உயர்திணையாயிற்று.

(உ.) "செந்தார்ப் பசுங்கிளியார் சென்றார்க்கோ ரின்னுரை—தந்தா ரேற்றந் தாரென் னின்னுயிர்" என்பது உயர்வினால் அஃறிணை உயர்திணையாயிற்று.

(ஙூ.) "தம்பொருளென்ப தம்மக்கள்" என்பது சிறப்பினால் உயர்திணை அஃறிணையாயிற்று.

(ச.) "வெவ்வுஞ் செய்கலான் றான்றோரா னவ்வுயிர்—போஒமளவு மோர் நோய்" என்பது செறலினால் உயர்திணை அஃறிணையாயிற்று.

(ரு.) ராமனுடைமை என்பது இழிப்பினால் உயர்திணை அஃறிணையாயிற்று.

இனிச் "சொற்றொறு மிற்றிதன் பெற்றி" என்பதனாலே, புதல்வனை அப்பன் வந்தான் என்றும், புதல்வியை அம்மை வந்தாள் என்றும், வழங்குமரபு வழுவமைதிகளுங் கொள்க. ()

[பால்வழு வழுவமைதி.]

கூஅ௦. ஒருமையிற் பன்மையும் பன்மையி னொருமையும்
ஓரிடம் பிறவிடந் தழுவலு முளவே.

இ-ள். ஒருமையின் பன்மையும் - ஒருமைப்பாலிற் பன்மைப்பாற் சொல்லையும்,—பன்மையின் ஒருமையும் - பன்மைப்பாலில் ஒருமைப்பாற் சொல்லையும்,—ஓரிடம் பிறவிடம் - ஓரிடத்திற் பிறவிடச்சொல்லையும்,—தழுவலும் உள - தழுவிக் கூறுதல்களும் உளவாம். எ - று.

(வரலாறு.)

பால்: (க.) வெயிலெல்லா மறைத்தது மேகம் என்புழி, அஃறிணையிலே வெயிலென்னும் ஒருமைப்பாலில் எல்லாமென்னும் பன்மைச்சொற் சேர்த்துச் சொல்லப்பட்டது. "அஃதை தந்தை யண்ணல்யானை யடுபோர்ச் செழியர்" என்புழி, உயர்திணையிலே தந்தையென்னும் ஒருமைப்பாலிற் செழியரென்னும் பன்மைச்சொற்சேர்த்துச் சொல்லப்பட்டது. அஃதை தந்தை அஃதைக்குத் தந்தையென விரியும். [அஃதையென்பது திக்கற்றவன் திக்கற்றவள் திக்கற்றது என உயர்திணையாணொருமை பெண்ணொருமை அஃறிணையொருமைகளில் விரவி நிற்பதோர் பொதுச்சொல்.] தந்தையென்னு மொருமையிற் செழியரெனப் பன்மை வந்தது வழு,

Digitized By Roja Muthiah Research Library

தனித்தனி ஒவ்வொருவராகக் கூடிச் செழியரென நின்ற பன்மையில், ஒவ்வொருவருந் தனித்தனி அஃதைக்குத் தந்தைபோல்வராதலால், வழுவமைதியாயிற்று.

(உ.) இரண்டுகண்ணுஞ் சிவந்தது என்புழி, அஃறிணையிலே இரண் டென்னும் பன்மைப்பாலிற் சிவந்ததென்னும் ஒருமைச் சொற்சேர்த்துச் சொல்லப்பட்டது. "புலையனெறிந்த பூச ற்றண்ணுமை - யேவலிளையர் தாய்வயிறு கரிப்ப" என்புழி, உயர்திணையிலே ஏவலிளையரென்னும் பன்மைப்பாலில் தா யென்னும் ஒருமைச்சொற் சேர்த்துச் சொல்லப்பட்டது. [ஏவலிளையர் - போர்புரிவீரர்.] ஏவலிளையர் தாய் ஏவலிளை யருக்குத் தாயென விரியும். சேனைமுழுமையுமுள்ள இளை யருக்குத் தாய் ஒருத்தியாதல் கூடாமையால் இங்கே தா யென ஒருமை வருதல் வழு; இச்சேனையிலே திரண்டு நி ன்ற இளையருள் ஒவ்வொருவருக்குந் தாயெனத் தனித்தனி சென்றியைதலால், வழுவமைதியாயிற்று.

இடம் (க.) சாத்தன்றாயிவை செய்வலோ என்புழி, யானெனச் சொல்லல் வேண்டுந் தன்மையிலே சாத்தன்றாய் எனப் படர்க்கைச் சொற் சேர்த்துச் சொல்லப்பட்டது. (சாத்தனுக்குத் தா யாயிருக்கிற யான் என்பது பொருள்.)

(உ.) "திண்பொரு ளெய்த லாகுந் தெவ்வரைச் செருக்கலாகு, ந ண்பொடு பெண்டிர் மக்கள் யாவையு நண்ணலாகு, மொ ண்பொரு ளாவ தையா வுடன்பிறப் பாக்க லாகா, வெம்பி யை யீங்குப் பெற்றே னென்னெனக் கரியதென்றான்." என் புழித் தன்றம்பியை முன்னிலைப்படுத்து அவனையே நோ க்கிக் கூறுதலால், நின்னையெனச் சொல்லல்வேண்டும் முன் னிலையிலே எம்பியையெனப் படர்க்கைச் சொற்சேர்த்துச் சொல்லப்பட்டது.

நீயோ வவனோ யாரிது செய்தார், யானோ வவனோ யாரிது செய்தார்; நீயோ வவனோ யானோ யாரிது செய்தார் என விரவி ஓரிடத்திற் பிறவிடம் வருதலுங் கொள்க. (உ௬)

[இடம் வழுவாமற் காத்தல்]

௩௭௧. தரல்வரல் கொடை செலல சாரும் படர்க்கை
எழுவா யிரண்டு மெஞ்சிய வேற்கும்.

Digitized By Roja Muthiah Research Library

இ-ள். தரல் வரல் கொடை செலல் படர்க்கை சாரும் - தரல் முதலிய இந்நான்கு சொற்களும் படர்க்கையிடத்தை யடையும்,—எழுவாய் இரண்டும் - இவற்றுள் முதலிலே நின்ற தரல் வரல் என்னு மிரண்டு சொற்களும்.—எஞ்சிய வேற்கும் - ஒழிந்த தன்மை முன்னிலைகளை யேற்கும். எ-று.

படர்க்கை, எஞ்சிய என்னுமிரண்டையும் எழுவாயாகவும், ஏனையவற்றைச் செயப்படுபொருளாகவும் வைத்துரைகொள்ளுதலு முண்டு.

தரல் வரல் கொடை செலல் என்பன அவ்வப் பகுதிகளை யுணர்த்திநின்றனவாதலின் அப்பகுதிகளாற் பிறக்கும் வினைவிகற்பங்களெல்லாங் கொள்க.

வ-று. அவனுக்குத் தந்தான்; அவனிடத்து வந்தான்; அவனுக்குக் கொடுத்தான்; அவனிடத்துச் சென்றான். எ-ம். எனக்குத் தந்தான்; என்னிடத்து வந்தான். எ-ம். உனக்குத் தந்தான்; உன்னிடத்து வந்தான். எ-ம், வரும்.

தரல் வரல் என்னு மிரண்டையுந் தன்மை முன்னிலைக்குங் கூட்டினமையாற் படர்க்கைக்கே சிறந்தன கொடை செலல் என்னு மிரண்டு மென்பதும், ஒழிந்த தரலும் வரலும் படர்க்கைக்கு அத்துணைச் சிறப்பின வல்லவென்பதும் பெற்றாம்.

(சூ.) "செலவினும் வரவினுந் தரவினுங் கொடையினு, நிலைபெறத் தோன்று மந்நாற் சொல்லுந், தன்மை முன்னிலை படர்க்கை யென்னு, மம் மூவிடத்து முரிய வென்ப." எ-ம். "அவற்றுள், தருசொல் வருசொல் லாயிரு கிளவியுந், தன்மை முன்னிலை யாயிரிடத்த" எ-ம். "ஏனையிரண்டும் படர்க்கையிடத்த." எ-ம். தொல்காப்பியனார் கூறுதலுங் காண்க. (௩௦)

[காலம்.]

௩௮௨. இறப்பெதிர்வு நிகழ்வெனக் கால மூன்றே.

இ-ள். காலம் - முன் சொல்லப்பட்ட காலம்,—இறப்பு எதிர்வு நிகழ்வு என மூன்று - இறந்தகாலமும் எதிர்காலமும் நிகழ்காலமுமென மூன்றாம். எ-று.

காலங்களின் பரத்துவாபரத்துவங்களை நோக்கி முறைப்படி அடுக்க வேண்டுமாயின் 'இறப்புநிகழ்வெதிர்வெனக்காலமூன்றே' என்னப்படும். (ஈண்டுப் பரத்துவம் - முன்மை, அபரத்துவம் - பின்மை.) வினையியலில் உ௪ஞ் சூத்திரத்தில் 'ஐந்தொன்றாறுமுக்காலமுமுறைதரும்.' என்றதற்கு முதலைந்துவகைவினையெச்சங்களும் இறந்தகாலத்தையும், அவற்றின் பின்னதாகிய செயவென்னும் வினையெச்சம் நிகழ்காலத்தையும், பின்னுள்ள ஆறுவகைவினையெச்சங்கள் எதிர்காலத்தையும் உணர்த்தும் என்பது பொருளாத

Digitized By Roja Muthiah Research Library

வின் முறைதரும் என்பதற்கியைய 'இறப்புநிகழ்வெதிர்வென' அடுக்குதலே பெரிதும் உபயோகமாம், காலமுறையை விவேகிகள் ஆராய்ந்து, கொள்ளத்தகுவதெதுவோ அதனைக்கொள்ளுக. இறப்பு நிகழ்வு எதிர்வு மூன்றும் ஒன்றற்கொன்று எதிராயினும் இறப்பிற்கு மிக்க எதிர்வுபற்றியும் பூத பவிஷ்ய வர்த்தமானமென்று கூறும் வடநூல் வழக்குப்பற்றியும், நிகழ்காலம்போல வெளிப்படைப்பொருளன்றி இறந்தகாலமெதிர்காலமிரண்டும் மறைபொருளாய் நிற்றலால் அவ்வொப்புமைபற்றி (முன்னர்க்கூறக்கடவதாகிய) இறந்தகாலத்தொடுசேர்த்தலும் எதிர்காலமிடைப்படுத்திக் கூறப்பட்டதன்றி 'முக்காலமுமுறைதரும்' என்னுமுறை எதிர்காலமிடைப்படுத்திய முறையென்று கருதினால் அவ்வினையெச்சங்களுக்குக் காலநியதி மிக்க விபரீதமாமென்று வித்தியார்த்திகளாய்த்துணர்ந்து விபரீதக்கருத்தை விலக்குக. (பூதம் - இறப்பு; பவிஷ்யம் - எதிர்வு; வர்த்தமானம் - நிகழ்வு.) வடமொழியிற் பூதகாலமும், பவிஷ்யகாலமும் பலவகைப்படும். அவற்றை ஈண்டுவிரிப்பிற் பெருகும். அப்பலவகையுடைமைபற்றியும் வடநூலிற் பூத பவிஷ்யங்களென்று முறைகூறப்பட்டனபோலும். (௩௧)

[காலவழுவமைதி.]

௩௮௩. முக்கா லத்தினு மொத்தியல் பொருளைச்
செப்புவர் நிகழுங் காலத் தானே.

இ - ள். முக்காலத்தினும் ஒத்து இயல் பொருளை - தந்தொழிலிடையறாமல் மூன்றுகாலங்களிலும் ஒருதன்மையை யுடையனவாய் நிகழும் பொருள்களை,—நிகழுங் காலத்தான் செப்புவர் - நிகழ்காலத்தினாற் சொல்லுவர் புலவர். எ - று.

வ - று. மலைநிற்கின்றது; தெய்வமிருக்கின்றது; கடவுளிருக்கின்றார் எனவரும். மலைக்கு நிற்றலும், தெய்வத்திற்கு இருத்தலும், கடவுட்கு இருத்தலும் முக்காலத்தினும் உள்ளனவாதல் காண்க.

மலை நிற்கும்; தீச்சுடும், திங்களியங்கும் எனச் செயயுமென்னுஞ்சொல்லாற் சொல்லுக. என்பது தொல்காப்பியத்தில் "முந்நிலைக்காலமுந்தோன்றுமியற்கை, யெம்முறைச்சொல்லுநிகழுங்காலத்து, மெய்ந்நிலைப்பொதுச்சொற்கிளத்தல்வேண்டும்." என்னுஞ்சூத்திரவுரைக் கருத்தென்றறிக.

இந் நன்னூற்சூத்திரத்தினும் நிகழ்காலத்தானே யென்னாது நிகழுங்காலத்தானே என்று உம்மீறாகக் கூறியதினால் அக்கருத்தை ஈண்டுமமைக்கினுமாம். (௩௨)

௩௮௪. விரைவினு மிகவினுந் தெளிவினு மியல்பினும்
பிறழவும் பெறூஉமுக் காலமு மேற்புழி.

Digitized By Roja Muthiah Research Library

இ-ள். விரைவினும் - விரைவினாலும்,—மிகவினும் - மிகுதியினாலும்,—தெளிவினும் - தெளிவினாலும்,—இயல்பினும் - இம்மூன்று காரணங்களுமின்றி இயல்பினாலும்,—முக்காலமும் பிறழவும் பெறூஉம் ஏற்புழி - மூன்றுகாலங்களும் ஒன்று மற்றொன்றாகச் சொல்லப்படவும் பெறும் ஏற்குமிடத்து. எ - று.

வ - று. (௧.) சோறு வேவாநிற்க அதனை யுண்டுபோதற் கிருப்பானை விரைவில் உடன் கொண்டுபோகவேண்டிய மற்றொருவன் பார்த்து இன்னும் உண்டிலையோவென்றால் உண்டேன் உண்டேன் என்பான். உண்ணுகின்றவனை அவ்வாறு வினாவினாலும் உண்டேனுண்டேன் என்பான். இங்கே விரைவுபற்றி எதிர்காலமும், நிகழ்காலமும் இறந்தகாலத்தாற் சொல்லப்பட்டன.

(௨.) அக்காட்டிற் புகிற் கூறை பறிகொடுத்தான்; களவு செய்யினைப்பிற் கையறுப்புண்டான். என்றவழி, மிகுதிபற்றி எதிர்காலம் இறந்தகாலத்தாற் சொல்லப்பட்டது. கூறை பறிகொடுத்தலுங் கையறுப்புண்ணுதலுந் தவறினுந் தவறுமாதலால் மிகுதியெனப்பட்டன.

(௩.) அறஞ்செயிற் சுவர்க்கம் புக்கான்; எறும்பு முட்டைகொண்டு திட்டையேறின் மழை பெய்தது. என்றவழித் தெளிவினால் எதிர்காலம் இறந்தகாலமாகச்சொல்லப்பட்டது. சுவர்க்கம் புகுதற்கு அறஞ்செய்தல் காரணமென்பது உரையளவையினாலும், மழைபெய்தற்கு எறும்பு முட்டையெடுத்து மேட்டிலேறுதல் அறிகுறியென்பது காட்சியளவையினாலும் தெளியப்பட்டமையால் தெளிவாயின. (உரையளவை - ஆகமப்பிரமாணம். காட்சியளவை - பிரத்தியக்ஷப்பிரமாணம்.)

(௪.) யாம் பண்டு விளையாடுவதிச்சோலை; யாம் பண்டு விளையாடுகிறதிச்சோலை என்றவழிக் காரணமின்றி இயல்பினால் இறந்தகாலம் எதிர்காலமாகவும் நிகழ்காலமாகவுஞ் சொல்லப்பட்டது. (௩௩)

[அறுவகை வினா.]

௩௮௫. அறிவறி யாமை யையுறல் கொளல்கொடை
ஏவ லறும்வினா வாறு மிழுக்கார்.

இ-ள். அறிவு - அறிதலும்,—அறியாமை - அறியாமையும்,—ஐயுறல் - சந்தேகித்தலும்,—கொளல் - கொள்ளுதலும்,—கொடை - கொடுத்தலும்,—

Digitized By Roja Muthiah Research Library

ஏவல் - ஏவுதலுமாகிய அறுவகைப்பொருளையும்,—தரும் வினா ஆறும் - இழுக்கார் - தருதலால் வரும் வினாக்கள் ஆறனையுந் தள்ளாது கொள்ளுவர் புலவர். எ - று.

வ - று: (க.) ஆசிரியன் இச்சூத்திரத்திற்குப் பொருள் யாது என்பது அறிவினா.

(௨.) மாணாக்கன் அப்படிச் சொல்வது அறியாவினா.

(௩.) குற்றியோ மகனோ என்பது ஐயவினா.

(௪.) பயறுளவோ வணிகீர் என்பது கொளல்வினா.

(௫.) சாத்தனுக்காடையில்லையா என்பது கொடைவினா. (கொடுக்கக்கருதி வினாவியது.)

(௬.) சாத்தா வுண்டாயா என்பது ஏவல்வினா. (உண் என்னும் ஏவலைப் பயப்பது. (௩௪)

[எண்வகை விடை.]

௩௮௫. சுட்டு மறைநே ரேவல் வினாதல்
உற்ற துரைத்த லுறுவது கூறல்
இனமொழி யெனுமெண் ணிறையு ளிறுதி
நிலவிய வைந்துமப் பொருண்மையி னேர்ப.

இ - ள். சுட்டு - சுட்டும்,—மறை - எதிர்மறுத்தலும்,—நேர் - உடன்படலும்,—ஏவல் - ஏவுதலும்,—வினாதல் - எதிர் வினாவுதலும்,—உற்றது உரைத்தல் - முன் எய்தியதைச் சொல்லுதலும்,—உறுவது கூறல் - பின் எய்துவதைச் சொல்லுதலும்,—இனம் மொழி - இனத்தைச்சொல்லுதலும்,—எனும் எண் இறையுள் - என்னுமிவ்வெட்டு விடைகளுள்,—இறுதி நிலவிய ஐந்தும் அப்பொருண்மையின் நேர்ப - ஈற்றில் விளங்கிய ஐந்தும் அவ்விடைப்பொருளைத் தருதலினாலே விடைகளாகவே தழுவிக்கொள்வார் புலவர். எ - று.

எனவே விடையாவது வெளிப்படைவிடையும் குறிப்புவிடையுமென இருவகைப்படுமென்பதாயிற்று. அவற்றுள் சுட்டு, மறை, நேர் என்னு மூன்றும் வெளிப்படைவிடை; ஏனைய ஐந்துங் குறிப்புவிடை. வெளிப்படைவிடையைச் செவ்வனிறையென்றும், குறிப்புவிடையை இறைபயப்பதென்றுங் கூறுவர். (இறை - விடை.)

எனவே முதன்மூன்றும் செவ்வன் இறையும், பின்னைய ஐந்தும் இறைபயப்பனவுமாமென்பதாயிற்று. (தாற்பரியார்த்தத்தால் விடையாகுதலை இறைபயப்பதென்றறிக.)



Digitized By Roja Muthiah Research Library

உ - று. (௧.) சிதம்பரத்திற்கு வழி யாது எனின், இது என்பது சுட்டுவிடை, (௨.) சாத்தாவிது செய்வாயா என்றவழி, செய்யேன் என்பது மறைவிடை; (௩.) செய்வேன் என்பது நேர்விடை; (௪.) நீசெய் என்பது ஏவல்விடை; (௫.) செய்யேனோ என்பது வினாவிடை; (௬.) உடம்பு நொந்தது, நோவாநின்றது என்பன உற்றதுரைத்தல்விடை; (௭.) உடம்புநோம் என்பது உறுவதுகூறல் விடை; மற்றையது செய்வேன் என்பது இனமொழிவிடை.

(சூ.) "செப்பும்வினாவும்வழாஅலோம்பல். எ-ம். வினாவுஞ்செப்பேவினாவெதிர்வரினே. எ-ம். செப்பேவழீஇயினும்வரைநிலையின்றே, யப்பொருள்புணர்ந்தகிளவியான." எ-ம். ஆசிரியர் தொல்காப்பியனார்கூறுதலுங் காண்க. (௩௫)

[வினாவிடைகளின் முதல் சினை வழுவாமை.]

௩௮௭. வினாவினுஞ் செப்பினும் விரவா சினைமுதல்.

இ - ள். வினாவினும் செப்பினும் - வினாவுதற்கண்ணும் விடைகொடுத்தற்கண்ணும்,—சினைமுதல் விரவா - சினையும் முதலும் (ஒற்றுமைகருதி) மயங்கச்சொல்லப்படாவாம். எ - று.

உ - று. கண் பிறழ்ந்ததோ கயல் பிறழ்ந்ததோ; சாத்தனல்லனோ கொற்றனல்லனோ. எ - ம். இவ்வாறு வினாவினார்க்கு, கண் பிறழ்ந்தது, கயல்பிறழ்ந்தது; சாத்தனல்லன், கொற்றனல்லன் எனல்வேண்டும். அன்றிக் கண் பிறழ்ந்ததோ எனச் சினையை வினவுவான் அதனையுடையாளைக் கருதி இவள் பிறழ்ந்தாளோ, கயல் பிறழ்ந்ததோ என வினவுதலும், இவள் பிறழ்ந்தாள் எனச் செப்புதலும்; இவ்வாறு முதலை வினவுவானுஞ் செப்புவானும் அதனையொழித்துச் சினையை வினவுதலுஞ் செப்புதலும் வழுவாமென்பதாயிற்று.

(சூ.) "செப்பினும் வினாவினுஞ் சினைமுதற்கிளவிக், கப்பொருளாகு முறழ்துணைப்பொருளே." என்பது தொல்காப்பியம். (உறழ்பொருள் - உவமைகருதாது மாறுபடக்கூறும்பொருள். துணைப்பொருள் - ஒப்புமைப் பொருள்.) (௩௬)

[மரபு.]

௩௮௮. எப்பொருளெச்சொலி னெவ்வா றுயர்ந்தோர்
செப்பின ரப்படிச் செப்புதன் மரபே.

இ - ள். எப்பொருள் - எந்தப்பொருளை,—எச்சொல்லின் - எந்தச்சொல்லினால்,—எவ்வாறு உயர்ந்தோர் செப்பினர் - எவ்வண்ணம் ஆன்றோர் சொ

Digitized By Roja Muthiah Research Library

ல்லினரோ,—அப்படிச்செப்புதல் - அப்பொருளை அச்சொல்லால் அவ்வண்ணஞ்சொல்லுதல்,—மரபு - மரபாம். எ - று.

மரபு - பழையமுறைமை. யானைக்கன்று; யானைக்குட்டி; குதிரைக்குட்டி, பசுக்கன்று, மான்கன்று; எ-ம். யானைமேய்ப்பான்பாகன், ஆடுமேய்ப்பான் இடையன்; ஆட்டுப்பிழுக்கை, எருமைச்சாணம் எனவும் வரும்.

இப்படியன்றி, பசுவின்குட்டி, குதிரைக்கன்று, யானைச்சாணம். எ-ம். யானைமேய்ப்பான் இடையன், ஆடுமேய்ப்பான்பாகன். எ-ம். கூறின் மரபுவழுவாம். நூலறுந்தது, தண்ணீர்குடித்தது. என்பன பொருட்கியைந்தவினைமரபு எனவும்; நூல் முரிந்தது, தண்ணீர் தின்றது என்பன பொருட்கியையாத மரபுவழுவெனவும் அறிக. எப்பொருள் எச்சொலின் உயர்ந்தோர் செப்பினர் என்றவளவிலே பொருண்மரபுகள் அடங்கவும் எவ்வாறு என்றுங் கூறியது வினைமரபுகளும் அடங்குதற்பொருட்டென்றறிக. எப்பொருள் எவ்வாறு செப்பினர் என்றுகூட்டிப் பெயர்ச்சொல்லுக்குப் புணர்க்கும் வினைச்சொன்மரபு கூறியவாறுமறிக. பின்வரும் 'வேறுவினைப் பல்பொருடழுவிய' என்னுஞ் சூத்திரப்பொருளுேக்கியும் வினைச்சொற்கு மரபுண்டென்பதறிக. (௩௭)

[மரபுவழாநிலை]

௩௮௬. வேறுவினைப் பல்பொரு டழுவிய பொதுச்சொலும்
வேறவற் றெண்ணுமோர் பொதுவினை வேண்டும்.

இ - ள். வேறுவினைப் பல்பொருள் தழுவிய பொதுச்சொல்லும் - வெவ்வேறுவினைகளுக்குரிய பலபொருள்களையும் ஒருங்கு தழுவி நிற்கும் ஒரு பொதுச்சொல்லும்,—வேறு அவற்று எண்ணும் - அவற்றின் சிறப்புச் சொற்களாக எண்ணிநிற்கும் பலசொற்களும்,—ஓர் பொது வினை வேண்டும் - ஒன்றற்குரிய சிறப்புவினையை வேண்டாது எல்லாவற்றிற்குமுரியதோர் பொதுவினையை வேண்டுமெனவாம். எ - று.

வ-று. (க.) அடிசில் என்பது உண்பன தின்பன நக்குவன பருகுவனவற்றிற்கெல்லாம் பொதுச்சொல்லாதலால், அடிசிலயின்றார் அடிசின் மிசைந்தாரென்க. அணியென்பது கவிப்பன கட்டுவன இடுவன தொடுவனவற்றிற்கெல்லாம் பொதுச்சொல்லாதலால், அணியணிந்தார் அணிதாங்கினரென்க. இயம் என்பது கொட்டுவன ஊதுவனவற்றிற்கெல்லாம் பொதுச்சொல்லாதலால், இயமியம்பினர் இயம்படுத்தார் என்க. படை என்பது எய்வன எறிவன வெட்டுவன குத்துவனவற்றிற்கெல்லாம் பொதுச்சொல்லாதலால், படைவழங்கினர் படைதொட்டாரென்க.

Digitized By Roja Muthiah Research Library

(௨.) சிலநாட்சோறுஞ் சிலநாண் மாவுஞ் சிலநாட் பாலுஞ் சிலநாள் நீருஞ் சிலநாட் சருகும் அயின்றார் அல்லது மிசைந்தாரெனச. முடியுங் குழையு மோதிரமு நெடுநாளும் அணிந்தார்; பறையுங் குழலு மியம்பினர்; வாளும் வேலும் வழங்கினரென்க.

(௩.) "வேறுவினைப்பொதுச்சொல்லொருவினை கிளவார். எண்ணுங்காலுமதுவதன்மரபே." என்றார் தொல்காப்பியனாரும். (௩௮)

௩௩௦. வினைசார் பினமிட மேவி விளங்காப்
பலபொரு ளொருசொற் பணிப்பர்சிறப் பெடுத்தே.

இ-ள். வினை சார்பு இனம் இடம் மேவி விளங்காப் பலபொருளொருசொல் - வினையும் சார்பும் இனமும் இடமும் பொருந்தியும் விளங்காத பல்பொருளொருசொல்லை,—சிறப்பு எடுத்துப் பணிப்பர் - சிறப்புச்சொல்லோடுகூட்டிச்சொல்லுவர் புலவர். எ-று.

எனவே, வினைமுதலியவற்றுள் ஒன்றைப்பொருந்தி விளங்கிக்கிடந்த பலபொருளொருசொல்லை வாளாகூறுவரென்பதாயிற்று.

உ-று. (௧.) மா என்பது மாமரத்திற்கும் வண்டிற்கும் குதிரைக்கும் திருவிற்கும் பொதுவான பலபொருளொருசொல். இப்பொருள்களுள், மாப்பூத்தது, மாக்காய்த்தது என்றவழி மரமென்பது வினையால் விளங்கிற்று. மா வீழ் மலர் என்றவழி வண்டென்பது சார்பால் விளங்கிற்று. தேர் கரி மாக் காலாள் என்றவழிக், குதிரையென்பது இனத்தால் விளங்கிற்று. மாமறுத்த மார்பன் என்றவழித், திருவென்பது இடத்தால் விளங்கிற்று. இவை சிறப்படையின்றி வாளாகூறப்பட்டன.

(௨.) இனி, மாவேறினான், மாவியாது என்றவழிக், குறித்தபொருள் விளங்காமையால், விளங்குதற்பொருட்டுப் பாய்மாவேறினான், மாமரமேறினான்; பாய்மாயாது, மாமரம்யாது எனச் சிறப்புச்சொல்லோடுகூட்டிக் கூறுக. மாவைக்கொண்டுவா என்பது பசித்தோனாற்சொல்லப்பட்டால் உணவுக்குரிய இடி மா வெனவும் கவசமிட்டுப் புறப்பட்டுநின்றோனாற் சொல்லப்படின் பரிமாவெனவும் குறித்துணரப்படுதலும் கொள்க. பிறவுமன்ன.

இவற்றை வினைவேறுபடாப் பலபொருளொருசொல்லென்றும், வினை சார்பு இனம் இடம் மேவிப் பொருள்விளங்கியதை வினைவேறுபடூஉம் பலபொருளொருசொல்லென்றும், வினைவேறுபடூஉம் பலபொருளொருசொல் வினைவேறுபடாது பொதுமையினிற்பினும் ஓரோரிடத்துக்காலமிடம்பற்றி

Digitized By Roja Muthiah Research Library

க் குறிப்பாற் பொருளுணர்த்தி நிற்குமென்றும் பொருள் விளங்க ஆசிரியர் தொல்காப்பியனுர் (௯.) "அவற்றுள், வினைவேறுபடூஉம் பலபொருளொருசொல், வேறுபடுவினையினு மினத்தினுஞ் சார்பினுந், தேறத்தோன்றும் பொருடெரிநிலையே." எ - ம். வினைவேறுபடாஅப் பலபொருளொருசொன், னினையுங்காலைக்கிளந்தாங்கியலும்." எ - ம். "ஒன்றுவினை மருங்கி னென்றித்தோன்றும்." எ - ம். சூத்திரஞ்செய்தவாறுங் காண்க. (௩௩)

௨௬௩. எழுத்திய றிரியாப் பொருடிரி புணர்மொழி
இசைத்திரி பாற்றெளி வெய்து மென்ப.

இ - ள். எழுத்து இயல் திரியாப் பொருள் திரி புணர்மொழி - எழுத்தினது தன்மை வேறுபடாது பொருள் வேறுபட்டுச்சொல்லும் பொருளும் ஐயுற நிற்குந் தொடர்மொழிகள், — இசைத்திரிபால் தெளிவு எய்தும் என்ப - குறிக்கப்பட்ட சொற்களி னிறுதியு முதலுந்தோன்ற இசையறுத்துச் சொல்லும் வேறுபாட்டினுலே துணியப்படுமென்று சொல்லுவர் புலவர். எ - று.

எனவே அவ்வாறு இசையறுத்துக் கூறல் மரபென்பதாயிற்று.

வ-று. செம்பொன்பதின்றொடி, நாகன்றேவன் போத்து, குன்றேறுமா, குறும்பரம்பு என வரும். இவை, செம்பொன் - பதின்றொடி என இசையறுத்துக் கூறின், செம்பொன் பத்துப்பலம். எ - ம். செம்-பொன்பதின்றொடி என இசையறுத்துக் கூறின் செம்பு ஒன்பதின்றொடி - செம்பு ஒன்பது பலம். (தொடி - பலம்.) எ - ம். நாகன்-றேவன்-போத்து என இசையறுத்துக் கூறின், நாகனுந் தேவனும் போத்தும். எ - ம். நாகன்றே-வன்போத்து என இசையறுத்துக் கூறின், இளம் பெண்ணெருமையன்று முதிர்ந்த எருமைக்கடா. எ - ம். குன்றேறு - மா என இசையறுத்துக்கூறின், குன்றின்மேலேறுத விலங்கு. எ - ம். குன்றே றுமா (-குன்று ஏறு ஆமா) என இசையறுத்துக்கூறின், குன்றின்மேலேறுங் காட்டுப்பசு எ-ம் குறும்ப-ரம்பு என இசையறுத்துக் கூறின், குறுநிலமன்னருடைய அம்பு. எ - ம். குறும்-பரம்பு என இசையறுத்துக்கூறின், குறுமையாகிய பரம்பு (பரம்பு - சேருழுதவயலை மட்டஞ்செய்யும் பலகை,) எ - ம். பொருடுணியக் கிடந்தமை காண்க.

"தள்ளா விடத்தேர் தடந்தா மரை யுடைப்ப, எள்ளா வரிமானிடர் மிகுப்ப, உள்வாழ்தேம், சிந்தந் தகைமைத்தே யெங்கோன் றிருவுள்ளம், நந்துந்தொழில் புரிந்தார் நாடு." இதில் (௧.) தள்ளா-இடத்து-ஏர்-தடம்-தாமரை. எ-ம். (௨.) தள்ளா—விடத்தேர்—தடம்-தாம்—மரை. எ-ம், (௩.) எள்ளா-அரி-மானிடர்-மிகுப்ப. எ-ம், (௪.) எ

ROJA MUTHIAH
47, HOSPITAL STREET
KOTTAIYUR-623 106
P. M. DIST - TAMIL NADU
INDIA

Digitized By Roja Muthiah Research Library

ள்ளா-அரிமான்-இடர்-மிகுப்ப. எ-ம். எழுத்து வேறுபடாத தொடர்மொழி வெவ்வேறுபொருளுக்கு வெவ்வேறா யிசைந்துவந்தமை காண்க. (க) ம் பொருள்: நீங்காத நிலத்து ஏர் தடாகங்களின் தாமரைகளை எ-ம். (உ) ம் பொருள்: விலகாத விடத்தேரென்னு மரத்தையும் மலைப்பக்கங்களைத் தாவும் மரைமிருகங்களையும். எ-ம். (ஙு)ம் பொருள்: இகழப்படாத சூடுகளை மானிடர் திரட்ட. எ-ம். (ச) ம் பொருள்: இகழப்படாத சிங்கம் துன்பமிகச்செய்யவும், எ-ம். அறிக.

"பேரவாவொடு மாசுணம் பேரவே, பேரவாவொடு மாசுணம் பேரவே; ஆரவாரத்திறேனுடு மருவியே, ஆரவாரத்திறேனுடு மருவியே." பேர்-அவாவொடு-மா சுண்ணம்-பேரவே எனவும், பேர் அவாவொடு மாசுணம் பேரவே. எனவும்; ஆர வாரத்தினேடு மருவியே. எ-ம், ஆரவாரத்தின் ஓடும் அருவியே. எனவும் பொருளுக்கேற்ப இசை திரிந்தமை காண்க. (சுண்ணம் - பொற்பொடி; மாசுணம் - பெரும்பாம்பு; ஆர - நிறைய; வாரம் - தீரம்; ஆரவாரம் - பேரொலி. ஆர-ஆரத்தினேடும்-என்றுபிரிப்பினுமாம். ஆரம் - முத்து. (௪௦)

[மரபு வழாநிலையும் வழுவமைதியும்.]

௩௩௨. ஒருபொருண் மேற்பல பெயர்வரி னிறுதி
ஒருவினை கொடுப்ப தனியு மோரோவழி.

இ-ள். ஒருபொருள் மேல் பல பெயர் வரின் - ஒருபொருளின்மேலே பலபெயர்கள் வருமாயின்,— இறுதி ஒருவினை கொடுப்ப - பொருளொன்றேயென்பதுதோன்ற இறுதியில் ஒருமுடிக்குஞ்சொல்லைக் கொடுத்துக் கூறுவர்,— ஒரோவழி தனியும் (கொடுப்ப) - ஒருபொருளாகுதை தவறாத) சிலவிடத்தில் (முடிக்குஞ்சொல்லை) பெயர்தொறுங் கொடுத்துங் கூறுவர் புலவர். எ-று.

வ-று. (க.) ஆசிரியன் பேரூர்க்கிழான் சாத்தன் வந்தான். எ-ம். "குயிலைச் சிலம்படிக் கொம்பினைத் தில்லையெங் கூத்தப்பிரான், கயிலைச் சிலம்பிற்பைம் பூம்புனங் காக்குங் கருங்கட்செவ்வாய், மயிலைச் சிலம்பகண் டியான்போய் வருவன்வண் பூங்கொடிகள், பயிலச் சிலம்பெதிர் கூய்ப்பண்ணை நண்ணும் பளிக்கறைக்கே." எ-ம். வரும். இவை, இறுதியில் முறையே வந்தான். எ-ம். கண்டு. எ-ம். ஒரு முடிக்குஞ்சொல்லைக் கொண்டன.

"தேரன்றருமயிர்திலையெயினர்கள்செய்த, மாதவந்தனைப்பெண்ணினுக்கரசைமற்றெனக்குக், காதனல்கியேநல்லருள்புரிந்த காரிகையைப், பேதையென்பதேபேதைமையென்றனன்பெ

Digitized By Roja Muthiah Research Library

ரியோன்." எ-ம். "ஆவியைச்சனகன்பெற்றவென்னுந்தையமிர் தின்வந்த, தேவியைப்பிரிந்தபின்பு." எ-ம். முறையே பேதையென்பது. எ-ம். பிரிந்த. எ-ம். ஒருமுடிக்குஞ்சொற்கொண்டமை காண்க.

(உ.) "மூவர்கண் முதல்வன் வந்தான் முக்கணான் குமரன் வந்தான், மேவலர் மடங்கல் வந்தான் வேற்படை வீரன் வந்தான், ஏவருந் தெரிதற்கரிய திருந்திடு மொருவன் வந்தான், தேவர்க டேவன் வந்தா னென்றன சின்னமெல்லாம்" என்புழி முதல்வன், குமரன், மடங்கல், வீரன், ஒருவன், தேவன் என்பவை முருகன் என்னும் ஓர் பொருளே யென்பது தெளியநின்றமையினாலே வந்தான் என முடிக்குஞ் சொற்பெயர்தொறுங் கொடுக்கப்பட்டமை காண்க. (௪௪)

௩௬௩. திணைநிலஞ் சாதி குடியே யுடைமை
குணந்தொழில் கல்விச் சிறப்பாம் பெயரொ
டியற்பெய ரேற்றிடிற் பின்வரல் சிறப்பே.

இ - ள். திணை - ஐந்திணையும்,—நிலம் - தேயமும்,—சாதி - குலமும்,—குடி - குடியும்,—உடைமை - உடைமையும்,—குணம் - குணமும்,—தொழில் - தொழிலும்,—கல்வி - வித்தையும் ஆகிய இவற்றைப்பற்றிவரும்,- சிறப்பு ஆம் பெயரொடு - சிறப்புப்பெயருடனே,—இயற்பெயர் ஏற்றிடின்- இயற்பெயரை ஒருபொருள் ஒருங்கேற்குமாயின்,—பின் வரல் சிறப்பு - அவ்வியற்பெயர் பின்வருதல் சிறந்தமரபாம். எ - று.

பின்வரல் சிறப்பென்றதனால், முன் வருதலுமுண்டென்பதும், முன் வருதல் வழுவமைதியென்பதும் பெற்றாம்.

இயற்பெயர் குரவரால் ஒருவர்க்கு ஆதியிலிட்டபெயர். சிறப்புப்பெயர் - கல்விமுதலானவேதுப்பற்றிப் பின்னுண்டானபெயர். பின்னுண்டான வரிசை ஆக்கப்பெயரென்று தோன்ற ஆம்பெயரொடென்றது முணர்க.

(வரலாறு.)

| (வழாநிலை) | (வழுவமைதி) | |
|---|---|---|
| குன்றவன் கொற்றன் | கொற்றன் குன்றவன் | திணை. |
| அருவாளனழகன் | அழக னருவாளன் | நிலம். |
| பார்ப்பான் பாராயணன் | பாராயணன் பார்ப்பான் | சாதி. |
| ஊர்கிழா னோணன் | ஓண னூர்கிழான் | குடி. |
| பொன்னன் பொறையன் | பொறையன் பொன்னன் | உடைமை. |
| கரியன் கம்பன் | கம்பன் கரியன் | குணம். |
| நாடகி நம்பி | நம்பி நாடகி | தொழில். |
| ஆசிரிய னமிழ்தன் | அமிழ்த னாசிரியன் | கல்வி. |

Digitized By Roja Muthiah Research Library

இன்னும், இயற்பெயர் முன்வருமிடத்து, வைத்தியநாதநாவலன், சச்சியப்பப்புலவன் என அவ்வியற்பெயரிறுதி விகாரமாகவருதலும், இயற்பெயரிறுதியும் வருமொழிமுதலும் விகாரமாகிவருதலுங் காண்க.

(கு.) "சிறப்பினாகியபெயர்நிலைக்கிளவிக்கு, மியற்பெயர்க்கிளவிமுற்படக்கிளவார்." என்றார் தொல்காப்பியனார். அவர் இயற்பெயர்பிற்படக்கிளத்தலை "கடிசொல்லில்லைகாலத்துப்படினே." என்பதனாற் கொள்ளவைத்தார். (௩௨.)

௩௯௪. படர்க்கைமுப் பெயரோ டணையிற் சுட்டுப்
பெயர்பின் வரும்வினை யெனிற்பெயர்க் கெங்கும்
மருவும் வழக்கிடை செய்யுட் கேற்புழி.

இ - ள். படர்க்கை முப்பெயரோடு சுட்டுப்பெயர் அணையின் - படர்க்கையிடத்தையுடைய உயர்திணைப்பெயர் அஃறிணைப்பெயர் விரவுப்பெயர் என்னு மூவகைப்பெயர்களோடு சுட்டுப்பெயர் சேரின்,— பின் வரும் வினை எனின் - அச்சுட்டுப்பெயர் அம்மூவகைப்பெயர்க்கும் பின் வரும் அவ்விடத்தே வினையாகிய முடிக்குஞ்சொல் வருமாயின்,— பெயர்க்கு எங்கும் மருவும் - அம்முடிக்குஞ்சொல்லில்லையாயின் அப்பெயர்க்குப் பின்னுமுன்னும் வரும்,— வழக்கிடை - இம்மரபுவழக்கத்தினிடத்தவாம்,— செய்யுட்கு ஏற்புழி - செய்யுளிடத்தே நியதியின்றி வேண்டியவாறே வரப்பெறும், எ - று.

வ - று. (க.) நம்பி வந்தான் அவனுக்குச் சோறிடுக. எ - ம். எருது வந்தது அதற்குப் புல்லிடுக. எ - ம். சாத்தன் றெய்வம் அவனுக்குப் பலியிடுக. எ - ம். சாத்தன் வந்தது அதற்குப் புல்லிடுக. எ - ம். வினை நிகழ்வழிச் சுட்டுப்பெயர் பின் வந்தன.

(உ.) நம்பியவன்; அவனம்பி எனப் பெயர்க்குப் பின்னுமுன்னுஞ் சுட்டுப்பெயர் வந்தன.

(ந.) "அவனணங்கு நோய்செய்தா ளாயிழாய் வேலன்—விறன்மிகுதார்ச் சேந்தன்பேர் வாழ்த்தி முகமமர்ந்—தன்னை யலர்கடப்பந் தாரணியி னென்னை கொல்—பின்னை யதன்கண் விளைவு" எனச் செய்யுளில் வினை வருவழியும் முன் வந்தது.

சுட்டுப்பெயர் செய்யுளிடத்துப் பின் வருதல் வழாநிலை; முன் வருதல் வழுவமைதி. வழக்கிடத்து வினைநிகழ்வழிப் பின்வருதல் வழாநிலை.

(கு.) "இயற்பெயர்க்கிளவியுஞ் சுட்டுப்பெயர்க்கிளவியும், வினைக்கொருங்கியலுங் காலந்தோன்றிற், சுட்டுப்பெயர்க்கிளவி முற்படக்கிளவா, ரியற்பெயர்வழிய வென்மனார் புலவர்." எ - ம். முற்படக்கிளத்தல் செய்யு

Digitized By Roja Muthiah Research Library

யுணருநரித்தே. எ - ம். சுட்டுமுதலாகியகாரணக்கிளவியுஞ், சுட்டுப் பெயரியற்கையிற்செறியத்தோன்றும்." எ - ம். கூறினார் ஆசிரியர் தொல்காப்பியனார். (௪௩)

௩௯௫. அசைநிலை பொருணிலை யிசைநிறைக் கொருசொல் இரண்டு மூன்றுநான் கெல்லைமுறை யடுக்கும்.

இ - ள். அசைநிலை - அசைநிலைக்கும்,—பொருணிலை - விரைவு வெகுளி உவகை அச்சம் அவலமுதலிய பொருணிலைக்கும்,—இசைநிறைக்கு - இசைநிறைக்கும்,—ஒருசொல் இரண்டு மூன்று நான்கு எல்லை முறை அடுக்கும் - ஒருமொழி இரண்டுமூன்று நான்களவுமுறையே அடுக்கும்.

எனவே, அசைநிலைக்கிரண்டும், பொருணிலைக்கிரண்டுமூன்றும், இசைநிறைக்கிரண்டும் மூன்றும் நான்கும் அடுக்குமென்பதாயிற்று.

(வரலாறு.)

(௧.) அன்றே யன்றே.................................அசைநிலை.
(௨.) உண்டேனுண்டேன், போ போ போ...............விரைவு.
(௩.) எய்யெய்; எறி யெறி யெறி ..வெகுளி.
(௪.) வருக வருக; பொலிக பொலிக பொலிக............உவகை.
(௫.) பாம்பு பாம்பு; தீத்தீத்தீ......... ..அச்சம்.
(௬.) உய்யேனுய்யேன்; வாழேன் வாழேன் வாழேன்... அவலம்.
(௭.) { ஏயே யம் பனை மொழிந்தனள் யாயே / நல்குமே நல்குமே நல்குமே நாமகள் / பாடுகோ பாடுகோ பாடுகோ பாடுகோ } இசைநிறை.

ஒருசொல்லைப் பலகாற் சொல்லுதல் வழுவாயினும், இவ்விடத்தே ஆமென்றல் வழுவமைதியும், இதற்கு இவ்வெல்லை கடவாதென்றல் வழுவாமற் காத்தலுமாம். (௪௪)

[மரபுவழாநிலை.]

௩௯௬. இரட்டைக் கிளவி யிரட்டிற்பிரிந் திசையா.

இ - ள். இரட்டைக்கிளவி - இரட்டைச்சொற்கள்,—இரட்டின் பிரிந்து இசையா - அவ்விரட்டிப்பினின்றும் பிரிந்து தனித்தொலியாவாம்.

எனவே, வலிந்து பிரித்துக்கூறிற் பொருள்படாதென்பதும், இரட்டித்துக் கூறுதலே மரபென்பதும்பெறப்பட்டன.

வ - று. "சலசல மும்மதம் பொழிய." "கலகல-கூந்துணையல்லால்;" "குறுகுறு நடந்து;" "வற்றிய வோலை கலகலக்கும்;" "துடிதுடித்துத் துள்ளிவரும்;" எனவரும். துடிதுடித்து என்புழிப், பின்னையது பிரிந்திசைக்குமாயினும், முன்னையது பிரிந்திசையாமையால், இரட்டைச்சொல்லேயாமென்க.

இரட்டைக்கிளவியென்னுமிச்சூத்திரம் மேற்கோளாகிய ஆசிரிய வசனம். (சரு)

௩௬௭. ஒருபொருட் பல்பெயர் பிரிவில வரையார்.

இ - ள். ஒருபொருட் பல்பெயர் - ஒருபொருளின்மேற் பலபெயர் சொல்லும்போது,—பிரிவு இல வரையார் - அப்பொருளின்றும் பிரிதலில்லாதனவற்றை நீக்காதுகொள்ளுவர் புலவர், எ - று.

எனவே, பிரிவுள்ளனவற்றை நீக்குவரென்பதாயிற்று.

உ - று. ஆசிரியன் பேரூர்கிழான் சாத்தன் வந்தான்; பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி வந்தான் என்பன, பிரிவிலவாய்ப், பல்பெயரும் ஒருபொருளின்மேற் சென்று, கேட்போர்க்குச் சொல்லுவோன் குறித்த பொருளை விளக்கி நின்றன.

பகையியல் பாயிலி படைக்கை மறவன்; எழுத்துணர்வில்லோ னிலக்கணநிறைகடல் எனவரிற், பகை யியல்பாகவே யில்லாதவனைப் படைக்கை மறவனென்றலும், எழுத்துணர்வில்லாதவனை இலக்கணநிறைகடலென்றலுங் கூடாமையாற் பிரிந்துவழுவாமென்க. (சசு)

[மரபு வழுவமைதி]

௩௬அ. ஒருபொருட் பன்மொழி சிறப்பி னின்வழா.

இ - ள். ஒருபொருட் பன்மொழி - ஒருபொருளைக்குறித்துவரும் பலசொற்கள்,—சிறப்பினின் - அவ்வாறு வருதற்கோர் காரணமின்றியினுஞ் சிறந்துநிற்கையால்,—வழா - அவை வழுவென்று நீக்கப்படாவாம். எ - று.

சிறந்துநிற்றல் செவிக்குச் சொல்லின்பந் தோன்ற நிற்றல்.

உ - று. மீமிசைஞாயிறு; புனிற்றிளங்கன்று; நாகிளங்கமுகு; உயர்ந்தோங்குபெருவரை; குழிந்தாழ்ந்தகண் எனவரும். (சஎ)

[மரபு வழாமற் சாத்தல்]

௩௬௯. இனைத்தென் றறிபொரு ளுலகி னிலாப்பொருள் வினைப்படுத் துரைப்பி னுமமை வேண்டும்.

இ - ள். இனைத்து என்று அறிபொருள் - இவ்வளவினதென்று வரையறையுணரப்படும் பொருளும்,—உலகின் இலாப்பொருள் - எக்காலத்தும் எவ்விடத்தும் இல்லாத பொருளும்,—வினைப்படுத்து உரைப்பின் - வினைப்படுத்துச் சொல்லும்போது,— உம்மை வேண்டும் - முற்றும்மையைவேண்டிநிற்கும். எ - று.

உ - று. (க.) தமிழ்நாட்டு மூவேந்தரும் வந்தார்; இறைவற்குக் கண்மூன்று முச்சுடர்; வேதநான்குமுணர்ந்தான் என இனைத்தென்ற

Digitized By Roja Muthiah Research Library

றிபொருள்கள், வினைப்படுத்துச்சொல்லும்போது, முற்றும்மைவேண்டிநின்றன.

(உ.) முயற்கோடாகாயப்பூவென்றுமில்லை; ஒளிமுன்னிருளெங்குமில்லை என உலகினிலாப்பொருள்கள், வினைப்படுத்துச் சொல்லும்போது, முற்றும்மை வேண்டிநின்றன.

(௩.) "இனைத்தெனவறிந்தசினைமுதற்கிளவிக்கு, வினைப்படுதொகுதியினும்மைவேண்டும். எ - ம். மன்னுடபெயருபன்னவியற்றே." எ - ம் கூறினார் தொல்காப்பியனார். (௪௮)

[மரபு வழுவமைதி.]

௪௦௦. செயப்படு பொருளைச் செய்தது போலத்
தொழிற்படக் கிளத்தலும் வழக்கினு ளுரித்தே.

இ - ள். செயப்படுபொருளைச் செய்ததுபோல - செயப்படுபொருளைக் கருத்தாவைப்போலவைத்து,—தொழிற்படக்கிளத்தலும் - அதன்மேல் அவ்வினைமுதல்வினையேற்றிக் கூறுதலும்,—வழக்கினுள் உரித்து - வழக்கினிடத்துரித்தாம். எ - று.

வ - று. இம்மாடியான் கொண்டது; இச்சோறியான் கொடுத்தது; இவ்வெழுத்தியானெழுதியது என வரும்.

கிளத்தலும் என்ற உம்மையினாலே, கருமத்தைக் கருத்தாவாகக் கூறுதலேயன்றிக், கருவி நிலஞ் செயல் காலங்களைக் கருத்தாவாகக் கூறுதலும் அமையுமென்பது பெற்றாம். அவை வருமாறு:—இவ்வெழுத்தாணி யானெழுதியது—கருவி; இவ்வீடியானிருந்தது—நிலம்; இத்தொழில் யான் செய்தது—செயல்; இந்நாள் யான் பிறந்தது—காலம் எனவரும்.

இன்னும் பிரயோகவிவேகநூலார் "மருளறுகாரணங்காரியம்பேரொடு வந்துறழும், இருளறுமொண்குணப்பேர்குணிப்பேர்வினையோடியையும், பொருள்வினைமற்றோர்பொருளினுந்தோன்றும்புலத்தொடுமோர், தெருளுறுபண்புபுலனிவைமாறியுஞ்சேர்ந்திடுமே." என்று கூறினர். இ - ள். காரணப்பெயர் காரியப்பெயராகியும், காரியப்பெயர் காரணப்பெயராகியும் மாறிவரும்; குணவினை குணிவினையாயும் வரும். ஒருபொருளின்றொழில் அதனோடியைந்த பிறிதோர் பொருளொடும் வரும், இடத்துநிகழ்பொருளின்றொழில் இடத்தொடும் வரும், பண்பும் புலனும் மாறியும் வரும். எ - று. உ-ம். "பிறப்பென்னும் பேதைமை" பிறப்பிற்கேதுவாகிய பேதைமை இது காரியம் காரணமானது; தீவினையென்னுஞ் செருக்கு - தீவினையால்வருஞ்செருக்கு. இது காரணங்காரியமானது; இல்லதெனி

Digitized By Roja Muthiah Research Library

ல்லவன்மாண்பானால் - மாண்புடையனானால் எனக் குணங் குணியானது; சிற்றினமஞ்சும்பெருமை - குணவினை குணிவினையானது. முன்னின்று பின்னேனுக்காச்சொல் இது ஒருபொருளின்வினை மற்றோர் பொருளின்வினையானது. இந்தப்பாவை நாணுழியரிசி பொங்கும் இது இடத்துநிகழ்பொருளின்றொழில் இடத்தின்மேல் நின்றது. (௪௯)

[மரபு வழுவாமற்காத்தலும் மரபு வழுவமைதியும்.]

௪0௧. பொருண்முத லாறு மடைசேர் மொழியினம்
உள்ளவு மில்லவு மாமிரு வழக்கினும்.

இ - ள். பொருள் முதல் ஆறு ஆம் அடைசேர் மொழி - பொருளாதி ஆறாகிய அடைகளடுத்து வரும் மொழிகள்,—இனம் உள்ளவும் இல்லவும் ஆம் - இனமுள்ளவையேயாமன்றி இனமில்லாதவையுமாம்,—இருவழக்கினும் - உலகவழக்கினுள்ளுஞ் செய்யுள் வழக்கினுள்ளும். எ - று.

அடையினால் அடுக்கப்பட்டது அடைகொளியெனப்படும். அடையெனினும் விசேடணமெனினும் பொருந்தும். அடைகொளியெனினும் விசேடியமெனினும் பொருந்தும். இனச்சுட்டுள்ள வடை பிறிதினியைபு நீக்கிய விசேடணமெனவும், இனச்சுட்டில்லாத அடை தன்னேடியையின்மை நீக்கிய விசேடணமெனவும் பெயர் பெறும்.

(வரலாறு.)

| இனமுள்ளன | இனமில்லன | |
|---|---|---|
| நெய்க்குடம் | உப்பளம் | பொருள் |
| குளநெல் | ஊர்மன்று | இடம் |
| கார்த்திகைவிளக்கு | நாளரும்பு | காலம் |
| பூமரம் | இலைமரம் | சினை |
| செந்தாமரை | செம்போத்து | குணம் |
| ஆடுபாம்பு | தோய்தயிர் | தொழில் |

என வழக்கிடத்து வந்தன. அளம் எனவே உப்பென்பதும், மன்று எனவே ஊரென்பதும், அரும்பு எனவே நாளென்பதும், மரம் எனவே இலையென்பதும் போத்து எனவே செம்மையென்பதும், தயிர் எனவே தோய்தலென்பதும் (தோய்தயிர் - உறையிட்டதயிர்) தாமே வந்தியைதலால் அளமுதலியன அடையின்றியும் இப்பொருளாகியாறையுமுணர்த்தும். உப்பிலா அளமும், ஊரிலாமன்றும், நாளிலா அரும்பும், இலையிலா மரமும், செம்மையில்லாப்போத்தும், தோயாத தயிரும் இல்லையாதலால் இவை இனமில்லனவாயின. இனி முற்கூ

Digitized By Roja Muthiah Research Library

றிய நெய்க்குடமுதலிய இனமுள்ளனவற்றை அடைகொடாது கூறிற் குறித்தபொருள் விளங்காமற் பொதுமையினிற்குமாதலால், அவற்றிற்கு அடைகொடுத்துக் கூறுதலே மரபாயிற்று. இனிச் செய்யுள்வழக்கில் வருமாறு:—"பொருட்பெண்டிர்பொய்ம்மைமுயக்கம்" பொருள்; "கான்யாற்றடைகரை" இடம்; "முந்நாட்பிறையின் முனியாதுவளர்ந்தது" காலம்; "கலவமாமயிலெருத்திற்கடிமலரவிழ்ந்தனகாயா" சினை; "சிறுகோட்டுப்பெரும்பழந்தூங்கியாங்கிவள்" குணம்; "ஆடரவாடவாடுமம்பலத்தமிர்தே" தொழில்; இவை இனமுள்ளன.

"பொற்கோட்டிமயமும்பொதியமும்போன்றே" பொருள்; "வடவேங்கடந்தென்குமரி" இடம்; "வேனிற்கோங்கின் பூம்பொகுட்டன்ன" காலம்; "சிறகர்வண்டுசெவ்வழிபாட" சினை; "செஞ்ஞாயிற்று நிலவுவேண்டினும்" குணம்; "முழங்குகடலோதமூழ்கிப்போக" தொழில் இவை இனமில்லன.

இனமுள்ளனவற்றை அடைகொடுத்துக் கூறுதல் வழாநிலையும், இனமில்லனவற்றை அடைகொடுத்துக்கூறுதல் வழுவமைதியுமாமெனக.

இனி ஆசிரியர் தொல்காப்பியனார் (சூ.) 'இனச்சுட்டில்லாப் பண்புகொள்பெயர்க்கொடை, வழக்காறல்லசெய்யுளாறே" எனக் கூறியதினாலே இனச்சுட்டில்லாதனவற்றிற்குச் செய்யுளிடத்து அறுவகையடைகளும் ஆமென்பதும், பண்பொழிந்த ஐவகையடைகள் வழக்கிடத்தாமென்பதும்; இனச்சுட்டுள்ளனவற்றிற்கு அறுவகையடைகளும் இருவகைவழக்கினுமாமென்பதுந் தோன்றநின்றமையும், இனச்சுட்டில்லாதனவற்றிற்கு வழக்கிடத்துப் பண்படைகொடுத்தல் அக்காலத்தரிதென்பதுமறிக.

'இயற்சொற்றிரிசொல்லியல்பில்' என்னுஞ் சூத்திரத்தில் 'இடையுரியடுத்துநான்குமாம்' என்பதற்கு உரியியற்சொல்லெனன்றொன்றில்லையென்று சில உரையாசிரியர் விலக்குதல் நன்னூலாசிரியர் கருத்துக்கு மாறுமென்பது 'பொருண்முதலாறுமடைசேர்மொழியினமுள்ளவுமில்லவுமாமிருவழக்கினும்' என்றதில் வசனநடையான உலகவழக்கிலும் பண்படைகொள்ளவைத்துக் கூறியதினாலுமறிக. (௫௦)

[மரபு வழுவாமற் காத்தல்.]

௪௦௨. அடைமொழி யினமல் லதுந்தரு மாண்டுறின்.

இ - ள். அடைமொழி - முன்சொல்லப்பட்ட அடைசேர்மொழி,— இனம் அல்லதும் தரும் - இனத்தைத் தருதலேயன்றி அதனோடு இனமல்லாததையுந் தரும்,—ஆண்டு உறின் - அவ்விடத்துக்குப் பொருந்துமாயின்.

வ - று. பாவஞ்செய்தான் நரகம் புகுவான் என்றவளவிலே, புண்ணியஞ் செய்தான் சுவர்க்கம் புகுவான் என இனத்தைத் தருதலேயன்றி,

Digitized By Roja Muthiah Research Library

அவன் இது செய்யின் இது வருமென்னும் அறிவில்லாதவன் என்னும் இனமல்லாததையுந் தந்தது. மேலைச்சேரிச் சேவலலைத்தது என்ற அளவிலே, கீழைச்சேரிச் சேவலலைப்புண்டது என இனத்தைத் தருதலேயன்றி, அச்சேவலையுடையார்க்கு வெற்றியாயிற்று என்னும் இனமல்லாததையுந் தந்தது.

இனி இரட்டுறமொழிதலென்னுமுத்தியால், இனமல்லதுந் தருமென்றதற்கு இனத்தைத் தருவதை நீக்கி இனமல்லாததைத் தருமெனவும் பொருளுரைத்துக் கொள்க.

வ - று. காலையெழுந்துகருமத்திற்செல்வான், கோழிகூவிற்றெனின் மற்றப்பறவைகள் கூவுகில என்னுங் கருத்து அவனுக்கில்லையாதலால் அவ்வினத்தையொழித்துப் பொழுது விடிந்தது என்னும் இனமல்லாததனைத் தந்தது. தொல்காப்பியனார் "எடுத்தமொழியினஞ் செப்பலுமுரித்தே." எனக் கூறுதலுங்காண்க. (௬௧)

[மரபுவழுவாமற் காத்தலும் மரபு வழுவமைதியும்.]

௪0௩. அடைசினை முதன்முறை யடைதலு மீரடை
முதலோ டாதலும் வழக்கிய லீரடை
சினையொடு செறிதலு மயங்கலுஞ் செய்யுட்கே.

இ - ள். அடை சினை முதல் முறை அடைதலும் - ஓரடையும் ஒருசினையும் ஒருமுதலும் ஒன்றையொன்று விசேடித்து வருதலும்,—ஈரடை முதலோடு ஆதலும் - இரண்டடை முதலை விசேடித்துவருதலும்,—வழக்கு இயல் - வழக்குநடையாம்,— ஈரடை சினையொடு செறிதலும் - இரண்டடை சினையை விசேடித்து வருதலும்,—மயங்கலும் - இவ்வரம்புகடந்துவருதலும்,—செய்யுட்கு - செய்யுள் நடையாம். எ - று.

(வரலாறு.)

வழக்கு: (௧) வெற்கை முருகன், செங்காலுரை, முழங்கு திரைக்கடல் இவை ஓரடையும் ஒருசினையும் ஒருமுதலுமாகி ஒன்றையொன்று விசேடித்துவந்தன.

(உ.) மனைச்சிறு கிணறு, சிறுகருங்காக்கை இவை இரண்டடைமுதலை விசேடித்துவந்தன.

செய்யுள்: (௧.) "சிறுபைந் தூவியிற் செயிரறச் செய்த;" "கருநெடுங் கண்டருங் காமநோயே." இவை இரண்டடை சினையை விசேடித்து வந்தன.

(உ.) "பெருந்தோட் சிறுமருங்குற் பேரமர்க்கட் பேதை;" "சிறுநுதற் பேரமர்க் கட்செய்ய வாயைய நுண்ணிடையாய்" இவை இவ்வரம்பு கடந்து வந்தன.

Digitized By Roja Muthiah Research Library

அடைசினைமுதன்முறை அடைதலொன்றும் வழுவாமற் காத்தலும், ஒழிந்தமூன்றும் வழுவமைதியுமாமென்க. ஆசிரியர் தொல்காப்பியனார் "அடைசினைமுதலெனமுறைமூன்றுமயங்காமை, நடைபெற்றியலும்வண்ணச் சினைச்சொல்" எனப் பண்படையொன்றுமேகூறி ஒழிந்தனவற்றை இலேசினாற் றழுவியவாறுங் காண்க. (௫௨)

[மரபு வழுவமைதி]

௪௦௪. இயற்கைப் பொருளை யிற்றெனக் கிளத்தல்.

இ - ள், இயற்கைப் பொருளை - இயற்கை செயற்கை என இருவகைப்பொருள்களுள் இயற்கைப்பொருளை,— இற்று எனக் கிளத்தல் - இத்தன்மைத்தென்று சொல்லுக. எ - று.

இயற்கைப்பொருளாவது தனக்குப் பின்றோன்றாது தான்றோன்றும் போது உடன்றோன்றிய தன்மையுடையபொருள். [இயற்கை - அவிகாரம். செயற்கை - விகாரம்.]

வ - று.- நிலம் வலிது; நீர் தண்ணிது; தீ வெய்து; மயிர்கரிது; பால் வெளிது; பயிர் பசியது; மெய் யுள்ளது; பொய்யில்லது எனவரும்.

இயற்கைப்பொருளை இற்றென்னும் வினைக்குறிப்பாகிய செயற்படுத்துக் கூறுதலின், இது வழுவமைதியாயிற்று. இச்சூத்திரம் தொல்காப்பியத்தது ஆதலின் மேற்கோளெனப்படும். (௫௩)

[மரபு வழுவாமற் காத்தலும் வழுவமைதியும்.]

௪௦௫. காரண முதலா வாக்கம் பெற்றுங்
காரண மின்றி யாக்கம் பெற்றும்
ஆக்க மின்றிக் காரண மடுத்தும்
இருமையு மின்றியு மியலுஞ் செயும்பொருள்.

இ - ள். செயும்பொருள் - செயற்கைப்பொருள்,— காரணம் முதலா ஆக்கம் பெற்றும் - காரணச்சொன்முன்வர ஆக்கச்சொற்பின் வரப்பெற்றும்,— காரணம் இன்றி ஆக்கம்பெற்றும் - காரணச்சொற்றொக்குநிற்க ஆக்கச்சொல் வரப்பெற்றும்,— ஆக்கம் இன்றிக் காரணம் அடுத்தும் - ஆக்கச்சொற்றொக்குநிற்கக் காரணச்சொல்வரப்பெற்றும்,— இருமையும் இன்றியும் இயலும் - இவ்விருவகைச்சொல்லுந் தொக்குநிற்கவும் நடக்கும். எ - று.

வ - று. (௧) கடுவுங் கைபிழியெண்ணெயும் பெற்றமையான் மயிர் நல்லவாயின; எருப்பெய்திளங்களைகட்டு நீர்கால் யாத்தமையாற் பயிர் நல்லவாயின; தீச்சார்தலால் நீர் வெய்தாயிற்று; நீர்கலத்தலால் நிலம் மெலிதாயிற்று. இவை காரணச்சொல் முன்னும் ஆக்கச்சொல் பின்னும் வரப்பெற்றன.

Digitized By Roja Muthiah Research Library

(உ) மயிர் நல்லவாயின; பயிர்நல்லவாயின. இவை காரணச்சொற்றொக்குநிற்க ஆக்கச்சொல் வரப்பெற்றன.

(௩) கடுவுங் கைபிழியெண்ணெயும் பெற்றமையான் மயிர்நல்ல; எருப்பெய்திளங்களைகட்டு நீர்கால் யாத்தமையாற் பயிர்நல்ல. இவை ஆக்கச்சொற்றொக்குநிற்கக் காரணச்சொல்வரப்பெற்றன.

(௪) மயிர்நல்ல; பயிர்நல்ல. இவை காரணச்சொல் ஆக்கச்சொல் இரண்டுந்தொக்குநிற்கப்பெற்ற செயற்கைப்பொருள். அந்நன்மை பொருட்குப்பின்றோன்றாது உடன்றோன்றிற்றேல் இயற்கையேயாம்; அவ்வாறன்றி முன்றீயவாய்ப் பின்நல்லவாயினவேனும், தீயநிலைமை காணாதான் பயிர்நல்ல மயிர்நல்ல என்றால் வருங்குற்றமென்னெனின், அது செயற்கையாவதுணர்ந்தான் ஆக்கங்கொடாது சொல்லினன்றே வழுவாவதென்க. இயற்கைப்பொருள் ஆக்கமுங் காரணமும்பெறாது வருதலும், செயற்கைப்பொருள் அவ்விரண்டுந் தொக்குநிற்க வருதலும் சொல்லடிவிலொன்றாயிருப்பினும் முன்பின்றொடர்பை உற்றுநோக்குவோர் இயற்கை செயற்கைகளுள் யாதென்பது துணிகுவர். (சூ.) "செயற்கைப்பொருளை யாக்கமொடுகூறல்" எ-ம். "ஆக்கந்தானேகாரணமுதற்றே" எ - ம். "ஆக்கக்கிளவிகாரணமின்றியும், போக்கின்றென்ப வழக்கினுள்ளே" எனவும் ஆசிரியர் தொல்காப்பியர்கூறிய சூத்திரவுரைகளை நோக்கியுமுணர்க. (போக்கு - குற்றம்.) (௫௪)

[மரபுவழுவாமற்காத்தல்.]

௪0௬. தம்பா லில்ல தில்லெனி னினனாய்
உள்ளது கூறி மாற்றியு முள்ளது
சுட்டியு முரைப்பர் சொற்சுருங் குதற்கே.

இ - ள். தம்பால் இல்லது இல் எனின் - தம்மிடத்து இல்லாத பதார்த்தத்தை இல்லையெனப்புகின்,—இனனாய் உள்ளது கூறி மாற்றியும் - வினவப்பட்டபொருட்கு இனமாய்த் தம்மிடத்துள்ள பதார்த்தத்தைச் சொல்லி அச்சொல்லைக்கொண்டு அதனை இல்லையென்று கருதுவித்தும்,—உள்ளது சுட்டியும் - தம்மிடத்துள்ளதை இவ்வளவுண்டென்றும்,—உரைப்பர் சொற்சுருங்குதற்கு - சொல்லுவர் (வணிகர்) வினவும் விடையுமாகிய சொற்கள் பல்காது சுருங்குதற்பொருட்டு. எ - று.

ஆவணத்திற்பண்டம் விற்கும்வணிகர் தம்மிடத்துக் கொள்வோர் வேறுவேறாய் வந்து பலமுறை வினவும் வினக்களுக்கெல்லாம் நேர்விடை கொடுத்துக்கொண்டிருக்கின் மிகுபிரயாசமுண்டாமென்று கருதிச்சொற்கள்

Digitized By Roja Muthiah Research Library

விரியாமைப்பொருட்டு அவ்வாறு சுருக்கிக் கூறுவாரென்றவாறும். இச்சூத்திரத்தில் உரைப்பரென்னும் பயனிலைக்குத் தோன்றாத எழுவாய் புலவரென்றெடுத்துரைத்தாருமுளர். பண்டம் விற்போர்க்கே அவ்வளவுஞ் சுருக்கிச் சொல்லுதல் அவசியமாதலானும், பண்டம்விற்போர் வணிகராதலானும் அப்பயனிலைக்கு எழுவாய் வணிகரென்பதே பொருத்தமாமன்றிப் புலவரென்பது பொருத்தமின்றாமென்றறிக. இங்ஙனம் பரஞ்சோதிமுனிவர் திருவிளையாடற்புராணத்தில் வணிகர்வீதிவருணிப்பின் அவதாரிகையாகப் பாடிய "புல்லியோர்பண்டங்கொள்வார்வினவினப்பொருட்டம்பக்கல், இல்லெனினினமாயுள்ளபொருளுரைத்தெதிர்மறுத்தும், அல்லதப்பொருளுண்டெனினிலைசுட்டியறுத்துநேர்ந்துஞ், சொல்லினுமிலாபங்கொள்வார் தொன்மரபிருக்கைசொல்வாம்" என்னுங் கவிப்பொருளானுமுணர்க.

வ-று. (க) பயறுண்டோவணிகிரே என்றவருக்கு, அஃதில்லையென்பார், உழுந்துண்டு, உழுந்துந்துவரையுமுண்டென்று அதனினத்தைச் சொல்லக்கடவர். இவ்வினமொழிகள் பயறில்லையென்னும் விடைப்பொருளைத் தந்துநிற்றலுமன்றி, மேலே உழுந்துண்டோ துவரையுண்டோ என்னும்வினாக்களும், அவற்றிற்கு விடைகளும் பல்காமற் காத்துநிற்றலுமுடையனவாதல்காண்க.

(உ) பயறுண்டோவணிகிரே என்றவருக்கு அஃதுண்டென்பார், இருகலமுண்டு, இருதூணியுண்டு என அதனளவைச் சொல்லக்கடவர். இவ்வளவைமொழிகள் பயறுண்டென்னும் விடைப்பொருளைத் தந்துநிற்றலுமன்றி, எவ்வளவுண்டு என மேல்வரும்வினாவும் அதற்கு விடையும் பல்காமற் காத்துநிற்றலுமுடையனவாதல் காண்க.

ஆசிரியர் தொல்காப்பியனார் (சூ.) "எப்பொருளாயினு மல்லதில்லெனின், அப்பொருளல்லாப்பிறிதுபொருள்கூறல்" எ-ம். "அப்பொருள்கூறிற்சுட்டிக்கூறல்" எ-ம். கூறினார். (௫௬)

௪௦௭. ஈதா கொடுவெனு மூன்று முறையே
இழிந்தோ னொப்போன் மிக்கோ னிரப்புரை.

இ-ள். ஈ தா கொடு எனும் மூன்றும் - ஈ தா கொடு என்னுமூன்று சொற்களும், — முறையே இழிந்தோன் ஒப்போன் மிக்கோன் இரப்பு உரை - நிரனிறையே இழிந்தவனும் ஒத்தோனும் உயர்ந்தவனும் இரத்தற்கண்வருஞ் சொற்களாம் எ-று.

எனவே, ஈ என்பது இழிந்தோன் உயர்ந்தோனிடத்து இரக்கும் இரப்புரையும், தா என்பது ஒத்தோன் ஒத்தோனிடத்து இரக்கும் இரப்பு

ரையும் கொடு என்பது உயர்ந்தோன் இழிந்தோனிடத்து இரக்கும் இரப்புரையுமாமெனக் கொள்க.

வ - று. தந்தாயீ இழிந்தோனிரப்பு. தோழாதா ஒத்தோனிரப்பு. மைந்தா கொடு உயர்ந்தோனிரப்பு. பிறவழிவரும் உயர்வுதாழ்வொப்புக்களினு மிவ்வாறொட்டுக.

சூத்திரம். "ஈ தா கொடுவெனக் கிளக்குமூன்றும், இரவின்கிளவியாகிடனுடைய" எ - ம். அவற்றுள், "ஈயென்கிளவியிழிந்தோன் கூற்றே" எ-ம். "தாவென்கிளவியொப்போன் கூற்றே" எ - ம். "கொடுவென்கிளவி யுயர்ந்தோன்கூற்றே" எ - ம். "கொடுவென்கிளவி படர்க்கையாயினும், தன்னைப்பிறன்போற்கூறுங்குறிப்பிற், றன்னிடத்தியலுமென்மனார்புலவர்" எ - ம் ஆசிரியர் தொல்காப்பியனார் கூறுதலுங் காண்க.

[மரபுவழுவமைதி.]

௪௦௮. முன்னத்தி னுணருங் கிளவியு முளவே.

இ - ள். முன்னத்தின் உணரும் கிளவியும் உள - வெளிப்படையானன்றிக் குறிப்பினாற் பொருளறியப்படுஞ் சொற்களுஞ் சிலவுளவாம். (முன்னம் - குறிப்பு.)

அவையாவன: ஒன்றொழிபொதுச்சொன்முதற் சொல்லுவான் குறிப்பீறாகப் பெயரியலிலே பன்னிரண்டாஞ் சூத்திரத்துச் சொல்லப்பட்டனவாம்.

வ - று. குழைகொண்டு கோழியெறியும் வாழ்க்கையர் என்றவழிப், பெருஞ்செல்வவாழ்க்கையரென்பது குறிப்பினானுணரப்பட்ட பொருளாம். செஞ்செவி என்புழி மணியும்பொன்னும்மணிந்த செவியென்றும்; வெள்ளொக்கலர் என்புழி வெளியதுடுத்தசுற்றம் என்னும் குறிப்பாற்பொருளுணரப்பட்டவாறு காண்க. (வெள்ளொக்கலர் என்பதற்குக் குற்றமற்றசுற்றத்தினர் என்று பொருள்கூறினாருமுளர்)

கேட்பவர்கள் வருத்தப்படாமல் அவர்களுக்குப் பொருள்விளங்கச் சொல்லல் மரபாதலால், இது வழுவமைதியாயிற்று. இச்சூத்திரம் ஆசிரியவசனமாகும். (௩௭)

௪௦௯. கேட்குந போலவுங் கிளக்குந போலவும்
இயங்குந போலவு மியற்றுந போலவும்
அஃறிணை மருங்கினு மறையப் படுமே.

இ - ள். கேட்குந போலவும் - கேளாதனவற்றைக் கேட்பனபோலவும், — கிளக்குநபோலவும் - பேசாதனவற்றைப் பேசுவனபோலவும், —

Digitized By Roja Muthiah Research Library

இயங்குந போலவும் - நடவாதனவற்றை நடப்பனபோலவும்,—இயற்றுநபோலவும் - இத்தொழில்களல்லன பிறதொழில்களைச் செய்யாதனவற்றைச் செய்வனபோலவும்,—அஃறிணை மருங்கினும் அறையப்படும் - அஃறிணையிடத்துஞ் சொல்லப்படும். எ - று.

வ - று. (௧) "நன்னீரைவாழி யனிச்சமே" எ - ம். "கணியாயிதுவோகணி தன்னியல்பே" (கணி வேங்கைமரம்.) எ - ம். அனிச்சம், கணி என்னுந் தாவரங்கள் கேளாதபொருளாயிருக்கவும் கேட்பனபோலச் சொல்லப்பட்டன. "மலையே மரனே மயிலே குயிலே, கலையே பிணையே களிறே பிடியே, நிலையாவுயிரே நிலதேறினர்போய், உலையா வலியாருழைநீ ருரையீர்" இக்கவியினுள்ளுங் கேளாதனவற்றைக் கேட்குநபோலக் கூறியது காண்க.

(௨) "பகைமையுங்கேண்மையுங்கண்ணுரைக்கும்" எ - ம். "மையறன்னையுமுரைத்திடும்விழியெனமதித்தாள்" எ - ம். "கணிகளுஞ் சொற்ற" எ - ம். பேசாதன பேசுவனபோலச் சொல்லப்பட்டன. "பொருதமைபுண்ணேசொல்லவென்றமைபோந்ததன்மை, யுரைசெயவூர்தியிட்டதோங்கிரும்புகையேயோதக், கருதலர்பெருமைதேவிமீண்டிலாச்செயலேகாட்டத், தெரிதரவுணர்ந்தேம்பின்னரென்னினிச்செய்துமென்றார்" என்னுங் கவியினுள்ளும் பேசாதன பேசுவனபோல வந்தனகாண்க.

(௩) "இவ்வழியவ்வூர்க்குப்போகும்" "ஆண்டப்பகல் நீங்கலுமெய்தியதந்தகாரம்" (அந்தகாரம் - இருள்.) என்புழி இயங்காதன இயங்குவனபோலச் சொல்லப்பட்டன.

(௪) "தன்னெஞ்சேதன்னைச்சுடும்" "அடக்கமமரருளுய்க்குமடங்காமை, யாரிருளுய்த்துவிடும்" என்பனவற்றுள் செய்யாதன செய்வனபோற் சொல்லப்பட்டனகாண்க.

இவை இலக்கணையின்பாற்படும். (௫௮)

௪௩௰. உருவக வுவமையிற் றிணைசினை முதல்கள்
பிறழ்தலும் பிறவும் பேணினர் கொளலே.

இ - ள். உருவக உவமையில் - உருவகத்திலும் உவமையிலும்,—திணைகள் (பிறழ்தலும்)-உயர்திணை அஃறிணை தம்முண் மயங்குதலும்,—சினை முதல்கள் பிறழ்தலும் - சினை முதல் தம்முண் மயங்குதலும்,—பிறவும் - இவ்வியலுட் சொல்லாதொழிந்தனவும்,—பேணினர் கொளல் - பாதுகாத்துக்கொள்க. எ - று.

Digitized By Roja Muthiah Research Library

(வரலாறு.)

உருவகம்: (௧) நம்மரசனாகிய சிங்கத்திற்குப் பகைவர்கூட்டமாகிய யானைகள் அஞ்சியோடின என உயர்திணை அஃறிணையோ மயங்கிற்று. கல்விமங்கையை நல்லோர் விரும்புவர் என அஃறிணை உயர்திணையோடு மயங்கிற்று. சிவகராசனாகிய யானை கையுங்கொம்புந் தம்பியராகவும், கால்கள் தோழராகவும் போருக்குப் புறப்பட்டெதிர்த்தது என முதல் சினையாகவும், உயர்திணை அஃறிணையாகவும் மயங்கின.

(௨) அவ்வரசனுக்குத் தம்பியரிருவரு மிருதோள்கள் என உயர்திணைமுதல் உயர்திணைச்சினையோடு மயங்கிற்று. முகமாகிய மதி என உயர்திணைச்சினை அஃறிணைமுதலோடு மயங்கிற்று.

உவமை: (௧) மயில்போலுமங்கை என உயர்திணை அஃறிணையோடு மயங்கிற்று. "சொல் கல்விசேர்மாந்தரினிறைஞ்சிக் காய்த்தவே" (சொல் - நெல்.) இக்கவியில் சொல்லென்னும் அஃறிணை "கல்விசேர் மாந்தரின் இறைஞ்சிக் காய்த்த" என உயர்திணையோடு மயங்கிற்று. "சுந்தரன்றிருமுடிமிசைத்தூயநீராட்டும், இந்திரன்றனையொத்தகாரெழிலி" (எழிலி - மேகம்.) இந்திரன் என்னும் உயர்திணையுவமையும் எழிலி என்னும் அஃறிணையும் உபமேயமும் மயங்கினமை காண்க.

இனிப் பிறவுமென்றதனால், இவன் சரசுவதிக்கொப்பானவன் எனப் பால்மயங்கக் கூறுதலும், நீதிச்செம்மையுடையானது (அரசனது) கோலைச் செங்கோலெனவும், வீரனது கழலை வீரக்கழல் எனவும் ஒருபொருட்டன்மையை மற்றொருபொருண்மேல் வைத்துங் கூறுதலும், ஈந்தான் என்பதற்கு அருளினான் என ஒருபொருள்வினையை மற்றொருபொருள்வினையாற் கூறுதலும் பிறவுங் கொள்க.

சூத்திரம். "மிகுதலுங்குறைதலுந்தாழ்தலுமுயர்தலும், பான்மாறுபடுதலும்பாகுபாடுடைய" எ - ம், "உருவகவுவமையெனவிருதிறத்தவும், நிரம்பவுணர்த்தும்வரம்புதமக்கின்மையிற், கூறியநெறியின்வேறுபடவருபவை, தேறினர்கோடறெள்ளியோர்கடனே" எ - ம். அணியதிகாரர்கூறிய புறனடைகளானுமுணர்க. (௫௧)

பரீக்ஷைவினாக்கள்:—874. வழக்கினுள்ளுஞ் செய்யுளுள்ளுங் களைதற்பாலனவாகிய வழுக்கள் எவை? 875. திணையையத்தினையும் பாலையத்தினையும் எவ்வெச்சொல்லாற் கூறல்வேண்டும்? 876. திணையையத்தி

Digitized By Roja Muthiah Research Library

லும் பாலையத்திலும் பொருளிதுவென்று துணிந்தவிடத்து, மற்றொன்றல்லாததன்மையை எதன்மேல்வைத்துக் கூறல்வேண்டும்? 877. உயர்திணைப்பெயரெழுவாயைச் சார்ந்துநிற்கும் அஃறிணைப் பொருளாதியாறும் எத்திணைவினையான்முடியும்? 878. திணைகளும் பால்களும் வெவ்வேறு வினைக்குரிய பலபொருள்களும் தத்தமிற் கலந்துவருங்கால், அவை பலவும் எவ்வாறுமுடியும்? 879. திணையும் பாலும் வழுக்கிவரின் எவ்வெவ்விடங்களின் வழுவென்று களையாது அமைத்துக்கொள்ளத்தகும்? 880. ஒருமைப்பாலிற் பன்மைச்சொல்லும் பன்மைப்பாலில் ஒருமைச்சொல்லும் கூறுதலுமுண்டோ? 881. ஓரிடத்திற் பிறவிடச்சொல்லைச்சேர்த்துக் கூறுதலுமுண்டோ? 882. தா வா கொடு செல் இம்முதனிலையிற் பிறந்த சொற்கள் வருதற்கு இடமரபுண்டோ? 883. காலம் எத்தனை? 884. முக்காலத்தினும் ஒருதன்மையாகிய தொழிலையுடையபொருளை எக்காலத்தாற் கூறத்தகும்? 885. முக்காலங்களும் எவ்வெவ்விடத்திற் பிறழ்ந்துவரும்? 886. வினா எத்தனைவகைப்படும்? 887. விடை எத்தனைவகைப்படும்? 888. வினாவிலும் விடையிலும் முதல் சினைகள் ஒற்றுமைகருதி மாறிக் கூறப்படுமோ? 889. மரபென்பதியாது? 890. வெவ்வேறுவினைகட்குரிய பலபொருள்களை ஒருங்குதழுவிநிற்கும் பொதுச்சொல் எவ்வாறுமுடியும்? 891. வெவ்வேறு வினைகட்குரிய சிறப்புச்சொற்களாக எண்ணலுற்ற பலசொற்கள் எவ்வாறு முடியும்? 892. வினை சார்பு இனம் இடம் முதலியவைகளைப்பொருந்திக் குறித்த பொருள் விளங்காத பலபொருளொருசொற்களை எவ்வாறு சொல்லத்தகும்? 393 எழுத்தின்றன்மை வேறுபடாது பொருள் வேறுபட்டு நிற்குந் தொடர்மொழிகள் எவ்வாறு பொருடுணியப்படும்? 894. ஒருதொடரினுள், ஒருபொருளுக்கே பலபெயர்வரின், அவை எவ்வாறுமுடியும்? 895. காரணம்பற்றிய சிறப்புப்பெயரோடு இயற்பெயருங்கூட்டி ஒருவரைக் கூறுமிடத்து எப்பெயர் பிந்திவருதல் சிறப்பு? 896. படர்க்கைப் பெயரோடு சுட்டுப்பெயர் சேர்ந்துவரின், அச்சுட்டுப்பெயர் அதற்கெவ்விடத்துவரும்? 897. அடுக்குத்தொடருள், ஒருசொல்லே அடுக்கிவருங்கால், எவ்வெவ்விடத்தில் எத்தனையெத்தனைவரை அடுக்கிவரும்? 89௩. சலசல, கலகல என்பவை முதலியவையும் அடுக்கிய சொல்லல்லவோ? 899. ஒருபொருளின்மேற் பலபெயர் சொல்லும்போது, எவ்வியல்புடையவை நீக்காது சொள்ளப்படும்? 900. ஒருபொருளையே விளக்கிநிற்கும் இருசொற்கள் காரணமின்றிக் கூடிவருதலுமுண்டோ? 901. முற்றும்மை பெறுவன எவை? 902. செயப்படுபொருளை வினைமுதலைப்போலவைத்து, அவ்வினைமுதல் வினையை அச்செயப்படுபொருட் கேற்றிக்கூறுதலுமுண்டோ? 903. அடையடுத்துவருமொழிகள் எத்தனைவகைப்படும்? 904. இனச்சுட்டுள்ள அடை எவ்வா

Digitized By Roja Muthiah Research Library

றுபெயர்பெறும்? 905. இனச்சுட்டில்லாத அடை எவ்வாறுபெயர்பெறும்? 906. அடைமொழி இனமல்லாததையும் உணர்த்துதலுண்டோ? 907. அடைச்சொல்லுஞ் சினைச்சொல்லும் முதற்சொல்லும் வசனத்தில் எவ்வாறு தொடர்ந்துவரும்; செய்யுளில் எவ்வாறு தொடர்ந்துவரும்? 908. இயற்கைப்பொருளாவதியாது? 909. செயற்கைப்பொருளாவதியாது? 910. இயற்கைப்பொருளை எவ்வாறு கூறல்வேண்டும்? 911. செயற்கைப்பொருள் எவ்வாறு கூறப்படும்? 912 பண்டம்விற்போர் தம்மிடம் ஒருவர் வினவிய பதார்த்தம் தம்பக்கலில்லையாயின் விடை எவ்வாறு சுருக்கிக் கூறுவர்? 913. தம்பக்கலுள்ளதாயின் எவ்வாறு விடைகூறல்வேண்டும்? 914. கொடைபொருளில்வரும் ஈ தா கொடு என்னும் முன்னிலை வினைச்சொற்கள் வருதற்கு மரபுண்டோ? 915. வெளிப்படையாலன்றிப் பிறவழியாற் பொருளறியப்படுஞ் சொற்களுமுளவோ? 916. கேட்டல் பேசல் நடத்தல் முதலியவையில்லாத அஃறிணைப்பொருள்களை அவையுடையனபோலக் கூறுதலுமுண்டோ? 917. இருதிணைகள் தம்முள்ளே மயங்குதலும், சினை முதல்கள் தம்முள்ளேமயங்குதலும் எவ்வெவ்விடத்திலே போற்றிக்கொள்ளப்படும்? 918. உருவக உவமையில் பால் மயங்கிவருதலுமுண்டோ?

## பொருள்கோள்

[பொருள்கோளின் பெயரும் தொகையும்.]

௪௧௧. யாற்றுநீர் மொழிமாற்று நிரனிறை விற்பூண்
தாப்பிசை யளைமறி பாப்புக் கொண்டுகூட்
டடிமறி மாற்றெனப் பொருள்கோ ளெட்டே.

இ - ள். யாற்றுநீர் - யாற்றுநீர்ப்பொருள்கோளும்,—மொழிமாற்று - மொழிமாற்றுப்பொருள்கோளும்,—நிரனிறை - நிரனிறைப்பொருள்கோளும்,—விற்பூண் - விற்பூட்டுப்பொருள்கோளும்,—தாப்பிசை - தாப்பிசைப்பொருள்கோளும்,—அளைமறிபாப்பு - அளைமறிபாப்புப்பொருள்கோளும்,—கொண்டு கூட்டு — கொண்டுகூட்டுப்பொருள்கோளும்,—அடி மறி மாற்று என - அடிமறிமாற்றுப்பொருள்கோளுமென்று,—பொருள்கோள் எட்டு - பொருள்கோள் எட்டாம், எ - று.

என என்பதனை ஏனையவற்றொடுங் கூட்டுக. (௬௦)

[யாற்றுநீர்ப்பொருள்கோள்.]

௪௧௨. மற்றைய நோக்கா தடிதொறும் வான்பொருள்
அற்றற் றொழுகுமஃ தியாற்றுப் புனலே.

இ - ள். மற்றைய நோக்காது - மொழிமாற்று முதலியவைபோலப் பிறழ்ந்து செல்லவேண்டாது,—அடிதொறும் வான்பொருள் அற்று அற்று

Digitized By Roja Muthiah Research Library

ஒழுகும் அஃது - யாற்றுநீரொழுக்குப்போல அடிதொறுஞ் சிறந்தபொருள் அற்றற்று ஒழுகுவதாகிய அப்பொருள்கோள்,—யாற்றுப் புனல் - யாற்று நீர்ப்பொருள்கோளாம். எ - று.

அடிதொறும் அற்று அற்று என்பதற்கு (ஈற்றிலே முடிவதல்லது) ஒவ்வோரடியிலும் முடிதலற்று என்பது பொருளாகக் கொள்க. அப்பொருளமைக்கப்பட்ட அடிகளில் ஈற்றடியின் ஈற்றிலே பொருண்முடிவுறும் அதற்குமுன்புள்ள அடிகளில் அப்பொருள் அறுத்தறுத்துவிட்டாற்போல நிற்கும் என்பதாம். முதற்றொடங்கி இறுதிவரையும் மாறுதலின்றி நெறிப்பட்டுச்சொல்லும் பொருளை ஒவ்வோரடியளவில் நோக்குமிடத்து ஆகியாந் தப்படாமல் அறுத்துவிட்ட குறைபோலிருக்குமென்பது விளக்கமாம். இவ்வாறன்றி அடிதொறும் பொருள் முடிவுற்று முடிவுற்று என்பது பொருளாகவுரைக்கின் அறுதலின்றித் தொடர்பாக ஒடுகிற யாற்றுநீர்போலாக மாட்டாமையால் அப்பெயரொடு முரணுமாதலின் அது பொருளன்மையறிக.

வ - று. "சொல்லருஞ்சூற்பசும்பாம்பின்றோற்றம்போல், மெல்லவேகருவிருந்தீன்றுமேலலார், செல்வமேபோற்றலைநிறுவித்தேர்ந்தநூற், கல்விசேர்மாந்தரினிறைஞ்சிக்காய்த்தவே" எனவரும். இப்பாட்டினுள் சொல்லென்னுமெழுவாயினை முதலெடுத்து, அதன்றொழிலாகிய இருந்து, ஈன்று, நிறுவி, இறைஞ்சி என்னும் வினையெச்சங்கள் ஒன்றனையொன்று கொள்ள அவற்றை இடையே முறைநிறுத்தி, காய்த்தவென்னும் பயனிலையை யிறுதியிலே தந்து முடித்தமையால் இப்பொருளொழுகுதல் சாற்றுநீரொழுக்குப் போலுதல் காண்க. (சொல் - நெற்பயிர்) இடையிலுள்ள அடைமொழிகளும் அவ்வவ்வெச்சங்களோடும் முற்றோடுந் தொடரவேண்டிய நியதியின்படி தொடர்ந்து வந்தமையுநோக்கி, பொருள்கொள்வோர் ஒருசொல்லையும் மாற்றிவைக்காதபடி நீரோட்டம்போலமைந்து நின்றமையுமறிக.

இந்த யாற்றுநீர்ப்பொருள்கோளை முதலில் வைத்தது: மற்றப்பொருள்கோள்களைப்போல மாற்றிவைக்காமல் மொழிகளிருந்தபடியே பொருள்கொள்ளும்படி தெளிவாய் வசனநடைபோலிருத்தலானும், மிகுதியாய் வருதலானும், பொருளுரைக்குமிடத்து மற்றப் பொருள்கோள்களை மாற்றி நெறிப்படவைத்தபோது அவ்வாக்கியங்களின் அடைக்குப்போலிருத்தலால் இதுவே மற்றப் பொருள்கோள்களுக்குஆதார இலக்காயிருத்தலானுமென்றறிக. (௬௧)

Digitized By Roja Muthiah Research Library

[மொழிமாற்றுப்பொருள்கோள்]

௩௩௬. ஏற்ற பொருளுக் கியையு மொழிகளை
மாற்றியோ ரடியுள் வழங்கன்மொழி மாற்றே.

இ - ள். ஏற்ற பொருளுக்கு இயையும் மொழிகளை - இயைந்த இரண்டு பயனிலைகளுக்குப் பொருந்துமொழிகளை, — மாற்றி — இயையாதபயனிலைகளுக்குத் தனித்தனி கூட்டி, — ஓரடியுள் வழங்கல் - ஓரடியுள்ளே சொல்லப்பட்ட பொருள்கோள், — மொழிமாற்று — மொழிமாற்றுப்பொருள்கோளாம். எ - று.

வ - று. "சுரையாழவம்மிமிதப்பவரையனைய, யானைக்குநீத்துமுயற்குநிலையென்ப, கானகநாடன்சுனை" இதனுள், ஆழவென்னும் பயனிலைக்கியைந்த அம்மியென்னுஞ்சொல்லை அதற்கியையாத மிதப்ப என்னும் பயனிலையோடு கூட்டிப்பாடினதும், மிதப்ப என்னும் பயனிலைக்கியைந்த சுரையென்னுஞ்சொல்லை அதற்கியையாத ஆழவென்னும் பயனிலையொடு கூட்டிப் பாடினதும், நீத்தென்னும் பயனிலைக்கியைந்த முயலென்னுஞ்சொல்லை அதற்கியையாத நிலையென்னும்பயனிலையொடு கூட்டிப்பாடினதும், நிலையென்னும் பயனிலைக்கியைந்த யானையென்னுஞ்சொல்லை அதற்கியையாத நீத்து என்னும் பயனிலையொடு கூட்டிப் பாடினதுங் காண்க. பாடினபோதே ஒருவனப்புப்பற்றி இயைபில்லாதபடி மாற்றிக் கூட்டப்பட்டமையால், இக்கவிக்குப் பொருள்கொள்வோர் இயையாத அம்மாறுதலைப் பின்பும மாறுதல்செய்தாற்றான் இயைந்தபடி சொற்கள் நின்று பொருள் பயந்துவிடுமென்பது விளக்கம். (ஏற்ற, இயைந்த என்பவற்றுக்குப் பொருத்தமான என்பது பொருள்.)

"ஆலத்துமேலகுவளைகுளத்துள, வாலினெடியகுரங்கு" என ஈரடிமுதலியவற்றுள் எழுவாயும் பயனிலையுங் கலந்திருக்குமிம்மாறுதல் தூரத்ததாய் மொழிமாற்றென்பது தோன்றாமையால், அதனையிதற்கிலக்கணமன்றென விலக்கிச் சமீபத்திற்கூறுதலே மொழிமாற்றென்று சொல்லவந்தவர் ஓரடியுள் வழங்கன் மொழிமாற்றென்றார். குரங்கு ஆலத்தின்மேல என்று கவியின் ஈற்றுமொழியையும் முதன்மொழியையுங் கூட்டிப் பூட்டுவிற்பொருளாமாறுகாண்க. ஆசிரியர் தொல்காப்பியனார் (சூ.) "சுண்ணந்தானே, பட்டாங்கமைந்தவீரடியெண்சீர், ஒட்டுவழியறிந்து துணித்தனரியற்றல்" எனச் சுண்ணமொழி மாற்றென்று கூறுதலுங் காண்க.

தொல்காப்பியனார் 'ஈரடியெண்சீர்' எனவே ஒவ்வோரடியும் நாற்சீரடியாயிருத்தல்வேண்டுமென்பதும் சுண்ணமொழிமாற்றுப்பொருளை இரண்டடியின் மிக்கஅடிகளில்வைக்கலாகாதென்பதும் பெறப்பட்டவாறறிக.

Digitized By Roja Muthiah Research Library

அவ்வாறு பெறப்பட்டனவாயினும் உரையாசிரியர் அச்சூத்திரத்திற்கு உதாரணமாகக் காட்டிய செய்யுள் ஈரடியின்மேற் 'கானகநாடன்சுனை' என்று முச்சீரடியொன்று கூடி முடிதலானும், ஓரடியாற் கவியின்மையாலும், நன்னூலார் ஓரடியுள் வழங்கலென்றதினாலும் இப்பொருளையுடைய கவி பலவடிகளாய் வரினும் வருக மாற்றும்பொருளமைதி ஒவ்வோரடியைக் கடக்கலாகாதென்பது வலியுறுத்தப்பட்டவாறும். இவ்வனைத்தும் நோக்குங்கால் மொழிமாற்றுப்பொருள் பலவடிக்கவிகளில் வரலாமெனின்; "கரையாடக்கெண்டைகயத்தாடமஞ்ஞை, சுரையாழவம்மிமிதப்ப—வரையனைய, யானைக்குநீத்துமுயற்குநிலையென்ப, கானகநாடன்சுனை." என்னுங் கவியையுதாரணமாகக் கொள்ளலாம். (௬௨)

[நிரனிறைப்பொருள்கோள்.]

௪௧௪. பெயரும் வினையுமாஞ் சொல்லையும் பொருளையும்
வேறு நிரனிறீஇ முறையினு மெதிரினும்
நேரும் பொருள்கோ ணிரனிறை நெறியே.

இ - ள். பெயரும் வினையும் ஆம் சொல்லையும் பொருளையும் - பெயரும் வினையுமாகிய சொற்களையும் அவைகொள்ளும் பயனிலைகளையும்,— வேறு நிரல் நிறீஇ - வேறுவேறு வரிசையாகநிறுத்தி,—முறையினும் எதிரினும் - முறையாகவேனும் எதிராகவேனும்,—நேரும் பொருள்கோள் - இதற்கிது பயனிலையென்பதுபடக் கூறும் பொருள்கோள்,—நெறி நிரல் நிறையே — நெறிப்பட்ட நிரனிறைப் பொருள்கோளாம். எ - று. [மாம்.
நேரும்பொருள்கோள் என்பதற்குக் கூடும்பொருள்கோள் என்றுரைப்பினு

வ - று. (க) "1. கொடி 2. குவளை 3. கொட்டை 1. நுசுப் 2. புண்கண் 3. மேனி, 1. மதி 2. பவள 3. முத்த 1. முகம் 2. வாய் 3. முறுவல், 1. பிடி 2. பிணை 3. மஞ்ஞை 1. நடை 2. நோக்குச் 3. சாயல், வடிவினளே வஞ்சி மகள்." இதில் அந்தஅந்த அடிகளிலிடப்பட்ட இலக்கப்படி முதலடுக்கின் முதற்சொல்லை இரண்டாமடுக்கின் முதற்சொல்லொடும், முதலடுக்கின் இரண்டாஞ்சொல்லை இரண்டாமடுக்கின் இரண்டாஞ்சொல்லொடும், முதலடுக்கின் மூன்றுஞ்சொல்லை இரண்டாமடுக்கின் மூன்றுஞ்சொல்லொடும் கூட்டி முறை நிரனிறைப் பொருளாமாறு காண்க. (நுசுப்பு+உண்கண்.)

அவ்வாறுகூட்டினால் கொடி - நுசுப்பு, குவளை — உண்கண், கொட்டை - மேனி. எ - ம். மதி - முகம், பவளம் — வாய், முத்தம் - வாண்முறுவல். எ - ம். பிடி - நடை, பிணை- நோக்கு, மஞ்ஞை - சாயல். எ - ம் வரும். இவை பெயர்ச்சொற்களும் பெயர்ப்பயனிலைகளுமாய் நின்றன.



Digitized By Roja Muthiah Research Library

(உ) " 1. கா 2. து 3. சேர் 4. தாழ் 5. குழை 6. யாய் கன்னித்து றைச்சேர்ப்ப, போதுசேர்தார்மார்பபோர்ச்செழிய-நீதியான், 1. மண் 2. ணமிர்த 3. மங்கையர்தோண் 4. மாற்றுரை 5. யேற் றூர்க்கு, 6. நுண்ணியவாயபொருள்." இதில் முன்னடிக்கிலுள் ள ஆறு சொற்களையும் பின்னடிக்கிலுள்ள ஆறு சொற்களையும் முதலாவதோடு முதலாவதையும், இரண்டாவதோடு இரண்டாஞ் சொல்லையும் இவ்வாறே மற்றவைகளையும் ஆறு என்னும் இலக் கம்வரையும் முறையே கூட்டி வினைப்பயனிலைகளும் பெயர் களுமாய்நின்ற முறைநிரனிறை காண்க. (மண் + அமிர்தம்) கவியைவாசிக்கும்போது இலக்கங்களை நீக்கிவாசிக்க.

விவரணம்: கா - மண், து - அமிர்தம், சேர் - மங்கைய ர்தோள், தாழ் - மாற்றுரை, குழை - ஏற்றூர்க்கு, ஆய் — நு ண்ணியவாயபொருள். என வினைப்பயனிலைகளும் பெயர்களு மாய்நின்ற முறைநிரனிறை: முறைநிரனிறையை வடநூலார் அணியிலுள் யதாசங்கியாலங்காரமென்பர்.

(௩) "1. களிறுங் 2. கந்தும்போலநளிகடற், 2. கூம்புங் 1. கலனுந் தோன்றுந், தோன்றன்மறந்தோர் துறைகெழுநாட்டே." இ து, களிறு - கலன், கந்து - கூம்பு எனப் பெயர்ச்சொற்களு ம் பெயர்ப்பயனிலைகளுமாய்நின்ற எதிர்நிரனிறை. (கந்து - யா னைகட்டுந்தறி. கூம்பு - பாய்மரம். கலன் - தோணி.) இதில் முதலடிக்கின் முதற்சொல்லொடு இரண்டாமடிக்கின் இரண் டாஞ்சொல்லும், முதலடிக்கின் இரண்டாஞ்சொல்லொடு இரண் டாமடிக்கின் முதற்சொல்லுங் கூடிப் பொருடந்தவாறறிக.

(௪) "ஆடவர்களெவ்வாறகன்றொழிவார் 1. வெஃகாவும், 2. பாடகமு 3, மூரகமும் பஞ்சரமா—நீடியமால், 3. நின்று 2. விருந்தா ன் 1. கிடந்தா னிதுவன்றோ, மன்றூர்மதிற்கச்சிமாண்பு" இது வெஃகா - கிடந்தான், பாடகம் - இருந்தான், ஊரகம் - நின் றான். எனப் பெயர்ச்சொற்களும் வினைப்பயனிலைகளுமாய் நின்ற எதிர்நிரனிறை. இதில் முதலடிக்கின் முதற்சொல் இர ண்டாமடிக்கின் இறுதிச்சொல்லொடும், முதலடிக்கின் இரண் டாஞ்சொல் இரண்டாமடிக்கின் ஈற்றயற்சொல்லொடும், முத லடிக்கின மூன்றாஞ்சொல் இரண்டாமடிக்கின் முதற்சொல் லொடுங் கூடிப் பொருள் பயந்தமை காண்க. (௬௬)

[பூட்டுவிற்பொருள்கோள்.[

௪௧௫. எழுவா யிறுதி நிலைமொழி தம்முட்
பொருளோக் குடையது பூட்டுவில் லாகும்.

Digitized By Roja Muthiah Research Library

இ - ள். எழுவாய் இறுதி நிலைமொழி - கவியின் முதலினும் ஈற்றி னும் நிற்கின்ற சொற்கள், — தம்முள் பொருள் நோக்கு உடையது - தம்மு ள்ளே பொருளை நோக்குதலுடைய பொருள்கோள், — பூட்டுவில் ஆகும் - பூட்டுவிற்பொருள்கோளாம். எ - று.

வ - று. "திறந்திடுமின்றீயவைபிற்காண்டுமாதர், இறந்துபடிற்பெரிதாமே தம்—உறந்தையர்கோன், தண்ணாரமார்பிற்றமிழர்பெருமானைக், கண் ணாரக்காணக்கதவு." இதில் திறந்திடுமின் - கதவு என்று முதலினும் ஈற் றினுநின்ற சொற்கள் கூடிப் பொருள்பயந்தவாறறிக. வில்லின் அடி, நுனி என்னுமிரண்டந்தங்களும் நாணிற்பூண்டாற்போலக் கவியின் முதலுமிறுதியுமாகிய இரண்டும் பொருளிற் சம்பந்தப்பட்டுநின்றமை யால் அப்பெயருண்டாயிற்று.

"மாடுதின்பான்பார்ப்பான்மறையோதவான்குயவன், கூடிமிசம ண்பிசைவான்கொல்லனே—தேடி, இரும்படிப்பான்றன்செக்கானெ ண்ணெய்விற்பான்வண்ணான், பரும்புடைவைதப்பும்பறை." இக்கவி யில், பறை - மாடுதின்பான். என்று ஈற்றுமொழியு முதன்மொழியுங் கூடிப் பொருள் பயந்தவாறறிக.

"தருமஞ்சந்திகழ்தாமரையோன்பதம், கருமஞ்சந்திகடுப்பவர்வா ழ்பதம், தருமஞ்சந்திரற்றோய்திருக்காளத்தி, வருமஞ்சந்திமழைமத யானையே." இதில் யானையே - தரும். என்று கவியில் இறுதியிலும் மு தலிலும் நின்றசொற்கள் கூடிப் பொருளைக்குற்றமை காண்க.

இந்த விற்பூட்டுப்பொருள்கோளுக்கிடையிற் கொண்டுகூட்டு, நிரனி றை, தாப்பிசை என்னும் பொருள்கோள்களிலொன்று சிறிது கலந்துவ ருதலுமுண்டு. (௬௪)

[தாப்பிசைப்பொருள்கோள்.]

௨௬௫. இடைநிலை மொழியே யேனை யீரிடத்தும்
நடந்து பொருளை நண்ணுதல் றாப்பிசை.

இ - ள். இடைநிலை மொழி - இடையிலே நிற்குமொழி, — ஏனை ஈரி டத்தும் நடந்து பொருளை நண்ணுதல் — ஒழிந்த முதலினு மீற்றினுஞ்செ ன்று பொருளைக்கூடும் பொருள்கோள், — தாப்பிசை - தாப்பிசைப்பொருள் கோளாம். எ - று.

தாப்பிசை என்பதற்குப் பொருள்: ஊசல்போல் இடைநின்று இருமரு ங்குஞ் செல்லுஞ் சொல்லென்பது. (தாம்பு - ஊசல், இசை - சொல்.)

வ - று. "உண்ணாமையுள்ளதுயிர்நிலையூனுண்ண, அண்ணாத்தல்செய்யாத ளறு." இதனுள், ஊன் என இடையிலே நின்றசொல் உண்ணாமை யுள்ளது ஊன். என முதலிலும், ஊனுண்ண எனப் பின்னருஞ் சென்று கூடிப் பொருள்பயந்தமைகாண்க.

Digitized By Roja Muthiah Research Library

"கண்ணுக்குப்புனைமணிப்பூண் கண்ணோட்டமென்பதெல்லாங்கருணையன்றோ" இதனுள் கண்ணோட்டம் என இடையிலே நின்றசொல் கண்ணுக்குப்புனைமணிப்பூண் கண்ணோட்டம் என முற்பாகத்தொடும், கண்ணோட்டமென்பதெல்லாங் கருணையன்றோ எனப் பிற்பாகத்தொடுங் கூடிப் பொருள்பயந்தமைகாண்க. ஒருபதம் முன்னும் பின்னுங்கூடிப் பொருள் பயக்கு மிதனை வடநூலார் சாகாக்ஷிகோளக நியாயமென்பர். (௬௫)

[அளைமறிபாப்புப்பொருள்கோள்.]

௪௧௭. செய்யு ளிறுதி மொழியிடை முதலினும்
எய்திய பொருள்கோ ளளைமறி பாப்பே.

இ - ள். செய்யுள் இறுதிமொழி - செய்யுளில் இறுதியில் நின்றசொல்,—இடை முதலினும் எய்திய பொருள்கோள் - இடையிலும் முதலிலும் சென்ற பொருள்கோள்,—அளை மறி பாப்பு - அளைமறிபாப்புப்பொருள்கோளாம். எ - று.

புற்றிலே தலைவைத்து மடங்கும் பாம்புபோலுதலால் அப்பெயர்பெற்றது. [அளை - புற்று. மறிதல் - மடங்குதல்.]

வ - று. "தாழ்ந்தவுணர்வினராய்த்தாளுடைந்து தண்டூன்றித்தளர்வார்தாமும், சூழ்ந்தவினையாக்கைசுடவிழிந்துநாற்கதியிற்சுழல்வார்தாமு, மூழ்ந்த பிணிநலியமுன்செய்தவினையென்றேமுனிவார்தாமும், வாழ்ந்தபொழுதினேவானெய்துநெறிமுன்னிமுயலாதாரே." எனவரும்.

இதனுள் வாழ்ந்தபொழுதினேவானெய்துநெறிமுன்னிமுயலாதார், மூழ்ந்த பிணிநலியமுன்செய்தவினையென்றேமுனிவார், சூழ்ந்தவினையாக்கைசுடவிழிந்துநாற்கதியிற்சுழல்வார், தாழ்ந்தவுணர்வினராய்த்தாளுடைந்து தண்டூன்றித்தளர்வார். எனத் தலைகீழாய் இடையிலு முதலிலுஞ் சென்று கூடுதல்காண்க. (௬௬)

[கொண்டுகூட்டுப்பொருள்கோள்.]

௪௧௮. யாப்படி பலவினுங் கோப்புடை மொழிகளை
ஏற்புழி யிசைப்பது கொண்டு கூட்டே.

இ - ள். யாப்பு அடி பலவினும் கோப்பு உடை மொழிகளை - செய்யுளடிகள் பலவற்றினுங் கோக்கப்படுதலையுடைய சொற்களை,—ஏற்புழி இசைப்பது - எடுத்துப் பொருளுக்கேற்றவிடத்துக் கூட்டும் பொருள்கோள்,—கொண்டு கூட்டு - கொண்டுகூட்டுப்பொருள்கோளாம். எ - று.

வ - று. "தெங்கங்காய்போலத்திரண்டுருண்டபைங்கூந்தல், வெண்கோழிமுட்டையுடைத்தன்னமாமேனி, யஞ்சனத்தன்னபசலைதணியாமே, வங்கத்துச்சென்றார்வரின்" எனவரும். இதனுள் வங்கத்துச்சென்றார்வரி

ன், அஞ்சனத்தன்ன பைங்கூந்தலையுடையாளது மாமேனிமேல் தெங்கங்காய்போலத் திரண்டுருண்ட கோழிவெண்முட்டையுடைத்தன்ன பசலை தணிவாம் எனக் கொண்டுகூட்டுக. (பசலை - தேமல்.)

"ஆரியமன்னர்பறையினெழூஉந்தியம்பும், பாரிபறம்பின் மேற்றண்ணுமை - காரி, விறன்முள்ளூர்வேங்கைவீதாஞுநுந்தோளாள், நிறனுள்ளூருள்ளதலர்." என்பதுமது. இதிற் சிதர்ந்துகிடந்த சொற்களை பாரிபறம்பின்மேற்றண்ணுமைதாஞுநுந்தோளாள், நிறன்விறன்முள்ளூர்வேங்கைவீ, உள்ளூருள்ளதாகிய அலர் ஆரியமன்னர்பறையினெழூஉந்தியம்பும் எனக்கூட்டிப் பொருளுணர்க. (பறம்பு - ஒருமலை. அலர் - பழிப்புமொழி.) (௬௭)

[அடிமறிமாற்றுப்பொருள்கோள்.]

௪௧௧. ஏற்புழி யெடுத்துடன் கூட்டுறு மடியவும்
யாப்பீ றிடைமுத லாக்கினும் பொருளிசை
மாட்சியு மாறா வடியவு மடிமறி.

இ - ள். ஏற்புழி எடுத்து உடன் கூட்டுறும் அடியவும் — பொருளுக்கேற்குமிடத்து எடுத்து நீங்காது கூட்டும் அடியையுடையவையும், — யாப்பு ஈறு இடை முதல் ஆக்கினும் - யாதானுமோரடியை எடுத்து அச்செய்யுளின் இறுதி நடு முதல்களில் யாதானுமோரிடத்துக் கூட்டினும், — பொருள் இசை மாட்சியும் மாறா அடியவும் - பொருளோடு ஓசைமாட்சியும் ஓசையொழியப் பொருண்மாட்சியும் வேறுபடாத அடியையுடையவையும், — அடிமறி - அடிமறிமாற்றுப்பொருள்கோளாம். எ - று.

வ - று. (௧) நடுக்குற்றுத்தற்சேர்ந்தார் துன்பந்துடையார், கொடுத்துத்தான்றுய்ப்பினுமீண்டுங்காலீண்டு, மிடுக்குற்றுப்பற்றினுநில்லாதுசெல்வம், விடுக்கும்வினையுலந்தக்கால். என்பதனுள், கொடுத்துத்தான்றுய்ப்பினுமீண்டுங்காலீண்டும், விடுக்கும்வினையுலந்தக்கா, லிடுக்குற்றுப்பற்றினுநில்லாதுசெல்வம் (இஃதறியார்) நடுக்குற்றுத் தற்சேர்ந்தார் துன்பந்துடையார் என அடிகளை ஏற்குமிடத்து எடுத்துக் கூட்டுக.

(௨) மாறாக்காதலர்மலைமறந்தனரே, யாறாக்கட்பனிவரலாறுவே, வேறாமென்றோள்வளைநெகிழும்மே, கூறாய்தோழியான்வாழுமாறே. இதனுள் எவ்வடியை எங்கே கூட்டினும் பொருளும் ஓசையும் வேறுபடாமை காண்க.

"தீர்த்தமென்பது சிவகங்கையே, மூர்த்தியம்பலக்கூத்தனதுருவே, ஏத்தருந்தலமெழிற்புலியூரே, இதுவும் எவ்வடியை எங்கே கூட்டினும் பொருளும் ஓசையும் வேறுபடாது வந்தது.

Digitized By Roja Muthiah Research Library

(௩) "அலைப்பான்பிறிதுயிரையாக்கலுங்குற்றம், விலைப்பாலிற்கொண்டூன்மிசைதலுங்குற்றஞ், சொலற்பாலவல்லாதசொல்லுதலுங் குற்றங், கொலைப்பாலுங்குற்றமேயாம்." இதனுள் ஈற்றடியொழிந்த மூன்றடியுள் யாதானுமொன்றை எடுத்து யாதானுமோரிடத்துக் கூட்டியுச்சரித்துப் பொருளுமோசையும் வேறுபடாமையும், ஈற்றடியை யெடுத்து யாதானுமோரிடத்துக்கூட்டியுச்சரித்து ஓசை வேறுபட்டுப் பொருள் வேறுபடாமையுங் காண்க. (௬அ)

**பரீக்ஷை** வினாக்கள்:—919. அறுவகைச்சொற்களாலுஞ் செய்யப்படுஞ் செய்யுள் கொள்ளும்பொருள்கோள்களெவை? 920. யாற்றுநீர்ப்பொருள்கோளாவதியாது? 921. மொழிமாற்றுப்பொருள்கோளாவதியாது? 922. நிரனிறைப்பொருள்கோளாவன யாவை? 923. நேர்நிரனிறைப் பொருளை வடநூலார் அணியுள் எவ்வாறு கூறுவர்? 924. பூட்டுவிற் பொருள்கோளாவதியாது? 925. தாப்பிசைப்பொருள்கோளாவதியாது? 926. தாப்பிசைப்பொருள்கோளை வடநூலார் எவ்வாறுகூறுவர்? 927. அளைமறிபாப்புப்பொருள்கோளாவதியாது? 928. கொண்டுகூட்டுப்பொருள்கோளாவதியாது? 929. அடிமறிமாற்றுப்பொருள்கோளாவன யாவை?

பொதுவியல் முற்றிற்று.

Digitized By Roja Muthiah Research Library

# ௪. இடையியல்.

*

[இடைச்சொல்லின்பொதுவிலக்கணம்.]

௪௨௦. வேற்றுமை வினைசா ரியையொப் புருபுகள்
தத்தம் பொருள வி்சைநிறை யசைநிலை
குறிப்பெனெண் பகுதியிற் றனித்திய லின்றிப்
பெயரினும் வினையினும் பின்முன் னோரிடத்
தொன்றும் பலவும்வந் தொன்றுவ திடைச்சொல்.

இ - ள். வேற்றுமை (யுருபுகள்) - ஐம்முதலிய வேற்றுமையுருபுகளும்,—வினை (யுருபுகள்) - விகுதிகளும் இடைநிலைகளுமாகிய வினையுருபுகளும்,—சாரியை (யுருபுகள்) - அன் ஆன் முதலிய சாரியையுருபுகளும்—, ஒப்புருபுகள் - போலப் புரைய முதலிய உவமவுருபுகளும்,—தத்தம் பொருள - பிறவாறு தத்தமக்குரிய பொருளையுணர்த்தி வருபவையும்,—இசைநிறை - வேறுபொருளின்றி இசைநிறையே பொருளாக வருபவையும்,—அசைநிலை - அசைநிலையே பொருளாகநிற்பவையும்,—குறிப்பு - வெளிப்படையின்வரும் இவைபோலாது ஒலி அச்சம் விரைவு இவற்றைக் குறிப்பாலுணர்த்தி வருபவையும்,—என் எண் பகுதியின் - என்னும் எட்டுவகையினையுடையனவாய்,—தனித்து இயல் இன்றி - தனித்து நடத்தலின்றி,—பெயரினும் வினையினும் பின் முன் ஓரிடத்து - பெயரினகத்தும் வினையினகத்தும் அவற்றின் புறமாகிய பின்னும் முன்னும் இவ்விடங்களாறனுளோரிடத்து,—ஒன்றும் பலவும் வந்து ஒன்றுவது - ஒன்றாயினும் பலவாயினும் வந்து அப்பெயர்வினைகளுக்கு அகத்துறுப்பாயும் புறத்துறுப்பாயும் ஒன்றுபட்டு நடக்குந் தன்மையது,—இடைச்சொல் - இடைச்சொல்லாகும். எ - று.

பெயர்ச்சொல் வினைச்சொற்களுமாகாது அவற்றின் வேறுமாகாது இடைநிகரனவாய் நிற்றலின், இடைச்சொல்லெனப்பட்டன; தனித்து நடத்தலின்றிப் பெயர்வினைகளிடமாக நடத்தலின், இடைச்சொல்லெனப்பட்டன வெனினும் அமையும். இப்பொருட்கு இடமெனினும் இடையெனினுமொக்குமாயினும் இடையென்றது இடைநிகரனவாய் நிற்றலையுமுணர்த்துதற்காம்.

இசைநிறையென்பது வேறுபொருளுணர்த்தாது செய்யுளில் ஓசையைநிறைத்துநிற்பது.

அசைநிலையென்பது வேறுபொருள் உணர்த்தாது பெயர்ச்சொல்லோடும் வினைச்சொல்லோடுஞ் சார்த்திச் சொல்லப்பட்டு நிற்பது. [அசைத்தல் - சார்த்துதல்.]

Digitized By Roja Muthiah Research Library

வ - று: (க) குழையன் என்புழிப், பெயரினகத்துறுப்பாய் விகுதியிடைச்சொல் ஒன்று வந்தது. தச்சிச்சி, நில்த்தினன் என்புழிப், பெயரினகத்துறுப்பாய் முறையே இடைநிலையும் விகுதியும், இடைநிலையுஞ் சாரியையும் விகுதியுமாகிய இடைச்சொற்கள் பலவந்தன.

(உ) உண்ணாய் என்புழி, வினையினகத்துறுப்பாய் விகுதியிடைச்சொல் ஒன்று வந்தது, நடந்தான், நடந்தனன் என்புழி, வினையினகத்துறுப்பாய் முறையே இடைநிலையும் விகுதியும், இடைநிலையுஞ் சாரியையும் விகுதியுமாகிய இடைச்சொற்கள் பலவந்தன.

(௩) அதுமன், கொன்னூர் என்புழிப், பெயரின் புறத்துறுப்பாய்ப் பின்னும்முன்னும் ஒன்று வந்தது. அதுமற்றம்ம, இனிமற்றொன்று என்புழிப், பெயரின் புறத்துறுப்பாய்ப் பின்னும் முன்னும் பல வந்தன.

(௪) வந்தானே, ஐயோவிறந்தான் என்புழி, வினையின் புறத்துறுப்பாய்ப் பின்னுமுன்னும் ஒன்று வந்தது. கொன்முன்கூகூ, சீசீபோ என்புழி, வினையின் புறத்துறுப்பாய்ப் பின்னு முன்னும் பலவந்தன. (௧)

[இடைச்சொற்பொருள்கள்.]

௪௨௧. தெரிநிலை தேற்ற மையமுற் றெண்சிறப்
பெதிர்மறை யெச்சம் வினாவிழை வொழியிசை
பிரிப்புக் கழிவாக்க மின்னன விடைப்பொருள்.

இ - ள். தெரிநிலை - தெரிநிலையும்,—தேற்றம் - தெளிவும்,—ஐயம்—சந்தேகமும்,—முற்று - முற்றும்,—எண் - எண்ணும், சிறப்பு - சிறப்பும்,—எதிர்மறை - எதிர்மறையும்,—எச்சம் - எச்சமும்—வினா - வினாவும்,—விழைவு - விருப்பமும்,—ஒழியிசை - ஒழிந்தசொல்லும்,—பிரிப்பு - பிரிநிலையும்,—கழிவு - கழிவும்,—ஆக்கம் - ஆக்கமும்,—இன்னன - இவைபோல்வனபிறவும்,—இடைப்பொருள் - தத்தம் பொருளவென்ற இடைச்சொற்களுடைய பொருள்களாம். எ - று.

[சிறப்பு - அதிகம், மேற்படுகை.]

இன்னனவென்றதனல் சிலவருமாறு:—

(க) அ, இ, உ என்பன சுட்டுப்பொருளைத் தருவன.

(உ) எ, ஏ, யா, ஆ என்பன வினாப்பொருளைத்தருவன.

(௩) முன், பின் என்பன காலப்பொருளையும் இடப்பொருளையுந் தருவன.

(௪) இனியென்பது காலவிடங்களின் எல்லைப்பொருளைத் தருவது.

Digitized By Roja Muthiah Research Library

(௫) தொறும், தோறும் என்பன இடப்பன்மைப்பொருளையுங் காலப்பன்மைப்பொருளையுந் தொழில்பயில்வுப்பொருளையுந் தருவன.

(௬) வாளா, சும்மா என்பன பயனின்மைப்பொருளைத்தருவன.

(௭) ஆவது, ஆதல், ஆயினும், தான், என், என்ன என்பன விகற்பப்பொருளைத்தருவன. [விகற்பமாவது பலவற்றுள் இதுதான் என்னுநியதியில்லாமை.]

(௮) ஐயோ, அந்தோ முதலியவை இரக்கப்பொருளைத்தருவன. ஐயோ வியப்புப்பொருளையுந்தரும்.

(௯) ஆ, ஆகா, அம்ம, ஓ, ஓகோ முதலியவை வியப்புப்பொருளைத் தருவன.

(௰) ஆவா, கூகூ, ஐயோ முதலியவை அச்சப்பொருளைத் தருவன.

(௧௧) சீ, சீசீ, சிச்சீ, சை முதலியவை இகழ்ச்சிப்பொருளைத் தருவன.

குறிப்பின்வரு மிடைச்சொற்கள் வருமாறு:—

(௧) அம்மென, இம்மென, கோவென, சோவென, துடுமென, ஒல்லென, கஃறென, சுஃறென. எ - ம். கடகடென, சளசளென, திடுதிடென, நெறுநெறென, படபடென. எ - ம். வருவன ஒலிக்குறிப்புப்பொருளைத்தருவன.

(௨) துண்ணென, துணுக்கென, திட்கென, திடுக்கென என்றாற்போல்வன அச்சக்குறிப்புப்பொருளைத் தருவன.

(௩) பொள்ளென, பொருக்கென, கதுமென, ஞெரேலென, சரேலென என்றாற்போல்வன விரைவுக்குறிப்புப்பொருளைத்தருவன.

ஆம், ஓம் என்பன அங்கீகாரப்பொருளைத் தருவன. ஆம் - பிறர்கூற்றென்பதையுமுணர்த்தும். (௨)

[ஏகாரவிடைச்சொல்.]

௪௨௨. பிரிநிலை வினாவெண் ணீற்றசை தேற்றம்
இசைநிறை யெனவா றேகா ரம்மே.

இ - ள். பிரிநிலை - பிரிநிலையும்,—வினா - வினாவும்,—எண் - எண்ணும்,—ஈற்றசை - ஈற்றிலசைத்தலும்,—தேற்றம் - தெளிவும்,—இசைநிறை - இசைநிறைத்தலும், - என ஆறு ஏகாரம் - என்று ஆறு பொருளைத் தருமேகாரவிடைச்சொல். எ - று.

வ - று. (க) அவருள் இவனே கள்வன்: இங்கே ஒருகூட்டத்தினின்றும் ஒருவனைப் பிரித்துநிற்றலாற் பிரிநிலை.

(உ) நீயே கொண்டாய்: இங்கே நீயா கொண்டாயென்னும் பொருளைத்தருமிடத்து வினா.



Digitized By Roja Muthiah Research Library

(௩) நிலமே நீரே தீயே வளியே இங்கே நிலமும் நீரும் தீயும் வளியும் எனப் பொருள்பட எண்ணிநிற்றலால், எண்.

(௪) "என்றும் மேத்தித் தொழுவோ மியாமே." இங்கே வேறுபொருளின்றி இறுதியிலே சார்த்தப்பட்டு நிற்றலால், ஈற்றசை.

(௫) உண்டேமறமை. இங்கே உண்டென்பதற்கு ஐயமில்லையென்னுந் தெளிவுப்பொருளைத் தருதலாற் றேற்றம்.

(௬) "ஏயேயிவளொருத்தி பேடியோவென்றார்" இங்கே வேறுபொருளின்றிச் செய்யுளில் இசைநிறைத்துநிற்றலால் இசைநிறை. அவனேகொண்டான் என்பது ஓரோரிடத்து அவன் கொண்டிலன் என எதிர்மறைப் பொருள்பட நிற்றல் "புதியனபுகுதலும்வழுவல" என்பதனாற் கொள்க. (௩)

[ஓகாரவிடைச்சொல்.]

௪௨௩. ஒழியிசை வினாச்சிறப் பெதிர்மறை தெரிநிலை
கழிவசை நிலைபிரிப் பெனவெட் டோவே.

இ - ள். ஒழியிசை - ஒழியிசையும்,—வினா - வினாவும்,—சிறப்பு - சிறப்பும்,—எதிர்மறை - எதிர்மறையும்,—தெரிநிலை - தெரிநிலையும்,—கழிவு - கழிவும்,—அசைநிலை - அசைநிலையும்,—பிரிப்பு - பிரிநிலையும்,—என எட்டு ஓ - என்று எட்டுப்பொருளைத்தரும் ஓகாரவிடைச்சொல். எ—று.

சிறப்பு உயர்வுசிறப்பும் இழிவுசிறப்பும் என இருவகைப்படும். உயர்வுசிறப்பு ஒருபொருளினது உயர்வைச் சிறப்பித்தல். இழிவுசிறப்பு ஒருபொருளினது இழிவைச் சிறப்பித்தல். இங்கே சிறப்பித்தல் என்றது, உயர்வேயாயினும் இழிவேயாயினும் அதனது மிகுதியை விளக்குதல்.

வ—று. (௧) படிக்கவோவந்தாய். இங்கே படித்தற்கன்று விளையாடுதற்குவந்தாய் என ஒழிந்த சொற்களைத் தருதலால் ஒழியிசை.

(௨) குற்றியோ மகனோ. இங்கே குற்றியா மகனா என வினாப்பொருளைத் தருதலால் வினா.

(௩) ஓ ஓ பெரியன். இங்கே ஒருவனது பெருமையாகிய உயர்வின் மிகுதியை விளக்குதலால் உயர்வுசிறப்பு.

ஓ ஓ கொடியன். இங்கே ஒருவனது கொடுமையாகிய இழிவின் மிகுதியை விளக்குதலால் இழிவுசிறப்பு.

(௪) அவனோகொண்டான். இங்கே கொண்டிலன் என்னும் பொருளைத்தருமிடத்து எதிர்மறை.

(௫) ஆணோ அதுவுமன்று பெண்ணோ அதுவுமன்று. இங்கே அத்தன்மையில்லாமையைத் தெரிவித்து நிற்றலாற் றெரிநிலை.

Digitized By Roja Muthiah Research Library

(௬) உறுதியுணராது கெட்டாரை ஓஒ தமக்கோருறுதியுணராரோ என்னுமிடத்துக் கழிவிரக்கப்பொருளைத் தருதலாற் கழிவு. [கழிவிரக்கம் - கழிந்ததற்கிரங்குதல்.]

(௭) "காணியவம்மினோ" இங்கே வேறுபொருளின்றிச் சார்த்தப்பட்டுநிற்றலால் அசைநிலை.

(௮) இவனோ சொண்டான். இங்கே பலருண்ணின்றும் ஒருவனைப்பிரித்துநிற்குமிடத்துப் பிரிநிலை.

[என என்று இடைச்சொற்கள்.]

௩௨௪. வினைபெயர் குறிப்பிசை யெண்பண் பாறினும்
எனவென மொழிவரு மென்று மற்றே.

இ - ள். வினை - வினையும்,—பெயர் - பெயரும்,—குறிப்பு - குறிப்பும்,—இசை - இசையும்,—எண் - எண்ணும்,—பண்பு ஆறினும் - பண்புமாகிய ஆறுபொருளிலும்,—என எனும் மொழி வரும் - எனவென்னுமிடைச்சொற் சேர்ந்து வரும்,—என்றும் அற்று - என்றுஎன்னுமிடைச்சொல்லும் அப்படியே ஆறுபொருளிலும் வரும். எ - று.

உ - று. (௧) மைந்தன் பிறந்தானெனத் தந்தையுவந்தான். இங்கே வினையோடியைந்தது.

(௨) "அழுக்காறெனவொருபாவி" இங்கே பெயரோடியைந்தது.

(௩) "பொள்ளெனவாங்கேபுறம்வேரார்" இங்கேகுறிப்போடியைந்தது

(௪) "பொம்மென வண்டலம்பும் புரிகுழலை" இங்கே இசையோடியைந்தது.

(௫) நிலமென நீரெனத் தீயென வளியென வானெனப் பூதங்களைந்து. இங்கே எண்ணோடியைந்தது.

(௬) வெள்ளெனவிளர்த்தது. இங்கே பண்போடியைந்தது.

என்று என்பதையும் இப்படியே இவைகளோடும் ஒட்டிக்கொள்க.

[உம்மையிடைச்சொல்.]

௩௨௫. எதிர்மறை சிறப்பைய மெச்சமுற் றளவை
தெரிநிலை யாக்கமோ டும்மை யெட்டே.

இ - ள். எதிர்மறை எதிர்மறையும்,—சிறப்பு - சிறப்பும்,— ஐயம் - ஐயமும்,—எச்சம் - எச்சமும்,—முற்று - முற்றும்,—அளவை - எண்ணும்,—தெரிநிலை - தெரிநிலையும்,—ஆக்கம் - ஆக்கமுமாகிய,—எட்டு உம்மை - எட்டுப்பொருளையுந் தரும் உம்மையிடைச்சொல். எ - று,

எச்சம் இறந்ததுதழீஇயவெச்சமும், எதிரதுதழீஇயவெச்சமும் என இருவகைப்படும்.

Digitized By Roja Muthiah Research Library

வ-று. (க) "மறப்பினுமோத்துக்கொளலாகும்" இங்கே மறக்கலாகாது என்னும் பொருளைத் தருதலால் எதிர்மறை.

(உ) "குறவருமருளுங்குன்றத்துப்படினே." என்பது குன்றத்துமய ங்காதியங்குதற்கட் குறவர் சிறந்தமையாற் சிறப்பும்மை. இவ்வுதாரணத்திற் குன்றினுயர்வைச் சிறப்பித்தலாற் சிறப்பும்மை யென்றுரைத்தார் சிலர். உம்மை குறவரைச் சிறப்பிக்க அவருமருளுங் குன்றென்று குன்று அவர்முகத்தாற் சிறப்பிக்கப்பட்டதன்றி உம்மை சிறப்பித்தவாறன்றென்பதும், (மந்திரியோடரசன்வந்தான் என்னுமிடத்து ஒடு என்னுமுருபிடைச்சொற்கூடிநின்ற மந்திரியே உடனிகழ்ச்சிப்பொருளாயினவாறுபோல) உம்மையிடைச்சொல் தான் மருவிநின்றகுறவரைச் சிறப்பித்ததென்பதுமுணர்க. மேலும், "பந்தியுமறியா" என்பதற்கு மரமேறுந் தொழிலிற் சிறந்த மந்தியும் என்று நச்சினார்க்கினியருரைத்ததாலும், தொல்காப்பியச் சொல்லதிகாரத்தில் "எச்சஞ்சிறப்பே" என்னும் உருபு ம் சூத்திரத்திற்குச் சேனாவரையரெழுதிய உதாரணவிளக்கத்தானும் எதுகொள்ளற்பாற்றென்பது தெளிக.

"புலையனும்விரும்பாப் புன்புலால்யாக்கை" இங்கே புலையனதிழிவைச் சிறப்பித்தலால் இழிவுசிறப்பு. இவ்வுதாரணத்திலும் யாக்கையினிழிவைச் சிறப்பித்துநின்றதென்றார்சிலர். இதற்கும் முன்னுதாரணவிளக்கத்திலேற்பனகொண்டுணர்ந்து முடிபுசெய்க. சிறப்பு என்பதற்கு அதிசயத்தன்மையென்பது ஈண்டுப்பொருளாம். எனவே அச்சிறப்பு, உயர்வுசிறப்பு இழிவுசிறப்பென இருவகையாமென்பதுமேலுதாரணங்களிரண்டானுமுணர்க.

(௩) அவன்வெல்லினும் வெல்லும், இங்கே துணியாமையை உணர்த்தலால் ஐயம்.

(௪) சாத்தனும் வந்தான். இங்கே கொற்றன்வந்ததன்றி என்னும் பொருளைத் தரும்போது இறந்ததுதழீஇயவெச்சம்; இனிக் கொற்றனும் வருவான் என்னும் பொருளைத் தரும்போது எதிரதுதழீஇயவெச்சம்.

(௫) எல்லாரும் வந்தார். இங்கே எஞ்சாப்பொருளைத் தருதலால் முற்று. (எஞ்சா - மிஞ்சாத)

(௬) இராவும் பகலும். இங்கே எண்ணுதற்கண் வருதலால் எண்.

(௭) ஆணுமன்று பெண்ணுமன்று. இங்கே இன்னதெனத் தெரிவித்து நிற்றலாற் றெரிநிலை. (அலியென்றுதெரிவித்தது)

Digitized By Roja Muthiah Research Library

(அ) பாலுமாயிற்று. இங்கே அதுவே மருந்துமாயிற்று என்னும்பொருளைத் தருதலால் ஆக்கம். (௬)

[முற்றும்மைக்கு எய்தியதன்மேற்சிறப்புவிதி.]

௪௨௬. முற்றும்மை யொரோவழி யெச்சமு மாகும்.

இ - ள். முற்றும்மை ஒரோவழி எச்சமும் ஆகும் - மேற்கூறிய முற்றும்மை யொரோவிடத்து எச்சவும்மையுமாம். எ - று.

வ - று. எல்லாரும் வந்திலர்; அவர்பத்துங்கொடார் இங்கே சிலர்வந்தார்; பத்திற் சிலகொடுப்பார் எனவும் பொருள்படுதலால், எச்சவும்மையுமாயிற்று. எதிர்மறைவினையான் முடிக்கப்படுமிடங்களில் முற்றும்மை எச்சப்பொருள் படத்தலுமுண்டென்றறிக. (௭)

[எச்சவும்மைக் காவதோர்விதி.]

௪௨௭. செவ்வெண் ணீற்றதா மெச்ச வும்மை.

இ - ள். எச்சவும்மை செவ்வெண் ஈற்றது ஆம் - எச்சவும்மை செவ்வெண்ணில் வருமாயின் ஈற்றில் வரும். எ - று.

செவ்வெண்ணாவது எண்ணிடைச்சொற் றொக்குநிற்ப வருவது.

வ - று. கல்வி செல்வ மொழுக்கங் குடிப்பிறப்பும் பெறுவாருமுளர் என்புழி, இவற்றுட் சில பெறுவாருமுளர் எனப் பொருள்படுதல் காண்க.

[சில எண்ணிடைச்சொற்களுக்காவதோரிலக்கணம்.]

௪௨௮. பெயர்ச்செவ் வெண்ணே யென்று வெனவெண்
ணான்குந் தொகைபெறு மும்மையென் றெனவோ
டிந்நான் கெண்ணுமஃ தின்றியு மியலும்.

இ - ள். பெயர்ச்செவ்வெண் ஏ என்று எனு என்ன நான்கும் தொகை பெறும் - பெயர்களினிடையே யெண்ணிடைச்சொற் றொக்குநிற்ப வருஞ் செவ்வெண்ணும் பெயரோடு தொகாது வரும் ஏகாரவெண்ணும் என்றுவெண்ணும் எனுவெண்ணுமாகிய நான்கெண்களுந் தொகையைப்பெற்று நடக்கும், — உம்மை என்று என ஒடு இந்நான்கு எண்ணும் - உம்மையெண்ணும் எனறெண்ணும் எனவெண்ணும் ஒடெண்ணுமாகிய இந்த நான்கெண்களும், — அஃது இன்றியும் இயலும் - அத்தொகைபெறாதும் நடக்கும். எ - று.

வ - று. (க) சாத்தன் கொற்றனிருவரும் வந்தார்; சாத்தனே கொற்றனே யிருவரும்வந்தார்; சாத்தனென்று கொற்றனென்றுவிருவரும் வந்தார்; சாத்தனெனுக் கொற்றனெனு விருவரும் வந்தார்.
— இவை தொகைபெற்றே வந்தன. இவை வழக்கிடத்து ஒரோ

வழித்தொகை பெறாது வரின், இசையெச்சமாகவும், செய்யுளிலே தொகைபெறாது வரிற் றொகுத்தல்விகாரமாகவுங் கொள்க.

(உ) சாத்தனுங் கொற்றனு மிருவரும் வந்தார், சாத்தனென்று கொற்றனென்றிருவருளர்; சாத்தனெனக் கொற்றனென விருவருளர்; சாத்தனொடு கொற்றனொடிருவருளர், இவை தொகை பெற்று வந்தன. சாத்தனுங்கொற்றனும் வந்தார்; நிலனென்று நீரென்று தீயென்று காற்றென் றளவறு காயமென்றாகிய வுலகம்; நிலனென நீரெனத் தீயெனக் காற்றென வளவறு காயமென வாகிய வுலகம்; நிலனொடு நீரொடு தீயொடு காற்றொடளவறு காயமொடாகிய பூதம். இவை தொகைபெறாது வந்தன. (௬)

[சில எண்ணிடைச்சொற்களுக்கு எய்தியதன்மேற் சிறப்புவிதி.]

௪உ௯. என்று மெனவு மொடுவு மொரோவழி
நின்றும் பிரிந்தெண் பொருடொறு நேரும்.

இ - ள். என்றும் எனவும் ஒடுவும் - என்று என ஒடுவென்னும் இம்மூன்றிடைச்சொற்களும்,—ஒரோவழி நின்றும் பிரிந்து எண் பொருடொறும் நேரும் - எண்ணப்படும் பொருடோறு நிற்றலேயன்றி ஓரிடத்துநின்றும் பிரிந்து எண்ணப்படும் பொருடோறுஞ் சென்று பொருந்தும். எ - று

வ - று. (க) "வினைபகையென்றிரண்டினெச்ச நினையுங்காற் — றீயெச்சம் போலத்தெறும்." இங்கே என்றென்பது, வினையென்று பகையென்று என நின்றவிடத்துப் பிரிந்து, பிறவழியுஞ் சென்று பொருந்தியது.

(உ) "பகைபாவமச்சம்பழியெனநான்கு — மிகவாவாமில்லிறப்பான்கண்." இங்கே எனவென்பது, பகையெனப் பாவமென அச்சமெனப் பழியென, என்று நின்றவிடத்துப் பிரிந்து, பிறவழியுஞ்சென்று பொருந்தியது.

(௩) "பொருள்கருவிகாலம்வினையிடனொடைந்து — மிருடீரவெண்ணிச்செயல்." இங்கே ஒடுவென்பது, பொருளொடு கருவியொடு காலத்தொடு வினையொடு இடனொடு என நின்றவிடத்துப் பிரிந்து, பிறவழியுஞ்சென்று பொருந்தியது. (௧0)

[பெயரொடுவரும் இடைச்சொற்கள் வினையொடும் வருமாறு.]

௪௩0. வினையொடு வரினு மெண்ணினைய வேற்பன.

இ - ள். ஏற்பன எண் — பொருந்துவனவாகிய எண்ணிடைச்சொற்கள்,—வினையொடு வரினும் இனைய - வினையோடு வரினும் மேற்பெயரோடு வந்தாற்போலும். எ - று.

Digitized By Roja Muthiah Research Library

வ - று. மயிலாடக் குயில்வாட மாமுகிலெழுந்தது. இது செவ்வெண். கற்றுங்கேட்டுங் கற்பனைகடந்தார். இது உம்மையெண். உண்ணவென்றுடுக்கவென்று வந்தான். இது என்றெண். உண்ணவென உடுக்கவென வந்தான் இது எனவெண். உண்ணவுடுக்கவென்று வந்தான். இது பிரிந்துகூடுமெண். (௧௧)

[தில்லிடைச்சொல்.]

௩௩௧. விழைவே கால மொழியிசை தில்லே.

இ - ள். விழைவு காலம் ஒழியிசை தில் - ஆசையுங் காலமும் ஒழிந்தசொல்லுமாகிய மூன்றுபொருளையுந் தருந் தில்லென்னுமிடைச்சொல்.

விழைவின்கண்வருந் தில் என்னுஞ்சொல் தன்மையிடத்தல்லது வாராது என்பது "விழைவின் றில்லை தனனிடத் தியலும்" என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்தாலறிக.

வ - று. (௧) "வார்ந்திலங்குவை யெயிற்றுச் சின்மொழி—யரிவை யைப்பெறுகதில் லம்மயானே" இங்கே அரிவையைப் பெறுதல் வேட்கையையுணர்த்தலால் விழைவு.

(௨) "பெற்றாங்கறிகதில்லம்மவிவ்வூரே." இங்கே பெற்றகாலத்தறிக எனக் காலத்தையுணர்த்தலாற் காலம்.

(௩) "வருகதில்லம்மவெஞ்சேரிசேர" இங்கே வந்தால் ஒன்றுசெய்வேன் என்னும் ஒழிந்த சொற்பொருளை யுணர்த்தலால் ஒழியிசை. (௧௨)

[மன்னிடைச்சொல்.]

௩௩௨. மன்னே யசைநிலை யொழியிசை யாக்கங்
கழிவு மிகுதி நிலைபே றாகும்.

இ - ள். மன் - மன்னென்னுமிடைச்சொல்,—அசைநிலை - அசைத்து நிற்றற்பொருளிலும்,—ஒழியிசை - ஒழிந்தசொற்பொருளிலும்,—ஆக்கம் - ஆக்கப்பொருளிலும்,—கழிவு - கழிதற்பொருளிலும்,—மிகுதி - மிகுதிப் பொருளிலும்,—நிலைபேறு ஆகும் - நிலைபெறுதற்பொருளிலும் வரும்.

வ - று. (௧) "அதுமற் கொண்கன் றேரே" இங்கே வேறுபொருளின்றிச் சார்த்தப்பட்டு நிற்றலால் அசைநிலை.

(௨) "கூரியதோர்வாண்மன்" இங்கே இரும்பை அறத்துணித்தது என்னும் ஒழிந்த சொற்களைத் தருதலால் ஒழியிசை.

(௩) "பண்டுகாடுமன்" இங்கே இன்று வயலாயிற்று என்னும் ஆக்கப் பொருளைத்தருதலால் ஆக்கம்.

Digitized By Roja Muthiah Research Library

(௪ "செறியசுட்பெறினே யெமக்கீயுமன்னே" இங்கே இப்பொழுது அவன் இறந்ததனால் எமக்குக்கொடுத்தல் கழிந்தது என்னும்பொருளைத் தருதலாற் கழிவு.

(௫ "எந்தையெமக்கருளுமன்" இங்கே மிகுதியும் அருளுவன் என்னும் பொருளைத் தருதலால் மிகுதி.

(௬) "மன்னுவுலகத்து மன்னியது புரிமோ" இங்கே இவ்விடைச்சொல்லடியாகப் பிறந்த வினைகள் நிலைபெறாத வுலகத்திலே நிலைத்தைச் செய் என்னும் பொருள்பட நிற்றலால் நிலைபேறு.

[மற்றென்னுமிடைச்சொல்.]

௪௩௩. வினைமாற் றசைநிலை பிறிதெனு மற்றே.

இ - ள். மற்று - மற்றென்னுமிடைச்சொல்,—வினைமாற்று - வினைமாற்றுப்பொருளையும்,—அசைநிலை - அசைத்துநிற்றற்பொருளையும்,—பிறிது எனும் — பிறிதுபொருளையுந் தரும். எ - று.

வ - று. (௧) "மற்றறிவாநல்வினை யாமிளையமென்னாது" இங்கே விரைந்தறிவாமென்னும் வினையையொழித்து விரையாதறிவாமென்னும் வினையைத் தருதலால் வினைமாற்று.

(௨) "மற்றென்னையாள்க." இங்கே வேறுபொருளின்றிச் சார்த்தப்பட்டு நிற்றலால் அசைநிலை.

(௩) "ஊழிற்பெருவலியாவுளமற்றொன்று—சூழினுந்தான்முந்துறும்" இங்கே ஊழல்லதொன்றென்னும் பொருளைத்தருதலாற்பிறிது.

[முன்னதற்கோர்புறனடை.]

௪௩௪. மற்றைய தென்பது சுட்டிய தற்கினம்.

இ - ள். மற்றையது என்பது - மற்றையதென்னும் பொருளாகிய வினைமாற்றும் பிறிதும்,—சுட்டியதற்கு இனம் — கருதியதற்கு இனமாகிய மறுதலை வினையும் இனமாகிய பிறிதுமாம். எ - று.

முன்னுதாரணங்களுள், நல்வினையை விரைந்தறிவாம் எனக் கருதியதற்கு இனமாகிய வினைமாற்றாவது, விரையாதறிவாமென்பது; ஊழொன்றெனக் கருதியதற்கு இனமாகிய பிறிதாவது ஊழல்லதொன்றென்பது.

[கொல்லிடைச்சொல்.]

௪௩௫. கொல்லே யைய மசைநிலைக் கூற்றே.

இ - ள். கொல் - கொல்லென்பது,—ஐயம் அசைநிலைக் கூற்று - ஐயப்பொருளையும் அசைநிலைப் பொருளையும் தருமிடைச்சொல்லாம்.

Digitized By Roja Muthiah Research Library

வி - று. (க) இவ்வுருக் குற்றிகொன் மகன்கொல். இங்கே குற்றியோ மகனோ என்னும் பொருளைத் தருதலால் ஐயம்.

(உ) "கற்றதனாலாயபயனென்கொல்" இங்கே வேறுபொருளின்றிச் சார்த்தப்பட்டு நிற்றலால் அசைநிலை. (௧௬)

[ஒடு, தெய்ய]

௩௬௬. ஒடுவுந் தெய்யவு மிசைநிறை மொழியே.

இ - ள். ஒடுவும் தெய்யவும் - ஒடு தெய்ய என்னுமிரண்டும்;—இசைநிறைமொழி - இசைநிறைத்தற்பொருளைத் தருஞ் சொற்களாம். எ - று.

வ - று. "விதைக்குறுவட்டிற் போதொடுபொதுள." எ - ம். சொல்லேன்றெய்ய நின்னொடுபெயர்த்தே. எ - ம். வரும். (௧௭)

[அந்தில், ஆங்கு.]

௩௬௭. அந்திலாங் கசைநிலை யிடப்பொரு ளவ்வே.

இ - ள். அந்தில் ஆங்கு - அந்தில் ஆங்கு என்னும் இவ்விரண்டிடைச்சொல்லும்,—அசைநிலை இடப்பொருள் - அசைநிலைப் பொருளவாயும் இடப்பொருளவாயும் வரும். எ - று.

வ - று. (க) "அந்திற்கழலினன் கச்சினன்" இங்கே வேறுபொருளின்றிச் சார்த்தப்பட்டு நிற்றலால் அசைநிலை.

"வருமே—சேயிழை யந்திற் கொழுநற் காணிய" இங்கே அவ்விடத்து வரும் என்னும் பொருளைத் தருதலால் இடம்.

(உ) "ஆங்கத் திறனல்ல யாஞ்சழற" இங்கே வேறுபொருளின்றிச் சார்த்தப்பட்டு நிற்றலால் அசைநிலை. இதனுள் ஆங்கென்னுமசைநிலை ஆங்கவென இறுதிவிகாரமாய் நின்றது.

"ஆங்காங்காயினுமாக" இங்கே அவ்விடத்து என்னும் பொருளைத் தருதலால் இடம். (௧௮)

[அம்மவிடைச்சொல்.]

௩௬௮. அம்ம வுரையசை கேண்மினென் றாகும்.

இ - ள். அம்ம - அம்மவென்பது,—உரையசை - உரையசைப்பொருளைத்தருவதும்,—கேண்மின் என்று ஆகும் - ஒன்று சொல்லுவேன் கேண்மினென்னும் ஏவற்பொருளைத் தருவதுமாம். எ - று.

வ - று. (க) "அதுமற்றம்ம" இங்கே கட்டுரைக்கண் வருதலால் உரையசை.

(உ) "அம்மவாழிதோழி" இங்கே ஒன்றுசொல்வேன் கேள் என்னும் ஏவற்பொருளில் வந்தது. (௧௯)



Digitized By Roja Muthiah Research Library

[வியங்கோளசை.]

**௪௩௯. மாவென் கிளவி வியங்கோ ளசைச்சொல்.**

இ - ள். மாவென் கிளவி - மாவென்னுஞ்சொல்,—வியங்கோள் அசைச்சொல் - வியங்கோளிடத்து வரும் அசைச்சொல்லாம். எ - று.

வ - று, "உப்பின்று - புற்கை யுண்கமா கொற்கை யோனே" இங்கே மாவென்னும் அசைச்சொல் உண்கவென்னும் வியங்கோள் வினையையடுத்து வந்தது. (உப்பின்றிப் புற்கையையுண் என்பது பொருள்.) ()

[முன்னிலையசைச்சொல்.]

**௪௪௦. மியாயிக மோமதி யத்தை யித்தை**
**வாழிய மாளவீ யாழமுன் னிலையசை**

இ - ள். மியா — யாழ — மியா இக மோ மதி அத்தை இத்தை வாழிய மாள ஈ யாழ என்னும் பத்திடைச்சொற்களும், — முன்னிலை அசை - முன்னிலையிடத்து வரும் அசைச்சொற்களாம். எ - று.

வ - று. மியா——"சிலையன் செழுந்தழையன் சென்மியா வென்று மலையகலான் வாடி வரும்."

இக———"தண்டுறையூர காணிக வெனவே."
மோ———"காமஞ் செப்பாது கண்டது மொழிமோ."
மதி———"சென்மதிபெரும"
அத்தை——"சொல்லிய ரத்தைநின் வெகுளி"
இத்தை——"வேய் நால் விடரக நீயொன்று பாடித்தை"
வாழிய——"காணிய வாவா ழியமலைச் சாரல்."
மாள———"சிறிது—தவிர்ந்தீக மாளநின் பரிசில ருய்ம்மார்"
ஈ————"சென்றீ பெருமநிற் றகைக்குநர் யாரே"
யாழ———"நீயே-செய்வினை மருங்கிற் செலவயர்ந்தியாழ."

[எல்லாவிடத்தும்வரும் அசைச்சொல்.]

**௪௪௧. யாகா பிறபிறக் கரோபோ மாதிருஞ்**
**சின்குரை யோரும் போலு மிருந்திட்**
**டன்றாந் தாந்தான் கின்றுநின் றசைமொழி.**

இ - ள். யா—நின்று - யா கா பிற பிறக்கு அரோ போ மாது இகும் சின் குரை ஓரும் போலும் இருந்து இட்டு அன்று ஆம் தாம் தான் கின்று நின்று என்னும் இருபதிடைச்சொற்களும்,— அசைமொழி - எல்லாவிடங்களிலும் வரும் அசைச்சொற்களாம். எ - று.

வ - று. யா——யா பன்னிருவர் மாணாக்க ரகத்தியனார்க்கு.
கா——"புறநிழற் பட்டாளோ விவளிவட் காண்டிகா."

Digitized By Roja Muthiah Research Library

பிற—"ஆயினை யல்லபிற"
பிறக்கு-"பிறக்கிதனுட் செல்லான் பெருந்தவம் பட்டான்."
அரோ—"சோதக விருங்குயி லாலு மரோ."
போ—"பிரியின் வாழா தென்போ."
மாது—"விளிந்தன்று மாதவர்த் தெளிந்தவென் னெஞ்சே."
இரும்—"காண்டிரு மல்லமோ கொண்க."
சின்—"தீங்கா கியவா லென்றிசின்."
குரை—"அது பெறலருங் குரைத்தே."
ஓரும்—"அஞ்சுவதோருமறனே".
போலும்-"வடுவென்ற கண்ணாய் வருந்தினை போலும்."
இருந்து-"நனவென் றெழுந்திருந்தே னல்வினையொன் றில்லேன்"
இட்டு—"நெஞ்சம் பிளந்திட்டு."
அன்று—"பிரமாபுரமேவியபெம்மானிவனன்றே."
ஆம்—"பணியுமா மென்றும் பெருமை சிறுமை
அணியுமாந் தன்னை வியந்து"
தாம்—நீர்தாம்.
தான்—நீதான்.
கின்று—"வாழ்வானுசைப்பட்டிருக்கின்றேன்."
நின்று—"அழலடைந்த மன்றத் தரந்தையராய் நின்றார்
நிழலடைந்தே னின்னையென் றேத்த." (௨௨)

பரீக்ஷைவினாக்கள்:—930. இடைச்சொல்லாவன யாவை? 931. இவை யாதுகாரணத்தால் இடைச்சொல்லெனப்பட்டன? 932. இசைநிறையெ ன்பதியாது? 933. அசைநிலையென்பதியாது? 934. பிறவாறு தத்தமக் குரிய பொருள்களை உணர்த்திவருமென்ற இடைச்சொற்களின் பொரு ள்கள்யாவை? 935. ஏகாரவிடைச்சொல் எவ்வெப்பொருளைத் தரும்? 936. ஓகாரவிடைச்சொல் எவ்வெப்பொருளைத்தரும்? 937. சிறப்பு எ த்தனைவகைப்படும்? 938. உயர்வுசிறப்பென்பதியாது? 939. இழிவுசி றப்பென்பதியாது? 940. என் என்று என்னும் இரண்டிடைச்சொற்க ளும்எவ்வெவ்விடத்துவரும்? 941. உம்மென்னுமிடைச்சொல் எவ்வெ ப்பொருளைத்தரும்? 942. எச்சவும்மை எத்தனைவகைப்படும்? 943. ஒ ருபொருளில் வரும் உம்மை மற்றொருபொருளிலும்வருமோ? 944. செ வ்வெண்ணாவதியாது? 945. எச்சவும்மை செவ்வெண்ணில் வருமாயி ன் எவ்விடத்துவரும்? 946. தொகைபெற்றேவரும் எண்களெவை? 947. தொகை பெற்றும் பெறாதும் வரும் எண்களெவை? 948. எண் ணிடைச்சொற்கள் எண்ணுப்பொருடோறு நிற்கவே பெறுமோ? 949. வி னை எண்ணப்படுங்கால், எண்ணிடைச்சொற் பெறாதோ? 950. தில்லெ ன்னுமிடைச்சொல் எவ்வெப்பொருளைத்தரும்? 951. தில்லென்னுமி

Digitized By Roja Muthiah Research Library

டைச்சொல் எவ்விடத்தின்மாத்திரம் வரும்? 952. மன்னென்னுமிடைச்சொல் எவ்வெப்பொருளைத்தரும்? 953. மற்றென்னுமிடைச்சொல் எவ்வெப்பொருளைத்தரும்? 954. இங்கே வினைமாற்றென்றதெது? 955. பிறிதென்றதெது? 956. கொல்லென்னுமிடைச்சொல் எவ்வெப்பொருளைத்தரும்? 957. ஒடு தெய்ய என்னுமிடைச்சொற்கள் எப்பொருளைத்தரும்? 958. அந்தில் ஆங்கு என்னுமிடைச்சொற்கள் எவ்வெப்பொருளைத்தரும்? 959. அம்மவென்னுமிடைச்சொல் எவ்வெப்பொருளைத்தரும்? 960. மாவென்னுமிடைச்சொல் எவ்விடத்துவரும்? 961. முன்னிலையில்வரும் அசைச்சொற்கள் எவை? 962. எல்லாவிடத்தும்வரும் அசைச்சொற்களெவை?

இந்த இடைச்சொல்லியலில் உம் சூத்திரத்தில் இன்னவென்றதனால் இன்னும் தேவராயினும், மூடனாயினும் என்று ஆயினும் என்னுமிடைச்சொல் உயர்வு இழிவு என்னும் பொருளில் வந்ததும், "வந்துளார்களாம்", இங்கே திருடியது கொற்றனாம் என்பவைகளில் ஆம் என்னுமிடைச்சொல் பிறர்கூற்று என்னும்பொருளில் வந்ததும், "ஆனன்முனிசேன்" என்பதில் ஆனலென்பது எடுத்தவிஷயத்தில் உன்முகமாக்குதற்பொருளில்வந்ததும், தஞ்சம் என்னுமிடைச்சொல் எளிதென்னும் பொருளில்வந்ததும், "தஞ்சக்கிளவியெண்மைப்பொருட்டே" (தொல்காப்.) கொன் என்னுமிடைச்சொல், அச்சம், பயனின்மை, காலம், பெருமை என்னு நான்குபொருளில் வந்ததும், "அச்சம்பயமிலி காலம்பெருமையென், றப்பாலான்கே கொன்னைச்சொல்லே" (தொல்காப்.) பிறவுங்கொள்க.

இடையியல் முற்றிற்று.

# ரு. உரியியல்.

[உரிச்சொல்லின் பொதுவிலக்கணம்.]

சசஉ. பல்வகைப் பண்டும் பகர்பெய ராகி
ஒருகுணம் பலகுணந் தழுவிப் பெயர்வினை
ஒருவா செய்யுட் குரியன வுரிச்சொல்.

இ - ள். பல்வகைப் பண்பும் பகர் பெயர் ஆகி - இசையுங் குறிப்பும் பண்புமாகிய பல வேறுவகைப்பட்ட பண்புகளையும் உணர்த்தும் பெயரா கி,—ஒருகுணம் பலகுணம் தழுவி - அவ்வாறுணர்த்தும்போது ஒருசொல் ஒருகுணத்தையுணர்த்துவனவும் பலகுணங்களை யுணர்த்துவனவுமாய்,—பெயர் வினை ஒருவா - பெயர்வினைகளைவிட்டு நீங்காவாய்,—செய்யுட்கு உரியன உரிச்சொல் - செய்யுளுக்கு உரியவையாய்ப் பொருட்குரிமைபூண்டு நிற்பவை உரிச்சொற்களாம். எ - று.

இசை ஓசை. குறிப்பு மனத்தாற் குறித்துணரப்படுவது. பண்பு பொறியாலுணரப்படுங் குணம். (க)

[பண்பிதுவென்பது]

சசரு. உயிருயி ரல்லதாம் பொருட்குணம் பண்பே.

இ - ள். உயிர் உயிர் அல்லது ஆம் பொருட்குணம் பண்பு - உயிராகிய பொருளும் உயிரல்லாதபொருளுமென இருவகையுளடங்கும் உலகத்துப் பொருள்களின் குணங்கள் பண்புகளாம். எ - று. (உ)

[உயிர்ப்பொருள்.]

சசச. மெய்ந்நா மூக்கு நாட்டஞ் செவிகளின்
ஒன்றுமுத லாக்கீழ்க் கொண்டுமே லுணர்தலின்
ஓரறி வாதியா வுயிரைந் தாகும்.

இ - ள். மெய் நா மூக்கு நாட்டம் செவிகளின் - மெய்யும் நாவும் நாசியுங் கண்ணுங் காதுமாகிய ஐம்பொறிகளாலும்,—ஒன்று முதலா - மெய்யாற் பரிசத்தையுணருமுணர்ச்சி யொன்றுமுதலாக,—கீழ்க்கொண்டு - கீழ்ப்போனவுணர்ச்சியுங்கொண்டு,—மேல் உணர்தலின் - இரதங் கந்தம் உருவஞ்சத்தமென மேல்வரும் புலன்களை யொன்றோடொன்றாக உணர்தலின்,—ஓரறிவு ஆதியா ஐந்து ஆகும் - ஓரறிவுயிர்முதலாக ஐந்துவகையாகும்,—உயிர் - அவ்வுயிர். எ - று. (ங)

Digitized By Roja Muthiah Research Library

[ஓரறிவுயிர்.]

௪௪௫. புன்மர முதலவுற் றறியுமோ ரறிவுயிர்.

இ - ள். புல் மரம் முதல - புல்லும் மரமும் முதலியவை,— உற்று அறியும் ஓரறிவு உயிர் - மெய்யாற் பரிசித்துப் பரிசத்தை யறியும் ஓரறிவுயிர்களாம். எ - று. (௪)

[ஈரறிவுயிர்.]

௪௪௬. முரணந் தாதிநா வறிவொடீ ரறிவுயிர்.

இ - ள். முரள் நந்து ஆதி - இப்பியுஞ் சங்கும் முதலியவை,— நா அறிவொடு ஈரறிவு உயிர் - கீழ்ப்போன மெய்யறிவேயன்றி நாவாலிரதத்தை யறியும் அறிவோடு ஈரறிவுயிர்களாம். எ - று. (ரு)

[மூவறிவுயிர்.]

௪௪௭. சிதலெறும் பாதிமூக் கறிவின்மூ வறிவுயிர்.

இ - ள். சிதல் எறும்பு ஆதி - கறையானும் எறும்பும் முதலியவை,— மூக்கு அறிவின் மூவறிவு உயிர் - கீழ்ப்போன இரண்டறிவுகளேயன்றி மூக்காற் கந்தத்தையறியும் அறிவோடு மூவறிவுயிர்களாம். எ - று. (௬)

[நாலறிவுயிர்.]

௪௪௮. தும்பிவண் டாதிகண் ணறிவினா லறிவுயிர்.

இ - ள். தும்பி வண்டு ஆதி - தும்பியும் வண்டும் முதலியவை,— கண் அறிவின் நாலறிவு உயிர் - கீழ்ப்போன மூன்றறிவுகளேயன்றிக் கண்ணால் உருவத்தையறியும் அறிவோடு நாலறிவுயிர்களாம். எ - று.

[ஐயறிவுயிர்.]

௪௪௯. வானவர் மக்க ணரகர் விலங்குபுள்
ஆதிசெவி யறிவோ டையறி வுயிரே.

இ - ள். வானவர் மக்கள் நரகர் விலங்கு புள் ஆதி - தேவரும் மனிதரும் நரகரும் மிருகங்களும் பறவைகளும் முதலியவை,— செவி அறிவோடு ஐயறிவு உயிர் - கீழ்ப்போன நாலறிவுகளேயன்றிச் செவியாற் சத்தத்தையறியும் அறிவோடு ஐயறிவுயிர்களாம். எ - று.

ஆசிரியர் தொல்காப்பியனார் (சூத்.) மக்கடாமே யாறறிவுயிரே. எனக் கூறியிருக்க இவர் ஐயறிவுயிரெனக்கூறுதல் மாறுகொளக் கூறலாமெனின்; அன்றெனக்.

பொறிகள் ஐந்து புலன்கள் ஐந்தாதலின் அறியும்வகையால் உடலறிவு முதற் செவியறிவீறாக உயிர் ஐவகையாயினவென்றது மனவறிவைநீக்கியன்றே அதனைக் கூட்டுங்கால் ஆறறிவுயிர் மக்கண்முதலியோரென்பது

Digitized By Roja Muthiah Research Library

இவர்க்கும் உடன்பாடாதலாலெனக. இங்கே மக்கண்முதலியோரை, "வானவர்மனிதர்கீழ்ப்போய்மாழ்கியநரகரோடு, கானுறுவிலங்குபுள்ளுக்கருதாமலறிவினோடே, யூனமில்செவியுமாங்கேயுறலினையறிவிற்சீலன், மானமர்நோக்கினல்லாய்மனமுமொன்றதிகமாமே." எனக்கூறிய மண்டலபுருடர்போல மிருகமுதலியவற்றோடு கூட்டியெண்ணி ஐயறிவுயிரென்றார்.

[உயிரல்லாத பொருள்.]

௪௫௦. உணர்வியலாமுயி ரொன்று மொழித்த
உடன்முத லனைத்து முயிரல் பொருளே.

இ-ள். உணர்வு இயல்ஆம்உயிர்ஒன்றும் ஒழித்த - அறிவுமயமாகிய உயிரொன்றுமேயன்றி,—உடல் முதல் அனைத்தும் உயிர் அல் பொருள் - உடம்பு முதலாகிய உலகத்துப் பொருள்களெல்லாம் உயிரல்லாத பொருள்களாம். எ-று. (௯)

[முன்னதற்கு ஓர் புறனடை.]

௪௫௧. ஒற்றுமை நயத்தி னொன்றெனத் தோன்றினும்
வேற்றுமை நயத்தின் வேறே யுடலுயிர்.

இ-ள். ஒற்றுமை நயத்தின் - எவ்வுயிர் எவ்வுடம்பையெடுத்ததோ அவ்வுடம்பின்மயமாய் நிற்கும் ஒற்றுமைநயங்கருதியவழி,—ஒன்று எனத் தோன்றினும் - ஒன்றுபோற்றோன்றுமாயினும்,—வேற்றுமை நயத்தின் - உயிர் சித்தாயும் உடம்பு சடமாயும் நிற்கும் வேற்றுமை நயமாகிய உண்மைகருதியவழி,—உடல் உயிர் வேறு - அவ்வுடலுமுயிரும் வேறாம். எ-று.

[உயிர்ப்பொருள்களின் குணப்பண்பு.]

௪௫௨. அறிவரு ளாசை யச்ச மான
நிறைபொறை யோர்ப்புக் கடைப்பிடி மையல்
நினைவு வெறுப்புவப் பிரக்கநாண் வெகுளி
துணிவழுக் காறன் பெளிமை யெய்த்தல்
துன்ப மின்ப மிளமை மூப்பிகல்
வென்றி பொச்சாப் பூக்க மறமதம்
மறவி யினைய வுடல்கொ ளுயிர்க்குணம்.

இ-ள். அறிவு—மறவி - அறிவு அருள் ஆசை அச்சம் மானம் நிறை பொறை ஓர்ப்புக் கடைப்பிடி மையல் நினைவு வெறுப்பு உவப்பு இரக்கம் நாண் வெகுளி துணிவு அழுக்காறு அன்பு எளிமை எய்த்தல் துன்பம் இன்பம் இளமை மூப்பு இகல் வென்றி பொச்சாப்பு ஊக்கம் மறம் மதம் மறவி யென்னும் முப்பத்திரண்டும்,—இனைய - இவைபோல்வனபிறவும்,—உடல்கொள் உயிர்க்குணம் - உடம்போடுகூடிய உயிர்களினுடைய குணங்களாம். எ-று. (௧௧)

Digitized By Roja Muthiah Research Library

[உயிர்ப்பொருள்களின் றொழிற்பண்பு.]

௪௱௩. துய்த்த றுஞ்ச றொழுத லணிதல்
உய்த்த லாதி யுடலுயிர்த் தொழிற்குணம்.

இ - ள். துய்த்தல்—உய்த்தல் - துய்த்தல் துஞ்சல் தொழுதல் அணிதல் உய்த்தலென்னும் ஐந்தும்,—ஆதி - இவைபோல்வன பிறவும்,—உடல் உயிர்த் தொழிற்குணம் - உடம்போடுகூடிய உயிரினுடைய தொழிற்குணங்களாம். எ - று. (௧௨)

[உயிரல்பொருள்களின் குணப்பண்பு.]

௪௱௪. பல்வகை வடிவிரு நாற்றமை வண்ணம்
அறுசுவை யூறெட் டுயிரல் பொருட்குணம்.

இ - ள். பல்வகை வடிவு - வட்டம் இருகோணம் முக்கோணம் சதுரமுதலிய பலவகைவடிவுகளும்,—இருநாற்றம் - நற்கந்தந் துர்க்கந்தமென்னும் இருநாற்றங்களும்,—ஐவண்ணம் - வெண்மை செம்மை கருமை பொன்மை பசுமையென்னும் ஐந்துவண்ணங்களும்,—அறுசுவை - கைப்புப் புளிப்புத் துவர்ப்பு உவர்ப்பு கார்ப்பு இனிப்பு என்னும் அறுசுவைகளும்,—ஊறு எட்டு - வெம்மை தண்மை மென்மை வன்மை நொய்மை சீர்மை இழுமெனல் சருச்சரை யென்னும் எட்டூறுகளும்,—உயிர் அல் பொருட் குணம் - உயிரல்லாத பொருள்களினுடைய குணங்களாம்.

சீர்மை - கனமாயிருக்குந்தன்மை. இழுமெனல் - வழுவழுப்பு. சருச்சரை - மரமரப்பு. (பருபருக்கை) (௧௩)

[இப்பெயர்களுக்கும் பொதுவாகிய தொழிற்பண்பு.]

௪௱௫. தோன்றன் மறைதல் வளர்தல் சுருங்கல்
நீங்க லடைத னடுங்க லிசைத்தல்
ஈத லின்னன விருபொருட் டொழிற்குணம்.

இ - ள். தோன்றல்—ஈதல் — தோன்றல் மறைதல் வளர்தல் சுருங்கல் நீங்கல் அடைதல் நடுங்கல் இசைத்தல் ஈதலென்னும் ஒன்பதும்,—இன்னன இவைபோல்வனபிறவும்,— இருபொருட்டொழிற்குணம் - உயிர்ப்பொருளும் உயிரல்பொருளுமாகிய இரண்டற்கும் பொதுவாகிய தொழிற்குணங்களாம். எ - று.

வ - று. உயிர்தோன்றிமறைந்தது; உடறோன்றிமறைந்தது; நெருப்புத் தோன்றிமறைந்தது என வரும். (௧௪)

[ஒருகுணந்தழுவிய உரிச்சொல்.]

௪௱௬. சால வுறுதவ நனிகூர் கழிமிகல்.

Digitized By Roja Muthiah Research Library

இ - ள். சால—கழி - சாலவென்பதுமுதலாகிய இவ்வாறுரிச்சொற் களும்,—மிகல் - மிகுதியாகிய ஒருகுணத்தையுணர்த்தும் உரிச்சொற்கள்.

வ - று. சால——"பருவந்துசாலப் பலகொலென்றெண்ணி"
உறு——"உறுவளிதூக்கு முயர்சினைமாவின்"
தவ——"தவச்சேய் நாட்டா ராயினும்"
நனி——"வந்துநனிவருந்தினை வாழியநெஞ்சே."
கூர்——"துனிகூ ரெவ்வமொடு"
கழி——"காமங் கழிகண் ணோட்டம்"

சாலவென்பது சாலென்னுமுரிச்சொல்லடியாகப் பிறந்த வினையெச்சக் குறிப்பு. (௩௫)

[பலகுணந்தழுவிய உரிச்சொல்.]

௩௬௭. கடியென் கிளவி காப்பே கூர்மை
விரையே விளக்க மச்சஞ் சிறப்பே
விரைவே மிகுதி புதுமை யார்த்தல்
வரைவே மன்றல் கரிப்பி னாகும்.

இ - ள். கடி என் கிளவி - கடியென்னுமுரிச்சொல்,—காப்பு - காவ லும்,—கூர்மை - கூர்மையும்,—விரை — வாசனையும்,—விளக்கம் - விளக்க மும்,—அச்சம் - அச்சமும்,—சிறப்பு - சிறப்பும்,—விரைவு - விரைவும்,— மிகுதி - மிகுதியும்,—புதுமை - புதுமையும்,—ஆர்த்தல் — ஒலித்தலும்,— வரைவு - நீக்கலும்,—மன்றல் — மணமும்,—கரிப்பின் ஆகும் - கரிப்புமாகி ய பதின்மூன்றுகுணங்களிலும் வரும். எ - று.

வ - று. "கடிநகரடைந்து"........................................காப்பு
"கடிநுனைப்பகழி"........................................கூர்மை
"கடிமாலைசூடி"........................................நாற்றம்
"கண்ணாடியன்னகடிமார்பன்"........................................விளக்கம்
"கடியரமகளிர்க்கேகைவிளக்காகி"........................................அச்சம்
"அம்புதுஞ்சுங்கடியரண்"........................................சிறப்பு
"எம்மம்புகடிவிடுதும்"........................................விரைவு
"கடியுண்கடவுட்கிட்டசெழுங்குரல்"........................................மிகுதி
"கடிமணச்சாலை"........................................புதுமை
"கடிமுரசு"........................................ஆர்த்தல்
"கடிமதுநுகர்வ"........................................வரைவு
"கடிவினைமுடிகினி"........................................மன்றல்
"கடிமிளகுதின்றகல்லாமந்தி"........................................கரிப்பு
(கரிப்பு — காரம்.)



Digitized By Roja Muthiah Research Library

"கண்ணாடியன்னகடிமார்பன்" என்பதற்கு (தன்னை நோக்குவோர்க்கு அவரதுபுறத்தைக் காட்டாமல் முற்பக்கத்தைக் காட்டுங்) கண்ணாடியைப் போன்ற (போர்முனையிற் பகைவர்க்குப் புறங்கொடாது தன்னைக்காட்டுஞ்) சிறந்தமார்புடையுடையவன். என்னுமிப்பொருள்செய்தவழி, கடியென்னுமுரிச்சொல் அருமைச்சிறப்புணர்த்திநின்றது. இதில் போன்ற என்பது மார்பென்பதனோடு தொடர்ந்துநின்றது. (கசு)

[ஒருகுணந்தழுவிய உரிச்சொல்.]

சுடுஅ. மாற்ற நுவற்சிசெப் புரைகரை நொடியிசை
கூற்றுப் புகறன் மொழிகிளவி விளம்பறை
பாட்டுப் பகர்ச்சி யியம்பல் சொல்லே.

இ-ள். மாற்றம் — இயம்பல் - மாற்றமுதலாகிய பதினாறும்,—சொல் - சொல்லென்னும் ஒருகுணத்தை யுணர்த்தும் உரிச்சொற்களாம். எ-று.

வ-று. "கோவலர்வாய் மாற்ற முணர்ந்து"; "இருபிறப் பாளர் பொழுதறிந்து நுவல்"; "தெருண்டாரவை செப்பலுற்றேன்"; "உரைப்பா ருரைப்பவையெல்லாம்"; "அறங்கரைநாவி ளன்மறைமுற்றிய"; "அஞ்சொற் பெரும்பணைத்தோ ளரிமழையா டானொடியும்"; (நொடியும் - சொல்வாள்.) "நசையுநர்க் கடையா நன்பெருவாயி — லிசையெனப் புக்கு"; "உற்றது நாங்கள்கூற வுணர்ந்தனை"; "புகன்ற வன்றீயும் பூமி கவருமோ"; "காமஞ் செப்பாது கண்டது மொழிமோ"; (கண்டதுமொழிமோ - கண்டதுசொல்லு.) இதில் மோ என்பது முன்னிலையசையிடைச்சொல். "கிளந்த கிளைமுத லுற்ற"; "மெய்ம்மூ வாறென விளம்பினர் புலவர்"; "அச்சுத னடிதொழு தறைகுவன் சொல்லே"; ஒருவன் செய்ந்நன்றி கொன்றார்க் — குய்தியில்லென வறம்பாடின்றே"; (அறம்பாடின்று - அறநூல்சொல்லிற்று.) "வார்த்தை பகர்குற்றேன்"; "இடிபோல வியம்பினனே" என முறையே காண்க.

உரு என்பது அச்சத்தையும், புரை என்பது உயர்வையும் உணர்த்தும்.

உ-ம். உரு கெழு ஞாயிறொண்கதிர் (அச்சம்பொருந்திய சூரியகிரணம்) புரையோர் கேண்மை (உயர்ந்தோர்நட்பு)

சூத்திரம். "உருவுட்காகும் புரையுயர்வாகும்."

குரு, கெழு என்பன நிறத்தையுணர்த்தும்.

உ-ம். குருமணித்தாலி, (நிறம்பொருந்திய மணித்தாலி.) குரு குரூஉ என நீண்டளபெடுத்து நிற்றலுமுண்டு. கேழ்கிளரகலம், (நிறம்பொருந்திய மார்பு.) கெழு - கேழ் என விகாரப்பட்டது.

Digitized By Roja Muthiah Research Library

சூத்திரம். "குருவுங்கெழுவுநிறனாகும்மே."

செல்லல் இன்னல் என்பன துன்பத்தையுணர்த்தும்.

உ-ம். மணங்கமழ் வியன்மார்ப னணங்கிய செல்லல். வெயில்புறந்தரூஉ மின்னலியக்கத்து (வெயில்புறத்தேதருந் துன்பம்பொருந்திய பிரயாணநடையில்.)

சூத்திரம். "செல்லலின்னலின்னாமையே."

அலமரல், தெருமரல் என்பன சுழலுதலையுணர்த்தும்.

உ-ம். அலமரலாயம் (சுழலுதலையுடைய பெண்கூட்டம்.) தெருமரலுள்ளமோ டன்னைதுஞ்சாள். (சுழலுமனத்தோடன்னை துயிலாள்.)

சூத்திரம். "அலமரறெருமரலாயிரண்டுஞ்சுழற்சி."

மழவும், குழவும் இளமையையுணர்த்தும்.

உ-ம். மண்யாத்தகோட்ட மழகளிறு. (நிலத்துப்பாய்தலால் மண்கட்டிய கொம்புகளையுடைய இளமைபொருந்திய யானை.) குழக்கன்று (இளங்கன்று.)

சூத்திரம். "மழவுங் குழவு மிளமைப் பொருள"

கதழ்வு, துனைவு என்பன விரைவுணர்த்தும்.

உ-ம். கதழ் பரிநெடுந்தேர் (வேகம்பொருந்திய குதிரைபூட்டிய நெடுந்தேர்.) துனைபரிதுரக்குந் துஞ்சாச்செலவின் (வேகமாகக் குதிரையை நடத்துகின்ற தூங்காப்பிரயாணத்தில்)

சூத்திரம். "கதழ்வுந்துனைவும் விரைவின்பொருள."

அதிர்வு, விதிர்ப்பு என்பன நடுக்கத்தையுணர்த்தும்.

உ-ம். அதிரவருவதோர்நோய். (நடுங்கவருவதோர்நோய்) விதிர்ப்புறவறியாவேமக்காப்பு (நடுங்குதலறியாதவின்பக்காவல்)

சூத்திரம். "அதிர்வும் விதிர்ப்பும் நடுக்கஞ்செய்யும்."

தடவு பெருமையையும் வளைவையு முணர்த்தும்.

உ-ம். தடக்கை (பெருமைபொருந்தியகை) தடமருப்பெருமை (வளைந்த கொம்புகளையுடைய எருமை.)

கயவு பெருமையையும் மென்மையையுமுணர்த்தும்.

உ-ம். கயவாய் (பெருவாய்.) கயந்தலை மென்மையான தலையையுடைய யானைக்கன்று.)

நளி பெருமையையுஞ் செறிவையுமுணர்த்தும்.

Digitized By Roja Muthiah Research Library

உ - ம். நளிமலைநாடன் (பெருமைபொருந்தியமலைநாடன்) நளிகொட்ண சுதை (செறிவுகொண்ட குளிர்ச்சிபொருந்திய அமிர்தம்.) நளிவிடம் (செறிவுகொண்டநஞ்சு)

சூத்திரம். "தடவுங்கயவுநளியும்பெருமை" "அவற்றுள். தடவென்கிளவி கோட்டமுஞ்செய்யும்" "கயவென்கிளவிமென்மையுஞ்செய்யும்" "நளியென்கிளவிசெறிவுமாகும்."

முழுது குறைவில்லாமையையும், வம்பு நிலையில்லாமையையும், மாதர் ஆசையையுமுணர்த்தும்.

உ - ம். மண்முழுதாண்ட (நிலமுழுமையுமாண்ட) வம்பு மாரியைக் காரென மதித்து (நிலையில்லாதமேகத்தைக்கண்டு கார்காலமென்றெண்ணி.) மாதர்நோக்கு (ஆசைகொண்டவிழி)

சூத்திரம். "முழுதென்கிளவியெஞ்சாப்பொருட்டே." "வம்புநிலையின்மை" "மாதர்காதல்"

செழுமை என்பது வளனும் கொழுப்புமாகிய பண்புணர்த்தும்.

உ - ம். செழும்பல்குன்றம் எ - ம். செழுந்தடிதின்ற செந்நாய் எ - ம். செழுமை வளனுங் கொழுப்புமாகிய பண்புணர்த்தின. (தடி - தசை)

சூத்திரம். "செழுமை வளனுங் கொழுப்பு மாகும்."

கறுப்பும் சிவப்பும் வெகுளியாகிய குறிப்புணர்த்தும்.

உ - ம். நிற்கறுப்பதோரருங்கடிமுனையள். (உன்னைக் கோபிப்பதொரு) நீசிவந்திறுத்த நீரழிபாக்கம் (நீ வெகுண்டுதங்கிய)தொழிற்பட்டுழி யல்லது அவை வெகுளியுணர்த்தாமைகொள்க.

புனிறு என்பது ஈன்றணிமையாகிய குறிப்புணர்த்தும்.

உ - ம் புனிற்றுப் பாய்ந்தெனக் கலங்கி (ஈன்றணிமையானபசு)

சூத்திரம். "புனிறென்கிளவியீன்றணிமைப்பொருட்டே"

௪௫௯. முழக்கிரட் டொலிகலி யிசைதுவை பிளிறிரை
இரக்கமுழங் கியம்ப லிமிழ்குளி றதிர்குரை
கனைசிலை சும்மை கௌவை கம்பலை
அரவ மார்ப்போ டின்னன வோசை

இ - ள். முழக்கு—ஆர்ப்போடு - முழக்குமுதலாகிய இருபத்திரண்டும்,—இன்னன — இவைபோல்வனபிறவும்;—ஓசை - ஓசையென்னுமொருகுணத்தையுணர்த்து முரிச்சொற்களாம். எ - று.

Digitized By Roja Muthiah Research Library

வ - று. "முழங்கு முந்நீர் முழுவதும் வளைஇ"; "குடிஞை யிரட்டும் கோடுயர் நெடுவரை"; "ஏல்லெனவொலிக்கு மொலிபுன லூரற்கு"; "கலிகெழுமூதூர்"; "பறையிசை யருவி"; "பல்லியந்துவைப்ப"; "பிளிறுவார் முரசம்" "இரைக்கு மஞ்சிறைப் பறவைகள்" "இரங்கு முரசினம்"; "இரும்பிழிமாரி யழுங்கின மூதூர்"; "காலைமுரசமதிடம்ப" "இமிழ்கடல்வளைஇய"; "குளிறு முரசங் குணில்பாய"; "களிறுகளித்திருங்கார்"; "குரைபுனற்கன்னி"; "கனைசடற் சேர்ப்ப"; "சிலைத்தார்முரசங்கறங்க"; "தள்ளாதசும்மைமிகு தக்கிணநாடுநண்ணி"; "கௌவை நீர் வேலி"; "விளைக்கம்பலை மனைச்சிலம்பவும்"; "அறைகட லரவத்தானை"; "ஆர்த்தபல்லியக்குழாம்" என முறையே காண்க.

[இவ்வியலுக்குப்புறனடை.]

௪௬௦. இன்ன தின்னுழி யின்னண மியலும்
என்றிசை நூலுட் குணகுணிப் பெயர்கள்
சொல்லாம் பரத்தலிற் பிங்கல முதலா
நல்லோ ருரிச்சொலி னயந்தனர் கொளலே.

இ - ள். இன்னது இன்னுழி இன்னணம் இயலும் என்று இசை நூலுள் - பெயர்வினை யிடையுரிகளில் இன்னசொல் தன்மை முன்னிலை படர்க்கைகளிலும் வழக்குச் செய்யுள்களிலும் இவ்விடத்தே இவ்விலக்கணமுடையதாய் நடக்கும் என்று சொல்லக்கடவதாகிய இந்நூலுள்,— குணகுணிப்பெயர்கள் சொல்லாம் பரத்தலின் - குணப்பெயர்களையுங் குணிப்பெயர்களையும் வேண்டியமட்டுஞ் சொல்வதன்றி விரித்துச்சொல்லக்கடவமல்லம் விரிக்கின் மற்றொன்றுவிரித்தலென்னுங் குற்றம் வருமாதலின்,— நல்லோர் பிங்கலம் முதலா உரிச்சொலில் நயந்தனர் கொளல் - அவற்றைக் கண்டறியவேண்டினோர் மற்றைப் புலவராற் கூறப்பட்ட பிங்கலந்தை திவாகரமுதலிய நூல்களில் உரிச்சொற்றொகுதியுள் விரும்பிக்கொள்க.

எனவே, பெயரியலுட் பெயர்ச்சொற்றொகுதியையும், வினையியலுள் வினைச்சொற்றொகுதியையும், இடையியலுள் இடைச்சொற்றொகுதியையும், விரிக்காமைக்கும் இதுவே புறனடையாமென்பதாயிற்று. (௪௧)

பரீக்ஷைவினாக்கள்:—963. உரிச்சொல்லாவனயாவை? 964. பண்பாவதியாது? 965. உயிர்ப்பொருள்களாவன யாவை? 966. ஓரறிவுயிர்களை

Digitized By Roja Muthiah Research Library

வை? 967. ஈரறிவுயிர்களெவை? 968. மூவறிவுயிர்களெவை? 969. நாலறிவுயிர்களெவை? 970. ஐயறிவுயிர்களெவை? 971. உயிரல்பொருள்களாவனயாவை? 972 உயிரோடு கூடிநின்ற உடம்பை உயிரல்பொருளென்றதென்னை? 973. உயிர்ப்பொருள்களின் குணப்பண்புகளெவை? 974. உயிர்ப்பொருள்களின் றொழிற்பண்புகளெவை? 975. உயிரல்பொருள்களின் குணப்பண்புகளெவை? 976. உயிர்ப்பொருளும் உயிரல்பொருளுமாகிய இரண்டற்கும் பொதுவாகிய தொழிற்பண்புகளெவை? 977. மிகுதியென்னும் ஒருபண்பையுணர்த்தும் உரிச்சொற்களெவை? 978. கடியென்னுமுரிச்சொல் எப்பண்பையுணர்த்தும்? 979. சொல்லென்னும் ஒருகுணத்தையுணர்த்தும் உரிச்சொற்களெவை? 980. ஓசையென்னும் ஒரு குணத்தையுணர்த்தும் உரிச்சொற்களெவெ? 981. உரிச்சொற்களனைத்தும் இந்நூலிற் சொல்லப்படாமைக்குக் காரணமென்னை? 982. அவை எங்கே காணப்படும்? 983. கதழ்வு என்னுமுரிச்சொல் எப்பொருளுணர்த்தும்? 984. குரு என்னுமுரிச்சொல் எப்பொருளுணர்த்தும்? 985. இளமைப்பொருளுணர்த்தும் உரிச்சொற்களெவை? 986. வம்பு என்னுமுரிச்சொல் எப்பொருளுணர்த்தும்? 987. செழுமை என்னுமுரிச்சொல் எப்பொருளுணர்த்தும்?

---

[இவ்வதிகாரத்துக்குப் புறனடை.]

௩௯௧. சொற்றொறு மிற்றிதன் பெற்றியென் றனைத்து
முற்ற மொழிகுறின் முடிவில வாதலிற்
சொற்றவற் றியலான் மற்றைய பிறவுந்
தெற்றென வுணர்த றெள்ளியோர் திறனே.

இ - ள். சொற்றொறும் இற்று இதன் பெற்றி என்று - சொற்றோறும் இத்தன்மைத்து இதனிலக்கணமென்று,—அனைத்தும் முற்ற மொழிகுறின் முடிவு இல ஆதலின் - முழுதும் நிறைவுறச் சொல்லப்புகுந்தால் முடிவிலவாம் ஆதலால்,—சொற்றவற்று இயலான் - எடுத்துச்சொல்லப்பட்ட சொற்களுடைய இலக்கணங்களைக் கொண்டு,—மற்றைய பிறவும் தெற்றென உணர்தல் - சொல்லப்படாதவற்றினிலக்கணங்களையும் ஒப்புமை கருதி இதுவுமதுவென உணர்தல்,—தெள்ளியோர் திறன் - நூலோதித் தெளிதற்குரிய மாணாக்கரது கடனாம். எ - று.

இவற்றிற்குதாரண முன்வந்தன காண்க. (௨௦)

Digitized By Roja Muthiah Research Library

[இந்நூலிற்குப் புறனடை.]

௪௬௨. பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையி னானே.

இ - ள். பழையன கழிதலும் – முற்காலத்துள்ள இலக்கணங்களுட் சில பிற்காலத்திறத்தலும்,—புதியன புகுதலும் - முற்காலத்தில்லன சில பிற்காலத்திலக்கணமாதலும்,—வழு அல கால வகையினான் - குற்றமல்லவாங் காலவேற்றுமை யதுவாகலால். எ - று.

இவற்றிற்கு முதாரணம் முன்வந்தன காண்க. (௨௧)

உரியியன் முற்றிற்று.

---

சொல்லதிகார முற்றுப்பெற்றது.

---

## நன்னூற்காண்டிகையுரைவிளக்கம்

## முற்றுப்பெற்றது.

---

Digitized By Roja Muthiah Research Library

# அப்பியாசம்.

## க. அப்பியாசம்.

மேல் வரும் பெயர்களுள், இன்னது இன்னது இன்ன இன்ன ஏதுவால் இன்ன இன்ன பெயர் என்று எழுதுக:—

மலை, கடல், பறவை, அலரி, யாக்கை, யாறு, சோறு, விள, விலங்கு, குமிழி, மாதவன், கணபதி, முருகன், செட்டி, வேலன், பார்ப்பதி, புலவன், ஆதித்தியன், நிசாபதி, பயோதரம், கந்தரம், நள்ளார், எச்சம், படை, உயிர்நிலை, பஞ்சானனம், வாரிசம், மலயசம், கடிப்பகை, பங்கயம், தொடை, தேட்டம், இறை, எழுத்து, பாட்டு, கறவை.

## உ. அப்பியாசம்.

மேல் வரும் உதாரணங்களுள், இன்ன இன்ன சொல்லில், இன்ன இன்ன இடத்தில், இன்ன இன்ன எழுத்து, இன்ன இன்ன ஏதுவின்பொருட்டு, இன்ன இன்னபடி அளபெடுத்தது என்று எழுதுக:—

(க.) 'நற்றா டொழாஅ ரெனின்.' (உ.) 'துப்பாய தூஉ மழை.' (ங.) 'வீழ்நாள் படாஅமை நன்றாற்றி னஃதொருவன்.' (ச.) 'புறத்தாற்றிற் போஒய்ப் பெறுவ தெவன்.' (ரு.) 'உடுப்பதூஉ முண்பதூஉ மின்றிக் கெடும்.' (சு.) 'அறனழீஇ யல்லவை செய்தலிற் றீதே புறனழீஇப் பொய்த்து நகை.' (எ.) 'இசையென்னு மெச்சம் பெறாஅ விடின்.' (அ.) 'தவாஅப் பிறப்பீனும் வித்து' (கூ.) 'சென்ற விடத்தாற் செலவிடா தீதொரீஇ நன்றின்பா லுய்ப்ப தறிவு.' (க0.) 'கைதொழூஉப் பரவிக் காலுற வணங்கி.' (கக.) 'குருதியொடு விரைஇத் தூவெள்ளரிசி சில்பலிச் செய்து.' (கஉ.) 'கலங்க் கொண்ட கன்மார்பா.' (கங.) அரண்ண் கொண்ட வடுத்தோளின ர்—வலம்ம் பட்ட வாள்வயவர்—பகல்ல் லன்ன பண்புரையீர்—திரள்ள் சேனை செல நீக்கி.' (கச.) கசடற வல்லதூஉ மையந் தரும்.' (கரு.) 'சூதினை வென்றதூஉந் தூண்டிற்பொன் மீன்விழுங்கி யற்று.' (கசு.) 'இழத்தொறூஉங் காதலிக்குஞ் சூதேபோற் றுன்ப முழத்தொறூஉங் காதற்றுயிர்.' (கஎ.) 'பொருள்கெடுத்துப் பொய்ம்மேற் கொளீஇ யருள்கெடுத் தல்லலு ழப்பிக்குஞ் சூது.'

## ங. அப்பியாசம்.

மேல் வருஞ் சொற்களுள், இன்ன இன்ன சொல்லின் ஈற்றுகரம், இன்ன இன்ன ஏதுவால், இன்ன இன்ன தொடர்க்குற



Digitized By Roja Muthiah Research Library

றியலுகரம்; இன்ன இன்ன சொல்லின் ஈற்றுகரம் இன்ன இன்ன ஏதுவால் முற்றியலுகரம் என்று எழுதுக:—

பொருப்பு, வருவது, அரிது, வெஃகு, நகு, காட்டு, பசு, அரக்கு, கரும்பு, உறு, கதவு, மால்பு, ஞாயிறு, ஒல்கு, நடு, பளுட்டு, நெல்லு, புணர்வு, மரபு, செலவு, உயர்த்து, அது, தொடர்பு, இந்து, உரிஞு, அலாபு, செவிடு, ஏது, தாலு, வெள்கு, இங்கு, போவது, எய்து, மூழ்கு, ஓர்ப்பு, ஆமணக்கு, நீடாது, குறுகாது, பாட்டு, பொச்சாப்பு, விராவு, எழுத்து, இஃது.

## ௪. அப்பியாசம்.

மேல் வருந் தொடர்களுள், இன்ன இன்ன இடத்து, மகர மெய், இன்ன இன்ன ஏதுவால், மகரக் குறுக்கம், இன்ன இன்ன ஏதுவால் மகரக்குறுக்கமன்று என்று எழுதுக:—

(௧.) 'பாயும் விடையரன் றில்லை.' (௨.) 'நற்றவம் வேள்வி மல்க.' (௩.) 'திருச்சிற்றம்பலம் போற்றி.' (௪.) 'அறுமுகம் வாழ்க.' (௫.) 'பொன்னங் குன்றின்மே லவன்கொடை போன்ம்.' (௬.) 'இருவ ராகத்து ளோருயிர் கண்டனம் யாம்.' (௭.) 'வீறுகேதனம் வச்சிரமங்குசம் விசிகம்.' (௮.) 'இத்திசைக் கையநீ புதியை போன்ம்.'

## ௫. அப்பியாசம்.

மேல் வருந் தொடர்களுள், ஆய்தக்குறுக்கம் அமையப்பெறுந் தொடர்களை அவ்வாறு புணர்த்தெழுதுக; ஆய்தக்குறுக்கம் அமையப்பெறாத தொடர்கள் இவையிவையென நியாயத்தோடு காட்டுக:—

வேல்+தொட்டான்; வாள்+தந்தான்; அல்+திணை; கல்+தீமை; பல்+தொடை; விரல்+தேய்ந்தது; பொருள்+தேட்டம்; முள்+தீமை; சில்+தாழிசை; கல்+தேய்ந்தது; முள்+தீந்தது.

## ௬. அப்பியாசம்.

மேல் வருந் தொடர்களுள், இடைநிலைமெய்ம்மயக்கவிதியிற் பிழைபட்டவை உளவாயின்; அவைகளை விதிகாட்டி எழுதுக:—

உரிஞ் கொற்று; காணும் கண்; மேலாம் நன்னெறி; இத்திறம் ஞானயோகம்; அறம் செய்தான்; மண் தீது; மீன் தலை; பண் நன்று; தேன் நன்று, புலால் தீது; நல் நூல், ஆலயம் தொழுவது; பொருள் தேடினன்; செங்கோல் முறை; நல் ஞானம்; அருள் நலம்; இருள் ஞாலம்; தெவ் முனை; தெவ் கொடிது; வெரிந் புறம்.

Digitized By Roja Muthiah Research Library

## ௭. அப்பியாசம்.

௧. மேல் வருஞ் சொற்களைப் போலிப்படுத்தெழுதுக:—

அறம், புலம், பொதும்பு, குடல், அரும்பு, மனம், ஆலயம், இமயம், 'வயல் காட்டு மைந்நீலமதிகாட்டும்;' ஐந்நான்கு, மெய்ந்நெறி, மாது, வண்டு, அனந்தல்.

௨. மேல் வருஞ் சொற்றொடர்களில் உள்ள போலிகளை எடுத்துக் காட்டுக:—

(௧.) 'சேக்கை மரனொழியச் சேணீங்கு புட்போல.' (௨.) 'கொம்பரில்லாக் கொடி போலல மந்தனன் கோமளமே.' (௩.) 'அகனமர்ந்து செய்யாளுறையும்.' (௪.) 'மூன்றில்களல்லன முத்தின்பந்தரே.' (௫.) 'குலனருடெய்வங் கொள்கை மேன்மை.' (௬.) 'மெய்ஞ்ஞெறியைத் தான் காட்டும் வேதமுதலானை.' (௭.) 'மௌவற்படிறு துணி.' (௮.) 'தழுலெழ விழித்தனன் சாம்பராயினன்.' (௯.) 'அளமரு குயிலினம்.'

## ௮. அப்பியாசம்.

மேல் வரும் பகாப்பதங்களுள், பெயர்ப் பகாப்பதங்கள் எவை? வினைப்பகாப் பதங்கள் எவை? இடைப் பகாப்பதங்கள் எவை? உரிப் பகாப் பதங்கள் எவை? எழுதுக:—

சோறு, சினம், தேன், போ, தேடு, நெல், எறி, விடு, சுக்கு, வாழ், கீரை, மற்று, அம்ம, மாடு, நிகர், நனி, தேய், வாள், பொன், செல், மரம், அணில், தொழு, கொன், தவ, இனி, பலா, உம், கேள், தோறும், உறு, தோண்டு, கூர்.

## ௯. அப்பியாசம்.

௧. மேல் வரும் பகுபதங்களுள், இன்னதின்னது இன்ன இன்ன பகுபதமென்றெழுதுக:—

குழையன், நிலத்தன், வெற்பன், செய்தான், செய்வாள், வேனிலான், படியான், பொருளன், மாசியான், செய்கின்ற, படியாத, மதுரையான், தச்சன், செய்கின்றான், படித்து, படியாமல், மற்றையான், முடியன், நெடுங்கையன், பல்லன், கணக்கன், பெரியன், கூனன், கற்கின்றிலன், ஈகை, அல்லால், குறளன், கூனி, தின்றனன், சிவப்பன், மூவாட்டையான், அவள், யாவன், படிக்க, செய்த, நடத்தல், வந்தனன், நல்லன், பாடுவான், கொடை, வெண்மை, கூத்தன், தீமை, படிக்கின், தந்தனர், சிறியன், செய்யும், எவர், பிறன், செக்கான், இவள்.

௨. மேற் போந்த பகுபதங்களைப் பகுதி விகுதி முதலிய பிரித்தெழுதுக.

Digitized By Roja Muthiah Research Library

## ௧0. அப்பியாசம்.

மேல் வரு மொழிகளிற பண்புப் பதங்கள் விகாரப்பட்ட வகையை விரித்தெழுதுக:—

செய்ய, சிற்றூர், சீறடி, சிறுவர், சேந்தது, செல்விய, சேப்ப, சேய்த்து, தீயார், வெந்நீர், சிறுதுரும்பு, வெவ்விய, புதுப்புனல், புத்தூர், மூதியோன், மூதுரை, திண்டோள், பாசடை, பைம்பொன், அரும்பொருள், ஆரமுதம், இளம்பிறை, பெரும்புகழ், வெறுங்கை, வறிய, வெய்ய, சிற்றுரை, நெட்டணை, சேதா, மேலோர், காரா, பேரொலி, குறுந்தாள், பெரியன், தீங்கனி, உண்டு, உள்பொருள், இல்பொருள், வெம்போர், மெல்லிய, மெல்ல, இலது, உளது, தீவினை, அன்று, இன்று, முதுபொருள், குற்றுடைவாள், நெடுஞ்சுவர், பேராசை, ஆருயிர், புத்துரை.

## ௧௧. அப்பியாசம்.

மேல் வருந் தெரிநிலைவினைமுற்றுப் பகுபதங்களின் பகுதிகளை யெடுத்தெழுதுக:—

கிடந்தான், பறந்தது, ஒடித்தான், விடிந்தது, நீத்தான், வீந்தான், நட்டான், தொடுத்தான், தூவினான், பூத்தது, மேவினான், கைத்தது, நைந்தான், மோந்தான், கௌவினான், எண்ணினான், கண்டான், உன்னினான், வேய்ந்தான், சேர்ந்தான், வென்றான், புல்லினான், சொற்றான், ஆழ்ந்தான், வேட்டான், ஏகினான், அஃகினான், குறுகினான், நச்சினான், அஞ்சினான், மூழ்கினான், விசுவசித்தான், சிருட்டித்தான், திதித்தான், சங்கரித்தான், அநுமித்தான், ஆவாகித்தான், பிரசரித்தான், புலியொத்தான், சேந்தான், சிறுத்தான்.

## ௧௨. அப்பியாசம்.

மேல் வரும் வினைப்பகுதிகளைப் பிறவினைப் பகுதிகளாக்குக:—

தா, கொடு, விடு, வை, அஞ்சு, ஆ, கிட, காய், வெருள், பயில், பெருகு, இரு, ஓடு, ஆறு, தேறு, வருந்து, கூடு, உணர், அடங்கு, காண், வீழ், அருந்து, பிழை, எழும்பு, இறங்கு, ஆழ், பொருந்து, புகு, விளங்கு, நீங்கு, நில், ஒழுகு, தியங்கு, ஏங்கு, எய்து, துடை, தாழ், தூங்கு, எங்கு, கிள், பூண், தங்கு, மாறு.

## ௧௩. அப்பியாசம்.

௧. மேல் வரும் விகுதிகளையுடைய பெயர்கள் எழுதுக:—

மார், தை, பி, சை, மன், மான், முன், வை, அல், வ், து, இ, ன்.

௨. மேல் வரும் விகுதிகளையுடைய தொழிற்பெயர்கள் எழுதுக:—

Digitized By Roja Muthiah Research Library

வி, சாடு, சி, உள், அரவு, ஆனே, வை, இ, அம், ஐ, மை, து, பு, உ, சி, அல், பாடு

௩. மேல் வரும் விகுதிகளையுடைய பண்புப்பெயர்களை எழுதுக:—

சி, உ, அம், ஐ, மை, பு, நர், று, கு.

௪. மேல் வரும் விகுதிகளையுடைய வினையெச்சங்கள் எழுதுக:—

இ, சால், ஊ, ய், கு, இன், அ, றி, மல், ஆல், உம், கடை, இயர்.

௫. மேல் வருஞ் சொற்களுள், இ, ஐ, அம் என்னும் விகுதிகள் எவ்வெப்பொருளில் வருகின்றன?—நியாயத்தோடெழுதுக:—

சேர்ந்தார்க்கொல்லி, விடை, போர்வை, உடை, தொன்னூற்கஞ்சி, கறவை, தேட்டம், நாட்டம், கூட்டம், இறை, சுற்றம், யாக்கை, ஈயோட்டி, அகத்தியம், குமிழி, உடுக்கை, ஆக்கம், கொடை, அளபெடை, பாக்குவெட்டி, சுமைதாங்கி, அடை, நிறை, பொறை, ஓடை, மயிர்மாட்டி, எடை, மடை, [=சோறு], உண்டி, பூணி, [=எருது], தொடி, நடவை, அகழி, எற்றம், ஆத்திசூடி, வளைபுறை, கையுறை, கோவை.

௬. மேல் வரும தன்வினை பிறவினைகளுக்குப் பொதுவாகிய முதனிலைகளினின்றும் தன்வினை பிறவினைப் பகுபதங்கள் பிறப்பிக்க:—

அழி, மடி, முடி, பிரி, எரி, தீர், தெரி, விரி, ஒடி, அறு, சமை, அமை, இடி, நடு, கல், திரி.

## ௧௪. அப்பியாசம்.

மேல் வரும் பெயர்ப் பகுபதங்களில் உள்ள இடைநிலைகளை எழுதுக:—

குறத்தி, அருவாட்டி, சோழிச்சி, எயிற்றி, உழத்தி, செறுநர், உழுநர்.

## ௧௫. அப்பியாசம்.

மேல் வருந் தொடர்மொழிகளின் உள்ள வினைப்பகுபதங்களிற் காலங்காட்டும் உறுப்புக்களை எடுத்துக் காட்டி, அவை இன்ன இன்ன காலங் காட்டுமென்றெழுதுக:—

(௧.) 'வாழ்கவந்தணர் வானவரானினம்.' (௨.) 'காலமுண்டாகவே காதல் செய்துய்மின்.' (௩.) 'எண்ணென்பவேனை யெழுத்தென்ப.' (௪.) மஞ்சி

Digitized By Roja Muthiah Research Library

வரிஞ்சி மன்றமிறைஞ்சிர் நமரங்காள்,' (௫.) 'அந்தமர் திலேயன்மனுர் புலவர்.' (௬.) 'நும்மையர்க்காய குற்றேவல் செய்கோ.' (௭.) தசரதன் மதலேயாய் வருதுந்தாரணி.' (௮.) 'நன்னகரமானது நவின்றும்.' (௯.) 'மிதிலேயார் கோமான் புரியும் வேள்வியுங் காண்டு நாம.' (௧௦.) 'மலேவளம் பெரிதெதன் கோ யான்.' (௧௧.) 'சென்னியுற வணங்கிச் சேர்தும்.' (௧௨.) நின் கருத்தினே முடித்துமென் றகன்றுன.' (௧௩.) 'கெடுவல் யானெனப்பதறிக.' (௧௪.) நின்று மாதவம புரிதிபேனினவு முற்றுதி.' (௧௫.) 'விடைபொறித்தநறைந்தும்.' (௧௬.) 'வஞ்சித்தோமென்று மகிழன்மின்.' (௧௭.) 'ஏகுமேற்புழியெனமனுர் புலவர்.' (௧௮.) 'வள்ளவாயச்செழுங்கமலத்தில் வண்டு பாண் மிழற்றும்.' (௧௯.) அன்றறிவாமென்னுதறஞ்செய்க.' (௨௦.) 'எதிலாளனே வேறும்.' (௨௧.) நான்மறை யறங்களோங்க' (௨௨.) 'ஒஃகாறுறழுமென் மருமுளரே.' (௨௩.) 'ஒருபிடிசோறிடுமினபபுறஞ்சோறும்.'

## ௧௬. அப்பியாசம்.

மேல் வரும் வடமொழிகளைத் தமிழில் எழுதி, அவ்வவற்றிற்கு விதிகாட்டுக:—

[illegible]

## ௧௭. அப்பியாசம்.

மேல் வருந் தொடர்கள் இன்ன இன்ன தொடர் என்றெழுதுக; அவைகளுள்ளே, தொகைநிலைத்தொடர்களை விரித்துக் காட்டுக:—

Digitized By Roja Muthiah Research Library

பிரமன் படைத்தான், உண்டு வந்தான், எறிபடை, வீழ் புனல், பவள வாய், நன்மை தீமை, சிவ பிரான், அறை புகழ், கொற்றன் புத்தகம், கைவேல், போனான் கொற்றன், நெருப்பு நெருப்பு, உண்ட கொற்றன், வேய்த்தோள், எய் கணை, கை கால், வேங்கைப் பூ, முண் மரம், வேற் கண், செஞ்ஞாயிறு, சட்டையாடி, கருங் குவளை, விரி கதிர், ஒரு பொருள், ஈட்டு தனம், கொற்றா கொள், அதுமற்றம்ம, கழிபேருவகை, பொற் சுணங்கு, அடுகளிறு, உண்கலம், வெந்நீர், ஐம்முகன், தரள நகை, பூங் குழல், முருக வேள், கண்ணுதல், ஆக்கக் கேடு, தாழ் குழல், பிறை சூடி, நாட்டு புகழ், கலையாளி, வனை கலன், கவிழ் தும்பை, துடி யிடை, கற்பக வள்ளல், அறுகுணம், தண்ணீர், செய் கடன், வட்டக்கல், ஆபண சாத்தன், துவர்க்காய், கறையடி, புழைக்கை, நால்வாய், கொடுங்கோல், குன்றவில்லி, தீங்கனி, மாணாக்கனைக் கற்பித்தான், புகழ் பொருள புண்ணியம், இன் பண்டம், படை படை, கொள் கடை, நெடுந் தெரு, கிளி மொழி, போன கொற்றன், சதுரப்பலகை, சாத்தன் புதல்வன், பால் குடித்தான், வாளால் வெட்டினான், தலை வணங்கினான், ஊர் நீங்கினான், மணி யொளி, மலையினிழிந்தான், சரிய சாத்தன், குழையன் கொற்றன், தந்தை தாய், தயிர்க்குடம், அரண்மகன், கயந்தலை, நெற்பொரி, வாட்டூம்பு, பெல்லிலை, பனிக்கதிர், மெல்கோல், முந்நீர், ஆடுபாம்பு, இடுமருந்து.

## ௧௮. அப்பியாசம்.

௧. மேல் வருந் தொடர்களில் உள்ள புணர்ச்சி விகாரங்களை விளக்கி எழுதுக:—

பூங்குழல், பனைக்கொடி, பொற்குடம், பஃறலை, எழுபது, பல்கலை, மரவேலி, தமிழப் பிள்ளை, நாடோரி, சாரைப்பாம்பு, புளியங்காய், வட்டவாழி, பனங்காய், தாழக்கோல், புளிய மரம், பனாட்டு, வேப்பங்காய், ஆலம் பழம், நீர்க்கட்டல்.

௨. மேற்போந்த புணர்ச்சிகளுள், இன்ன இன்ன புணர்ச்சியில், இத்தனை இத்தனை விகாரம் வந்தன என்று காட்டுக.

## ௧௯. அப்பியாசம்

மேல் வரும் வாக்கியங்களில் உள்ள செய்யுள் விகாரங்களை விளங்கக் காட்டுக:—

(௧.) 'சூழ்த்து மது கரமுரலுந் தாரோயை.' (௨.) 'கொம்பரன்னீர் களின்னே வருங்கள்.', (௩.) 'தினைத்தனைப்பொழு தும்மறந்துய்வனோ.' (௪.) 'கருப்பனைத் தடக்கை வேழக் களிற்றினை யுரித்த கண்டன்.' (௫.) 'ஆளி பொங்கு மம்மைபய ரோதியே.' (௬.) 'அரும்போடு மலர் பறித்திட்டுண்ணாரும்.' (௭.) 'காத மருங் கொடுங் குழையான்.' (௮.) 'தண்டப் புடையிற் றுளைசெய் ததனிற் - கணடிக்கயிறுங் கடிதேயடைவார்.' (௯.) 'பிறைகசடை

பிறக்கிடமடித்தபிலவாயாள்.' (௰.) 'மத்தயானை மறுகவ்வுரி வாங்கியக்கத்தை போர்த்த கடவுள்' (௧௧.) 'நன்பால் கலந்தீமையாற்றிரிந்தற்று.' (௧௨.) 'புயலென்னும் வாரி வளங் குன்றிக்கால்.' (௧௩.) 'செங்கணமாலுங் கடிக்கமலத்திருந்தயனுங் காணவண்ணம.' (௧௪.) 'பொய்யகுன்ற வேதியரோதிடமுந்திடமிந்திடமு - மெய் குன்ற வார்சிலையம்பலவற்கிடம்.' (௧௫.) 'துறைவர் சென்றார் போரும் பரிசு புகன்றனரோ.' (௧௬.) 'இவ்றன்மையெற்றுள்ளு மெண்ணப்படுவதொன்றன்று.' (௧௭.) 'புகழ புரிந்தில்லிலோர்க்கு.' (௧௮.) 'கோணு கணையானுங் குளிர்தாமரையானுங் காணார்' (௧௯.) 'கோற்றொடி நளனமேலுற்ற காதலைக் குறித்து.' (௨௰.) 'மாரிலணைக்கு மாற்றுமால்.' (௨௧.) 'பல்பல விருங்கனி பருங்கி மிகவுண்டவை நெருங்கி' (௨௨.) 'உம்பருள்ளார் தொழுதேத்த நின்ற பெற்றமரும பெருமானை.' (௨௩.) 'எற்றினார் கொடியாரிடை மருதினைப்பற்றினார்.'

## ௨௰. அப்பியாசம்

மேல் வரும் உதாரணங்களில 'எணமூவெழுத்தீறுமெவவகைமொழிக்கும்' என்னுஞ் சூத்திர விதிப்படி புணர்ந்த புணர்ச்சிகளை எடுத்துக் காட்டி விளக்குக:—

(௧.) 'வைந்நுதி பொருத வவெழ் வரிநுதல்-வாடா மாலையோடையொடு துயல்வர.' (௨.) 'யார்க்கு - மூலகாரணமாய் நின்ற மூர்த்தியிமூர்த்தியன்றே.' (௩.) 'மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே.' (௪.) 'கடவுளிரியல்போக ஞாட்பியல் செருக்கில் வந்தான் ஞான நாயகன்றன்முன்னம்.' (௫.) 'ஏறு வெம்பரி வயபபுலி வல்லியம் யாளி.' (௬.) 'நெய்ஞ்ஞிறை நெடுவேல்.' (௭.) 'புன்னுனி மேனீர்போல்' (௮.) 'உய்வில்லை - செய்ந்நன்றி கொன்ற மகற்கு.' (௯.) 'கண்ணுதலுடையதோர் களிற்றுமாமுகப் பண்ணவன்.' (௰.) 'மலர்மிசையேகினான் மாணடி சேர்ந்தார் - நிலமிசை நீடுவாழ்வார்' (௧௧.) 'மெய்ம்மூவாறென விளம்பினர் புலவர்' (௧௨.) 'வியனுலகத்-துண்ணின் றுடற்றும் பசி' (௧௩.) 'பொன்னிறத் திருவொடும்.' (௧௪.) 'மண் யாத்த கோட்ட மழகளிறு தோன்றுமே.' (௧௫.) 'பூசையான் செய்தேனெனுமென்போதவாசனை.'

## ௨௧ அப்பியாசம்.

மேல் வருந் தொடர்மொழிகளில், எவவெவவழியில் எவவெவ பெயரீற்று எவவெவவெழுத்து, வல்லினம் வர இயல்பாயின? எவவெவப் பெயரீற்று எவ்வெவவெழுத்தின் முன் வரும வல்லினம் இயல்பாயின? எப்பெயர்முன் நாற்கணமும் வர நிலைமொழி வருமொழிகள் விகாரப்பட்டன?—

(௧.) 'இறைவன் பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.' (௨.) 'சிவபெருமான் றிருவடிக்கே பதித்த நெஞ்சம.' (௩.) 'வேதியர்சொன் மெய்யென்று மேவாதே.' (௪.) 'வேனில்வேள் கணைகிழித்திட.' (௫.) 'குமரவேள்

சேவடிகள் வணக்கஞ்செய்வாம்.' ௬. 'மறுவில் கற்பின் வாணுதல் கணவன்.' ௭. 'விடையாய் விண்ணோர் பெருமானே' ௮. 'வாகீசப் பெருந்தகைதன் ஞானப்பாடற்றொடை.' ௯. 'தருவுடைக் கடவுள் வேந்தன் சாற்றுவான்' ௰. செவ்வியகுரிசில் கூறத்தோவலான் செப்புவான்.' ௧௧. தீயவர் சேனைவந்து சேர்ந்தமை. ௧௨. 'மன்னவன் பரிமாக்கொள்ள நல்கிய பொருளெலாம்.' ௧௩. 'தந்தை தாய் குரவனாசான் சங்கரன்.' ௧௪. 'அமைந்தர் பல்லுயிரும்.' ௧௫. 'கந்தக்கடவுண் மணத்தன்மைகழறி'. ௧௬. 'ஞானநதபோகந்தந்த தேசிகவுழவன்றன் கோயிலைச் சார்ந்தார்.' ௧௭. 'தாதியர் செவிலியர் தாயர் தங்கையர் மாதுயருழந்தனர்.' ௧௮. 'பிரமன் மால் காணாப் பெரியோன காண்க.' ௧௯. 'அந்தமூர்த்தி திருநாமங்கண் மொழியச் சேண்மின்.' ௨௰. 'மலைமுனியுணாவளைக்கருள் புரியுந் தேசிகமுதலவன்.' ௨௧. 'தந்தைசொன் மிக்க மந்திரமில்லை.' ௨௨. 'தில்லையெங்கூத்தப்பிரான்கயிலைச் சிலம்பில்.' ௨௩. திருத்தொண்டத்தொகை.

## ௨௨. அப்பியாசம்.

மேல் வருந் தொடர்மொழிகளில், எவ்வெச் சொன்முன் வரும் வல்லினம், எவ்வெவ்வேதுவால், இயல்பாயின?—

௧. 'மடுக்கோ கடலின விடு திமில்.' ௨. 'யா காவாராயினும்.' ௩. 'ஆவியன்னாய் கவலேல்.' ௪. 'இறைவா தடவரைத்தோட்கென் கொலாம் புகுந்தெய்தியதே.' ௫. 'சுடரிலை வேல கண்டே னென்று நின்றதுவே.' ௬. 'பித்தா பிறைசூடி பெருமானே' ௭. 'ஆடுகின்றிலை கூத்துடையான் கழற் கன்பிலை.' ௮. மெய்த்தேவா தேவர்க்கே சென்றூதாய் கோத்தும்பீ.' ௯. 'வருதி பெயர்தி வருந்துதி அஞ்சாய் பொருதி புலம்புதி நீயும்.' ௰. 'நதியைச் சிந்திப போவனே சிறிதுமெண்ணாவகந்தயன் போனும்.'

## ௨௩. அப்பியாசம்.

மேல் வருந் தொடர்மொழிகளில் உள்ள உடம்படுமெய்கள் இவை இவை என்றும், அவை இன்ன இன்ன எழுத்துக்கள் புணர்ந்தமையினாலே தோன்றினவென்றும் எழுதுக:—

௧. 'நீரிற்குமிழியிளமை.' ௨. 'வற்றியவோலை கலகலக்கும்.' ௩. 'பச்சோலைக்கில்லையொலி.' ௪. 'பையராவமளியானும்.' ௫. 'இருள்கடிந்தருளிய வின்பவூர்தி.' ௬. 'ஞானநாயகனேயோலம்.' ௭. 'கோவிலின் மருங்கொமுன்னும்.' ௮. 'சேவேறு சேவடிக்கே சென்றூதாய்.' ௯. 'பூவேறு கோனும்.' ௰. 'ஆனேவலியோவரிவையோவென்றிருவர் காணாக்கடவுள்' ௧௧. 'அடியேனையஞ்சேலென்பாரார்.' ௧௨. 'நிழலிடை யுறங்குமன்னம்.'

## ௨௪. அப்பியாசம்.

மேல் வரும் உதாரணங்களில 'எகரவினாமுச்சுட்டின்' என்னுஞ் சூத்திரவிதியை விளக்கிக் காட்டுக:—



Digitized By Roja Muthiah Research Library

௧. 'இத்திறம் பொருதகாலை.' ௨. 'அந்நெறியேகி.' ௩. 'அத்தேவர் தேவர்.' ௪. 'இப்பிறப்பினிலிணைமலர் கொய்து நான்.' ௫. 'இவ்வரும்பி றவிப் பௌவநீர் நீந்தமேழையேற்கு.' ௬. 'வணிகமாக்களையொத்ததவ் வாரியே.' ௭. 'நெருநலுளனொருவனின்றில்லையென்னும் - பெருமையு டைத்திவ்வுலகு.' ௮. 'எப்பெருந்தன்மையு மெவ்வெவர் திறமு மப்பரிச தனாலாண்டு கொண்டருளி.'

## ௨௫. அப்பியாசம்.

மேல் வருந் தொடர்மொழிகளிலே, குற்றியலுகரமும், மு ற்றியலுகரமும் கெட்டுப் புணர்ந்தமையையுங் கெடாது புணர்ந் தமையையும் எடுத்து விளக்கிக் காட்டுக:—

௧. 'மாதாடும் பாகத்தன்.' ௨. 'ஆரேனுந் தன்னடியார்க்கன்பன் க ண்டாய்.' ௩. 'வணிகமாக்களையொத்ததவ்வாரியே.' ௪. 'அனைத்துலகு மாக்குவாய்.' ௫. 'ஆகமந் தோற்றுவித்தருளியும்.' ௬. 'பிறிவிலாதவின் னருள்கள்.' ௭. 'கூத்துடையான்கழற்கன்பிலை.' ௮. 'ஓயவிலாதன.' ௯. 'செல்வநல்குரவின்றி.' ௧௦. 'அழைப்பதுவே.' ௧௧. 'மதுவியற்கை.' ௧௨. 'கெடுவாக.'

## ௨௬. அப்பியாசம்.

மேல் வருந் தொடர்களில் வல்லின மிகாமைக்குக் காரண ம் எழுதுக:—

௧. 'பால் சுரந்த கலசம் போற்றி.' ௨. 'கூவின பூங்குயில் கூவின கோழி.' ௩. 'புலியூரன்ன பொன்' ௪. 'இயமன் விடுத்த தூதோ.' ௫. 'தனதாள் முயங்குவித்த.' ௬. 'இயம் பல தவைப்ப.' ௭ 'பிணங்களைக் காணு கண்.' ௮. 'ஐந்தெழுத்தும் பாடிய பொருளாயுள்ளான்.' ௯. 'பல கற்றோம் யாமென்று தற்புகழ வேண்டா' ௧௦. 'உடன்பிறந்தே கொல்லு ம் வியாதி.' ௧௧. அறுசுவை யுண்டி.' ௧௨. 'ஒருகோம பிருபதம்.' ௧௩. 'இன்னதன்மைய பின்னுமியம்புவான்.' ௧௪ 'தீயவை தீய பயத்தலாற் றீ யவை தீயினு மஞ்சப்படும்.' ௧௫. 'அணியாளோ கண்ணவாத் தக்ககலம்.' ௧௬. 'ஐம்படை சதங்கை சாத்தி.' ௧௭. 'வெண்ணெய் நல்லூரிலே நீ போ தினு நன்று.' ௧௮. 'அமுதொடு தேனொடு பால்.' ௧௯. 'வாயுமற்றென து கூறு மாருதியெனலும்.' ௨௦. 'ஒருபகலுலகெலாமுதரத் தடபொதிந் து.' ௨௧. 'மன்னவர் சருதிறை.' ௨௨. 'ஐயிரு தலையினோன்.' ௨௩. 'வீரமொடு தாக்க விரைகுவார்.' ௨௪. 'கைப்பரு பேய்ச்சுரையின் காய்.' ௨௫. 'ஆ பயந்த பால்.' ௨௬. 'பல குடை நிழல்.' ௨௭. தெருவினிற் சிறியன திசைகள்.' ௨௮. 'மலையென விழி துயில்.' ௨௯. 'அது போர்த் தருளும்.' ௩௦. 'திரைசெழு பயோததி.' ௩௧. இந்திரனுலகை பூத்தான்.' ௩௨. 'அது பழச்சுவை.' ௩௩. 'பூசனை விடாது செய்து.' ௩௪. 'பாந்து பல்லாய்மலரிட்டு.' ௩௫. 'நுணங்கு கேள்வியாய்.' ௩௬. 'இல்லாது செ ல்வம்.' ௩௭. 'அகடு கீண்டொழுகிய தன்றே.' ௩௮. 'எனைத்தொன்றுங் கள்ளாமை காக்க தன்னெஞ்சு.'

-

Digitized By Roja Muthiah Research Library

## உஎ. அப்பியாசம்.

மேல் வருந் தொடர்களில் வல்லினமிகுதற்குக் காரணம் எழுதுக:—

க. 'தெளியராக் குருளை.' ௨. 'தில்லைச் சிந்தாமணி.' ௩. 'கவிபாடிச் சிரிப்பிப்பரே' ௪ 'குறுகலரூர் தீங்கிற்புகச் செற்ற கொற்றவன்.' ௫. 'சுரபித்தீம்பாலட்டவின்னமுது.' ௬. 'வெண்ணிறக் கஞ்சுகம். ௭ 'முத்தம் மலைத் தேன் கொழியாத் திசழும் பொழிற்கு.' ௮. 'தில்லைச்சிற்றம்பலத்து மாணிக்கக் கூத்தன்.' ௯. 'சோதியினித்தான்றுணியாயே.' ௧௦. 'இணையிலி தொல்லைத்தில்லை மாதோ' ௧௧. 'வியன்மாத்தடக்கை.' ௧௨. 'குழக்கன்றையிழந் தலறுங் கோவுறு நோய் மருந்தாமோ' ௧௩. 'மழக் கையிலங்கு பொற் கிண்ணம்.' ௧௪. 'சோம்பித்திரியேல்.' ௧௫. 'மதிபாய சடைமுடித்து மாசுணப் பைம்பூட்டுச்—சதிபாய் குறுந்தாட்டுத் தாள—நதிபா—யிருசவுட்டு முக்கட்டு நால்வாய்த்தெனுள்ள—முருக விட்டு நின்ற வொளி.' ௧௬. 'கொண்மூச் சூல்கொண்ட வயிற்றைக் கிண்டு.' ௧௭. 'நந்தித்தே விளையாடல் செய்து.' ௧௮. 'சேதுக்கட்டி.'

## உஅ. அப்பியாசம்.

மேல் வருந் தொடர்மொழிகளில் வருங் குற்றியலுகரவீற்றுப் புணர்ச்சியை எடுத்துக்காட்டி, விதியோடு விளக்குக:—

க. 'கோட்டுப்பூப்போல மலர்ந்து.' ௨. 'நாட்டியல்பதனை.' ௩. 'ஆற்றொழுக்கரிமானோக்கம்.' ௪. 'கருப்பு வில்லோன மலரோவிருப்பு. ௫. 'வேத்தவை யிருந்தநீர்.' ௬. 'பளிக்குமேனிலம்.' ௭. 'அற்புதத்தையு மவிழ்ந்தன.' ௮. 'குரங்கினத்தரசைக்கொல்லக் கூறிற்று மனுநூலையா.' ௯. 'கொன்றையந்தார் தணந்து வேப்பந்தொடை முடித்து.' ௧௦. 'இருப்புநெஞ்சவஞ்சனேனை' ௧௧. 'குரக்கு மனத்துக் கொடியேன்.' ௧௨. 'நூற்றுப்பத்து நுவன்றதோன்முகன்—மூற்றைக்கையினன்.' (௧௩.) 'அமுததாரைகளெற்புத்துளைதொறு மேற்றினன்.'

## உகூ. அப்பியாசம்.

மேல் வருந் தொடர்மொழிகளில் உள்ள ணகர னகர மெய்யீற்றுப்புணர்ச்சியை எடுத்துக்காட்டி, விதியோடு விளக்குக:-

க. 'பட்பகையாகுந் தீஞ்சொற் கடைசியர்.' ௨. 'மடபுலந்திசைவான் புதைபூழி.' ௩. 'கண் கெட்ட வூரேருய்.' ௪. 'குவளை நீலம் சட்பகையார்குமென்றும்.' ௫. 'களைபவோகண் குத்திற்றென்று தங்கை.' ௬. 'புன்கணீர் பூசறும்.' ௭. 'மிக்க வான்கணை விடு படை.' ௮. 'மண்டோய் துயர் நீத்தளித்தோய் நீ.' ௯. 'தன்னைத் தான் காக்கிற் சினங்காக்க.' ௧௦. 'விண்டலங் கலந்திலங்கு திங்கள்.' ௧௧. 'சேணிமிர் வரைக்குலம்.' ௧௨. 'இருந்தன னின்றவேந்தனே.' ௧௩. 'விக்குண்மேல் வாராமுனல்

Digitized By Roja Muthiah Research Library

வினை மேற்சென்று செய்யப் படும்.' ௧௪. 'எயின் சிறு மகளிர்.' ௧௫. 'நிறப்பி ரிந்தஞ்சி.' ௧௬. 'ஊன் புக்க வேற்காளி.' ௧௭. 'அடியவர் கடர்சூழ.'

## ௩௦. அப்பியாசம்

மேல் வருந் தொடர்மொழிகளில உள்ள மகர மெய்யீற்று ப் புணர்ச்சியை எடுத்துக்காட்டி, விதியோடு விளக்குக:—

௧. 'அறவாழி அந்தணன்.' ௨. 'ஆலயந்தொழுவது சாலவுநன்று.' ௩. 'இனந்தீதெனினு மியல்புடையார் கேண்மை-மனநதீதாம பக்க மரிது.' ௪. 'இருவரேம் பாட்டுங் கேட்டு.' ௫. 'தோயுநிலத்தடி.' ௬. 'அருங்கடி மணம் வந்செய்த.' ௭. 'நீரிலெழுத்தாகும் யாக்கை.' ௮. 'முந்தை வினை முழுது மோயவுரைப்பனி யான்.' ௯. 'போக்கும் வரவும் புணர்வுமிலாப புண்ணியனே.' ௧௦. 'ஞானக்கரும்பினதெளியை.' ௧௧. 'வட்ட மலர்க்கொன்றை மாலைபாடி.' ௧௨. 'நீலவுருவிற்குயிலே.' ௧௩. 'கிஞ்சுகவாயஞ்சுகமே.' ௧௪. 'வேதநூலொருமருங்கினும்.' ௧௫. 'உவரி சூழ்ந்த பாரெலாம் பாயல்.'

## ௩௧. அப்பியாசம்.

மேல் வருந் தொடர்மொழிகளில் உள்ள ய ர ழ மெய்யீற் றுப் புணர்ச்சியை எடுத்துக்காட்டி, விதியோடு விளக்குக:—

௧. 'திருவளர் தாமரை.' ௨. 'செந்தார்ப்பொழில புடை சூழ்.' ௩. 'தளிர்க்கை.' ௪. 'மென்மொழியாள் கேழ் கிளரும் பாதியனே.' ௫. 'தில்லைவாழ் கூத்தா.' ௬. 'திண்ணமேயாண்டாய சிவபுரத்தரசே' ௭. 'உருளாய மோவாது கூறிற் பொருளாயம் போஒய்ப் புறமே படும்.' ௮. 'சிவந்தவாய்க்கருங்கயற்கணாள.'

## ௩௨. அப்பியாசம்.

மேல் வருந் தொடர்மொழிகளில உள்ள ல ள மெய்யீற்று ப் புணர்ச்சியை எடுத்துக்காட்டி விதியோடு விளக்குக:—

௧. 'கைத்துடையான் காற்கீ ழொதுங்குங் கடன்ஞாலம்.' ௨. 'ஞாயிறு கடற்கண்டாஅங்கு.' ௩. 'செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வம்.' ௪. 'வாணனி மழுங்கிட மடங்கி.' ௫. 'எம்மண்ண றிருவிளையாட்டு.' ௬. 'அமர்செயக் கற்சிறை குறைத்தவன்.' ௭. 'நங்கணுதஞ் நந்தி தவஞ்செய்து.' ௮. 'அண்ணருள் சிந்தியாவுணர்ந்து.' ௯. 'தோடசொண்ட நீற் றனுய்.' ௧௦. 'தகடீர் பெருஞ்செல்வம்,' ௧௧. 'இத்பூட்டிப் போயினர்.' ௧௨. 'அனல்காலொ டப்பானவனே.' ௧௩. செந்நெற் பசுங்கதிர்,' ௧௪ 'நெற்கரும்பென்க் கரும்பெலா நெடுங்கமுகென்ன.' ௧௫. 'புன்னுனி மேனீர்போ னிலையாமையென்றெண்ணி யின்னினியே செய்கவறவினை.' ௧௬ 'கற்றூண் பிளந்திறுவதல்லாற் பெரும்பாரந்தாங்கிற் றளர்ந்து வளையுமோ தான்.' ௧௭. 'வேனெடுங்கண்ணுய்.' ௧௮. 'ஒனறுணர்ந்த நிறபாரேநீனெறிச்சென்றூர்,' ௧௯. 'பிறர்க்கின்னு முற்பகற் செய்யிற் றமக்கின்னு பிற்ப

கற்றுமேவரும்.' ௨௦. 'மக்களை மெய்தீண்டல.' ௨௧. 'இலங்கலை நூனமார்பன்.'

## ௩௩. அப்பியாசம்.

மேல் வருந் தொடர்மொழிகளில் "இடையுரிவடசொலி ன்" என்னுஞ் சூத்திர விதிப்படி அமைக்கப்படும் புணர்ச்சிகளை எடுத்துக் காட்டி விளக்குக:—

௧. 'தேவர்கோவறியாத தேவதேவன்.' ௨. 'கரதலமுற்றெளிர்செலவின்' ௩. 'ஆன்படுநெய் பெய் கலனுள' ௪. 'மலர்க்கமலபாதனே' ௫. இக பரமாகியிருந்தவனே' ௬. 'வாளா களித்திருந்தேன்.' ௭. 'தலைவனை நனி காணேன்.' ௮. 'பசுபாசமறுத்தருளி.' ௯. 'முனறில்களலனை முத்தின் பந்தரே.' ௧௦. 'அருமந்த தேவரயனறிருமாற்கரிய சிவம்.' ௧௧ 'தெளிவளர் பளிங்கின் றிரண்மணிக் குன்றே.' ௧௨. 'சடிகா நீங்கிச் சிந்தையிலருளோடேச' ௧௩. 'மழகளிறு.' ௧௪ 'கமஞ்சூன மாமழை.'

## ௩௪. அப்பியாசம்.

மேல் வருந தொடர்மொழிகளில "ஒற்றுயிர் முதலீற் று ருபுகள" என்னுஞ சூத்திரத்தை விளக்கும உதாரணங்களை எடுத்துக் காட்டி, அவ்வுதாரணங்களில இன்ன இன்ன உருபு இன்ன இன்ன சூத்திர விதிப்படி புணாநதது எனறு விரித்தெழுதுக:—

௧. 'சித்தத்தட்டித்திக்குந் தேனே.' ௨. 'அகடுறயாமாட்டு இல்லாது செல்வம்.' ௩. 'எனனுளிருட்பிழம்பற.' ௪ 'அருநசெவூக்கரசாயாலின் கீழிருந்தவம்பலவா.' ௫. 'தன்னைத் தான காதலனாயின' ௬. 'மனத்துக் கண் மாசிலனாதல்.' ௭. 'உன்னடிக்கீழதென்னுயிரே.' ௮. 'மாலயற்கரிய நாதன்.' ௯. 'இறைப்பொழுதின்கட் கூடி.' ௧௦. 'விசும்பிற்றுளி வீழின்.' ௧௧. 'அண்டவானவர்கட் கெட்டாவருட்கழல்'

## ௩௫. அப்பியாசம்.

மேல் வருந தொடர்மொழிகளில் இன்ன இன்ன சாரியை இன்ன இன்ன புணர்ச்சியில் வந்தது என்றும, இன்ன இன்ன புணர்ச்சி சாரியை வாராப புணர்ச்சி என்றும், எழுதுக:—

௧. 'கற்பகத்தின் புதியபூமழை.' ௨. 'திங்களங்குழவியென்ன.' ௩. 'பந்தினையிளையவர் பயிலிடம்.' ௪. 'கொதிக்கும் வெம்மையை யாற்றுவான் போல்.' ௫. 'பொற்கதவங்கடிறக்கும்.' ௬. 'பதிற்றுப்பத்தந்தாதி' ௭. 'செல்வந்தோன்றியக்கால்.' ௮. 'அவற்றவற்றினக்குறில் குறியே.' ௯. 'களியானையினீருரியாய்.' ௧௦. 'தொல்லையின் முராரிதனபாற் றோன்றியவிகளும்.' ௧௧. 'இல்லைமெல்லங்கழிசூழ கண்டலையே.' ௧௨. 'என் முன்னைத்தவத்தால்' ௧௩. 'கூடினுயக்குங்குரீஇக்குழாமரோ' ௧௪. 'தண்ணார்தாமரைத்தாளொன.' ௧௫. 'விசும்பினுக்கேணி நெறியன்ன' ௧௬. 'என்

றுதைதாதைக்கு மெய்மனைக்குந் தம்பெருமானை.' ௧௭. 'மான் முதல் வானர்க்கப்பாற்செலவு.' ௧௮. 'ஒருங்குநீண்டக்கடைத்தும்.' ௧௯. 'கூத்தனை நாத்தழும்பேற வாழ்த்தி.' ௨௦ 'நுங்குகுன்றிட்டனை.' ௨௧. 'மலைத்தலை மானன்ன நோக்கியர்.' ௨௨ 'கல்லாரிடைப்புக்கு.' ௨௩. 'பிண்டிக் கண்ணார் நிழற்கீழெழுந்தமடிகள்.' ௨௪. 'கடல்வாயமுது.'

## ௩௬. அப்பியாசம.

மேல் வருந் தொடர்மொழிகளில் 'இயல்பின்விகாரமும்' என்னும் புறனடைச் சூத்திரத்தால் அமைக்கப்படும் புணர்ச்சிகளை எடுத்து விளக்குக.—

௧. 'கற்றை வைவ களைந்து தூறறி,' ௨. 'அட்ட மணல் கொட்டும்.' ௩. 'இருவர்ச் சுடடிபபலவேறு தொல்குடி.' ௪. 'விண்குத்து நீள் வரை வெற்ப.' ௫. 'தற்காத்துத் தற்கொண்டாற்பேணி.' ௬. எந்தை தாள் பணிந்து.' ௭. 'கொண்டல் கிழித்தெழுவாயினீங்கி.' ௮. 'உறுநர்த் தாங்கிய மதனுடை நோன்றாள்.' ௯. 'துன்னருஞ் சேஎிர் துயர் களையான்.' ௧௦. 'படைப்போற் படைக்கும பழையோன்.' ௧௧. 'சுடலை சேர்வது சொற்பிரமாணமே.' ௧௨. தந்தை தாய்ப்பேண்.' ௧௩. 'ஆசாற் சார்ந்தவை யமைவரக் கேட்டல்.'

## ௩௭ அபபியாசம்.

மேல் வருந் தொடர்மொழிகளில் வேற்றுமைபிடத்து வரும் இயல்பு புணர்ச்சி எச்சூத்திரத்தால அமைககபபடும்?—

௧. 'மலரடி நிழல்புக்கொன்றி.' ௨. 'பொன்னடி பணிந்து தம்மூர் போகுவாரினைய சொல்வார்.' ௩. 'காடு போந்தனனிந்திரன்.' ௪. 'வரைபாய் வருடை.' ௫. 'துன்பக் கடலில் வீழ்ந்திருக்கை புக்கான்.'

## ௩௮. அப்பியாசம.

மேல் வரும் வடமொழிகளை வடநூல் விதிப்படி புணர்த்துக:—

சரண+அரவிந்தம், சிவ+அனுபூதி, தாம+உதரன், உமா+ஈசன், ஞான+ஆகரன், மகா+ஆனந்தம், வல+அரி, விக்கின+ஈசுரன், வேத+அரணியம், பர+ஐக்கியம், தாரக+அரி, சந்திர+உதயம், கட+ஆகாசம், மகா+ஒட்டி, சுயம்பூ+உபதேசம், சதா+ஏகரூபம், ரமா+ஔதாரியம், கங்கா+ஓகம், சின+இந்திரன், சபா+ஈசன், பரம+ஈசுரன், மகா+உற்சவம், அந்திய+இட்டி, விரத+உத்தியாபனம், இரத்தின+ஆபரணம்.

## ௩௯. அபபியாசம்.

மேல் வருந் தொடர்மொழிகளில் உள்ள புணர்ச்சி வழுக்களைத் திருத்தி, அந்தத் திருத்தங்களுக்கு நியாயம் எழுதுக:—

Digitized By Roja Muthiah Research Library

பொய்மொழி, இயல்புப் புணர்ச்சி, வரகுச்சோறு, உருபுபுணர்ச்சி, ஆத்தீண்டுக் குற்றி, அருணாசலப்பிள்ளை வந்தான், நெய்நிறைந்த சாடி, கைமுதல், மெய் ஞானி, பிடித்து கொண்டுப் போனான், பசுபதியாபிள்ளை தந்தான், இஃது வென் தந்தைப் புத்தகம், பலாமரம், திருநீறு வெடுத்து தரித்தான், இதையுன் பிதாதந்தான், என்னையருகே வர சொன்னான், மிகப்பேசினான், எங்கு சென்றாய், அவன் யாண்டு சென்றான், ஈடடுச் செல்வம், சுக்கு தா, என்னை வைதுக்கொண்டுபோனான, மாக் காய், வேப்புப பூ, படித்து தெளிந்தப் பிள்ளை, வெளுத்தப் புடைவை, நல்லச் சரீரம், அங்கே போயினக் குதிரைகள், கீரை கறி, புழைக்கை யானை, அவனொடுச சென்றேன், இருக்காதையு மறுத்தான், நினைத் தாள்கள், என்னுடையத்தலை, அவனை யன்றுக் கண்டேன், காவேரியாறு சலமெடுத்து கொண்டுவா, சமடபள்ளி, நன்னூற் படித்தான், நாய்ப பிடித்தான், வெற்றொட்டான, மடசுமந்தான், தமிழ்ப் படித்தான், சேதின் மூழ்கினேன், தழைவிரி கடுக்கை மாலை தனிமுதற் சடையிற் சூடும் குழவி வெண்டிங்கள்.

## ௪௦. அப்பியாசம்.

மேல் வருந் தொடர்மொழிகளில் உள்ள ஆகுபெயர்களெடுத்துக் காட்டி, அவைகளுள் இன்னது இன்னது இன்ன இன்ன ஏதுவால் இன்ன இன்ன ஆகுபெயரென்றெழுதுக:—

௧. 'ஆத்திசூடி யமர்ந்த தேவனை' ௨. கார்த்திகை பூத்தது. ௩. வெள்ளை வந்தது. ௪. நெஞ்சு நொந்தது ௫. அவன்மொழியுணர்ந்தான். ௬. 'நுண்மை நுகரேல்.' ௭. 'ஆம்பனூறுந் தேம்பொதி கிளவி' ௮. 'வடிவேற்கரத்தோனைத் தோகையாய் நின்று சுமக்குதியோ தோன்றலே.' ௯. திருவாய்மொழியோதினான் ௧௦. புழுக்கலுண்டான் ௧௧. தோகை வந்தாள். ௧௨. 'புறங்கொடை யறியா மறந்திகழ் வேலோன்' ௧௩. இந்நூல் பாட்டியல். ௧௪. 'விசும்பிற்றுளிவீழின்' ௧௫. 'மோப்பக் குழையு மனிச்சம்.' ௧௬. 'தேசத்தோடொத்துவாழ்.' ௧௭. துலாக்கோல். ௧௮. 'மருந்தேயாயினும் விருந்தோடுண்.' ௧௯. 'தழை விரி கடுக்கை மாலை.' ௨௦. 'சுரும்புறு நீலங் கொய்யல.' ௨௧. 'குழலினிதியாழினிதென்ப.' ௨௨. இவ்வீடைம்பதடி. ௨௩. இவ்வெண்ணெயுழக்கு. ௨௪. அரைஞாண். ௨௫. 'ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்.'

## ௪௧. அப்பியாசம்.

மேல் வருந் தொடர்மொழிகளில உள்ள இரண்டாம்வேற்றுமைக்குப் பொருள்கள் எழுதுக:—

௧. மரத்தை வளர்த்தான். ௨. தேரையூர்ந்தான். ௩. கயிற்றையறுத்தான். ௪. எயிலை யிழைத்தான். ௫. குழையை உடையன் ௬. தந்தையை நிகர்த்தான். ௭. காசியைச் சார்ந்தான் ௮. மனைவியைக் காதலித்தான் ௯. கோயிலைக் கட்டினான், ௧௦. புதல்வரைப்பெற்றான். ௧௧. நூலைக் கற்றான். ௧௨. பணத்தை எண்ணினான்.

Digitized By Roja Muthiah Research Library

## ௪௨. அப்பியாசம்.

மேல் வருந் தொடர்மொழிகளில் உள்ள மூன்றாம்வேற்றுமைகளுக்குப் பொருள்கள் எழுதுக:—

௧. தாயொடு வந்த மகள். ௨. பொன்னாலியன்றவணி. ௩. என்னொடு விராய் வரிசி. ௪. அரசன் றச்சனாற் றேர் செய்வித்தான். ௫. 'அறத்தான் வருவதே யின்பம்.' ௬. பாணத்தாற் கொன்றான். ௭. காதாற் செவிடன். ௮. 'காவோடறக்குளந் தொட்டான். ௯. அரிசியொடு பருப்பை யட்டான். ௧0. 'அறனியலானில்வாழ்க்கை வாழ்பவன்.' ௧௧. சூலொடு கழுதை பாரஞ் சுமந்தது. ௧௨. 'இன்சொலாலீத்தளிக்க வல்லாற்கு.'

## ௪௩. அப்பியாசம்.

மேல் வருந் தொடர்மொழிகளில் உள்ள நான்காம்வேற்றுமைக்குப் பொருள்கள் எழுதுக:—

௧. அந்தணனுக்காவை வழங்கினான். ௨. சோற்றிற் கரிசி. ௩. ஆடைக்கு நூல். ௪. 'நட்டார்க்குக் காதலன்' ௫. அருமறையந்தணற் குரித்து. ௬. தயிர்க்குப் பால். ௭. ஈசற் கன்பன். ௮. பிணிக்கு மருந்து. ௯. கருப்பிற்கு வேலி. ௧0. கடிசூத்திரத்துக்குப் பொன். ௧௧. கூழிற்குக் குற்றேவல் செய்தான். ௧௨. அவற்குத் தக்காளிவள். ௧௩. 'உற்றார்க்குரியர் பொற்றொடி மகளிர்' ௧௪ 'கல்விக் கழகு கசடற மொழிதல்.' ௧௫. கன்றுக்குப் பால் போதும். ௧௬. பழத்துக்குச் சென்றான். ௧௭. 'நெல்லுக்கிறைத்தநீர்.' ௧௮. 'நெல்லுக் குமியுண்டு நீர்க்கு நுரையுண்டு புல்லிதழ் பூவிற்கு முண்டு.' ௧௯. தன்னடிக் கிரண்டு கரங்கடந்தான்

## ௪௪. அப்பியாசம்

மேல் வருந் தொடர்மொழிகளில் உள்ள ஐந்தாம்வேற்றுமைக்குப் பொருள்கள் எழுதுக:—

௧. 'விசும்பிற்றுளிவீழின்.' ௨. தமரிற் றீர்ந்தான் ௩. 'பந்தியம் புரவி நின்றும் பாரிடையிழிந்து.' ௪. 'பொலன் முகட்டுயர் பொன்னெடுங் குன்றின் வீழருவி.' ௫. 'தலையினிழிந்த மயிரனையர்.' ௬. 'உப்பினைச் சான்றோர் விளைநிலத்து நெல்லின் விழுமிதாக்கொள்வர்.' ௭. கருவூரிற் கிழக்கு மருவூர். ௮. சென்னையின் மேற்குக் காஞ்சி. ௯. கச்சியினின்றுங் கடலைங்காவதம். ௧0. பாலின் வெளிது கொக்கு. ௧௧. 'அளிக்குமன்னரிற் பொன்மழை வழங்கின வருவி.' ௧௨. 'அறத்தினூஉங் காக்கமுமில்லை.' ௧௩. 'நல்லார்கட்பட்ட வறுமையினின்னாதே கல்லார்கட்பட்ட திரு.' ௧௪. 'நாயிற் கடைப்பட்ட நம்மை.' ௧௫. 'வில்லிற் புரமூன்றெரித்தான்.'

## ௪௫. அப்பியாசம்.

மேல் வருந் தொடர்மொழிகளில் உள்ள ஆறாம்வேற்றுமைக்குப் பொருள்கள் எழுதுக:—

Digitized By Roja Muthiah Research Library

க. நிலத்ததகலம். உ. யானையது கோடு. ங. சாத்தனது செலவு. ச. பாலினது வெண்மை. ரு. சாத்தனது தோட்டம். சு. புலியதுகிர். எ. எள்ளது குப்பை. அ. வெள்ளியதாட்சி. கூ. சங்கினது சுண்ணாம்பு. க0. கொற்றனது பாட்டு. கக. விலங்குகளினது குழாம். கஉ. சாத்தனது வில். கங. சனியது வாரம். கச. எள்ளது சாந்து. கரு. 'அருளாய் சுருங்க வெம்மோல்வினையே.' கசு. 'நுன கழலிணை' கஎ. எனது தலை. கஅ. தனசெயில்.

## சசு. அப்பியாசம்.

மேல வரும் தொடர்மொழிகளில ஏழாம் வேற்றுமையிலே பொருண் முதலிய ஆறனுள் இன்னது இன்னது இன்ன இன்ன கிழமைப் பொருளுக் கிடமாயிற்றென் றெழுதுக:—

க. ஊரின்கட் குளம். உ. வருடத்தின் கண் மாதம். ங. மரத்தின்கட் காக்கை. ச. மார்பின்கட் பதக்கம். ரு. விரற்கண் மோதிரம். சு. நெற்றியின்கண் விழி. எ. சித்திரைக்கண் மல்லிகை மலர்ந்தது. அ. பாலின்கட் சுவை. கூ. நாளின்கண் வைகறை. க0. கடற்கண் வாயோடுகின்றது. கக. தீயின்கட் சூடு. கஉ. மனத்துக்கணுணர்வு. கங. கூத்தின்கண் பிரயம். கச. எள்ளின்கண் நெய்.

## சஎ. அப்பியாசம்.

மேல் வரும் தொடர்மொழிகளில் உள்ள உருபு மயக்கங்களை எடுத்துக் காட்டுக:—

க. 'ஈசற்கியான் வைத்த வன்பினகன்று' உ. 'வாய் மெய் சிந்தைதாரனடிக்கே செலுத்தினர்.' ங. 'பற்றி விடாஅ விடும்பைகள் பற்றினைப் பற்றி விடாஅதவர்க்கு.' ச. 'மாந்தருறை நிலத்தோடொட்டலரிது.' ரு. 'நின்றுணையடிக்கேயுயக்குமருந்தவரிவரென்றறியாமையொறுத்தேனே' சு. 'அவரைச் செறுஅரெனச் சேறியென்னெஞ்சு.' எ. 'இல்லை தவறவர்க்காயினும்.' அ. 'புலியூரம்பலவற்குற்ற பத்தியர்' கூ. 'கருங்கயற்கண்ணிணையேத மொன்றினறிப் பூம்பட்டெந்திரவெழினிவீழ்ந்தார்.' க0. 'பூங்கழலானடிக்கெய்துகேனருளாயென்றிறைஞ்சினன்' கக. 'முனைவனுக்கிறைஞ்சினன முருகவேளனன்.'

## சஅ. அப்பியாசம்.

மேல வருந் தொடர்மொழிகளில் உள்ள பெயரெச்சங்களை எடுத்துக் காட்டி, இன்னது இன்ன வாய்பாட்டு இன்னகால பெயரெச்சம் அது அறுவகைப்பெயர் முதலியவற்றுள் இன்ன பெயர் கொண்டது என்றெழுதுக:—

க. வாழுமில். உ. கற்குநூல். ங. தமிழுங்காலம். ச. வனையுங் கோல். ரு. ஓதும் பார்ப்பான. சு. கற்குங் கலவி. எ. புக்கசாலை. அ. தின்ற



Digitized By Roja Muthiah Research Library

கனி. ௯. வந்த நாள் ௧0. வென்றவேல் ௧௧. ஆடிய கூத்தன். ௧௨. போயின போக்கு. ௧௩. நோய்தீரு மருந்து. ௧௪. நோய் தீர்ந்த மருந்து. ௧௫. அரசன் ஆ கொடுக்கும் பார்ப்பான். ௧௬. அரசன் ஆ கொடுத்த பார்ப்பான். ௧௭. ஆடை யொலிக்குங் கூலி. ௧௮. ஆடை யொலித்த கூலி. ௧௯. யானிறங்கிய திண்ணை. ௨0. வழி நடந்த வேர்வை. ௨௧. படத்த பாம்பு. ௨௨. நெடிய வில். ௨௩. பெரிய களிறு. ௨௪. முகத்தயானை

## ௪௯. அப்பியாசம்.

மேல் வருந் தொடர்மொழிகளில் உள்ள வினையெச்சங்களை எடுத்துக்காட்டி, இன்னது இன்ன வாய்பாட்டு இன்னகால வினையெச்சம் அது தன்கருத்தாவின் வினை பிற கருத்தாவின் வினை என்பனவற்றுள் இன்ன வினை கொண்டது என்றெழுதுக:—

௧. 'எண்ணித் துணிக கருமம்' ௨. 'கல்லாக்கழிப்பர் தலையாயார்.' ௩. 'புணர்தருசெல்வந் தருபாக்குச் சென்றான்.' ௪. 'காணிய வாழி தோழி.' ௫. 'பமகன்கிடக்கை காணூஉ வீன்றஞான்றினும் பெரிதுவந்தனளே.' ௬. 'பரீஇயுயிர் செகுக்கும்.' ௭. 'மோப்பக் குழையுமனிச்சம்.' ௮. 'சோலை புக்கென வெப்ப நீங்கிற்று.' ௯. 'இம்மலரை மோப்பவெடுத்தேன். ௧0. உண்டெனப்பசி கெட்டது. ௧௧. மழைபெய்யிற் குளநிறையும். ௧௨. மழை பெய்தென மரங்குழைத்தது. ௧௩. மெய்யுணரின் வீடெளிதாம். ௧௪. மருந்து தின்றெனப் பிணி நீங்கிற்று. ௧௫. மழை பெய்யக் குளநிறையும் ௧௬. பசித்தெனப் புலி புன்மேயாது. ௧௭. மாரி பெய்தென முல்லை மலர்ந்தது. ௧௮. யானுண்ணிலுவப்பேன். ௧௯. அவர் காணிய வம்மின். ௨0. நாம் வாழியரெய்தினம். ௨௧. நாம் வாழிய ரிரும்பொருளீத்தனர். ௨௨. விருந்தின்றி யுண்ட பகல். ௨௩. 'நள்ளேனினதடியாரொடல்லால்.'

## ௫0. அப்பியாசம்.

மேல் வருந் தொடர்மொழிகளிலே சினைவினை முதல்வினையோடு முடிவனவற்றை எடுத்து விளக்குக:—

௧. 'பீலி பெய் சாகாடுமச்சிறும்.' ௨. 'சிந்திக் கலாப மயிர்க் கண்கள் சிவந்துபோனார்.' ௩. 'கண்ணொடியைந்து கண்ணோடாதவர்' ௪. 'மின்னினன்ன புருவமும் விண்ணினைத் - துன்னுதோளுமிடந்துடியாநின்றான்.' ௫. மாடு காலிற்று வீழ்ந்தது. ௬. 'ஈங்கொடிமேற் புயலுளவேமலர் சூழ்ந்திருடேங்கிப் புரள்வனவே.'

## ௫௧. அப்பியாசம்.

மேல் வருந் தொடர்மொழிகளில் உள்ள வினையெச்சத் திரிபுகளை எடுத்து விளக்குக:—

௧. 'கறந்த பாலினுட் காசிறுமணி - நிறங்கிளர்ந்து தன்னீர்மை கெட்டாங்கு.' ௨. 'கங்குல் போய் நாடகடன கழிந்தென்பவே.' ௩. 'நெடுங்கயிற்றூசல் பரிந்து கலுழ்நாலே.'

Digitized By Roja Muthiah Research Library

## ௫௨. அப்பியாசம்.

மேல் வருந் தொடர்மொழிகளில் எச்சமாய் வந்த முற்றுக்களை எடுத்து விளக்குக:—

க. 'பயன்றூக்கார் செய்தவுதவி நயன்றூக்கின்' உ. 'அறன்வரையானல்ல செயினும்.' ௩. 'கொல்லான் புலாலை மறுத்தானை' ௪. 'நெஞ்சிற்றுறவார் துறந்தார்போல் வஞ்சித்து வாழ்வாரின் வன்கணாரில்.' ௫. 'விண்ணின்று பொய்ப்பின்.' ௬. 'பெருவேட்கையே னெறப்பிரிந்து' எ. 'உச்சிக் கூப்பிய கையினர்தற் புகழ்ந்து.' அ. 'அஞ்சாயலளாயிழைமுன்.' ௯. 'தொடு மன்ரைத் தோலன் வில்லன மரவுரியுடையன்றோன்ற.' ௰. 'வினை வேட்டையீர் வீரர்வம்மின்' ௧௧. 'கடற்றானையர் கழல்வேந்தரை' ௧௨. 'கொடியைப் பார்த்தனர் வேர்த்தனர் வானவர்குலைந்தார்.' ௧௩. 'அடுத்தனையுதவ வேண்டும்.'

## ௫௩. அப்பியாசம்.

மேல் வருந் தொடர்மொழிகளில் உள்ள ஏகாரவிடைச் சொற்களுக்குப் பொருள் எழுதுக:—

க. 'ஆதிபகவன் முதற்றேயுலகு.' உ. 'யானை மருமம் பாய்ந்தொளித்ததே.' ௩. 'சுடலைசேர்வது சொற்பிரமாணமே.' ௪. 'அறனெனப்பட்டதே யில்வாழ்க்கை.' ௫. அறத்தான்வருவதேயின்பம்.' ௬. 'ஒறுத்தாரையொன்றாக வையாரே.' எ. 'வறியார்க்கொன்றீவதேயீகை.' அ. 'நன்றேதரினு நடுவிகந்தா மாக்கத்தை யன்றேயொழியவிடல்.'

## ௫௪. அப்பியாசம்

மேல் வருந் தொடர்மொழிகளில் உள்ள ஓகாரவிடைச் சொற்களுக்குப் பொருள் எழுதுக:—

க. 'அன்பிற்குமுண்டோ வடைக்குந் தாழ்.' உ. 'வித்துமிடல்வேண்டுங்கொல்லோ.' ௩. 'யானோ தேறேனவர் பொய் வழங்கலரே. ௪. திருமகளோவல்லள் அரமகளோவல்லள் இவள் யார். ௫. 'மழை முழக்கொடு மாறுகொண்டொலித்தன மாதோ' ௬. 'அணியன்றோ நாணுடைமை சான்றோர்க்கஃதின்றேல் பிணியன்றோ பீடுநடை.' எ. 'அம்பலக் கூத்தனைத் தினைத்தனைப்பொழுதும் மறந்துயவனோ.'

## ௫௫. அப்பியாசம்.

மேல் வருந் தொடர்மொழிகளில் உள்ள என, என்று என்னும் இடைச்சொற்களுக்குப் பொருள் எழுதுக:—

க. 'துண்ணெனத் துடித்தது மனம்.' உ. 'கார் வருமெனக் கருதினொந்தாள்,' ௩. 'பச்சென்று பசந்தது,' ௪. 'கரைவருமென்றெண்ணி.' ௫. 'பா

Digitized By Roja Muthiah Research Library

ரியென்றொருவனுளன். சு. 'வெயெனப் பூதமொன்றெழாததாமரோ.' எ. 'என்றென்றென்றிருக்குமேழைபொருளே' அ. 'சளசளவென மழைத் தாரை கான்றன' கூ. 'பொருக்கெனவெழுந்து தம புரையுள்புக்கனர்.' கo. மெல் லென நடந்தது. கக. 'முழுவதூஉங் கற்றனமென்று களி' . . . சஉ. 'ஒல் லென்றொலிக்குமொலி புனலூரற்கு.'

## ருசு. அப்பியாசம்.

மேல் வருந் தொடர்மொழிகளில் உள்ள உம்மையிடைச் சொற்களுக்குப் பொருள் எழுதுக:—

க. 'நெடுங் கடலுந் தன்னீர்மை குன்றும்.' உ. 'அணபிற்குமுண்டோ வடைக்குந் தாழ்.' ங. 'எந்நன்றி கொன்றார்க்குமுய்வுண்டாம்.' ச. நன்றே தரினு நடுவிகந்தா மாக்கத்தை - யன்றே யொழிய விடல்' ரு. 'எல்லார்க்கு நன்றும் பணிதல்.' சு. 'கல்லாதவரு நனி நல்லர்.' எ. 'கற்றிலனாயினுங் கேட்க.' அ. 'நயனில சொல்லினுஞ் சொல்லுக.' கூ. நெடியனுமாயினன்.

## ருஎ. அப்பியாசம்.

மேல் வருந் தொடர்மொழிகளில் மன்னிடைச்சொல் எவ் வெப்பொருளில் வந்தது?—

க. 'மன்னுயிரெல்லாந் தொழும்.' உ. 'துறப்பார் மற்றுப்புரவில்லார்.' ங. 'உள்ளிய தெய்த லெளிது மன்.' ச. 'கனவினுமினனாது மன்னோ.' ரு. 'கசதப மிகும் விதவாதன மன்னே.' சு. 'ஊடுகமன்னோவொளியிழை.' எ. 'கண்டது மன்னுமொருநாள்' அ. 'உள்ளுவன் மன் யான்.'

## ருஅ. அப்பியாசம்.

மேல் வருந் தொடர்மொழிகளில் மற்றிடைச் சொல் எவ் வெப் பொருளில் வந்தது?—

க. 'கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய் மற்றாங்கே - யெடுப் பதூஉமெல்லாமழை.' உ. 'அன்றறிவாமென்னாதறஞ்செய்க மற்றது - பொன் றுங்காற் பொன்றாத் துணை' ங. 'விசும்பிற்றுளிவீழினல்லான் மற்றாங்கே - பசும்புற்றலைகாண்பரிது.' ச. 'மற்றையண்டமூந் தன்பெயரே சொல வாழ்ந்தான்.' ரு. 'இடர்பெரிதுமுடையேன் மற்றெனசெய்கேனென்செய்கேன்.' சு. 'மற்றுப் பற்றெனக்கின்றி நின்றிருப் பாதமே மனம் பாவித்தேன்'

## ருகூ. அப்பியாசம்.

மேல் வருந் தொடர் மொழிகளிலே கொலலிடைச்சொல எவ்வெப் பொருளில் வந்தது?—

க. 'இன்றுகொலன்றுகொலென்று கொலென்னாது - பின்றையே நின்றது கூற்றம்.' உ. 'என்னின் வேறாக்கிய யாண்டையார்கொலோ' ங. 'ஆசை நோய்க்கு மருந்துமுண்டாங்கொலோ.'

Digitized By Roja Muthiah Research Library

## ௯0. அப்பியாசம்.

மேல் வருந் தொடர்மொழிகளில் உள்ள இடைச்சொற்களை எடுத்துக்காட்டி, அவற்றின் பொருள் எழுதுக—

க. 'அந்தில் விற் பயிற்றுந் தானம் வழிபட்டாங்குச் சென்றாள்.' உ. 'ஊடலினுண்டாயதோர் துன்பம.' ௩. 'மணணிடங்கொண்டயானை மணிமருப்பிடையிட்டம்ம.' ௪. 'வினை செய்வார்தஞ் சுற்றம் வேண்டாதாரென்றுங் - கனைவரையு மாராய்வதொற்று.' ௫. 'செறிகவின்றம்ம திருவொடும் பொலிந்தே.' ௬. 'பிடவமுங் களவுமொடு நிறைபூப்ப.' ௭. 'அம்ம மற்றனை யோரீர்.'

Digitized By Roja Muthiah Research Library

# இலக்கணவமைதி.

இலக்கணங் கற்றவர், இலக்கியத்தில் அவ்விலக்கணம் அமைந்து கிடக்கு முறைமையை ஆராய்ந்து விதியோடு கூறப் பயிலல்வேண்டும். அது செய்யப் பயிலாவிடத்து இலக்கண நூற் கல்வியால் ஒரு பயனும் இல்லை.

வாக்கியத்திலாயினுஞ் செய்யுளிலாயினும் இலக்கணவமைதி கூறுதல் ஆறுவகைப்படும்:—

(க.) பதங்களைப் பிரித்து, இது பகாப்பதம் இது பகுபதம் என வகுத்துப் பகுபதங்கள் பகுதி முதலிய உறுப்புக்களான்முடிந்தமை கூறுதல.

(உ.) பதங்கள் ஒன்றோடொன்று தொடர்ந்து நிற்கு நிலையை நோக்கி, இது வேற்றுமை வழியில் இன்ன தொடர், இது அல்வழியில் இன்ன தொடர் எனக் கூறுதல்.

(௩.) பதத்தோடு பதமும் பதத்தோடு உருபும் புணர்ந்து நின்ற முறைமையைச் சூத்திரவிதியோடும் எடுத்துக் கூறுதல்.

(௪.) ஒவ்வொரு சொற்கும் இலக்கணமும் முடிக்குஞ் சொல்லுங் கூறுதல்.

(௫.) முக்கியமாகிய எழுவாயையும், பயனிலையையும், செயப்படுபொருள் உண்டாயின் அதனையும், எடுத்துக் காட்டி, அதனை விசேடித்து நிற்கும் விசேடணத்தை விளக்குதல்.

(௬.) முக்கியமாகிய பயனிலையை எடுத்துக் கூறி, அதனைத் தொடர்ந்து வரும் பதங்கள் ஒன்றையொன்று அவாவி நிற்கு நிலையை வினாவிடைகளான் இனிது விளக்குதல்.

Digitized By Roja Muthiah Research Library

# பகுபதமுடிபு.

---

## பெயர்ப்பகுபதம்.

அவன் என்னுஞ் சுட்டுப்பொருட் பெயர்ப்பகுபதம், அ என்னும் பகுதியும், அன் என்னும் ஆண்பால் விகுதியும் பெற்று, "எகரவினாமுச் சுட்டின் முன்னர்" என்னுஞ் சூத்திரவிதியால் இடையில் வகரமெய் தோன்றி, "உடன்மே லுயிர் வந்து" என்னுஞ் சூத்திரவிதியால் அவ்வகரமெய்யின்மேல் விகுதி அகரவுயிரேறி, முடிந்தது.

இங்கே தனிக்குறின் முன்னொற்றிரட்டியாமை காண்க.

தமன் என்னுங் கிளைப்பொருட்பெயர்ப்பகுபதம் தாம் என்னும் பகுதியும், அன் என்னும் ஆண்பால்விகுதியும் பெற்று, "தானாந்தாமுதல் குறுகும்" என்னுஞ் சூத்திரவிதியாற் பகுதி முதல் குறுகி, "உடன்மே லுயிர் வந்து" என்னுஞ் சூத்திரவிதியால் இறுதி மகரமெய்யின்மேல் விகுதி அகரவுயிரேறி, முடிந்தது.

தனிக்குறின் முன்னொற்றிரட்டியாமையும் காண்க.

பொன்னன் என்னும் பொருட்பெயர்ப்பகுபதம், பொன் என்னும் பகுதியும், அன் என்னும் ஆண்பால்விகுதியும் பெற்று, "தனிக்குறின் முன்னொற்றுயிர்" என்னுஞ் சூத்திரவிதியாற் பகுதியீற்று னகரமெய் இரட்டித்து, "உடன்மே லுயிர் வந்து" என்னுஞ் சூத்திரவிதியால் இரட்டித்த னகரமெய்யின்மேல் விகுதி அகரவுயிரேறி, முடிந்தது.

நிலத்தன் என்னும் இடப்பெயர்ப்பகுபதம், நிலம் என்னும் பகுதியும், அன் என்னும் ஆண்பால் விகுதியும் பெற்று, "பதமுன் விகுதியும் பதமு முருபும் புணர்வழி" என்னுஞ் சூத்திரவிதியால் அவைகளுக்கு இடையே அத்துச்சாரியை தோன்றி, "மவ்வீ றொற்றழிந்துயிரீ றொப்பவும்" என்னுஞ் சூத்திரவிதியாற் பகுதியீற்று மகரமெய் கெட்டு அகரவுயிரீறாக நின்று "அத்தி னகர மகர முனையில்லை." என்னுஞ் சூத்திர விதியால் சாரியையின் முதல் அகரவுயிரும் "உயிர்வரி னுக்குறள்" என்னுஞ் சூத்திரவிதியாற் சாரியையீற்றுகரமுங் கெட்டு, "உடன்மே லுயிர் வந்து" என்னுஞ் சூத்திரவிதியால் [உகரங் கெட நின்ற] தகரமெய்யின்மேல் விகுதி அகரவுயிரேறி, முடிந்தது.

பிரபவன் என்னுங் காலப்பெயர்ப் பகுபதம், பிரபவம் என்னும் பகுதியும், அன் என்னும் ஆண்பால் விகுதியும் பெற்று, "ஒருமொழி மூவழிக் குறைதலு மனைத்தே" என்னுஞ் சூத்திரவிதியாற் பகுதியீற்று அம்

குன்றாது வகரமெய்யீறாய் நின்று, "உடன்மேலுயிர்வந்து" என்னுஞ் சூத்திரவிதியால் அவ்வகரமெய்யின்மேல் விகுதி அகரவுயிரேறி, முடிந்தது.

திணிதோளன் என்னுஞ் சினைப்பெயர்ப்பகுபதம், அடையடுத்த திணிதோள் என்னும் பகுதியும், அன் என்னும் ஆண்பால் விகுதியும் பெற்று, "உடன்மேலுயிர்வந்து" என்னுஞ் சூத்திரவிதியாற் பகுதியீற்று ளகரமெய்யின்மேல் விகுதி அகரவுயிரேறி, முடிந்தது.

நல்லன் என்னுங் குணப்பெயர்ப் பகுபதம், நன்மை என்னும் பகுதியும், அன் என்னும் ஆண்பால் விகுதியும் பெற்று, "ஈறுபோதல்" என்னும் விதியாற் பகுதியீற்று மைவிகுதி கெட்டு நல் என நின்று, "தனிக்குறின் முன்னொற்று" என்னுஞ் சூத்திரவிதியால் லகரமெய் இரட்டித்து, "உடன்மேலுயிர் வந்து" என்னுஞ் சூத்திரவிதியால் இரட்டித்த லகரமெய்யின்மேல் விகுதி அகரவுயிரேறி, முடிந்தது. நல் + மை = நன்மை ஆதலின், மை நீங்க நின்றது இயல்பான நல் எனப்படும்.

கரியன் என்னுங் குணப்பெயர்ப் பகுபதம் கருமை என்னும் பகுதியும், அன் என்னும் ஆண்பால் விகுதியும் பெற்று, "ஈறு போதல்" என்னும் விதியாற் பகுதியீற்று மைவிகுதி கெட்டு, "இடையுகரமிய்யாதல்" என்னும் விதியால் இடையுகரம் இகரமாகத் திரிந்து, "இ ஈ ஐவழி யவ்வும்" என்னுஞ் சூத்திரவிதியால் யகரவுடம்படுமெய் தோன்றி, "உடன்மேலுயிர் வந்து" என்னுஞ் சூத்திரவிதியால் அம்மெய்யின்மேல் விகுதி அகரவுயிரேறி, முடிந்தது.

செய்யன் என்னுங் குணப்பெயர்ப் பகுபதம், செம்மை என்னும் பகுதியும், அன் என்னும் ஆண்பால் விகுதியும் பெற்று, "ஈறுபோதல்" என்னும் விதியாற் பகுதியீற்று மைவிகுதி கெட்டு, "முன்னின்ற மெய்திரிதல்" என்னும் விதியான் மகரமெய் யகரமெய்யாகத் திரிந்து, "தனிக்குறின் முன்னொற்று" என்னுஞ் சூத்திரவிதியால் அவ்யகரமெய் இரட்டித்து, "உடன்மேலுயிர் வந்து" என்னுஞ் சூத்திரவிதியால் இரட்டித்த யகரமெய்யின்மேல் விகுதி அகரவுயிரேறி, முடிந்தது.

செவ்வியான் என்னும் பண்புப்பெயர்ப் பகுபதம், செம்மை என்னும் பகுதியும், ஆன் என்னும் ஆண்பால் விகுதியும், அவைகளுக்கு இடையே இகரச்சாரியையும் பெற்று, "ஈறு போதல்" என்னும் விதியாற் பகுதியீற்று மைவிகுதி கெட்டு, "முன்னின்ற மெய் திரிதல்" என்னும் விதியால் மகரமெய் வகரமெய்யாகத் திரிந்து, "தனிக்குறின் முன்னொற்று" என்னுஞ் சூத்திரவிதியால் வகரமெய் இரட்டித்து, "உடன்மேலுயிர் வந்து" என்னுஞ் சூத்திரவிதியால் இரட்டித்த மெய்யின்மேற் சாரியை இகரவுயிரேறி, "இ ஈ ஐவழி யவ்வும்" என்னுஞ் சூத்திரவிதியால் யகரவுடம்படுமெய்

தோன்றி, "உடன்மே லுயிர் வந்து" என்னுஞ் சூத்திரவிதியால் அம்மெய்யி ன்மேல் விகுதி ஆகாரவுயிரேறி, முடிந்தது.

பாசி என்னுங் குணப்பெயர்ப் பகுபதம், பசுமை என்னும் பகுதியு ம், இ என்னும் விகுதியும் பெற்று, "ஈறு போதல்" என்னும் விதியாற் பகுதி யீற்று மைவிகுதி கெட்டு, "ஆதி நீடல்" என்னும் விதியாற் பகுதி முதனீ ண்டு, "உயிர்வரி னுக்குறள்" என்னுஞ் சூத்திரவிதியாற் சகரமெய்யின் மேலுள்ள உகரங் கெட்டு, "உடன்மே லுயிர் வந்து" என்னுஞ் சூத்திரவி தியால் உகரங் கெட நின்ற சகரமெய்யின்மேல் விகுதி இகரவுயிரேறி, முடி ந்தது.

ஓதுவான் என்னுந் தொழிற்பெயர்ப் பகுபதம், ஓது என்னும் பகு தியும், ஆன் என்னும் ஆண்பால் விகுதியும், அவைகளுக்கு இடையே வகர விடைநிலையும் பெற்று, "உடன்மே லுயிர் வந்து" என்னுஞ் சூத்திரவிதியா ல் இடைநிலைமெய்யின்மேல் விகுதி ஆகாரவுயிரேறி, முடிந்தது. ஓதுத லுடையவன் என்பது பொருள். *

* ஓதுவான் என்பது எதிர்காலத் தெரிநிலைவினைமுற்றுப் பகுபதமா யின், ஓது பகுதி; ஆன் விகுதி; வகரமெய் எதிர்காலவிடைநிலை. எதிர்கால வினையெச்சப் பகுபதமாயின், ஓது பகுதி; வான் எதிர்கால வினையெச்ச விகுதி.

நன்மை என்னும் பண்புப்பெயர்ப் பகுபதம், நல் என்னும் பகுதியும், மை என்னும் பண்புப்பெயர் விகுதியும் பெற்று, "மெலிமேவினணவும்" எ ன்னும்விதியாற் பகுதியீற்று லகரமெய் னகரமெய்யாகத் திரிந்து, முடி ந்தது.

வருதல் என்னுந் தொழிற்பெயர்ப்பகுபதம், வா என்னும் பகுதியும், தல் என்னுந் தொழிற்பெயர்விகுதியும் பெற்று, "வலித்தன் மெலித்தல்" என் னுஞ் சூத்திரத்துக் "குறுக்கல்" என்னும் விதியாற் பகுதி முதல் குறுகி, 'விரித்தல்' என்னும் விதியால் ரகரவுகரம் விரிந்து, முடிந்தது.

உடுக்கை என்னுந் தொழிற்பெயர்ப் பகுபதம், உடு என்னும் பகுதி யும், கை என்னுந் தொழிற்பெயர் விகுதியும் பெற்று, "இயல்பினும் விதியி னு நின்ற வுயிர்முன்" என்னுஞ் சூத்திரவிதியால் விகுதிக் ககரமிகுந்து, முடி ந்தது. உடுத்தல் என்பது பொருள்.

உடுக்கை என்னுஞ் செயப்படுபொருட்பெயர்ப் பகுபதம் உடு என் னும் பகுதியும், ஐ என்னுஞ் செயப்படுபொருள் விகுதியும், அவைகளுக்கு இடையே குச்சாரியையும் பெற்று, "இயல்பினும் விதியினும்" என்னுஞ் சூத்திரவிதியாற் சாரியைக் ககரமிகுந்து, "உயிர்வரினுக்குறள்" என்னுஞ் சூத் திரவிதியாற் சாரியையீற்றுகரங் கெட்டு, "உடன்மே லுயிர்வந்து" என்



Digitized By Roja Muthiah Research Library

னுஞ் சூத்திரவிதியால் உகரங்கெடநின்ற சகரவொற்றின்மேல் விகுதி ஐகாரவுயிரேறி, முடிந்தது. உடுக்கப்படுவது என்பது பொருள்.

**தொல்காப்பியம்** என்னுஞ் செயப்படுபொருட்பெயர்ப் பகுபதம் தொல்காப்பியன் என்னும் பகுதியும், அம் என்னுஞ் செயப்படுபொருள்விகுதியும் பெற்று, "ஒருமொழி மூவழிக் குறைதலு மனைத்தே" என்னுஞ் சூத்திரவிதியாற் பகுதியீற்று அன் குறைந்து யகரமெய்யீறாக நின்று, "உடன்மே லுயிர் வந்து" என்னுஞ் சூத்திரவிதியால் அவ் யகரமெய்யின்மேல் விகுதி அகரவுயிரேறி, முடிந்தது. தொல்காப்பியனாற் செயப்பட்டது என்பது பொருள்.

**எழுத்து** என்னுஞ் செயப்படுபொருட்பெயர்ப் பகுபதம், எழுது என்னும் பகுதியும், ஐ என்னுஞ் செயப்படுபொருள் விகுதியும் பெற்று, அவ்விகுதி கெட்டுக், கெட்டவிடத்துத் தகரவொற்றிரட்டித்து, முடிந்தது. எழுதப்படுவது என்பது பொருள். பாட்டென்பது முதலியனவும் இவ்வாறே முடிதலறிக.

**ஊண்** என்னுஞ் செயப்படுபொருட்பெயர்ப் பகுபதம், உண் என்னும் பகுதியும், ஐ என்னுஞ் செயப்படுபொருள் விகுதியும் பெற்று, அவ்விகுதி கெட்டுப் பகுதி முதனீண்டு, முடிந்தது. உண்ணப்படுவது என்பது பொருள். தீன், கோள் என்பன முதலியனவும் இவ்வாறே முடிதலறிக.

**காய்** என்னும் வினைமுதற்பொருட்பெயர்ப் பகுபதம், காய் என்னும் பகுதியும், இ என்னும் வினைமுதற்பொருள் விகுதியும் பெற்று, அவ்விகுதி கெட்டு, முடிந்தது. காய்ப்பது என்பது பொருள். தளிர், பூ, கனி, திரை, நுரை, அலை என்பனமுதலியனவும் இவ்வாறே முடிதலறிக.

## வினைமுற்றுப்பகுபதம்.

**உண்டான்** என்னும் இறந்தகாலத் தெரிநிலைவினைமுற்றுப் பகுபதம், உண் என்னும் பகுதியும், ஆன் என்னும் ஆண்பால் விகுதியும், அவைகளுக்கு இடையே இறந்தகாலங் காட்டும் டகரவிடைநிலையும் பெற்று, "உடன்மே லுயிர் வந்து" என்னுஞ் சூத்திரவிதியால் இடைநிலை டகரமெய்யின்மேல் விகுதி ஆகாரவுயிரேறி, முடிந்தது.

**உண்கின்றான்** என்னு நிகழ்காலத் தெரிநிலைவினைமுற்றுப் பகுபதம், உண் என்னும் பகுதியும், ஆன் என்னும் ஆண்பால்விகுதியும், அவைகளுக்கு இடையே நிகழ்காலங் காட்டுங் கின்றிடைநிலையும் பெற்று, "உயிர்வரி னுக்குறள்" என்னும் சூத்திரவிதியால் இடைநிலையீற்று உகரங்கெட்டு, "உடன்மேலுயிர்வந்து" என்னுஞ் சூத்திரவிதியால் உகரங்கெட நின்ற றகரமெய்யின்மேல் விகுதி ஆகாரவுயிரேறி, முடிந்தது.

Digitized By Roja Muthiah Research Library

உண்ணுவான் என்னும் எதிர்காலத் தெரிநிலைவினைமுற்றுப் பகுபதம், உண் என்னும் பகுதியும், ஆன் என்னும் ஆண்பால்விகுதியும், அவைகளுக்கு இடையே எதிர்காலங் காட்டும் வகரவிடைநிலையும், பகுதிக்கும், இடைநிலைக்கும் இடையே உகரச்சாரியையும் பெற்று, "தனிக்குறின் முன்னொற்று" என்னுஞ் சூத்திரவிதியாற் பகுதியீற்று ணகரமெய் இரட்டித்து, "உடன்மே லுயிர்வந்து" என்னுஞ் சூத்திரவிதியால் இரட்டித்த ணகரமெய்யின்மேற் சாரியை உகரவுயிரேறி, இன்னும் அச்சூத்திரவிதியால் இடைநிலைவகர மெய்யின்மேல் விகுதி ஆகாரவுயிரேறி, முடிந்தது. *

நடந்தனன் என்னும் இறந்தகாலத்தெரிநிலைவினைமுற்றுப்பகுபதம், நட என்னும் பகுதியும், அன் என்னும் ஆண்பால்விகுதியும், அவைகளுக்கு இடையே இறந்தகாலங்காட்டுந் தகரவொற்றிடைநிலையும், இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையே அன்சாரியையும்பெற்று, "உடன்மேலுயிர்வந்து" என்னுஞ் சூத்திரவிதியாற் சாரியையீற்று னகரமெய்யின்மேல் விகுதி அகரவுயிரேறி, இன்னும் அச்சூத்திரவிதியால் இடைநிலைத்தகரமெய்யின்மேற் சாரியை அகரவுயிரேறி நடதனன் எனநின்று, இயல்பினும் விதியினு நின்றவுயிர் முன்' என்னுஞ் சூத்திரவிதியால் இடைநிலைத்தகரமிகுந்து, 'வலித்தன் மெலித்தல்" என்னுஞ் சூத்திரவிதியால் மிகுந்த, தகரவல்லொற்று மெல்லொற்றாக விகாரப்பட்டு முடிந்தது.

வருகின்றனன் என்னு நிகழ்காலத் தெரிநிலை வினைமுற்றுப்பகுபதம் வா என்னும் பகுதியும், அன் என்னும் ஆண்பால்விகுதியும், அவைகளுக்கு இடையே நிகழ்காலங் காட்டுங் கின்றிடைநிலையும், இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையே அன் சாரியையும் பெற்று, "வலித்தன் மெலித்தல்" என்னுஞ் சூத்திரத்துக் 'குறுக்கல்' என்னும்விதியாற் பகுதிமுதல் குறுகி, விரித்தல் விதியால் ரகரவுகரம் விரிந்து, "உடன்மேலுயிர்வந்து" என்னுஞ் சூத்திரவிதியாற் சாரியையீற்று னகரமெய்யின்மேல் விகுதி அகரவுயிரேறி, "உயிர்வரி னுக்குறள்" என்னுஞ் சூத்திரவிதியால் இடைநிலையீற்றுகரங்கெட்டுக், கெட்டுநின்ற றகரவொற்றின்மேல் "உடன்மேலுயிர்வந்து" என்னுஞ் சூத்திரவிதியாற் சாரியை அகரவுயிரேறி முடிந்தது.

நடப்பான் என்னும் எதிர்காலத்தெரிநிலைவினைமுற்றுப் பகுபதம், நட என்னும் பகுதியும் ஆன் என்னும் ஆண்பால்விகுதியும் அவைகளுக்கு இடையே எதிர்காலங்காட்டும் பகரவொற்றிடைநிலையும் பெற்று, "உடன்மேலுயிர்வந்து" என்னுஞ் சூத்திரவிதியால் இடைநிலைப் பகரமெய்யின்மேல் விகுதி ஆகாரவுயிரேறி, "இயல்பினும் விதியினு நின்றவுயிர்முன்" என்னுஞ் சூத்திரவிதியால் இடைநிலைப் பகர மிகுந்து முடிந்தது.

---

* உண்ணுவான் என்பது எதிர்காலவினையெச்சப்பகுபதமாயின், உண் பகுதி உ சாரியை, வான் எதிர்கால வினையெச்சவிகுதி,

நடந்தது என்னும் இறந்தகாலத் தெரிநிலைவினைமுற்றுப் பகுபதம், நட என்னும் பகுதியும், து என்னும் ஒன்றன்பால்விகுதியும, அவைகளுக்கு இடையே இறந்தகாலங்காட்டுந் தகரவொற்றிடைநிலையும், இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையே அகரச்சாரியையும் பெற்று, "உடன்மேலுயிர்வந்து" என்னுஞ் சூத்திரவிதியால் இடைநிலைத் தகரவல்லொன்றின்மேற் சாரியை அகரவுயிரேறி, "இயல்பினும் விதியினு நின்றவுயிர்முன்" என்னுஞ் சூத்திரவிதியால் இடைநிலைத் தகரமிகுந்து, "வலித்தல் மெலித்தல்" என்னுஞ் சூத்திரவிதியால், (மிகுந்த,) தகரவல்லொற்று மெல்லொற்றாகவிகாரப்பட்டு முடிந்தது.

நடப்பித்தான் என்னும் பிறவினைப்பகுபதம், நட என்னும்பகுதியும், பி என்னும் பிறவினை விகுதியும் பெற்று, "இயல்பினும் விதியினு நின்றவுயிர்முன்" என்னுஞ் சூத்திரவிதியால் விகுதிப் பகரமிகுந்து, அனைத்தும் ஒருபகுதியாய் நின்று, ஆன் என்னும் ஆண்பால் விகுதியும், பகுதிக்கும் விகுதிக்கும் இடையே இறந்தகாலங்காட்டுந் தகரவொற்றிடைநிலையும் பெற்று, "உடன்மேலுயிர்வந்து" என்னுஞ் சூத்திரவிதியால் இடைநிலைத் தகரவொற்றின்மேல் விகுதி ஆகாரவுயிரேறி, "இயல்பினும்விதியினு நின்றவுயிர்முன்" என்னுஞ் சூத்திரவிதியால் இடைநிலைத் தகரமிகுந்து முடிந்தது.

அடிக்கப்பட்டான் என்னுஞ் செயப்பாட்டு வினைமுற்றுப் பகுபதம், அடி என்னும் பகுதியும், படு என்னுஞ் செயப்பாட்டு வினைவிகுதியும், அவைகளுக்கு இடையே குச்சாரியையும், அகரச்சாரியையும் பெற்று, "இயல்பினும் விதியினு நின்றவுயிர்முன்" என்னுஞ் சூத்திர விதியாற் சாரியைக் ககரமிகுந்து, "உயிர்வரினுக்குறள்" என்னும் விதியாற் சாரியையீற்று உகரங்கெட்டு, "உடன்மேலுயிர்வந்து" என்னுஞ் சூத்திர விதியால் உகரங்கெட நின்ற ககரமெய்யின்மேலே சாரியை அகரவுயிரேறி, "இயல்பினும்விதியினு நின்றவுயிர்முன்" என்னுஞ் சூத்திரவிதியால் விகுதிப் பகரமிகுந்து, அடிக்கப்படு என அனைத்தும் ஒரு பகுதியாகநின்று, ஆன் என்னும் ஆண்பால்விகுதி பெற்று, படு என்பதனுடைய உகரமூர்ந்த டகரமெய் இரட்டித்து, "உயிர்வரி னுக்குறள்" என்னுஞ் சூத்திரவிதியால் உகரவுயிர்கெட்டு, "உடன்மேலுயிர்வந்து" என்னுஞ் சூத்திரவிதியால் உகரங்கெட நின்ற டகரமெய்யின்மேல் விகுதி ஆகாரவுயிரேறி முடிந்தது.

நடவான் என்னும் எதிர்மறைத்தெரிநிலைவினைமுற்றுப் பகுபதம், நட என்னும் பகுதியும், ஆன் என்னும் விகுதியும், அவைகளுக்கு இடையே எதிர்மறை ஆகாரவிடைநிலையும் பெற்று, அவ்விடைநிலைகெட்டு, "இ ஈ ஐவழி" என்னுஞ் சூத்திரவிதியால் வகரவுடம்படுமெய் தோன்றி, "உடன்மேலுயிர்வந்து" என்னுஞ் சூத்திரவிதியால் அம்மெய்யின்மேல் விகுதி ஆகாரவுயிரேறி, முடிந்தது.

Digitized By Roja Muthiah Research Library

நடக்கின்றிலன் என்னும் எதிர்மறைத் தெரிநிலைவினைமுற்றுப் பகுபதம், நட என்னும் பகுதியும், அன் என்னும் ஆண்பால் விகுதியும், அவைகளுக்கு இடையே நிகழ்காலங்காட்டும் கின்றிடைநிலையும், இல் என்னும் எதிர்மறை இடைநிலையும் பெற்று, "இயல்பினும்விதியினு நின்றவுயிர்முன்" என்னுஞ் சூத்திரவிதியால் கின்றிடைநிலைக் ககரமிகுந்து, "உயிர்வரினுக்குறள்" என்னுஞ் சூத்திரவிதியால் அவ்விடைநிலையீற்றுகரங்கெட்டு, "உடன்மேலுயிர் வந்து" என்னுஞ் சூத்திரவிதியால் உகரங்கெடநின்ற றகரமெய்யின்மேல் எதிர்மறையிடைநிலை இகரவுயிரேறி, இன்னும் அச்சூத்திரவிதியால் அவ்விடைநிலையீற்று லகரமெய்யின்மேல் விகுதி அகரவுயிரேறி முடிந்தது.

எழுந்திடடான் என்னும் இறந்தகாலத் தெரிநிலைவினைமுற்றுப்பகுபதம், எழு என்னும் பகுதியும், இடு என்னும் பகுதிப்பொருள் விகுதியும் அவைகளுக்கு இடையே துச்சாரியையும் பெற்று, "இயல்பினும்விதியினு நின்றவுயிர்முன்" என்னுஞ் சூத்திரவிதியாற் சாரியைத் தகரமிகுந்து, "வலித்தன் மெலித்தல்" என்னுஞ் சூத்திரவிதியால் மிகுந்த தகரவல்லொற்று மெல்லொற்றாக விகாரப்பட்டு, "உயிர்வரினுக்குறள்" என்னும் விதியாற் சாரியையீற்று உகரங்கெட்டு, "உடன்மேலுயிர் வந்து" என்னும் சூத்திரவிதியால் உகரங்கெட நின்ற தகரமெய்யின்மேல் விகுதி இகரவுயிரேறி, எழுந்திடு என அனைத்தும் ஒரு பகுதியாக நின்று, ஆன் என்னும் ஆண்பால்விகுதி பெற்று, இடு என்பதனுடைய உகர மூர்ந்த டகரமெய் இரட்டி, "உயிர்வரினுக்குறள்" என்னுஞ் சூத்திரவிதியால் உகரவுயிர் கெட்டு, "உடன்மே லுயிர் வந்து" என்னுஞ் சூத்திரவிதியால் உகரக்கெட நின்ற டகரமெய்யின்மேல் விகுதி ஆகாரவுயிரேறி, முடிந்தது.

கழிந்தன்று என்னும் இறந்த காலத் தெரிநிலைவினைமுற்றுப் பகுபதம், கழி என்னும் பகுதியும் று என்னும் ஒன்றன்பால் விகுதியும், அவைகளுக்கு இடையே இறந்தகாலங்காட்டும் தகரவிடைநிலையும், இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையே அன் சாரியையும் பெற்று, "உடன்மேலுயிர் வந்து" என்னுஞ் சூத்திரவிதியால் இடைநிலைத் தகரவல்லொற்றின்மேல் சாரியை அகரவுயிரேறி, "இயல்பினும்விதியினு நின்றவுயிர்முன்" என்னுஞ் சூத்திரவிதியால் இடைநிலைத் தகரமிகுந்து, "வலித்தன் மெலித்தல்" என்னுஞ் சூத்திரவிதியால் மிகுந்த தகரவல்லொற்று மெல்லொற்றாக விகாரப்பட்டு முடிந்தது, கழிந்தது என்பது பொருள்.

கழிந்தின்று என்னும் எதிர்மறை இறந்தகாலத்தெரிநிலை வினைமுற்றுப் பகுபதம், கழி என்னும் பகுதியும், று என்னும் ஒன்றன்பால் விகுதியும், அவைகளுக்கு இடையே இறந்தகாலங்காட்டுந் தகரவொற்றிடைநிலையும், அவ்விடைநிலைக்கும் விகுதிக்கும் இடையே இல் என்னும் எதிர்மறையிடைநிலையும் பெற்று, "ளளவேற்றுமையிற் றடவும்" என்னுஞ் சூத்திரவிதியால் இல் என்னும் இடைநிலையீற்று லகரமெய் றகரமெய்யாகத்திரிந்து, "வலித்

தன் மெலித்தல்" என்னுஞ் சூத்திரவிதியால், பின்னும் நகரமெல்லொற்றாகத் திரிந்து, "உடன்மே லுயிர்வந்து" என்னுஞ் சூத்திரவிதியால், காலவிடைநிலைத் தகரமெய்யின்மேல் எதிர்மறை இடைநிலை இகரவுயிரேறி, "இயல்பினும் விதியினு நின்றவுயிர்முன்" என்னுஞ் சூத்திரவிதியால், இடைநிலைத் தகரமிகுந்து, "வலித்தன் மெலித்தல்" என்னுஞ் சூத்திரவிதியால், மிகுந்த வல்லொற்று மெல்லொற்றாக விகாரப்பட்டு முடிந்தது, கழிந்திலது என்பது பொருள்.

கோடும் என்னும் எதிர்காலத் தெரிநிலைவினைமுற்றுப் பகுபதம், கொள் என்னும் பகுதியும், தும் என்னும் தன்மைப்பன்மை எதிர்காலவிகுதியும் பெற்று, "வலித்தன் மெலித்தல்" என்னுஞ் சூத்திரத்து 'நீட்டல்' என்னும் விதிபாற் பகுதி முதனீண்டு, "குறில்செறியாலள" என்னுஞ் சூத்திரவிதியாற், பகுதியீறாகிய ளகரங்கெட்டு, "னலமுன் றனவும் ணளமுன் டணவும்" என்னுஞ் சூத்திரவிதியால், விகுதித்தகரம் டகரமாகத் திரிந்து முடிந்தது.

அற்று என்னுங் குறிப்புவினைமுற்றுப் பகுபதம், அ என்னும் பகுதியும், து என்னும் ஒன்றன்பால்விகுதியும் பெற்று, "இயல்பினும் விதியினு நின்றவுயிர்முன் கசதபமிகும்" என்றமையாலே, றகரமும் வல்லினமாதலால் விகுதி றகரவல்லொற்று மிகுந்து முடிந்தது. அற்று என்பது இறந்தகால வினையெச்சப் பகுபதமாயின், அறு பகுதி, உகரமூர்ந்த றகரமெய் இரட்டித்து முடிந்தது எனக் கொள்க.

இன்று என்னும் குறிப்புவினை முற்றுப் பகுபதம், இல் என்னும் பகுதியும், து என்னும் ஒன்றன்பால் விகுதியும் பெற்று, "லளவேற்றுமையிற் றடவும்" என்னும் விதியால் பகுதியீற்று லகரமெய் றகரமெய்யாகத் திரிந்து, "வலித்தன் மெலித்தல்" என்னுஞ் சூத்திரத்து 'மெலித்தல்' என்னும் விதியால் பின்னும் னகரமெய்யாகத் திரிந்து முடிந்தது.

உணர்த்துவிப்பன் என்னும் எதிர்காலத்தெரிநிலைவினைமுற்றுப் பகுபதம், உணர்த்து என்னும் பகுதியும், அன் என்னும் ஆண்பால் விகுதியும், அவைகளுக்கு இடையே எதிர்காலங் காட்டும் பகரவிடைநிலையும், பகுதிக்கும் காலவிடைநிலைக்கும், இடையே வில் என்னும் ஆற்றல் இடைநிலையும் பெற்று, "லளவேற்றுமையிற் றடவும்" என்னுஞ் சூத்திரவிதியால் ஆற்றலிடைநிலையீற்று லகரமெய் றகரமெய்யாகத் திரிந்து "உடன்மேலுயிர்வந்து" என்னுஞ் சூத்திரவிதியால் இடைநிலைப்பகரத்தின்மேல் விகுதி அகரவுயிரேறி முடிந்தது.

செய் என்னும் முன்னிலையேவலொருமை வினைமுற்றுப் பகுபதம், செய் என்னும் பகுதியும், ஆய் என்னும் முன்னிலையேவல் விகுதியும் பெற்று, அவ்விகுதி கெட்டு முடிந்தது.

## பெயரெச்சப்பகுபதம்.

அடித்த என்னும் இறந்தகாலப் பெயரெச்சப் பகுபதம், அடி என்னும் பகுதியும், அ என்னும் பெயரெச்சவிகுதியும், அவைகளுக்கு இடையே இறந்தகாலங்காட்டுந் தகரவொற்றிடைநிலையும் பெற்று, "உடன்மேலுயிர்வந்து" என்னுஞ் சூத்திரவிதியால் இடைநிலைத் தகரமெய்யின்மேல் விகுதி அகரவுயிரேறி, "இயல்பினும் விதியினு நின்றவுயிர்முன்" என்னுஞ் சூத்திரவிதியால் இடைநிலைத் தகரமிகுந்து முடிந்தது.

அடிக்கின்ற என்னும் நிகழ்காலப் பெயரெச்சப் பகுபதம், அடி என்னும் பகுதியும் அ என்னும் பெயரெச்ச விகுதியும், அவைகளுக்கு இடையே நிகழ்காலங் காட்டும் கின்றிடைநிலையும் பெற்று, "இயல்பினும்விதியினும் நின்றவுயிர்முன்" என்னுஞ் சூத்திரவிதியால் இடைநிலைக் ககரமிகுந்து, "உயிர்வரி னுக்குறள்" என்னுஞ்சூத்திரவிதியால் இடைநிலையீற் றுகரங்கெட்டு, "உடன்மேலுயிர்வந்து" என்னுஞ் சூத்திரவிதியால் உகரங்கெடநின்ற றகரமெய்யின்மேல் விகுதி அகரவுயிரேறி முடிந்தது.

அடிக்கும் என்னும் எதிர்காலப் பெயரெச்சப் பகுபதம் அடி என்னும் பகுதியும், உம் என்னும் எதிர்காலப் பெயரெச்ச விகுதியும், அவைகளுக்கு இடையே குச்சாரியையும் பெற்று, "இயல்பினும்விதியினு நின்றவுயிர்முன்" என்னுஞ் சூத்திரவிதியாற் சாரியைக் ககரமிகுந்து, "உயிர்வரி னுக்குறள்" என்னுஞ் சூத்திரவிதியால் சாரியையீற் றுகரங் கெட்டு "உடன்மேலுயிர் வந்து" என்னுஞ் சூத்திரவிதியால் உகரங்கெட நின்ற ககர மெய்யின்மேல் விகுதி உகரவுயிரேறி, முடிந்தது.

சிறிய என்னுங் குறிப்புவினைப் பெயரெச்சப் பகுபதம், சிறுமை என்னும் பகுதியும், அ என்னும் பெயரெச்சவிகுதியும் பெற்று, "ஈறுபோதல்" என்னும் விதியான் மைவிகுதிகெட்டு, "இடையுகர மிய்யாதல்" என்னும் விதியால் இடையுகரம் இகரமாகத் திரிந்து, "இ ஈ ஐ வழி யவ்வும்" என்னுஞ் சூத்திரவிதியால் யகரவுடம்படுமெய் தோன்றி, "உடன்மேலுயிர் வந்து" என்னுஞ் சூத்திரவிதியால் யகரமெய்யின்மேல் விகுதி அகரவுயிரேறி முடிந்தது.

உண்ணாத என்னும் எதிர்மறைத் தெரிநிலைவினைப் பெயரெச்சப்பகுபதம், உண் என்னும் பகுதியும், அ என்னும் பெயரெச்சவிகுதியும், அவைகளுக்கு இடையே எதிர்மறை ஆகாரவிடைநிலையும், தகரவெழுத்துப்பேறும் பெற்று, "தனிக்குறின் முன்னொற்று" என்னுஞ் சூத்திரவிதியாற் பகுதியீற்று ணகரமெய் இரட்டித்து, "உடன்மேலுயிர்வந்து" என்னுஞ் சூத்திரவிதியால் இரட்டித்த ணகர மெய்யின்மேல் இடைநிலை ஆகாரவுயிரேறி, இன்னும் அச்சூத்திரவிதியால் எழுத்துப்பேறாய் வந்த தகர மெய்யின்மேல் விகுதி அகரவுயிரேறி, முடிந்தது.

ROJA MUTHIAH
47, HOSPITAL STREE
KOTTAIYUR-623 10
P. M. DIST - TAMIL NADU
INDIA

Digitized By Roja Muthiah Research Library

செய்கிலாத என்னும் எதிர்மறைத் தெரிநிலைவினைப் பெயரெச்சபகுபதம், செய் என்னும் பகுதியும் அ என்னும் பெயரெச்சவிகுதியும், அவைகளுக்கு இடையே, இல் என்னும் எதிர்மறையிடைநிலையும், பகுதிக்கும் இடைநிலைக்கும் இடையே, குச்சாரியையும், இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையே ஆகாரச் சாரியையும், தகரவெழுத்துப்பேறும் பெற்று, "முற்றுமற் றொரோவழி" என்னும் விதியாற் குச்சாரியையின் உகரங் கெட்டு, "உடன்மே லுயிர்வந்து" என்னுஞ் சூத்திரவிதியால் உகரங் கெட நின்ற ககரமெய்யின்மேல் இடைநிலை இகரவுயிரேறி, பின்னும் அச்சூத்திரவிதியால் இடைநிலையீற்று லகரமெய்யின்மேற் சாரியை ஆகாரவுயிரேறி, பின்னும் அச்சூத்திரவிதியால் எழுத்துப்பேறாய் வந்த தகரமெய்யின்மேல் விகுதி அகரவுயிரேறி, முடிந்தது.

## வினையெச்சப்பகுபதம்.

நின்று என்னும் இறந்தகாலவினையெச்சப் பகுபதம், நில் என்னும் பகுதியும், உ என்னும் வினையெச்சவிகுதியும், அவைகளுக்கு இடையே இறந்தகாலங் காட்டும் றகரவொற்றிடைநிலையும் பெற்று, பகுதியீற்று லகரமெய் இடைநிலை றகரமெய்க்கு இனமாகிய னகரமெய்யாகத் திரிந்து, "உடன்மே லுயிர் வந்து" என்னுஞ் சூத்திரவிதியால் இடைநிலை றகரமெய்யின்மேல் விகுதி உகரவுயிரேறி, முடிந்தது.

நிற்க என்னும் முக்காலத்திற்குமுரிய வினையெச்சப் பகுபதம், நில் என்னும் பகுதியும், அ என்னும் வினையெச்சவிகுதியும், அவைகளுக்கு இடையே குச்சாரியையும் பெற்று, "முற்றுமற் றொரோவழி" என்னும் விதியாற் சாரியையீற்று உகரங் கெட்டு, "உடன்மே லுயிர்வந்து" என்னுஞ் சூத்திரவிதியால் உகரங் கெட நின்ற ககர மெய்யின்மேல் விகுதி அகரவுயிரேறி பகுதியீற்று லகரமெய் றகரமெய்யாகத் திரிந்து, முடிந்தது. *

நிற்கின் என்னும் எதிர்காலவினையெச்சப்பகுபதம், நில் என்னும் பகுதியும், இன் என்னும் எதிர்காலவினையெச்சவிகுதியும், அவைகளுக்கு இடையே குச்சாரியையும்பெற்று, பகுதியீற்று லகரமெய் றகரமெய்யாகத் திரிந்து "முற்றுமற் றொரோவழி" என்னும் விதியாற் சாரியையீற் றுகரங் கெட்டு, "உடன்மே லுயிர் வந்து" என்னுஞ் சூத்திரவிதியால் உகரங் கெடநின்ற ககரமெய்யின்மேல் விகுதி இகரவுயிரேறி, முடிந்தது.

தோன்றிபக்கால் என்னும் எதிர்காலவினையெச்சப் பகுபதம், தோன்று என்னும் பகுதியும், கால் என்னும் எதிர்கால வினையெச்சவிகுதியும்,

---

* நிற்க என்பது வியங்கோள்வினைமுற்றுப் பகுபதமாயின், நில் பகுதி; க வியங்கோள்விகுதி.

Digitized By Roja Muthiah Research Library

அவைகளுக்கு இடையே இன்சாரியையும், அகரச்சாரியையும் பெற்று, "உயிர்வரி னுக்குறள்" என்னுஞ் சூத்திரவிதியாற் பகுதியீற்று உகரங் கெட்டு, "உடன்மே லுயிர் வந்து" என்னுஞ் சூத்திரவிதியால் உகரங் கெட நின்ற நகரமெய்யின்மேற் சாரியை இகரவுயிரேறி, "ஒருமொழி மூவழி" என்னுஞ் சூத்திரவிதியாற் சாரியையீற்று னகரமெய் குறைந்து, "இ ஈ ஐ வழி" என்னுஞ் சூத்திரவிதியால் யகரவுடம்படுமெய் தோன்றி, "உடன்மே லுயிர்வந்து" என்னுஞ் சூத்திரவிதியால் அம்மெய்யின்மேற் சாரியை அகரவுயிரேறி "இயல்பினும் விதியினு நின்ற வுயிர்முன்" என்னுஞ் சூத்திரவிதியால் விகுதிக் ககர மிகுந்து, முடிந்தது. தோன்றிய என்பது இங்கே பெயரெச்சமாகாமை, ககரத்தோற்றத்தால், விளங்கும்.

வறந்தக்கால் என்னும் எதிர்காலவினையெச்சப் பகுபதம், வற என்னும் பகுதியும், கால் என்னும் எதிர்கால வினையெச்ச விகுதியும், அவைகளுக்கு இடையே துச்சாரியையும், அகரச்சாரியையும் பெற்று, "இயல்பினும் விதியினு நின்ற வுயிர்முன்" என்னுஞ் சூத்திரவிதியாற் சாரியைத் தகரமிகுந்து, "வலித்தல் மெலித்தல்" என்னுஞ் சூத்திரவிதியான் மிகுந்த தகரவல்லொற்று மெல்லொற்றாக விகாரப்பட்டு, "உயிர்வரி னுக்குறள்" என்னுஞ் சூத்திரவிதியாற் சாரியையீற் றுகரங் கெட்டு, "உடன்மே லுயிர் வந்து" என்னுஞ் சூத்திரவிதியால் உகரங் கெட நின்ற தகரமெய்யின்மேற் சாரியை அகரவுயிரேறி, "இயல்பினும் விதியினு நின்ற வுயிர்முன்" என்னுஞ் சூத்திரவிதியால் விகுதிக் ககரமிகுந்து, முடிந்தது.

---

பின் வரும் பொதுப்பகுபதங்களை முடிக்க:—

சாவான்: க. உடன்பாட்டுத் தெரிநிலைவினைமுற்று.
உ. எதிர்மறைத் தெரிநிலைவினைமுற்று.
ங. எதிர்கால வினையெச்சம்.

செய்யாய்: க. முன்னிலையேவலொருமை வினைமுற்று.
உ. முன்னிலையொருமை யெதிர்மறை வினைமுற்று.

செய்யீர்: க. முன்னிலையேவற் பன்மைவினைமுற்று.
உ. முன்னிலைப்பன்மை யெதிர்மறை வினைமுற்று.

தழைப்ப: க. பலர்பாற் படர்க்கை வினைமுற்று.
உ. பலவின்பாற் படர்க்கை வினைமுற்று.
ங. செயவெனெச்சம்.

அன்ன: க. குறிப்புவினைமுற்று.
உ. குறிப்புவினைப் பெயரெச்சம்.



Digitized By Roja Muthiah Research Library

செவ்விய: க. குறிப்புவினைமுற்று.
உ. குறிப்புவினைப் பெயரெச்சம்.

வேட்கும்: க. நிகழ்கால எதிர்காலவினைமுற்று.
உ. எதிர்காலப் பெயரெச்சம்.

வந்து: க. தன்மையொருமை வினைமுற்று.
உ. இறந்தகால வினையெச்சம்.

உண்டு: க. தன்மையொருமை வினைமுற்று.
உ. இறந்தகால வினையெச்சம்.
ங. அஃறிணையொன்றன்பாற் படர்க்கைக் குறிப்புவினைமு[ற்று.

தேடிய: க. இறந்தகாலவினைமுற்று.
உ. வியங்கோள்வினைமுற்று.
ங. இறந்தகாலப்பெயரெச்சம்.
ச. எதிர்கால வினையெச்சம்.

பின் வரும் பகுபதங்களை முடிக்க:—

பிறன், அறிஞன், நடை, நட்பு, நுட்பம், பிறிது, ஆய, நண்பு, ஐவர், இன்றி, வெற்பன், செய்ய, எழுவர், எச்சம், அல்லால், வலைச்சி, எற்று, ஒருவன், உழுநன், புலைச்சி, நால்வர், இடைச்சி, வாணத்தி, சேந்தது, எனைத்து, அல்லாமல், ஒருத்தி, தருகின்ற, ஓணத்தான, அல்லது, வாராத, மற்றையான், கரியவை, வெந்தது, தச்சிச்சி, கூயிற்று, வண்ணாத்தி, சென்றும், இல்லன, எமர்த்தேம், கடவுள், மாண்டார், பாணத்தி, நின்றனெம், செய்தென, வாழிய, மலையாட்டி, சொன்னான, சேறு, என்றிசினோர், கன்று, வேளாட்டி, குன்றிட்டது, சேறி, பொருட்டு, இல்லாத, எண்மர், உண்டனென், செய்தக்கடை, சேறும், உண்ணு, சோகாப்பர், உண்ணுதி, அழுக்கறுப்பான், வந்தன்று, செய்துகொண்டான், உண்டேல், கொணர்ந்தான், உணர்த்துகிற்றும், உண்டலும்.

Digitized By Roja Muthiah Research Library

# சொல்லிலக்கண சூசி.

## க. பெயர்ச்சொல்.

### க. பொருட்பெயர்

க. உயர்திணையாண்பாலொருமைப் படர்க்கைப் பெயர்

உ. உயர்திணைப் பெண்பாலொருமைப் படர்க்கைப் பெயர்

ந. உயர்திணைப் பலர்பாற் படர்க்கைப் பெயர்.

ச. உயர்திணையிருகூற்றொருமைப் படர்க்கைப் பொதுப்பெயர் [ஒருவர்.]

ரு. அஃறிணை யொன்றன்பாற் படர்க்கைப் பெயர்

சா. அஃறிணைப் பலவின்பாற் படர்க்கைப் பெயர்

எ. அஃறிணையிருபாற் படர்க்கைப் பொதுப்பெயர், [=பால்பகாவஃறிணைப்பெயர் = அஃறிணையியற்பெயர்.]

அ. இருதிணையாண்பாலொருமைப் படர்க்கைப் பொதுப்பெ[யர்

கூ. இருதிணைப் பெண்பாலொருமைப் படர்க்கைப் பொதுப் பெயர்

க0. இருதிணை முக்கூற்றொருமைப் படர்க்கைப் பொதுப்பெய[ர்.

கக. இருதிணையிருகூற்றுப் பன்மைப் படர்க்கைப் பொதுப்பெயர்.

கஉ. தன்மையொருமைப் பெயர்.

கந. தன்மைப் பன்மைப்பெயர்

கச. முன்னிலையொருமைப் பெயர்

கரு. முன்னிலைப் பன்மைப்பெயர்.

கசா. இருதிணைப் பன்மை மூவிடப் பொதுப்பெயர். [எல்லாம்.]

### உ. பண்புப்பெயர்

க. பண்புப்பெயர்.

### ந. தொழிற்பெயர்.

க. தொழிற்பெயர்.

### ச. வினையாலணையும் பெயர்.

தெரிநிலைவினையாலணையும் பெயர்.

க. உயர்திணையாண்பாலொருமைப் படர்க்கை யிறந்தகாலத் தெரிநிலைவினையாலணையும் பெயர்.

Digitized By Roja Muthiah Research Library

௨. உயர்திணையாண்பாலொருமைப் படர்க்கை நிகழ்காலத் தெரிநிலைவினையாலணையும் பெயர்

௩. உயர்திணையாண்பாலொருமைப் படர்க்கை யெதிர்காலத் தெரிநிலைவினையாலணையும் பெயர்

௪. உயர்திணைப் பெண்பாலொருமைப் படர்க்கையிறந்தகாலத் தெரிநிலைவினையாலணையும் பெயர்

௫. உயர்திணைப் பெண்பாலொருமைப் படர்க்கை நிகழ்காலத் தெரிநிலைவினையாலணையும் பெயர்.

௬. உயர்திணைப் பெண்பாலொருமைப் படர்க்கையெதிர்காலத் தெரிநிலைவினையாலணையும் பெயர்

௭. உயர்திணைப் பலர்பாற் படர்க்கையிறந்தகாலத் தெரிநிலை வினையாலணையும் பெயர்

௮. உயர்திணைப் பலர்பாற் படர்க்கை நிகழ்காலத் தெரிநிலை வினையாலணையும் பெயர்

௯. உயர்திணைப் பலர்பாற் படர்க்கையெதிர்காலத் தெரிநிலை வினையாலணையும் பெயர்

௧௦. அஃறிணையொன்றன்பாற் படர்க்கையிறந்தகாலத் தெரிநிலைவினையாலணையும் பெயர்.

௧௧. அஃறிணையொன்றன்பாற் படர்க்கை நிகழ்காலத் தெரிநிலைவினையாலணையும் பெயர்.

௧௨. அஃறிணையொன்றன்பாற் படர்க்கையெதிர்காலத் தெரிநிலைவினையாலணையும் பெயர்.

௧௩. அஃறிணைப் பலவின்பாற் படர்க்கையிறந்தகாலத் தெரிநிலைவினையாலணையும் பெயர்

௧௪. அஃறிணைப் பலவின்பாற் படர்க்கை நிகழ்காலத் தெரிநிலைவினையாலணையும் பெயர்.

௧௫. அஃறிணைப் பலவின்பாற் படர்க்கையெதிர்காலத் தெரிநிலைவினையாலணையும் பெயர்

௧௬. தன்மையொருமை யிறந்தகாலத் தெரிநிலைவினையாலணையும் பெயர்.

௧௭. தன்மையொருமை நிகழ்காலத் தெரிநிலை வினையாலணையும் பெயர்.

௧௮. தன்மையொருமையெதிர்காலத் தெரிநிலை வினையாலணையும் பெயர்.

Digitized By Roja Muthiah Research Library

கசு. தன்மைப் பன்மையிறந்தகாலத் தெரிநிலைவினையாலணை யும் பெயர்.

உ0 தன்மைப் பன்மை நிகழ்காலத் தெரிநிலைவினையாலணையும் பெயர்

உக. தன்மைப் பன்மையெதிர்காலத் தெரிநிலைவினையாலணை யும் பெயர்

உஉ. முன்னிலையொருமையிறந்தகாலத் தெரிநிலைவினையாலணை யும் பெயர்.

உங. முன்னிலையொருமை நிகழ்காலத் தெரிநிலைவினையாலணை யும் பெயர்.

உச. முன்னிலையொருமையெதிர்காலத் தெரிநிலைவினையால ணையும் பெயர்.

உரு. முன்னிலைப் பன்மையிறந்தகாலத் தெரிநிலைவினையாலணை யும் பெயர்.

உசு முன்னிலைப் பன்மை நிகழ்காலத் தெரிநிலைவினையாலணை யும் பெயர்.

உஎ. முன்னிலைப் பன்மையெதிர்காலத் தெரிநிலைவினையாலணை யும் பெயர்.

குறிப்புவினையாலணையும் பெயர்

க. உயர்திணையாண்பாலொருமைப் படர்க்கைக் குறிப்புவினை யாலணையும் பெயர்.

உ. உயர்திணைப் பெண்பாலொருமைப் படர்க்கைக் குறிப்புவி னையாலணையும் பெயர்.

ங. உயர்திணைப் பலர்பாற் படர்க்கைக் குறிப்புவினையாலணை யும் பெயர்

ச. அஃறிணையொன்றன்பாற் படர்க்கைக் குறிப்புவினையால ணையும் பெயர்

ரு. அஃறிணைப் பலவின்பாற் படர்க்கைக் குறிப்புவினையால ணையும் பெயர்.

சு. தன்மையொருமைக் குறிப்புவினையாலணையும் பெயர்.

எ. தன்மைப் பன்மைக் குறிப்புவினையாலணையும் பெயர்

அ. முன்னிலையொருமைக் குறிப்புவினையாலணையும் பெயர்

கூ. முன்னிலைப் பன்மைக் குறிப்புவினையாலணையும் பெயர்

Digitized By Roja Muthiah Research Library

பெயர்ச்சொன்னிலை நான்கு வகைப்படும்:—

க. வேற்றுமையுருபேற்று வினைப்பயனிலையாயினும் பெயர்ப்பய னிலையாயினும் கொள்வது.

உ. வேற்றுமையுருபேலாது எழுவாய்க்குப் பயனிலையாய் வருவது.

ங. வினைமுற்றுக்குப் பயனிலையாய் வருவது.

ச. பெயரை விசேடித்து நிற்பது.

## உ. வினைச் சொல்.

### க. முற்றுவினை

தெரிநிலை வினைமுற்று.

க. உயர்திணையாண்பாலொருமைப் படர்க்கையிறந்தகாலத் தெரிநிலைவினைமுற்று.

உ. உயர்திணையாண்பாலொருமைப் படர்க்கை நிகழ்காலத்தெ ரிநிலைவினைமுற்று.

ங. உயர்திணையாண்பாலொருமைப் படர்க்கையெதிர்காலத் தெரிநிலைவினைமுற்று.

ச. உயர்திணைப் பெண்பாலொருமைப் படர்க்கையிறந்தகாலத் தெரிநிலைவினைமுற்று.

ரு. உயர்திணைப் பெண்பாலொருமைப் படர்க்கை நிகழ்காலத் தெரிநிலைவினைமுற்று.

சா. உயர்திணைப் பெண்பாலொருமைப் படர்க்கையெதிர்கா லத் தெரிநிலைவினைமுற்று.

எ. உயர்திணைப் பலர்பாற் படர்க்கையிறந்தகாலத் தெரிநிலைவி னைமுற்று.

அ. உயர்திணைப் பலர்பாற் படர்க்கை நிகழ்காலத் தெரிநிலைவி னைமுற்று.

கூ. உயர்திணைப் பலர்பாற் படர்க்கையெதிர்காலத் தெரிநிலைவி னைமுற்று.

க0. அஃறிணையொன்றன்பாற் படர்க்கையிறந்தகாலத் தெரிநி லைவினைமுற்று.

கக. அஃறிணையொன்றன்பாற் படர்க்கை நிகழ்காலத் தெரிநி லைவினைமுற்று.

Digitized By Roja Muthiah Research Library

௧௨. அஃறிணையொன்றன்பாற் படர்க்கையெதிர்காலத் தெரிநிலைவினைமுற்று.

௧௩. அஃறிணைப் பலவின்பாற் படர்க்கையிறந்தகாலத் தெரிநிலைவினைமுற்று.

௧௪. அஃறிணைப் பலவின்பாற் படர்க்கை நிகழ்காலத் தெரிநிலைவினைமுற்று.

௧௫. அஃறிணைப் பலவின்பாற் படர்க்கை யெதிர்காலத் தெரிநிலைவினைமுற்று.

௧௬. தன்மையொருமையிறந்தகாலத் தெரிநிலைவினைமுற்று.

௧௭. தன்மையொருமை நிகழ்காலத் தெரிநிலைவினைமுற்று.

௧௮. தன்மையொருமை யெதிர்காலத்தெரிநிலைவினைமுற்று.

௧௯. தன்மைப் பன்மையிறந்தகாலத் தெரிநிலைவினைமுற்று.

௨௦. தன்மைப் பன்மை நிகழ்காலத் தெரிநிலைவினைமுற்று.

௨௧. தன்மைப் பன்மை யெதிர்காலத் தெரிநிலைவினைமுற்று.

௨௨. முன்னிலையொருமையிறந்தகாலத் தெரிநிலைவினைமுற்று.

௨௩. முன்னிலையொருமை நிகழ்காலத் தெரிநிலைவினைமுற்று.

௨௪. முன்னிலையொருமையெதிர்காலத் தெரிநிலைவினைமுற்று.

௨௫. முன்னிலைப்பன்மையிறந்தகாலத் தெரிநிலைவினைமுற்று.

௨௬. முன்னிலைப் பன்மை நிகழ்காலத் தெரிநிலைவினைமுற்று.

௨௭. முன்னிலைப்பன்மையெதிர்காலத்தெரிநிலைவினைமுற்று.

௨௮. முன்னிலையேவலொருமையெதிர்காலத் தெரிநிலைவினைமுற்று.

௨௯. முன்னிலையேவற் பன்மையெதிர்காலத் தெரிநிலைவினைமுற்று.

௩௦. இருதிணையைம்பான் மூவிடத்தெதிர்கால வியங்கோள்வினைமுற்று.

௩௧. பலர்பாலொழிந்த நாற்பாற் படர்க்கை நிகழ்காலவெதிர்காலத் தெரிநிலைவினைமுற்று. [செய்யும்.]

குறிப்புவினைமுற்று.

௧. உயர்திணையாண்பாலொருமைப் படர்க்கைக் குறிப்புவினைமுற்று.

௨. உயர்திணைப் பெண்பாலொருமைப் படர்க்கைக் குறிப்புவினைமுற்று.

௩. உயர்திணைப் பலர்பாற் படர்க்கைக் குறிப்புவினைமுற்று.

Digitized By Roja Muthiah Research Library

௪. அஃறிணையொன்றன்பாற் படர்க்கைக் குறிப்புவினைமுற்று
௫. அஃறிணைப் பலவின்பாற்படர்க்கைக் குறிப்புவினைமுற்று.
௬. உயர்திணை முப்பாற் படர்க்கைக் குறிப்புவினைமுற்று
௭. அஃறிணையிருபாற் படர்க்கைக் குறிப்புவினைமுற்று.
௮. தன்மையொருமைக் குறிப்புவினைமுற்று
௯. தன்மைப் பன்மைக் குறிப்புவினைமுற்று.
௧௦. முன்னிலையொருமைக் குறிப்புவினைமுற்று
௧௧. முன்னிலைப் பன்மைக் குறிப்புவினைமுற்று.

தெரிநிலைவினைமுற்றுச் சொன்னிலை மூன்று வகைப்படும்:—

௧. எழுவாய்க்குப் பயனிலையாய் வருவது
௨. பெயர்ப்பயனிலை கொள்வது.
௩. வினையெச்சப்பொருள் தந்து வினைகொள்வது.

குறிப்புவினைமுற்றுச் சொன்னிலை நான்கு வகைப்படும்:—

௧. எழுவாய்க்குப் பயனிலையாய் வருவது.
௨. பெயர்ப்பயனிலை கொள்வது.
௩. வினையெச்சப்பொருள் தந்து வினைகொள்வது.
௪. பெயரெச்சப்பொருள் தந்து பெயர்கொள்வது.

---

## ௨. பெயரெச்சம்.

### தெரிநிலைவினைப்பெயரெச்சம்.

௧. இறந்தகாலத் தெரிநிலைவினைப் பெயரெச்சம்.
௨. நிகழ்காலத் தெரிநிலைவினைப் பெயரெச்சம்.
௩. எதிர்காலத் தெரிநிலைவினைப் பெயரெச்சம்.
௪. எதிர்மறைத் தெரிநிலைவினைப் பெயரெச்சம்.

### குறிப்புவினைப் பெயரெச்சம்.

௧. குறிப்புவினைப் பெயரெச்சம்
௨. எதிர்மறைக் குறிப்புவினைப் பெயரெச்சம்.

பெயரெச்சச் சொன்னிலை: வினைமுதற்பெயர், கருவிப் பெயர், இடப்பெயர், தொழிற்பெயர், காலப்பெயர், செயப்படுபொருட்பெயர் என்னும் அறுவகைப்பெயர்களுள் ஒன்று கொள்வது.

Digitized By Roja Muthiah Research Library

Digitized By Roja Muthiah Research Library

Digitized By Roja Muthiah Research Library

## ௩. வினையெச்சம்.

### தெரிநிலைவினை வினையெச்சம்.

௧ இறந்தகாலத் தெரிநிலைவினை வினையெச்சம்.
௨. முக்காலத் தெரிநிலைவினை வினையெச்சம்.
௩. எதிர்காலத் தெரிநிலைவினை வினையெச்சம்.
௪ எதிர்மறைத் தெரிநிலைவினை வினையெச்சம்.

### குறிப்புவினை வினையெச்சம்.

௧. குறிப்புவினை வினையெச்சம். [= வினையெச்சக்குறிப்பு.]
௨. எதிர்மறைக் குறிப்புவினை வினையெச்சம்.

வினையெச்சச் சொன்னிலை: தன்கருத்தாவின் வினையாயினும் பிறகருத்தாவின் வினையாயினும் கொள்வது. எனவே வினைமுற்று, பெயரெச்சம், வினையெச்சம், வினையாலணையும்பெயர், தொழிற்பெயர் என்றிவற்றைக் கொள்ளுமென்பது. ௩௪௨-ம் சூத்திரவுரையில் விளக்கியவாற்றானறிக.

## ௩. இடைச்சொல்.

௧. வேற்றுமையுருபிடைச்சொல்
௨. இடைநிலையுருபிடைச்சொல்.
௩. விகுதியுருபிடைச்சொல்
௪ சாரியையுருபிடைச்சொல்.
௫. உவமவுருபிடைச்சொல்
௬ தத்தம்பொருளுணர்த்துமிடைச்சொல்.
௭. இசைநிறையிடைச்சொல்.
௮ அசைநிலையிடைச்சொல்.
௯. ஒலிக்குறிப்பிடைச்சொல்
௧0. அச்சக்குறிப்பிடைச்சொல்.
௧௧. விரைவுக்குறிப்பிடைச்சொல்.

## ௪. உரிச்சொல்.

௧ இசையுரிச்சொல்.
௨ குறிப்புரிச்சொல்.
௩. பண்புரிச்சொல்.



Digitized By Roja Muthiah Research Library

அல்லது,

க. குணப்பண்புரிச்சொல்.
உ. தொழிற்பண்புரிச்சொல்.
உரிச்சொன்னிலை: பெயரேனும் வினையேனுங் கொள்வது.

---

## இலக்கணங் கூறிய உதாரணங்கள்.

### அரசன் வந்தான்

அரசன் என்பது உயர்திணையாண்பாலொருமைப் படர்க்கைப்பெயர்; திரிபின்மையாகிய எழுவாயுருபேற்றது; அது வந்தான் என்னும் வினைப்பயனிலை கொண்டது. வந்தான். எ-து. உயர்திணையாண்பாலொருமைப் படர்க்கையிறந்தகாலத் தெரிநிலைவினைமுற்று; அது அரசன என்னும் எழுவாய்க்குப் பயனிலையாய் வந்தது.

### இந்திரன் அசுரரைக் கொன்று தேவரைக் காத்தான்.

இந்திரன். எ-து. உயர்திணையாண்பாலொருமைப் படர்க்கைப்பெயர்; திரிபின்மையாகிய எழுவாயுருபேற்றது; அது காத்தான் எனனும் வினைப்பயனிலை கொண்டது. அசுரர். எ-து. உயர்திணைப பலர்பாற் படர்க்கைப் பெயர்; செயப்படுபொருளில் வந்த ஐ என்னும் இரண்டனுருபேற்றது; அது கொன்று என்னும் வினைப்பயனிலை கொண்டது. கொன்று. எ-து. இறந்தகாலத் தெரிநிலைவினை வினையெச்சம்; அது காத்தான் என்னுந் தன் கருத்தாவின் வினை கொண்டது. தேவர். எ-து. உயர்திணைப் பலர்பாற் படர்க்கைப்பெயர்; செயப்படுபொருளில் வந்த ஐ என்னும் இரண்டனுருபேற்றது; அது காத்தான் என்னும் வினைப்பயனிலை கொண்டது. காத்தான். எ-து. உயர்திணையாண்பாலொருமைப் படர்க்கையிறந்தகாலத் தெரிநிலை வினைமுற்று; அது இந்திரன் என்னும் எழுவாய்க்குப் பயனிலையாய் வந்தது.

### என்று வந்தாய்?

என்று. எ-து. ஏழாம்வேற்றுமைக் காலப்பொருளுணர நின்ற இடைச்சொல். வந்தாய். எ-து. முன்னிலையொருமையிறந்தகாலத்தெரிநிலைவினைமுற்று; அது நீ என்னுந் தோன்றுவெழுவாய்க்குப் பயனிலையாய் வந்தது.

### யான் பிறந்தவூர் சிதம்பரம்.

யான். எ-து. தன்மையொருமைப் பெயர்; திரிபின்மையாகிய எழுவாயுருபேற்றது; அது பிறந்த என்னும் வினைப்பயனிலை கொண்டது. பிறந்த. எ-து. இறந்தகாலத் தெரிநிலைவினைப் பெயரெச்சம்; அது ஊர் என்னும் இடப்பெயர் கொண்டது. ஊர். எ-து. பால்பகாவஃறிணைப் படர்க்கைப்பெயர்; திரிபின்மையாகிய எழுவாயுருபேற்றது; அது சிதம்பரம் என்னும் பெயர்ப்

Digitized By Roja Muthiah Research Library

பயனிலை கொண்டது. சிதம்பரம். எ-து. பால்பகாவஃறிணைப் படர்க்கைப் பெயர்; அது. ஊர் என்னும் எழுவாய்க்குப் பயனிலையாய் வந்தது.

## இங்கு வந்து போயினான் கொற்றன்.

இங்கு. எ-து ஏழாம்வேற்றுமையிடப்பொருளுணர நின்ற இடைச்சொல். வந்து. எ-து. இறந்தகாலத் தெரிநிலைவினை வினையெச்சம்; அது போயினான் என்னுந் தன்கருத்தாவின் வினைகொண்டது. போயினான். எ-து. உயர்திணையாண்பாலொருமைப் படர்க்கையிறந்தகாலத் தெரிநிலைவினைமுற்று; அது கொற்றன் என்னும் பெயர்ப்பயனிலை கொண்டது. கொற்றன். எ-து. உயர்திணையாண்பாலொருமைப் படர்க்கைப் பெயர்; அது. போயினான் என்னுந் தெரிநிலைவினைமுற்றுக்குப பயனிலையாய் வந்தது.

## இந்நூல் செய்தான் ஆசிரியனகத்தியன்.

இ. எ-து. சுட்டிடைச்சொல். நூல். எ-து. பால்பகாவஃறிணைப் படர்க்கைப்பெயர்; செயப்படுபொருளில் வந்த ஐ என்னும் இரண்டனுருபு தொகப்பெற்றது; அது செய்தான என்னும் பயனிலை கொண்டது. செய்தான் எ-து. உயர்திணையாண்பாலொருமைப் படர்க்கையிறந்தகாலத் தெரிநிலை வினைமுற்றுவலணயும்பெயர் அது அகத்தியன் என்னும் பெயர்ப்பயனிலை கொண்டது. ஆசிரியன். எ-து. உயர்திணையாண்பாலொருமைப் படர்க்கைப் பெயர்; அது அகத்தியன் என்னும் பெயரை விசேடித்து நின்றது. அகத்தியன். எ-து. உயர்திணையாண்பாலொருமைப் படர்க்கைப் பெயர்; அது செய்தான் என்னுந் தெரிநிலைவினைமுற்றுவலணயும் பெயர்க்குப் பயனிலையாய் வந்தது.

## மழை பெய்யக் குளநிறைந்தது.

மழை. எ-து. பால்பகாவஃறிணைப் படர்க்கைப்பெயர்; திரிபின்மையாகிய எழுவாயுருபேற்றது; அது பெய்ய என்னும் வினைபபயனிலை கொண்டது. பெய்ய. எ-து. முக்காலத்தெரிநிலைவினை வினையெச்சம்; அது, இங்கே காரணப்பொருளில் வருதலால், இறந்தகாலத்தது; அது நிறைந்தது என்னும் பிறகருத்தாவின் வினைகொண்டது. குளம். எ-து. பால்பகாவஃறிணைப் படர்க்கைப் பெயர்; திரிபின்மையாகிய எழுவாயுருபேற்றது; அது நிறைந்தது என்னும் வினைப்பயனிலை கொண்டது. நிறைந்தது எ-து. அஃறிணையொன்றன்பாற்படர்க்கை யிறந்தகாலத் தெரிநிலைவினைமுற்று; அது குளம் என்னும்எழுவாய்க்குப் பயனிலையாய் வந்தது.

## சூரியனுதிக்க வந்தான்.

சூரியன். எ-து. அஃறிணையொன்றன்பாற் படர்க்கைப்பெயர், திரிபின்மையாகிய எழுவாயுருபேற்றது; அது உதிக்க என்னும் வினைப்பயனிலை கொண்டது. உதிக்க எ-து. முக்காலத்தெரிநிலைவினை வினையெச்சம்; அது,

Digitized By Roja Muthiah Research Library

இங்கே இது நிகழாநிற்க இது நிகழ்ந்தது என்னும் பொருள்பட வருதலால், நிகழ்காலத்தது; அது வந்தான் என்னும் பிறகருத்தாவின் வினைகொண்டது. வந்தான். எ-து. உயர்திணையாண்பாலொருமைப் படர்க்கையிறந்தகாலத் தெரிநிலைவினைமுற்று; அது அவன் என்னுந் தோன்றுவெழுவாய்க்குப் பயனிலையாய் வந்தது.

## கற்க வந்தேன்.

கற்க. எ-து. முக்காலத்தெரிநிலைவினை வினையெச்சம், அது; இங்கே காரியப்பொருளில் வருதலால், எதிர்காலத்தது; அது வந்தேன் என்னுந் தன்கருத்தாவின் வினைகொண்டது. வந்தேன். எ-து. தன்மையொருமையிறந்தகாலத்தெரிநிலை வினைமுற்று; அது யான் என்னுந் தோன்றுவெழுவாய்க்குப் பயனிலையாய் வந்தது.

## படிக்குந்தோறும் அறிவு வளரும்.

படிக்கும். எ-து. எதிர்காலத் தெரிநிலைவினைப் பெயரெச்சம்; அது பெயர்த்தன்மை எய்தி நின்ற தோறும் என்னும் இடைச்சொற்கொண்டது. தோறும். எ-து. தொழிற்பயில்வுப்பொருளில் வந்த இடைச்சொல். அறிவு. எ-து. பண்புப்பெயர்; திரிபின்மையாகிய எழுவாயுருபேற்றது; அது வளரும் என்னும் வினைப்பயனிலைகொண்டது. வளரும். எ-து. பலர்பாலொழிந்த நாற்பாற் படர்க்கை நிகழ்காலவெதிர்காலத் தெரிநிலைவினைமுற்று; அது அறிவு என்னும் எழுவாய்க்குப் பயனிலையாய் வந்தது.

## நம்பி காலொடிந்து வீழ்ந்தான்.

நம்பி. எ-து, உயர்திணையாண்பாலொருமைப் படர்க்கைப்பெயர்; திரிபின்மையாகிய எழுவாயுருபேற்றது; அது வீழ்ந்தான் என்னும் வினைப்பயனிலை கொண்டது. கால். எ-து. பால்பகாவஃறிணைப் படர்க்கைப்பெயர்; திரிபின்மையாகிய எழுவாயுருபேற்றது. அது ஒடிந்து என்னும் வினைப்பயனிலை கொண்டது. ஒடிந்து. எ-து. இறந்தகாலத் தெரிநிலைவினை வினையெச்சம்; அச்சினைவினையெச்சம் வீழ்ந்தான் என்னும் முதல்வினை கொண்டது. வீழ்ந்தான். எ-து. உயர்திணையாண்பாலொருமைப் படர்க்கையிறந்தகாலத் தெரிநிலைவினைமுற்று; அது நம்பி என்னும் எழுவாய்க்குப் பயனிலையாய் வந்தது.

## ஆசிரியனைக் கண்டனன் வணங்கினான்.

ஆசிரியன். எ-து. உயர்திணையாண்பாலொருமைப் படர்க்கைப்பெயர்; செயப்படுபொருளில் வந்த ஐ என்னும் இரண்டனுருபேற்றது; அது கண்டனன் என்னும் வினைப்பயனிலை கொண்டது. கண்டனன். எ-து. உயர்திணையாண்பாலொருமைப் படர்க்கையிறந்தகாலத்தெரிநிலைவினைமுற்று; அது, இங்கே கண்டு அல்லது கண்டனனாகி என வினையெச்சப்பொருளைத் தருத

லால், வினையெச்சம்; அது வணங்கினான் என்னுந் தன்கருத்தாவின் வினை கொண்டது. வணங்கினான். எ-து. உயர்திணையாண்பாலொருமைப் படர்க்கையிறந்தகாலத் தெரிநிலைவினைமுற்று; அது அவன் என்னுந் தோன்றுமெழுவாய்க்குப் பயனிலையாய் வந்தது.

தழைவிரிகடுக்கைமாலைத்தனிமுதல்சடையிற்சூடுங்
குழவிவெண்டிங்களிற்றகோட்டதுகுறையென்றெண்ணிப்
புழைநெடுங்கரத்தாற்பற்றிப்பொற்புறவினைத்துநோக்கு
மழைமதக்களிற்றின்செய்யமலரடிசென்னிவைப்பாம்.

இச்செய்யுளில்: "எண்மூவெழுத்து" என்னுஞ் சூத்திர விதிப்படி புணர்ந்த தொடர்கள் எவை? "இயல்பினும் விதியினும்" என்னுஞ் சூத்திர விதிப்படி புணர்ந்த தொடர்கள் எவை? "இ ஈ ஐ வழி" என்னுஞ் சூத்திர விதிப்படி புணர்ந்த தொடர்கள் எவை? "உடன்மேலுயிர்" என்னுஞ் சூத்திர விதிப்படி புணர்ந்த தொடர்கள் எவை? "உயிர்வரினுக்குறள்" என்னுஞ் சூத்திர விதிப்படி புணர்ந்த தொடர்கள் எவை? "அல்வழி இ ஐ" என்னுஞ் சூத்திர விதிப்படி புணர்ந்த தொடர் எது? "பொதுப்பெய ருயர்திணைப் பெயர்கள்" என்னுஞ் சூத்திர விதிப்படி புணர்ந்த தொடர் எது? "செய்யியவென்னும் வினையெச்சம்" என்னுஞ் சூத்திர விதிப்படி புணர்ந்த தொடர் எது? "ஈறுபோதல்" என்னுஞ் சூத்திர விதிப்படி புணர்ந்த தொடர்கள் எவை? "மூன்றாறுருபெண்" என்னுஞ் சூத்திர விதிப்படி புணர்ந்த தொடர் எது? "நெடிலோடுயிர்த்தொடர்" என்னுஞ் சூத்திர விதிப்படி புணர்ந்த தொடர்கள் எவை? "மவ்வீறொற்றழிந்து" என்னுஞ் சூத்திர விதிப்படி புணர்ந்த தொடர்கள் எவை? "லளவேற்றுமையிற் றடவும்" என்னும் சூத்திர விதிப்படி புணர்ந்த தொடர் எது? "னலமுன் றனவும்" என்னுஞ் சூத்திர விதிப்படி புணர்ந்த தொடர் எது? "இடையுரி வடசொலின்" என்னுஞ் சூத்திர விதிப்படி புணர்ந்த தொடர் எது? "அத்தினகரம்" என்னுஞ் சூத்திர விதிப்படி புணர்ந்த தொடர் எது? "இயல்பின் விகாரமும்" என்னுஞ் சூத்திர விதிப்படி புணர்ந்த தொடர் எது?

"அல்வழி இ ஐம் முன்னர் எனப் பொதுப்படக்கூறியதனாற் பெயரேயன்றி வினைத்தொகையின் முன்மொழியாகிய வினையுங்கொள்ளப் படுமெனறுணர்க.

இச்செய்யுளில்: வினைத்தொகையுண்டாயின், அஃதெது? அஃதெப்படி விரியும்? வேற்றுமைத்தொகைகள் எவை? அவை எப்படி விரியும்? பண்புத்தொகைகள் எவை? அவை எப்படி விரியும்? உவமைத்தொகைகள் எவை? அவை எப்படி விரியும்? வேற்றுமைவிரித்தொடர்கள் எவை? எழுவாய்த்தொடர்கள் எவை? எவ்வெவ்வேற்றுமையுருபுகள் எவ்வெப்பயனிலை

Digitized By Roja Muthiah Research Library

கொண்டன? பெயரெச்சங்கள் எவை? எவ்வெப்பெயரெச்சம் எவ்வெப் பெயர் கொண்டது? வினையெச்சங்கள் எவை? எவ்வெவ்வினையெச்சம் எவ் வெவ்வினை கொண்டது? ஆகுபெயருண்டாயின், அஃதெது? அஃது என்ன வாகுபெயர்?

இச்செய்யுளில் எழுவாய் எது? பயனிலை எது? செயப்படுபொருள் எது? பயனிலைக்கு விசேடணம் யாது? செயப்படுபொருட்கு விசேடணம் யாது?

வேண்டுதல்வேண் டாமை யிலானடி சேர்ந்தார்க்கு
யாண்டு மிடும்பை யில.

௧. வேண்டுதல்: அஃறிணை, ஒன்றன்பால், ஒருமையெண், படர்க்கையிடம், உடன்பாட்டுத்தொழிற்பெயர்ப்பகுபதம், (வேண்டு+தல்) இரண்டாம்வேற்றுமைத்தொகை, நீத்தற்செயப்படுபொருள். இது இல்லான் என்பதனோடு தொடர்ந்தது. முதல்வேற்றுமையெனினும் பொருந்தும்.

௨. வேண்டாமை: அஃறிணை, ஒன்றன்பால், ஒருமையெண், படர்க்கையிடம், எதிர்மறைத்தொழிற்பெயர்ப் பகுபதம். (வேண்டு+ஆ+மை) இரண்டாம்வேற்றுமைத்தொகை, நீத்தற் செயப்படுபொருள். இதுவும் இல்லான் என்பதனோடு தொடர்ந்தது. முதல்வேற்றுமையெனினும் பொருந்தும்.

௩. இல்லான்: உயர்திணை, ஆண்பால், ஒருமையெண், படர்க்கையிடம், முக்காலமும், எதிர்மறைக் குறிப்புவினையாலணையும் பெயர்ப்பகுபதம். (இல்+ஆன்) ஆறாம்வேற்றுமைத்தொகை, உறுப்புத்தற்கிழமைப்பொருள். இது அடி என்பதனோடு தொடர்ந்தது.

௪. அடி: அஃறிணை, பலவின்பால், பன்மையெண், படர்க்கையிடம், பகாப்பதம், இரண்டாம்வேற்றுமைத்தொகை, அடைதற்செயப்படுபொருள். அடி என்பது ஒருமை பன்மைகளுக்குப் பொதுவாகிய இயற்பெயர் ஆயினும் ஈண்டுப் பன்மையில் வந்தது. இது சேர்ந்தார்க்கு என்பதனோடு தொடர்ந்தது.

௫. சேர்ந்தார்க்கு: உயர்திணை, பலர்பால், பன்மையெண், படர்க்கையிடம், இறந்தகாலம், தெரிநிலைவினையாலணையும்பெயர்ப்பகுபதம். (சேர்+த்+த்+ஆர்+கு. இதில் கு நான்கனுருபு) நான்காம்வேற்றுமைவிரி. இது இல என்பதனோடு தொடர்ந்தது.

௬. யாண்டு உம்: ஈண்டுக் காலப்பொருளுணர நின்ற இடைச்சொல், உம் எஞ்சாமைப்பொருளில் வந்தது.

௭. இடும்பை: அஃறிணை, பலவின்பால், பன்மையெண், படர்க்கையிடம், பண்புப்பெயர்பகாப்பதம். இடும்பை என்பது ஒருமை பன்மை

Digitized By Roja Muthiah Research Library

களுக்குப் பொதுவான இயற்பெயர் ஆயினும் ஈண்டுப் பன்மையில் வந்தது. முதல்வேற்றுமை, கருத்தாப்பொருளது. இதுவும் இல என்பதனோடு தொடர்ந்தது. யாண்டும் என்பதும் இல என்பதனோடு தொடர்ந்தது.

௮. இல: அஃறிணை, பலவின்பால், பன்மையெண், படர்க்கையிடம், பல காலமும், எதிர்மறைக்குறிப்புவினைமுற்றுப் பகுபதம். இது இடு ம்பை என்னும் எழுவாய்க்குப் பயனிலையாய் நின்றது.

---

காய்த லுவத்த லகற்றி யொருபொருட்கண்
ஆய்த லறிவுடையார் கண்ணதே—காய்வதன்கண்
உற்ற குணந்தோன்றா தாகு முவப்பதன்கட்
குற்றமுந் தோன்றா கெடும்.

இ-ள். காய்தல் உவத்தல் அகற்றி - விரும்புதலையும் வெறுத்தலையுந் தவிர்த்து,—ஒருபொருட்கண் (உற்ற குணகுற்றம்) ஆய்தல் - ஒருவிஷயத்தி லுள்ள (குணதோஷங்களை) ஆராய்ந்தறிதல்,—அறிவுடையார் கண்ணதே - விவேகிகளிடத்துமாத்திரம் அமைந்தசெயலாம்.

காய்வதன்கண் உற்ற குணம் தோன்றாதாகும்—ஆராயுமுன் ஒருபொ ருளில் வெறுப்புவைத்தால் அப்பொருளிலிருக்கிற தீமையேயன்றி நன் மை தோற்றப்படாது.

உவப்பதன்கண் குற்றமும் தோன்றா—ஆராயுமுன் ஒருபொருளில் ஆசைவைத்தால் அப்பொருளிலுள்ள நன்மையன்றித் தீமைகள் தோற்றப் படா.

கெடும்—ஆதலின் காய்தலுவத்தல்களை யகற்றாது ஒருபொருளிடத் தக் குணகுற்றங்களை ஆராய்வோன் கேடடைவான். எ-று.

௧. காய்தல்: தொழிற்பெயர்ப்பகுபதம், காய் + தல் அஃறிணை, ஒன்றன் பால், ஒருமையெண், படர்க்கையிடம், இரண்டாம்வேற்றுமைத்தொ கை, நீத்தற்செயப்படுபொருள், இது அகற்றி என்பதனோடு நி யோசனமாகின்றது. (நியோசனம் - சேர்தல்.)

௨. உவத்தல்: உவ + தல்; இதுவும் அப்படியே.

௩. அகற்றி: அகற்று + இ; உடன்பாட்டுத்தெரிநிலை இறந்தகாலச்செய் தென்வாய்பாட்டு வினையெச்சப்பகுபதம்; இது ஆய்தல் என்பத னோடு நியோசனமாகின்றது.

௪. ஒன்று: எண், உரிச்சொல்; பொருள் என்பதனோடு நியோசனமா கின்றது.

Digitized By Roja Muthiah Research Library

௯. பொருட்கண்: பொருள் + கண்.

பொருள்: அஃறிணை, ஒன்றன்பால், ஒருமையெண், படர்க்கையிடம், பெயர்ப்பகாப்பதம், ஏழாம்வேற்றுமைவிரி, தற்கிழமை இடப்பொருள். கண் வேற்றுமையுருபிடைச்சொல். ஆய்தல் என்பதனோடு நியோசனமாகின்றது.

௬. ஆய்தல்: தொழிற்பெயர்ப்பகுபதம் ஆய + தல்.

அஃறிணை, ஒன்றன்பால், ஒருமையெண், படர்க்கையிடம், முதல்வேற்றுமை. இது அறிவுடையார்கண்ணது என்பதனோடு நியோசனமாகின்றது.

எ. அறிவுடையார்கண்ணது: ஒருசொன்னீர்மையாய்க் குறிப்புவினைமுற்றாய் நின்றது. அஃறிணை, ஒன்றன்பால், ஒருமையெண், படர்க்கையிடம்; ஆய்தலென்பதற்கு முடிபாய்நின்றது.

பகுபதம்: அறிவு + உடைமை + ஆர் + கண் + அ + து.

அ. காய்வதன்கண்: அஃறிணை, ஒன்றன்பால், ஒருமையெண், படர்க்கையிடம், ஏழாம்வேற்றுமைவிரி; தொழிலிடத்துக்கிழமை. உற்ற என்பதனோடு நியோசனமாகின்றது. (காய் + வ் + அ + து + அன் + கண்.)

௯. உற்ற: உறு + அ.

செய்த என்னும் வாய்பாட்டு இறந்தகால உடன்பாட்டுத்தெரிநிலைவினைப்பெயரெச்சப்பகுபதம்; குணம் என்பதனோடு நியோசனமாகின்றது; பின்னும் உவப்பதன்கண் என்பதனோடுகூடிக் குற்றம் என்பதனோடும் நியோசனமாகின்றது.

௧௦. குணம்: பண்புப்பெயர்ப்பகாப்பதம்; அஃறிணை, ஒன்றன்பால், ஒருமையெண், படர்க்கையிடம், முதல்வேற்றுமை; கருத்தாப்பொருள், தோன்றாதாகும் என்பதனோடு நியோசனமாகின்றது.

௧௧. தோன்றாது ஆகும் என்பன ஒருசொன்னீர்மை; அஃறிணை, ஒன்றன்பால், ஒருமையெண், படர்க்கையிடம், எதிர்காலம், குணம் என்பதற்குப் பயனிலையாய் நின்றது.

௧௨. உவப்பதன்கண்: உவ + ப் + ப் + அ + து + அன் + கண்

காய்வதன்கண் என்பதுபோலாம்.

௧௩. குற்றமும் குற்றம் + உம (உம் இறந்ததுதழீஇய எச்சப்பொருளில் வந்த இடைச்சொல்.)

குற்றம் என்பது தோன்றா எனபுதனோடு நியோசனமாகின்றது. இதற்கு மற்றெல்லாங் குணமென்பதற்குரைத்ததுரைக்க.

Digitized By Roja Muthiah Research Library

௧௪. தோன்றா: தோன்று+ஆ எதிர்மறைத் தெரிநிலையுடன்பாட்டுவினை முற்று.

"உயிர்வரினுக்குறண்மெய்விட்டோடும்" என்பதனால் உகரங்கெடநின்ற றகரமெய்யின்மேல் "உடன்மேலுயிர்வந்தொன்றுவதியல்பே" என்பதனால் விகுதி ஆகாரமேறி முடிந்தது.

௧௫. கெடும்: கெடு+உம்; செய்யும் என்னும் வாய்பாட்டுத் தெரிநிலையுடன்பாட்டு வினைமுற்று.

உயர்திணை, ஆண்பால், ஒருமையெண், படர்க்கையிடம், ஈண்டு எதிர்காலம், படர்க்கையிற் பலர்பாலொழித்தொழிந்த நாற்பாலுக்கும் பொதுவாயினும் ஈண்டு ஆண்பாலில் வந்தது; ஒருவன் என்னுந் தோன்றாஎழுவாய்க்குப் பயனிலையாய்நின்றது.

காய்+தல்: "ய ர ழ முன்னர்க் க ச த ப வல்வழியியல்பும்" என்றதனால் இயல்பாய் முடிந்தது. ஆய்+தல் என்பதும் இப்படியே முடிந்தது.

உவ+தல்: "இயல்பினும் விதியினு நின்றவுயிர்முன் க ச த ப மிகும்" என்றதனால் விகுதி முதல் தகரம் மிகுந்து முடிந்தது.

அற்று+இ: "உயிர்வரினுக்குறண் மெய்விட்டோடும்" என்றதனால், பகுதியீற்றுகரங்கெட்டு, கெடநின்ற றகரமெய்யின்மேல் "உடன் மேலுயிர்வந்தொன்றுவதியல்பே" என்றதனால், விகுதி இகரவுயிரேறி முடிந்தது.

ஒன்று+பொருள்: "எண்ணிறையளவும் பிறவும்பெய்தின்—மூன்றாறே ழல்லவற்றினீற்றுயிர்மெய்யும்—ஏகும்." என்றதனால் ஈற்றுயிர்மெய் கெட்டு, "ஒன்றன்புள்ளி ரகரமாக—உவ்வருமே" என்றதனால் ஒரு என்றாய்—"மூன்றாறுருபெண் வினைத்தொகை சுட்டீறுகு முகர முன்னரியல்பாம்" என்றதனால் வருமொழி இயல்பாய் முடிந்தது.

பொருள்+கண்: "ளவேற்றுமையிற் றடவும்" என்றதனால் ளகரம் டகரமாகத்திரிந்து முடிந்தது.

அறிவு+உடையார்: "முற்றுமற்றொரோவழி" என்றதனால், முற்றிய லுகரங் கெட்டு, கெடநின்ற வகரமெய்யின்மேல், "உடன்மேலுயிர் வந்தொன்றுவதியல்பே" என்றதனால் உகரவுயிரேறி முடிந்தது.

உடை+ஆர்: "இ ஈ ஐவழி யவ்வும்" என்றதனால் யகரவுடம்படுமெய் பெற்று, "உடன்மேலுயிர்வந்தொன்றுவதியல்பே" என்றதனால் யகர மெய்யின்மேல் ஆகாரவுயிரேறி முடிந்தது.

கண்+அ+து: "இடையுரிவடசொலினியம்பியகொளாதவும்" என்றதனால் இடைச்சொல்லாகிய சாரியை அகரவுயிர் முன்வந்த விகுதி



Digitized By Roja Muthiah Research Library

முதல் தகரம் இயல்பாகி, "தனிக்குறின் முன்ஒற் றுயிர்வரி னிரட்டும்" என்றதனால், ணகரமெய்யிரட்டித்து, இரட்டித்தமெய்யின் மேல் "உடன்மேலுயிர்வந்தொன் றுவதியல்பே" என்றதனால் சாரியை அகரவுயிரேறி முடிந்தது.

காய்+வ்+அ+து+அன்+கண்: "இடையுரிவடசொலினியம்பியகொளாதவும்" என்றதனால் சாரியை அகரவுயிர்முன்வந்த விகுதிமுதல் தகரம் இயல்பாகி, "உடன்மேலுயிர்வந்தொன் றுவதியல்பே" என்றதனால் இடைநிலை வகரமெய்யின்மேல் சாரியை அகரவுயிரேறி, "உயிர்வரினுக் குறண்மெய்விட்டோடும்" என்றதனால், சாய்வது என்பதன்கண் உகரங்கெட்டு, கெடநின்ற தகரமெய்யின்மேல் "உடன்மேலுயிர்வந்தொன்றுவது" என்பதனால் அன்சாரியை முதல் அகரவுயிரேறி, "இடையுரிவடசொலினியம்பியகொளாதவும்" என்றதனால் அன் சாரியையீற்று னகரமெய் இயல்பாகி முடிந்தது.

உறு+அ: "முற்றுமற்றொரோவழி" என்றதனால் உகரங்கெட்டு, கெடநின்ற றகரமெய் "தனிக்குறின்முன்ஒற் றுயிர்வரினிரட்டும்" என்றதனால் இரட்டித்து, இரட்டித்தமெய்யின்மேல் "உடன்மேலுயிர்வந் தொன்றுவதியல்பே" என்றதனால் விகுதி அகரவுயிரேறி முடிந்தது.

தோன்று+ஆ+து: "இடையுரிவடசொலினியம்பியகொளாதவும்" என்றதனால் இடைநிலை ஆகாரவுயிர்முன்வந்த விகுதி முதல் தகரம் இயல்பாகி, "உயிர்வரினுக்குறள்" என்றதனால் குற்றியலுகரங்கெடநின்ற றகரமெய்யின்மேல் "உடன்மேலுயிர்வந்தொன்றுவது" என்பதனால் ஆகாரவுயிரேறி முடிந்தது.

ஆ+கு+உம்: "இடையுரிவடசொலினியம்பியகொளாதவும்" என்றதனால் சாரியைமுதல் ககரவல்லொற்று இயல்பாகி, "உயிர்வரினுக்குறள்" என்பதனால் குற்றியலுகரம் கெடநின்ற ககரமெய்யின்மேல் "உடன்மேலுயிர்வந்தொன்றுவதியல்பே" என்றதனால் சாரியைமுதல் உயிரேறி முடிந்தது.

உவ+ப்+ப்+அ+து: "இடையுரிவடசொலினியம்பியகொளாதவும்" என்றதனால் சாரியை அகரவுயிர்முன் வந்த தகரம் இயல்பாகி, "உடன்மேலுயிர்வந்து" என்றதனால் பகரவொற்றிடைநிலையின்மேல் சாரியை அகரவுயிரேறி, "இயல்பினும் விதியினு நின்றவுயிர்முன் க ச த ப மிகும்" என்றதனால் பகர வல்லொற்றிரட்டித்து முடிந்தது.

தோன்று+ஆ: "உயிர்வரினுக்குறண்மெய்விட்டோடும்" என்பதனாற் பகுதியீற்றுகரங் கெடநின்ற றகரமெய்யின்மேல் "உடன்மேலுயிர்வந் தொன்றுவதியல்பே" என்பதனால் விகுதிஆகாரவுயிரேறி முடிந்தது.

கெடு+உம்: "முற்றுமற்றொரோவழி" என்றதனால் பகுதி உகரங்கெட்டு, "உடன்மேலுயிர்வந்தொன்றுவதியல்பே" என்றதனால், உகரங்கெடநின்ற) டகரமெய்யின்மேல் விகுதி உகரவுயிரேறி முடிந்தது.

Digitized By Roja Muthiah Research Library

காய்தல் + உவத்தல்: காய்தலுவத்தல். "உடன்மேலுயிர்வந்தொன்றுவதி யல்பே" என்றதனுல் லகரமெய்யின்மேல் உகரமேறி முடிந்தது.

உவத்தல் + அகற்றி — உவத்தலகற்றி என்பதற்கும் விதி அது.

அகற்றி + ஒன்று — அகற்றியொன்று: "இ ஈ ஐவழியவ்வும்" என்றதனுல் யகர வுடம்படுமெய் தோன்றி, தோன்றிய யகரமெய்யின்மேல் "உடன் மேலுயிர் வந்தொன்றுவது" என்றதனுல் ஒகரவுயிரேறி முடிந்தது.

ஒன்று + பொருட்கண் — ஒருபொருட்கண் "எண்ணிறையளவும் பிறவுமெய் தின் — ஆறேழல்லவற்றினீற்றுயிர் மெய் — ஏகும், என்பதனுல், ஈற்று யிர்மெய்கெட்டு ஒன் என நின்று, "ஒன்றன்புள்ளி ரகரமாக — உவ்வ ரும்,, என்பதனுல் னகரவொற்று ரகரவொற்ருகத்திரிந்து உகரச்சா ரியைபெற்று ஒரு என நின்று "மூன்ருறுருபெண்வினைத்தொகை சுட் டீறுகுமுகரமுன்னரியல்பாம்" என்பதனுல் ஒரு என்னும் முற்றுகர வீற்று எண்ணுப்பெயர்முன் வந்தவல்லினம் இயல்பாகி முடிந்தது.

பொருட்கண் + ஆய்தல்: "உடன்மேலுயிர்வந்தொன்றுவதியல்பே" என்ற தனுல் பொருட்கணய்தல் என முடிந்தது.

ஆய்தல் + அறிவுடையார் என்பதும் அவ்விதியால் முடிந்தது.

உடையார் + கண்ணது "பொதுப்பெயருயர்திணைப்பெயர்களீற்று — ஆவி யரமுன்வன்மைமிகா" என்றதனுல் வல்லினம் இயல்பாய்முடிந்தது.

கண்ணது + ஏ = கண்ணதே: "உயிர்வரினுக்குறண் மெய்விட்டோடும்" என் றதனுல் நிலையீற்றுகரங்கெடநின்ற தகரமெய்யின்மேல், "உடன்மே லுயிர்வந்தொன்றுவது" என்பதனுல் ஏகாரவுயிரேறி முடிந்தது.

கண்ணதே + காய்வதன்கண்: "இடைச்சொல்லேயோமுன்வரினியல்பே" என்றதனுல் வருமொழி இயல்பாயிற்று.

காய்வதன்கண் + உற்ற — "உடன்மேலுயிர்வந்தொன்றுவது" என்றதனுல் கா ய்வதன்கணுற்ற எனமுடிந்தது.

உற்ற + குணம்: "செய்திய" என்னுஞ்சூத்திரத்து 'பல்வகைப்பெயரினெச் சமுன் — இயல்பே' என்பதனுல் வருமொழி வல்லினம் இயல்பாயி ற்று.

குணம் + தோன்ருது — குணந்தோன்ருது "மவ்வீறு — வன்மைக்கினமாத்தி ரிபவுமாகும்" என்றதனுல் நிலைமொழியீற்று மகரம் நகரமாகத்திரிந் தது.

தோன்ருது + ஆகும் — தோன்ருதாகும் — "உயிர்வரினுக்குறண் மெய்விட் டோடும்" என்றதனுல் குற்றுகரங்கெடநின்ற தகரமெய்யின்மேல்

Digitized By Roja Muthiah Research Library

"உடன்மேலுயிர்வந்தொன்றுவது" என்றதனால் ஆகாரவுயிரேறி முடிந்தது.

**ஆகும்+உவப்பதன்கண்:** ஆகுமுவப்பதன்கண். "உடன்மேலுயிர்வந்தொன்றுவது" என்றதனால் மகரமெய்யின்மேல் உகரவுயிரேறி முடிந்தது.

**உவப்பதன்கண்+குற்றம்:** "ணனவல்லினம் வரட்டறவும்" என்றதனால் ணகரமெய் டகரமெய்யாகத்திரிந்தது.

**குற்றம்+உம்**—குற்றமும் "உடன்மேலுயிர்வந்தொன்றுவது" என்றதனால் மகரமெய்யின்மேல் உகரவுயிரேறி முடிந்தது.

**குற்றமும்+தோன்ரு**—குற்றமுந் தோன்ரு "மவ்வீறு—வன்மைக்கினமாத்திரிபவுமாகும்" என்றதனால் மகரவொற்று நகரவொற்ருகத் திரிந்தது.

**தோன்ரு+கெடும்** "அல்வழியாமாமியாமுற்றுமுன்மிகா" என்றதனால் ஆகாரவீற்றுமுற்றின்முன் வந்த வல்லினம் இயல்பாயிற்று.

**காய்தல்+உவத்தல்:** இத்தொடர் வேற்றுமைவழி இரண்டனுருபுமறைந்த தொகைநிலை. உம்மைத்தொகையாயிருத்தலால் அல்வழியுமாம். ஆதலிற்பொதுவழி. இதனை "வேற்றுமைவழியோடல்வழியேயன்றியு, மவ்விருவழியுமடங்கும்பொதுவழி, யம்மூன்றுள்ளேயடங்காவழியு, மெனநான்கென்றேயியம்புவர்சந்தி" என்னும் இலக்கணக்கொத்துச் சூத்திரத்தாற்காண்க.

**உவத்தல்—அகற்றி:** இத்தொடரும் அவ்வாறும்.

**அகற்றி—ஒரு:** இது அல்வழி வினையெச்சத்தொடர் (தொகாநிலை.)

**ஒரு—பொருட்கண்:** அல்வழி பண்புத்தொகைநிலைத்தொடர்.

**பொருட்கண்—ஆய்தல்:** வேற்றுமைவழி எழனுருபு (த்தொகாநிலை)

**ஆய்தல்—அறிவுடையார்கண்ணது:** அல்வழி எழுவாய்த்தொடர்(தொகாநிலை)

**கண்ணது—ஏ:** அல்வழி குறிப்புவினைமுற்றுத்தொடர் (தொகாநிலை)

**ஏ—காய்வதன்கண்:** அல்வழி இடைச்சொற்ருெடர் (தொகாநிலை)

**காய்வதன்கண்—உற்ற:** வேற்றுமைவழி ஏழனுருபுத்தொகாநிலைத்தொடர்.

**உற்ற—குணம்:** அல்வழி பெயரெச்சத்தொடர் (தொகாநிலை)

**குணம்—தோன்ருதாகும்:** அல்வழி எழுவாய்த்தொடர் (தொகாநிலை)

**தோன்ருதாகும்—உவப்பதன்கண்:** அல்வழி தெரிநிலைவினைமுற்றுத்தொடர் (தொகாநிலை)

**உவப்பதன்கண்—குற்றம்:** வேற்றுமைவழி ஏழாம்வேற்றுமைத்தொகாநிலைத்தொடர்.

**குற்றம்—உம்:** அல்வழி எழுவாய்த்தொடர் (தொகாநிலை)

**உம்—தோன்ரு:** அல்வழி இடைச்சொற்ருெடர் (தொகாநிலை)

**தோன்ரு—கெடும்:** அல்வழி தெரிநிலைவினைமுற்றுத்தொடர் (தொகாநிலை)

Digitized By Roja Muthiah Research Library

## மாணாக்கர்களுக்கு அறிவித்தல்.

௧. மாணாக்கர்கள், நாடோறும், தங்களுக்குக் குறிக்கப்பட்ட பாடத்தை, உபாத்தியாயரிடத்தே கேட்கு முன்னரே வீட்டிலே அவதானத்தோடு பலமுறை வாசித்துச் சூத்திரத்தை நெட்டுருப்பண்ணிக்கொள்ளல்வேண்டும்.

௨. அவ்வவ்விதிகளுக்கு உரையிலே காட்டப்பட்ட உதாரணங்களில் அவ்வவ்விதிகளை நன்றாக விளக்கப் பயிலல்வேண்டும்.

௩. பரீக்ஷை வினாக்களை வாசித்து, ஒவ்வொரு வினாவுக்கும் விடை தங்களுக்குத் தோன்றுகின்றதோ தோன்றவில்லையோ என்று ஆராய்ந்துகொண்டு, பின்பு அவ்வவ் வினாவுக்குரிய சூத்திரத்தையும் அதனுரையையும் வாசித்து, விடை இது என்று நிச்சயித்து உள்ளத்தமைத்துக்கொள்ளல்வேண்டும்.

௪. வித்தியாசாலையிலே உபாத்தியாயரிடத்தே சூத்திர பாடத்தை ஒப்பித்து, அதைப் பதச்சேதம்பண்ணி, அதற்குப் பொருள் தங்கள் வசனத்திலே சொல்லல்வேண்டும்.

௫. உபாத்தியாயர் வினாவும் வினாவுக்கு விடை தங்கள் வசனத்திலே சொல்லிக்கொண்டு, பின்பு அதற்குச் சூத்திரத்தை அல்லது சூத்திர பாகத்தைப் பிரமாணமாகச் சொல்லல்வேண்டும்.

௬. அப்பியாச வினாக்களுக்கு விடை காகிதத்திலாயினுங் கற்பலகையிலாயினும் எழுதி, உபாத்தியாயருக்குக் காட்டித் திருத்துவித்து, அப்படித் திருத்தப்பட்டதைத் தாங்கள் பார்த்து உள்ளத்தமைத்துக்கொள்ளல் வேண்டும்.

௭. தாங்கள் வாசிக்கும் வசன வடிவாகிய இலக்கியத்திலுஞ் செய்யுள் வடிவாகிய இலக்கியத்திலும் இலக்கணமுடிபும் அதற்குச் சூத்திரப் பிரமாணமுஞ் சொல்லப் பழகல் வேண்டும்.

௮. தப்பாது இடையிடையே பழம் பாடங்களைச் சிந்தித்தல்வேண்டும்.

௯. மாணாக்கர்கள், ஒருவரை ஒருவர் வினாவியும், வினாவியவினாவுக்கு விடைசொல்லியும், பயிலல்வேண்டும்.

௧௦. பேசும்பொழுதும் எழுதும்பொழுதும் இலக்கணப் பிழையறப் பேசவும் எழுதவும் பழகல்வேண்டும். பிழை படப் பேசினும் எழுதினும், இலக்கணங் கல்வியாற் பயன் ஒருசிறிதும் இல்லை. பேசும்பொழுதும் வசனம் எழுதும் பொழுதும், எல்லாருக்கும் பொருள் விளங்கத்தக்க இயற்சொற்களை வழங்கல்வேண்டும்.

௧௧. இலக்கணப் பிழையுடைய வசனங்களையுஞ் செய்யுள்களையுந் திருத்தப் பழகல்வேண்டும்.

Digitized By Roja Muthiah Research Library

# பிழைதிருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 7 | 16 | வாரும | வாரும் |
| 7 | 30 | நாலை | நூன்முடிபை |
| 8 | 22 | நூல | நூல் |
| 8 | 23 | எனும | எனும் |
| 8 | 25 | சொலலுங | சொல்லுங் |
| 12 | 38 | புணர்த்சல். | புணர்த்தல், |
| 19 | 11 | வெட்டிசிறிது | வெட்டிச்சிறிது |
| 19 | 12 | போல | போற் |
| 21 | 26 | உவமான | உபமான |
| 22 | 7 | காட்டலும் | காட்டலும், மாணாக்கர்யாவரையும் பக்ஷபாதமின்றி நடத்தியும், |
| 24 | 9 | அந்தர்ப்புரம் | அந்தப்புரம் |
| 25 | 29 | கிரகணசத்தி | விளங்கிக்கொள்ளுந்திறம |
| 26 | 31 | வருவித்துத்கொண்டு. | வருவித்துக்கொண்டு |
| 27 | 4 | கொள்ளுதலால் | கொள்ளுதலாலும் |
| 29 | 11 | துணதொடு | குணத்தொடு |
| 31 | 26 | மாணாந்சருசகுஞ் | மாணாக்கருக்குஞ் |
| 31 | 29 | மொகரும் | மொர்க்கும் |
| 35 | 13 | அகப்பொருள் | அகப்பொருள், முப்பானூல் |
| 36 | 17 | ஒருசாலை | ஒருவகுப்பு |
| 38 | 2 | கோபுரவாயிலை | கோபுரத்தை |
| 41 | 29 | அணுக்கூட்டங்களாயகாரியம் | அணுக்கூட்டத்தின் காரியம் (காரியம்: உரமுதலிய இடங்களிற்றாக்கி முயற்சியுறுதல்) |
| 42 | 6 | முப்பது | முப்பதும் |
| 53 | 15 | கூறப்பட்டதறிக. | கூறப்பட்டவாற்றாலறிக. |
| 55 | 26 | வருக்கலும | வருக்கத்திலும் |
| 56 | 16 | தம | தம் |
| 71 | 9 | மொழிக்கிறதி | மொழிக்கிறுதி |
| 75 | 36 | மங்குதலை | மயங்குதலை |
| 77 | 6 | எந்தனை | எத்தனை |
| 84 | 11 | வருக்கத்திலும | வருக்கத்திலும். |
| 87 | 1 | நடந்தாண் | நடந்தான் |
| 88 | 13 | பகாபபத | பகாப்பத |
| 97 | 17 | அல், ண், ள், ர், வ், எ என்னும் பதின்மூன்றும் | ன், ள், ர், வ் என்னும் பன்னிரண்டும் |
| 97 | 21 | தோன்றல், பிறன், | பிறன், |
| 97 | 29 | உ-ம், விகுதி | உம் விகுதி |

Digitized By Roja Muthiah Research Library

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 97 | 31 | ன் | ழன் |
| 97 | 33 | வை | வழி |
| 101 | 9 | இயக்கிய | இலக்கிய |
| 103 | 12 | பாந்தரு | பாந்தஞ் |
| 104 | 29 | இரட்டி | இரட்டித்து |
| 106 | 19 | என்னும் | என்னும் |
| 119 | 11 | முதற் | முதல் |
| 124 | 35 | | நீயே கொண்டாய, சென்றாய், தின்றாய், போயினாய் என ய கரவீற்றுவினைமுன் வலிஇயல்பாயின (சேர்க்க) |
| 126 | 30 | மேய் | மெய் |
| 130 | 12 | பின் (தள்ளுக) | |
| 135 | 4 | விகற்ம் | விகற்பம் |
| 138 | 12 | வீனை | வினை |
| 144 | 20 | டபிர் | உயிர் |
| 144 | 22 | நெடிற்றொர் | நெடிற்றொடர் |
| 145 | 7 | வெருகுக்கண் | வெருக்குக்கண் |
| 147 | 24 | முதலேட் | முதலெட் |
| 152 | 12 | ஒன்றுமுத | ஒன்றுமுத |
| 168 | 8 | முணர் | முனர் |
| 173 | 9 | கெல் | கொல் |
| 175 | 14 | சொல்லானவலன் | சொல்லானலன் |
| 175 | 17 | என்பதும | என்பதும் |
| 175 | 18 | இன்மைபபொருளை | இன்மைப்பொருளை |
| 175 | 28 | மிகும | மிகும் |
| 180 | 19 | உயிரீற்றுச்சொன் | உயிரீற்று உரிச்சொன் |
| 196 | 30 | பால்குடித்தான், வாள்பிடித்தான் என்பன 'குறில்செறியா லள-இயல்பும்' என்பதினுள் அமைக்கப்படும். (இவ்விடத்திற் கொள்ளற்க) | — |
| 207 | 24 | எழுத்தானது | எழுத்தாலானது |
| 214 | 5 | ஒப்பனவாகிய | ஒப்பனவாகி |
| 221 | 2 | பொருள,- | பொருளா |
| 237 | 22 | பொருளு | பொருளும் |
| 251 | 23 | தேய்த்து | தேத்து |
| 257 | 28 | அது வுருவு | அது வுருபு |
| 261 | 2 | செய்புளிடத்து | செயயுளிடத்து |
| 263 | 12 | விருபபமும் | விருப்பமும் |
| 263 | 20 | கருவிபபொருள் | கருவிப்பொருள் |
| 264 | 8 | எல்லைபபொரு | எல்லைப்பொரு |
| 284 | 7 | திணைபபலர் | திணைப்பலர் |

Digitized By Roja Muthiah Research Library

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 286 | 25 | மெய்யுமெச்சம், செய்யுமெ | |
| 286 | | ன்முற்று இரண்டுதள்ளுக | |
| 286 | 34 | பாயுந்து;" "நீர்க்கோழி | பாயுந்து நீர்க்கோழி |
| 293 | 10 | வல்லஞயின் | வல்லஞயினன் |
| 295 | 1 | அவன விலலினன் | அவன் வில்லினன் |
| 299 | 29 | விருந்தோடு | விருந்தோடு |
| 309 | 29 | இருகண் | இருண் |
| 316 | 18 | மெய்திரி | மெய்தெரி |
| 316 | 31 | வழுவும | வழுவும் |
| 322 | 12 | தெருமருந்து | தெருமந்து |
| 326 | 29 | யென்னப்படும் | என்னப்படும் |
| 327 | 3 | இறபபு | இறப்பு |
| 327 | 6 | இரந்த | இறந்த |
| 327 | 34 | மியலபினும | மியல்பினும் |
| 343 | 30 | யெண்ணையும் | யெண்ணெயும் |
| 348 | 15 | கல் சேர் | கல்விசேர் |
| 351 | 22 | சாற்று | யாற்று |
| 366 | 9 | நீரெனத்தீ | நீரெனத்தீ |
| 367 | 7 | மொழிபிசை | மொழியிசை |
| 367 | 11 | தனனிடத்தியலும் | தன்னிடத்தியலும் |
| 367 | 23 | கழிபு | கழிவு |
| 368 | 8 | நிலத்தை | நிலத்ததை |
| 373 | 9 | நீங்காவாய | நீங்காவாய் |
| 376 | 21 | இப்பெயர்களுக்கும் | இருபொருள்களுககும் |
| 376 | 33 | மிசல | மிகல் |
| 377 | 27 | அமபு | அம்பு |
| 379 | 19 | தூஙகா | தூங்கா |
| 390 | 9 | வள்ளவாப | வள்ளவாய் |
| 392 | 1 | மறுசவ்வரி | மறுகவ்வரி |
| 392 | 16 | புணர்சசி | புணர்ச்சி |
| 404 | 4 | களி க | களியற்க |
| 428 | 8 | வந்தேன | வந்தேன் |
| 429 | 8 | மதக்களிற்றின் | மதகளிற்றின் |
| 429 | 19 | புணர்த்த | புணர்ந்த |

# பிழை திருத்தம்.

௧௦௫-ம் பக்கத்தில்—

"ஒன்றன்பால் பலவின்பால் வினைகளுக்குப் பகர வகரவொற்றிடைநிலைகள் வருவனவல்ல," என்பதைக் கொள்ளாது விடுக.

௧௦௯-ம் பக்கத்து ௩௨-ம் வரியிலும் }
௧௧௦-ம் பக்கத்தில் ௨-ம் வரியிலும் } முப்பதாமெய்யென்றதை முப்பத்து மூன்றுமெய்யென்று வாசிக்க.

௧௧௨-ம் பக்கத்து ௯-ம் வரியில் நான்கும் என்பதை ஐந்தும் என்று வாசிக்க.

௪௨௯-ம் பக்கத்தில்—

விரிகடுக்கை என்னு முடிபை 'இயல்பினும்விதியினுநின்றவுயிர்முன் விதவாதன கசதப மன் மிகும்' என்றதாற் போந்த விதவாதன சிறுபான்மை மிகா என்னுங் கருத்தால் அமைத்தலே நன்று.

௪௫௦-ம் பக்கத்தில்—

வேண்டுதல் என்பதிலும், வேண்டாமை என்பதிலும "முதல்வேற்றுமையெனினும் பொருந்தும்." என்றதைக் கொள்ளாதுவிடுக.

௪௫௨-ம் பக்கத்தில்—

காய்வதன்கண் என்பதற்குத் தொழிலிடத்தற்கிழமையுமேயன்றி விஷயவகைக்கேற்ப வேறு தற்கிழமையுமாம் என்று கொள்ளுக.

உறு என்னும் பகுதி இரட்டித்து அகரவிகுதியொடுகூடி உற்ற என்று யிற்று என்று கொள்ளுக.

௪௫௫-ம் பக்கத்தில் ௧-ம் வரியில் உடன்பாட்டு என்பதை விலக்கி வாசிக்க.

☞ தப்பிய பிழைகளுண்டேல் திருத்தி வாசிக்க

Digitized By Roja Muthiah Research Library